ஸ்ரீ:

ஸ்ரீராம முத்திரைக்கோவை எண். 14

கம்ப ராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

பால காண்டம்

MADRAS-1
சென்னை-1

சென்னை
யூனிவர்ஸிட்டி தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்
தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த
ஸ்ரீ.உ.வே. ராவ்சாகிப் மு. இராகவையங்கார் ஸ்வாமிகள்
பரிசோதித்தது.

பிரசுரகர்த்தர்:
பெரியன்: வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்
ஆழ்வார்திருநகரி.

காபிரைட்] 1942 [விலை ரூ. 2-0-0

ஸ்ரீ ராமஜயம்.

பதிப்புரை

ஸ்ரீமத் கம்ப இராமாயணம் ஆழ்வார்திருநகரிச் சுவடிப் பிரதி (ஏழு காண்டங்களுஞ் சேர்ந்தது) ஒன்று குல மூர்த்தியாகிய ஸ்ரீ ராமபிரான் அனுக்கிரகத்தால் 1926-ம் வருடம் கிடைக்கப் பெற்று 1927-ம் வருடத்தில் முற்றும் பிரதிசெய்து ஒப்புநோக்கிப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. இப்பிரதியில் "இராமாயணம் திருவேங்கடம் உறங்காவில்லி தாஸர்சரீராமாயண ஏடு பார்த்து 970-ம் ஆண்டு ஆவணிமீ 31-உ எழுதி முடித்த"தாகத் தெரிய வந்தது. இதற்கிடையில் சுந்தர காண்டம் முடியவுள்ள மற்றும் இரண்டு கோர்வைச் சுவடிகளும் கிடைத்தன. இவைகளும் முன் பிரதியையே ஒத்திருந்தன.

இப்பிரதிகள் பற்றிப் பெரியோர்களிடம் விசாரிக்குங்கால், இப்பிரதேசத்தில் சுமார் 200 ஆண்டுகட்குமுன் இராமாயணம் சாத்தாதவர் என்றும், இராமாயணம் திருவேங்கடம் தாசர் என்றும், இராமாயணம் திருவேங்கடம் உறங்காவில்லி தாசர் என்றும் பெயர்கள் கொண்ட ஒருவர் இராமாயணத்தில் சுத்த பாடங்கள் வழங்கி வந்தவரெனவும் அச்சுப் பிரதிகளுக்கு முன்னுள்ளகாலம் வரை இங்குள்ள பெரியோர்கள் இதையே கற்று வந்தனர்களென்றும் அறிந்தேன், இவ்வபிப்ராயத்தை ஆமோதித்து கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்த இவ்வூர் நித்தியவாசி ஸ்ரீ உ. வே. அப்புசடகோப ராமானுஜாசாரியார் M. O. L. அவர்களும் கூறியதோடு அந்தப் பிரதியாயிருந்தால் மிகவும் உயர்தரமாகவே கற்றோர்கள் மதித்து ஆதரிக்கத்தக்கதாயிருக்கும் எனவும் கூறினார்கள்.

இவர் (இராமாயணம் சாத்தாதவர்) சுமார் இரு நூறு ஆண்டுகட்குமுன் உள்ள தமிழ்ப் பண்டிதர்களில் ஒரு முக்கிய ஸ்தானம் வகித்தவரென்பது, அக்காலத்தில் 'வேங்கடத் துறைவான் கவிராயர்' என்பார் 896-ம் ஆண்டில் இயற்றி அரங்கேற்றிய "மாறன்கோவை"க்கு இவர் கூறியுள்ள சிறப்புப் பாயிரத்தாலும், 'சேஷகவி' இயற்றிய "பராங்குச நாடகம்" என்ற (அச்சாகாமல் சென்னை கவர்ன்மெண்ட் சுவடிக் காட்சி சாலையில் காணும்) பிரதியில் "960-ம் ஆண்டு இராமாயணம் சாத்தாதவரும் பார்த்து அரங்கேற்றியது" எனக் கூறியுள்ளதாலும் தெரிய வருகிறது.

இதிலுள்ள கதைப் போக்குகள், வித்தியாசங்கள் ஆழ்வார்கள் அருளியுள்ள இராமாவதார சம்பந்தமான பாசுரங்களையும், கம்ப ராமாயணத்தையே தாரகமாகக் கொண்ட இராம நாடகத்தையும் அனுசரித்துக் காண்கின்றன.

இப்பிரதியில் கூறியுள்ள தொகைக்கவியில் (எண்ணிக்கையிலுட்படாது தனியாய்) காண்பதன்படி படலம் 168-ம் கவி 12016 உள்ளமையும் நோக்கத்தக்கது. ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமியுடைய உரைப்பதிப்புகளிலும் இந்தப் பாடங்கள் புதிய பாக்கள் முழுவதும் காண்பதுடன் பெரும்பாலும் கொள்ளத்தக்கதாகவே கையாண்டிருப்பதும் காண்க.

இது சம்பந்தமாய் அரிய பெரிய அன்பரும் சென்னை பல்கலைத் தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவருமான உயர்திரு; ராவ்சாகிப் S. வையாபுரிப்பிள்ளை, B. A., B. L. அவர்களிடம் தெரிவித்துக் கொண்டதில் அவர்களும் பாராட்டியதோடு இப்பாடாந்தரங்கள் உள்ள பிரதிகளை ஆழ்வார்திருநகரிப் பக்கம் உள்ளன வென்றும், தமக்குப் இதுபோல் பிரதிகள் கிடைத்துள்ளனவென்றும், எவ்விதமும் இதுபோன்று அந்தந்தப் பிரதேசத்திலுள்ள பிரதிகள் அவ்வப்படியே வெளிவருதல் நலமெனவும் கூறினார்கள். அத்தோடு கம்ப இராமாயணம் உள்ளபடியை பெரியோர்கள் காண மிக்க உதவியாயிருக்குமெனவும் அறிவித்தார்கள்.

ஆகவே எவ்விதமும் இந்தக் கோர்வை ஒன்று வெளிப்படுத்த ஆசையுண்டாயிற்று. குல எம்பெருமான் திருநாமம் புனைந்துள்ள சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ஸ்ரீ. உ. வே. ராவ் சாகிப் மு. இராகவையங்கார்ஸ்வாமி மிகவும் கிருபைகூர்ந்து தமது அரிய பெரிய வேலைகளுக்கிடையே பரிசோதித்து உதவினார்கள். இவர்கள்பால் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

திருஞானமுத்திரை
பிரசுராலயம்
ஆழ்வார்திருநகரி
23-8-1942

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ

தோகைக் கவிப்படி இந்தச் சுவடியில் காணும் படலம் திருவிருத்தம் விபரங்கள்:—

1. பாலகாண்டம்:

		பக்கம்.	கவி.
	பாயிரம்	3	19
1	ஆற்றுப் படலம்	6	20
2	நாட்டுப் ,,	8	61
3	நகரப்	,, 16	75
4	அரசியற்	,, 28	12
5	திருவவதாரப்	,, 29	134
6	கையடைப்	,, 49	24
7	தாடகை வதைப்	,, 53	72
8	கவுசிகையாற்றுப்	,, 62	15
9	மாவலியரணப்	,, 64	24
10	வேள்விப்	,, 67	21
11	துர்வாசர் சாபப்	,, 70	32
12	கங்கை வரலாற்றுப்	,, 74	31
13	அகலிகை சாபந்தீர்	,, 78	24
14	மிதிலைகாண்	,, 82	23
15	காட்சிப்	,, 85	16
16	கைக்கிளைப்	,, 87	43
17	கோசிகப்	,, 92	73
18	வரலாற்றுப்	,,102	31
19	கார்முகப்	,,106	67
20	எழுச்சிப்	,,115	81
21	சந்திர சயிலப்	,,125	30
22	வரைக்காட்சிப்	,,129	47
23	பூக்கொய்	,,135	39
24	நீர் விளையாட்டுப்	,,140	33
25	உண்டாட்டுப்	,,144	67
26	எதிர் கோட்	,,153	34
27	உலாவியருள்	,,157	54
28	கோலங்காண்	,,164	43
29	கடிமணப்	,,170	103
30	பரசிராமப்	,,183	50
		ஆக	1398

2. திருவயோத்தியா காண்டம்

1	மந்திரப் படலம்		100
2	மந்தரை சூழ்ச்சிப்	,,	87
3	கைகேசி சூழ்வினைப்	,,	110
4	நகர்நீங்கு	,,	237
5	தயிலமாட்டுப்	,,	87
6	கங்கைப்	,,	27
7	குகப்	,,	49
8	வனம் புகு	,,	47
9	சித்திரகூடப்	,,	58
10	பள்ளியடைப்	,,	142
11	ஆற்றுப்	,,	59
12	கங்கைகாண்	,,	72
13	திருவடி சூடு	,,	141
		ஆக	1216

3. ஆரண்ய காண்டம்

1	விராதன்வதைப் படலம்		74
2	சரபங்கன் பிறப்பு நீங்கு	,,	44
3	தண்டகாரண்யப்	,,	26
4	அகத்தியப்	,,	33
5	சடாயுப்	,,	47
6	பஞ்சவடிப்	,,	7
7	சூர்ப்பநகி மூக்கரி	,,	136
8	திரிசிராவதைப்	,,	140
9	தூடணன் வதைப்	,,	21
10	கரன்வதைப்	,,	31
11	சூர்ப்பனகி சூழ்ச்சிப்	,,	170
12	மாரீசன் வதைப்	,,	84
13	சடாயு மோட்சப்	,,	221
14	அயோமுகி மூக்கரி	,,	101
15	கவந்தப்	,,	58
16	சவரி பிறப்பு நீங்கு	,,	10
		ஆக	1203

4. கிட்கிந்தா காண்டம்

1	பம்பாவாவிப்	படலம்	43
2	அநுமப்	,,	36
3	நட்புப்	,,	81
4	மராமரப்	,,	23
5	துந்துமிப்	,,	14
6	கலன்காண்	,,	33
7	வாலிவதைப்	,,	179
8	அரசியற்	,,	33
9	சரற்காலப்	,,	121
10	கிட்கிந்தை	,,	141
11	வானரத்தானை காண்	,,	39
12	நாடவிட்ட	,,	74
13	பிலம்புக்கு நீங்கு	,,	76
14	ஆற்றுப்	,,	55
15	சம்பாதிப்	,,	63
16	மயேந்திரப்	,,	29
		ஆக	1040

5. சுந்தர காண்டம்

1	கடறாவு	படலம்	96
2	நிலாத்தோற்றுப்	,,	59
3	இலங்காதேவி	,,	36
4	ஊர்தேடு	,,	139
5	வந்தனைப்	,,	114
6	உருக்காட்டுப்	,,	163
7	சூடாமணிப்	,,	83
8	பொழிலிறுத்த	,,	57
9	கிங்கரர் வதைப்	,,	64
10	சம்புமாலி வதைப்	,,	51
11	பஞ்சசேனாபதி வதைப்	,,	67
12	அக்ககுமாரர் வதைப்	,,	50
13	பாசப்	,,	62
14	பிணிவிடு	,,	138
15	இலங்கை யெரியூட்டு	,,	64
16	திருவடி தொழு	,,	52
		ஆக	1295

6. யுத்த காண்டம்

1	கடல்காண்	படலம்	12
2	இராவணன் மந்திரப்	,,	118
3	இரணியன் வதைப்	,,	176
4	வீடணனடைக்கலப்	,,	152
5	இலங்கையளவறி	,,	77
6	வருணனடைக்கலப்	,,	81
7	சேதுபந்தனப்	,,	72
8	ஒற்றுக்கேள்விப்	,,	89
9	இலங்கை காண்	,,	24
10	இராவணன் வானரத்தானை காண்	,,	37
11	மகுடபங்கப்	,,	47
12	அணிவகுப்புப்	,,	30
13	அங்கதன்றூதுப்	,,	44
14	இராவணன் முதனாளெயிற் றோற்ற	,,	255
15	கும்பகருணன் வதைப்	,,	356
16	மாயாசனகப்	,,	101
17	அதிகாயன் வதைப்	,,	268
18	நாகபாசப்	,,	300
19	படைத்தலைவர் வதைப்	,,	102
20	மகரக்கண்ணன் வதைப்	,,	38
21	பிரமாத்திரப்	,,	230
22	சீதை களங்காண்	,,	32
23	மருத்துமலைப்	,,	116
24	களியாட்டுப்	,,	21
25	மாயாசீதைப்	,,	95
26	நிகும்பலைப்	,,	182
27	இந்திரசித்துவதைப்	,,	69
28	இராவணன் சோகப்	,,	61
29	மூலபலவரவுகாண்	,,	52
30	மூலபல வதைப்	,,	235
31	வேலேற்ற	,,	52
32	வானரர் களங்காட்சிப்	,,	34
33	இராவணன் களங்காட்சிப்	,,	25
34	இராவணன் றேரேறு	,,	35
35	இராமன்றிருத் தேரேறு	,,	28
36	இராவணன் வதைப்	,,	215

37	மண்டோதரி புலம்புறு	,,	38
38	வீடணன் முடிசூடு	,,	13
39	பிராட்டி திருவடி தொழு	,,	147
40	வசந்தனுயிர்வரு	,,	27
41	திருவணைச்சிறப்புப்	,,	35
42	மீட்சிப்	,,	17
43	பரத்வாசனாசிரமப்	,,	23
44	பரதன் விரதப்	,,	122
45	நகர்புகு	,,	29
46	திருவபிடேகப்	,,	24
	ஆக		4336

7. உத்தர காண்டம்

1	கோத்திரப்	படலம்	55
2	அரக்கர் பிறப்புப்	,,	50
3	இலங்கையழித்த	,,	76
4	இராவணுதி பிறப்புப்	,,	70
5	குபேரன் மேற்செல்	,,	63
6	வரைஎடுத்த	,,	13
7	வேதவதியனல் மூழ்கு	,,	20
8	மருத்தன் வேள்விப்	,,	12
9	அனரண்யன் சாபப்	,,	11
10	இயமன் மேற்செல்	,,	35
11	பாதாளஞ்செல்	,,	
12	வருணன் மேறசெல்	,,	10
13	சூர்ப்பநகி சோபப்	,,	2
14	மதுவின்மேற் சென்ற	,,	2
15	அரம்பைப்	,,	35
16	தேவர்கள் மேற்செல்	,,	74
17	கார்த்த வீரியார்ச்சுனப்	,,	22
18	வாலிவாலாற்கட்டுண்ட	,,	20
19	அனுமார் பிறப்புப்	,,	52
20	விடைகொடுத்த	,,	21
21	சீதை வனம்புகு	,,	100
22	இராசநீதிப்	,,	49
23	இலவணன் வதைப்	,,	61
24	சம்புவதைப்	,,	67
25	யாகப்	,,	328
26	கந்தருவர்வதைப்	,,	7
27	குமரர் முடிசூட்டுப்	,,	31
28	மறலிப்	,,	27
29	துருவாசமுனிப்	,,	1
30	வைகுண்டப்	,,	7
31	பலசுருதிப்	,,	[illegible]
	ஆக		1528

ஸ்ரீ

திருஞானமுத்திரை துணை.

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான்

தென்திருப்பேரை அபிநவ காளமேகம்

ஸ்ரீ. உ. வே. அநந்த கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி

1—8—42ல் இயற்றியருளிய

ஆசிரியப்பா.

சீரயன் தேவியாம்   பாரதி யருளோன்
தக்க விசைக்கவிச்   சக்கர வர்த்தியாம்
கம்பனிங் கன்புடன்   அம்புவிப் புலவோர்க்(கு)
இன்னமு தாகவே   முன்னமே நல்கிடும்
இராகவன் கதையாம்   இராமா யணத்தைக்
குருகூர் வாவிக்   குருகூ ரதனில்
மகிழ்மா றன்தான்   மகிழ்தமிழ்க் கழக
அங்கத் தினராம்   துங்கப் புலவோர்
மேட்டிமை யாகவே   ஏட்டி லமைத்திடும்
குற்றமே அணுகா   நற்றமிழ்ப் பாவை
இரும்புக ழோங்கும்   இருரா கவருள்
இராவ் ஸாஹிப்   இராகவர் பார்வைமேல்
மாசில் குணத்துத்   தேசிக மய்யங்கார்
என்றிடும் சீமான்   இன்றமிழ்ச் செல்வன்
சீரமை வேங்கட   நாரணப் பெரியன்
புதல்வர் நால்வருள்   முதல்வ னானோன்
தந்தையா ருளத்தைச்   சிந்தையி லுணர்ந்தோன்
குருகூர் ஆலயக்   கருகூ லத்தை
முறைமையாக் காக்கும்   முறைக்குல திலகன்
வந்த வறிஞர்பால்   சந்தத மன்புளான்
தேனினு மின்மொழிச்   சீநி வாசனே
இச்செகம் மெச்சிட   அச்சியற் றினனே.

உரிமையுரை

பாரகம் புகழ் ராமாயணத் தினிற்
பாலகாண்டப் பதிப்பொன்று பாவலா
சீரகந்திகழ் ராகவன் காதலாற்
செவ்விதாக்கி யுதவின னஃ(து)
ஏரகந் திகழுங் குரு கூரினில்
எந்தையாம் பெரியன். திரு. வேங்கட
நாரண னெனுந் தேசிகப் பூசுரன்
நற்றமிழ்க் குரிசிற்குரித் தாமரோ.



ஆழ்வார்திருநகரி

(ஸ்வாமி ஆதிநாதராழ்வார் சந்நிதி ஸ்தாநிகரும், தெற்குத் திருவேங்கட முடையான் ஸ்ரீராமன் அழகர் சந்நிதிகளின் சொர்தக்காரரும், மிராசுதாரருமான)

பெரியன் தேசிகமய்யங்கார் என்ற
பெரியன் வெங்கிட்டநாராயணய்யங்கார்.

1864 — 1925

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

தருகை நீண்ட தயரதன் றான்றரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரையிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

தோகைக்கவி

கரைபொரு காண்ட மேழு கதைகளா யிரத்தெண் ணூறோ
டுரைதரு விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத் தாறிற்
பரவமர் பத்து நாலு படலநூற் றறுபத் தெட்டு
வரமுறு கம்பன் சொன்ன வண்ணமு மெண்பத் தேழே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



கம்ப ராமாயணம்

பால காண்டம்

பல சுருதி

௧. நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியர் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே. 1

௨. அன்ன தான மகிலநற் றானமுங்
கன்னி தானங் கபிலையின் றானமுஞ்
சொன்ன தான பலமெனச் சொல்லுவார்
மன்னி ராம கதைமற வார்க்கரோ. 2

௩. மற்றொரு தவமும் வேண்டா மணிமதி லிலங்கை மூதூர்ச்
செற்றவன் விசையப் பாடல் தெளிந்ததி லொன்று தன்னைக்
கற்றவர் கேட்போர் நெஞ்சங் கருதுவோ ரிவர்கள் பார்மேல்
உற்றர சாள்வர் பின்னு மும்பராய் வீட்டிற் சேர்வார். 3

சரசுவதி துதி

௪. பொத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகந் தரித்த செங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்தகொந் தளக பார முகிண்முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

ஆஞ்சனேயர் துதி

௫. அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாருயிர் காக்க வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா னவனம்மையளித்துவப்பான். 5

கடவுள் வணக்கம்

௬. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. 6

௭. சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றினில்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத லன்றரோ. 7

௮. ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல தில்லென வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நோன்மையன்
பாத மல்லது பற்றலர் பற்றிலார். 8

அவையடக்கம்

௯. ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ. 9

க0. நொய்தி னொய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
எய்த வெய்தவர்க் கெய்திய மாக்கதை
செய்த செய்தவர் சொன்னின்ற தேயத்தே. 10

கக. துறைய டுத்த விருத்தங் கவித்தொகைக்
குறைய டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ. 11

கஉ. வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே. 12

கங. முத்த மிழ்த்துறை யின்முறை நோக்கிய
உத்த மக்கவி ஞர்க்கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுவரோ. 13

கச. அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடத் தச்சருங் காய்வரோ
இறையுங் கேள்வி யிலாதவென் புன்கவி
முறையி னாலுணர்ந் தோரு முனிவரோ. 14

நூல்வழி

கரு. தேவர் பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் [1]தம்முளு முந்திய
நாவி [2]னுரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னலிது ணர்த்திய பண்பரோ. 15

இடம்

கசு. நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
இடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே. 16

பாயிரம்

கஎ. பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தனை வகுத்துப் பின்னர்
இராவணன் குலமும் பொன்றவெய் துட னயோத்தி வந்தான்.

கஅ. அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே [3]தாலை நாட்டிக்
கம்பநா டுடைய கோமான் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நரர்க்குமின் னமுத மீந்தான். 18

(பிரதி) [1] தம்முள. [2] னுலுரை. [3] தன்னை.

௧௯. எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே. 19

முற்றும்.

---

௧. ஆற்றுப்படலம்

௧. ஆச லம்புரி யைம்பொறி வாளியுங்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச [1]லம்பனை யாற்றணி கூறுவாம். 20

௨. நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே. 21

௩. பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பி னாற்றுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுந்தன போன்றவே. 22

௪. புள்ளி மால்வரை [2]பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்ந்தன தாரைகள்
உள்ளி யுள்ளதெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே. 23

௫. மான நந்தல னாகி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞான முந்திய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே. 24

௬. தலையு மாகமுந் தாளுந் தழீஇயதி
னிலைநி லாதிறை நின்றது போலவே
மலையி னுள்ளதெல் லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தது வெள்ளமே. 25

(பிரதி) 1 லம்பன வாற்றணி. 2 பொள்ளென.

எ. மணியும் பொன்னு மயிற்றழைப் பீலியும்
அணியு மானைவெண் கோடு [1]மகிலுந்தண்
இணையி லாரமு மின்னகொண் டேகலால்
வணிக மாக்களை யொத்தது வாரியே. 26

அ. பூநி ரைத்தமென் றாது பொருந்தியும்
தேன ளாவியுஞ் செம்பொன் விராவியும்
மான மாமணி யும்வரன் றேகலால்
வான வில்லை நிகர்த்தது வாரியே. 27

கூ. மலையெ டுத்து மரங்கள் முறித்துமா
டலைமு தற்பொருள் யாவையு மேந்தலால்
அலைக டற்றலை யன்றணை வேண்டிய
நிலையு டைக்கவி யொத்தது நீத்தமே. 28

க0. ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்
தூக்க மேமிக வுட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலிற் றீம்புனல்
வாக்குந் தேனுகர் மாக்களை மானுமே. 29

கக. பணைமு கக்களி யானைபன் மாக்களோ
டணிவ குத்தென வீர்த்திரைத் தார்த்தள்ளி
மணியு டைக்கொடி வந்துமுந் தூன்றலாற்
புணரி மேற்பொரப் போவது போன்றதே. 30

கஉ. இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீணிலத் தோங்கு முயிர்க்கெலாம். 31

கங. கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்
நடுக்குறு சாந்தஞ் சிந்தூ ரத்தொடு நரந்த நாகம்
கடுக்கைநாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலி னடுத்த தீந்தே னகிலொடு நாறு மன்றே. 32

கச. எயினர்வாழ் சீறூ ரப்பு மாரியி னிரியல் போக
வயின்வயி னெயிற்றி மாதர் வயிறலைத் தோட வோடி
அயின்முகக் கணையும் வில்லும் வாரிகொண் டலைக்கு நீராற்
செயம்வருங் கொற்ற மன்னர் சேனையை மானு மன்றே. 33

(பிரதி) [1] மகிலுந்தன்.

கச. செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி
மறியுடை யாயர் மாதர் வளைதுகில் வாரு நீராற்
பொறிவரி யரவி னூடும் புனிதனும் போன்ற தன்றே. 34

கரு. கதவினை முட்டி மள்ளர் கையெடுத் தார்ப்ப வேகி
நுதலணி போடை பொங்க நுகர்வரி வண்டு கிண்டத்
ததைமணி சிந்த வுந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து
மதமழை யானை யென்ன மருதஞ்சென் றடைந்த மாதோ. 35

கஎ. முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்த றன்னைப் பொருவரு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லா மிடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே. 36

கஅ காத்தகான் மள்ளர் வெள்ளக் கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேர்த்தநீர்த் திவலை பொன்னு முத்தொடு திரையின் வீசி
நீத்தம்வான் றலைய வாகி நிமிர்ந்தபார் கிழிய நீண்டு
கோத்தகா லொன்றோ டொன்றின் குலமெனப் பிரிந்த வன்றே.

ககூ. கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பிரிந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்தவன்றே.

உ0. தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே. 39

ஆற்றுப்படலம் முற்றும்.

உ. நாட்டுப்படலம்

க. வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவை மாந்தி
மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன். 40

௨. வரம்பெலா முத்தந் தத்து மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக் குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப் பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலாங் களிவண் டீட்டம்.

௩. ஆறுபா யரவ மள்ள ராலைவா யமலை யாலைச்
சாறுபா யோசை வேலைச் சங்கின்வாய்ப் பொங்கு மோதை
ஏறுபாய் தமர நீரி லெருமைபாய் துழனி யின்ன
மாறுமா ருடிப் பாடை மயங்குமா மருத வேலி. 42

௪. தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. 43

௫. நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்கு மேகம். 44

௬. தாமரைப் படுவ வண்டுந் தகைவருந் திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர் கண்களுங் காம னம்பும்
மாமுகிற் படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு நாமநூற் பொருளு மன்னோ. 45

௭. படையுழ வெழுந்த பொன்னும் பணிலங்க ளுயிர்த்த முத்தும்
இடறிய பரம்பிற் காந்து மினமணித் தொகையு நெல்லு
மிடைபசுங் கதிர்க ளீன்ற மென்கழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதுங் கண்மலர்ந் தொளிரு மாதோ. 46

௮. தெள்விளிச் சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவ மாந்தி
வள்விசிக் கருவி பம்ப வயின்வயின் வழங்கும் பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர் வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே. 47

௯. ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய் மலரின் றேனுந் தொடையிழி யிறாலின் றேனும்
மாலைவா யுகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப துங்கி மீனெலாங் களிக்கு மாதோ. 48

கO. பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகிலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்பெற்றால்.

கக. புதுப்புனல் குடையு மாதர் பூவொடு நாவி பூத்த
கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடற் றரங்க மென்றால்
மதுப்பொழி மழலைச் செவ்வாய்வாட்கடைக் கண்ணின்மைந்தர்
விதிர்ப்புற நோக்கு மன்னார் மிகுதியை விளம்ப லாமே. 50

கஉ. வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்துங்
குண்டலக் கோல மைந்தர் குடைந்தநீர்க் கொள்ளைச் சேற்றிற்
றண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டலிட் டோட மண்ணு மதுகர மொய்க்கு மாதோ. 51

கங. பொருந்திய மகளி ரோடு வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றென்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும். 52

கச. கறுப்புறு மனமுங் கண்ணிற் சிவப்புறு சூட்டுங் காட்டி
உறுப்புறு படையிற் றாக்கி யுறுபகை யின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகையர் வீர வாழ்க்கை
மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும் 53

கரு. எருமைநா கீன்ற செங்க ணேற்றினோ டேற்றை சீறத்
துருமிவை யென்னத் தாக்கி யூழுற நெருக்கி யொன்றாய்
விரியிரு ளிரண்டு கூறாய் வெகுண்டன வினைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப மஞ்சுற வார்க்கின் றாரும். 54

கசு. முள்ளரை முளரி வெள்ளை முளையிற முத்தும் பொன்னுந்
தள்ளுற மணிகள் சிந்திச் சலஞ்சலம் புலம்பச் சாலிற்
றுள்ளிமீன் றுடிப்ப வாமை தலைபுடை சுரிப்பத் தூம்பி
னுள்வரா லொளிப்ப மள்ள ருழுபக டுரப்பு வாரும். 55

கஎ. சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை. 56

௧௮. குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பன்மலர்ப் பள்ளி நின்று
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை. 57

௧௯. முந்துமுக் கனியி னொடு முதிரையு முழுத்த நெய்யுஞ்
செந்தயிர்க் கண்டங் கண்ட மிடையிடை செறிந்த சோற்றிற்
றந்தமி லிருந்து தாமும் விருந்தொடு தமருண் டென்ன
அந்தண ரமுத வுண்டி யயில்வுறு மமலை யெங்கும். 58

௨௦. முறையறிந் தவாவை நீங்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு மிசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப் பூதலந் தன்னிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க நெடுமுது காற்று நெய்தல். 59

௨௧. எறிதரு மரியின் சும்மை யெடுத்தவா ரிட்ட போர்கள்
குறிகொளும் போத்திற் கொல்வார் கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவி மிக்க விருந்துண மனையி னுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி நிறைத்துமண் ணெளிய வூர்வார்.

௨௨. கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் பொழிலி னுள்ள
முதிர்பயன் மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள
மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார். 61

௨௩. பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வேற்கணை யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின வண்டரோ. 62

௨௪. ஈர நீர்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட மென்முலைத்
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே. 63

௨௫. தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளல்போய்
மாய வெள்வளை வாய்விட் டரற்றவுந்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கைய ரங்கை வருந்துவார். 64

௨௬. தினைச்சி லம்புவ தீஞ்சொ லிளங்கிளி
நனைச்சி லம்புவ நாகிள வண்டுபூம்
புனற்சி லம்புவ புள்ளினம் வள்ளியோர்
மனைச்சி லம்புவ மங்கல வள்ளையே. 65

௨௭. வேலை வென்ற விழிச்சியர் வெம்முலை
ஆலை நின்று முனிந்திடு மங்கொர்பால்
பாலை தந்த மதுப்பரு கிப்பரு
வாலை நின்று மதர்க்கு மருங்கெலாம். 66

௨௮. துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
வரிம ருப்பிணை வன்றலை யேறுவான்
உருமி டித்தெனத் தாக்குறு மொல்லொலி
வெருவி மால்வரைச் சூன்மழை மின்னுமே. 67

௨௯. வள்ளி கொள்பவர் கொள்வன மாமணி
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
வெள்ளி கொள்வன பொன்விரி புன்னைகள்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே. 68

௩௦. கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
கன்று றக்குங் குரவை கடைசியர்
புன்ற லைப்புனங் காப்பிடைப் போதரச்
சென்றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி. 69

௩௧. கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றொ டர்ப்படுக் கும்வன வாரிசூழ்
குன்று டைக்குல மள்ளர் குழூக்குரல்
இன்று ணைக்களி யன்ன மிரிக்குமே. 70

௩௨. கூட்டு டைத்துணைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யத்தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் குருவிக் குழாமரோ. 71

௩௩. முட்டி லட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீரொடு நீத்தந்தான்
பட்ட மென்கழு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலி னூறு வளர்க்குமே. 72

௭௪. பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையோ. 73

௭௫. பிறைமு கத்தலைப் பெட்பி னிரும்புபோழ்
குறைந றைக்கறிக் குப்பை பருப்பொடு
நிறைவெண் முததி னிறத்தரி சிக்குவை
உறைவ கோட்டமி லூட்டிடந் தோறெலாம். 74

௭௬. கலஞ்சு ரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம். 75

௭௭. கூற்ற மில்லையோர் குற்றமில் லாமையாற்
சீற்ற மில்லைத்தஞ் சிந்தையின் செய்கையால்
ஆற்ற நல்லற மல்லதில் லாமையால்
ஏற்ற மல்ல திழித்தக வில்லையே. 76

௭௮. நெறிக டந்து பரந்தன நீத்தமே
குறிய ழீந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே. 77

௭௯. அகிலி டும்புகை யட்டி லிடும்புகை
நகிலி னாலை நறும்புகை நாவலர்
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முழங்கின வெங்கணும். 78

௮௦. குற்ற பாகு கொழிப்பன கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே. 79

௮௧. சேம்பு கால்பொரச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றன பாய்பசுந் தேறலே. 80

௪௨. இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன முலையவர் குழல்போற்
புயல்புடை பெயர்வன பொழிலவர் விழிபோற்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி. 81

௪௩. இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
குடைபவர் துவரிதழ் மலர்வன குமுத
மடைபெய ரனமென நடைபயி லளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம். 82

௪௪. விதியினை நகுவன வயில்விழி பிடியின்
கதியினை நகுவன வவர்நடை கமலப்
பொதியினை நகுவன புணர்முலை கலைவான்
மதியினை நகுவன வனிதையர் வதனம். 83

௪௫. பகலினொ டிகலுவ படர்மணி மடவார்
நகிலினொ டிகலுவ நளிர்வள ரிளநீர்
துகிலினொ டிகலுவ சுதைபுரை நுரைகார்
முகிலினொ டிகலுவ கடிமண முரசம். 84

௪௬. காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன புணர்முலை யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம். 85

௪௭. தென்மலை யல்லன நிரைவரு தரளஞ்
சொன்மலை யல்லன தொடுகட லமிர்தம்
நன்மலை யல்லன நதிதரு நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம். 86

௪௮. பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகஞ்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம். 87

௪௯. கோகில நவில்வன விளையவர் குதலைப்
பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
கேகய நகுவன கிளரிள வளையின்
நாகுக ளுமிழ்வன நகைபுரை தரளம். 88

௫0. பழையர்தம் மனையன பழநறை நுகரும்
உழவர்தம் மனையன வுழுதொழில் புரியும்
மழவர்தம் மனையன மணவொலி யிசையின்
கிழவர்தம் மனையன கிளைபயில் வளையாழ். 89

௫௧. கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன வுறையுறு மமிர்தங்
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள். 90

௫௨. இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோற்
றடங்கொள் சோலைவாய் மலர்கொய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடுந்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞையே. 91

௫௩. வண்மை யில்லையோர் வறுமை [1]யின்மையாற்
றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். 92

௫௪. எள்ளு மேனலு மிறுங்குஞ் சாமையுங்
கொள்ளுங் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள லாங்களத் தமுதின் பண்டியுந்
தள்ளு நீர்மையிற் றலைம யங்குமே. 93

௫௫. மூக்கிற் றூக்குறு முரிந்த கோதைநேர்
தாக்கிற் றூக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கிற் றூக்குறும் விளியு மள்ளர்கை
வாக்கிற் றூக்குறு மொலியு மானுமே. 94

௫௬. கூறும் பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் வீதிவாய்
ஆறு மாறும்வந் தெதிர்த்த தாமெனச்
சாறும் வேள்வியுந் தலைம யங்குமே. 95

௫௭. உயருஞ் சோர்விலா வுயிர்கள் செய்வினைப்
பெயருஞ் செல்கதிப் பிறக்கு மாறுபோல்
அயிருந் தேனுமின் பாகு மாயரூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே. 96

(பிரதி) [1] யில்லையாற்.

௫௮. தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமிர் தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவார் செங்கைப் பங்கயம்
வானி லாவுறக் குவிவ மானுமே. 97

௫௯. பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே. 98

௬0. சோலை மாநிலந் துன்னி யாவரே
வேலை கண்டுதான் மீள வல்லவர்
சாலும் வார்புனற் சரயு வும்பல
காலி னோடியுங் கண்ட தில்லையே. 99

௬௧. வீடு சேருநீர் வேலை கால்மடுத்
தூடு பேரினு முலைவி லாநலங்
கூடு கோசல மென்னுங் கோதிலா
நாடு கூறினு நகரங் கூறுவாம். 100

நாட்டுப்படலம் முற்றும்

---

௩. நகரப்படலம்

க. திவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன்
முனிவரும் புகழ்ந்தன வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா னுதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம். 101

உ. நிலமகண் முகமோ திலதமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய

மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ மலரோன்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம். 102

௩. உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்
கொருதனிக் கொழுநனு மலர்மேற்
கமைப்பருஞ் செல்வக் கடவுளு முவமை
கண்டிலா நகரது காண்பான்
அமைப்பருங் காத லதுபிடித் துந்த
வந்தரஞ் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவா ரிதுவலா லிதனுக்
கியம்பலா மேதுமற் றியாதோ. 103

௪. அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு
மளகையு மென்றிவை யயனுற்
பயில்வுற லுற்ற படிப்பெரும் பான்மைப்
பெருந்திரு நகரது படைப்பான்
மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த
மனத்தொழி ஞணினர் மறந்தார்
புயறொடுங் குடுமி நெடுநில மாடத்
திருநகர் புகலுமா றெவனோ. 104

௫. புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க
மென்னுமீ தருமறைப் பொருளே
மண்ணிடை யாவ ரிராகவ னன்றி
மாதவ மறத்தொடும் வளர்த்தோர்
எண்ணருங் குணத்தி னவனினி திருந்திவ்
வேழுல காளிட மென்றால்
ஒண்ணுமோ வதனின் வேறொரு போக
முறைவிட முண்டென வுரைத்தல். 105

௬. தங்குபே ரருளுந் தருமமுந் துணையாய்த்
தம்பகைப் புலன்களைந் தவர்க்கும்
பொங்குமா தவமு ஞானமும் புரிந்தோர்
யாவர்க்கும் புகலிட மான

செங்கண்மால் பிறந்தாண் டளப்பருங் காலந்
திருவின்வீற் றிருந்தமை தெளிந்தால்
அங்கண்மா ஞாலத் திங்கக ரொக்கும்
பொன்னக ரமரர்நாட் டியாதோ. 106

ஏ. அரசெலா மவண வணியெலா மவண
வரும்பெறன் மணியெலா மவண
புரைசைமா களிறும் புரவியுந் தேரும்
பூதலத் தியாவையு மவண
விரசுவார் முனிவர் விண்ணவ ரியக்கர்
விஞ்சையர் முதலினோ ரென்றால்
உரைசெய்வேன் யானே யானபோ திதனுக்
குவமைதா னரிதரோ வுளவே. 107

அ. நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
நனிதவ வுயர்ந்தன பனிதோய்
மால்வரைக் குலத்தின் யாவையு மில்லை
யாதலா னுவமைமற் றில்லை
நூல்வகைத் தொடர்ந்து பயத்தொடு பழகி
நுணங்கிய நுவலரு முணர்வே
போல்வகைத் தல்லா லுயர்வினோ டுயர்ந்த
தென்னலாம் பொன்மதி லிலையே. 108

கூ. மேவரு முணர்வு முடிவிலா மையினால்
வேதமு மொக்கும் விண்புகலாற்
றேவரு மொக்கு முனிவரு மொக்குந்
திண்பொறி யடக்கிய செயலாற்
காவலிற் கலையூர் கன்னியை யொக்குஞ்
சூலத்தாற் காளியை யொக்கும்
யாவரு மொக்கும் பெருமையா லெய்தற்
கருமையா லீசனை யொக்கும். 109

க0. [1]பஞ்சிவான் மதியை யூட்டிய தனைய
படருகிர்ப் பங்கயச் செங்கால்
வஞ்சிபோன் மருங்குற் குரும்பைபோற் கொங்கை
வாங்குவேய் வைத்தமென் பணைத்தோள்

(பி - ம்) 1 பஞ்சிவாண்.

அஞ்சொலார் பயிலு மயோத்திமா நகரி
னழகுடைத் தன்றென வறிவான்
இஞ்சிவா னோங்கி யிமையவ ருலகங்
காணிய வெழுவதொத் [1] துளதே. 110

கக. கோலிடை யுலக மளத்தலிற் பகைஞர்
முடித்தலை கோடலின் மனுவின்
நூலிடை நடக்குஞ் செவ்வையின் யார்க்கு
நோக்கருங் காவலின் வலியின்
வேலொடு வாள்விற் பயிற்றலின் வெய்ய
சூழ்ச்சியின் வெலற்கரு நலத்திற்
சாலுடை யுயர்விற் சக்கர நடத்துந்
தன்மையிற் றலைவரொத் துளதே. 111

கஉ. சினத்தயில் கொலைவாள் சிலைமழுத் தண்டு
சக்கரந் தோமரம் வலயம்
கனத்திடை யுருமின் வெருவருங் கவண்க
லென்றிவை கணிப்பில வொளுங்கின்
இனத்தையு முவணர்க் கிறையையு மியங்கு
காலையு மிதமலா னிணைவார்
மனத்தையு மெறியும் பொறியுள வென்றால்
மற்றினி யுணர்த்துவ தெவனோ. 112

கங. பூணினும் புகழே யமையுமென் றினைய
பொற்பினின் றுயிர்நனி புரக்கும்
யாணரெண் டிசைக்கு மிருளற விமைக்கு
மிரவிதன் குலமுத னிருபர்
சேனையுங் கடந்து திசையையுங் கடந்து
திகிரியுஞ் செந்தனிக் கோலும்
ஆணையுங் காக்கு மாயினன் னகருக்
கணியென வியற்றிய தன்றே. 113

கச. அன்னமா மதிலுக் காழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன்ன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்

(பி - ம்) 1 துளதோ.

கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங்
[1]கராத்தது நவிலலுற் றதுநாம். 114

வேறு

கரு. ஏகுகின்ற தங்கணங்க ளோடுமெல்லை காணலா
[2]நாகமொன் றகன்கிடங்கை நாமவேலை யாமெனு [மென்
மேகமொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த குன்ற
ருகநொந்து நின்றுதாரை யம்மதிற்கண் வீசுமே. 115

கசு. அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்துநீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்த்தெலாம்
வந்துபோர் விளைக்கமா மதில்வளைந்த போன்றவே. 116

கஎ. ஈரும்வாளின் வால்விரித் தெயிற்றிளம் பிறைக்குலம்
பேரமின்னி நாநிமிர்த் தெரிந்தகட் பிறங்குதீச்
சோரவொன்றை யொன்றுமுன் றொடர்ந்துசீ றிடங்கர்மாப்
போருகந்து சீறுகின்றபோரரக்கர் போலுமே. 117

கஅ. ஆளுமன்னம் வெண்குடைக் குலங்களா யருங்கராக்
கோளெலா முலாவுகின்ற குன்றமன்ன யானையாய்த்
தாளுலாவு பங்கயத் தரங்கமுந் துரங்கமாய்
வாளும்வேலு [3]மீனமாக மன்னர்சேனை மானுமே. 118

கசு. சூழ்ந்தநாஞ்சில் சூழ்ந்தவாரை சுற்றுமுற்று பாரெலாம்
போழ்ந்தமா கிடங்கிடைக் கிடந்துபொங் கிடங்கர்மாத்
தாழ்ந்துவங்க வாரியிற் றடுக்கொணு மதத்தின்வீழ்ந்
தாழ்ந்தயானை மீள்கிலா தழுந்துகின்ற போன்றவே. 119

உ0. விளிம்புசுற்று முற்றுவித்து வெள்ளிகட்டி யுள்ளுறப்
பளிங்குபொற் றகட்டகட் டடுத்துறப் படுத்தலிற்
றளிந்தகற் றலத்தொடச் சலத்தினைத் தனித்துறத்
தெளிந்துணர்த்து கிற்றுமென்ற றேவராலு மாவதோ. 120

(பிரதி) 1. நாரம தறைய லுற்றதுவாம். 2. நாகமென் றதன் கிடங்கை.
3. மீனதாக.

உக. அன்னநீ ரகன்கிடங்கு சூழ்கிடந்த தாழியைத்
துன்னிவேறு சூழ்கிடந்த தூங்குவீங் கிருட்பிழம்
பென்னலா மிறும்புசூழ் கிடந்தசோலை யெண்ணிலப்
பொன்னின்மா நகர்க்குடுத்த நீலவாடை போலுமே. 121

உஉ. எல்லைநின்ற வென்றியானை யென்னநின்று முன்னைமால்
ஒல்லையும்பர் நாடளந்த தாளின்மீ துயர்ந்துபோய்
மல்லன்ஞாலம் யாவுநீதி மாறுறா வழக்கினால்
நல்லவாறு சொல்லும்வேத நான்குமன்ன வாயிலே. 122

உங. தாவில்பொற் றலத்தினிற் றவத்தினோர்க டங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்கலால்
ஆவியொத்த வன்புசேவல் கூவவந் தணைந்திடா
வோவியப் புறாவின்மா டிருக்கவூடு பேடையே. 123

உச. கல்லடித் தடக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீ
யெல்லுடைப் பசும்பொன்வைத் திலங்குபன் மணிக்குலம்
வில்லிடக் குயிற்றிவாள் விரிக்கும்வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே. 124

உரு. மரகதத் திலங்குபோதி கைத்தலத்து வச்சிரம்
புரைதவிர்த் தடக்கிமீது பொன்குயிற்றி மின்குலா
நிரைமணிக் குலத்தினொளி நீள்வகுத்த வோளிமேல்
விரவுகைத் தலத்தினுய்த்த மேதகத்தின் மேலரோ. 125

உசா. ஏழ்பொழிற்கு மேனிலத் தலஞ்சமைத்த தென்னநூல்
ஊழுறக் குறித்தமைத்த வும்பர்செம்பொன் வேய்ந்துமீச்
சூழ்சுடர்ச் சிரத்துநன் மணித்தசும்பு தோன்றலால்
வாழ்நிலக் குலக்கொழுந்தை மௌலிசூட்டி யன்னவே. 126

வேறு

உஎ. திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதைபுரை தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றரங்கம் போலுமே. 127

உஅ. புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளிவெண் கிரியிடை விரிந்த போலுமே. 128

௨௯. வயிரநற் கான்மிசை மரக தத்துலாஞ்
செயிரறப் போதிகை கிடத்திச் சித்திரம்
உயிர்பெறக் குயிற்றிய வும்பர் நாட்டவர்
அயர்வுற விமைப்பன வளவில் கோடியே. 129

௩௦. பாடகக் காலடி பதுமத் தேய்ப்பன
சேடரைத் தழீஇயின செய்ய வாயின
நாடகத் தொழிலின நடுவு துய்யன
ஆடகத் தோற்றத்த மகளி ரல்லன. 130

௩௧. சந்திர காந்தத்திற் றளம் வேய்ந்தன
பந்திசெய் [1] தூணின்மேற் பவளப் போதிகைச்
செந்தம ணியத்துலாஞ் செறிந்த திண்சுவர்
இந்திர நீலத்த வெண்ணில் கோடியே. 131

௩௨. புக்கவர் கண்ணிமை பொருந்து றாதொளி
தொக்குடன் றயங்கவிண் ணவரிற் றோன்றலாற்
றிக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வவீ
டொக்கநின் றிமைப்பன வும்பர் நாட்டினும். 132

௩௩. அணியிழை மகளிரு மலங்கல் வீரருந்
தணிவன வறநெறி தணிவி லாதன
மணியினும் பொன்னினும் வனைந்த வல்லது
பணிபிறி தியன்றில பகலை வென்றன. 133

௩௪. வானுற நிவந்தன வரம்பில் செல்வத்த
தானுயர் புகழெனத் தயங்கு சோதிய
ஊனமி லறநெறி யுற்ற வெண்ணிலாக்
கோனிகர் குடிகடங் கொள்கை சான்றன. 134

௩௫. அருவியிற் றாழ்ந்துமுத் தலங்கு தாமத்த
விரிமுகிற் குலமெனக் கொடிவி ராவின
பருமணிக் குவையின பசும்பொன் கோடிய
வருமயிற் கணத்தன மலையும் போன்றன. 135

௩௬. துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்பூண் டரற்று மாளிகைக்
கொடியிடைத் தரளவெண் கோவை சூழ்வன
கடியுடைக் கற்பகங் கான்ற மாலையே. 136

(பி - ம்) 1 தூணின.

௩௭. காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போற்
றூணிமிர் பதாகையின் குழாந்த ழைத்தன
வாணணி மழுங்கிட மயங்கி வைகலுஞ்
சேண்மதி தேய்வதக் கொடிக டேய்க்கவே. 137

௩௮. பொன்றொடர் மண்டப மல்ல பூத்தொடர்
மன்றுக ளல்லன மாட மாளிகை
குன்றுக ளல்லன மணிசெய் குட்டிம
முன்றில்க ளல்லன முத்தின் பந்தரே. 138

௩௯. மின்னென விளக்கென வெயிற்பி ழம்பெனத்
துன்னிய தமனியத் தொழிற ழைத்தவக்
கன்னிநன் னகர்நிழல் கதுவ லாலரோ
பொன்னுல காயது புலவர் வானமே. 139

௪௦. எழுமிடத் தகன்றிடை யேறி யெற்படும்
பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்னகர்
அழன்மணி திருத்திய வயோத்தி யாளுடை
நிழலெனப் பொலியுமா னேமி யான்சுடர். 140

௪௧. அகிலிடு கொடும்புகை யளாய்ம யங்கின
முகிலொடு வேற்றுமை தெரிக்கி லாமுழுத்
துகிலொடு நெடுங்கொடிச் சூழன் மின்னிடப்
பகலிடை மின்மினி பறப்பத் தோன்றுமே. 141

௪௨. ஆய்ந்தமே கலையவ ரம்பொன் மாளிகை
வேய்ந்தகா ரகிற்புகை யுண்ட மேகம்போய்த்
தோய்ந்தமா கடனறுந் தூப நாறுமேற்
பாய்ந்ததா ரையினிலை பகர வேண்டுமோ. 142

௪௩. குழலிசை மடந்தையர் குதலை கோதையர்
மழலைசெய் மகரயாழ் மயங்கு மெங்கணும்
எழிலிசை மடந்தைய ரின்சொ லவ்விசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை. 143

௪௪. கண்ணிடைக் கனல்சொரி களிறு கால்கொடு
மண்ணிடை வெட்டுவ வேட்கு மைந்தர்தம்
பண்ணைகள் பயிலிடங் குழிப டைப்பன
சுண்ணமக் குழிகளைத் தொடர்ந்து தூர்ப்பன. 144

சரு. பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடைச்
சிந்தின முத்தின மவைதி ரட்டுவார்
அந்தமில் சிலதிய ரகற்று குப்பைகள்
சந்திர னொளிகெட நிலாத்த ழைப்பன. 145

சசு. அரங்கிடை மடந்தைய ராடு வாரவர்
கருங்கடைக் கண்ணிணை காமர் நெஞ்சினை
யுருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே. 146

சஎ. பொழிவன சோலைகள் புதிய தேன்சில
விழைவன தென்றலு மிஞிறு மெல்லென
நுழைவன வன்னவை நுழைய நோவொடுங்
குழைவன பிரிந்தவர் கொதிக்குங் கொங்கையே. 147

சஅ. இறங்குவ மகரயா ழெடுத்த வின்னிசை
நிறங்கிளர் பாடல்போய் நிமிர்ந்த தவ்வழிக்
கறங்குவ வள்விசிக் கருவி கண்முகிழ்த்
துறங்குவ மகளிரோ டொதுங்கு கிள்ளையே. 148

சகூ. குதைவரிச சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
பதயுகத் தொழிலொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினால்
உதைபடச் சிவந்தன வுரவுத் தோள்களே. 149

ருO. பொழுதுணர் வரியவப் பொருவின் மாநகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப் பார்க்கு மாசையால்
எழுதுசித் திரங்களு மிமைப்பி லாதன. 150

ருக. பதங்களிற் றண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமி திப்பவர்
மதங்கியர்க் கச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக ளல்லன புரவித் தார்களே. 151

ருஉ. முளைப்பன முறுவலம் முறுவல் வெந்துயர்
விளைப்பன வன்றியு மெலிந்து நாடொறும்
இளைப்பன நுண்ணிடை யிளைப்ப மென்முலை
திலைப்பன முத்தொடு செம்பொ னாரமே. 152

௫௩. தழல்விழி யாளியுந் துணையுந் தாழ்வரை
முழைவிழை கிரிநிகர் களிற்றின் மும்மத
மழைவிழும் விழுந்தொறு மண்ணுங் கீழுறக்
குழைவிழு மதில்விழுங் கொடித்திண் டேர்களே. 153

௫௪. இடையிடை யெங்கணுங் களிய ரூதன
நடையிள வன்னங்க ணளின நீர்க்கயல்
பெடையிள வண்டுகள் பிரச மார்த்திடுங்
கடகரி யல்லன மகளிர் கண்களே. 154

௫௫. தணிமலர்த் திருமக டங்கு மாளிகை
இணரொளி பரப்பிநின் றிருடி ரப்பன
திணிசுடர் நெய்யுடைத் [1]திருவி ளக்கமோ
மணிவிளக் கல்லன மகளிர் மேனியே. 155

௫௬. ஆடுவார் புரவியின் குரத்தை யார்ப்பன
சூடுவா ரிகழ்ந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவா ரிழுக்குவ தூட [2]லூடுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே. 156

௫௭. இளைப்பருங் குரங்களா லிவுளி தாரணி
கிளைப்பன வவ்வழிக் கிளைத்த தூளியின்
ஒளிப்பன மணியவை யொளிர மீதுதேன்
துளிப்பன குமரர்தந் தொய்யின் மாலையே. 157

௫௮. விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ
கலக்கடை கணிப்பருங் கதிர்க ணூறுவ
குலக்கொடி மாதர்வாய் குமுத நாறுவ
மலர்க்கடி நாறுவ மகளிர் கூந்தலே. 158

௫௯. கோவையி னிதனொடெண் குறிக்கி லாதவத்
தேவர்தந் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும் [3]வழங்கிடத் திகலி யிந்நகர்
ஆவணங் கண்டபி னளகை தோற்றதே. 159

௬௦. அதிர்கழ லொலிப்பன வயிலி மைப்பன
கதிர்மணி யணிவெயிற் கால்வ மான்மத
முதிர்வுறக் கமழ்வன முத்த மின்னுவ
மதுகர [4]மிரைப்பன மைந்த ரீட்டமே. 160

(பிரதி) 1 தீவி. 2 லூட்டுறக். 3 விளங்கிடத். 4 மிமைப்பன.

௬௧. வளையொலி வயிரொலி மகர வீணையின்
கிளையொலி குழலொலி கின்ன ரத்தொலி
துளையொலி பல்லியந் துவைக்குஞ் சும்மையின்
விளையொலி கடலொலி மெலிய விம்முமே. 161

௬௨. மன்னவர் தருந்திறை யளக்கு மண்டபம்
அன்னமென் னடையவ ராடு மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டப
முன்னரு மருமறை யோது மண்டபம். 162

௬௩. இரவியிற் சுடர்மணி யிமைக்குந் தோரணந்
தெருவினிற் சிறியன திசைகள் சேண்விளங்
கருவியிற் பெரியன வானைத் தானங்கள்
பரவையிற் பெரியன புரவிப் பந்தியே. 163

௬௪. சூளிகை மழைமுகி றொடக்குந் தோரண
மாளிகை மலர்வன மகளிர் வாண்முகம்
வாளிக ளன்னவை மலர்வ மற்றவை
யாளியை யன்னவர் நிறத்தி லாழ்பவே. 164

௬௫. மன்னவர் கழலொடு மாறு கொள்வன
பொன்னணி தேரொலி புரவித் தாரொலி
இன்னகை யவர்சிலம் பேங்க வேங்குவ
கன்னியர் குடைதுறைக் களக வன்னமே. 165

௬௬. ஊடவுங் கூடவு முயிரி னின்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவு மகன்புன லாடி யம்மலர்
சூடவும் பொழுதுபோஞ் சிலர்க்கத் தொன்னகர். 166

௬௭. முழங்குதிண் கடகரி மொய்ம்பி னூரவும்
எழுங்குரத் திவுளியோ டிரத மேறவும்
பழங்கணோ டிரந்தவர் பரிவு தீர்தர
வழங்கவும் பொழுதுபோஞ் சிலர்க்கம் மாநகர். 167

௬௮. கரியொடு கரியெதிர் பொருத்திக் கைப்படை
வரிசிலை முதலிய வழங்கி வாளுளைப்
புரவியிற் பொருவில்செண் டாடிப் போர்க்கலை
தெரிதலிற் பொழுதுபோஞ் சிலர்க்கச் சேணகர். 168

௬௯. நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யவரொடும் வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் மாந்தித்தூ
துந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கவ் வொண்ணகர். 169

வேறு

௭௦. நானா விதமாய் நளிர்மாதிர வீதி யோடி
மீனாறு வேலைப் புனல்வெண்முகி லுண்ணு மாபோல்
ஆனாத மாடத் திடையாடு கொடிக்கண் மீப்போய்
வானாறு நண்ணிப் புனல்வற்றிட நக்கு மன்றே. 170

௭௧. வன்றோல் புணர்ந்த முனிவாயிலும் வானி னூடு
சென்றோங்கு மேலோ ரிடமில்லெனச் செய்பொ னிஞ்சி
குன்றோங்கு தோளார் குணங்கூட்டிசைக் குப்பை யென்ன
ஒன்றோ டிரண்டு முயர்ந்தோங்கிய வோங்க ணை. 171

௭௨. காடும் புனமுங் கடலன்ன கிடங்கு மாதர்
ஆடுங் குளமு மருவிச்சுனைக் குன்று மும்பர்
வீடும் விரவு மணப்பந்தரும் வீணை வண்டு
பாடும் பொழிலு மலநல்லறப் பள்ளி மன்னோ. 172

௭௩. தெள்வார் மழையுந் திரையாழியு முட்க நாளும்
வள்வார் முரச மதிர்மாநகர் வாழு மாக்கள்
கள்வா ரிலாமைப் பொருள்காவலு மில்லை யாருங்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மன்னோ. 173

௭௪. கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மன்னோ. 174

௭௫. ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்தரு மம்ம லர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே. 175

நகரப்படலம் முற்றும்.

ச. அரசியற் படலம்

க. அம்மா ணகருக் கரசன்னர சர்க்க [1]ரைசன்
செம்மாண் டனிக்கோ லுலகேழினுஞ் செல்ல நின்றான்
இம்மாண் கதைக்கோ ரிறையாய விராம னென்னும்
மொய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தி யன்னான். 176

உ. ஆதி மறையும் மருளும்மற னும்ம மைவும்
ஏதின் மிடல்வீ ரமுமீகையு மெண்ணில் யாவும்
நீதி நிலையும் மிவைநேமியி னோர்க்கு நின்ற
பாதி முழுதும் மிவற்கேபணி கேட்ப மன்னோ. 177

ங. மொய்யார் கலிசூழ் முதுபாரின் முகந்து தானக்
கையார் புனலா னனையாதன கையு மில்லை
மெய்யாய வேதத் துறைவேந்தருக் கேய்ந்த [2]யாரும்
செய்யாத யாக மிவன்செய்து மறந்த மாதோ. 178

ச. தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்ப யப்பிற்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்கு நீரான்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னோ. 179

ரு. ஈந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணி னன்னூல்
ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர் வாளாற்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் றிருவின்றொடர் போக பௌவம். 180

வேறு

சு. வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ்த் தசர தப்பெயர்
வள்ளல்வள் ளுறையயின் மன்னர் மன்னனே. 181

எ. நேமிமால் வரைமதி லாக நீள்புறம்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியு மயோத்திமா நகரம் போன்றதே. 182

(பிரதி) 1 ரசன். 2 யாவும்.

அ. யாவதும் வன்மைநே [1]ரெறிந்து நீட்டலால்
மேவருங் கையடை வேலுந் தேயுமாற்
கோவுடை நெடுமணி மகுட கோடியாற்
சேவடி யடைந்தபொற் கழலுந் தேயுமால். 183

கூ. மண்ணிடை யுயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றித்
தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவும்
அண்ணறன் குடைமதி யமையு மாதலான்
விண்ணிடை மதியினை மிகையி [2]தென்பவே. 184

க௦. வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினன். 185

கக. குன்றென வுயரிய குவவுத் தோளினன்
வென்றியந் திகிரிவெம் பருதி யாமென
ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை
நின்றுநின் றுயிர்தொறு நெடிது காக்குமே. 186

க௨. எய்யென வெழுபகை யெங்கு மின்மையான்
மொய்பெறுத் தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிய னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான். 187

அரசியற்படலம் முற்றும்.

ரு. திருவவதாரப் படலம்

க. ஆயவ னொருபக லயனை யேநிகர்
தூயமா முனிவனைத் தொழுது தொல்குலத்
தாயருந் தந்தையுந் தவமு மன்பினன்
மேயவான் கடவுளும் பிறவும் வேறு நீ. 188

௨. எங்குலத் தலைவர்க ளிரவி தன்னினுந்
தங்குலம் விளங்கிடத் தரணி தாங்கினர்
மங்குந ரில்லென வரம்பில் வையக
மிங்குநின் னருளினு லினிதி னோம்பினேன். 189

(பிரதி) 1 ரறிந்து. 2 தென்னவே.

௩. அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலக மோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுவ தென்பதோர் மறுக்க முண்டரோ. 190

௪. அருந்தவ முனிவரு மந்த ணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினார்
பெருந்துய ருழக்குவ ரெற்பி னென்பதோர்
அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன். 191

௫. முரசறை செழுங்கடை முத்த மாமுடி
அரசர்தங் கோமக னனைய கூறலும்
விரைசெறி கமலமென் பொருட்டு மேவிய
வரசரோ ருகன்மகன் மனத்தி னெண்ணினான். 192

௬. அலைகட னடுவணோ ரனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழி லரக்கர்தங் கொடுமை தீர்ப்பனென்
றலைவுறு மமரருக் குரைத்த வாய்மையை. 193

௭. சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யானினி
அடுகில னெனமறுத் தவரோ டேகினான். 194

௮. வடவரைக் குடுமியி னெடுவெண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
கடவுளை யடிதொழு தமரர் கண்டகர்
இடிநிகர் வினையம தியம்பி னாரரோ. 195

௯. பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடல்
மேகநா தன்புகுந் திலங்கை மேயநாட்
போகமா மலருறை புனிதன் மீட்டமை
தோகைபா கற்குறச் சொல்லி னாரரோ. 196

௧௦. இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலி வலிக்கொரு செயலின் றெங்களாற்
கருமுகி லெனவளர் கருணை யங்கடல்
பொருதிடர் தணிக்கினுண் டெனும்பு ணர்ப்பினால். 197

கக. திரைகெழு பயோததித் துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினாற்
கரகம லங்குவித் திருந்த காலையிற்
பரகதி யுணர்ந்தவர்க் குதவும் பண்ணவன். 198

கஉ. கருமுகி றாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மீ
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான். 199

கங. எழுந்தனன் கறைமிடற் றிறையுந் தாமரைச்
செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தன ரடிமிசை விண்ணு ளோரொடுந்
தொழுந்தொறுந் தொழுந்தொறுங் களிது லங்குவார். 200

கச. ஆடினர் பாடின ரங்கு மிங்குமாய்
ஓடின ருவகைமா நறவுண் டோர்கிலார்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலாற்
சூடினர் முறைமுறை துளவத் தாண்மலர். 201

கரு. பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற
என்னையா ளுடையவன் றேணின் றெம்பிரான்
சென்னிவான் றடவுமண் டபத்திற் சேர்ந்தரி
துன்னுபொற் பீடமேற் பொலிந்து தோன்றினான். 202

கசா. விதியொடு முனிவரும் விண்ணு ளோர்களும்
மதிவளர் சடைமுடி மழுவ லாளனும்
அதிசய முடனுவந் தயலி ருந்துழீஇக்
கொதிகொள்வே லரக்கர்தங் கொடுமை கூறுவார். 203

கஎ. ஐயிரு தலையினோ னனுச ராதியா
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ மிழந்தது திருவி னாயக
உய்திற மில்லையென் றுயிர்ப்பு வீங்கினார். 204

கஅ. எங்கணீள் வரங்களா லரக்க ரென்றுளார்
பொங்குமூ வுலகையும் புடைத்த ழித்தனர்
செங்கணா யகவினித் தீர்த்தி யில்லையேல்
நுங்குவ ருலகெலா நொடியி னென்றனர். 205

கக. என்றன ரிடருழந் திறைஞ்சி யேத்தலும்
மன்றலந் துளவினன் வருந்தல் வஞ்சகர்
தன்றலை யறுத்திடர் தணிப்பன் ருரணிக்
கொன்றுநீர் கேண்மென வுரைத்தன் மேயினன். 206

உ0. வானுளோ ரனைவரும் வான ரங்களாய்க்
கானினும் வரையினுங் கடித டத்தினுஞ்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னுழியான். 207

உக. மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கனைகளா னீறு செய்யயாங்
கசரத துரகமாட் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி. 208

உஉ. வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையர்க ளெனவடி பரவ வேகிநாம்
வளமதி லயோத்தியில் வருது மென்றனன். 209

உந. என்றவ னுரைத்தபோ தெழுந்து துள்ளினர்
நன்றிகொண் மங்கல நாதம் பாடினர்
மன்றலஞ் செழுந்துள வணியு மாயனர்
இன்றெமை யளித்தன ரென்னு மேம்பலால். 210

வேறு

உச. போயதெம் பொருமலென்னு விந்திர னுவகை பூத்தான்
தூயமா மலரு ளோனுஞ் சுடர்மதி சூடி னுனுஞ்
சேயுயர் விசும்பு ளோருந் தீர்ந்ததெஞ் சிறுமை யென்ருர்
மாயிரு ஞால முண்டோன் கலுழன்மேற் சரணம் வைத்தான்.

உரு. என்னையா ளுடைய வையன் கலுழன்மே லெழுந்து போய
பின்னர்வா னவரை நோக்கிப் பிதாமகன் பேசு கின்ருன்
முன்னரே யெண்கின் வேந்தன் யானென முடுகி னுன்மற்
றன்னவா றெவரு நீர்போ யவதரித் திடுமி னென்ருன். 212

உசு. தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவா னெனது கூறு
மருவலர்க் கசனி [1]யன்ன வாலியு மகனு மென்ன
இரவிமற் றெனது கூறங் கவற்கிளை யவனென் ருேத
அரியுமற் றெனது கூறு நீலனென் றறைந்திட் டானல். 213

(பிரதி) 1 யென்ன.

உஎ. வாயுமற் றெனது கூறு மாருதி யென்ன மற்றோர்
காயுமர்க் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார் புராரிமற் றியானே வாத
சேயெனப் புகன்றான் மற்றைத் திசையுளோர்க் கவதியுண்டோ.

உஅ. அருடருங் கமலக் கண்ண னருண்முறை யலரு ளோனும்
இருடரு மிடற்றி னோனு மமரரு மினைய ராகி
மருடரு [1]வனத்தின் மண்ணின் வானர ராகி வந்தார்
பொருடரு மெவருந் தத்த முறைவிடஞ் சென்று புக்கார். 215

உகூ. ஈதுமுன் னிகழ்ந்த வண்ண மெனமுனி யிதயத் தெண்ணி
மாதிரம் பொருத திண்டோண் மன்னநீ வருந்த லேழ்
பூதல முழுதுந் தாங்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதற முயலி லைய சிந்தைநோய் தீரு மென்றான். 216

கூ0. என்னமா முனிவன் கூற வெழுந்துபே ருவகை பொங்க
மன்னவர் மன்ன னந்த மாமுனி சரணஞ் சூடி
உன்னையே புகல்புக் கேனுக் குறுகண்வந் தடைவ துண்டோ
அன்னதற் கடியேன் செய்யும் பணியினை யளித்தி யென்றான்.

கூக. மாசறு சுரரி னோடு மற்றுளோர் தமையு மீன்ற
காசிப னருளு மைந்தன் விபாண்டகன் கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற் கொத்தோ னிருங்கலை பிறவு மெண்ணிற்
றேசுடைத் தந்தை யொப்பான் றிருவருள் புனைந்த மைந்தன்.

கூஉ. வருகலை பிறவு நீதி மனுநெறி யாவும் வாய்மை
தருகலை மறையு மெண்ணிற் சதுமுகற் குவமை சான்றோன்
திருகலை யுடைய விந்தச் செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை முகத்துச் சிங்க வுயர்தவன் வருதல் வேண்டும். 219

கூகூ. பாந்தளின் மகுட கோடி பரித்தபா ரிதனின் வைகு
மாந்தர்கள் விலங்கென் றன்னு மனத்தன்மா தவத்தி னெண்ணிற்
பூந்தவி சுகந்து ளோனும் புராரியும் புகழ்தற் கொத்த
சாந்தனால் வேள்வி முற்றிற் றனயர்க ளுளரா மென்றான். 220

கூச. ஆங்குரை யினைய கூறு மருந்தவர்க் கரசன் செய்ய
பூங்கழ றொழுது வாழ்த்திப் பூதல மன்னர் மன்னன்
தீங்கறு குணத்தான் மிக்க செழுந்தவன் யாண்டை யுள்ளான்
ஈங்குயான் கொணருந் தன்மை யியம்புதி யிறைவ வென்றான்.

(பிரதி) 1 மனத்தின்.

வேறு

௩௫. புத்தாய கொடுவினையோ டருந்துயரம் போயொளிப்பப்
புவனந் தாங்குஞ்
சத்தாய குணமுடையோன் றயாவோடுந் தண்ணளியின்
சாலே போல்வான்
எத்தாலும் வெலற்கரியான் மனுகுலத்தே வந்துதித்தோ
னிலங்கு மௌலி
உத்தான பாதனரு ளுரோமபத னென்றுளனிவ்
வுலகை யாள்வோன். 222

௩௬. அன்னவன்றன் புரந்தளிக்குந் திருநாட்டு ணெடுங்கால
மளவ தாக
மின்னியெழு முகிலின்றி வெந்துயரம் பெருகுதலும்
வேத நன்னூல்
மன்னுமுனி வரையழைத்து மாதானங் கொடுத்தலும்வான்
வழங்கா தாகப்
பின்னுமறை யவர்க்கேட்பக் கலைக்கோட்டு முனிவரில்வான்
பிலிற்று மென்றார். 223

௩௭. ஓதநெடுங் கடலாடை யுலகினில்வாழ் மனிதர்விலங்
கெனவே யுன்னுங்
கோதில்குணத் தருந்தவனைக் கொணருமவகை யாவதெனக்
குனிக்கும் வேலைச்
சோதிநுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த் தாளநகைத்
துணைமென் கொங்கை
மாதரெழுந் தியாமேகி யருந்தவனைக் கொணர்துமென
வணக்கஞ் செய்தார். 224

௩௮. ஆங்கவரம் மொழியுரைப்ப வரசன்மகிழ்ந் தவர்க்கணிதூ
சாதி யாய
பாங்குளமற் றவர்க்களித்துப் பணிப்பிறையைப் பழித்தநுதற்
பணைத்த வேய்த்தோள்
ஏங்குமிடைத் தடிக்குமுலை யிருண்டகுழன் மருண்டவிழி
யிலவச் செவ்வாய்ப்
பூங்கொடியீ ரேகுமெனத் தொழுதிறைஞ்சி யிரதமிசைப்
போயி னாரே. 225

வேறு

௩௯. ஓசனை பலகடந் தினியோ ரோசனை
ஏசறு தவனுறை யிடம தென்றுழிப்
பாசிழை மடந்தையர் பன்ன சாலைசெய்
தாசறு மருந்தவத் தவரின் வைகினார். 226

௪0. அருந்தவன் றந்தையை யற்ற நோக்கியே
கருந்தடங் கண்ணியர் கலைவ லாளனிற்
பொருந்தினர் பொருந்துபு விலங்கெனாப் புரிந்
திருந்தவ ரிவரென வினைய செய்தனன். 227

௪௧. அருக்கிய முதலினோ டாசனங் கொடுத்
திருக்கென [1]விருந்தடி னினிய கூறிய
முருக்கிதழ் மடந்தையர் முனிவனைத் தொழாப்
பொருக்கென வெழுந்துபோய்ப் புரையுட் புக்கனர். 228

௪௨. திருந்திழை யவர்சில தினங்கடீர்ந்துழி
மருந்தினு மினியன வருக்கை வாழைமாத்
தருந்தருங் கனியொடு தாழை யின்பலம்
அருந்தவ வருந்தென வருந்தினாரோ. 229

௪௩. இன்னன பலபக லிருந்த பின்றிரு
நன்னுதன் மடந்தையர் நவையின் மாதவன்
றன்னையெம் மிடத்தினுஞ் சார்தல் வேண்டுமென்
றன்னவர் தொழுதலு மவரோ டேகினான். 230

௪௪. விம்முறு முவகையர் வியந்த நெஞ்சினர்
அம்மவிவ் விதுவென வகலு நீணெறிச்
செம்மைய முனிவரன் றொடரச சென்றனர்
தம்மன மெனமருட் டைய லார்களே. 231

௪௫. வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்மிசை
சளசள வெனுமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகடங் குறைக டீரவே. 232

௪௬. பெரும்புன னதிகளுங் குளனும் பெட்புறக்
கரும்பொடு செந்நெலுங் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் ககனமீ திடைவி டாதெழுந்
தரும்புனல் சொரிந்தபோ தரசு ணர்ந்தனன். 233

(பிரதி) 1 விருந்துபி.

சஎ. காமமும் வெகுளியுங் களிப்புங் கைத்தவக்
கோமுனி யிவணடைந் தனன்கொல் கொவ்வைவாய்த்
தாமரை மலர்முகத் தரள வாணகைத்
தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால். 234

சஅ. என்றெழுந் தருமறை முனிவர் யாரொடுஞ்
சென்றிரண் [1]டியோசனை சேனை சூழ்தர
மன்றலங் குழலியர் நடுவண் மாதவக்
குன்றினை யெதிர்ந்தனன் குவவுத் தோளினான். 235

சகூ. வீழ்ந்தன னடிமிசை விழிக ணீர்தர
வாழ்ந்தன னினியென மகிழுஞ் சிந்தையான்
தாழ்ந்தெழு மாதரார் தம்மை நோக்கிநீர்
போழ்ந்தனி ரெனதிடர் புணர்ப்பி னாலென்றான். 236

ரு0. அரசரு முனிவரு மடைந்த வாயிடை
வரமுனி வஞ்சமென் றுணர்ந்த மாலைவாய்
வெருவினர் விண்ணவர் வேந்தன் வேண்டலாற்
கரையெறி யாதலை கடலும் போன்றனன். 237

ருக. வள்ளுறை வயிரவாண் மன்னன் பன்முறை
எள்ளரு முனிவனை யிறைஞ்சி யாரினுந்
தள்ளருந் துயரமுஞ் சமைவுஞ் சாற்றலும்
உள்ளுறை வெகுளிபோ யொளித்த தாமரோ. 238

ருஉ. அருள்சுரந் தரசனுக் காசி யுங்கொடுத்
தருடரு தேரின்மே லொல்லை யேறினன்
பொருடரு முனிவருந் தொடரப் போயினான்
மருளொழி யுணர்வுடை வரத மாதவன். 239

ருந. அடைந்தனன் வளநக ரலங்க ரித்தெதிர்
மிடைந்திட முனியொடும் வேந்தன் கோயில்புக்
கொடுங்கலில் பொற்குழாத் துறையு ளெய்தியோர்
மடங்கலா சனத்தின்மேல் முனியை வைத்தனன். 240

ருச. அருக்கிய முதலிய கடன்க ளாற்றிவே
றுரைக்குவ திலதென வுவந்து தானருள்
முருக்கிதழ்ச் சாந்தையா முகந லாடனை
இருக்கொடு விதிமுறை யினிதி னீந்தனன். 241

(பிரதி) 1 டோசனை.

௫௫. வறுமைநோய் தணிதர வான்வ ழங்கவே
உறுதுயர் தணிந்ததவ் வுலகம் வேந்தருள்
செறிகுழல் போற்றிடத் திருந்து மாதவத்
தறிஞனுண் டிருக்குந னரச வென்றனன். 242

வேறு

௫௬. என்றலுமே முனிவரன்ற னடியிறைஞ்சி யீண்டேகிக்
கொணர்வ னென்னாத்
துன்றுகழன் முடிவேந்த ரடிபோற்றச் சுமந்திரனே
முதல்வ ராய
வன்றிறல்சே ரமைச்சர்தொழ மாமணித்தே ரேறுதலும்
வானோர் வாழ்த்தி
இன்றெமது வினைமுடிந்த தெனச்சொரிந்தார் மலர்மாரி
யிடைவி டாமல். 243

௫௭. காகளமும் பல்லியமுங் கனைகடலின் மிகமுழங்கக்
கானம் பாட
மாகதர்க ளருமறைநூல் வேதியர்கள் வாழ்த்தெடுப்ப
மதுரச் செவ்வாய்த்
தோகையர்பல் லாண்டிசைப்பக் கடற்றானை புடைசூழச்
சுடரோ னென்ன
ஏகியருந் தவரொடும்போ யுரோமபதன் றிருநாட்டை
யெதிர்ந்தா னன்றே. 244

௫௮. கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்த னடைந்தமைசென்
றொற்றர் கூறக்
கழுந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றானை புடைசூழக்
கழற்கால் வேந்தன்
செழுந்தோடும் பல்கலனும் வெயில்வீச மாகதர்க
டிரண்டு வாழ்த்த
எழுந்தோடு முவகையொடு மோசனைசென் றனனரசை
யெதிர்கொ ளெண்ணி. 245

௫௯. எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன் றனைக்கண்ணுற்
றெழிலி நாண
அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரா னிழிந்துழிச்சென்
றடியின் வீழ

முதிர்கின்ற பெருங்காத றழைத்தோங்க வெடுத்திறுக
முயங்க லோடுங்
கதிர்கொண்ட சுடர்வேலான் றனைநோக்கி யிவையுரைத்தான்
களிப்பின் மிக்கான். 246

௬௦. யான்செய்த மாதவமோ விவ்வுலகஞ் செய்தவமோ
யாதோ விங்ஙன்
வான்செய்த சுடர்வேலோ யடைந்ததென மிகமகிழா
மணித்தே ரேற்றித்
தேன்செய்த தார்மவுலித் தேர்வேந்தைச் செழுநகரிற்
கொணர்ந்தான் றெவ்வர்
ஊன்செய்த சுடர்வடிவே லுரோமபத னெனவுரைக்கு
முரவுத் தோளான். 247

௬௧. ஆடகப்பொற் சுடரிமைக்கு மணிமாடத் திடையோர்மண்
டபத்தை யண்மிப்
பாடகச்செம் பதுமமலர்ப் பாவையர்பல் லாண்டிசைப்பப்
பைம்பொற் பீடத்
தேடுதுற்று வடிவேலோன் றனையிருத்திக் கடன்முறைகள்
யாவு நேர்ந்து
தோடுதுற்று மலர்த்தாரான் விருந்தளிப்ப வினிதுகந்தான்
சுரர்நா டீந்தான். 248

௬௨. செவ்விநறுஞ் சாந்தளித்துத் தேர்வேந்தன் றனைநோக்கி
யிவணீ சேர்ந்த
கவ்வையுரைத் தருள்தியென நிகழ்ந்தபரி சரசர்பிரான்
கழற லோடும்
அவ்வியநீத் துயர்ந்தமனத் தருந்தவனைக் கொணர்ந்தாங்கண்
விடுப்ப ஞான்ற
செவ்விமுடி யோயெனலுந் தேரேறிச் சேனையொடு
மயோத்தி சேர்ந்தான். 249

௬௩. மன்னர்பிரா னகன்றதற்பின் வயவேந்த னருமறைநூல்
வடிவு கொண்ட
தன்னமுனி வரனுறையு டனையணுகி யிணையடித்தா
மரைக ளம்பொன்

மன்னுமணி முடியணிந்து வான்முறைசெய் திடவிவணீ
வருதற் கொத்த
தென்னையென வடியேற்கோர் வரமருளு மடிகளென
யாவ தென்றான். 250

சுச. புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகைதன்
புகழிற் பூத்த
அறனென்று திருமனத்தா னமரர்களுக் கிடரிழைக்கு
மவுண ராயோர்
திறலுண்ட வடிவேலோன் றசரதனென் றுயர்கீர்த்திச்
செங்கோல் வேந்தன்
விறல்கொண்ட மணிமாடத் தயோத்திநக ரடைந்திவணீ
மீள்க வென்றான். 251

சுரு. அவ்வரந்தந் [1]தனமினித்தோர் கொணர்தியென வருந்தவத்தோ
னறைத லோடும்
வெவ்வரந்தின் றயில்படைக்குரு சுடர்வேலோ னடியிறைஞ்சி
வேந்தர் வேந்தன்
கவ்வையொழித் துயர்ந்தனனென் றதிர்குரற்றேர் கொணர்ந்தனனிக்
கலைவ லாளன்
செவ்விநுதற் றிருவினொடும் போந்தேறு கெனவேறிச்
சிறந்தான் மன்னோ. 252

வேறு

சுசு. குனிசிலை யரசனுங் கரங்கள் கூப்பிடத்
துனியறு முனிவரர் தொடர்ந்து சூழ்வர
வனிதையு மருமறை வடிவம் போன்றொளிர்
முனிவனும் பொறிமிசை நெறியை [2]முன்னினர். 253

சுஎ. அந்தர துந்துமி முழக்கி யாய்மலர்
சிந்தினர் களித்தன ரறத்திற் றேவரும்
வெந்தெழு கொடும்பிணி வீழ்க்கு மெய்ம்முதல்
வந்தெழ வருடரு வானென் றெண்ணியே. 254

(பிரதி) 1 தனமினத்தேர். 2 முன்னினன்.

௬௮. தூதுவ ரவ்வழி யயோத்தி துன்னினார்
மாதிரம் பொருததோண் மன்னர் மன்னன்முன்
ஓதினர் முனிவர வோத வேந்தனுங்
காதலென் றளவறு கடலு ளாழ்ந்தனன். 255

௬௯. எழுந்தனன் பொருக்கென விரத மேறினன்
பொழிந்தனர் மலர்மழை யாசி பூத்தன
மொழிந்தன பல்லிய முரச மார்த்தன
விழுந்தன தீவினை வேரி னோடுமே. 256

௭௦. பிதிர்ந்ததெம் மனத்துயர்ப் பிறங்க லென்றுகொண்
டதிர்ந்தெழு கடலுடை யரசர் கோமகன்
முதிர்ந்தமா தவமுடை முனியை யன்பினோ
டெதிர்ந்தனன் யோசனை யிரண்டொ டொன்றினே. 257

௭௧. நற்றவ மனைத்துமோர் நவையி லாவுருப்
பெற்றிவ ணடைந்தெனப் பிறங்கு வான்றனைச்
சுற்றிய சீரையு முழையின் றோற்றமும்
முற்றுறப் பொலிதரு மூர்த்தி யான்றனை. 258

௭௨. அண்டர்க டுயரமு மரக்க ராற்றலும்
விண்டிடப் பொலிதரு வினைவ லாளனைக்
குண்டிகை குடையொடுங் குலவு நூன்முறைத்
தண்டொடும் பொலிதருந் தடக்கை யான்றனை. 259

௭௩. இழிந்துபோ யிரதமாண் டிணைகொ டாண்மலர்
விழுந்தனன் வேந்தர்தம் வேந்த னீதியான்
மொழிந்தன னாசிகண் முதிய நான்மறைக்
கொழுந்துமேற் படர்தரக் கொழுகொம் பாயினான். 260

௭௪. அயல்வரு முனிவரு மாசி கூறிடப்
புயல்பொழி தரநதி பெருகு பொங்குநீர்க்
கயல்பொரு விழியொடுங் கலைவ லாளனை
இயல்பொடுங் கொணர்ந்தன னிரத மேற்றியே. 261

௭௫. அடிகுரன் முரசதி ரயோத்தி மாநகர்
முடியுடை வேந்தனும் முனிவ னோடுமோர்
கடிகையி னடைந்தனன் கமல வாண்முக
வடிவுடை மடந்தையர் வாழ்த்தெ டுப்பவே. 262

எசு. கசட்டறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்க ளெவரை யகத்த டைக்குள
வசிட்டனு மருமறை வழக்கு நீங்கலா
விசிட்டரும் வேந்தவை பொலிய மேவினர். 263

எஎ. மாமணி மண்டப மன்னி மாசறு
தூமணித் தவிசிடைச் சுருதி யேநிகர்
கோமுனிக் கரசனை யிருத்திக் கொள்கடன்
ஏமுறத் திருத்திவே றினைய செப்பினன். 264

எஅ. சான்றவர் சான்றவ தரும மாதவம்
போன்றொளிர் [1]புனிதநின் னருளிற் பூத்தவென்
ஆன்றதொல் குலமினி யரசின் வைகுமால்
யான்றவ முடைமையு மிழப்பின் றுமரோ. 265

எகூ. என்னலு முனிவர னினிது நோக்குறு
மன்னவர் மன்னகேள் வசிட்டன் றுனெனும்
நன்னெடுந் தவன்றனை நவையில் செய்கைநீ
நின்னையிவ் வுலகினி னிருபர் நேர்வரோ. 266

அ0. என்றிவை பலபல வினிமை கூறினன்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினாய்
நன்றிகொ ளருமக நடத்த வெண்ணியோ
இன்றெனை யழைத்ததிங் கியம்பு வாயென்றான். 267

அக. உலப்பில்பல் லாண்டெலா முறுக ணின்றியே
தலப்பொறை யாற்றினேன் றனையர் வந்திலர்
அலப்புறீ ருடுத்தபா ரளிக்கு மைந்தரை
நலப்புகழ் பெறவினி நல்க வேண்டுமால். 268

அஉ. என்றலு மரசநீ யிரங்க லிவ்வுல
கொன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுகவீண் டென்றான். 269

அங. ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் கொணர்தலி னிருபர்க் கேந்தலைத்

(பிரதி) 1 புனிதனின்.

தூயநற் புனல்படீஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்தியே சாலை துன்னினான். 270

௮௪. முழங்கனன் மும்மையு முடுகி யாகுதி
வழங்கியே யீரறு திங்கள் வாய்த்தபின்
தழங்கிய துந்துமி முழங்கத் தாவில்வான்
விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே. 271

௮௫. முகமல ரொளிதர மொய்த்து வானுளோர்
தொகைவிரி நறுமலர் தூவி யார்த்தெழத்
தகவுடை முனியுமத் தழலி னாப்பணே
மகவரு ளாகுதி வழங்கி னானரோ. 272

௮௬. ஆயிடைக் கனலினின் றம்பொற் றட்டமீத்
தூயநற் சுதைநிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரி பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே. 273

௮௭. வைத்தது தரைமிசை மறைத்து மவ்வழித்
தைத்தது பூதமத் தவனும் வேந்தனை
உய்த்தநல் லமிர்தினை யுரிய மாதர்கட்
கத்தகு மரபினி னளித்தி யாலென்றான். 274

௮௮. மாமுனி யருள்வழி மன்னர் மன்னவன்
தூமமென் கருங்குழற் றொண்டைத் தூயவாய்க்
காமரொண் கௌசலை கரத்தி னோர்பகிர்
தாமுற வளித்தனன் சங்க மார்த்தெழ. 275

௮௯. கைகயன் றனையைதன் கரத்து மம்முறைச்
செய்கையி னளித்தனன் றேவ ரார்த்தெழப்
பொய்கையு நதிகளும் பொழிலு மோதிமம்
வைகுறு [1]கோசல மன்னர் மன்னனே. 276

௯௦. நமித்திரர் [2]நடுக்குறு நலங்கொண் மொய்ம்புடை
நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையிற்
சுமித்திரைக் களித்தனன் சுரர்க்கு வேந்தினிச்
சமித்தனன் பகையென வமரர் சாற்றினார். 277

(பிரதி) 1 கோசலை. 2 நறுக்குறு.

௬௧. பின்னரப் பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தவை
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினான்
ஒன்னலர்க் கிடமும்வே றாலகி னோங்கிய
மன்னுயிர் தமக்குநீள் வலமுந் துள்ளவே. 278

௬௨. வாம்பரி வேள்வியு மகாரை நல்குவ
தாம்புரை யாகுதி பிறவு மந்தணன்
ஓம்பிட முடித்தபி னுலகு காவலன்
ஏம்பலோ டெழுந்தனன் யாரு மேத்தவே. 279

௬௩. முருடொடு பல்லிய முழங்கி யார்த்தன
இருடரு முலகமு மிடரு நீங்கின
தெருடரு வேள்வியின் கடன்க டேர்ந்துழி
அருடரு மவையின்வந் தரச னெய்தினான். 280

௬௪. செய்ம்முறை கடன்முறை திறம்ப லின்றியே
மெய்ம்முறை கடவுளோர்க் கீந்து விண்ணுளோர்க்
கம்முறை யளித்துநீ டந்த ணாளர்க்குங்
கைம்முறை வழங்கினன் கனக மாரியே. 281

௬௫. வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியந் துவைப்ப வேகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்க ணெய்தியே. 282

௬௬. முரசொலி கறங்கிட முத்த வெண்குடை
விரசிமே னிழற்றிட வேந்தர் சூழ்தர
அரசவை யடைந்துழி யயனு நாணுற
[1]உரைசெறி முனிவர்தா ளிறைஞ்சி யோங்கினான். 283

௬௭. அரியநற் றவமுடை வசிட்ட னுணையால்
இரலைநற் சிருங்கமா விறைவன் றொடோரா
உரியநற் பலவுரை பயிற்றி யுய்ந்தனன்
பெரியநற் றவவினிப் பெறுவ தியாதென்றான். 284

௬௮. வாங்கிய துயருடை மன்னன் பின்னரும்
பாங்குறு கடன்முறை பலப யிற்றல்கொண்

(பிரதி) 1 உரைசெய.

டோங்கிய வுவகையி னாசி யோடெழா
நீங்கின [1]னிருந்தன னேமி வேந்தனே. 285

௯௯. தெரிவையர் மூவருஞ் சிறிது நாட்செலீஇ
மருவிய வயாவொடு வருத்தந் தூய்த்தவர்
பொருவருந் திருமுக மன்றிப் பொற்புநீ
டுருவமு மதியமோ டொப்பத் தோன்றினார். 286

௧௦௦. ஆயிடைப் பருவம்வந் தடைந்த வெல்லையின்
மாயிரும் புவிமகண் மகிழ்வொ டோங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்களுந்
தூயகற் கடகமு மெழுந்து துள்ளவே. 287

௧௦௧. சித்தரு மியக்கருந் தெரிவை மார்களும்
வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தரு முறைமுறை நெருங்கி யார்ப்புறத்
தத்துற லொழிந்துநீ டரும மோங்கவே. 288

௧௦௨. ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை. 289

௧௦௩. ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினாள்
மாசறு கைகயன் மாது மைந்தனை. 290

௧௦௪. தளையவிழ் தருவுடைச் சயில கோபனுங்
கிளையுமந் தரமிசைக் கெழுமி யார்த்தெழ
அளைபுகு மரவினோ டலவன் வாழ்வுற
இளையவற் பயந்தன ளிளைய மென்கொடி. 291

௧௦௫. படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் [2]தரமறை நவில நாடகம்
மடங்கலு மகமுமே வாழ்வி னோங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டு மீன்றனள். 292

(பிரதி) 1 ரிருந்தன. 2 தாமரை.

க0சு. ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின ருலாவின ரும்பர் முற்றுமே. 293

க0எ. ஓடின ரரசன்மாட் டுவகை கூறிநின்
றாடினர் சிலதிய ரந்த ணாளர்கள்
கூடினர் நாளொடுங் கோளு நின்றமை
நாடின ருலகினி னவையின் றென்றனர். 294

க0அ. மாமுனி தன்னொடு மன்னர் மன்னவன்
ஏமுறு புனல்படீஇ வித்தொ டின்பொருள்
தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக்
கோமகார் திருமுகங் குறுக நோக்கினன். 295

க0கூ. இறைதவிர்ந் திடுகபார் யாண்டொ ரேழ்நிதி
நிறைதரு சாலைக ணீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை யென்றன னரசர் கோமகன். 296

கக0. படையொழிந் திடுகதம் பதியு ளோயினி
விடைபெறு குகமுடி வேந்தர் வேதியர்
நடையுறு நியமமு [1]நவையின் றுகுக
புடைகெழு விழாவொடு [2]பொலிக வெங்கணும். 297

ககக. ஆலயம் புதுக்குக வந்த ணாளர்தஞ்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைக்கச் சந்தியுங்
காலையு மருள்புரி கடவு ளோர்க்கணி
மாலையுந் தூபமும் [3]வழங்கு கென்றனன். 298

ககஉ. என்புழி வள்ளுவர் யானை மீமிசை
வன்பறை யறைதர நகர மாந்தரும்
மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பமென் றளப்பரு மளக்க ரெய்தினர். 299

ககங. ஆர்த்தனர் முறைமுறை யன்பி னுடல்
போர்த்தன புளகம்வேர் பொழிந்த நீணிதி

(பிரதி) 1 நவையிற். 2 பொலிய. 3 வழங்க வென்றனன்.

தூர்த்தன ரெதிரெதிர் சொல்லி னார்க்கெலாந்
தீர்த்தனென் றறிந்ததோ வவர்தஞ் [1]சிந்தையே. 300

௧௧௪. பண்ணையு மாயமுந் திரளும் பாங்கருங்
கண்ணகன் றிருநகர் களிப்புக் கைம்மிகுந்
தெண்ணெயுங் களபமு மிழுது நானமுஞ்
சுண்ணமுந் தூவினார் வீதி தோறுமே. 301

வேறு

௧௧௫. இத்தகை மாநக ரீரறு நாளுஞ்
சித்தமு றாங்களி யோடுசி றந்தே
தத்தமை யொன்று முணர்ந்திலர் தாவின்
மெய்த்தவ னாமம் விதிப்ப மதிப்பான். 302

௧௧௬. கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீந்தன னன்றே. 303

௧௧௭. கரதல முற்றொளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்ந்நெறி கண்ட
வரத னுனித்திட மற்றைய வொளியைப்
பரத னெனப்பெயர் பன்னின னன்றே. 304

௧௧௮. உலக்குநர் வஞ்சக ரும்ப ருயர்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே. 305

௧௧௯. முத்துருக் கொண்டுசெம் முளரி யலர்ந்தால்
ஒத்திருக் கும்மெழி லுடையவிவ் வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை யெண்ணிச்
சத்துருக் கன்னெனச் சாற்றின னாமம். 306

௧௨௦. பொய்வழி யின்முனி புகரறு மறையால்
இவ்வழி பெயர்க ளிசைத்துழி யிறைவன்

(பிரதி) 1 சிந்தைகள்.

கைவழி நிதிபொழி நதிகலை மறையோர்
மெய்வழி யுவரி நிறைத்தனன் மென்மேல். 307

கஉக. காவியு மொளிதரு கமலமு மெனவே
ஓவிய வெழிலுடை யொருவனை யலதோர்
ஆவியு முடலமு மிலதென வருளின்
மேவின னுலகுடை வேந்தர்தம் வேந்தன். 308

கஉஉ. அமிர்துகு குதலையொ டணிநடை பயிலாத்
திமிரம தறவரு தினகர னெனவுந்
தமரம துடன்வரு சதுமறை யெனவுங்
குமரர்க ளிலமகள் குறைவற வளர்நாள். 309

கஉ௩. சவுளமொ டுபநய னமுமுறை தருகுற்
றிவளவ தெனவொரு குறைபிறி திலவாய்
உவளரு மறையினொ டொழிவறு கலையுந்
தவழ்மதி புனையர னிகர்முனி தரவே. 310

கஉச. யானையு மிரதமு மிவுளியு முதலா
ஏனைய பிறவுமவ் வியல்பினி னடைகற்
றானுறு படைபல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர்நாள். 311

கஉரு. அருமறை முனிவரு மமரரு மவனித்
[1]திருவுமந் நகருறை செனமுந மிடரோ
டுருவினை துணிதரு மிவரினி திவணின்
றொருபொழு தகல்கில முறையென வுறுவார். 312

கஉ௬. ஐயனு மிளவலு மணிநில மகடன்
செய்தவ முடைமைக டெரிதர வனமு
மைதவழ் பொழில்களும் வாவியு மருவி
நெய்குழ லுறமிழை யெனநிலை திரிவார். 313

கஉஎ. பரதனு மிளவலு மொருநொடி பகிரா
திரதமு மிவுளியு மிவரினு மறைநூல்
உரைதரு பொழுதினு மொழிகில ரெனையாள்
வரதனு மிளவலு மெனமரு வினரோ. 314

(பிரதி) [1] திருவுமிர்.

கஉஅ. வீரனு மிளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமொ டுறைதரு முனிவர ரிடைபோய்ச்
சோர்பொழு தணிதரு துறைநக ரெதிராக்
கார்வர வலர்பயிர் பொருவுவர் களியால். 315

கஉகூ. ஏழைய ரனைவரு மிவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதலையர் கிளைகளு மிளையார்
வாழிய வெனவவர் மனனுற கடவுட்
டாழ்குவர் [1]கோசலை தசரத னெனவே. 316

கங0. கடறரு முகிலொளிர் கமலம தலரா
வடவரை யுடன்வரு செயலென மறையுந்
தடவுத லறிவரு தனிமுத லவனும்
புடைவரு மிளவலு மெனநனி புகல்வார். 317

கஙக. எதிர்வரு மவர்களை யெனையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமல ரொளிர
எதுவினை யிடரிலை யினிதுநு மனையும்
மதிதரு குமரரும் வலியர்கொ லெனவே. 318

கஙஉ. அஃதைய நினையெம தரசென வுடையேம்
இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவிம் மலரோன்
உகுபக லளவென வுரைநனி புரிவார் 319

வேறு

கஙங. இப்பரி சணிநக ருறையும் யாவரும்
மெய்ப்புகழ் புனைதர விளைய வீரர்கள்
தப்பற வடிநிழ றழுவி யேத்துற
முப்பரம் பொருளினு முதல்வன் வைகுறும். 320

கஙச. அரசர்தம் பெருமக னகிலம் யாவையும்
விரசுறு தனிக்குடை விளங்க வென்றிசேர்
முரசொலி கறங்கிட முனிவ ரேத்துறக்
கரைசெய லரிதோர் களிப்பின் வைகுநாள். 321

திருவவதாரப் படலம் முற்றும்.

(பிரதி) 1 கௌசலை.

௬. கையடைப் படலம்

௧. நனைவருங் கற்பக நாட்டு நன்னகர்
அனைவரு [1] மணைதர வயிர்க்குஞ் சிந்தையா
னினையவு மரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய மேயினான். 322

௨. தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கினார். 323

௩. மடங்கல்போன் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொளான் முகனையும் படைப்ப னீண்டெனத்
தொடங்கிய [2] துனியுறு முனிவன் றோன்றினான். 324

வேறு

௪. வந்துமுனி யெய்துதலு மார்பிலணி யாரம்
அந்தரத லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான். 325

௫. பணிந்துமணி செற்றுபுகு யிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டதின ருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் தின்றே
துணிந்ததென் வினைத்தொடரெ னத்தொழுது சொல்லும் 326

௬. நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கவெளி வந்ததிது முந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும். 327

வேறு

௭. என்னனைய முனிவர்களு மிமையவரு மிடையூறொன்
றுடைய ராறு
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும்
பதும பீடத்

(பிரதி) 1 மணிதரு மயிர்க்குஞ். 2 நனியுறு.

தன்னகருங் கற்பகநாட் டணிநகரு மணிமாட
வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ விகல்கடந்த
புலவு வேலோய். 328

அ. இன்றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை
யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையி னிழலொதுங்கிக் குறையிரந்து
நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந்
தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின் றருள்கின்ற
தரச வென்றான். 329

கூ. உரைசெய்த வளவையிற்றான் முகநோக்கி யுள்ளத்து
ளொருவ ராலுங்
கரைசெய்தற் கரியதொரு பேருவகைக் கடல்பெருகக்
கரங்கள் கூப்பி
அரைசெய்தி யிருந்தபய னெய்தினன்மற் றினிச்செய்வ
தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப் பின்மொழியு
முனிவ னுங்கே. 330

க0. தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறாய்த்
தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென நிருதரிடை
விலக்கா வண்ணஞ்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவ ரனைவரினுங்
கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென வுயிரிரக்குங் கொடுங்கூற்றி
னுளையச் சொன்னான். 331

கக. எண்ணிலா வருங்குணத்தா னியம்பியசொன் மருமத்து
ளெறிவேல் பாய்ந்த
புண்ணுலாம் பெரும்புழையிற் கனலுழைந்தா லெனச்செவியிற்

உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த வாருயிர்நின்
றாச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா[1]னெனவுழந்தான் கடுந்துயரங்
கால வேலோன். 332

கஉ. தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரா னொருவண்ணந்
துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய் பணியிதுவேற்
பணிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும் நான்முகனும்
புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பன் பெருவேள்விக்
கெழுக வென்றான். 333

கங. என்றனனென் றலுமுனிவோ டெதிர்ந்தனபண் டடைந்தமுனி
யிறுதிக் காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல் வெயில்கரந்த
[2]தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமே னிவந்தகொழுங் கடைப்புருவ
நெற்றி முற்றச்
சென்றனவந் தனநகையுஞ் சிவந்தனகண் ணிருண்டனபோய்த்
திசைக ளெல்லாம். 334

வேறு

கச. கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
குறுத்த [3]லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி யோவென வசிட்டன் கூறுவான். 335

கரு. பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைமேன் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து [4]காலமின் றெதிர்ந்த தென்னவே. 336

கசு. குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன ரென்ன லோடும்வந்
தருகு சார்ந்தன னறிவி னும்பரான். 337

(பிரதி) 1 னெனவுழன்றான். 2 வங்கு. 3 லாதலா வுறுதி. 4 காலம்வந்
தெதிர்ந்த.

கஎ. வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்
றந்தை நீதனித் தாயு [1]நீயிவர்க்
கெந்தை தந்தன னியைந்த செய்கென்றான். 338

கஅ. கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைவந்
தெடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடிப்ப தாமெனா
நடத்தன் மேயினா னவைக்க ணீங்கினான். 339

ககூ. வென்றி வாள்புடை விசித்து [2]மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறாத் தூணி யார்த்திரு
குன்றம் போன்றுள தோளிற் கொற்றவில்
ஒன்றுந் தாங்கினா னுலகந் தாங்கினான். 340

உ0. அன்ன தம்பியுந் தானு மையன்பின்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் றொடர்ந்து சாயைபோற்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினார். 341

உக. வரங்கண் மாசறத் தவஞ்செய் வார்கள்வாழ்
புரங்க ளோரலா நகரி னீங்கிப்போய்
அரங்கி னாடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினார். 342

உஉ. தாழு மாமழை தவழு நெற்றியாற்
சூழி யானையிற் றோன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா
ஏழு மேறப்போ யாறு மேறினார். 343

உங. கரும்பு கால்பொரக் கமுகின் வார்ந்ததேன்
வரம்பின் மீதிடு மருத வேலிவாய்
அரும்பு கொங்கையா ரம்மெ லோதிபோற்
சுரும்பு வாழ்வதோர் சோலை வைகினார். 344

உச. தேவு மாதவற் றொழுது தேவர்தம்
நாவு ளாகுதி நயக்கும் வேள்விவாய்த்
தாவு மாபுகை தவழுஞ் சோலைகண்
டியாவ தீதென்றா னெவர்க்கு மேனின்றான். 345

கையடைப்படலம் முற்றும்.

(பிரதி) 1 நீயிவற். 2 மேன்மைபோல்.

எ. தாடகைவதைப் படலம்

க. திங்கண்மே வுஞ்சடைத் தேவன்மேன் மாரவேள்
[1]இங்குநின் றெய்யவும் மெரிதருந் நுதல்விழிப்
பொங்குகோ பஞ்சுடப் பூளைவீ யன்னதன்
அங்கம்வெந் தன்றுதொட் டநங்கனே யாயினன். 346

உ. வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் றங்கமிங் குகுதலா லிவணெலாம்
ஆரணத் துறையுளா யங்கநா டிதுவுமக்
காரணக் குறியுடைக் காமனச் சிரமமே. 347

ங. பற்றவா வேரொடும் பசையிறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேன் முடுகினா ரறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் றூய்மையே. 348

ச. என்றவந் தணனியம் பலும்வியந் தவ்வயிற்
சென்றவந் தெதிரெழுஞ் செந்நெறிச் செல்வரோ
டன்றுறைந் தலர்கதிர்ப் பருதிமண் டலமகன்
குன்றின்வந் தணையவோர் சுடுசுரங் குறுகினார். 349

ரு. பருதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் [2]கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
[3]இருதுவே றின்மையா லெரிமுதற் கடவுளுங்
கருதின்வே முள்ளமுங் காணின்வே நயனமும். 350

சு. படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடியுமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னின்வே றியாவைவே வாதவே. 351

எ. விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் தன்றியே திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ. 352

(பிரதி) 1 எங்கண்மே லெய்யவு மரியவம் பெய்தவன். 2 கொண்டு
லாய். 3 இருதுவென்.

அ. [1]பேய்பிளந் தொக்கநின் றலர்பெருங் கள்ளியின்
ருய்பிளந் துக்ககா [2]ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம். 353

கூ. பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாதுகூ டாததோர் சூரியன்
றேருமோ டாதுமெய் தேரினேர் மூரிவெங்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ. 354

க0. கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகார்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்கண்மண் மகளுடற்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே. 355

வேறு

கக. புழுங்குவெம் பசியொடு புரளும் போரரா
விழுங்கவந் தெழுந்தெதிர் விரித்த வாயின்வாய்
முழங்குவெங் கரிபுக முடுகி மீமிசை
[3]வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே. 356

க௨. ஏகவெங் கனலர சிருந்த காட்டிடைக்
காகமுங் கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை விழுந்த போலுமே. 357

கங. கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலந்
தானகங் கரிதலிற் றலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடின் விசும்பு வேமெனா
வானவர்க் கிரங்கிநீர் வளைத்த [4]தொத்ததே. 358

க௪. ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
காய்ந்தநற் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே. 359

க௫. தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகை யரணமுங் கடிந்து முத்தியிற்

(பிரதி) 1 காய்பிளந் துக்கநின். 2 ரகிலுமோ. 3 வழங்கவெங்.
4 தொத்தவே.

போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. 360

௧௬. பொரிபரற் படுநிலம் பொரிந்து கீழுற
விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலால்
அரிமணிப் பணத்தர வரச னாட்டினும்
எரிகதிர்க் கினிதுபுக் கியங்க லாயதே. 361

௧௭. எரிந்தெழு கொடுஞ்சுர மினைய தெய்தலும்
அருந்தவ னிவர்பெரி தளவி னாற்றலைப்
பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் சிறிதென மனத்தி னோக்கினான். 362

௧௮. நோக்கினன் வாண்முக நோக்க நோக்குடைக்
கோக்கும ரருமடி குறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைக ளிரண்டு மவ்வயின்
ஊக்கின னவையவ ருள்ளத் துள்ளினார். 363

௧௯. உள்ளிய காலையி னாழித் தீயினை
எள்ளுறு கொழுங்கன லெஞ்சும் வெஞ்சுரம்
தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது
வள்ளலு முனிவனை வணங்கிச் சொல்லுவான். 364

௨௦. சுழிபடு கங்கையத் தொங்கன் மோலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடா மன்னவன் பரித்த நாட்டிடை
அழிவதென் காரண மறிஞ கூறென்றான். 365

௨௧. என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியினா ளுறுதி கேளெனா. 366

௨௨. இயக்கர்தங் குலத்துளா னுலக மெங்கணும்
வியக்குறு மொய்ம்பினா னெரியின் வெம்மையான்
மயக்கில்சற் சரனெனும் வலத்தி னானருள்
துயக்கிலன் சுகேதுவென் றுளனோர் தூய்மையான். 367

௨௩. அன்னவன் மகவிலா தயருஞ் சிந்தையான்
மன்னெடுந் தாமரை மலரின் வைகிய

நன்னெடு முதல்வனை வழுத்தி நற்றவம்
பன்னெடும் பகலெலாம் பயந்த பான்மையான். 368

உச. முந்தின னருமறைக் கிழவன் முற்றுநின்
சிந்தனை யென்னெனச் சிறுவ ரின்மையான்
நொந்தன னருள்கென நுணங்கு கேள்வியாய்
மைந்தர்க ளிலையொரு மகளுண் டாமென்றான். 369

உரு. பூமட மயிலினைப் பொருவும் பொற்பொடும்
எமுறு மதமலை யீரைஞ் ஞூறுடைத்
தாமுறு வலியொடுந் தநய டோன்றுநீ
போவென மலரயன் புகன்று போயினான். 370

உசு. ஆயவ னருள்வழி யலர்ந்த தாமரைச்
சேயவ ளெனவளர் செவ்வி கண்டிவட்
காயவர் யாவரென் றுய்ந்து தன்கிளை
நாயகன் [1]சுந்தனென் பவற்கு நல்கினான். 371

உஎ. காமனு மிரதியுங் கலந்த காட்சியி
தாமென வியக்கனு மணங்க ணாளும்வே
றியாமமும் பகலுமோ ரீறின் றென்னலாற்
றாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினார். 372

உஅ. பற்பல நாட்செலீஇப் பதுமை போலொளிர்
பொற்பினாள் வயிற்றிடைப் புவன மேங்கிட
வெற்பணி புயத்துமா ரீசன் வென்றிசேர்
மற்பெருஞ் சுவாகுவும் வந்து தோன்றினார். 373

உகூ. மாயையும் வஞ்சமும் வரம்பி லாற்றலுந்
தாயினும் பழகினார் தமக்குந் தேர்வொணா
தாயவர் வளர்வுழீஇ யவரை யீன்றவக்
காய்சினத் தியக்கனுங் களிப்பின் மேன்மையான். 374

௩0. தீதுறு மவுணர்க டமை தீர்தர
மோதுறு கடலெல்லா மொருகை மொண்டிடு
மாதவ னுறையிட மதனின் வந்துநீள்
பாதவ மனைத்தையும் பறித்து வீசினான். 375

(பிரதி) 1 சுகந்தனென்.

௩௧. விழைவுறு மாதவம் வெஃகி னோர்விரும்
புழைகலை யிரலையை யுயிருண் டோங்கிய
வழையொடு மரனெலா மடிப்ப மாதவன்
தழலெழ விழித்தனன் சாம்ப ராயினான். 376

௩௨. மற்றவன் விளிந்தமை மைந்தர் தம்மொடும்
பொற்றொடி கேட்டுவெங் கனலிற் பொங்குறா
முற்றுற முடிக்குவன் முனியை யென்றெழா
நற்றவ னுறைவிட மதனை நண்ணினாள். 377

௩௩. இடியொடு மடங்கலும் வளியு மேங்கிடக்
கடிகெட வமரர்கள் கதிரு முட்கிடத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப வண்டமும்
வெடிபட வதிர்த்தெதிர் விளித்து மண்டவே. 378

௩௪. தமிழெனு மளக்கருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி யொழுக வுங்கரித்
தழிவன செய்தலா லரக்க ராகியே
இழிகென வுரைத்தன னசனி யெஞ்சவே. 379

௩௫. வெருக்கொள வுலகையும் விண்ணு ளோரையும்
முருக்கியெவ் வுயிருமுண் டுழலு மூர்க்கராம்
அரக்கர்க ளாயின ரக்க ணத்தினில்
உருக்கிய செம்பென வுமிழ்கட் டீயினார். 380

௩௬. ஆங்கவன் வெகுளியு மறைந்த சாபமும்
தாங்கின ரெதிர்செயுந் தருக்கி லாமையான்
நீங்கினர் சுமாலியை நெருங்கி நிற்குளம்
ஓங்கிய புதல்வரென் றுறவு கூறியே. 381

௩௭. அவனொடும் பாதலத் தனேக நாட்செலீஇத்
தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர்
இவரெனப் புடைத்தழித் துலக மெங்கணும்
பவனனிற் றிரிகுநர் பதகி மைந்தர்கள். 382

௩௮. மிகுந்திறன் மைந்தரை வெறிது நீங்குறாத்
தகுந்தொழின் முனிவரன் சலத்தை யுள்ளியே
வகுந்துவின் வசுவரி வதிந்த திவ்வனம்
புகுந்தன ளழலெனப் புழுங்கு நெஞ்சினாள். 383

௩௯. மண்ணுருத் தெடுப்பினுங் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள். 384

௪0. பெருவரை யிரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடு மூழித் தீயொடும்
இருபிறை செறித்தெழுங் கடலுண் டாமெனில்
வெருவருந் தோற்றத்தண் மேனி மானுமே. 385

௪௧. சூடக வரவுறழ் சூலக் கையினள்
காடுறு வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே. 386

௪௨. உளப்பரும் பிணிப்புறா வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பதனை மாற்றினாள். 387

வேறு.

௪௩. இலங்கையர சன்பணிய மைந்தொரிடை யூறா
விலங்கல்வலி கொண்டெனது வேள்விநலி கின்றாள்
அலங்கன்முகி லேயிவளிவ் வங்கநில மெங்கும்
குலங்களொ டடங்கநனி கொன்றுதிரி கின்றாள். 388

௪௪. முன்னுலக ளித்துமுறை நின்றவுயி ரெல்லாம்
தன்னுணவெ னக்கருது நன்மையவண் மைந்த
என்னினி யுணர்த்துவ தினிச்சிறிது நாளின்
மன்னுயி ரனைத்தையும் வயிற்றினிடு மென்றான். 389

௪௫. அங்கிறைவ னிப்பரி சுரைப்பவது கேளா
கொங்குறை நறைக்குல மலர்ச்செனி குலுக்கா
எங்குறைவ தித்தொழி லியற்றுபவ ளென்றான்
சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான். 390

௪௬. கைவரை யெனத்தகைய காளையுரை கேளா
ஐவரை யகத்திடை யடைத்தமுனி யைய
இவ்வரை யிருப்பதவ ளென்பதனின் முன்போர்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள். 391

சஎ. சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடு
நிலம்புக மிதித்திட நெளித்தகுழி வேலைச்
சலம்புக வனற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்றொடர வந்தாள். 392

சஅ. இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயாள்
கறைக்கடை யரக்கிவட வைக்கனலி ரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள். 393

சகூ. கடங்கலுழ் கருங்களிறு கைபொடுகை தெற்றி
வடங்களி னுடங்குமுலை யாண்மறுகி வானோர்
இடங்களு நெடுந்திசையு மேழுலகும் யாவும்
அடங்கலு நடுங்கவுரு மஞ்சநனி யார்த்தாள். 394

ருo. ஆர்த்தவளை நோக்கிநகை செய்தவரு மஞ்சக்
கூர்த்தநுதி முத்தலை யயிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாய்முழை திறந்தோர்
வார்த்தையுரை செய்தனள் மலைக்குவமை யன்னாள். 395

ருக. கடக்கரும் வலத்தெனது காவலிதில் யாரும்
கெடக்கரிச றுத்தன னினிச்சுவை கிடக்கும்
விடக்கரிதெ னக்கருதி யோவிதியி னாலோ
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றாள். 396

ருஉ. மேகமவை யிற்றுக விளித்தனள் புழுங்கா
மாகவரை யற்றுக வுதைத்தனண் மதித்திண்
பாகமெனு முற்றெயி றதுக்கியயில் பற்றா
ஆகமுற வுற்றறிவ னென்றெதி ரழன்றாள். 397

ருந. அண்ணன்முனி வற்கது கருத்தெனினு மாவி
உண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழி றொடங்கியுள ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான். 398

வேறு.

ருச. வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற் றாடனை
எறிந்து கொல்லெனென் றேற்கவும் பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக் கருத்தெலாம்
அறிந்த நான்மறை யந்தணன் கூறுவான். 399

௫௫. தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினாய். 400

௫௬. நாண்மை யேயுடை [1]யார்ப்பிழைத் தால்நகை
வாண்மை யேயுடை வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பேர்சொலத் தோற்குமால்
ஆண்மை யென்னுமி தார்வசத் தாகுமே. 401

௫௭. இந்தி ரன்னிடைந் தானுடைந் தோடினர்
தந்தி ரம்படத் தானவர் வானவர்
மந்த ரம்மிவ டோளெனின் மைந்தரோ
டந்த ரம்மினி யாதுகொ லாண்மையே. 402

௫௮. கறங்க டற்றிகி ரிப்படி காத்தவர்
பிறங்க டைப்பெரி யோய்பெரி யோரொடும்
மறங்கொ டித்தரை மன்னுயிர் மாய்த்துநல்
லறங்கெ டுத்தவட் காண்மையும் வேண்டுமோ. 403

௫௯. சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த்
தேற்றும் விண்ணென்ப தல்ல திவளைப்போல்
நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்றுண் டோசொலாய் கூற்றுறழ் வேலினாய். 404

௬0. மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் தன்மையெத் தீமைய தோவையா
பின்னுந் தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை யிருமையின் பாலதோ. 405

௬௧. ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தருளன் றரக்கியைக்
கோறி யென்றன னன்னெறி கூறினான். 406

௬௨. ஐய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றோ வரஞ்செயு மாறென்றான். 407

(பிரதி) 1. யார்பிழைத் தார்நகும்.

௬௩. கங்கைத் தீம்புன லுடன் கருத்தெலா
மங்கைத் தீயனை யாளும் மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயையத் தீயவள்
வெங்கட் டீயொடு மேற்செல வீசினாள். 408

௬௪. புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
கதிர்கொள் வேலெனுங் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே. 409

௬௫. மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
காலனைப் பறித் தக்கடி யாள்விட்ட
சூல மிற்றதின் துண்டங்கள் கண்டனர். 410

௬௬. அல்லின் மாரி யனைய நிறத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கட னார்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன் விலக்கினான். 411

வேறு.

௬௭. சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
மல்லொக்கு நிறத்தி னாண்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன மறையெனப் போயிற் றன்றே.

௬௮. பொன்னெடுங் குன்ற மன்னான் புகர்முகப் பகழி யென்னும்
மன்னெடுங் கால வன்காற் றடித்தலு மிடித்து வானிற்
கன்னெடு மாரி பெய்யக் கடையுகத் தெழுந்த மேகம்
மின்னொடு மசனி யோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள். 413

௬௯. பொடியுடைக் கான மெங்குங் குருதிநீர் பொங்கி வீழத்
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைக டோறும்
முடியுடை யரக்கற் கந்நாண் முந்தியுற் பாத மாகிப்
படியிடை யிற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை யொத்தாள். 414

௭௦. தான்றிரிந் தாழி யாகத் தாடகை கடின மார்பத்
தூன்றிய பகழி வாயூ டொழுகிய குருதி வெள்ளம்
ஆன்றபே ருலக மெங்கு மாயின தந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானந் தொடக்கற்று வீழ்ந்த தொத்த. 415

௭௧. வாசநாண் மலரோ னன்ன மாமுனி பணிமறாத
காசுலாங் கனகப் பைம்பூட் காகுத்தன் கன்னிப் போரில்
கூசுவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் குடிப்ப வஞ்சி
ஆசையா லுழலுங் கூற்றுஞ் சுவைசிறி தறிந்த தன்றே. 416

௭௨. யாமுமெம் மிருக்கை பெற்றோ முனக்கிடை யூறு மில்லை
கோமகற் கினிநீ தெய்வப் படைக்கலங் கொடுத்தி யென்று
மாமுனிக் குரைத்துப் பின்னர் விற்கொண்ட மழைய னான்மேற்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயி னாரே. 417

தாடகைவதைப்படலம் முற்றும்.

---

௮. கவுசிகையாற்றுப் படலம்.

௧. விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணுளோர் வறுமைநோய்க்கு மருந்தெனுஞ் சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே. 418

௨. ஆறிய வறிவன் கூறி யளித்தலு மண்ண றன்பால்
ஊறிய வுவகை யோடு மும்பர்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினை யுதவி செய்வான்
மாறிய பிறப்புத் தேடி வருவபோல் வந்த தன்றே. 419

௩. மேவினம் பிரித லாற்றேம் வீரநீ விதியி னெம்மை
ஏவினை செய்து நிற்று மிளையவன் போல வென்று
தேவர்தம் படைகள் செப்பச் செய்வதென் றவனு நேரப்
பூவைபோ னிறத்தி னாற்குப் புறத்தொழில் புரிந்த வன்றே. 420

௪. இனையன நிகழ்ந்த பின்னர்க் காவத மிரண்டு சென்றார்
அனையவர் காண வாண்டோ ரகனதி யணுகித் தோன்ற
முனைவவீ தியாவ தென்று முன்னவன் மொழியப் பின்னர்
வினையற நோற்று நின்ற மேலவன் விளம்ப லுற்றான். 421

௫. மானச மடுவிற் றோன்றி வருதலாற் சரயு வென்றே
மேன்முறை யமரர் போற்றும் விழுநதி யிதனி னோடும்
ஆனகோ மதிவந் தெய்து மரவம தென்ன வப்பாற்
போனபின் பவங்க டீர்க்கும் புனிதநீர் நதியை யுற்றார். 422

௬. சுரர்தொழு திறைஞ்சற் கொத்த தூநதி யாவ தென்றா
வரமுனி தன்னை யண்ணல் வினவுற மலருள் வைகும்
பிரமனன் றளிக்க வென்றிப் பெருந்தகைக் குசனென் றோதும்
அரசர்கோ னளித்த மைந்த ரருமறை யனைய நால்வர். 423

௭. குசன்குச நாபன் கோதில் குணத்தின தூர்த்தன் கொற்றத்
திசைகெழு வசுவென் றோது மவர்பெய ரிவர்க டம்முட்
குசன்கவு சாம்பி நாபன் குளிர்மகோ தயம தூர்த்தன்
வசையிறன் மவன மற்றை வசுகிரி விரசம் வாழ்ந்தார். 424

௮. அவர்களிற் குசநா பற்கே யையிரு பத்தி னஞ்சொல்
துவரிதழ்த் தெரிவை நல்லார் தோன்றினர் வளரு நாளில்
இவர்பொழிற் றலைக்க ணுபத் தெய்துழி வாயு வெய்திக்
கவர்மனத் தினனு யந்தக் கன்னியர் தம்மை நோக்கி 425

௯. கொடித்தனிமகரங் கொண்டான் குனிசிலைச் சரத்தானொந்தேன்
வடித்தபூங் குழலீ ரென்னை மணத்திரென் றுரைப்ப வெந்தை
அடித்தலத் துரைத்து நீரோ டளித்திடி னணைது மென்றார்
ஒடித்தனன் வெரிநை வீழ்ந்தா ரொளிவளை யார்க ளெல்லாம்.

௧௦. சமிரண னகன்ற தற்பின் றையலார் தவழ்ந்து சென்றே
அமிர்துகு குதலை மாழ்கி யாசன்மாட் டுரைப்ப வன்னோன்
நிமிர்குழன் மாதர்த் தேற்றி நிறைதவன் சூளி நல்கும்
திமிரறு பிரம தத்தற் களித்தனன் றிருவ னோரை. 427

௧௧. அவன்மலர்க் கைக டண்டக் கூனிமிர்ந் தழகு வாய்த்தார்
புவனமுற் றுடைய கோவும் புதல்வரில் லாமை வேள்வி
தவனனிற் புரித லோடுந் தகவுறத் தழலி னுப்பண்
கவனவே கத்தின் மிக்க காதிவந் துதயஞ் செய்தான். 428

௧௨. அன்னவன் றனக்கு வேந்த னரசொடு முடியு மீந்து
பொன்னக ரடைந்த பின்னர்ப் புகழ்க்கவு சாம்பி வாழும்
மன்னவன் காதிக் கியானுங் கவுசிகை யென்னு மாது
முன்னர்வந் துதிப்ப வந்த முடியுடை வேந்தர் வேந்தன். 429

(பிரதி) எ. குசன்குச நாபன் கோதில் குணத்தவ தூர்த்தன் கொற்றத்
திசைகெழு வசுவென் றோது மிவர்பெய ரிவர்க டம்முட்
குசன்கிரி விரச நாபன் கொள்கவு சாம்பி மன்னன்
இசைகெழு மாண்பின் வந்த வசுபதி வசுவைக் கேய்ந்த,

கங. பிருகுவின் மதலை யாய பெருந்தகை பிதாவு மொவ்வா
இருகனென் பவற்கு மாதை யீந்தன னவனு மந்த
அருமறை யவனுஞ் சின்று ளறம்பொரு ளின்ப முற்றி
விரிமலர்த் தவிசோன் றன்பால் விழுத்தவம் புரிந்து மீண்டான்.

கச. காதலன் சேணி னீங்கக் கவுசிகை தரிக்க லாற்றாள்
மீதுறப் படரா லுற்றாள் விழுநதி வடிவ மாகி
மாதவர்க் கரசு நோக்கி மாநிலத் துறுக ணீக்கிப்
போதுக நதியா யென்னாப் பூமக னுலகு புக்கான். 431

கரு. எம்முனா ணங்கை யிந்த விருநதி யாயி னாளென்
றம்முனி புகலக் கேளா வதிசய மிகவுந் தோன்றச்
செம்மலு மிளைய கோவுஞ் சிறிதிடந் தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யா தென்ன மாதவன் கூற லுற்றான். 432

கவுசிகையாற்றுப்படலம் முற்றும்.

கூ. மாவலியரணப் படலம்[1]

க. தங்கணா யகரிற் றெய்வந் தவம்பிறி தில்லை யென்னும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கணான் மறைக்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனாட் செய்தவஞ் செய்த தன்றே. 433

உ. பாரின்பால் விசும்பின் பாலும் பற்றறப் படிப்ப தன்னான்
பேரென்பா னவன்செய்[2] மாயப் பெரும்பிணக் கார தோர்வார்
ஆரென்பா னமல மூர்த்தி கருதிய தறித றேற்றும்
ஈரைம்பா[3] னாழி கால மிருந்தவ மியற்றி விட்டான். 434

வேறு.

ங. ஆனவ னிங்குறை கின்றவந் நாள்வாய்
ஊனமின் ஞால மொடுக்கு மெயிற்றோர்
ஏன மெனுந்திறன் மாவலி யென்பான்
வானமும் வையமும் வௌவுதல் செய்தான். 435

(பிரதி) 1. மாவலியைப் பந்தப்படுத்திய படலம் என்பது பொருள். அரணம்-காவல், பந்தம். "நியம்ய பலிம்" என முதனூலில் உள்ளமை அறியத் தக்கது. 2. பேரென்ப தவன்செய். 3. ஈரைம்ப தாழி.

ச. செய்தவ வானவ ருஞ்செய லாற்றார்
நெய்தவழ் வேள்வியு முற்றிட நின்றான்
ஐயமில் சிந்தைய னந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்க வலித்தான். 436

ரு. ஆய தறிந்தனர் வானவ ரந்நாள்
மாயனை வந்து வணங்கி யிரந்தார்
தீயவன் வெந்தொழி றீரென நின்றார்
நாயக னும்மது செய்ய நயந்தான். 437

சு. கால நுணித்துணர் காசிப னென்னும்
வாலறி வற்கதி திக்கொரு மகவாய்
நீலநி றத்துநெ டுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தி னருங்குற ளானான். 438

எ. முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் நாவன னற்படி கையான்
அற்புத னற்புத ரேயறி யுந்தன்
சிற்பர மொப்பதொர் மெய்க்கொடு சென்றான். 439

அ. அன்றவன் வந்த தறிந்துல கெல்லாம்
வென்றவன் முந்தி வியந்தெதிர் கொண்டான்
நின்றனி லந்தண ரில்லை நிறைந்தோய்
என்றனி லுய்ந்தவர் யாருள ரென்றான். 440

கூ. ஆண்டகை யவ்வுரை கூறவ றிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாயினி நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான். 441

க0. சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லோய்தர வேண்டுமெ னாமுன்
தந்தன னென்றனன் வெள்ளி தடுத்தான். 442

கக. கண்ட திறத்திது கைதவ மைய
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்ற வகண்டமு மேனாள்
உண்டவ னீயது ணர்ந்துகொ ளென்றான். 443

கஉ. நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாவில்
கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான். 444

கங. துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னிய தான முபர்ந்தவர் கொள்வர்
என்னி னிவன்றுணை யாவ ருயர்ந்தார். 445

கச. வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராகி வழங்குவ தல்லா
தெள்ளுவ தென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால். 446

கரு. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரன்றி யிருந்தவர் யாரே. 447

கசு. அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மையு மன்னோர்
கெடுப்பவ ரின்னதொர் கேடிலை யென்றான். 448

கஎ. கட்டுரை யுத்தம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்தமு யன்றோர்க்
குட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினன் மாதோ. 449

வேறு.

கஅ. எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னந்
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோர்தமது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிமொழி யுங்காண். 450

வேறு.

ககூ. முடியவிம் மொழியெலா மொழிந்து மந்திரி
கொடியனென் றுரைத்தசொ லொன்றுங் கொண்டிலன்

அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கென
நெடியவன் குறியகை நீரை நீட்டினான். 451

௫௰. குறியவன் கையினீர் விழாமற் குண்டிகை
மறிபட வாமனன் மலர்க்கைத் தெர்ப்பையாற்
செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்
துறுதுயர் வெள்ளியு மொதுங்கிப் போயினான். 452

௫௧. கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி போலவே. 453

௫௨. நின்றகான் மண்ணெலா நிரம்பி யப்புறம்
சென்றபா வியதிலை சிறிது பாரென
ஒன்றிவா னுலகெலா மொடுக்கி யும்பரை
வென்றகான் மீண்டது வெளிபெ றாமையே. 454

௫௩. உலகெலா முள்ளடி யடக்கிற் றோரடி
அலகிலா வவ்வடிக் கமைந்த மெய்யனேல்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் சிறியன் சாலவே. 455

௫௪. உரியதிந் திரற்கென வுலக மீந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினான்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டிற்றே. 456

மாவலியாணைப்படலம் முற்றும்.

க௰. வேள்விப் படலம்.

க. ஆதலா லிருவினை யறுக்கு மாரிய
காதலாற் கண்டவர் பிறவி காண்குறார்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்
கிதலா லில்லைவே றிருக்கை யாவதே. 457

௨. ஈண்டிருந் தியற்றுவன் யாகம் யானென
நீண்டபூம் பழுவத்தை நெறியி னெய்திப்பின்

வேண்டுவ கொண்டுதன் வேள்வி மேவினான்
காண்டகு குமரரைக் காவ லேவியே. 458

௩. எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர். 459

௪. காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
மூத்தவன் முழுதுணர் முனியை முன்னியத்
தீத்தொழி லியற்றுவ ரென்ற தீயவர்
ஏத்தருங் குணத்தினாய் வருவ தென்றென்றான். 460

௫. வார்த்தைமா றுரைத்திலன் முனிவன் மௌனியாய்ப்
போர்த்தொழிற் குமரனுந் தொழுது போந்தபின்
பார்த்தனன் விசும்பிடைப் பருவ மேகம்போல்
ஆர்த்தன ரிடித்தன ரசனி யென்னவே. 461

௬. எய்தன ரெறிந்தன ரெரியு நீருமாய்ப்
பெய்தனர் நெடுவரை பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர் மழுக்கொண் டோச்சினர்
செய்தன ரொன்றல தீய மாயமே. 462

௭. ஊனகு படைக்கல முருத்து வீசினர்
கானக மறைத்தனர் கால மாரிபோல்
மீனகு திரைக்கடல் விசும்பு போர்த்தென
வானக மறைத்தது மறங்கொள் சேனையே. 463

௮. வில்லொடு மின்னுவாண் மிடைந்து மீதுலாய்ப்
பல்லியங் கடிப்பினி னிடிக்கும் பல்படை
ஒல்லென வுரறிய வூழிப் பேர்ச்சியின்
வல்லைவந் தெழுந்ததோர் மழையும் போன்றதே. 464

௯. கவருடை யெயிற்றினர் கடித்த வாயினர்
துவர்நிறப் பங்கியர் சுழல்கட் டீயினர்
பவர்சடை யந்தணன் பணித்த தீயவர்
இவரென விலக்குவற் கிராமன் காட்டினான். 465

௧0. கண்டவக் குமரனுங் கடைக்கண் டீயுக
விண்டனை நோக்கித்தன் வில்லை நோக்குறா

அண்டர்நா யகவினிக் காண்டி யீண்டிவர்
துண்டம்வீழ் வனவெனத் தொழுது சொல்லினான். 466

கக. தூமவே லரக்கர்தம் பிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை யுகுமென் றுன்னியே
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினான். 467

கஉ. நஞ்சட வெழுதலு நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர்போல்
வஞ்சனை யரக்கரை வெருவி மாதவர்
அஞ்சன வண்ணநின் னபயம் யாமென்றார். 468

கங. கவித்தனன் கைத்தலங் கலங்க லீரெனச்
செவித்தல நிறுத்தினன் சிலையிற் றெய்வநாண்
புவித்தலங் குருதியிற் புணரி யாக்கினன்
குவித்தன னரக்கர்தஞ் சிரத்தின் குன்றமே. 469

கச. திருமக ணாயகன் தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரி லொருவனைக் கடலி னிட்டதவ்
வொருவனை யந்தகன் புரத்தி னுய்த்ததே. 470

கரு. துணர்த்தபூந் தொடையினான் பகழி தூவினான்
கணத்திடை விசும்பினைக் கவித்துத் தூர்த்தது
பிணத்திடை நடந்திவர் பிடிப்ப ரீண்டெனா
உணர்த்தின ரொருவர்மு னொருவ ரோடினார். 471

கசு. ஓடின வரக்கரை யுருமின் வெங்கணை
கூடின குறைத்தலை நிறைத்துக் கூத்துநின்
றாடின வலகையு மையன் கீர்த்தியைப்
பாடின பறந்தன பறவைப் பந்தரே. 472

கஎ. பந்தரைக் கிழித்தன பரந்த பூமழை
அந்தர துந்துமி முழங்கி யார்த்தன
இந்திரன் முதலிய வமர ரீண்டினார்
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தியே. 473

வேறு.

கஅ. புனித மாதவ ராசியம் பூமழை பொழிந்தார்
அனைய கானத்து மரங்களு மலர்மழை சொரிந்த
முனியு மவ்வழி வேள்வியை முறைநெறி முற்றி
இனிய சிந்தைய னிராமனுக் கின்னன வுரைத்தான். 474

ககூ. பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென நினைகிலன் புவனம்
ஆக்கி மற்றவை யனைத்தையு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே. 475

உ0. என்று கூறிய பின்னரவ் வெழின்மலர்க் கானத்
தன்று தானுறைந் தருந்தவ முனிவரோ டிருந்து
குன்று போற்குணத் தானெதிர் கோசலை குரிசில்
இன்றி யான்செயும் பணியென்கொல் பணியென விசைத்தான்.

உக. அரிய யான்சொலி னையனுக் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகென்று போனார். 477

வேள்விப்படலம் முற்றும்.

கக. துருவாசர் சாபப் படலம்

க. அலம்பு மாமணி யாரத்தோ டகிலளை புளின
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா மருங்குற்
புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற் கூந்தற்
சிலம்பு சூழுங்காற் சோலையாந் தெரிவையைச் சேர்ந்தார். 478

உ. நதிக்குள் வந்தவ ரெய்தலு மருணன்ற னயனக்
கதிக்கு முந்துறு கலினமான் றேரொடுங் கதிரோன்
உதிக்குங் காலையிற் றண்மைசெய் வான்றன துருவிற்
கொதிக்கும் வெம்மையை யாற்றுவான் போற்கடற் குளித்தான்.

ங. கறங்கு தண்புனற் கடிநெடுந் தாளுடைக் கமலத்
தறங்கொ ளான்மலர்க் கோயில்க ளிதழ்க்கத வடைப்பப்
பிறங்கு தாமரை வனம்விட்டுப் பெடையொடுங் களிவண்
டிறங்கு கின்றதோர் நறுமலர்ச் சோலைபுக் குறைந்தார். 480

ச. இனைய சோலைமற் றியாதென விராகவன் வினவ
வினையெ லாமற னோற்றவன் விளம்புவான் மேனாள்
தனைய ரானவர்க் கிரங்கியே காசிபன் றனது
மனையு ளாடவம் புரிந்தன னிவணென வலித்தான். 481

ரு. அண்ட கோளகைக் கப்புறத் தென்னையா ளுடைய
கொண்ட னீள்பதத் தெய்தியோர் விஞ்சையர் கோதை
புண்ட ரீகமென் பதத்தினைப் புகழ்ந்தனள் புகழா
வண்ட றுமது மாலிகை கொடுத்தனண் மகிழ்ந்து. 482

சு. அன்ன மாலையை யாழிடைப் பிணித்தய னுலகம்
கன்னி மீடலுங் கசட்டுடை முனியெதிர் காணு
என்னை யாளுடை நாயகிக் கிசைபெடுப் பவளென்
றன்ன டாளினை வணங்கினின் றேத்துற வனையாள். 483

எ. உலகம் யாவையும் படைத்தளித் தாண்டுமி மொருவன்
இலகு மார்பகத் திருந்துயிர் யாவையு மீன்ற
திலக வாணுதல் சென்னியிற் சூடிய தெரியல்
அலகின் மாமுனி பெறுகென வளித்தன ளளியால். 484

அ. தெய்வ நாயகி சென்னியிற் சூடிய தெரியல்
ஐய யான்பெறப் புரிந்ததெத் தவமென வாடி
வெய்ய மாமுனி சென்னியிற் சூடியே வினைபோய்
உய்யு மாறிதென் றுவந்துவந் தும்பர்நா டுற்றான். 485

கூ. பெய்யு மாமுகில் வெள்ளியம் பிறங்கன்மீப் பிறழும்
செய்ய தாமரை யாயிர மலர்ந்தசெங் கதிரின்
மொய்கொள் சோதியை மிலைச்சிய முறைமைபோன் றொளிரும்
மெய்யி னோடையி ராவதக் களிற்றின்மேல் விளங்க. 486

க0. அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி யனங்கன்
சரம்பெய் தூணியிற் றளிரடி நூபுரந் தழைப்பக்
கரும்பை யுஞ்சுவை கற்பித்த சொல்லியர் விளரி
நிரம்பு பாடலோ டாடினர் வீதிக ணெருங்க. 487

கக. நீல மால்வரை தவழ்தரு நிறைமதிக் கற்றை
போல வேயிரு புடையினுஞ் சாமரை புரளக்
கோல மாமதி குறைவற நிறைந்தொளி குலாவி
மேலு யர்ந்தென வெள்ளியந் தனிக்குடை விளங்க. 488

க௨. தழங்கு பேரியுங் குறட்டொடு பாண்டிலுஞ் சதியின்
வழங்கு கம்பலை மங்கல கீதத்தை மறைப்ப
முழங்கு நான்மறை மூரிநீர் முழக்கினு லுலகை
விழுங்க மால்வரும் விழாவணி கண்டுளம் வியந்தான். 489

க௩. தனையொ வாதவன் மகிழ்ச்சியால் வாசவன் றன்கை
வனையு மாலையை நீட்டலுந் தோட்டியால் வாங்கித்
துனைவ லத்தயி ராவதத் தெருத்திடைத் தொடுத்தான்
பனைசெய் கையினாற் பறித்தடிப் படுத்ததப் பகடு. 490

க௪. கண்ட மாமுனி விழிவழி யொழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பரா யொழியுமென் றஞ்சி
விண்டு நீங்கினர் விண்ணவ ரிருசுடர் மீண்ட
எண்டி சாமுக மிருண்டது சுழன்றதெவ் வுலகும். 491

க௫. புகையெ ழுந்தன வுயிர்தொறு மெயில்பொடித் தவனில்
நகையெ ழுந்தன நிவந்தன புருவம்நன் னுதலில்
சிகையெ ழுஞ்சுடர் விழியின வசனியுந் திகைப்ப
மிகையெ ழுந்திடு சதமக கேளென வெகுண்டான். 492

க௬. பூத நாயகன் புவிமக ணாயகன் புணர்ந்த
வேத நாயகன் மார்பகத் தினிதுவீற் றிருந்த
ஆதி நாயகி விருப்புறு தெரியல்கொண் டணைந்த
மாத ராள்வயிற் பெற்றனன் முயன்றமா தவத்தால். 493

க௭. இன்று நின்பெருஞ் செல்விகண் டுவகையி னீந்த
மன்ற லந்தொடை யிகழ்ந்தனை யுனதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களு முவரிபுக் கொளிப்பக்
குன்றி நீதுயர் பெறுகென வுரைத்தனன் கொடியோன். 494

க௮. அரம டந்தையர் கற்பக நவநிதி யமிர்தம்
சுரபி வெம்பரி மதமலை முதலிய தொடக்கத்
தொருபெ ரும்பொரு ளின்றியே யுவரிபுக் கொளிப்ப
வெருவி யோடின கண்ணன்வாழ் வெண்ணைமே வாரின். 495

க௯. அந்த வேலையி லிந்திரன் சிந்தைநொந் தழிந்து
வந்து வானவர் முனிவனை வழிபட்டு வழுத்த
நந்து நின்பெருஞ் செல்வமா லருளினு னயக்க
முந்து மென்றுசா பத்தினின் மோக்கமு மொழிந்தான். 496

உ0. வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாம்
வையம் யாவையும் வறுமைநோய் நலிதர வானோர்
தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடிச்
செய்ய தாமரைத் திருமறு மார்பனைச் சேர்ந்தார். 497

உக. வெஞ்சொன் மாமுனி வெகுளியால் விளைந்தமை விளம்பிக்
கஞ்ச நாண்மலர்க் கிழவனுங் கடவுளர் பிறரும்
தஞ்ச மில்லைநின் சரணமே சரணெனச் சலியா
தஞ்ச லஞ்சலென் றுரைத்தன னுலகெலா மளந்தோன். 498

உஉ. மத்து மந்தரம் வாசுகி கடைகயி றிடுதூண்
மெத்து சந்திரன் சுராசுரர் வேறுவே றுள்ள
கொத்தி ரண்டுபால் வலிப்பவ ரோடதி கொடுத்துக்
கத்தும் வாரிதி மறுகுற வயிர்த்தெழக் கடைமின். 499

உங. யாமு மவ்வயின் வருதும்நீர் கதுமென வெழுந்து
போமி னென்றருள் புரிதலு மிறைஞ்சினர் புகழ்ந்து
நாம மின்றெனக் குனித்தனர் நல்குர வொழிந்த
தாமெ னும்பெருங் களிதுளக் குறுதலா லமரர். 500

உச. மலைபி டுங்கினர் வாசுகி பிணித்தனர் மதியம்
நிலைபெ றும்படி நட்டன ரோடதி நிறைத்தார்
அலைபெ றும்படி பயோததி கடைந்தன ரவனி
நிலைத ளர்ந்திட வனந்தனுங் கீழுற நெளித்தான். 501

உரு. திறல்கொ ளாமையாய் முதுகினின் மந்தரந் திரிய
விறல்கொ ளாயிரந் தடக்கைகள் பரப்பிமீ வலிப்ப
மறனி லாமுனி வெகுளியான் முடிந்தன வரவே
அறனி லாமனத் தடையலா நெடுந்தகை யமைந்தான். 502

உசு. இறந்து நீங்கின யாவையு மெம்பிரா னருளாற்
பிறந்த வவ்வயிற் சுராசுரர் தங்களிற் பிணங்கச்
சிறந்த மோகினி மடந்தையா லவுணர்தஞ் செய்கை
துறந்து மீண்டன ராரமிர் தமரர்கள் துய்த்தார். 503

உஎ. வெருவு மாலமும் பிறையும்வெள் விடையவற் கீந்து
தருவும் வேறுள தகைமையுஞ் சதமகற் களித்து
மருவு தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
திருவு மாரமு மணிந்தனன் சீதர மூர்த்தி. 504

உஅ. அந்த வேலையிற் றிதிபெருந் துயருழந் தழிவாள்
வந்து காசிபன் மலரடி வணங்கியென் மைந்தா
இந்தி ராதியர் புணர்ப்பினுன் மடிந்தன ரெனக்கோர்
மைந்த னீயரு ளவர்தமை மடித்தலுக் கென்றாள். 505

உகூ. என்று கூறலு மகவுனக் களித்தன மினிநீ
சென்று பாரிடைப் பருவமொ ராயிரந் தீர
நின்று மாதவம் புரிதியே னினைவுமுற் றிதியென்
றன்று கூறிடப் புரிந்தனள் மாதவ மனையாள். 506

௩0. கேட்ட வாசவ னன்னவட் கடிமையிற் கிடைப்ப
வாட்ட மாதவத் துணர்ந்தவள் வயிற்றுறு மகவை
வீட்டி யேயெழு கூறுசெய் திடுதலும் விம்மி
நாட்ட நீர்வர மருத்தென நாமமு நவின்றான். 507

௩க. ஆய திவ்விட மப்புறத் தவிர்மதி யணிந்த
தூய வன்றனக் குமைவயிற் றோன்றிய தொல்லை
வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய்வ ளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான். 508

௩உ. காலன் மேனியிற் கருகிருள் கடிந்துல களிப்பான்
நீல வார்கலித் தேரொடு நிறைகதிர்க் கடவுள்
மாலின் மாமணி யுந்தியி னயனொடு மலர்ந்த
மூல தாமரை முழுமுதன் முளைத்தென முளைத்தான். 509

துருவாசர்சாபப் படலம் முற்றும்.

கஉ. கங்கைவரலாற்றுப் படலம்.

க. அங்குநின் றெழுந் தயன்முதன் மூவரு மனையார்
செங்க ணேற்றவன் செறிசடைப் பழுவத்தி னிறைதேன்
பொங்கு கொன்றையீர்த் தொழுகலாற் பொன்னியைப் பொருவும்
கங்கை யென்னுமக் கரைபொரு திருநதி கண்டார். 510

உ. இந்த மாநதிக் குற்றுள தன்மைய தியாவும்
எந்தை கூறுகென் றிராகவன் வினவுற வெனையாள்
மைந்த நின்றிரு மரபுளா னயோத்திமா நகர்வாழ்
விந்தை சேர்புயன் சகரனிம் மேதினி புரந்தோன். 511

ங. விறல்கொள் வேந்தனுக் குரியவ ரிருவரில் விதர்ப்பை
பொறையி னல்கிய வசமஞ்சற் கஞ்சுமான் புதல்வன்
பறவை வேந்தனுக் கிளையமென் சுமதிமுன் பயந்த
அறனின் மைந்தர்க ளறுபதி னாயிரர் வலத்தார். 512

ச. திண்டி றற்புனை சகரனுந் தனையர்சே வகங்கள்
கண்டு முற்றிய வயமகம் புரிதலுங் கனன்று
வண்டு துற்றதார் வாசவற் குரைத்தனர் வானோர்
ஒண்டி றற்பரி கபிலன திடையினி லொளித்தான். 513

ரு. வாவு வாசியின் சென்றன னஞ்சுமான் மறுகிப்
பூவி லோரிட மின்றியே நாடினன் புகுந்து
தேவர் கோமகன் கரந்தமை யறிந்திலன் திகைத்து
மேவு தாதைதன் றனைபா லுரைத்தனன் மீண்டு. 514

சா. கேட்ட வேந்தனு மதலையர்க் கம்மொழி கிளத்த
வாட்ட மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலந் தடவித்
தோட்டு நங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற. 515

எ. நூறி யோசனை யகலமு மாழமு நடங்கக்
கூறு செய்தன ரென்பரால்[1] வடகுண திசையின்
ஏறு மாதவக் கபிலனி னிவுளிகண் டெரியிற்
சீறி வைதனர் தருக்கினர் நெருக்கினர் செறுத்தார். 516

அ. மூளும் வெஞ்சினத் தருந்தவன் முனிந்தெரி விழிப்பப்
பூளை சூடிதன் னகையினி லெயில்பொடிந் தனபோல்
ஆளு மைந்தர்க ளறுபதி னாயிர ரவிந்தார்
வேள்வி கொண்டநல் வேந்தனுக் குரைத்தனர் வேய்கள். 517

கூ. உழைத்து வெந்துயர்க் கூறுகாண் கிலனுணர் வழியா
வழைத்து மைந்தன்றன் மைந்தனை யவர்கழிந் தாரேல்
இழைத்த வேள்வியின் றிழுப்பதோ[2] வெனவவ னெழுந்து
தழைத்த மாதவக் கபிலன்வாழ் பாதலஞ் சார்ந்தான். 518

க0. விண்டு நீங்கின ருடலுகு பிறங்கல்வெண் ணீற்றைக்
கண்டு துண்ணென்ற மனத்தினன் கபிலமா முனிதன்
புண்ட ரீகநற் றாடொழு தெழுந்தனன் புகழக்
கொண்டு போகுநின் னிவுளியென் றுற்றதுங் குறித்தான். 519

(பிரதி) 1. ரொன்பதாம். 2. யென்றன னெழுந்து

கக. பழுதி லாதவ னுரைத்தசொற் கேட்டலும் பரிவால்
தொழுது வெம்பரி கொணர்ந்தவி சுரர்பதிக் கியா
முழுதும் வேள்வியை முற்றுவித் தரசனு முடிந்தான்
எழுது கீர்த்தியாய் மைந்தனுக் கரசிய லீந்து. 520

க௨. சகரர் தொட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப
மகர வாரிதி சிறந்தது மகிதல முழுதும்
நிகரின் மைந்தனே புரந்தன னவனொடு மரபில்
பகிர தன்னெனும் பார்த்திபன் வந்தவ தரித்தான். 521

க௩. உலகம் யாவையும் பொதுவறத் திகிரியை யுருட்டி
இலகு மன்னவ னிருந்துழி யிறந்தன வினவ
அலகி றென்முனி[1] யுரைத்திடக் கேட்டன னரசன்
திலக மண்ணுற வணங்கினின் றொருமொழி செப்பும். 522

க௪. கொடிய மாமுனி வெகுளியின் மடிந்தவெங் குரவர்
முடிய நீணிர யத்தினி லழுந்துறு முறைமை
கடியு மாறெனக் கருந்தவ மமைக்குறு கருமம்
அடிகள் சொற்றுக வென்றலு மந்தண னறைவான். 523

க௫. வைய மாளுடை மன்னவர் மன்னவ மடிந்தோர்
உய்ய நீடவ மொழிவறு பகலெலா மொருங்கே
செய்ய நாண்மலர்க் கிழவனை நோக்கிநீ செய்தி
நைய லின்றென வுரைத்தன னவையறு முனிவன். 524

க௬. ஞாலம் யாவையுஞ் சுமந்திரன் றன்வயி னல்கிக்
கோலு மாதவத் திமகிரி மருங்கினிற் குறுகிக்
கால மோர்பதி னாயிர மருந்தவங் கழிப்ப
மூல தாமரை முழுமுதற் கிழவன்முந் தினனே. 525

க௭. நின்பெ ருந்தவம் வியந்தனன் நினதுநீள் குரவர்
முன்பி றந்தன ரருந்தவன் முனிவினு தலினால்
மன்பெ ரும்புவி யதனில்வா னதிநடந் தணுகி
என்பு தோயுமே லிருங்கதி பெறுவரென் றிசைத்தான். 526

க௮. மாக நன்னதி புவியிடை நடக்கின்மற் றவடன்
வேக மாற்றுதல் கண்ணுதற் கன்றிவே றரிதால்
தோகை பாகனை நோக்கிநீ யருந்தவந் தொடங்கென்
றேகி னானுல கனைத்துமெவ் வுயிர்களு மீன்றான். 527

(பிரதி) 1. யிறந்தன வுரைத்திட வரசன்

கக. மங்கை பாகனை நோக்கிமுன் மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் புரிதலுந் தழனிறக் கடவுள்
அங்கு வந்துநின் கருத்தினை முடித்துமென் றகன்றான்
கங்கை யைத்தொழக் காலமை யாயிரங் கழித்தான். 528

உ0. ஒரும டக்கொடி யாகவந் தனதுமா தவமென்
பொருபு னற்கொடி வரினவள் வேகமார் பொறுப்பார்
அரனு ரைத்தசொல் விளைதமற் றின்னுநீ யறிந்து
பெருகு நற்றவம் புரியென வானதி பெயர்ந்தாள். 529

உக. கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா
அரந்தை யுற்றவ னிரண்டரை யாயிர வருடம்
புரிந்து நற்றவம் பொலிதர வரைமகள் புனிதன். 530

உஉ. எதிர்ந்து நின்னினை வென்னென விறைஞ்சியெம் பெரும
அதிர்ந்து கங்கையி தறைந்தன ளென்றலு மஞ்சல்
பிதிர்ந்தி டாவகை காத்துமென் றேகிய பின்னை
முதிர்ந்த மாதவ மிரண்டரை யாயிர முடித்தான். 531

உங. பெருகு நீரொடு பூழ்தியும் வாயுவும் பிறங்கு
சருகும் வெங்கதி ரொளியையுந் துய்த்தது தனையும்
பருக லின்றியே முப்பதி னாயிரம் பருவம்
முருகு காதலின் மன்னவ னருந்தவ முயன்றான். 532

உச. உந்தி யம்புயத் துதித்தவ னுறைதரு முலகும்
இந்தி ராதிய ருலகமு நடுங்குற விரைந்து
வந்து தோன்றினள் வானதி மலைமகள் கொழுநன்
சிந்தி டாதொரு சடையினிற் கரந்தனன் சேர. 533

உரு. புன்னு னித்தரு பனியென வானதி புனிதன்
சென்னி யிற்கரந் தொளித்தலும் வணங்கினன் திகைத்து
மன்ன னிற்றலும் வருந்தனஞ் சடையவ்வா[1] னதியின்
றென்ன விட்டன னொருசிறு தவளிபோந் திழிந்தாள். 534

உசா. இழிந்த கங்கைமுன் மன்னவன் விரைவொடு மேகக்
கழிந்த மன்னவர் கதிபெற முடிகிய கதியால்
அழுந்து மாதவச் சன்னுவின் வேள்வியை யழிப்பக்
கொழுந்து விட்டெரி வெகுளியன் குடங்கையிற் கொள்ளா.

(பிரதி) 1. சடையின வா.

உஎ. உண்டு வந்தனன் மறைமுனிக் கணங்கள்கண் டுவப்பக்
கண்ட வேந்தனும் வணங்கிமுன் னிகழ்ந்தன கழறக்
கொண்டு போகெனச் செவிவழிக் கொடுத்தனன் குதித்து
விண்டு நீங்கின ருடனுகு பொடியின்மே யினளே. 536

உஅ. நிரய முற்றிய சகரர்க ணெடுங்கதி செல்ல
விரைம லர்ப்பொழிந் தார்த்தன விண்ணவர் குழாங்கள்
முரச முற்றிய பல்லிய முறைமுறை துவைப்ப
அரச னப்பொழு தணிமதி லயோத்திமீண் டடைந்தான். 537

உகூ. அண்ட கோளகைக் கப்புறத் தாதியன் றளந்த
புண்ட ரீகமென் மலரடிப் பிறந்துபூ மகனூர்
கொண்ட தீர்த்தமாய்ப் பகிரதன் றவத்திறற் கொணர
மண்ட லத்தின்வந் தடைந்ததிம் மாநதி மைந்த. 538

ங0. சகரர் தம்பொருட் டருந்தவ நெடும்பகற் றள்ளிப்
பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகிரதி யாகி
மகித லத்திடைச் சன்னுவின் செவிவழி வரலால்
நிகரில் சானவி யெனப்பெயர் படைத்ததிந் நீத்தம். 539

ஙக. என்று கூறலும் வியப்பினொ டுவந்தன ரிறைஞ்சிச்
சென்று தீர்ந்தனர் கங்கையை விசாலைவாழ் சிகரக்
குன்று போற்புயத் தரசன்வந் திணையடி குறுகி
நின்று நல்லுரை விளம்பமற் றவ்வயி னீங்கா. 540

கங்கைவரலாற்றுப் படலம் முற்றும்.

கந. அகலிகைசாபந்தீர் படலம்.

க. பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் னூரை
மெள்ள வான்கனை தடவுறுங் கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாணெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
அள்ளி நாணுறு மகன்பணை விதேகநா டடைந்தார். 541

உ. வரம்பில் வான்சிறை மதகுகண் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல ரசோககு களலர்விளக் கெடுப்ப
நரம்பி னன்றதேன் றுரைகொ ணறுமலர் யாழிற்
சுரும்பு பாண்செயத் தோகைநின் றடுவ சோலை. 542

௩. பட்ட வாணுதன் மடந்தையர் பார்ப்பெனுந் தூதால்
எட்ட வாதரத் துழல்பவ ரிதயங்கள் கொதிப்ப
வட்ட நாண்மறை மலரின்மேல் வயலிடை மள்ளர்
கட்ட காவியங் கட்கடை காட்டுவ கழனி 543

௪. தாவி யன்னந்த மினமென்று நடைகண்டு தொடரக்
கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்
ஓவில் குங்குமச் சுவடுற வொன்றொடொன் றாடிப்
பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை. 544

௫. முறையி னின்முது மேதியின் முலைவழி பாலுந்
துறையி னின்றுயர் மாங்கனி தூங்கிய சாறும்
அறையு மென்கரும் பாட்டிய வமுதமு மழிதேன்
நறையு மல்லது நளிர்புனல் பெருகல நதிகள். 545

௬. இழைக்கு நுண்ணிடை யிடைதர முகடியர் கொங்கை
மழைக்கண் மங்கைய ரரங்கினின் மகரயாழ் முழவம்
முழக்கு மின்னிசை வெருவிய மோட்டுள வெருமை
உழக்க வாளைகள் பாளையிற் குதிப்பன வோடை. 546

௭. படைநெ டுங்கண்வா ளுறைபுகப் படர்புனன் மூழ்கிக்
கடையு முன்கடற் செழுந்திரு வெழும்படி காட்டி
மிடையும் வெள்வளை புள்ளொடு மொலிப்பமெல் லியலார்
குடைய வண்டினங் கடிமலர் குடைவன குளங்கள். 547

௮. இனைய நாட்டிடை யினிதுசென் றிஞ்சிசூழ் மிதிலை
புனையு நீள்கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்
மனையின் மாட்சியை யழித்திழி மாதவப் பன்னி
கனையு மோட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டார். 548

௯. கண்ட கன்றிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற[1] வேறுபட் டுருவங்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணத்தி னின்றனண் மாமுனி பணிப்பான். 549

வேறு.

௧௦. மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசை யிழித்தோன் மைந்த
மேயின வுவகை யோடு மின்னென வொதுங்கி நின்றாள்

(பிரதி) 1 மயககிட.

தீவினை நயத்தல் செய்த தேவர்கோ மாற்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி யகலிகை யாரு மென்றான். 550

கக. பொன்னையேர் சடையான் கூறக் கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே யென்னை யேயிவ் வுலகிய லிருந்த வாறே
முன்னை யூழ் வினையி னாலோ நடுவொன் றா முடிந்த துண்டோ
அன்னையே யனையாட் கிவ்வா றடுத்தவா றருளு கென்றான்.

கஉ. அவ்வுரை யிராமன் கூற வறிவனு மவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி மேனாள் செறிசுடர்க் குலிசத் தண்ணல்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யற்ற நோக்கி
நவ்விபோல் விழியி னாடன் வனமுலை நச்ச லுற்றான். 552

கங. தையலா ணயன வேலு மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடித் திரிபவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்.

கச. புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னுந்
தக்கதன் றென்னத் தேறா டாழ்ந்தன ளிருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றன் முனிவனு முடுக வந்தான். 554

கரு. சரந்தருஞ் சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கும் நெடும்பழி பூண்டா னின்றான்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான். 555

கசு. தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து வெய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்
ஆயிர மைந்தர்க் குள்ள[1] வறிகுறி யுனக்குண் டாகென்
றேயின னவையெ லாம்வந் தியைந்தன விமைப்பின் முன்னர்.

கஎ. வண்ணவார் குழலி னார்க்கும் வானவர் தமக்கு மாகேள்
எண்ணிலான் செய்த குற்ற முனிவநீ பொறுத்தி யென்னப்
பண்ணிய வுறுப்பிற் கொண்ட பத்துநூ றவையும் போக
அண்ணிய விண்ணி னாளிக் காயிர நயன மென்றான். 557

(பிரதி) 1 மாதர்க்குள்ள.

கஅ. எல்லையி னாண மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடும் புரந்தரன் போய பின்னை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயுங்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள். 558

கக. பிழைத்தனன் பொறுக்கை யென்றும் பெரியவர் தகைமையென்பால்
அழற்றருங் கடவு ளன்னாய் முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிரு மென்றான். 559

உ0. இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்.

உக. தீதிலா வுதவி செய்த சேவடிக் கரிய சிங்கம்
கோதிலாக் குணத்தான் சொன்ன பொருளெலா மனத்துட் கொண்டு
மாதவ னருளுண் டாக வழிபடாய் படரு றாதே
போதிநீ யன்னை யென்னப் பொன்னடி வணங்கிப் போனாள்.

உஉ. அருந்தவ னுறையு ளன்னை யணுகின ரனக லோடும்
விருந்தினர் தம்மைக் காணா விம்மலால் வியந்த நெஞ்சன்
பரிந்தெதிர் கொண்டு புக்குக் கடன்முறை யாவும் பண்ணிப்
புரிந்தபின் காதி செம்மல் புனிதமா தவனை நோக்கி. 562

உங. அஞ்சன வண்ணத் தான்றன் னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் பண்டை வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழையி லாளை நீயழைத் திடுதி யென்னாக்
கஞ்சமா மலரோ னன்ன முனிவனுங் கருத்துட் கொண்டான்.

உச. குணங்களா லுயர்ந்த வள்ளல் கோதமன் கமல பாதம்
வணங்கினன் வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண் டருந்தவ னோடும் வாச
மணங்கிளர் சோலை நீங்கி மணிமதில் மிதிலை கண்டார். 564

அகலிகைசாபந்தீர் படலம் முற்றும்.

கச. மிதிலைகாண் படலம்.

க. மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தன்றே. 565

உ. நிரம்பிய மாடத் தும்பர் நிரைமணிக் கொடிக ளெல்லாம்
தரம்பிற ரின்மை யுன்னித் தருமமே தூது செப்ப
வரம்பில்பே ரழகி னானை மணஞ்செய்வான் வருகின் றானென்
றரம்பையர் விசும்பி னாடு மாடலி னாடக் கண்டார். 566

ங. பகற்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட
துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரிற் றுவன்றி நின்று
முகிற்குலந் தடவுந் தோறு நனைவன முகிலிற் சூழ்ந்த
அகிற்புகை கதுவுந் தோறு முலர்வன வாகக் கண்டார். 567

ச. ஆதரித் தமுதிற் கோறோய்த் தவ்வவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கு மெழுத லாகாச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதின் மிதிலை புக்கார்.

ரு. சொற்கலை முனிவ னுண்ட சுடர்மணிக் கடலுந் துன்னி
அற்கலந் திலங்கு பன்மீ னரும்பிய வானும் போல
விற்கலை நுதலி னாரு மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன் கிடந்த மாட நெடுந்தெரு வதனிற் போனார். 569

சு. தாறுபாய் தறுகண் யானை தடமத வருவி தாழ்ப்ப
ஆறுபாய் கலின மாவி லாழியு மிழிந்தோ ராறாய்ச்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமா யொன்றோ டொன்று
மாறுமா றாகி வாளா கிடக்குலா மறுகிற் சென்றார். 570

எ. தண்டுத லின்றி யொன்றித் தனித்தனி சிறந்த காதல்
உண்டபின் கலவிப் போரி னொசிந்தமென் மகளி ரேபோல்
பண்டருங் கிளவியார்தம் புலவியிற் பரிந்த கோதை
வண்டொடு கிடந்து தேன்சோர் மணிநெடுந் தெருவிற் சென்றார்.

அ. நெய்திர ளரம்பிற் றந்த மழலையாழ் நிறைந்த பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு மாடக வரங்கு கண்டார். 572

௯. வரம்பறு மணியும் பொன்னு மாரமுங் கவரி வாலும்
சுரப்புடை யகிலும் மஞ்ஞைத் தோகையுந் தும்பிக் கொம்பும்
குரப்பணை நிரப்பு மள்ளர் குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன வாவணம் பலவுங் கண்டார். 573

க௦. பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க
மாசுறு பிறவி போல வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகிற் பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலாவக் கண்டார். 574

கக. கொட்புறு கலினப் பாய்மாக் குயமகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல வாளியின் வருவ மேலோர்
நட்பினி னிடைய றாத ஞானிக ளுணர்வி னென்றாய்க்
கட்புலத் தினைய வென்றுந் தெரிவில தெரியக் கண்டார். 575

க௨. தயிருறு மத்திற் காம சரம்படத் தலைப்பட் டோடும்
உயிருறு காத லாரி னொன்றையொன் றொருவ லில்லாச்
செயிருறு மனத்த வாகித் தீத்திரள் செங்கண் சிந்த
வயிரவான் கணையத் தியானை மலையென மலையக் கண்டார். 576

க௩. வாளரம் பொருத வேலு மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடுங் கிளைத்த நீலச் சுருளுஞ்செங் கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார். 577

க௪. பளிக்குவள் ளத்து வாக்கும் பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படுந் தகைய வாகி வெறியினை மிழற்று கின்ற
ஒளிப்பினு மொளிக்க வொட்டா வூடலை யுணர்த்து மாபோற்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக் கமலங்கள் பலவுங் கண்டார்.

க௫. வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவ றோன்ற விருந்தென மகளி ரீந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிது சென்றார்.

க௬. மெய்வரும் போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கு மேபோல்
மையரி நெடுங்க ணோக்கம் படுதலுங் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார். 580

கஎ. பங்கயங் குவளை யாம்பல் படர்கொடி வள்ளை நீலம்
செங்கிடை தரங்கங் கெண்டை சினைவரா லினைய தேம்பத்
தங்களை யுவமை யான வவயவத் தகைமை சாலும்
மங்கையர் விரும்பி யாடும் வாவிகள் பலவுங் கண்டார். 581

கஅ. கடகமுங் குழையும் பூணு மாரமுங் கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும் வட்டித்துக் கொடுத்து வாசத்
தொடையலங் கோதை சோரப் பளிக்குநாய் சிவப்பத் தொட்டுப்
படைநெடுங் கண்ணு ராடும் பண்ணைகள் பலவுங் கண்டார். 582

ககூ. இயங்குறு புலன்க ளங்கு மிங்குங்கொண் டேக வேகி
மயங்குபு திரிந்து நின்று மறுகுறு முணர்வி தென்னப்
புயங்களிற் கலவைச் சாந்தும் புணர்முலைச் சுவடு நீங்காப்
பயங்கெழு குமரர் வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார்.

உ0. வெஞ்சின வுருவிற் றென்னு மேனியர் வேண்டிற் றீயும்
நெஞ்சின ரீசன் கண்ணி னெருப்புறு வனங்க னன்னார்
செஞ்சிலைக் கரத்தர் மாதர் புலவிகள் திருத்தித் தேய்ந்த
குஞ்சியர் சுழலா நின்ற மைந்தர்தங் குழாங்கள் கண்டார். 584

வேறு.

உக. பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்ன நடைதோற்றுப்
போகக் கண்டு வண்டின மார்க்கும் பொழில்கண்டார். 585

உஉ. உம்பர்க் கேயும் மாளிகை யோளி நிழல்பாய
இம்பர்த் தோன்றுந் நாகர்த நாட்டி னெழில் காட்டிப்
பம்பிப் பொங்குங் கங்கையி னாழ்ந்த படைமன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதில் சுற்றும் மகழ்கண்டார். 586

உங. பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேறற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோ[1]
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றார். 587

மிதிலைகாண் படலம் முற்றும்.

(பிரதி) 1. பெடையோடும்

கரு. காட்சிப் படலம்.

க. செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல்யாரும்
ஒப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயன்மற்றோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி யுரைசெய்கேம். 588

உ. பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சே ரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னாள்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர சென்னும் படிநின்றாள். 589

ங. வென்றம் மானைக் காயயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் மானப் பேர்கய லஞ்சப் பிறழ்கண்ணாள்
குன்றம் மாடக் கோவி னளிக்கு மமுதன்றி
அன்றம் மாடத் தும்ப ரளிக்கு மமுதன்னாள். 590

ச. உமையா ளொக்கும் மங்கைய ருச்சிக் கரம்வைப்பக்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையா நாட்டம் பெற்றில மென்றா ரிருகண்ணால்
அமையா தென்றா ரந்தர வானத் தவரெல்லாம். 591

ரு. பெருந்தே ரல்குற் பெண்ணிவ ளொப்பா ளொருபெண்ணைத்
தருந்தா னின்னு நான்முக னென்றாற் றரலாமே
அருந்தா வந்தத் தேவரி ரந்தா லமிர்தென்னும்
மருந்தே யல்லா லென்னினி நல்கும் மணியாழி. 592

சு. அனையாண் மேனி கண்டபி னண்டத் தரசாளும்
வினையோ ராரும் மேனகை யாதி மிளிர்வேற்கண்
இனையோ ருள்ளத் தின்னலி னோர்தம் முகமென்னும்
பனிதோய் வானின் வெண்மதிக் கென்றும் பகலன்றே. 593

எ. மலர்மே னின்றிம் மங்கையிவ் வையத் திடைவைகப்
பலகா லுந்தம் மெய்நனி வாடும் படிநோற்றார்
அலகோ வில்லா வந்தண ரோநல் லறமேயோ
உலகோ வானோ வும்பர்கொ லோவீ துணரோமால். 594

அ. தன்னே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமு தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாற்றப்
பொன்னே சூழும் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள். 595

௯. கொல்லும் வேலுங் கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்னு மதற்கே விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றிது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்றாள். 596

வேறு.

௧0. வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலான்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்
எங்கணா யகற்கினி யாவ தாங்கொலோ. 597

௧௧. இழைகளுங் குழைகளு மின்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வேனுமிப் பாவை தோன்றலால்
அழகெனு மழகுமோ ரழகு பெற்றதே. 598

௧௨. எண்ணரு நலத்தினா[1] ளினைய ணின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவுண் ணிறையொடு முணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள். 599

௧௩. நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவ டனத்திற் றைத்தவே. 600

௧௪. பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் மங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார். 601

௧௫. மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ. 602

௧௬. அந்தமி லழகனை யணங்கி லாமையாற்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான். 603

காட்சிப் படலம் முற்றும்.

(பிரதி) 1. எண்ணருங் கலத்தினா

கசு. கைக்கிளைப் படலம்.

க. பிறையெனு நுதலிவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதனு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே. 604

உ. மானுற வருதனு மனமு மெய்யுந்தன்
நூனுறு மருங்குல்போ னுடங்கு வாணெடும்
கானுறு கண்வழிப் புகுந்த காமநோய்
பானுறு பிரையெனப் பரந்த தெங்குமே. 605

ங. நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை யுன்னி விம்மினள்
காமனு மொருசரங் கருத்தி னெய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே. 606

ச. நிழலிடு குண்டல மதனி னெய்யிடா
அழலிடா மிளிர்ந்திடு மயில்கொள் கண்ணினள்
சுழலிடு கூந்தலுந் துகிலுஞ் சோர்தரத்
தழலிடு வல்லியே போலச் சாம்பினள். 607

ரு. தழங்கிய கலைகளு நிறையுஞ் சங்கமும்
மழுங்கிய வுள்ளமு மறிவும் வாய்மையும்
இழந்தவ ளிமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறிய ளாயினள். 608

சு. கலங்குழைந் துகநெடு நாணுங் கண்ணற
நலங்குழைந் தாணகின் முகத்தி லேவுண்டு
மலங்குழை யெனவுயிர் வருந்திச் சோர்தரப்
பொலங்குழை மயிலைக்கொண் டரிதிற் போயினர். 609

எ. காதொடு கடைபொரு கயற்க ணங்கைதன்
பாதமுங் கரங்களு மனைய பல்லவந்
தாதொடுங் குழையொடு மடுத்த தண்பனிச்
சீதநுண் டுளிமல ரமளி சேர்த்தினர். 610

அ. நாளறு நறுமல ரமளி நண்ணினள்
பூளைவீ புரைபனிப் புயற்குத் தேம்பிய
தாளதா மரைமலர் தகைந்த பொய்கையும்
வாளரா நுங்கிய மதியு மென்னவே. 611

௯. மலைமிசைத் தடத்துரு மழைக்க ணாலிபோல்
முலைமுகட் டுதிர்ந்தன நெடுங்கண் முத்தினம்
சிலைநுதற் கடையுறச் செறிந்த வேர்வுதன்
உலைமுகப் புகைதரு முயிர்ப்பின் மாய்ந்ததே. 612

௧௦. கம்பமில் கொடுமனக் காம வேடன்கை
அம்பொடு சோர்வதோர் மயிலு மன்னவள்
வெம்புறு மனத்தனல் வெதுப்ப மென்மலர்க்
கொம்பென வமளியிற் குழைந்து சாய்ந்தனள். 613

௧௧. சொரிந்தன நறுமலர் சுறுக்கொண் டேறின
பொரிந்தன கலவைகள் பொறியிற் சிந்தின
எரிந்தவெங் கனல்சுட விழையிற் கோத்தநூல்
பரிந்தன கரிந்தன பல்ல வங்களே. 614

௧௨. தாதியர் செவிலியர் தாயர் தௌவையர்
மாதுய ருழந்துழந் தழுங்கி மாழ்கினர்
யாதுகொ லிதுவென வெண்ணா றேற்றலர்
போதினோ டயினிநீர் சுழற்றிப் போக்கினார். 615

௧௩. அருகினின் றசைக்கின்ற வால வட்டக்கால்
எரியினை மிகுத்திட விழையு மாலையும்
கரிகுவ தீவன கனல்வ காட்டலால்
உருகுபொற் பாவையு மொத்துத் தோன்றினாள். 616

௧௪. அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு வல்லவேல் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் கமலங் கண்ணெனும்
வில்லொடு மிழிந்ததோர் மேக மென்னுமே. 617

௧௫. நெருக்கியுட் புகுதரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போயினான்
பொருப்புறழ் தோள்புணர் புண்ணி யத்தது
கருப்புவில் லன்றவன் காம னல்லனே. 618

௧௬. பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வுதா னெங்குங் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம். 619

கஎ. இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் னுயிரையம் முறுவ லுண்டதே. 620

கஅ. படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மாமதக் களிறல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே. 621

கசு. உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு மெய்ம்மையால்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே யாகல் வேண்டுமால். 622

உ0. பிறந்துடை நலநிறை பிணித்த வெந்திறம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை யின்னுங் கண்ணிற்கண்
டறிந்துயி ரிழக்கவு[1] மாகு மேகொலாம். 623

உக. என்றிவை யினையன விளம்பு மேல்வையின்
நின்றன னிவணெனு நீங்கி னானெனும்
கன்றிய மனத்துறு காம வேட்கையால்
ஒன்றல பலநினைந் துணங்கு காலையே. 624

உஉ அன்னமென் னடையவ ளமைத்த காமத்தீத்
தன்னையுஞ் சுடுமென றரிக்கி லானென
நன்னெடுங் கரங்களை நடுக்கி யோடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினான். 625

உரு. விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாங்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினான். 626

உச. மீதறை பறவையாம் பறையுங் கீழ்விளி
ஓதமென் சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய்கஞ் சுகமும் பற்றலாற்
சாதக ரென்னவுந் தகைத்திம் மாலையே. 627

(பிரதி) 1. மாக வேண்டுமோல்

வேறு.

உரு. கயங்க ளென்னுங் கனல்தோய்ந்து கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவே ளெய்த புண்ணி னிடைநுழைய
உயங்கு முணர்வு நன்னலமு முருகிச் சோர்வா ருயிருண்ண
வயங்கு மாலை வரனோக்கி யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

உசா. கடலோ மழையோ முழுநீலக் கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை நாண்மலரோ நீலோற் பலமோ பானலோ
இடர்சேர் மடவா ருயிருண்ப தியாதோ வென்று தளர்வாண்முன்
அடல்சே ரசுரர் நிறம்போலு மந்தி மாலை வந்ததுவே. 629

உஎ. மைவானிறத்துமீனெயிற்று வாடை யுயிர்ப்பின் வளர்செக்கர்ப்
பைவா யந்திப் படவரவே யின்று விளைத்துப் பகைத்தியால்
எய்வா னொருவன் கையோயா னுயிரு மொன்றே யினியில்லை
உய்வான்வழியிற் பழிபூணவுன்னோ டெனக்குப் பகையுண்டோ.

உஅ. ஆல முலகிற் பரந்ததுவோ வாழி கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை யெல்லோரு நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற் கலந்து குழைத்தா காயத்தும்
மேலை நிலத்து மெழுகியதோ[1] விளக்கு மிருளாய் விளைந்ததுவே.

உகூ. வெளிநின்றவரோபோய்மறைந்தார்விலக்கவொருவர்தமைக்காணேன்
எளியள் பெண்ணென் றிரங்காதே யெல்லி யாமத்[2] திருளூடே
ஒளியம் பெய்து மன்மதனு முனக்கு மாற்ற முரைத்தாரோ
அளியன் செய்த தீவினையா லன்றி நீரும் வந்தீரோ. 632

நூ0. ஆண்டங் கனையா னினையநினைந் தழுங்கும் வேலை யகல்வானம்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற் சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம் வெய்ய வென்றங் கவைநீக்கித்
தூண்டல்செய்யா மணிவிளக்கின் சுடராலிரவைப்பகல்செய்தார்

நூக. பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப் பிணித்த பாம்பின் மணித்தாம்பால்
விரிந்த திவலை பொதிந்தமணி விசும்பின் மீனின் மேல்விளங்க
அருந்த வமரர் கலக்கியநா ளமுது நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென வெழுந்த தாழி வெண்டிங்கள்

நூஉ. வண்டா யயனார் மறைபாட மலர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து பாரு நீரும் பசித்தவன்போல்
உண்டா னுந்திக் கடல்பூத்த தோதக் கடலுந் தான்வேறோர்
வெண்டா மரையின் மலர்பூத்த தொத்த தாழி வெண்டிங்கள்.

(பிரதி) 1. மெழுதியதோ. 2. மாயத்.

௩௩. புள்ளிக் குறியிட் டெனப்பன்மீன் பூத்த வானம் பொதிகங்குல்
நள்ளிற் சிறந்த விருட்பிழம்பை நக்கி நிமிர்ந்த நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்னாங்கொல் கீழ்பாற் றிசையின் மேல்வைத்த
வெள்ளிக் கும்பத் திளங்கமுகின் பாளை போன்று விரிந்துளதால்.

௩௪. வண்ண மாலை கைபரப்பி யுலகை வளைத்த விருளெல்லாம்
உண்ண வெண்ணித் தண்மதிய மதனுள் ளெழுந்த நெடுநிலா
விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்றன் புகழ்போ லெங்கும்பரந்துளதால்.

௩௫. நீத்த மதனின் முளைத்தெழுந்த நெடுவெண் டிங்க ளெனுந்தச்சன்
மீத்தன் கரங்க ளவைபரப்பி விரிந்த நிலவின் வெண்சுதையாற்
காத்த கண்ணன் மணியுந்திக் கமல நாளத் திடைப்பண்டு
பூத்த வண்டம் பழைய தென்று புதுக்கு வானும் போன்றுளதால்.

௩௬. விரைசெய்கமலப்பெரும்போதின் விரும்பிப்புகுந்ததிருவினொடும்
குரைசெய்வண்டின் குழாமிரியக் கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்
உரைசெய் திகிரி தனையுருட்டி யொருகோ லோச்சி யுலகாண்ட
அரைசனொதுங்கத்தலையெடுத்தகுறும்பர்போன்ற தரக்காம்பல்.

௩௭. நீங்கா மாமை யவர்தமக்கு நிறமென் றுன்னிப் புறமேபோய்
ஏங்கா நின்ற வெறிகடற்கு மெனக்குங் கொடியை யானாயே
ஓங்கா நின்ற விருளாய்வந் துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி னிடையே யெழுந்த வெண்ணெருப்பே.

வேறு.

௩௮. கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்
வடிவி னின்னமு தத்தொடு வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றுலெனைச்
சுடுதி யோகடற் றோன்றிய திங்களே. 641

௩௯. மீது மொய்த்தெழு வெண்ணில வின்கதிர்
மோது மத்திகை மென்முலை மேற்பட
ஓதி மப்பெடை வெங்கன லுற்றெனப்
போது மொய்த்தம ளிப்புரண் டாளரோ. 642

௪௦. நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து சரிந்து தளர்ந்தனள்
சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள். 643

சக. வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினாள்
வீச வீச வெதும்பினண் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ. 644

சஉ. தாய ரிற்பரி சேடியர் தாதுகும்
வீய ரித்தளிர் மெல்லணை மேனியிற்
காயெ ரிக்கரி யக்கரி யக்கொணர்ந்
தாயி ரத்தி னிரட்டி யடுக்கினார். 645

சங. கன்னி நன்மனை யிற்கமழ் சேக்கையுள்
அன்ன மின்னனை மாயின ளன்னவள்
மின்னின் மின்னிய மேனிகண் டானெனச்
சொன்ன வண்ணலுக் குற்றது சொல்லுவாம். 646

கைக்கிளைப் படலம் முற்றும்.

கஎ. கோசிகப் படலம்

க. ஏகி மன்னனைக் கண்டெதிர் கொண்டபின்
ஓகை யோடு மினிதுகொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் தனைவரும் வைகினார். 647

உ. வைகு மவ்வழி மாதவம் யாவுமோர்
செய்கை கொண்டு நடந்தெனத் தீதறு
மொய்கொள் வீரன் முளரியந் தாளினால்
மெய்கொ ணங்கை யருண்முனி மேவினான். 648

ந. வந்தெ திர்ந்த முனிவனை வள்ளலுஞ்
சிந்தை யாரவ ணங்கலுஞ் சென்றெதிர்
அந்த மில்குணத் தானெடுத் தாசிகள்
தந்து கோசிகற் சார்வுற வெய்தலும். 649

ச. கோத மன்றரு கோமுனி கோசிக
மாத வன்றனை மாமுக நோக்கியிப்
போது நீயிவட் போதவிப் பூதலம்
ஏது செய்த தவமென் றியம்பினான். 650

ரு. பூந்தண் சேக்கைப் புனிதனை யேபொரு
வேய்ந்த கேண்மைச் சதானந்த னென்றெனும்
வாய்ந்த மாதவன் மாமுக நோக்கிநூல்
தோய்ந்த சிந்தைக் கவுசிகன் சொல்லுவான். 651

சு. வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளறான்
இடித்த வெங்குரற் றாடகை யாக்கையும்
அடுத்து வேள்வியும் நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்றான். 652

எ. என்று கோசிகன் கூறிட வீறிலா
வன்ற போதனன் மாதவ நின்னருள்
இன்று தானுள தேலரி தியாதிந்த
வென்றி வீரர்க் கெனவும் விளம்பிமேல். 653

அ. எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புத சாலமும்
விள்ளும் வீயுடைப் பானுவு மேயுமெய்
வள்ளல் தன்னை மதிமுக நோக்கியே. 654

கூ. நறும லர்த்தொடை நாயக நானுனக்
கறிவு றுத்துவன் நற்கிவ் வருந்தவன்
இறையெ னப்புவிக் கீறில்பல் லாண்டெலாம்
முறையி னிற்புரந் தேயருண் முற்றினன். 655

கO. அரசின் வைகி யறனி னமைந்துழி
விரசு கானிடைச் சென்றனன் வேட்டைமேல்
உரைசெய் மாதவத் தோங்கு வசிட்டனும்
பரசு வானவன் பாலணைந் தானரோ. 656

வேறு.

கக. அருந்ததி கணவன் வேந்தற் கருங்கடன் முறையி னாற்றி
இருந்தரு டருதி யென்ன விருந்துழி யினிது நிற்கே
விருந்தினி யமைப்பெ னென்னாச் சுரபியை விளித்து நீயே
சுரந்தரு ளமிர்த மென்ன வருண்முறை சுரந்த தன்றே. 657

கஉ. அறுசுவைத் தாய வுண்டி யரசநின் னனிகத் தோடும்
பெறுகென வளிப்ப வேந்தோ டியாவருந் துய்த்த பின்றை
நறைகமழ் மலரும் வாசக் கலவையு நல்க லோடும்
உறுதுயர் தணிந்து மன்னன் மனத்துணர்ந் துரைக்க லுற்றான்.

௧௩. மாதவ வெழுந்தி லாய்நீ வயப்புடைப் படைகட் கெல்லாம்
கோதறு மமுதத் தோடு முதவுறு கொள்கை தன்னால்
தீதறு குணத்தான் மிக்க செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக் கென்கை தன்னால்.

௧௪. நிற்கிது தகுவ தன்றா னீடருஞ் சுரபி தன்னை
ஏற்கரு ளென்ற லோடு மியம்பலன் யாதும் பின்னர்
வற்கலை யுடையோன் யானோ வழங்கலன் வரும தாகிற்
கொற்கொள்வே னுழவ நீயே கொண்டகல் கென்று கூற. 660

௧௫ பணித்தது புரிவ னென்னாப் பார்த்திப னெழுந்து பொங்கிப்
பிணித்தனன் சுரபி தன்னைப் பெயர்வுறிப் பிணியை வீட்டி
மணித்தடந் தோளி னாற்குக் கொடுத்தியோ மறைகள் யாவும்
கணித்தவெம் பெரும வென்னக் கலைமறை முனிவன் சொல்வான்.

௧௬. கொடுத்திலன் யானே பற்றைக் குடைகெழு வேந்தன் றானே
பிடித்தகல் வுறா னென்னப் பெருஞ்சினங் கதுவு நெஞ்சோ
டிடித்தெழு முரச வேந்தன் சேனையை யானே யின்று
முடிக்குவென் காண்டி யென்ன முனிந்துமெய் சிலிர்த்த தன்றே.

௧௭. பப்பர ரெயினர் சீனர் சோனகர் முதல பல்லோர்
கைப்படை யதனி னோடுங் கபிலைமாட் டுதித்து வேந்தன்
துப்படை சேனை யாவுந் துணித்தனர் துணித்த லோடும்
வெப்புடைக் கொடிய மன்னன் றனையர்கள் வெகுண்டு மிக்கார்.

௧௮. சுரபியின் வலியி தன்றால் சுருதிநூ லுணர வல்ல
வரமுனி வஞ்ச மென்னா மற்றவன் சிரத்தை யின்னே
அரிகுது மென்னப் பொங்கி யடர்த்தன ரடர வன்னான்
எரியெழ விழித்த லோடு மிறந்தனர் குமர ரெல்லாம். 664

௧௯. ஐயிரு பத்தின் மைந்த ரவிந்தமை யரசன் காணா
நெய்சொரி கனலிற் காந்தி நெடுங்கொடித் தேர்க டாவிக்
கைதொடர் கணையி னோடுங் கார்முகம் வளைய வாங்கி
எய்தனன் முனியுந் தன்கைத் தண்டினை யெதிர்க வென்றான்.

௨0. கடவுளர் படைக ளீறாக் கற்றன படைகள் யாவும்
விடவிட வேந்தன் றண்டம் விழுங்கிமேல் விளங்கல் காணா
வடவரை வில்லி தன்னை வணங்கியே வழுத்த லோடும்
அடலுறு படையோன் றீயா வன்னவ னகன்றா னன்றே. 666

௨௧. விட்டனன் படையை வேந்தன் விண்ணுளோ ருலகை யெல்லாம்
சுட்டன னென்ன வஞ்சித் துளங்கினர் முனியும் வந்து
கிட்டிய படையை யுண்டு விளங்கினன் கிளரு மேனி
முட்டிவெம் பொறிகள் சிந்தப் பொருபடை முரணகன்ற. 667

௨௨. கண்டன னரசன் காணாக் கலைமறை யவர்கட் கல்லால்
திண்டிறல் வலியுந் தேசு முளவெனல் சீரி தாமோ
மண்டல முழுதுங் காக்கு மொய்ம்பொரு வலனன் றென்னா
ஒண்டவம் புரிவ னென்ன வும்பர்கோன் றிசையை யுற்றான்.

௨௩. மாண்டமா தவத்தோன் செய்த வலனையே மனத்தி னுன்னிப்
பூண்டமா தவத்த னாகி யரசர்கோன் பொலியு நீர்மை
காண்டலு மமரர் வேந்தன் றனக்குறு கருத்தி னோடும்
தூண்டினன ரம்பைமாருட் டிலோத்தமையெனுஞ்சொன் மானை

௨௪. அன்னவண் மேனி காணா வனங்கவேள் சரங்கள் பாயத்
தன்னுணர் வழிந்து காதற் சலதியி னழுந்தி வேந்தன்
பன்னரும் பகல்தீர் வுற்றுப் பருணிதர் தெரிந்த நூலின்
நன்னய முணர்ந்தோ னாகி நஞ்செனக் கனன்று நக்கான். 670

௨௫. விண்முழு தாளி செய்த வினையென வெகுண்டு நீபோய்
மண்மக ளாதி யென்று மடவா றன்னை யேவிக்
கண்மலர் சேப்ப வுள்ளங் கறுப்புறக் கடிதி னேகி
எண்மரில் வலிதென் றெண்ணும் யமன்றிசை யதனை யுற்றான்.

௨௬. தென்றிசை யதனை நண்ணிச் செய்தவஞ் செலுத்தும் வைகல்
வன்றிற லயோத்தி வாழு மன்னவன் றிரிசங் கென்பான்
தன்றுணைக் குருவை நண்ணித் தனுவொடுந் துறக்க மெய்த
இன்றெனக் கருளு கென்ன வாண்டிறந் தெய்து கென்றான். 672

௨௭. நினக்கொலா தாகி னைய நீணிலத் தியாவ ரேனும்
மனக்கினி யாரை நாடி வகுப்பன்யான் வேள்வி யென்னச்
சினக்கொடுந் திறலோய் முன்னர்த் தேசிகற் றப்பி வேறோர்
நினக்கித னாடி நின்றாய் நீசனாய் விடுதி யென்றான். 673

௨௮. மலரிலோன் மைந்தன் மைந்தின் வழங்கிய சாபந் தன்னால்
அலரியோன் றானும் நாணு மொளியிழந் தரசர் கோமான்
புலரியங் கமலம் போலும் பொலிவொரீஇ வதனம் பூவிற்
பலருமாங் கிகழ்தற் கொத்த படிவம்வந் துற்ற தன்றே. 674

௨௯. காசொடு முடியும் பூணுங் கரியவாங் கனகம் போன்றும்
தூசொடு மணியு முந்நூல் தோற்றருந் தோற்றம் போன்று
மாசொடு கருகி மேனி வனப்பழிந் திடவூர் வந்தான்
சீசியுற் றுரு மெள்ளத் திகைப்பொடு பழுவஞ் சேர்ந்தான்.675

௩0. கானிடைச் சிறிது வைகல் கழித்தொர்நாட் கௌசி கப்பேர்க்
கோனிருந் துறையுஞ் சோலை குறுகினன் குறுக லோடும்
ஈனனீ யாவன் போந்த திவ்விட மென்மு னென்ன
மேனிகழ் பொருள்கள் யாவும் விளம்பினன் வணங்கி வேந்தன்.

௩௧. இற்றதோ வெனநக் கிங்கி யானிரு வேள்வி முற்றி
மற்றல களிப்ப னென்று மாதவர் தம்மைக் கூவச்
சுற்றுறு முனிவர் யாருந் தொக்கனர் வசிட்டன் மைந்தர்
கற்றில மரசன் வேள்வி கனற்றுறை புலையற் கீவான். 677

௩௨. என்றுரைத் தியாங்க ளொல்லோ மென்றன ரென்னப் பொங்கிப்
புன்றொழிற் கிராத ராகிப் போகெனப் புகற லோடும்
அன்றவ ரெயின ராகி யடவிக டோறுஞ் சென்றார்
நின்றுமா தவத்தை முற்றி நித்தரை வருக வென்றான். 678

௩௩. அரசனும் புலையற் கின்னே யனற்றுறை முற்றி யெம்மை
விரசுக வல்லை யென்றல் விழுமிதென் றிகழ்ந்து நக்கார்
புரசைமா களிற்றின் வேந்தைப் போகநீ துறக்கம் யானே
உரைசெய்தேன் றவத்தி னென்ன வோங்கினன் விமானத் தும்பர்.

௩௪. ஆங்கவன் றுறக்க மெய்த வமரர்கள் வெகுண்டு நீசன்
ஈங்குவந் தடைவ தென்னே யிருநிலத் திழிக வென்னத்
தாங்குத லின்றி வீழ்வான் தாபத சரண மென்ன
ஓங்கின னின்னில் லென்ன வுருத்துரு மொக்க நக்கான். 680

௩௫. பேணல ரிகழ்ந்த விண்ணோர் பெரும்பத முதலா மற்றைச்
சேண்முழு தமைப்ப லென்னுச் செழுங்கதிர் கோணு டிங்கள்
மாணொளி கெடாது தெற்கு வடக்க வாய் வருக மற்றைத்
தாணுவோ டேர்வ யாவுஞ் சமைக்குவெ னென்னும் வேலை. 681

௩௬. நறைத்தரு வுடைய கோனு நான்முகக் கடவு டானும்
கறைத்தரு களனு மற்றைக் கடவுளர் பிறருந் தொக்குப்
பொறுத்தருண் முனிவ நின்னைப் புகல்புகுந் தவனைக் காத்தல்
அறத்திற னென்றும் தாரா கணத்தொடு மடைக வன்னான்.682

௩௭. அரசமா தவனீ யாதி யைந்துநாட் டென்பால் வந்துன்
புரைவிளக் கிடுக வென்னாக் கடவுளர் போய பின்றை
நிரைதவன் விரைவி னெய்தி நெடுங்கடற் கரசன் வைகும்
உரவிட மதனை நண்ணி யுறுதவ முஞற்றுங் காலை. 683

௩௮. குதைவரிச் சிலைவாட் டானைக் கோமக னம்ப ரீடன்
சுதைதரு மொழியன் வையத் துயிர்க்குயி ராய தோன்றல்
வதைபுரி புருட மேதம் வகுப்பவோர் மைந்தற் கொள்வான்
சிதைவில கனகந் தேர்கொண் டடவிக டுருவிச் சென்றான்.

௩௯. நற்றவ ரிசிகன் வைகு நனைபழு வத்தை நண்ணிக்
கொற்றவன் வினவ லோடு மியைந்தனன் குமரர் தம்முள்
பெற்றவ ளிளவ லெற்கே யென்றனள் பிதாமுன் னென்றான்
மற்றைய மைந்த னக்கு மன்னவன் றன்னை நோக்கி. 685

௪0. கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற் றொற்கமா மிழுக்கங் குன்ற
எடுத்தெனை வளர்த்த தாதைக் கென்றவற் றொழுது வேந்தன்
தடுப்பருந் தேரி னேறித் தாவினன் கடவ வல்லைச்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத் துச்சியஞ் சூழல் புக்கான். 686

௪௧. அவ்வயி னிழிந்து வேந்த னருங்கடன் முறையி னாற்றச்
செவ்விய குரிசி றானுஞ் சென்றன னியமஞ் செய்வான்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யாண்டுக் காணாக்
கவ்வையி னோடும் பாத கமலம துச்சி சேர்த்தான். 687

௪௨. விறப்பொடு வணக்கஞ் செய்த விடலையை யினிது நோக்கிச்
சிறப்புடை முனிவ னென்னே தெருமரல் செப்பு கென்ன
அறப்பொரு ளுணர்ந்த மேலோ யன்னையுந் தாதை தானும்
உறப்பொருள் கொண்டு வேந்தற் குதவின ருவகை வேண்டி. 688

௪௩. மைத்துன னோடு முன்னாள் வழங்கிய முறைமை கேளாத்
தத்துற லொழிநீ யானே தடுப்பெனின் னுயிரை யென்னாப்
புத்திரர் தம்மை நோக்கிப் போகவேந் தோடு மென்ன
அத்தகு முனிவன் கூற வவர்மறுத் தகல்கை காணா. 689

௪௪. எழுங்கதி ரவனு நாணச் சிவந்தன விருக ணெஞ்சம்
புழுங்கினன் வடவை தீய மயிர்ப்புறம் பொறியிற் றுள்ள
அழுங்கலில் சிந்தை யானீ ரடவிக டோறுஞ் சென்றே
ஒழுங்கறு புளிஞ ராகி யுறுதுய ருறுக வென்றான். 690

சரு. மாமுனி வெகுளி தன்னான் மடிகலா மைந்தர் நால்வர்
தாமுறு சவர ராகச் சபித்தெதிர் சலித்த சிந்தை
ஏமுற லொழிக வின்னே பெறுகென விரண்டு விஞ்சை
கோமரு கனுக்கு நல்கிப் பின்னருங் குணிக்க லுற்றான். 691

சசு. அரசனோ டேகி யூபத் தணைக்குபிம் மறையை யோதின்
விரசுவர் விண்ணு ளோரும் விரிஞ்சனும் விடைவ லோனும்
உரைசெறி வேள்வி முற்று முனதுயிர்க் கீறுண் டாகா
பிரசமென் றாரா யென்னப் பழிச்சொடும் பெயர்ந்து போனான்.

சஎ. மறைமுனி யுரைத்த வண்ண மகத்துறை மைந்த னாயச்
சிறையுறு கலுழ னன்னஞ் சேமுதற் பிறவு மூரும்
இறைவர்தொக் கமரர் சூழ விளவறன் னுயிரும் வேந்தன்
முறைதரு மகமுங் காத்தார் வடதிசை முனியுஞ் சென்றான்.

சஅ. வடாதிசை முனியு நண்ணி மலர்க்கர நாசி வைத்தாங்
கிடாவுபிங் கலைதா னைய விதயத்தூ டெழுத்தொன் றெண்ணி
விடாதுபற் பருவ நிற்ப மூலமா முகடு விண்டு
தடாதிருட் படலை மூடச் சலித்ததெத் தலமுந் தாவி. 694

வேறு

சகூ. எயிலெ ரித்தவன் யானையு ரித்தநாள்
பயிலு றத்தனி போர்த்தநன் பண்பெனப்
புயல்வி ரித்தெழுந் தாலெனப் பூதலம்
குயிலு றுத்திக் கொழும்புகை விம்மவே. 695

ருO. தமந்தி ரண்டுல கியாவையுந் தாவுற
நிமிர்ந்து வெங்கனற் கற்றையு நீங்குறக்
கமைந்து மாதிரங் காவலர் கண்ணொடும்
சுமந்த நாகமுங் கண்சும் புளிக்கவே. 696

ருக. திரிவ நிற்ப செகதலத் தியாவையும்
வெருவ லுற்றன வெங்கதிர் மீண்டன
கருவி யுற்ற ககனமெ லாம்புகை
துருவி யுற்றிட வும்பர்து ளங்கினார். 697

ருஉ. புண்ட ரீகனும் புட்டரு பாகனும்
குண்டை யூர்தி குலிசியு மற்றுள
அண்டர் தாமும்வந் தவ்வயி னெய்தியே
எண்ட போதனன் றன்னை யெதிர்ந்தனர். 698

௫௩. பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச்
சோதி யானுமத் தூய்மல ராளியும்
வேத பாரகர் வேறிலர் நின்னலால்
மாத போதன வென்ன வழங்கினார். 699

௫௪. அன்ன வாசகங் கேட்டுண ரந்தணன்
சென்னி தாழ்த்திரு செங்கர முங்குவித்
துன்னு நம்வினை யுற்றதென் றேங்கினான்
துன்னு தேவர்தஞ் சூழலுட் போயினார். 700

௫௫. ஈது முன்னர் நிகழ்ந்த திவன்றனை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னரு ணோர்ந்தனிர்
யாது மக்கரி தென்றன னீறிலான். 701

௫௬. என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி வீரர் வியப்பொடு வந்திட
துன்று மாதவன் றாடொழு தோங்கிய
பின்றை யம்முனி பேர்ந்தனன் றன்னிடம். 702

௫௭. முனியுந் தம்பியு மொய்ம்முறை யாற்றமக்
கினிய பள்ளியு ளெய்திய பின்னிருட்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினான். 703

௫௮. விண்ணி னீங்கிய மின்னுரு வின்முறை
பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலாம்
எண்ணி னஃதல தெண்ணறி யேனிரு
கண்ணி னுள்ளுங் கருத்தினுங் காண்பனால். 704

௫௯. வள்ளற் செங்கைக் கரியவன் வைகுமவ்
வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினாள்
அள்ளற் பூமக ளாகுங்கொ லோவென
துள்ளத் தாமரை யுள்ளுறை கின்றதே. 705

௬௦. அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானதே. 706

௬௧. பூணு லாவிய பொற்கல சங்களென்
ஏணி லாகத் தெழுதல வென்னினும்
வாணி லாமுறு வற்கனி வாய்மதி
காண லாவதொர் காலமுண் டாங்கொலோ. 707

௬௨. கன்ன லின்கருப் புச்சிலை யான்விரை
பொன்னை முன்னிய பூங்கணை வாளியால்
என்னை யெய்து தொலைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமோ. 708

௬௩. கொள்ளை கொள்ளக் கொதித்தெழு பாற்கடற்
பள்ள வெள்ள மெனப்பட ருந்நிலா
உள்ள முள்ளுற் றுயிரைத் தொடருமால்
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ. 709

௬௪. வண்ண மேகலைத் தேரொன்று வாணெடுங்
கண்ணி ரண்டு கதிர்முலை தாமிரண்
டுண்ணி வந்த நகையுமுண் டாமெனில்
எண்ணுங் கூற்றினுக்[1] கித்தனை வேண்டுமோ. 710

௬௫. ஆகு நல்வழி யல்வழி யென்மனம்
ஏகு மோவிஃ தெய்திய காரணம்
பாகு சேர்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகு மாமதற் கையுற வில்லையே. 711

௬௬. கழிந்த கங்கு லரசன் கதிர்க்குடை
விழுந்த தென்னவு மேற்றிசை யாள்சுடர்க்
கொழுந்து சேர்நுதற் கோதறு சுட்டிபோய்
அழிந்த தென்னவு மாழ்ந்தது திங்களே. 712

௬௭. வீசு கின்ற நிலாச்சுடர் வீந்ததால்
ஈச ணுமதி யேகலுஞ் சோகத்தால்
பூசு மென்கல வைப்புனை சாந்தினை
ஆசை மாத ரழித்தன ரென்னவே. 713

வேறு.

௬௮. ததையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயலுழந்து தளரும் வேலை
சிதையுமனத் திடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்

(பிரதி) 1 கூற்றெனக்.

புதையிருளி னெதிர்கின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி யெனுங்கடவு ளுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான். 714

சுசு. விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
வுதயகிரி விரிந்த தூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரு
நிறைபுனலும் பரந்து பாய
அசையாத நெடுவரையின் முகடுதொறு
மிளங்கதிர்சென் றணவ வேய்ந்த
திசையாளு மதகரிகள் சிந்தூர
மப்பியபோற் றிகழு மாதோ. 715

எ0. பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையும்
பொருள்வயினும் பிரிந்து போந்து
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகற்றுங் கற்பி னார்போல்
புண்டரிக முகமலர வகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம். 716

எக. எண்ணரிய மறையினொடு கின்னரர்க
ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர விசும்பரங்கி
னடம்புரிவா னிரவி யென்னுங்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தா
னெனவிரிந்த கதிர்க ளெல்லாம். 717

எஉ. கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச்
சிலைதடக்கைக் கொண்ட கொண்டல்
செல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா
லடிவருடி யனந்த றீர்ப்ப

அல்லாழிக் கரைகண்டா ளுயிரமா
மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி
நெடுங்கடலுட் டுயில்கின் றானே. 718

எகூ. ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம்
புடைபெயர வுறக்க நீத்த
சூழியா னையினெழுந்து தொன்னியமத்
துறைமுடித்துச் சுருதி யன்ன
வாழிமா தவற்பணிந்து மனக்கினிய
தம்பியொடும் வம்பின் மாலை
தாழுமா மணிமௌலி வாசமலர்த்
தார்ச்சனகன் சாலை சார்ந்தான். 719

கோசிகப் படலம் முற்றும்.

கறு. வரலாற்றுப் படலம்.

க முடிச்சனகர் பெருமானு முறையாலே
பெருவேள்வி முற்றிச் சுற்றும்
இடிக்குரலின் முரசியம்ப விந்திரனிற்
சந்திரன்றோய் கோயி லெய்தி
எடுத்தமணி மண்டபத்து ளண்டவத்து
முனிவரொடு மிருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனுந்தம்
பியுமருங்கி னிருப்ப மாதோ. 720

உ. இருந்தகுலக் குமரர்தமை யிருவிழியு
முகந்தழகு பருக நோக்கி
அருந்தவனை யடிவணங்கி யாரையிவ
ருரைத்திடுமி னடிக ளென்ன
விருந்தினர்க ளின்னுடைய வேள்விகா
ணியவந்தார் வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்றன் சிறுவரென
விவர்தகைமை பேச லுற்றான். 721

வேறு.

ந. ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்
பேதித்த வுயிரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமற்
சோதித்த வரிசிலையா னிலமடந்தை முலைசுரப்பச்
சாதித்த பெருந்தகையு மிவர்குலத்தோர் தராபதிகாண். 722

ச. பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார். 723

ரு. தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் தலைதுமித்தென்
வான்றருகிற் றீகொலெனக் குறையிரப்ப வரங்கொடுத்தற்
கேன்றெடுத்த சிலையினனு யிகல்புரிந்த விவர்குலத்தோர்
தோன்றலைப் பண்டிந்திரனே தொல்லேறாய்ச் சுமந்தானே. 724

சு. அரசனவன் பின்னோரை யென்னாலு மளப்பரிதால்
உரைகுறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ ரொருவன்காண்
நரைதிரைமூப் பிவையெய்தி யிந்திரனு நந்தாமற்
குரைகடலை நெடுவரையாற் கடைந்தமுதங் கொடுத்தானும். 725

எ. கருதரிய பெருங்குணத்தோ ரவர்பின்பு கணக்கிறந்தோர்
திரிபுவன முழுதாண்டு சுடர்நேமி செலநின்றார்
பொருதுறைசேர் வேலினாய் புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையி னீருண்ண வுலகாண்டோ னொருவன்காண். 726

அ. மறைமன்னு மணிமுடியு மாரமும்வா ளொடுமின்னப்
பொறைமன்னு வானவருந் தானவரும் பொருதநாள்
விறன்மன்னர் தொழுகழலா யிவர்குலத்தோன் விற்பிடித்த
அறமென்ன வொருதனியே திரிந்தமரா பதிகாத்தான். 727

கூ. இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலமுன் காத்தளித்த
பொன்னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலோ யிவர்குலத்தோன் மேற்பறவை
மன்னுயிர்க்குந் தன்னுயிரை மாறாக வழங்கினான். 728

க0. இடறோட்டி யெனநெடிய வரையுருட்டி யிவ்வுலகின்
திடறோட்டு மெனக்கிடந்த வகைக்கிரங்கித் தெவ்வேந்தர்
உடறோட்டு நெடுவேலா யிவர்குலத்தோ ருவரிநீர்க்
கடறோட்டா ரெனின்வேறோர் கட்டுரையும் வேண்டுமோ. 729

கக. தூநின்ற சுடர்வேலோ யனந்தனே சொல்லானேல்
யானின்று புகழ்ந்துரைத்தற் கெளிதோயே டவிழ்கொன்றைப்
பூநின்ற மவுலியையும் புக்களைந்த புனற்கங்கை
வானின்றுகொணர்ந்தோனு மிவர்குலத்தோர் மன்னவன்காண்.

கஉ. கயற்கடல்சூ ழுலகெல்லாங் கைநெல்லிக் கனியாக்கி
இயற்கைநெறி முறையாலே யிந்திரற்கு மிடரியற்றி
முயற்கறையின் மதிக்குடையா யிவர்குலத்தோன் முன்னொருவன்
செயற்கரிய பெருவேள்வி யொருநூறுஞ் செய்தமைத்தான்.

கங. சந்திரனை வென்றானு முருத்திரனைச் சாய்த்தானும்
துந்துவெனுந் தானவனைச் சுடுசரத்தாற் றுணித்தானும்
வந்தகுலத் திடைவந்த ரகுவென்பான் வரிசிலையால்
இந்திரனை வென்றுதிசை யிருநான்குஞ் செலுத்தினான்.

கச. வில்லென்னு நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவ லிந்துமதி யெனுந்திருவை
அல்லென்னு மணிநிறத்த வரியென்ன வயனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணியாக வைத்தானே. 733.

கரு. அயன்புதல்வன் றயாதனை யறியாதா ரில்லையவன்
பயந்தகுலக் குமரரிவர் தமையுள்ள பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரையேற நான்முகற்கு மரிதாகும்
இயந்துவைத்த கடைத்தலையா யானறிந்த படிகேளாய். 734

கசு. துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான். 735

கஎ. சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்று தொடர்ந்தணுகி முன்வந்த
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினான். 736

கஅ. தார்காத்த நறுங்குஞ்சித் தனயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் மணிவயிற்றில் வந்திலரால்
நீர்காத்த கடல்புடைசூழ் நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான். 737

ககூ. அவ்வுரைகேட் டம்முனியு மருள்சுரந்த வுவகையினால்
இவ்வுலக மன்றியே யெவ்வுலகுங் காத்தளிக்கும்
செவ்வியிளங் குருசிலரைத் தருகின்றே னினித்தேவர்
வவ்விநுகர் பெருவேள்விக் குரியவெலாம் வருகென்றான். 738

௨௦. காதலரைத் தருவேள்விக் குரியவெலாங் கடிதமைத்தான்
மாதவரிற் பெரியோனு மற்றதனை முற்றுவித்தான்
சோதிநிறப் பரிகலத்துச் சுதையனைய வெண்சோறோர்
பூதகணத் தரசேந்தி யனனின்றும் புறப்பட்ட. 739

௨௧. பொன்னின்மணிப் பரிகலத்திற் புறப்பட்ட வின்னமுதைப்
பன்னுமறைப் பொருடேர்ந்த பெரியோன்றன் பணியினால்
தன்னனைய நிறைகுணத்துத் தயரதனும் முறையாலே
நன்னுதலார் மூவருக்கு நாலுகூ றிட்டீந்தான். 740

௨௨. விரிந்திடுதீ வினைபெயர மெய்ம்மைசெய்நல் வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த வருள்பெருகு மறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

௨௩. தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள். 742

௨௪. அருவலிய திறலினரா யறங்கெடுக்கு மடலரக்கர்
வெருவருதிண் டிறலார்கள் வில்லேந்து மெனிற்செம்பொற்
பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையு மிருவர்க்கங் கிளையாளு மீன்றெடுத்தாள். 743

௨௫. தலையான பேருணர்விற் கலைமகட்குந் தலைவராய்ச்
சிலையானை தேர்வேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்
கலையாழிக் கதிர்த்திங்க ளுதயத்திற் கலித்தோங்கும்
அலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு மனையார்கள்[1]. 744

௨௬. திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றெசரதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண். 745

௨௭. ஈங்கிவரா லென்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனாய்ப்
பூங்கழலாய் கொண்டுபோய் வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றற் றாடகையே தலைப்பட்டாள். 746

(பிரதி) 1 மறை நான்கும் வல்லார்கள்.

௨அ. அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கைய
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி வானுருவி மண்ணுருவிற் றுருவாளி. 747

௨௯. செக்கர்நிறத் தெரிகுஞ்சிச் சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனவோ முடிவில்லை யோரம்பி னொடுமராக்கி
மக்களிலங் கொருவன்போய் வான்புக்கான் மற்றையவன்
புக்கவிட மறிந்திலேன் போந்தனனென் வினைமுடித்தே. 748

௩0. ஆய்ந்தோர்க்கு முணர்வரிய வயற்கையு மறிவரிய
காய்ந்தேவி னுலகனைத்துங் கடலோடு மலையோடும்
தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈந்தேனு மனமுட்க விவற்கேவல் செய்குநவால்[1]. 749

௩௧. கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுவென்ற தெனப்பொலிந்த பொலங்கழற்காற் பொடிகண்டாய்
காதலென்ற னுயிர்மேலு மிக்கரியோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு மெனவுரைத்தான். 750

வரலாற்றுப் படலம் முற்றும்.

௧௧. கார்முகப் படலம்.

௧. மாற்றமா முரைப்பதென் மாய விற்குநான்
தோற்றவா றெனமனந் துளங்கு கின்றதால்
நோற்றன ணங்கையு நொய்தி னையன்வில்
ஏற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன். 751

௨. என்றன னென்றுதன் னெதிர்நின் றோரையக்
குன்றுறழ் வரிசிலை கொணர்மி னீண்டென
நன்றென வணங்கினர் நால்வ ரோடினர்
பொன்றிணி கார்முகச் சாலை புக்கனர். 752

௩. புக்கனர் சனகர்கோன் பொருவி னீர்கடாம்
ஒக்கவே வில்லினை யுறத்த டுத்தெடுத்
திக்கணத் தெய்துவி ரென்ற னன்னென
மிக்கவ ரவ்வுரை விளம்பி னாரரோ. 753

(பிரதி) 1 மீந்தேனுன் மனமுட்கா திவற்கேவல் செய்தனவால்,

ச. உறுவலி யனைவரு மொத்த மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதி னாயிர ரளவி லாற்றலர்
தறிமறத் திடையிடை தண்டிற் றாங்கினர். 754

ரு. நெடுநில மகண்முது காற்ற நின்றுயர்
தடநிமிர் வடவரை தானு நாணுற
இடமிலை யுலகென வந்த தெங்கணும்
கடல்புரை திருநக ரிரைத்துக் காணவே. 755

சா. சங்கொடு சக்கரந் தரித்த செங்கைய
சிங்கவே றல்லனே லிதனைத் தீண்டுவான்
எங்குள னொருவனின் றேற்றி னிச்சிலை
மங்கைதன் றிருமணம் வாழு மாலென்பார். 756

எ. கைதவந் தனுவெனல் கனகக் குன்றென்பார்
எய்தவன் யாவனோ வேற்றிப் பண்டென்பார்
செய்ததத் திசைமுகன் றீண்டி யன்றுதன்
மொய்தவப் பெருமையின் முயற்சி யாலென்பார். 757

அ. திண்ணெடு மேருவைத் திரட்டிற் றேயென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரச னேயென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்த மத்தென்பார்
விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார். 758

கூ. என்னிது கொணர்கென வியம்பி னானென்பார்
மன்னவ ருளர்கொலோ மதிகெட் டாரென்பார்
முன்னையூழ் வினையினான் முடிக்க லாமென்பார்
கன்னியு மிச்சிலை காணு மோவென்பார். 759

க0. இச்சிலை யுதைத்தகோற் கிலக்கம் யாதென்பார்
நச்சிலை நங்கைமே னாட்டும் வேந்தென்பார்
நிச்சய மெடுக்குங்கொ னேமியா னென்பார்
சிற்சிலர் விதிசெய்த தீமை யாமென்பார். 760

கக. மொய்த்தன ரின்னண மொழிய மன்னன்முன்
உய்த்தனர் நிலமுது குளுக்கிக் கீழுற
வைத்தனர் வாங்குநர் யாவ ரோவெனக்
கைத்தலம் விதிர்த்தனர் கண்ட வேந்தரே. 761

௨௦. சித்திரமிங் கிதுவென்னத் தேக்குண்டு செய்வினையால்
வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப
அத்திருவை யமரர்குல மாதரித்தா ரெனவறிஞ
இத்திருவை நிலவேந்த ரெல்லாரு மாதரித்தார். 770

௨௧. கலித்தானைக் கடலோடுங் கைத்தானக் களிற்றரசர்
ஒலித்தாழி யெனவந்து மணமொழிந்தார்க் கெதிருடுத்த
புலித்தானைக் களிற்றுரிவைப் போர்வையான் வரிசிலையை
வலித்தானே மங்கைதிரு மணத்தானென் றியாம்வலித்தேம். 771

௨௨. வல்வில்லுக் காற்றார்கண் மாரவேள் வளைகரும்பின்
மெல்வில்லுக் காற்றார்கள் தாமெம்மை விளிவுற்றார்
கல்வில்லோ டுலகளித்த கனங்குழையைக் காதலித்துச்
சொல்வில்லா லுலகளிப்பாய் போர்செய்யத் தொடங்கினார். 772

௨௩. இம்மன்னன் பெருஞ்சேனை யிவதனை மேற்கொண்ட
செம்மன்னர் புகழ்வேட்ட பொருளேபோற் சிறந்ததால்
பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலைக் காதலித்த
அம்மன்னர் சேனைதம தாசைபோ லாயிற்றே. 773

௨௪. மற்காக்கு மணிப்புயத்து மன்னனிவன் மழவிடையோன்
விற்காக்கும் வாளமரின் மெலிகின்றா னெனவிரங்கி
எற்காக்கு முடிவிண்ணோர் படையீந்தா ரெனவேந்தர்
அற்காக்கை கூகையைக்கண் டஞ்சினவா மெனவகன்றார். 774

௨௫. அன்றமுத லின்றளவு மாருமிந்தச் சிலைமருங்கு
சென்றமிலர் போயொளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றமினி மணமில்லை யென்றிருந்தோ மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான். 775

௨௬. நினைந்தமுனி பகர்ந்ததெல்லா நெறியுன்னி யருந்தவனும்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்ததனை நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான். 776

வேறு.

௨௭. பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகண் முப்பகை வென்றார். 777

உஅ. தூய தவங்க டொடங்கிய தொல்லோன்
ஏயின வல்வி லிறுப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிர மல்வி லனங்க னிறுத்தான். 778

உகூ. காணு நெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்ப்
பாணி யிவன் படர் செங்கை புகாதேல்
வாணுதல் மங்கையும் வாழ்வில ளென்பார். 779

௩0. கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
இருங்களி றிச்சிலை யேற்றில னாயின்
நரந்த நறைக்குழ னங்கையு நாமும்
முருங்கெரி யுட்புக மூழ்குது மென்பார். 780

௩க. வள்ளன் மனத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
[1] வெள்ள மனத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார். 781

௩உ. ஞான முனிக்கொரு நாணிலை யென்பார்
கோனவ னிற்கொடி யோரிலை யென்பார்
மானவ னிச்சிலை கால்வளை யானேற்
பீனத னத்திவள் பேறிலி யென்பார். 782

௩௩. தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான். 783

௩ச. ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதையெ னும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலையி தென்ன வெடுத்தான். 784

௩ரு. தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினை யாரும றிந்திலர் கையில்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார். 785

(பிரதி) 1 வெள்ளை மனத்தவர்.

வேறு.

௩௬. ஆரிடைப் புகுது நாமென் றமரர்கள் கமலத் தோன்றன்
பேருடை யண்ட கோளம் பிளந்ததா மென்ன நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை பகர்வதென் பாரைத் தாங்கி
வேரெனக் கிடந்த நாக மிடியென வெருவிற் றன்றே. 786

௩௭. பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமரு கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங் கூறின வாசி கொற்ற
நாமவேற் சனக னின்றென் நல்வினை பயந்த தென்றான். 787

௩௮. மாலையு மிழையுஞ் சாந்துஞ் சுண்ணமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னுங் காசும்வண் டுகிலும் வீசிப்
பால்வளை வயிர்க ளார்ப்பப் பல்லியந் துவைப்ப முந்நீர்
ஓலம்வந் துவாவுற் றென்ன வொலிநகர் கிளர்ந்த தன்றே. 788

௩௯. நல்லியன் மகர வீணைத் தேனுக நகையுந் தோடும்
வில்லிட வாளும் வீச வேல்கிடந் தனைய நாட்டத்
தெல்லியன் மதிய மன்ன முகத்திய ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவ நோக்குந் தோகையி னாடி னாரே. 789

௪0. உண்ணற வருந்தி னாரிற் சிவந்தொளிர் கருங்கண் மாதர்
புண்ணுறு புலவி நீக்கிக் கொழுநரைத் தழுவிக் கொண்டார்
வெண்ணிற மேக மேன்மேல் விரிகடல் பருகு மாபோல்
மண்ணுறு வேந்தன் செல்வம் வறியவர் முகந்து கொண்டார்.

௪௧. வயிரியர் மதுர கீத மங்கைய ரமுத கீதம்
செயிரியர் மகர யாழின் றேம்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளை வேயின் கீத மென்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லா மோவிய மென்ன நின்றார். 791

௪௨. ஐயன்வில் லிறுத்த வாற்றல் காணிய வமரர் நாட்டில்
தையலா ரிழிந்து பாரின் மகளிரைத் தழுவி நின்றார்
செய்கையின் வடிவி னாடல் பாடலிற் றெளிதந் தேற்றார்
மையரி மலர்க்க ணோக்கி யிமைத்தலு மயக்கந் தீர்ந்தார். 792

௪௩. தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புயலவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார் மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காணு மென்பார். 793

௪௪. நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்ன தேயால்
தம்பியைக் காணீ ரென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சு மென்பார். 794

௪௫. இற்றிவ ணின்ன தாக மதியொடு மெல்லி நீங்கப்
பெற்றுயிர் பின்னுங் காணு மாசையிற் சிறிது பெற்ற
சிற்றிடைப் பெரிய கொங்கைச் சேயரி நெடிய வாட்கட்
பொற்றொடி மடந்தைக் கப்பா லுற்றது புகல லுற்றாம். 795

௪௬. ஊசலா டுயிரி னோடு முருகுபூம் பள்ளி நீங்கிப்
பாசிழை மகளிர் சூழப் போயொரு பளிக்கு மாடக்
காசறு மரையின் பொய்கைச் சந்திர காந்த மீன்ற
தேசுநீர் தெளித்த மென்பூஞ் சேக்கைய தருகு சேர்ந்தாள்.

௪௭. பெண்ணிவ ளுற்ற தென்னும் பெருமையா லருமையான
வண்ணமு மிலைக ளாலே காட்டலால் வாட்டந் தீர்த்த
தண்ணறுங் கமலங் காளென் றளிர்நிற முண்ட கண்ணன்
உண்ணிறங் காட்டி னீரென் னுயிர்தர வுலோவி னீரே. 797

வேறு.

௪௮. நாணு லாவு மேரு வோடு நாணு லாவு பாணியும்
தூணு லாவு தோளும் வாளி யூடு லாவு தூணியும்
வாணி லாவி னூலு லாவு மாலை மார்பு மீளவும்
காண லாகு மாகி லாவி காண லாகு மேகொலாம். 798

௪௯. விண்ட லங்கி டந்தி லங்கு திங்க ளோடு மீதுசூழ்
வண்ட லம்ப லங்க றங்கு பங்கி யோடும் வார்சிலைக்
கொண்ட லொன்றி ரண்டு கண்ணின் மொண்டு கொண்டெ னாவியை
உண்ட துண்டெ னெஞ்சி னின்று முண்ட தென்று முண்டரோ.

௫௦. பஞ்ச ரங்கு தீயி னாவி பற்றி யோடு கொற்றவா
வெஞ்ச ரங்க ளஞ்ச ரங்க வெய்ய காம னெய்யவே
சஞ்ச லங்க லந்த போது தைய லாரை யுய்யவந்
தஞ்ச லஞ்ச லென்கி லாத வாண்மை யென்ன வாண்மையே.

௫௧. இளைக்க லாத கொங்கை காளெ ழுந்து விம்மி யென்செய்தீர்
முளைக்க லாம திக்கொ ழுந்து போலும் வாண்மு கத்தினன்
வளைக்க லாத விற்கை யாளி வள்ளன் மார்பி னுள்ளுறத்
திளைக்க லாகு மாகி லான செய்த வங்கள் செய்ம்மினே. 801

ருஉ. எங்கு நின்றெ ழுந்த திந்த விந்து வந்தெ னெஞ்சுலாம்
அங்கியன் றனங்க னெய்த வம்பின் வெந்த சிந்தைநோய்
பொங்கு கின்ற கொங்கை மேல்வி டம்பொ ழிந்த தென்னினும்
கங்குல் வந்த திங்க ளன்ற கங்க ளங்க மில்லையே. 802

ருங. அடர்ந்து வந்த னங்க னெஞ்ச முன்று சிந்து மம்பெனும்
விடங்கு டைந்து மெய்யு ணின்று வெந்திடா தழுந்தவே
கடந்து தைந்த காரி யானை யன்ன காளை பின்னடந்
துடன்றொ டர்ந்து போன வாவி யுய்ந்த வாவெ னுள்ளமே.

ருச. விண்ணு ளேயெ ழுந்த மேக மார்பி னூலின் மின்னொடும்
மண்ணு ளேயி ழிந்த தென்ன வந்து போன மைந்தனார்
எண்ணு ளேயி ருந்த போதும் யாவ ரென்று தேர்கிலென்
கண்ணி ளேயிருந்த போது மென்கொல் காண்கி லாதவே.

ருரு. பெய்க டற்பி றந்த யல்பி றக்கொ ணாம ருந்துபெற்
றைய பொற்க லத்தொ டங்கை வைத்திருந்த வாதர்போல்
மொய்கி டக்கு மண்ண ரேண்மு யங்கி டாது முன்னமே
கைக டக்க விட்டி ருந்து கட்டு ரைப்ப தென்கொலோ. 805

ருசா. என்று கொண்டு நைந்து நைந்தி ரங்கி விம்மி விம்மியப்
பொன்றி ணிந்த கொங்கை மங்கை யிடரின் மூழ்குபோழ்தின்வாய்க்
குன்ற மொன்று சிலைமு ரிந்த கொள்கை கண்டு குளிர்மனத்
தொன்று முண்கண் மதிமு கத்தொ ருத்தி செய்த துரைசெய்வாம்.

வேறு.

ருஎ. வடங்களுங் குழைகளும் வான வில்லிடத்
தொடர்ந்துபூங் குழல்களுஞ் துகிலுஞ் சோர்தர
நுடங்கிய மின்னென நொய்தி னெய்தினாள்
நெடுந்தடங் கிடந்தகண் ணீல மாலையே. 807

ருஅ. வந்தடி வணங்கிலள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனத் தொழுது சொல்லுவாள். 808

ருகூ. கயரத துரகமாட் கடலன் கல்வியான்
தயரத னெனும்பெயர்த் தனிச்சென் னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்றரு மதனற்கும் வடிவு மேன்மையான். 809

௬௦. மராமர மிவையென வளர்ந்த தோளினான்
அராவணை யமலனென் றயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினான். 810

௬௧. பூணியன் மொய்ம்பினன் புனித னெய்தவில்
காணிய வந்தன னென்னக் காவலன்
ஆணையி னடைந்தவில் லதனை யாண்டகை
நாணினி தேற்றினா னடுங்கிற் றும்பரே. 811

௬௨. மாத்திரை யளவிற்றாண் மடுத்து முன்பயில்
சூத்திரி யிதுவெனத் தோளின் வாங்கினான்
ஏத்தின ரிமையவ ரிழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே. 812

௬௩. கோமுனி யுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணினா னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய நீங்கினாள்
வாபமே கலையினும் வளர்ந்த தல்குலே. 813

௬௪. இல்லையே நுசுப்பென்ப ருண்டுண் டென்னவும்
மெல்லிய முலைகளும் விம்ம விம்முவாள்
சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்தி லுன்னுவாள். 814

௬௫. ஆசையா லயர்பவ ளன்ன ளாயினாள்
பாசடைக் கமலத்தோன் படைத்த வில்லிறும்
ஓசையிற் பெரியதோ ருவகை யெய்தியக்
கோசிகற் கொருமொழி சனகன் கூறுவான். 815

௬௬. உரைசெயெம் பெருமவுன் புதல்வன் வேள்விதான்
விரைவினின் றொருபகன் முடித்தல் வேட்கையோ
முரசெறிந் ததிர்கழன் முழங்கு தானையவ்
வரசையு மிவ்வழி யழைத்தல் வேட்கையோ. 816

௬௭. மல்லலா னவ்வுரை பகர மாதவன்
ஒல்லையி லவனும்வந் துறுத னன்றென
எல்லையி லுவகையி னிசைந்த வாறெலாஞ்
சொல்லுகென் றோலையுந் தூதும் போக்கினான். 817

கார்முகப் படலம் முற்றும்.

௨௦. எழுச்சிப் படலம்.

க. கடுகிய தூதருங் காலிற் காலிற்சென்
றிடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினார்
அடியிணை தொழுவிட மன்றி மன்னவர்
முடியொடு முடிபொரு வாயின் முன்னினார். 818

௨. முகந்தனர் திருவருண் முறையி னெய்தினார்
திகழ்ந்தொளிர் கழலிணை தொழுது செல்வனைப்
புகழ்ந்தன ரரசனின் புதல்வர் போயபின்
நிகழ்ந்ததை யிதுவெனா நெடிது கூறினார். 819

௩. கூறிய தூதருங் கொணர்ந்த வோலையை
ஈறில்வண் புகழினா யிதுவ தென்றனர்
வேறொரு புலமகன் விரும்பி வாங்கினான்
மாறதிர் கழலினான் வாசி யென்றனன். 820

௪. இலைமுகப் படத்தவ னெழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில் செவியிற் சார்தலும்
நிலைமுக வலயங்க ணிமிர்ந்து நீங்கின
மலையென வளர்ந்தன வயிரத் தோள்களே. 821

௫. வெற்றிவேன் மன்னவன் றக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றவே ழுலகையும் வென்ற மூரிவில்
இற்றபே ரொலிகொலா மிடித்த தீங்கென்றான். 822

௬. என்றுரைத் தெதிரெதி ரிடைவி டாதுநேர்
துன்றிய கனைகழற் றூதர் கொள்கெனாப்
பொன்றிணி கலன்களுந் தூசும் போக்கினான்
குன்றென வுயரிய குவவுத் தோளினான். 823

௭. வானவர் செய்தநற் றவத்தி னால்வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலை நோக்கிநம்
சேனையு மாதருஞ் செல்க முந்தெனா
ஆனைமே லணிமுர சறைகென் றேவினான். 824

௮. வாம்பரி தருதிரைக் கடலை வள்ளுவன்
தேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான். 825

௯. விடைபொரு நடையினான் சேனை வெள்ளமோர்
இடையிலை யுலகினி லென்ன வீண்டிய
கடையுக முடிவினி லெவையுங் கால்படப்
புடைபெயர் கடலென வெழுந்து போயதே. 826

௧0. சில்லிட முலகெனச் செறிந்த தேர்களும்
புல்லிடு சுடரெனப் பொலிந்த வேந்தரால்
எல்லிடு கதிர்மணி யெறிக்கு மோடையால்
வில்லிடு முகிலெனப் பொலிந்த வேழமே. 827

௧௧. காணிமிர்ந் தொளிர்குடை கணக்கி லோதிமம்
பால்விரிந் தனவெனப் பறப்ப போன்றன
மேல்விரிந் தெழுகொடிப் படலம் விண்ணெலாம்
தோலுரிந் துகுவன போன்று தோன்றுமே. 828

௧௨. நுடங்கிய துகிற்கொடி நூழைக் கைம்மலைக்
கடங்கலுழ் சேனையைக் கடலி தாமென
இடம்பட வெங்கணு மெழுந்து வெண்முகில்
தடம்புனல் பருகிடத் தாழ்வ போன்றவே. 829

௧௩. இடையிடை யிளவெயி லெறிக்கு மவ்வெயில்
தழையிடை நிழல்கெடத் தவழு மத்தழை
மழையிடை யெழில்கெட மலரு மம்மழை
குழைவுற முழங்கிடுங் குழாங்கொள் பேரியே. 830

௧௪. மன்மணிப் புரவிகள் மகளி ரூர்வன
அன்னமுந் தியதிரை யாறு போன்றன
பொன்னணி புணர்முலைப் புரிமென் கூந்தலார்
மின்னென மடப்பிடி மேகம் போன்றவே. 831

௧௫. இணையெடுத் திடையிடை நெருக்கி யேழையர்
துணைமுலைக் குங்குமச் சுவடு மாடவர்
மணிவரைப் புயங்களிற் சாந்து மாகிமேல்
அணையெனப் பொலிந்ததக் கடல்செ லாறரோ. 832

௧௬. முத்தினான் முழுநிலா வெறிக்கு மொய்ம்மணிப்
பத்தியா லிளவெயில் பரப்பும் பாகினும்
தித்தியா நின்றசொற் சிவந்த வாய்ச்சியர்
உத்தரா சங்கமிட் டொளிக்குங் கூற்றமே. 833

கஎ. வில்லினர் வாளினர் வெறித்த குஞ்சியர்
கல்லிணைப் பழித்துயர் கனகத் தோளினர்
வல்லியன் மருங்குலார் மருங்கு மாப்பிடி
புல்லிய களிறென மைந்தர் போயினார். 834

கஅ. மன்றலம் புதுமலர் மழையிற் சூழ்ந்தெனத்
துன்றிருங் கூந்தலார் முகங்க டோன்றலால்
ஒன்றல பலமதி யூர்வி மானம்போல்
சென்றன தரளவான் சிவிகை யீட்டமே. 835

கசு. மொய்திரைக் கடலென முழங்கு மூக்குடைக்
கைகளிற் றிசைநிலைக் களிற்றை யாய்வன
மையனூற் றிழிமத மழைய ருமையால்
தொய்யலைக் கடந்தில சூழி யானையே. 836

உ0. சூருடை நிலையெனத் தேய்ந்துந் தேய்கிலா
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடுஞ் சதியொடுந் தாவு மாயினும்
பாரிடை மிதிக்கில பரியின் வெள்ளமே. 837

உக. ஊடிய மனத்தின ருறுத நோக்கினர்
நீடிய வுயிர்ப்பினர் நெரிந்த நெற்றியர்
தோடவிழ் கோதையுந் துறந்த கூந்தலார்
ஆடவ ருயிரென வருகு போயினார். 838

உஉ. மாறெனத் தடங்களைப் பொருது மாமரம்
ஊறுபட் டிடையிடை யொடியச் சாய்த்துராய்
ஆறெனச் செல்வன வருவி பாய்கவுட்
டாறெனக் கனலுகு தறுகண் யானையே. 839

உங. உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
அழுந்திய வுயிர்க்கெலாங் கொழுகொம் பானவன்
எழுந்தில னெழுந்திடைப் படருஞ் சேனையின்
கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலை கூடிற்றே. 840

உச. கண்டவர் மனங்கள்கை கோப்ப வேறிய
வண்டமர் கோதையர் வதன ராசியால்
பண்டிகள் பண்டிகள் பரிவிற் செல்வன
புண்டரீ கத்தடம் போவ போன்றவே. 841

௨௫. பாண்டிலின் வைத்தவோர் பாவை தன்னொடும்
ஈண்டிய வன்பினோ டேகு வானிடை
காண்டலு நோக்கிய கடைக்க ணஞ்சனம்
ஆண்டகைக் கினியதோ ரமுத மாயிற்றே. 842

௨௬. பிள்ளைமா னோக்கியைப் பிரிந்து போகின்றான்
அள்ளனீர் மருதவைப் பதனி னன்னத்தின்
புள்ளுமத் தாமரைப் பூவு நோக்கினின்
றுள்ளமுந் தானுமே யூச லாடினான். 843

வேறு.

௨௭. அங்கண் ஞாலத் தரசு மிடைந்தவா
பொங்கு வெண்குடை சாமரை போர்த்தலால்
கங்கை யாறு கடுத்தது காரெனச்
சங்கு பேரி முழங்கிய தானையே. 844

௨௮. அமர ரஞ்சொல் லணங்கனை யாருயிர்
கவருங் கூர்நுதிக் கண்ணனுங் காலவேல்
குமரர் நெஞ்சு குளிப்ப வழங்கலால்
சமர பூமியு மொத்தது தானையே. 845

௨௯. தோண்மி டைந்தன தூண மிடைந்தென
வாண்மி டைந்தன[1] வால்மின்மி டைந்தெனத்
தாண்மி டைந்தன[2] தம்மி மிடைந்தென
ஆண்மி டைந்தன வாளிமி டைந்தென. 846

௩௦. வார்கு லாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கி லாது பிறங்கு முகத்தினன்
தேர்கி லானெறி யந்தரிற் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினான். 847

௩௧. சுழிகொள் பாய்பரி துள்ளவொ ரஞ்சொலாள்
வழுவி வீழலுற் றாளையோர் மைந்தன்றான்
எழுவி னீள்புயத் தாலெடுத் தேந்தினான்
தழுவி நின்றொழிந் தான்றரை மேல்வையான். 848

௩௨. துணைத்த தாமரை நோவத் தொடர்ந்தடை
கணைக்க ருங்கணி னாளையோர் காளைதான்
பணைத்த வெம்முலைப் பாய்மத யானையை
அணைத்து நங்கைக் ககலிட மில்லென்றான். 849

(பிரதி) 1. மின்னின் மய்யங்கிட 2. தம்மின் மயங்கிட

௩௩. சுழியுங் குஞ்சி மிசைச்சுரும் பார்த்திடப்
பொழியு மாமத யானையிற் போகின்றான்
கழிய கூரிய வென்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையு நோக்கினான். 850

௩௪. தரங்க வார்குழற் றாமரைச் சீறடிக்
கருங்கண் வாளுடை யாளையோர் காளைதான்
நெருங்கு பூண்முலை நீள்வளைத் தோளினிர்
மருங்கு லெங்கு மறந்தது நீரென்றான். 851

௩௫. கூற்றம் போலுங் கொலைக்கண்ணி னாலன்றி
மாற்றம் பேசு கிலாளைபோர் மைந்தன்றான்
ஆற்று நீரிடை யங்கைக ளாலெடுத்
தேற்று வாருமை யாவர்கொ லாமென்றான். 852

௩௬. தள்ள ரும்பரந் தாங்கிய வொட்டகம்
நெள்ள ருங்குழை யாவையுந் தின்கில
உள்ள மென்னத்தம் வாயு முலர்ந்தன
கள்ளூண் மாந்தரிற் கைப்பன தேடியே. 853

௩௭. அரத்த நோக்கின ரற்றிரண் மேனியர்
பரித்த காவினர் பப்பர ரேகினார்
திருத்து கூடத்தைத் திண்கணை யத்தொடும்
எருத்தின் மாகளி றேந்திய தென்னவே. 854

௩௮. பித்த யானை பிணங்கிப் பிடியிற்கை
வைத்த மேலிருந் தஞ்சிய மங்கையர்
எய்த்தி டுக்கணுற் றார்புதைத் தாரிரு
கைத்த லங்களிற் கண்ணடங் காமையே. 855

௩௯. வாம மேகலை யாரிடை வாலதி
பூமி தோய்பிடிச் சிந்தரும் போயினார்
காமர் தாமரை நாண்மலர்க் கானத்துள்
ஆமை மேல்வருந் தேரைய தாயரோ. 856

௪0. இம்பர் நாட்டின் றரமல்ல வீங்கிவள்
உம்பர் கோமகற் கென்கின்ற தொக்குமால்
கம்ப மாவரக் கால்கள் வளைத்தொரு
கொம்ப னாளைக்கொண் டோடுங் குதிரையே. 857

௪௧. சந்த வார்குழல் சோர்ந்தவை தாங்கலார்
சிந்து மேகலை சிந்தையுஞ் செய்கிலார்
எந்தை வில்லிறுத் தானெனு மின்சொலான்
மைந்தர் பேச மனங்களித் தோடுவார். 858

௪௨. குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய வஞ்சிய வந்தணர் முந்தினார். 859

௪௩. நாறு பூங்குழ னங்கையர் கண்ணினின்
றாறு நேர்வந் துருவு வெளிப்பட
மாறு கொண்டனை வந்தனை யாகில்வந்
தேறு தேரெனக் கைக ளிழிச்சுவார். 860

௪௪. குரைத்த தேருங் களிறுங் குதிரையும்
நிரைத்த வார்முர சுந்நிறைத் தெங்கணும்
இரைத்த பேரொலி யாலிடை யாவரும்
உரைத்து ணர்ந்தில ரூமரி னேகினார். 861

௪௫. நுட்சி லம்பி வலந்தன நுண்டுகிற்
கட்சி லம்பு கருங்குழ லார்குழூ
உட்சி லம்பு சிலம்ப வொதுங்கலால்
புட்சி லம்பிடு பொய்கையும் போன்றதே. 862

௪௬. தெண்டி ரைப்பர வைத்திரு வன்னவர்
நுண்டி ரைப்புரை நோக்கிய நோக்கினைக்
கண்டி ரைப்பன வாடவர் கண்களை
வண்டி ரைப்பன வானை மதங்களே. 863

௪௭. உழைக லித்தன வென்ன வுயிர்த்துணை
நுழைக லிக்கருங் கண்ணியர் நூபுரம்
இழைக லித்தன வின்னிய மாவெழூ
மழைக லித்தென வாசி கலித்தவே. 864

௪௮. மண்க ளிப்ப நடப்பவோர் வாணுதல்
உண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பியெ னச்சிலர்
கண்க ளிப்பன காமன்க ளிக்கவே. 865

சகூ. எண்ணு மாத்திர மும்மரி தாமிடை
வண்ண மாத்துவர் வாய்க்கனி வாய்ச்சியர்
திண்ண மாத்தொளிர் செவ்விள நீரிழி
சுண்ண மார்த்தன தூளியு மார்த்தவே. 866

ருo. சித்தி ரத்தடந் தோண்மைந்தர் மங்கையர்
உய்த்து ரைப்பி னிரப்ப வுலப்பிலர்
இத்தி றத்தின ரெத்த னையோபலர்
மொய்த்தி ரைத்து வழிக்கொண்டு முன்னினர். 867

வேறு.

ருக. குசையுறு பரியுந் தேரும் வீரருங் குழுமி யெங்கும்
விசையொடு கடுகப் பொங்கி வீங்கிய தூளி விம்மிப்
பசையுறு துளியின் றுரைப் பசுந்தொளை யடைத்த மேகம்
திசைதொறு நின்ற யானை மதத்தொளை செறிந்த தன்றே. 868

ருஉ. கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் பற்றிச்
சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
ஆடகத் தோடை யானை யழிமதத் திழுக்க லாற்றிற்
பாடகக் காலி னாரைப் பயப்பயக் கொண்டு போனார். 869

ருங. செய்களின் மடுவி னன்னீர்ச் சிறைகளி னிறையப் பூத்த
நெய்தலுங் கமலப் பூவு நெகிழ்ந்தசெங் குமுதப் போதும்
கைகளு முகமும் வாயுங் கண்களுங் காட்டக் கண்டு
கொய்திவை தருக வென்று கொழுநரைத் தொழுகின் றாரும்.

ருச. பந்தியம் புரவி நின்றும் பாரிடை யிழிந்து வாசக்
கொந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தக்
சந்தநுண் டுகிலும் வீழத் தளிர்க்கையா லணைத்துச் சார
வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார். 871

ருரு. குடையொடு களிறுந் தொங்கற் குழாங்களுங் கொடியின்காடும்
இடையிடை மயங்கி யெங்கும் வெளிகாந் திருளைச் செய்யப்
படைகளு முடியும் பூணு மாரமும் பகலைச் செய்ய
இடையொரு கணத்தி னுள்ளே யிரவுண்டு பகலு முண்டே.

ருசா. முருக்கிதழ் முத்த மூரன் முறுவலார் முகங்க ளென்னும்
திருக்கிளர் கமலப் போதிற் றீட்டிய கிடந்த கூர்வாள்
நெருக்கிடை யறக்குழீக ணீங்குமி னீங்கு மென்றென்
றருக்கனி லொளிரு மேனி யாடவ ரகலப் போனார். 873

௫௭. நீந்தரு நெறியி னுற்ற நெருக்கினுற் சுருக்குண் டற்ற
காந்தின மணியு முத்துஞ் சிதறின கலாபஞ் சூழ்ந்த
பாந்தளி னல்கு லார்தம் பரிபுரம் புலம்பப் பைம்பொற்
பூந்தளி ருறைப்ப மாழ்கிப் போக்கரி தென்ன நிற்பார். 874

௫௮. கொற்றநல் லியங்க ளெங்குங் கொண்டலிற் றுவைப்ப மண்டிப்
பெற்றவே றன்னப் புள்ளிற் பேதையர் வெருவி நீங்க
முற்றுறு பரங்க ளெல்லா முறைமுறை பாசத் தோடும்
பற்றற வீசிச் செல்லும் யோகியிற் பரிவு தீர்ந்த. 875

௫௯. காற்செறி வேகப் பாகர் கார்முக வுண்டை பாரா
வார்ச்செறி கொங்கை யன்ன கும்பமு மருப்புங் காணப்
பாற்செறி கடலுட் டோன்றும் பணைக்கைமால் யானை யென்ன
நீர்ச்சிறை பற்றி யேறு நின்றகுன் றனைய வேழம். 876

௬0. அறலியற் கூந்தற் கண்வா ளமுதகு குதலைச் செவ்வாய்
விறலிய ரோடு நல்யாழ்ச் செயிரியர் புரவி மேலோர்
நறைசெவிப் பெய்வா ரென்ன நைவள வமுதப் பாடல்
முறைமுறை பகர்ந்து போனார் கின்னர மிதுன மொப்பார்.

௬௧. அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கும்
இரியலிற் சனங்கள் சிந்த விளங்களிச் சிறுகண் யானை
விரிசிறைத் தும்பி வேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்
கரிகுழல் படிய வேறு பிடியையுந் தொடர்ந்து செல்வ. 878

௬௨. நிறைமதித் தோற்றங் கண்ட நீனெடுங் கடலி தென்ன
அறைபறை துவைப்பத் தேரு மானையு மாடன் மாவும்
கறைகெழு வேற்க ணாரு மைந்தருங் கவினி யொல்லை
நெறியிடைப் படர வேந்த னேயமங் கையரெ ழுந்தார். 879

௬௩. பொய்கையங் கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்னக்
கைகயர் வேந்தன் பாவை கணிகைய ரீட்டம் பொங்கி
ஐயிரு நூறு சூழ வாய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரு நாணத் தேனிசை முரலப் போனாள். 880

௬௪. காரண மின்றி யேயுங் கனலெழ விழிக்குங் கண்ணார்
வீரர்வேத் திரத்தர் கேள்வி விருத்தர்கஞ் சுகத்து மெய்யர்
தாரணி புரவி மேலோர் தலத்துளோர் சலத்த சொல்லார்
ஆரணங் கனைய மாத ரடிமுறை காத்துப் போனார். 881

௬௫. விரிமணித் தார்கள் பூண்ட வெங்கரி வெரிநிற் றோன்றும்
அரிமலர்த் தடங்க ணல்லா ராயிரத் திரட்டி சூழக்
குருமணிச் சிவிகை மேல்வெண் கொண்டலின் மின்னி தென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள். 882

௬௬. செங்கையான் மஞ்ஞை யன்னஞ் சிறுகிளி பூவை பாவை
சங்குறை கழித்த வன்ன சாமரை முதல தாங்கி
இங்கல தெண்ணுங் கான்மற் றெழுதிரை வளாகத் தெங்கும்
மங்கைய ரில்லை யென்ன மடந்தையர் மருங்கு போனார். 883

௬௭. வெள்ளெயிற் றிலவச் செவ்வாய் முகத்தைவெண் மதியமென்று
கொள்ளையிற் றிரள்வான் மீன்கள் குழுமிய தனைய வாகித்
தெள்ளரிப் பாண்டிற் பாணிச் செயிரிய ரிசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள். 884

௬௮. கூனொடு குறளுஞ் சிந்துஞ் சிலதியர் குழாமுங் கொண்ட
பானிறப் புரவி யன்னப் புள்ளெனப் பாரிற் செல்லத்
தேனொடு ஞிமிறும் வண்டுந் தும்பியும் பந்தர் செய்யப்
பூநிறை கூந்தன் மாதர் புடைபிடி நடையிற் போனார். 885

௬௯. துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்பற வமைத்த வைய மோவியம் புகழ வேறி
முப்பதிற் றிரட்டி கொண்ட வாயிர முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் தெரிவையர் சூழப் போனார். 886

௭0. செவிவயி னமுதக் கேள்வி தெவிட்டினர் தேவர் நாவின்
அவிகையி னளிக்கு நீரா ராயிரத் திரட்டி சூழக்
கவிகையி னீழற் கற்பி னருந்ததி கணவன் வெள்ளைச்
சிவிகையி னன்ன மூருந் திசைமுக னென்னச் சென்றான்.

௭௧. பொருகளி றிவுளி பொற்றேர் பொலங்கழற் குமரர் முந்நீர்
அருவரை சூழ்ந்த தென்ன வருகுபின் முன்னுஞ் செல்லத்
திருவளர் மார்வர் தெய்வச் சிலையினர் தேரர் வீரர்
இருவரு முனிபின் போன விருவரு மென்னப் போனார். 888

௭௨. நித்திய நியம முற்றி நேமியான் டாதஞ் சென்னி
வைத்தபின் மறைவ லோர்க்கு வரம்பற மணியும் பொன்னும்
பத்தியா னிரையும் பாரும் பரிவுட னல்கிப் போனான்
முத்தணி வயிரப் பூணான் மங்கல முகூர்த்த நன்னாள். 889

(பிரதி) 1 வேசரி,

௭௩. இருபிறப் பாள ரெண்ணா யிரர்மணிக் கலச மேந்தி
அருமறை வருக்க மோதி யறுகுநீர் தெளித்து வாழ்த்த
வான்முறை வந்தார் கோடி மங்கையர் மழலைச் செவ்வாய்ப்
பருமணிக் கலாபத் தார்பல் லாண்டிசை பரவப் போனார். 890

௭௪. கண்டன னென்னை யென்பார் கண்டில னென்னை யென்பார்
குண்டலம் வீழ்ந்த தென்பார் குறுகரி தினிச்சென் றென்பார்
உண்டுகொ லெழுச்சி யென்பா ரொலித்தது சங்க மென்பார்
மண்டல வேந்தர் வந்து நெருக்கினர் மயங்கி மாதோ. 891

௭௫. பொற்றொடி மகளி ரூரும் பொலங்கொடேர்ப் புரவி வெள்ளம்
சுற்றுறு கமலம் பூத்த தொடுகடற் றிரையிற் செல்லக்
கொற்றவேன் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் கூப்ப
மற்றொரு கதிரோ னென்ன மணிநெடுந் தேரிற் போனான். 892

௭௬. ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டகன் றிசைக ளெல்லாம்
போர்த்தது தூளியார்த்தங் கொருவர்கட் புலங்கொ ளாமை
சீர்த்தது செறிந்த தோடித் திரைநெடுங் கடலை யெல்லாம்
தூர்த்தது சகர ரோடும் பகைத்தெனத் தூளி வெள்ளம் 893

௭௭. சங்கமும் பணையுங் கொம்புந் தாளமுங் காளத் தோடு
மங்கல பேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரை யோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத் தேவரு மருளச் சென்றான்.

௭௮. மந்திர கீத வோதை வலம்புரி முழங்கு மோதை
அந்தண ராசி யோதை யார்த்தெழு முரசி னோதை
கந்துகொல் களிற்றி னோதை கடிகையர் கவியி னோதை
இந்திர திருவன் செல்ல வெழுந்தன திசைக ளெல்லாம். 895

௭௯. நோக்கிய திசைக டோறுந் தன்னையே நோக்கிச் செல்லும்
வீக்கிய கழற்கால் மன்னர் விரிந்தகைம் மலர்கள் கூம்பத்
தாக்கிய களிறுந் தேரும் புரவியும் படைஞர் தானும்
ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான். 896

௮௦. வீரருங் களிறுந் தேரும் புரவியு மிடைந்த சேனை
பேர்விட மில்லை மற்றோ ருலகில்லை பெயர்வ தாக
நீருடை யாடை யாளு நெளித்தனன் முதுமை யென்றால்
பார்பொறை நீக்கி னானென் றுரைத்தது பழுது மன்றே.

அக. இன்னண மேகி மன்னன் யோசனை யிரண்டு சென்றான்
பொன்மலை போலு மிந்து சயிலத்தின் சாரல் புக்கான்
மன்மதக் களிறு மாதர் கொங்கையு மார ணம்புந்
தென்வரைச் சாந்து நாறச் சேனையு மிறுத்த தன்றே. 898

எழுச்சிப் படலம் முற்றும்.

உக. சந்திரசயிலப் படலம்.

க. கோவை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைகிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்திரம் பூட்டின சிலமா. 899

உ. நேரொ டுங்கலில் பகையினை நீதியால் வெல்லும்
சோர்வி டம்பெறா வுணர்வினன் சூழ்ச்சியே போல
வாரொ டுந்தொடர் கவட்டெழின் மராமரக் குவட்டை
வேரொ டுங்கொடு கிரியென நடந்ததோர் வேழம். 900

ங. திரண்ட தாணெடுஞ் செறிபனை மருதிடை யொடியப்
புரண்டு பின்வரு முரலொடு போனவன் போல
உருண்டு காரொடர் பிறகிடு தறியொடு மொருங்கே
இரண்டு மாமர மிடையிற நடந்ததோர் யானை. 901

ச. கதங்கொள் சீற்றத்தை யாற்றுவா னினியன கழறிப்
பதங்கொள் பாகனு மந்திரி யொத்தனன் பன்னால்
விதங்க ளாவன யாவையு மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா மன்னனை யொத்ததோர் யானை. 902

ரு. மாறு காண்கில தாய்நின்று மழையென முழங்கும்
தாறு பாய்கரி வனகரி தண்டத்தைத் தடவிப்
பாறு பின்செலக் காலெனச் செல்வது பண்டோர்
ஆறு போகிய வாறுபோ மாறுசென் றதுவே. 903

சா. பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த வேழிலம் பாலையைப் பொடிப்பொடி யாக்கிக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு. 904

௭. அலகி லானைக ளனேகமு மவற்றிடை மிடைந்த
திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த
உலவை நீள்வனத் தூதமே யொத்தன வூதத்
தலைவ னேயொத்துப் பொலிந்தது சந்திர சயிலம். 905

௮. தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்நொறும் பொன்னுரு ளுரைத்துரை யோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம். 906

௯. கொவ்வை நோக்கிய வாய்களை யிந்திர கோபம்
கவ்வி நோக்கின வென்றுகொல் காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொண்மே கலைபொலஞ் சாயற்
செவ்வி நோக்கின திரிவன போல்வன திரிந்த. 907

௧௦. உய்க்கும் வாசிக ளிழிந்திள வன்னத்தி னொதுங்கி
மெய்க்க லாபமுங் குழைகளு மிழைகளும் விளங்கத்
தொக்க மென்மர நிழல்படத் துவன்றிய சூழல்
புக்க மங்கையர் பூத்தகொம் பாமெனப் பொலிந்தார். 908

௧௧. தளங்கொ டாமரை யெனத்தளி ரடியினு முகத்தும்
வளங்கொண் மாலைவண் டலமர வழிவருந் தினராய்
விளங்கு தம்முருப் பளிங்கிடை வெளிப்பட வேறோர்
துளங்கு பாறையிற் றோழிய ரயிர்த்திடத் துயின்றார். 909

௧௨. பிடிபுக் காயிடை மின்னொடும் பிறங்கிய மேகம்
படிபுக் காலெனப் படிதரப் பரிபுரம் புலம்பத்
துடிபுக் காயிடைத் திருமக டாமரை துறந்து
குடிபுக் காளெனக் குடில்புக்கார் கொடியன மடவார். 910

வேறு

௧௩. உண்ணமுத முந்தியன யோனகர் கொணர்ந்த
துண்ணெனு முழக்கின துருக்கர்தர வந்த
மண்மகடன் மார்பினணி வன்னசர மென்னப்
பண்ணுறு வயப்புரவி பந்தியி னிரைத்தார். 911

௧௪. நீர்த்திரை நிரைத்ததென நீடிரை நிரைத்தார்
ஆர்கலி நிரைத்ததென வாவண நிரைத்தார்
கார்நிரை யெனக்களிறு காவிடை நிரைத்தார்
மாருத நிரைத்தவென வாசிக ணிரைத்தார். 912

௧௫. நடிக்குமயி லென்னவரு நவ்விவிழி யாரும்
வடிக்கும்வய வீரரு மயங்கினர் திரிந்தார்
இடிக்குமுர சக்குரலி னெங்குமுரல் சங்கின்
கொடிக்களி னுணர்ந்தரசர் கோநக ரடைந்தார். 913

௧௬. மதிக்கநிமிர் தூளியின் மறைக்கமணி மெய்யைச்
சுதைக்கணுரை யைப்பொருவு தூசுகொடு தூய்தாய்
உதிர்த்தலி னிளங்குமர ரோவியரி லோவம்
புதுக்கின ரெனத்தருண மங்கையர் பொலிந்தார். 914

௧௭. தாளுயர் தடக்கிரி யிழிந்துதரை சாரும்
கோளரி யெனக்கரிகள் கொற்றவ ரிழிந்தார்
பாளைவிரி யொத்துலவு சாமரை படப்போய்
வாளெழு நிரைத்தபட மாடமவை புக்கார். 915

௧௮. தூசினொடு வெண்பட முடைக்குடில்க டோறும்
வாசநகை மங்கையர் முகங்கண்மழை வானிற்
காசின்மதி யின்கதிர் வழங்குநிழ லெங்கும்
வீசுதிரை வெண்புனல் விழுங்கியது போலும். 916

௧௯. மண்ணுற வெழுந்துநெடு வானுற வயங்குங்
கண்ணுதல் பொருந்தவரு கண்ணனில் வருங்கா
ருண்ணிற நறும்பொடியும் வீசியொரு பாகம்
வெண்ணிற நறும்பொடி புனைந்தமத வேழம். 917

௨௦. தீயவ ரொடொன்றிய திறத்தரும் வலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தவர் துறந்தாங்
கேயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தோர்
பாய்பரி விரைந்துதறி நின்றன பரிந்தே. 918

௨௧. மும்மைபுரி வன்கயிறு கொய்யுநெறி முன்னித்
தம்மையு முணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
அம்மையினொ டிம்மையை யறிந்துநெறி செல்லும்
செம்மையவ ரென்னநனி சென்றன துரங்கம். 919

௨௨. விழுந்தபனி யன்னதிரை வீசுபுரை தோறும்
கழுங்குபயின் மங்கையர் கருங்கண்மிளிர் கின்ற
தழுங்குதளி சிந்திய கனம்பயி றரங்கத்
தெழுந்திடை பிறழ்ந்தொளிர் கொழுங்கயல்க ளென்ன. 920

உ௩. வெள்ளநெடு வாரியற வீசியுள வேனும்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தேயுதவு கின்ற
உள்ளதும ருதுதவும் வள்ளலையு மொத்த. 921

உச. துன்றிநெறி பங்கிக ளேக்கியழ லோடும்
மின்றிரிவ வென்னமணி யாரமிளிர் மார்பர்
மன்றன்மண நாறுபட மாடநுழை கின்றார்
குன்றின்முழை தோறநுழை கோளரியை யொத்தார். 922

உரு. நெருங்கயி லெயிற்றிணைய செம்மயிரி னெற்றிப்
பொருங்குலிக மப்பியன போர்மணிக ளார்ப்ப
பெருங்களி றலைப்புனல் கலக்குவன பெட்குங்
கருங்கடல் கலக்குமது கைடவரை யொத்த. 923

உசு. ஒக்கமிசை யுய்த்தவ ருரைத்தகுறி கொள்ளா
பக்கமின மொத்தய லலைக்கநனி பாரா
மைக்களி மதத்தவரை மாதர்கலை யல்குல்
புக்கவரை யொத்தன புனற்சிறைக ளேறு. 924

உஎ. துகிலிடை மடந்தையரொ டாடவர் துவன்றிப்
பகலிடைய வட்டிலின் மடுத்தெரி பரப்பும்
அகிலிடு கொழும்புகை யழுங்கலின் முழங்கா
முகில்படு நெடுங்கடலை யொத்துளதம் மூதூர். 925

வேறு.

உஅ. கமருறு பொருப்பின் வந்த விஞ்சையர் காண வந்தார்
தமரையு மறியார் நின்று திகைப்புறு தன்மை சான்ற
குமரரு மங்கை மாருங் குழுமலால் வழுவி விண்ணின்
றமரர்நா டிழிந்த தென்னப் பொலிந்ததவ் வனிக வெள்ளம்.

உகூ. வெயிலிறை குறையச் சோதி மின்னிழல் பரப்ப முன்னுந்
துயிலறு செவ்வி யோருந் துனியுறு முனிவி னோரும்
குயிலொடு மிருந்து பேசிச் சிலம்பொடு மினிது கூவி
மயிலினம் வருவ தென்னத் திரிந்தனர் மகளி ரெல்லாம். 927

௩0. தாளிணை கழல்க ளார்ப்பத் தாரிடை யளிக ளார்ப்ப
வாள்புடை யிலங்கச் செங்கேழ் மணியணி வலய மின்னுந்
தோளென வுயர்ந்த குன்றின் சூழல்க ளினிது நோக்கி
வாளரி திரிந்த தென்னத் திரிந்தனர் மைந்த ரெல்லாம். 928

சந்திரசயிலப் படலம் முற்றும்.

உ௨. வரைக்காட்சிப் படலம்

க. சுற்றிய கடல்க ளெல்லாஞ் சுடர்மணிக் கனகக் குன்றைப்
பற்றிய வளைந்த வென்னப் பரந்துவந் திறுத்த சேனை
கொற்றவர் தேவி மார்கண் மைந்தர்கள் கொம்ப னார்வந்
துற்றது காண லுற்ற வரைநிலை யுரைத்து மன்றே. 929

உ. பம்புதேன் மிஞிறு தும்பி பரந்திசை பாடி யாடும்
உம்பர்வா னகத்து நின்ற வொளிதரு தருவி னோங்கும்
கொம்புகள் பனைக்கைநீட்டிக் குழையொடு மெடுத்துக்கோட்டுத்
தும்பிக ளுயிரே யன்ன துணைமடப் பிடிக்கு நல்கும். 930

௩. பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனிமலர்க் குவளை யன்ன
கண்மலர்க் கொடிச்சி மார்க்குக் கணித்தொழில் புரியும் வேங்கை
உண்மலர் வெறுத்த தும்பி புதியதே னுகந்து நாகத்
தண்மல ரென்று வானத் தாரகை தாவு மன்றே. 931

௪. மீனெனும் பிடிக ளோடும் விளங்குவெண் மதிநல் வேழம்
கூனல்வான் கோடு நீட்டிக் குத்திடக் குமிழி பாயும்
தேனுகு மடையை மாற்றிச் செந்தினைக் குறவர் முந்தி
வானநீ ராறு பாய்ச்சி யைவனம் விளைப்பர் மாதோ. 932

௫. குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் துலங்கு கின்ற வுடுபதி யாடி யின்கண்
அப்புறத் தேயுங் காண்பா ரரம்பைய ரசைந்த கோலம்
இப்புறத் தேயுங் காண்பார் குறத்திய ரிசைந்த கோலம். 933

௬. உதியறு துருத்தி யூது முலையுறு தீயின் வாயின்
அதிவிட நீரு நெய்யு முண்கிலா தாவி யுண்ணும்
கொதிநுனை வேற்கண் மாதர் குறத்தியர் நுதலி னோடு
மதியினை வாங்கி யொப்புக் காண்குவர் குறவர் மாதோ. 934

௭. பேணுதற் கரிய கோலக் குருளையும் பிடிக வீன்ற
காணுதற் கரிய வேழக் கன்றொடு களிக்கு முன்றில்
கோணுதற் குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ. 935

௮. அஞ்சனக் கிரியி னன்ன வழிகவுள் யானை கொன்ற
வெஞ்சினத் தரியின் றிண்காற் சுவட்டொடும் விஞ்சை வேந்தர்
குஞ்சியந் தலத்து நீலக் குலமணித் தலத்து மாதா
பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்சுவ டுடைத்து மன்னோ 936

ஸ்ரீ:

கம்ப ராமாயணம்

பால காண்டம்

(முதல் ஏழு படலங்கள் பாட பேதங்களுடன்)

சென்னைப் பல்கலைக் கழகத்துத்
தமிழாராய்ச்சித் துறைத் தலைவர்
S. வையாபுரிப்பிள்ளை யவர்களாலும்,
சென்னை அட்வொகேட்
P. N. அப்புஸ்வாமி அய்யரவர்களாலும்
பரிசோதிக்கப்பட்டது.

ஆழ்வார்திருநகரி
பெரியன்: வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்
பிரசுரித்தது

காபிரைட்] 1937 [விலை அணா 10

றன்னையெம் மிடத்தினுஞ் சார்தல் வேண்டுமென்
றன்னவர் தொழுதலு மவரோ டேகினான். 222

௪௪. விம்முறு முவகையர் வியந்த நெஞ்சினர்
அம்மவி திதுவென வகலு நீணெறிச்
செம்மையின் முனிவரன் றொடரச் சென்றனர்
தம்மன மெனமருட் டைய லார்களே. 223

௪௫. வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்முகில்
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகடங் குறைக டீரவே. 224

௪௬. பெரும்புன னதிகளுங் குளனும் பெட்புறக்
கரும்பொடு செந்நெலுங் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் ககனமீ திடைவி டாதெழுந்
தரும்புனல் சொரிந்தபோ தரச னார்ந்தனன். 225

௪௭. காமமும் வெகுளியுங் களிப்புங் கைத்தெழு
கோமுனி யிவணடைந் தனன்கொல் கொவ்வைவாய்த்
தாமரை மலர்முகத் தரள வாணகைத்
தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால். 226

௪௮. என்றெழுந் தருமறை முனிவர் யாரொடுஞ்
சென்றிரண் டியோசனை சேனை சூழ்தர
மன்றலங் கோதையர் நடுவண் மாதவக்
குன்றினை யெதிர்ந்தனன் குவவுத் தோளினான். 227

10 மிடத்தினுஞ். 11 சாரல். 13-14 றன்னவற் றொழுதலு. 13-15 றன்னவ ரடிதொழ வவரொ. 16 டேகென்றான். [௪௪] 2 முவகையால். 2-3 முவகையால் வீந்த. 5-6 அம்மவிவ் விதுவென. 5 அம்மவீ. 6 தெது வென. 9 செம்மைசேர்: செம்மைய: செம்மையன். [௪௫] 1 வளர் நகர். 3 வரமுன். 8 வான்மிசை(ச) 10 வெனுமழைத். 14 நதிதடங்: நெடுநதி: நதி களுங். 15-16 குறைவு தீரவே. 16 டீர்ந்தவே: டீர்தர. [௪௬] 2 நதிகளும். 6 சென்னலும். 9 இரும்புனல். 14-15 சொரிதர வரச. [௪௭] 4 கைத் தெழுங்: கைதொழு: கைத்தவக். 6-8 யடைந்தனன் கொவ்வைச் செவ்வை வாய்த். 8 கோவை வாய்த். 13 தூமமுண். 15 புரிந்த: புனைந்த: கொணர்ந்த. புணர்ந்த. [௪௮] 6 டோசனை: 9 நன்றலங். 10 குழலியர். 11 நடுவுண்.

௯. செங்கய லனைய நாட்டஞ் செவிபுகா முறுவ ரென்று
பொங்கிருங் கூந்தல் சோரா புருவங்க ணெரியா பூவின்
அங்கையு மிடறுங் கூட்டி நரம்புளர்ந் தமுத மூறும்
மங்கையர் பாடல் கேட்டுக் கின்னர மயங்கு மாதோ. 937

௧௦. கள்ளவிழ் கோதை மாதர் காதொடு முறவு செய்யும்
கொள்ளைவாட் கண்ணி னார்தங் குங்குமக் குழம்பு தங்கும்
தெள்ளிய பளிக்குப் பாறை தெளிதர வமுதிற் செய்த
வள்ளமு நறவு மென்ன வரம்பில பொலிவ மன்னோ. 938

௧௧. ஆடவ ராவி சோர வஞ்சன வாரி சோர
ஊடலிற் சிவந்த நாட்டத் தும்பர்தம் மரம்பை மாதர்
தோடவிழ் கோதை நின்று துறந்தமந் தார மாலை
வாடல நறவ ருது வயின்வயின் வயங்கு மாதோ. 939

௧௨. மாந்தளி ரனைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டிக்
கூந்தலின் கமுகின் பாளை குழலினோ டொப்புக் காண்பார்
ஏந்திழை யரம்பை மாத ரெதிர்மணிக் கடகம் வாங்கிக்
காந்தளம் போதிற் பெய்து கைகளோ டொப்புக் காண்பார். 940

௧௩. சரம்பயில் சாப மன்ன புருவங்க டம்மி லாட
நரம்பினோ டினிது பாடி நாடக மயிலோ டாடும்
அரம்பையர் வெறுத்து நீத்த வயிர்மணிக் கோவை யாரம்
வரம்பில கடுவன் பூண மந்திகண் டுவக்கு மாதோ. 941

௧௪. சாந்துய தடங்க டோறுந் தாதுரா கத்துச் சார்ந்த
கூந்தலம் பிடிக ளெல்லாங் குங்கும மணிந்த போலும்
காந்தின மணியின் சோதி கதிரொடுங் கலந்து வீசச்
சேந்துவா னகமெப் போதுஞ் செக்கரை யொக்கு மன்றே 942

௧௫. நிலமகட் கணிக ளென்ன நிரைகதிர் முத்தஞ் சிந்தி
மலைமகள் கொழுநன் சென்னி வந்துவீழ் கங்கை மான
அலகில்பொன் னலம்பி யோடி யாரஞ்சே ரருவி மாலை
உலகளந் தவன்றன் மார்பி னுத்தரீ கத்தை யொத்த. 943

௧௬. கோடிலா நாகப் பூவோ டிலவங்க மலருங் கூட்டிச்
சூடுவார் களிவண் டோச்சித் தூநறுந் தேறல் கொள்வார்
கேடிலா மகர யாழிற் கின்னர மிதுனம் பாடும்
பாடலா லூட னீங்கும் பரிமுக[1] மாதர்க் கண்டார். 944

(பிரதி) 1. பரிபுர.

கஎ. பெருங்களிப் புற்ற மைந்தர் பேரெழி லாகத் தோடும்
பொருந்துணைக் கொங்கை யன்ன பொருவில்கோங் கரும்பின்மாடே
மருங்கெனக் குழையுங் கொம்பின் மடப்பெடை வண்டுந் தங்கள்
கருங்குழற் களிக்கும் வண்டுங் கடிமணம் புணர்தல் கண்டார்.

கஅ. படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை முடுகப் புக்க
சுடிகைப்பூங் கமல மன்ன சுடர்மணி முகத்தி னோர்தம்
வடகத்தோ டுடுத்த தூசு மாசினீர் நனைப்ப வீசும்
கடகக்கை யெறிந்து நோக்கிக் கருங்கழல் வீரர் நக்கார். 946

ககூ. பூவணை பலவுங் கண்டார் பொன்னரி மாலை கண்டார்
மேவருங் கோப மன்ன வெள்ளிலைத் தம்பல் கண்டார்
ஆவியி னினிய கொண்கர்ப் பிரிந்தறி வழிந்த விஞ்சைப்
பாவையர் வைகத் தீய்ந்த பல்லவ சயனங் கண்டார். 947

உ0. பானலங் கண்க ளாடப் பவளவாய் முறுவ லாடப்
பீனவெம் முலையி னிட்ட பெருவிலை யார மாடத்
தேன்முரன் றளகத் தாடத் திருமணிக் குழைக ளாட
வானவர் மகளி ராடும் வாசநா றாசல் கண்டார். 948

உக. சுந்தர வதன மாதர் துவரிதழ்ப் பவள வாயும்
அந்தமில் சுரும்புந் தேனு மிஞிறுமுண் டல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தரி னீத்த தீந்தேன் வள்ளங்கள் பலவுங் கண்டார். 949

உஉ. அற்பக லாக்குஞ் சோதிப் பளிக்கறை யமளிப் பாங்கர்
மற்பக மலர்ந்த திண்டோள் வானவர் மணந்த கோல
விற்பகை நுதலி னோர்தங் கலவியின் வெறுத்து நீத்த
கற்பக மீன்ற மாலை கலனொடுங் கிடப்பக் கண்டார். 950

உங. கையென மலர வேண்டி யரும்பிய காந்த ணோக்கிப்
பையர வீதுவென் றஞ்சிப் படைக்கண்கள் புதைக்கின் றாரும்
நெய்திரள் வயிரப் பாறை நிழலிடைத் தோன்றும் போதைக்
கொய்திவை தருதிரென் றுகொழுநரைத்தொழுகின்றாரும்.951

உச. பின்னங்க ளுகிரிற் செய்து பிண்டியந் தளிரிற் கொண்ட
சின்னங்கண் முலையி னப்பித் தேமலர் கொய்கின் றாரும்
வன்னங்கள் பலவுந் தோன்ற மணியொளி மயிலி னல்லார்
அன்னங்கள் புகுந்த வென்ன வகன்சுனை குடைகின் றாரும். 952

வேறு.

உரு. ஈனு மாழை யிளந்தளி ரேயொளி
ஈனு மாழை யிளந்தளி ரேயிடை
மானும் வேழமு நாகமு மாதர்தோள்
மானும் வேழமு நாகமு மாடெலாம். 953

உசா. புகலும் வாளரிக் கண்ணியர் தோளிணை
புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை
அகிலு மாரமு மாரவங் கோங்குமே
அகிலு மாரமு மாரவங் கோங்குமே. 954

உஎ. துன்ன ரம்பை நெருங்கிய சூழ்வரை
துன்ன ரம்பைய ருருவிற் றோன்றுமால்
இன்ன ரம்பயில் கீதங்க ளன்னவாங்
இன்ன ரம்பயில் கின்றன ரேழையார். 955

உஅ. திமிர மாவுடற் குங்குமச் சேதகம்
திமிர மாவொடுஞ் சந்தொடுந் தேய்க்குமால்
அமர மாதரை யொத்தொளி ரஞ்சொலார்
அமர மாதரை யொத்ததவ் வானமே. 956

உகூ. பேர வாவொடு மாசுணம் பேரவே
பேர வாவொடு மாசுணம் பேருமால்
ஆர வாரத்தி னோடு மருவியே
ஆர வாரத்தி னோடு மருவியே. 957

௩0. ஊறு மாகட மாவுற வூங்கெலாம்
ஊறு மாகட மாமத மோடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே. 958

௩க. கல்வி யங்கு கருங்குற மங்கையர்
கல்வி யங்ககழ் காமர் கிழங்கெடா
வல்லி யங்க ணெருங்கு மருங்கெலாம்
வல்லி யங்க ணெருங்கி மயங்குமே. 959

௩உ. கோளி பங்கய மூழ்கக் குளிர்கயம்
கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்
ஆளி பொங்கு மரம்பைய ரோதியே
ஆளி பொங்கு மரம்பைய ரோதியே. 960

௩௩. ஆக மாலய மாகவு ளாள்பொலி
வாக மாலய னின்றென லாகுமால்
மேக மாலை மிடைந்தன மேலெலாம்
மேக மாலை மிடைந்தன கீழெலாம். 961

௩௪. பொங்கு தேனிமிர் பூமிஞி றுமென
எங்கு மாதரு மைந்தரு மீண்டியத்
தூங்க மால்வரைச் சூழல்கள் யாவையும்
தங்கி நீங்கிலர் தாமினி தாடினர். 962

௩௫. இறக்க மென்பதை யெண்ணல ரன்னது
பிறக்க லன்னதோர் பீழைய தாதலிற்
துறக்க மெய்திய தூயவ ரேயென
மறக்க கிற்கில ரன்னதன் மாண்பெலாம். 963

வேறு.

௩௬. மஞ்சார் மலைவா ரணமொத்தது வானி லோடும்
வெஞ்சா யையுடைக் கதிரங்கதன் மீது பாயும்
பஞ்சா னனமொத் ததுமற்றது பாய வூறும்
செஞ்சோ ரியெனப் பொலிவுற்றது செக்கர் வானம். 964

௩௭. திணியார் சினைமா மரம்யாவையுஞ் செக்கர் பாயத்
தணியா தநறுந் தளிரீன்றன போன்று தாழா
அணியா வொளிவந்து நிரம்பலி னங்க மெங்கும்
மணியா லியன்ற மலையொத்தது மையில் குன்றம். 965

௩௮. கண்ணுக் கினிதாகி விளங்கிய காட்சி யாலும்
எண்ணற் கரிதாகி யிலங்குசி ரங்க ளாலும்
வண்ணக் கொழுஞ்சந் தனஞ்சேர்த்தது மார்ப ணிந்த
அண்ணற் கரியான் றனையொத்ததவ் வாசில் குன்றம். 966

௩௯. ஊனும் முயிரும் மனையாரொரு வர்க்கொருவர்
தேனும் மிஞிறுஞ் செறிதும்பியும் பம்பி யார்ப்ப
யானை யினமும் பிடியும்மிக லாளி யேறும்
மானுங் கலையும் மெனமால்வரை வந்தி ழிந்தார். 967

௪௦. கால்வா னகத்தே ருடைவெய்யவன் காய்க டுங்கட்
கோல்பாய் கதிர்ப்புல் லுளைக்கொல்சினக் கோள ரிம்மா
மேல்பான் மலையிற் படவீங்கிருள் வேறி ருந்த
மால்யானை யீட்ட மெனவந்து பரந்த தன்றே. 968

சக. மந்தார முந்து மகரந்த மணங்கு லாவும்
அந்தா ரரசர்க் கரசன்ற னனீக வெள்ளம்
நந்தா தொலிக்குந் நரலைப்பெரு வேலை யெல்லாஞ்
செந்தா மரைபூத் தெனத்தீப மெடுத்த தன்றே. 969

சஉ. தண்ணாற் கடலிற் றளிசிந்து தரங்க நீங்கி
விண்ணிற் சுடர்வெண் மதிவந்தது மீன்கள் சூழ
வண்ணக் கதிர்வெண் ணிலவீன்றன வாலு கத்தோ
டொண்ணித் திலமீன் றொளிர்வால்வளை யூர்வ தொத்தே. 970

சங. மீனாறு வேலை யொருவெண்மதி யீனும் வேலை
நோனா ததனை நுவலற்கருங் கோடி வெள்ளம்
வானா டியரிற் பொலிமாதர் முகங்க ளென்னும்
ஆனா மதியங்கண் மலர்ந்த தனீக வேலை. 971

சச. மண்ணும் முழவின் றொலிமங்கையர் பாட லோதை
பண்ணுந் நரம்பிற் பயில்வாரிசைப் பாணி யோதை
கண்ணும் முடைவே யிசைகண்ணுள ராட றோறும்
விண்ணும் மருளும் படிவிம்மி யெழுந்த வன்றே. 972

சரு. மணியின் றொளிநீக்கி வயங்கொளி முத்தம் வாங்கி
அணியும் முலையா ரகிலாவி புலர்த்து நல்லார்
தணியும் மதுமல் லிகைத்தாமம் வெறுத்து வாசம்
திணியும் மிதழ்ப்பித் திகைக்கத்திகை சேர்த்து வாரும். 973

சசா. புதுக்கொண்ட வேழம் பிணிப்போர்புனை பாட லோதை
மதுக்கொண்ட மாந்தர் மடவாரின்மி ழற்று மோதை
பொதுப்பெண்டி ரல்குற் புனைமேகலைப் பூச லோதை
கதக்கொண்ட யானை களியாற்களிக் கின்ற வோதை. 974

சஎ. உண்ணா வமுதன்ன கலைப்பொரு ளுள்ள துண்டும்
பெண்ணா ரமுதம் மனையார்மனத் தூடல் பேர்த்தும்
பண்ணான பாடல் செவிமாந்திப் பயன்கொ ளாடல்
கண்ணா லினிதுய்க் கவுங்கங்குல் கழிந்த தன்றே. 975

வரைக்காட்சிப் படலம் முற்றும்.

உ௩. பூக்கொய் படலம்.

க. மீனுடை யெயிற்றுக் கங்குற் கனைகனை வெருண்டு வெய்ய
கானுடை நகங்க ளென்னு மாயிரங் கதிர்க ளோச்சித்
தானுடை யுதய மென்னுந் தமனியத் தறியி னின்று
மானிட மடங்கலென்னத் தோன்றினன் வயங்கும் வெய்யோன்

உ. முறையெலா முடித்த பின்னர் மன்னனு மூரித் தேர்மேல்[ளம்
இறையெலாம் வணங்கப் போனா னெழுந்துடன் சேனை வெள்
குறையெலாஞ் சோலை யாகிக் குழியெலாங் கழுநீ ராகித்
துறையெலாங் கமல மான சோணையா றடைந்த தன்றே. 977

௩. அடைந்தவ ணிருந்த பின்ன ரருங்கனு மும்பர்ச் சார
மடந்தையர் குழாங்க ளோடு மன்னரு மைந்தர் தாமும்
குடைந்துவண் டிறையு மென்பூக் கொய்துநீ ராட மைதீர்
தடங்களு மடுவுஞ் சூழ்ந்த தண்ணறுஞ் சோலை சார்ந்தார். 978

௪. திண்சிலை புருவ மாகச் சேயரிக் கருங்க ணம்பால்
புண்சில செய்வ ரென்று போவன போன்ற மஞ்ஞை
பண்சிலம் பணிகளார்ப்ப நாணினாற் பறந்து போன
ஒண்சிலம் பரற்ற மாத ரொதுங்குதோ றொதுங்கு மன்னம். 979

௫. செம்பொன்செய் சுருளுந் தெய்வக் குழைகளுஞ் சேர்ந்து மின்னப்
பம்புதே னலம்ப வொல்கிப் பண்ணையி னுடனேக்கிக்
கொம்பொடுங் கொடிய னாரைக் குறிப்பறிந் துணர்த றேற்றார்
வம்பவிழ லங்கன் மார்பின் மைந்தரு மயங்கி நின்றார். 980

௬. பாசிழைப் பரவை யற்குல் பண்டருங் கிளவித் தண்டேன்
மூசிய கூந்தல் மாதர் மொய்த்தபே ரமலை கேட்டுக்
கூசின வல்ல பேச நாணின குயில்க ளெல்லாம்
வாசகம் வல்லார் முன்னின் றியாவர்வாய் திறக்க வல்லார்.

௭. நஞ்சினுங் கொடிய நாட்ட மழுதென நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையாற் றீண்டலு நீண்ட கொம்பர்
தஞ்சிலம் படியின் மென்பூச் சொரிந்திடை தாழ்ந்த வென்றால்
வஞ்சிபோன் மருங்கு லார்மாட் டியாவரே வளைகி லாதார். 982

௮. அம்புயத் தணங்கி னன்னா ரம்மலர்க் கைக டீண்ட
வம்பவி ழலங்கற் பங்கி வாளரி மருளுங் கோளார்
தம்புய வரைகள் வந்து தாழ்வன தளிர்த்த மென்பூங்
கொம்புக டாமு மென்றல் கூறலாந் தகைமைத் தொன்றே.

கூ. நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மழலைத் தும்பி
அதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன வலைக்கப் போகா
புதியன கண்ட போது விடுவரோ புதுமை பார்ப்பார். 984

க0. உலந்தருவயிரத்திண்டோ ளொழுகும்வாளொளிகொண்மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி யொசிந்தன சிலகை வாராப்
புலந்தவர் போல நின்று வளைகில பூத்த கொம்பர். 985

கக. பூவெலாங் கொய்து கொள்ளப் பொலிவில துவள நோக்கி
யாவதாங் கணவர் கண்ணுக் கழகில விவையென் றெண்ணிக்
கோவையும் வடமு நாணுங் குழைகளுங் குழையப் பூட்டிப்
பாவையர் பனிமென் கொம்பை நோக்கினர் பரிந்து நிற்பார்.

வேறு.

கஉ. துறும்போ தினிற்றேன் றுவைத்துண்டு ழறும்பி யீட்டம்
நறுங்கோதை யோடு நளிர்சின்னமு நீத்த நல்லார்
வெறுங்கூந்தன் மொய்க்கின் றனவேண்டிழி வேண்டு போதும்
உறும்போக மெல்லா நலனுள்வழி யுண்ப ரன்றே. 987

கங. மெய்ப்போதி னங்கைக் கணியன்னவண் மென்ப ளிங்கிற்
பொய்ப்போது தாங்கிப் பொலிகின்றதன் மேனி நோக்கி
இப்பாவை யெங்கோற் குயிரன்னவ ளென்ன வுன்னிக்
கைப்போதி னோடு நெடுங்கண்பனி சோர நின்றாள். 988

கச. கோளுண்ட திங்கண் முகத்தாளொரு கொம்பொர் மன்னன்
தோளுண்ட மாலை யொருதோகையைச் சூட்ட நோக்கித்
தாளுண்ட கச்சிற் றகையுண்ட முலைக்கண் மீது
வாளுண்ட கண்ணீர் மழையுண்டென வார நின்றாள். 989

கரு. மயில்போல் வருவாண் மனங்காணிய காதன் மன்னன்
செயிர்தீர் மலர்க்கா விலொர்மாதவிச் சூழல் சேரப்
பயில்வா ளிறைபண்டு பிறிந்தறி யாள்ப தைத்தாள்
உயிர்நாடி யொல்கும் முடல்போலல மந்து ழன்றாள். 990

கசு. செம்மாந்த தெங்கின் னிளநீரையொர் செம்ம னோக்கி
அம்மா விவைமங் கையர் கொங்கையி னுய வென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்றொ ரேழை
விம்மா வெதும்பா வெயராமுகம் வெய்து யிர்த்தாள். 991

கஎ. மைதாழ் கருங்கண்கள் சிவப்புற வந்து தோன்ற
செய்தாவும் வேலா னொடுநெஞ்சு புலந்து நின்றாள்
எய்தாது நின்ற மலர்நோக்கி யெனக்கி நீண்டுக்
கொய்தீதி யென்றே குயிலைக்கரங் கூப்பு கின்றாள். 992

கஅ. போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்பு தைப்ப
ஆரென்ன லோடும் மனமென்ன வெதும்பு கின்றாள். 993

கசு. ஊற்றார் நறைநாண் மலர்மாத ரொருங்கு வாசச்
சேற்றால் விளையா தசெந்தாமரைக் கைகள் நீட்டி
ஏற்றாரை நோக்கா னிடையேந்தின னின்றொ ழிந்தான்
மாற்றா னுதவா னெடுவெச்சையன் போலொர் மன்னன். 994

உ0. தைக்கின்ற வேளுக் கினடன்னுயி ரன்ன மன்னன்
மைக்கொண்ட கண்ணா னெதிர்மாற்றவள்[1] பேர்விளம்ப
மெய்க்கொண்ட நாணந் தலைக்கொண்டிட விம்மி மென்பூக்
கைக்கொண்டு மோந்தா ளுயிர்ப்புண்டு கரிந்த தன்றே. 995

உக. திண்டே ரரசன் குலத்தேமொழித் தேவி மார்தம்
ஒண்டா மரைவாண் முகத்துண்மிளி ரொண்க ணெல்லாம்
கண்டா தரிக்கத் திரிவான்மதங் கவ்வி யுண்ண
வண்டா தரிக்கத் திரிமாமத யானை யொத்தான். 996

உஉ. சந்திக் கலாவெண் மதிவா ணுத லாட னக்கும்
வந்திக் கலாகுஞ் சுடர்வாட்கணி னொட்கு நல்கி
நிந்திக்க லாகா வுருவத்தின னிற்க மென்பூச்
சிந்திக் கலாப மயிலிற்கண் சிவந்து போனார்[2]. 997

வேறு.

உரு. வந்தெங் குந்தம் மன்னுயி ரேயோ பிறிதேயோ
கந்தந் தங்குஞ் சோர்குழல் காணார் கலைபேணார்
அந்தந் தோறு மற்றுகு முத்த மவைபாரார்
சிந்துஞ் சந்தத் தேமலர் நாடித் திரிகின்றார். 998

உச. யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோ ரிகன்மன்னன்
தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்கின்றாள்
ஆழத் துள்ளுங் கள்ள மனத்தா லவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்கின்றாள். 999

(பிரதி) 1. னவள் மாற்றவள். 2. போனாள்.

௨௫. அந்தா ராகத் தைங்கணை நூறா யிரமாகச்
சிந்தா நின்ற செய்கையி னாற்செய் குவதோரான்
மந்தா ரங்கொண் டேகுதி[1] யோமா தவியென்றோர்
சந்தார் கொங்கைத் தார்குழ லாள்பாற் றளர்வாளும். 1000

௨௬. நாடிக் கொண்டாள் குற்ற நயந்தாண் முனிவாருள்
ஊடிக் காட்டக் காணா நலத்தா னுடனில்லான்
தேடித் தேடிச் சேர்த்த நறும்பூஞ் செம்மாலை
சூடிச் சூடிக் கண்ணடி நோக்கித் துவள்வாளும். 1001

௨௭. மறலிக் கூறா டுங்கதிர் வேலா னிடையேவந்
துறவிக் கோலம் பெற்றில வென்றா லுடன்வாழ்விப்
பிறவிக் கேலா தென்செய்வ திப்பே ரணியென்னா
விறலிக் கீவா ளொத்திழை யெல்லாம் விடுவாளும். 1002

௨௮. தன்னைக் கண்டாண் மென்னடை கண்டா டமரேபோல்
துன்னக் கண்டா டோழமை யென்றா டுணையென்றாள்
உன்னைக் கண்டா ரெள்ளுவர் பொல்லா துநீயென்
றன்னக் கன்னிக் காடை யளிப்பா னமைவாளும். 1003

௨௯. பாகொக் குஞ்சொற் பைந்தொடி யாடன் படரல்குல்
ஆகக் கண்டோ ராடர வாமென் றயனண்ணும்
தோகைக் கஞ்சிக் கொம்பி னொதுங்கித் துணரீன்ற
சாகைத் தங்கைக் கண்கள் புதைத்தே தளர்வாளும். 1004

௩௰. வம்பிற் பொங்குங் கொங்கை சுமக்கும் வலியின்றிக்
கம்பிக் கின்ற நுண்ணிடை நோக்கிக் கசிவாளும்
பைம்பொற் கிண்ணம் மெல்விர றாங்கிப் பயில்கின்ற
கொம்பிற் கிள்ளைப் பிள்ளையொ ளிக்கக் குழைவாளும். 1005

௩௧. பொன்னே தேனே பூமக ளேகா ணென்னையென்னாத்
தன்னே ரில்லா னங்கொரு[2] கொய்பூந் தழைமூழ்க
இன்னே யென்னைக் காணுதி நீயென் றிகலித்தன்
நன்னீ லக்கண் கையின் மறைத்து நகுவாளும். 1006

௩௨ வில்லிற் கோதை நாணுறு மிக்கோ ரிகலங்கம்
புல்லிக் கொண்டார் தாமரை மென்பூ மலர்தாங்கி
அல்லிற் கோதை மாதர முகமா மரவிந்தச்
செல்வக் காணிற் செங்கதி ரென்னத் திரிவாரும். 1007

(பிரதி) 1. டீகுதி. 2. ரில்லா ளங்கொரு.

௫௩. சோலைத் தும்பி மென்குழ லூதத் தொடையெய்யும்
கோலைக் கொண்ட மன்மத வாயன் குறியுய்ப்ப
நீலத் துண்கண் மங்கையர் சூழ நிரையாவின்
மாலைப் போதின் மால்விடை யென்ன வருவாரும். 1008

௫௪. செய்யிற் கொள்ளும் தெள்ளமு தச்செஞ் சிலையொன்றும்
கையிற் பெய்யிற் காமனு நாணுங் கவினார்தம்
மையற் பேதை மாதர் மிழற்றும் மழலைச்சொற்
றெய்வப் பாடற் சொற்கலை வேண்டித் திரிவாரும். 1009

வேறு.

௫௫. ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போலுமே. 1010

௫௬. நாறு பூங்குழ னன்னுதல் புன்னைமேல்
ஏறி னான்மனத் தும்பர்சென் றேறினாள்
ஊறு ஞானத் துயர்ந்தவ ராயினும்
வீறு சேர்முலை மாதரை வெல்வரோ. 1011

௫௭. சினையின் மேலிருந் தானுருத் தேவரால்
வனைய வும்மரி யாள்வனப் பின்றலை
நினைவு நோக்கமு நீங்கலன் கைகளால்
நனையு நாண்முறி யுங்கொய்து நல்கினான். 1012

௫௮. வண்டு வாழ்குழ லாண்முகம் வாட்டிடத்
தண்டு போற்புயத் தான்றடு மாறினான்
உண்டு கோபமென் றுள்ளத் துணர்த்துவாள்
தொண்டை வாயிற் றுடிப்பொன்று சொல்லவே. 1013

௫௯. ஏயுந் தன்மைய ரிவ்வகை யாரெலாம்
தூய வொண்மலர்ச் சோலைத் துறுமலர்
வேயுஞ் செய்கை வெறுத்தனர் வெண்டிரை
பாயுந் தீம்புனற் பண்ணைசென் றெய்தினார். 1014

பூக்கொய் படலம் முற்றும்.

௨௪. நீர்விளையாட்டுப் படலம்.

௧. புளைமலர்த் தடங்க ணோக்கிப் பூசல்வண் டார்த்துப் பொங்க
விளையறு துறக்க நாட்டு விண்ணவர் கணமு நாண
அனகரு மணங்க ணாரு மம்மலர்ச் சோலை நின்றும்
வனகரி பிடிக ளோடு வருவன போல வந்தார். 1015

௨. அங்கவர் பண்ணை நன்னீ ராடுவா னமைந்த தோற்றம்
கங்கைவார் சடையோ னன்ன மாமுனி கனல மேனாள்
மங்கைமார் செல்வத் தோடும் வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்குமா கடலுட் செல்லுந் தோற்றமே போன்ற தன்றே.

௩. மையவாங் குவளை யெல்லா மாதர்கண் மலர்கள் பூத்த
கையவாம் புயத்தார் தங்கள் கண்மலர் குவளை பூத்த
செய்யதா மரைக ளெல்லாந் தெரிவையர் முகங்கள் பூத்த
தையலார் முகங்க ளெல்லாம் தாமரை பூத்த வன்றே. 1017

௪. வண்டுணக் கமழுஞ் சுண்ணம் வாசநெய் கானத் தோடும்
கொண்டெதிர் வீசு வாருங் கோதை கொண் டோச்சு வாரும்
தொண்டைவாய்ப் பெய்த தூய்நீர் கொழுநர்மேற் றூர்க்கின் றாரும்
புண்டரீ கக்கை கூட்டிப் புனன்முகந் தெறிகின் றாரும். 1018

௫. தாளையேய் கமலத் தாளின் மார்புறத் தழுவு வாரும்
தோளையே பற்றி வெற்றித் திருவெனத் தோன்று வாரும்
பாளைவீ விரிந்த தென்னப் பரந்துநீ ருந்து வாரும்
வாளைமீ னுகள வஞ்சி மைந்தரைத் தழுவு வாரும். 1019

௬. மின்னொத்த விடையி னாரும் விடமொத்த விழியி னாரும்
சின்னத்தி னளக பந்தி திருமுக மறைப்ப நீக்கி
அன்னத்தை வருக வொன்றோ டாடவென் றழைக்கின் றாரும்
பொன்னொத்த முலையின் வந்து பூவொத்த வுளைகின் றாரும்.

௭. பண்ணுளர் பவளம் தொண்டை பங்கயம் பூத்த தன்ன
வண்ணவாய்க் குவளையுண்கண் மருங்கிலாக் கரும்பி னன்னார்
உண்ணிறை கயலை நோக்கி யோடுநீர்த் தடங்கட் கெல்லாம்
கண்ணுள வாங்கொ லென்று கணவரை வினவு வாரும். 1021

௮. தேனகு நறவ மாலைச் செறிகுழற் றெய்வ மன்னன்
தானுடைக் கோல மேனி தடத்திடைத் தோன்ற நோக்கி
நானக நகுகின் றாளிந் நன்னுத றேழை யாமென்
றானமில் விலையி னார முளங்குளிர்ந் துதவு வாரும். 1022

௯. குண்டலந் திருவில் வீசக் குலமணி யார மின்ன
விண்டொடு வரையின் வைகு மென்மயிற் கணங்கள் போலும்
வண்டுளர் கோதை மாதர் மைந்தர்தம் வயிரத் திண்டோட்
டண்டுகள் தழுவு மாசை புனற்கரை சார்கின் றாரும். 1023

௧௦. அங்கிடை யுற்ற குற்றம் யாவதென் றறித றேற்றாம்
செங்கய லனைய நாட்டஞ் சிவப்புறச் சீறிப் போன
மங்கையோர் கமலச் சூழன் மறைந்தன ணறைய மைந்தன்
பங்கய முகமென் றோரா தையுற்றுப் பார்க்கின் றானும். 1024

௧௧. பொற்றொடி தளிர்க்கைச் சங்கம் வண்டொடு புலம்பி யார்ப்ப
எற்றிநீர் குடையுந் தோறு மேந்துபே ரல்கு னின்றும்
கற்றைமே கலைக ணீங்கிச் சீறடி கௌவக் காலில்
சுற்றிய நாக மென்று துணுக்கத்தாற் றுவள்கின் றாரும். 1025

௧௨. குடைந்துநீ ராடு மாதர் குழாம்புடை சூழ வாழித்
தடம்புயம் பொலிய வாண்டோர் தார்கெழு வேந்த னின்றான்
கடைந்தநா ளமுதி னேடுங் கடலிடை வந்து தோன்றும்
மடந்தையர் சூழ நின்ற மந்தரம் போல மாதோ. 1026

௧௩. தொடியுலாங் கமலச் செங்கைத் தூநகைத் துவர்த்த செவ்வாய்க்
கொடியுலா மருங்கு னல்லார் குழாத்தொரு குரிசி னின்றான்
கடியுலாங் கமல வேலிக் கண்ணகன் கான யாற்றுப்
பிடியெலாஞ் சூழ நின்ற பெய்மத யானை யொத்தான். 1027

௧௪. கானமா மயில்க ளெல்லாங் களிகெடக் களிக்குஞ் சாயற்
சோனைவார் குழலி னார்தங் குழாத்தொரு தோன்ற னின்றான்
வானயா றதனை நண்ணி வயின்வயின் விளங்கித் தோன்றும்
மீனெலாஞ் சூழ நின்ற விரிகதிர்த் திங்க ளொத்தான். 1028

௧௫. மேவலாந் தகைமைத் தல்லால் வேழவிற் றடக்கை வீரற்
கேவெலாங் காட்டு கின்ற விணைநெடுங் கண்ணே ரேழை
பாவைமார் பரந்த கோலப் பண்ணையிற் பொலிவாள் வண்ணப்
பூவெலா மலர்ந்த பொய்கைத் தாமரை பொலிவ தொத்தாள்.

௧௬. மிடலுடைக் கொடிய வேலே யென்னலாய் மிளிர்வ வென்னச்
சுடர்முகத் துலவு கண்ணா டோகையர் சூழ நின்றாள்
மடலுடைப் போது காட்டும் வளர்கொடி பலவுஞ் சூழக்
கடலிடைத் தோன்று மென்பூங் கற்பக வல்லி யொத்தாள்.

கஎ. தேரிடைக் கொண்ட வல்குற் றெங்கிடைக் கொண்ட கொங்கை
ஆரிடைச் சென் றுங் கொள்ள வொண்கிலா வழகு கொண்டாள்
வாரிடைத் தனமீ தாட மூழ்கிஞள் வதன மைதீர்
நீரிடைத் தோன் றுந் திங்க ணிழலெனப் பொலிந்த தன்றே. 1031

வே று.

கஅ. மலைக டந்த புயங்கண் மடந்தைமார்
கலைக டைந்தக லல்குல்க டாம்படு
முலைக டந்தமின் முந்தி நெருங்கலால்
நிலைக டந்து பரந்தது நீத்தமே. 1032

கக. செய்ய வாய்வெளுப் பக்கண் சிவப்புற
நெய்ய ராக மழியத் துகிலெகத்
தொய்யின் மாமுலை மங்கையர் தோய்தலாற்
பொய்கை காதற் கொழுநரைப் போன்றதே. 1033

உ௦. ஆன தூயவ ரோடொ டுடிஞல்
ஞான நீரவ ராகுத னன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ. 1034

உக. மிக்க வேந்தர்தம் மெய்யழி சாந்தொடும்
புக்க மங்கையர் குங்குமம் போர்த்தலால்
ஒக்க நீல முகிற்றலை யோடிய
செக்கர் வானக மொத்தது தீம்புனல். 1035

உஉ. காக துண்ட நறுங்கல வைக்களி
ஆக முண்ட தடங்களு நீங்கலால்
பாக டர்ந்த பனிக்கனி வாய்ச்சியர்
வேக டஞ்செய் மணியென மின்னிஞர். 1036

உரு. பாய ரித்திற லான்பசுஞ் சாந்திஞல்
தூய பொற்புயத் துப்பொதி தூக்குறி
மீய ரித்துவி ளக்கவொர் மெல்லியல்
சேய ரிக்கருங் கண்கள் சிவந்தவே. 1037

உச. கதம்ப நாள்விரை கள்ளவிழ் தாதொடும்
ததும்பு பூந்திரைத் தண்புனல் சுட்டதால்
நிதம்ப பாரத்தொர் நேரிழை காமத்தால்
வெதும்பு வாளுடல் வெப்பம் வெதுப்பவே. 1038

௪௫. தைய லாளையோர் தாரணி தோளினான்
நெய்கொ ளோதியி னீர்முகந் தெற்றினான்
செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையி னூட்டுங் களிற்றர சென்னவே. 1039

௪௬. களியு மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி யொத்தன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
நளின மேறிய நாகிள வன்னமே. 1040

௪௭. எரிந்த சிந்தைய ரெத்தனை யென்கெனோ
அரிந்த கூருகி ராலழி சாந்தினால்
தெரிந்த கொங்கைகள் செவ்விய நூல்புடை
வரிந்த வண்கல சங்களை மானுமே. 1041

௪௮. தாழ நின்ற தகைமலர்க் கையினால்
ஆழி மன்னொரு வற்குரைத் தானது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணிற் கடைக்கணிற் சொல்லினாள். 1042

௪௯. தள்ளி யோடி யலைதடு மாறலால்
தெள்ளு நீரிடை மூழ்குசெந் தாமரை
புள்ளி மானனை யார்முகம் போல்கிலா
துள்ள நாணி யொளிப்பன போன்றவே. 1043

௫௦. இனைய வெய்த யிரும்புன லாடிய
வனைக ருங்குழன் மாதரும் மைந்தரு
அனைய நீர்வறி தாகவந் தெய்தினார்
புனைந றுந்துகில் பூணொடு தாங்கினார். 1044

௫௧. மேவி னார்பிரிந் தாரந்த வீங்குநீர்
தாவு தண்மதி தன்னொடுந் தாரகை
ஓவு வானமு முண்ணிறை தாமரைப்
பூவெ லாங்குடி போனதும் போன்றவே. 1045

௫௨. மானி னோக்கியர் மைந்தரோ டாடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினான்
தானு மன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவ னெய்தினான். 1046

௩௩. ஆற்ற லின்மையி னலழிந் தேயுந்தம்
வேற்று மன்னர்தம் மேல்வரும் வேந்தர்போல்
ஏற்று மாதர் முகங்கள்கண் டெங்கணும்
தோற்ற சந்திரன் மீளவுந் தோன்றினன். 1047

நீர்விளையாட்டுப் படலம் முற்றும்.

௨௫. உண்டாட்டுப் படலம்.

௧. வெண்ணிற நறைநிறை வெள்ள மென்னவும்
பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும்
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவுந்
தண்ணிற நெடுநிலாத் தழைத்த தெங்குமே. 1048

௨. கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப்பிரிந்
துலந்தவர்க் குயிர்தொடர் விடமு மாயுடன்
புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே. 1049

௩. ஆறெலாங் கங்கையே யாய வாழிதான்
ஊறுபாற் கடலையே யொத்த குன்றெலாம்
ஈறிலான் கயிலையே யியைந்த வென்னினி
வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே. 1050

௪. எள்ளருந் திசைகளோ டியாரும் யாவையும்
கொள்ளைவெண் ணிலவினாற் கோலங் கோடலால்
வள்ளுறை வயிரவாண் மகர கேதனன்
வெள்ளணி யொத்தது வேலை ஞாலமே. 1051

௫. தயங்குதா ரகைபுரை தாள நீழலும்
இயங்குகான் மிடைந்ததா ளெழினிச் சூழலும்
கயங்கள்போன் றொளிர்பளிங் கடுத்த கானமும்
வயங்குபூம் பந்தரு மகளி ரெய்தினார். 1052

௬. பூக்கம ழோதியர் போது போக்கிய
சேக்கையின் விளைசெருச் செருக்குஞ் சிந்தையார்
ஆக்கிய வமுதென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறு மாந்தன் மேயினார். 1053

எ. மீனுடை வானுடை விஞ்சை நாட்டவர்
ஊனுடை யுடம்பினு ருருவ மொப்பிலார்
மானுடை நோக்கினார் வாயின் மாந்தினார்
தேனுடை மலரிடைத் தேன்பெய் தென்னவே. 1054

அ. உக்கபால் புரைநிலா வுண்ட வள்ளமும்
கைக்கவி னொளிபடச் சிவந்து காட்டத்தன்
மைக்கணுஞ் சிவந்ததோர் மடந்தை வாய்வழிப்
புக்கதே னமிர்தமாய்த் திரிந்த போன்றவே. 1055

கூ. தாமமு நானமுந் ததைந்த தண்ணகிற்
றாமமென் குழலிய ருண்ட தூநறை
ஓமவெங் குழியுறு நெய்யி னுள்ளுறாங்
காமவெங் கனலினைக் கனற்றிக் காட்டிற்றே. 1056

வேறு.

க0. விடனொக்கு நெடிய நோக்கி னமுதொக்கு மின்சொ லார்தம்
மடனொக்கு மடனு முண்டோ வானுத லொருத்தி காணச்
சடனொக்கு நிழலைப் பொன்செய் தண்ணறுந் தேறல் வள்ளத்
துடனொக்க[1] வுவந்து நீயே யுண்ணுதி தோழி யென்றாள். 1057

கக. அச்சநுண் மருங்கு லாளோ ரணங்கனு ளளக பந்தி
நச்சுவேற் கருங்கட் செவ்வாய் நகைமுக மதுவுட் டோன்றப்
பிச்சிநீ யென்செய் தாயிப் பெருநற விருக்க வாளா
எச்சிலை நுகர்தி யோவென் றெயிற்றரும் பிலங்க நக்காள். 1058

கஉ. புறமெலா நகைசெய் தேசப் பொருவரு மேனி வேறோர்
மறமுலாங் கொலைவேற் கண்ணாண் மணியின்வள் ளத்து வெள்ளை
நிறநிலாக் கதிர்கள் பாய நிறைந்தன போன்று தோன்ற
நறவென வதனை[2] வாயின் வைத்தன ளுணுட் கொண்டாள். 1059

கங. யாழ்க்குமின் குழற்கு மின்ப மருளின விவையா மென்னக்
கேட்குமென் மழலைச் சொல்லோர் கிஞ்சுகங் கிடந்த வாயாள்
தாட்கருங் குவளை தோய்ந்த தண்ணறைச் சாடி யுட்டன்
வாட்கணி னிழலைக் கண்டாள் வண்டென வோச்சு கின்றாள். 1060

(பிரதி) 1. நுகர்ந்த நீயே. 2. நறவிலா ததனை.

கச. களித்தகண் மதர்ப்ப வாங்கோர் கனங்குழை கள்ளி னுள்ளால்
வெளிப்படு கின்ற காட்சி வெண்மதி நிழலை நோக்கி
அளித்தன னபயம் வானத் தரவினை யஞ்சி நீவந்
தொளித்தனை நடுங்க லென்றுங் கினியன வுணர்த்து கின்றாள். 1061

கரு. கண்மணி வள்ளத் துள்ளே களிக்குந்தன் முகத்தை நோக்கி
விண்மதி மதுவி னாசை வீழ்ந்ததென் றொருத்தி யுன்னி
உண்மகிழ் துணைவ னோடு மூடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாதி யாகில் தருவனிந் நறவை யென்றாள். 1062

கசு. எள்ளொத்த கோல மூக்கி னேந்திழை யொருத்தி பூங்கை
தள்ளத்தண் ணறவை யெல்லாந் தவிசிடை யுகுத்துந் தேறாள்
உள்ளத்தின் மயக்கந் தன்னு ளுட்புறத் துண்டென் றெண்ணி
வள்ளத்தை மறித்து வாங்கி மணிநிற விதழின் வைத்தாள்.

கஎ. வான்றனைப் பிரித லாற்று வண்டினம் வச்சை மாக்கள்
ஏன்றமா நிதியம் வேட்ட விரவல ரென்ன வார்ப்பத்
தேன்றருங் கமலச் செவ்வாய் திறந்தன ளுகர நாணி
ஊன்றிய கழுநீர் நாளத் தாளினா லொருத்தி யுண்டாள். 1064

கஅ. புள்ளுறை கமல வாவிப் பொருகயல் வெருவி யோட
வள்ளுறை கழித்த வாள்போல் வசியுற வயங்கு கண்ணாள்
கள்ளுறை நெறிமென் கூந்தற் களியிள மஞ்ஞை யன்னாள்
உள்ளுறை யன்ப னுண்ணா னெனவுன்னி நறவை யுண்ணாள்.

ககூ. அழிகின்ற வறிவி னாலோ பேதைமை யாலோ வாற்றிற்
சுழியொன்றி நின்ற தன்ன வுந்தியா ளொருத்தி செந்தேன்
பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரைக் கிழித்துக் கீழ்வந்
திழிகின்ற கொழுநி லாவை நறவென வள்ளத் தேற்றாள். 1066

உ0. மின்னென நுடங்கு கின்ற மருங்குலா ளொருத்தி மெல்ல
இன்னமு தனைய வின்சொ லிடைதடு மாறி யேய்ந்த
வன்னமே கலையை நீக்கி மலர்த்தொடை யல்குல் சூழ்ந்தாள்
பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனைய லுற்றாள். 1067

வேறு.

உக. கூற்றுறழ் நயனங்கள் சிவப்பக் கூனுதல்
ஏற்றிவா ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் கரதல மறிக்கு மாதொரு
சீற்றமா மபிநயந் தெரிக்கின் றாரினே. 1068

உஉ. துடித்தவான் றுவரிதழ்த் தொண்டைத் தூநிலாக்
கடித்தவா லெயிறுக ளதுக்கிக் கண்களாம்
வடித்தவெங் குருதிவேல் விழிக்கு மாதர்மெய்
பொடித்தவேர்[1] புறத்துகு நறவம் போன்றவே. 1069

உங. கனித்திர ளிதழ்பொழி செம்மை கண்புக
நினைப்பதொன் றுரைப்பதொன் றுயொர் நேரிழை
தனித்தட மரைமலர் முகத்த சாபமும்
குனித்தது பனித்தது குழலித் திங்களே. 1070

உச. இலவிதழ்த் துவர்விட வெயிறு தேன்வர
முலைமிசைக் கச்சொடு கலையு மூட்டற
அலைகுழல் சரிதர வசதி யாடலாற்
கலவிசெய் கொழுநருங் கள்ளு மொத்தவே. 1071

உரு. கனைகடற் காமனாற்[2] கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் றறியப் போக்குமோர்
இனமணிக் கலையினு டோழி நீயுமென்
மனமெனத் தாழ்தியோ வருதி யோவென்றாள். 1072

உசு. மான்விழி யொருத்தியோர் மதுகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னாரெலாம்
போனவர் போனவர்த் தொடர்ந்து போக்கினாள்
தானுமங் கவர்கள்பின் றமிய ளேகினாள். 1073

உஎ. மன்றலு ளொருசிறை யிருந்தொர் வாணுதல்
தன்றுணைக் கிள்ளையைத் தழீஇயென் னாவியை
இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய் தாயெனக்
கன்றிலோ டொத்தியென் றழுது சீறினாள். 1074

உஅ. விரைசெய்பூஞ் சேக்கையந் தெப்ப மீமிசைக்
கரைசெயா வாசையங் கடலு ளாளொரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயுங் கிள்ளையை யுவந்து கூவினாள். 1075

உகூ. வளைபயின் முன்கையோர் மயில னாட்குத்தன்
னிளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணாலியே. 1076

(பிரதி) 1. பொடித்ததோ. 2. கனைகடற் கள்ளினாற்

௩௰. செற்றமுன் புரிந்ததோர்[1] செம்மல் வெம்மையாற்
பற்றலு மல்குலிற் பரந்த மேகலை
அற்றுகு மணியின்முன் பவனி சேர்ந்தன
பொற்றொடி யொருத்திகண் பொருத முத்தமே. 1077

௩௧. தோடவிழ் கூந்தலா ளொருத்தி தோன்றலோ
டூடுகே னோவுயி ருருகு நோய்கெடக்
கூடுகே னோவவன் குணங்கள் வீணையிற்
பாடுகே னோவெனப் பலவும் பன்னினாள். 1078

௩௨. மாடகம் பற்றிய மகர வீணையிற்
றோடவிழ் மலர்க்கரஞ் சிவப்பத் தொட்டனள்
பாடின ளொருத்திதன் பாங்கு ளார்களோ
டூடின துரைசெயா ளுள்ளத் துள்ளதே. 1079

௩௩. குழைத்தமென் கொம்பனா ளொருத்தி கூடலை
இழைத்தன ளவளஃ திட்ட போதெலாம்
பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பொடும்
உழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் டென்னவே. 1080

௩௪. பந்தணி விரலினா ளொருத்தி பையுளாற்
சுந்தர னொருவன்பாற் றூது போக்கினாள்
வந்தன னெனக்கடை யடைத்து மாற்றினாள்
சிந்தனை தெரிந்தில சிவந்த நாட்டமே. 1081

௩௫. உய்த்தபூம் பள்ளியி னூட னீங்குவாள்
சித்தமுண் டொருத்திதன் னன்பன் றோர்கிலன்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றாள். 1082

௩௬. விதைத்தமென் காதலின் வித்து மெய்ந்நிறை
இதைப்புன நனைத்தலின் முளைத்த தேயெனப்
பதைத்தன ளொருவன்மே லொருத்தி பஞ்சடி-
உதைத்தலும் பொடித்தன வுரோம ராசியே. 1083

௩௭. ஏய்ந்தபே ரெழிலினா னொருவ னெய்தினான்
வேய்ந்தபோ லெங்கணு மனங்கன் வெங்கணை
பாய்ந்தபூம் பள்ளியிற் படுத்த பல்லவந்
தீய்ந்தவா நோக்கினான் தளிர்க்குஞ் சிந்தையான். 1084

(பிரதி) 1. புரிந்ததோ.

௩௮. பொலிந்தவாண் முகத்தினான் பொங்கித் தன்னையு
மலிந்தபே ருவகையன் மாற்று வேந்தரை
நலிந்தவா ளுழவனோர் நங்கை கொங்கைபோய்
மெலிந்தவா நோக்கித்தன் புயங்கள் வீங்கினான். 1085

௩௯. ஊட்டிய சாந்துவெந் துலரும் வெம்மையான்
நாட்டினை யளித்திநீ யென்று நல்லவர்
ஆட்டுநீர்க் கலசமே யென்ன வாயதோர்
வாட்டொழின் மன்னற்கோர் மங்கை கொங்கையே. 1086

௪௰. பயிருறு கிண்கிணி பரந்த மேகலை
வயிரவொண் பூண்களை வாங்கி நீக்கினாள்
உயிருறு தலைவன்பாற் போக வுன்னினாள்
செயிருறு திங்களைத் தீய நோக்கினாள். 1087

௪௧. ஏனுமிவ் வன்மையை யென்னென் றுன்னுதும்
ஆலைமென் கரும்பிலா வொருவற் காங்கொரு
சோலைமென் குயிலனாள் சுற்றி வீக்கிய
மாலையை நிமிர்த்தில வயிரத் தோள்களே. 1088

௪௨. சோர்குழ லொருத்திதன் வருத்தஞ் சொல்லுவாள்
மாரனை நோக்கியோர் மாதை நோக்கினாள்
காரிகை யவளிவள் கருத்தை நோக்கியோர்
வேரியந் தெரியலான் வீடு நோக்கினாள். 1089

௪௩. சினங்கெழு வேற்கையோர் செம்மல் பாலொரு
புனங்குழை மயிலனாள் கடிது போயினாள்
மனங்குழை நறவமோ மாலை தான்கொலோ
அனங்கனோ யார்கொலோ வழைத்த தூதரே. 1090

௪௪. தொகுதரு காதற்குத் தோற்ற சீற்றத்தோர்
வகிர்மதி நெற்றியாண் மழைக்க ணாலிவந்
துகுதலு முற்றதென் னென்று கொற்றவன்
நகுதலு நக்கன[1] ணாணு நீக்கினாள். 1091

௪௫. பொய்த்தலை மருங்குலா ளொருத்தி புல்லிய
கைத்தல நீத்தவன் கருத்தை நோக்கினாள்
சித்திரம் போன்றதச் செயலோர் தோன்றற்குச்
சத்திர மார்பிடைத் தைத்த தொத்ததே. 1092

(பிரதி) 1. நோக்கினா.

௪௬. மெல்லிய லொருத்திதான் விரும்புஞ் சேடியைப்
புல்லிய கையினள் போதி தூதெனச்
சொல்லுவா னுறுமுற நாணுஞ் சொல்லலள்
எல்லையில் பொழுதெலா மிருந்து விம்மினாள். 1093

௪௭. ஊறுபே ரன்பினா ளொருத்தி யாங்கொரு
மாறிலாக் காதலான் செவ்வி மாறொரு
நாறுபூங் கோதைபாற் சொல்ல நண்ணுவாள்
வேறுவே றுறச்சில மொழிவி ளம்பினாள். 1094

௪௮. கருத்தொரு தன்மைய துயிரு மொன்றுதம்
அருத்தியு மத்துணை யாய தன்மையால்
ஒருத்தியு மொருவனு முடலு மொன்றெனப்
பொருத்தின ரிவரெனப் புல்லி னாரரோ. 1095

௪௯. வெதிர்பொரு தோளினா ளொருத்தி வேந்தன்வந்
தெதிர்தலுந் தன்மன மெழுந்து முன்செல
மதிமுகங் கதுமென வணங்கி னாளவன்
புதுமையோ விதுவென வச்சம் பூத்ததே. 1096

௫௦. துனிவரு நலத்தொடுஞ் சோர்கின் றாளொரு
குனிவரு நுதலிக்குக் கொழுந னின்றியே
தனிவருந் தோழியுந் தாயு மொத்தன
இனியபூந் தென்றலு மிரவு மென்பவே. 1097

௫௧. ஆக்கிய காதலா ளொருத்தி யந்தியுள்
தாக்கிய தெய்வமுண் டென்னுந் தன்மையால்
நோக்கின ணின்றன ணுவன்ற கேட்கிலள்
போக்கின தூதினோ டுணர்வும் போக்கினாள். 1098

௫௨. மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்
பிறப்பினொ டிறப்பெனப் பெயருஞ் சிந்தையாள்
துறப்பரு முகிலிடைத் தோன்று மின்னெனப்
புறப்படும் புகுமொரு பூத்த கொம்பனாள். 1099

௫௩. எழுதருங் கொங்கைமே லனங்க னெய்தவம்
புழுதவெம் புண்களில் வளைக்கை யொற்றினாள்
அழுதனள் சிரித்தன ளற்றஞ் சொல்லலள்
தொழுதன ளொருத்தியைத் தூது வேண்டினாள். 1100

௫௪. ஆர்த்தியு முற்றது மறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையி னுணர்த்துதல் வறிதன் றேமனம்
வேர்த்தனள் வெதும்பினண் மெலிந்து சோர்ந்தனள்
பார்த்தன ளொருத்திதன் பாங்க னுளேயே. 1101

௫௫. தனங்களி னிளையவர் தம்மின் மும்மடி
கனங்களி யிடையிடை களிக்குங் கள்வனாய்
மனங்களி னுழைதர மாந்து தேறலை
அனங்கனு மருந்தினா னுதல் வேண்டுமே. 1102

வேறு.

௫௬. நறைகமழ லங்கன் மாலை நனிநறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி
நிறையக லல்குல் புல்குங் கலைகழித் தகல நீத்தார்
அறைபறை யனைய நீரா ரருமறைக் காவ ரோதான். 1103

௫௭. பொன்னருங் கலனுந் தூசும் புறத்துள துறத்தல் வம்பே
நன்னுத லொருத்தி தன்பா லகத்துள நாணு நீத்தாள்
உன்னருந் துறவு பூண்ட வுரனுடை யொருவ னேபோல்
தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற் றன்றே. 1104

௫௮. பொருவரு மதனன் போல்வா னொருவனும் பூவின் மேலத்
திருவினுக் குவமையன்னா ளொருத்தியுஞ் சேக்கைப் போரில்
ஒருவருக் கொருவர் தோலா ரொத்தன ருயிரு மொன்றே
இருவர துணர்வு மொன்றே யென்றபோ தியாவர் வெல்வார்.

௫௯. கொள்ளைப்போர் வாட்க ணாளங் கொருத்தியோர் குமர னன்னான்
வள்ளத்தா ரகலந் தன்னை மலர்க்கையாற் புதைப்ப நோக்கி
உள்ளத்தா ருயிர னண்மே லுதைபடு மென்று நீர்நுங்
கள்ளத்தாற் புதைத்தி ரென்னா முன்னையிற் கனன்று மிக்காள்.

௬0. பாலுள பவளச் செய்வாய்ப் பல்வளை நிகர்த்த மென்றோள்
வேலுள நோக்கி னாளோர் மெல்லியல் வேலை யன்ன
மாலுள சிந்தை யானோர் மழைவளர் தடக்கை யாற்கு
மேலுள வரம்பை மாத ரென்பதோர் விருப்பை யீந்தாள்.

வேறு.

௬௧. புனத்துறை மயிலனாள் கொழுநன் பொய்யுரை
நினைத்தனள் சீறுவா ளொருத்தி நீடிய
சினத்தொடு காதலன் செய்த போரிடை
மனத்துறை காதலே வாகை கொண்டதே. 1108

௬௨. கொலையுரு வமைந்தெனக் கொடிய நாட்டத்தோர்
கலையுரு வல்குலாள் கணவற் புல்குவாள்
சிலையுரு வழிதரச் சிறந்த மார்பிற்றன்
முலையுரு வினவென முதுகை நோக்கினாள். 1109

௬௩. குங்குமந் திமிர்ந்தன கோதை சோர்ந்தன
சங்கின முரன்றன கலையுஞ் சாற்றின
பொங்கின சிலம்பொலி பூச லிட்டன
மங்கைய ரிளநல மைந்த ருண்ணவே. 1110

௬௪. துனியுறு புலவியைக் காதற் சூழ்சுடர்
பனியெனத் துரத்தலும் பதைக்குஞ் சிந்தையாற்
புனையிழை யொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள். 1111

௬௫. வட்டவாண் முகத்தொரு மயிலு மன்னனும்
கிட்டிய போதுடல் கிடைக்கப் புல்லினார்
விட்டிலர் கங்குலின் விடிவு கண்டிலர்
ஒட்டிய வுடல்பிரிப் புணர்கி லாமையால். 1112

௬௬. அருங்களி மால்களி றனைய வீரர்க்கும்
கருங்குழன் மகளிர்க்குங் கலவிப் பூசலால்
நெருங்கிய வனமுலை சுமக்க நேர்கலா
மருங்கெனத் தேய்ந்தது மாலைக் கங்குலே. 1113

௬௭. கடையுற நன்னெறி காண்கி லாதவர்க்
கிடையுறு திருவென விந்து நந்தினான்
படர்திரைக் கருங்கடற் பரமன் மார்பிடைச்
சுடர்மணி யாமென விரவி தோன்றினான். 1114

உண்டாட்டுப் படலம் முற்றும்.

௨௬. எதிர்கோட் படலம்.

வேறு.

௧. அடாநெறி யடைதல் செல்லா வருமறை யறைந்த[1] நீதி
விடாநெறிப் புலமைச்செங்கோல் வெண்குடைவேந்தர்வேந்தன்
படாமுக மலையிற் றோன்றிப் பருவமுற் றருவி நல்கும்
கடாநிறை யாறு பாயுங் கடலொடுங் கங்கை சேர்ந்தான். 1115

௨. கப்புடை நாவி னாக ருலகமுங் கண்ணிற் றோன்றத்
துப்புடை மணலிற் றூகிக் கங்கைநீர் சுருங்கிக் காட்ட
அப்புடை யனீக வேலை யகன்புனன் முகந்து மாந்த
உப்புடைக் கடலுந் தெண்ணீ ருண்ணசை யுற்ற தன்றே. 1116

௩. ஆண்டுநின் றெழுந்து போகி யகன்பணை மிதிலை யென்னும்
ஈண்டுநீர் நகரின் பாங்க ரிருநிலக் கிழவ னெய்தத்
தாண்டுமாப் புரவித் தானைத் தண்ணளிச் சனக னென்னும்
தூண்டரு வயிரத் தோளான் செய்தது சொல்ல லுற்றாம். 1117

௪. வந்தன னரச னென்ன மனத்தெழு முவகை பொங்கிக்
கந்தடு களிறுந் தேருங் கலினமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான். 1118

௫. கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்க ளெல்லாம்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் திருவைத் தந்த பாற்கட லெதிர்வ தேபோன்
மங்கையைப் பயந்த வேந்தன் வளநகர் வந்த தன்றே. 1119

வேறு.

௬. இலைகுலா வயிலினா னனிகமே ழெனவுலாய்
நிலைகுலா மகரநீர் நெடியமா கடலெலாம்
அலகின்மா களிறுதேர் புரவியா ளெனவிராய்
உலகெலா நிமிர்வதே பொருவுமோ ருவமையே. 1120

௭. தொங்கல்வெண் குடைதொகைப் பிச்சமுட் படவிராய்
எங்கும்விண் புதைதரப் பகன்மறைந் திருள்செயப்
பங்கயஞ் செய்யவும் வெளியவும் பலபடத்
தங்குதா மரையுடைக் கானமே சாலுமே. 1121

(பிரதி) 1. நிறைந்த

அ. கொடியுளா ளோதனிக் குடையுளா ளோகுலப்
படியுளா ளோகடற் படையுளா ளோபகர்[1]
மடியிலா வரசினுன் மார்புளா ளோவளர்
முடியுளா ளோதெரிக் துணர்கிலா முளரியாள். 1122

௯. வார்முகங் கெழுவுகொங் கையர்கருங் குழலுள்வண்
டேர்முழங் கரவமே ழிசைமுழங் கரவமே
தேர்முழங் கரவம்வெண் டிரைமுழங் கரவமே
கார்முழங் கரவம்வெங் கரிமுழங் கரவமே. 1123

௧0. சூழுமா கடல்களுந் திடர்படத் துகடவழ்ந்
தேழுபா ரகமுமுற் றுளதெனற் கெளிதரோ
ஆழியா னுலகளந் தன்றுதாள் சென்றவப்
பூழையூ டேபொடித் தப்புறம் போர்த்ததே. 1124

௧௧. மன்னெடுங் குடையிடைந் தடையவான் மறைதரத்
துன்னிடும் நிழல்வழங் கிருடோப் பெளிதரோ
பொன்னிடும் பூணிடும் புனைமணிக் குலமெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவொடே. 1125

௧௨. தாவின்மன் னவர்பிரான் வரமுரட் சனகனும்
ஏவருஞ் சிலையினு னெதிர்வரும் நெறியெலாம்
தூவுதண் சுண்ணமுங் கனகநுண் டூளியும்
பூவின்மென் றுதுரும் பொடியுமே பொடியெலாம். 1126

௧௩. நறுவிரைத் தேனுநா வியுநறுங் குங்குமத்
தெறியகிற் றேய்வையு மான்மதத் தேக்கரும்
வெறியுடைக் கலவையும் விரவுசே றுறமிகுஞ்
செறிமதக் கலுழிபாய் சேறுமே சேறெலாம். 1127

௧௪. மன்றலங் கோதையார் மணியினும் பொன்னினும்
சென்றுவந் தலவுமச் சிவிகைநிழலதோ
வென்றதிண் கொடியொடும் நெடுவிதா னமும்விராய்
நின்றவெண் குடைகளி னிழல்களே நிழலெலாம். 1128

௧௫. மாறிலா மதுகையான் வருபெருந் தானைமேல்
ஊறுபே ருவகையா னனிகம்வந் துற்றபோ
தீறிலோ தையினுலா மெறிதிரைப் பரவையை
ஆறுபாய் கின்றதோ ரமலைபோ லானதே. 1129

(பிரதி) 1. வதன்

கசு. கந்தையே பொருகரிச் சனகனுங் காதலோ
டுந்தவோ தரியதோர் தன்மையோ டுலகுளோர்
தந்தையே யனையவத் தகவினன் முன்புதன்
சிந்தையே பொருநெடுந் தேரின்வந் தெய்தினான். 1130

கஎ. எய்தவத் திருநெடுந் தேரிழிந் தினியதன்
மொய்கொடுஞ் சேனைபின் னிற்கமுன் சேறலும்
கையின்வந் தேறெனக் கடிதின்வந் தெய்தினான்
ஐயனும் முகமலர்ந் தகமுறத் தழுவினான். 1131

கஅ. தழுவினின் றவனிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்சிந் தனையினான் வரிசையின் னளவளாய்
எழுகமுந் துறவெனா வினிதுகந் தெய்தினான்
உழுவைமுந் தரியனா னெவரினும் முயரினான். 1132

க௯. இன்னவா றிருவரும் மினியவா றேகவத்
துன்னுமா நகரினின் றெதிர்வரத் துன்னினான்
தன்னையே யனையவன் றழலையே யனையவன்
பொன்னின்வார் சிலையிறப் புயநிமிர்த் தருளினான். 1133

உ0. தம்பியுந் தானுமத் தானைமன் னவனகர்ப்
பம்புதிண் புரவியும் படைஞரும் புடைவரச்
செம்பொனின் பசுமணித் தேரின்வந் தெய்தினான்
உம்பரும் மிம்பரு முரகருந் தொழவுளான். 1134

உக. யானையோ பிடிகளோ விரதமோ விவுளியோ
ஆனபே ருறையிலா நிறைவையா ரறிகுவார்
தானைவேள் சனகனே வலிநெடுந் தாதைமுன்
போனபே ரிருவர்தம் புடைவரும் படையினே. 1135

உஉ. காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொருவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினான். 1136

உங. அனிகம்வந் தடிதொழக் கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந்[1] தெழுதலுந் தழுவினான்
மனுவெனுந் தகையன்மார்[2] பிடைமறைந் தனமலைத்
தனிநெடுஞ் சிலையிறத்[3] தவழ்தடங் கிரிகளே. 1137

(பிரதி) 1 தெழுதிறைஞ்சிடுதலும் 2. பிடை மறைந்தனன் 3. தவழ் தடக்கையினன்.

௨௪. இளையபைங் குரிசில்வந் தடிபணிந் தெழுதலும்
தளைவருந் தொடையன்மார் புறமிகத் தழுவினான்
களைவருந் துயரறக் ககனமெண் டிசையெலாம்
விளைதரும் புகழினா னெவரினும் மிகுதியான். 1138

௨௫. காதலோ வறிகிலங் கரிகளைப் பொருவினார்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியக் குமரர்வந் தெய்தலும்
தாதைபோ டொத்ததத் தானையின் றன்மையே. 1139

௨௬. உன்னுபே ரன்புமிக் கொழுகியொந் தொண்கணீர்
பன்னுதா ரைகடாத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினான்
தன்னையத் தாதைமுன் றழுவினா னென்னவே. 1140

௨௭. கரியவன் பின்புசென் றவனருங் காதலிற்
பெரியவன் றம்பியென் றனையதோர் பெருமையப்
பொருவருங் குமரர்தம் புனைநறுங் குஞ்சியால்
இருவர்பைங் கழலும்வந் திருவரும் வருடினார். 1141

௨௮. கோல்வருஞ் செம்மையுங் குடைவருந் தண்மையும்[1]
சால்வருஞ் செல்வமென் றுணர்தருந் தாதைதன்
மேல்வருந் தகைமையான் மிகவிளங் கினர்கடாம்
கால்வரும் பொருவினான் மறையெனு நடையினார். 1142

௨௯. சான்றெனத் தகையசெங் கோலினா னுயிர்கடாம்
ஈன்றநற் றாயெனக் கருதுபே ரருளினான்
ஆன்றவிச் செல்வமத் தனையுமொத் தருகுறத்
தோன்றலைக் கொண்டுமுற் செல்கெனச் சொல்லினான். 1143

௩௦. கற்றைவார் சடையினான் கைக்கொளுந் தனுவிறக்
கொற்றநீள் புயநிமிர்த் தருளுமக் குரிசிறன்
பெற்றதா யரையுமப் பெற்றியிற் றொழுதெழுந்
துற்றபோ தவர்மனத் துவகையா ருரைசெய்வார். 1144

௩௧. தொழுதிரண் டருகுமன் புடையதம் பியர்தொடர்ந்
தழிவில்சிந் தையினொடு மாடமா மிசைவரத்
தழுவுசங் குடனெடும் பணைதழங் கிடவெழுந்
தெழுதருந் தகையதோர் தேரின்மே லேகினான். 1145

(பிரதி) 1. குடிவருந் தன்மையும்.

௩௨. பஞ்சிசூழ் மெல்லடிப் பாவைமார் பண்ணைசூழ்
மஞ்சுசூழ் நெடியமா ளிகையின்வந் திடைவிராய்
நஞ்சுசூழ் விழிகள்பூ மழையின்மேல் விழநடந்
திஞ்சிசூழ் மிதிலைமா வீதிசென் றெய்தினான். 1146

௩௩. சூடகந் துயல்வரக் கோதைசோர் தரமலர்ப்
பாடகம் பரதநூல் பகரவெங் கடகரிக்
கோடரங் கிடவெழுங் குவிதடங் கொங்கையார்
ஆடரங் கல்லவே யணியரங் கயலெலாம். 1147

௩௪. பேதைமார் முதலினோர்ப் பேரிளம்பெண்கடாம்
ஏதிலா மாரவே ளெய்யவந் தெய்தினார்
ஆதிவா னவர்பிரா னணுகலா லணிகொள்தேர்
ஓதியார் வீதிவா யுற்றவா றுரைசெய்வாம். 1148

எதிர்கோட் படலம் முற்றும்.

---

௨௭. உலாவியருள் படலம்.

௧. மானினம் வருவ போன்று மயிலினந் திரிவ போன்றும்
மீனின மிளிர்வ போன்று மின்னின மிடைவ போன்றும்
தேனினஞ் சிலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்பவெங்கும்
பூநனை கோதை மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.

௨. விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்க டாங்கா ரிடைதடு மாறத் தாழார்
நெருங்கினர் நெருங்கிப் புக்கு நீங்குமி னீங்கு மென்றென்
றருங்கல மனைய மாதர் தேனுக ரளியின் மொய்த்தார். 1150

௩. பள்ளத்துப் பாயு நன்னீ ரனையவர் பானல் பூத்த
வெள்ளத்துப் பெரிய கண்ணார் மென்சிலம் பலம்ப மென்பூத்
தள்ளத்தம் மிடைக ளேவத் தமைவலித் தவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்து நாமென் றோடுகின் றாரு மொத்தார். 1151

௪. கண்ணினாற் காத லென்னும் பொருளையே காண்கின் றோமிப்
பெண்ணினீர் மையினா லெய்தும் பயனின்று பெறுது மென்பார்
மண்ணினீ ருலர்ந்து வான மழையற வறந்த காலத்
துண்ணுநீர் கண்டு வீழு முழைக்குலம் பலவு மொத்தார். 1152

௫. அரத்தமுண் டனைய மேனி யகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக வில்லிற நிமிர்ந்து நீங்கும்

வரைத்தடந் தோளுங் காண மறுகினின் வீழு மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கு மீயின மென்ன லானார்.

௬. வீதிவாய்ச் செல்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் றேரிற் போனான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ணா னென்றே
ஓதிய பெயர்க்குத் தானே யுறுபொரு ளுணர்த்தி விட்டான். 1154

௭. எண்கடந் தலகி லாதின் றேகுறா மிவன்றே றென்று
பெண்கடந் தம்மி னொந்து பேதுறு கின்ற வேலை
மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான்றன்
கண்கட வாமற் காத்த காரிகை பெரிய ளேகாண். 1155

௮. பயிரொன்று கலையுஞ் சங்கும் பழிப்பரு நலனும் பண்பும்
செயிரின்றி யலர்ந்த பொற்புஞ் சிந்தையு முணர்வுந் தேசும்
வயிரஞ்செய் பூணு நாணு மடனுந்தன் னிறையு மற்றும்
உயிரொன்றுமொழியவெல்லா முகுத்தொருதெரிவைநின்றாள்.

௯. குழையுறு மிளிருங் கெண்டை கொண்டலி னுலி சிந்தத்
தழையுறுக் கரும்பின் சாபத் தனங்கவேள் சரங்கள் பாய்ந்த
இழையுறுப் புண்ணா றாத விளமுலை யொருத்தி சோர்ந்து
மழையுறு மின்னி னன்ன மருங்குல்போ னுடங்கி நின்றாள்.

௧௦. பஞ்சிவர் விரலி னார்தம் படைநெடுங் கண்க ளெல்லாம்
செஞ்செவே யையன் மெய்யிற் கருமையைச் சேர்ந்த வோதாம்
மஞ்சன மேனி யான்றன் மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் போர்க்க விருண்டதோ வறிகி லேமால். 1158

௧௧. மாந்தளிர் மேனி யாளோர் வானுதன் மதன னெங்கும்
பூந்துணர் வாளி மாரி பொழிகின்ற பூச லேக்கி
வேந்தர்கோ னுனை நோக்கான் வீரன்வில் லாண்மை பாரான்
ஏந்திழை யாரை யெய்வான் யாவனோ வொருவ னென்றாள்.

௧௨. விற்றங்கு புருவ நெற்றி வெயர்வரப் பசலை விம்ம[1]
சுற்றெங்கு மெறிப்ப வுள்ளஞ் சோரவோர் தோகை நின்றாள்
கொற்றஞ்செய் கொலைவே லென்னக் கூர்நுதிக் கொடிய கண்ணாள்
மற்றொன்றுங் காண்கி லாநா டமியனோ வள்ள லென்றாள். 1160

௧௩. தொன்னயந் தொடர்ந்த காமச் சுவையையோ ருருவ மாக்கி
இன்னயந் தெரிய வல்லா னெழுதிய தென்ன நின்றாள்

(பிரதி) 1. மின்ன.

பொன்னையும் பொருவு நீராள் புனைந்தன வெல்லாம் போக்கித்
தன்னையுந் தாங்க லாதா டுகிலொன்று தாங்கிக் கொண்டாள்.

கச. மைக்கருங் கூந்தற் செவ்வாய் வாணுத லொருத்தி யுள்ளம்
நெக்கென வுருகு கின்றா ணைஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கன னேகா வண்ணங் கண்ணெனும் புலங்கொள் வாயில்
சிக்கென வடைத்துத் தோழி சேருது மமளி யென்றாள். 1162

கரு. தாக்கணங் கனைய மேனி தைத்தவேள் சரங்கள் பாராள்
வீக்கிய கலையுந் தூசும் வேறுவே றான தோராள்
ஆக்கிய பாவை யன்னா ளொருத்தியாண் டமலன் மேனி
நோக்குகின் றாரை யெல்லா மெரியெழ நோக்கு கின்றாள். 1163

கசு. [1]களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை யளப்ப கள்ளம்
ஒளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள் ளூற
வெளுப்பன[2] கறுப்ப வான வேற்கணா ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காணவந்தாள் வெதுப்பொடுங் கோயில் புக்காள்.

கஎ. கருங்குழற் பாரம் வார்கொள் கனமுலை கலைசூ ழல்குல்
நெருங்கின மறைப்ப வாண்டோர் நீக்கிடம் பெறாது விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும் பேரெழி லாசை தூண்ட
மருங்குலின் வெளியி னூடே வள்ளலை நோக்கு கின்றாள்.

கஅ. வரிந்தவா ளனங்கன் வாளி மனங்கழன் றகவு மாதர்
எரிந்தபூ ணினமுங் கொங்கை வெயர்த்தபோ திழிந்த சாந்தும்
சரிந்தமே கலையு முத்துஞ் சங்கமுந் தாழ்ந்த கூந்தல்
விரிந்தபூந் தொடையு மன்றி வெள்ளிடை யரிதவ் வீதி. 1166

கசு. தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணா ரியாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னா னுருவுகண் டாரை யொத்தார்.

வேறு.

உ0. தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவ ளுள்ளத் தொடுங்கினன்
வைய முற்றும் வயிற்றி லடக்கிய
ஐய னிற்பெரி யாரினி யாவரோ. 1168

(பிரதி) 1. களிப்பன மதர்ப்ப நீண்டு களிப்பினை யொளிப்பக் கள்ளம்
2. விளர்ப்பன.

உக. அலம்பு பாரக் குழலியொ ராயிழை
சிலம்பு பேரொலி மேகலை செய்திட
நலம்பெய் கொம்பி னடந்துவந் தெய்தினாள்
புலம்பு சேடியர் கைம்மிசைப் போயினாள். 1169

உஉ. அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை யேயுமொ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறத் தாட்கொண்டு காவென்றாள். 1170

உங. மைத வழ்ந்த கருங்கணார் வாணுதல்
செய்தவன் றனித்தேர்மிசைச் சேறல்விட்
டெய்த வந்துநின் றாணுமெய் தாதது
கைத வங்கொல் கனவுகொ லாமென்றாள். 1171

உச. மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில ளின்னுயிர் சோர்கின்றாள்
போத ரிக்கட் பொலங்குழைப் பூண்முலைச்
சீதை யெத்தவஞ் செய்தன ளோவென்றாள். 1172

உரு. பழுதி லாதொரு பாவையன் னாள்பதைத்
தழுது வெய்துயிர்த் தன்புடைத் தோழியைத்
தொழுது சோர்ந்தயர் வாளொரு தோன்றலை
எழுத லாகுங்கொல் மன்மத னாலென்றாள். 1173

உசா. வண்ண வாயொரு வாணுதல் மானுடர்க்
கெண்ணுங் காலிவ் விலக்கண மெய்திட
ஒண்ணு மோவென் றுணர்த்துநின் றேன்மலர்க்
கண்ண னேயிவன் கண்டிடும் பின்னென்றாள். 1174

உஎ. கனக நூபுரங் கைவளை யோடுக
மனநெ கும்படி வாடியொர் வாணுதல்
அனக னிங்கக ரெய்திய தாதியிற்[1]
சனகன் செய்த தவப்பய னாலென்றாள். 1175

உஅ. நனிவ ருந்தி நலங்குடி போயிடப்
பனிவ ருங்கணார் பாசிழை யல்குலாள்
முனிவ ருங்குல மன்னரு மொய்ம்பறத்
தனிவ ருங்கொல் கனவின் றலையென்றாள். 1176

(பிரதி) 1. தாதலிற்

௨௯. புனங்கொள் கார்மயில் போலுமோர் பொற்றொடி
மனங்கொள் காதன் மறைத்தலை யெண்ணினாள்
அனங்க னன்ன தறிந்தன னற்றந்தான்
மனங்கள் போல முகமு மறைக்குமே. 1177

௩0. இணைநெ டுங்கணி னிந்து முகத்திபூ
வணைபு குந்திடி யுண்ட வாரவெனப்
புணர்ந லங்கிளர் கொங்கை புழுங்கிட
உணர்வ ழுங்க [1]வுயிர்த்தன ளாவியே. 1178

௩௧. ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு மாறுவார்
தேம்பு சிற்றிடைச் சிதையைப் போற்சிறி
தேம்ப லுற்றில ரெங்ஙன முய்வரோ. 1179

௩௨. வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோ
டார்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்த னித்தனை சிதையிற் செங்கணிற்
பார்த்தி லானுட் பரிவில னோவென்றாள். 1180

௩௩. வையம் பற்றிய மங்கைய ரெண்ணிலார்
ஐயன் பொற்புக் களவிலை யாதலால்
எய்யும் பொற்சிலை மாரனு மென்செய்தான்
கையம் பற்றுடை வாளினுங் கைவைத்தான். 1181

௩௪. நான வார்குழ ஞரிய ரோடலால்
வேனில் வேளொடு மேனுறை வார்களோ
டான பூச லறிந்தில மம்புபோய்
வான நாடியர் மார்பினுந் தைத்தவே. 1182

௩௫. மருண யந்த மடந்தையர் மாட்டொரு
பொருண யந்திலன் போகின்ற தேயிவன்
கருணை யென்பது கண்டறி யான்பெரும்
பருணி தன்கொல் படுகொலை யானென்றாள். 1183

௩௬. தொய்யில் வெய்ய முலைத்துடி போலிடை
நையும் நொய்ய மருங்குலோர் நங்கைதன்
கையு மெய்யு முணர்ந்திலள் கண்டவர்
உய்யு முய்யு மெனத்தளர்ந் தோய்வுற்றாள். 1184

(பிரதி) 1. வுருத்தன.

௩௭. பூக வூசல் புரிபவர் போலொரு
பாகு போன்மொழி யாண்மலர்ப் பாதங்கள்
சேகு தோய்தரச் சேவகன் றேரின்பின்
ஏகு மீளுமி தென்செய்த வாறரோ. 1185

௩௮. பெருத்த காதலிற் பேதுறு மாதரில்
ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்
கருத்து மவ்வழிக் கண்டதுண் டோவென்றாள்
அருத்தி யுற்றபின் னாணமுண் டாகுமோ. 1186

௩௯. நங்கை யங்கொரு பொன்னயந் தாருய்யத்
தங்க ளின்னுயி ருங்கொடுத் தார்தமர்
எங்க ளின்னுயி ரெங்களுக் கீகிலா
வெங்க ணைங்கண் விளைந்த திவற்கென்றாள். 1187

௪௦. நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
தூமத் தார்குழற் றாமொழித் தோகைபாற்
காமத் தாலன்று கல்வியி னாலென்றாள். 1188

௪௧. ஆர முந்துகி லுங்கல னியாவையும்
சோர வின்னுயிர் சோரவொர் சோர்குழல்
கோர வில்லிமுன் னேயெனைக் கொல்கின்றான்
மார வேளின் வலியவர் யாரென்றாள். 1189

௪௨. மாத ரின்னண மெய்திட வள்ளல்போய்க்
கோதில் சிந்தை வசிட்டனுங் கோசிக
வேத பாரனு மேவிய மண்டபம்
ஏதின் மன்னர் குழாத்தொடு மெய்தினான். 1190

௪௩. திருவி னாயகன் மின்றிரிந் தாலெனத்
தருவின் மாமணி யாரந் துயல்வரப்
பருவ மேகம் படிவது போற்படிந்
திருவர் தாளு முறையி னிறைஞ்சினான். 1191

௪௪. இறைஞ்சி யன்னவ ரேத்தின ரேவவோர்
நிறைஞ்ச பூந்தவி சேறி நிழற்கள்போல்
புறஞ்செய் தம்பிய ருட்பொலிந் தானரோ
அறஞ்செய் காவற் கயோத்தியுட் டோன்றினான். 1192

௪௫. ஆன மாமணி மண்டப மன்னது
தானை மன்னன் றமரொடுஞ் சார்ந்தனன்
மீனெ லாம்வரப் பின்வரும் வெண்மதி
வானி லாவுற வந்தது மானவே. 1193

௪௬. வந்து மாதவர் பாதம் வணங்கிமேற்
சிந்து தேமலர் மாரி சிறந்திட
அந்த ணாளர்க ளாசியொ டாசனம்
இந்தி ரன்முக னாணுற வேறினான். 1194

௪௭. கங்கர் கொங்கர் கலிங்கர் தெலுங்கர்கள்
சிங்க ளாதிபர் சேரலர் தென்னவர்
அங்க ராசர் குலிங்க ரவந்திகர்
வங்கர் மாளவர் சோழர் விராடரே. 1195

௪௮. மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
ஏனை வீர ரிலாடர் விதர்ப்பர்கள்
சீனர் சிங்குனர் சிஞ்சையர் சேயகர்
சோன கேசர் துருக்கர் குருக்களே. 1196

௪௯. ஏதி யாதவ ரேழ்திறற் கொங்கணர்
சேதி ராசர்க ளுட்படச் சேண்விளங்
காதி வானங் கவித்த வவனிவாழ்
சோதி நீண்முடி மன்னருந் துன்னினார். 1197

௫0. தீங்க ரும்பினிற் றித்திக்கு மின்சொலார்
தாங்கு சாமரை மாடு நயங்குவ
ஓங்கி யோங்கி வளர்ந்துயர் கீர்த்தியின்
பூங்கொ ழுந்து படர்வன போன்றவே. 1198

௫௧. சுழலும் வண்டு மிஞிறுஞ் சுரும்புஞ்சூழ்ந்
தழலுந் தும்பியும் பம்பற லோதியர்
குழலி னோடெறக் கூறுபல் லாண்டொலி
மழலை யாழிசை யோடு மலிந்தவே[1]. 1199

௫௨. வெங்க ணானைய னொன்றனி வெண்குடை
திங்க டங்கள் குலக்கொடி சீதையாம்
மங்கை மாமணங் காணிய வந்தருள்
பொங்கி யோங்கித் தழைப்பது போன்றதே. 1200

(பிரதி) 1. யோட மலைந்தவே.

௫௩. ஊடு பேர்விட மின்றியொன் றும்வகை
நீடு மாகடற் றானை நெருங்கலால்
ஆடன் மாகளி யானைச் சனகர்கோன்
நாடெ லாமொரு நன்னக ராயதே. 1201

௫௪. ஒழிந்த தென்னினி யொண்ணுதற் றாதைதன்
பொழிந்த காத றொடரப் பொருளெலாம்
அழிந்து செய்துகொண் டாடலி னன்புதான்
இழிந்து ளார்க்கு மிராமற்கு மொத்ததே. 1202

உலாவியற் படலம் முற்றும்

௨௮-வது கோலங்காண்படலம்.

௧. தேவியர் மருங்கு சூழ விந்திர னிருக்கை செய்த
ஓவிய முயிர்பெற் றென்ன வுவந்தர சிருந்த காலை
தாவில்வெண் கவிகைச் செங்கோற் சனகனை யினிது நோக்கி
மாவிய னோக்கி னாளைக் கொணர்கென வசிட்டன் சொன்னான்.

௨. உரைசெயத் தொழுத கைய னுவந்தவுள் ளத்தன் பெண்ணுக்
கரைசிலைத் தருதி யீண்டென் றாயிழை யவரை யேவக்
கரைசெயற் கரிய காதல் கடாவிடக் கடிது சென்றார்
பிரசமொத் தினிய சொல்லார் பேதைதா தியரிற் சொன்னார்.

௩. அமிழிமைத்[1] துணைகள்கண் ணுக்கணியெனத் தகைக்குமாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ.

௪. கண்ணன்றன் னிறந்தன் னுள்ளக் கருத்தினை நிறைத்து மீதிட்
டுண்ணின்ற கொடிக ளோடி யுலகெங்கும் பரந்த தன்ன
வண்ணஞ்செய் கூந்தற் பார வலயத்து மழையிற் றோன்றும்
விண்ணின்ற மதியின் மென்பூஞ் சிகழிகைக் கோதை வேய்ந்தார்.

௫. விதியது வகையால் வான மீனிளம் பிறையை வந்து
கதுவுறு கின்ற தென்னக் கொழுந்தொளி கஞலத் தூக்கி
மதியினை நக்க மேக மருங்குநா வளைப்ப தென்னப்
பொதியிரு ளளக பந்தி பூட்டிய பூட்டு மிட்டார். 1207

(பிரதி) 1 தமிழிமைத்.

௬. வெள்ளத்தின் [1]சடிலத் தான்றன் வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத் தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்றகாளை யல்லன்கொலாங்கொலென்பாள்
உள்ளத்தி னூச லாடுங் குழைநிழ லுமிழ விட்டார். 1208

௭. கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்க டம்மி னியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தானணி யென்ற போது தனக்கணி யாது மாதோ. 1209

௮. கோணிலா வானமீன்க ளியைவன கோத்த தென்கோ
வாணிலா வயங்கு செவ்வி வளர்பிறை வதிந்த தென்கோ
நாணிலா நகையி னின்றோர் நளிர்நிலாத் தவழ்ந்த தென்கோ
பூணிலா முலைமே லார முத்தையான் புகல்வ தென்னோ. 1210

௯. மொய்கொள்சீ றடியைச் சேர்ந்த முளரிக்குஞ் செம்மை யீந்த
தையலா ளமிழ்த மேனி தயங்கொளி தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற் பெய்த வெண்முத்தஞ் சிவந்த மெய்யிற்
செய்யவர்ச் சேர்ந்து ளாருஞ் செய்யராய்த் திகழ்வ ரன்றே. 1211

௧௦. கொமையுற வீங்கு கின்ற குலிகச்செப் பனைய கொங்கைச்
சுமையுற நுடங்கு கின்ற நுசுப்பினாள் பூண்செய் தோளுக்
கிமையுற விமைக்குஞ் செங்கே ழினமணி முத்தி னோடும்
அமையிடை வமைவ துண்டா மாகினைப் பாகு மன்றே. 1212

௧௧. தளையவிழ் கோதை யோதிச் சானகி தளிர்க்கை யென்னும்
முளரிக ளிராமன் செங்கை முறைமையிற் றீண்ட நோற்ற
அளியன கங்குற் போதுங் குவியல வாகு மென்றுங்
கிளவெயில் சுற்றி யன்ன வெரிமணிக் கடகம் வேய்ந்தார். 1213

௧௨. சில்லிய லோதி கொங்கைத் திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லு மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார்.

௧௩. நிறஞ்செய்கோ சிகநுண் டூசு நீவிநீ வாத வல்குற்
புறஞ்செய்மே கலையுந் தாழத்[2] தாரகைச் சும்மை பூட்டித்
திறஞ்செய்கா சின்ற சோதி பேதைசே யொளியிற் சேர்த்திக்
கறங்குபு திரியத் தாமுங் கண்விளக் குற்று நின்றார். 1215

(பிரதி) 1. சூடத். 2. பாரத்

கச. ஐயவா யணிச்சப் போதி னதிகமு நொய்ய வாடற்
பையர வல்கு லாடன் பஞ்சின்றிப் பழுத்த பாதச்
செய்யபூங் கமல மன்னச் சேர்த்திய சிலம்பு சால
நொய்யவே நொய்ய வென்றே பலபட நுவல்வ தம்மா. 1216

கரு. நஞ்சினோ டமுதங் கூட்டி நாட்டங்க ளான வென்னச்
செஞ்செவே நீண்டு மீண்டு சேயரி சிதறித் தீய
வஞ்சமுங் களவு மின்றி மழையென மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ வண்ணல் வண்ணமோ வறித றேற்றாம்.1217

கசு. மொய்வளர் குவளை பூத்த முளரியின் முளைத்த முன்னாள்
மெய்வளர் மதியி னுப்பண் மீனுண்டே லனைய தேய்ப்ப
வய்யக மடந்தை மார்க்கு நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்குமேலார் திலத்தைத் திலதஞ் சேர்த்தார். 1218

கஎ. சின்னப்பூச் செருகு மென்பூச் செக்கர்ப்பூம் போது கோதில்
கன்னப்பூக் குழல மீது கற்பகக் கொழுந்தி யாவு
மின்னப்பூஞ் சுரும்பும் வண்டு மிஞிறுந்தும் பிகளு மார்ப்ப
புன்னைப்பூந் தாது மானும் பொற்பொடி யப்பி விட்டார்.1219

கஅ. நெய்வளர் விளக்க மாட்டி நீரொடு பூவுந் தூவித்
தெய்வமும் பராவி வேத பாரர்க்குஞ் செம்பொ னல்கித்
ஐயவி யறுகிற் சேர்த்தி வானிற வயினி சுற்றிக்
கைவளை மயில னாளை வலஞ்செய்து காப்பு மிட்டார். 1220

கசு. கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினு ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் நிலைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.1221

உ0. இழைகுலா முலையி னாளை யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா வுலக மெல்லாங் களிமயக் குற்ற தன்றே
உழைகுலாநயனத்தார்மாட் டொன்றொன்றேவிரும்பற்கொத்த
தழகெலா மொருங்கே கொண்டால் யாவரே யாற்ற வல்லார். 1222

உக. சங்கங்கை யுடைமை யாலுந் தாமரைக் கண்ண தாலும்
எங்கெங்கும் பரந்து பல்வே றுள்ளத்து மெழுதிற் றென்ன
அங்கங்கே தோன்ற லாலு மருந்ததி யனைய கற்பின்
நங்கையு நம்பி யொத்தா ளுமினிப் புகல்வ தென்னோ. 1223

உஉ. பரந்தமே கலையுங் கோத்த பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு புலம்பி யார்ப்பப்
புரந்தரன் கோற்கீ ழாணை யரம்பையர் புடைசூழ்ந் தென்ன
வரம்பறு சும்மைத் தீஞ்சொன் மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

உங. சிந்தொடு குறளுங் கூனுஞ் சிலதியர் குழாமுந் தெற்றி
வந்தடி வணங்கிச் சுற்ற மணியணி விதான நீழல்
இந்துவந் திழிந்து விண்மீ னினத்தொடும் வருவ தென்ன
நந்தலில் விளக்க மன்ன நங்கையு நடக்க லுற்றாள். 1225

வேறு

உச. வல்லியை யுயிர்த்தநில மங்கையிவள் பாதம்
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளெனத்தன்
நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள். 1226

உரு. தொழுந்தகைய மென்னடை தொலைந்துகளி யன்னம்
எழுந்திடை விழுந்தயர்வ தென்னவய லெங்கும்
கொழுந்துடைய சாமரை குலாவவொர் கலாபம்
வழங்கிழன் மின்னவரு மஞ்ஞையென வந்தாள். 1227

உசா. மண்முத லனைத்துலகின் மங்கையர்க ளெல்லாம்
கண்மணி[1] யெனத்தகைய கன்னியெழில் காண
அண்ணன்மர பிற்சுட ரருத்தியொடு தானவ்
விண்ணிழிவ தொப்பதொர் விதானநிழல் வந்தாள். 1228

உஎ. கற்றைவிரி பொற்பிடை பயிற்றுறு கலாபம்
சுற்றுமணி புக்குநிரை மிக்கிடை துவன்றி
விற்றவழ வாண்மிளிர மெய்யொளிகண் மின்னச்
சிற்றிடை நுடங்கவொளிர் சீறடி பெயர்த்தாள். 1229

உஅ. பொன்னினொளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
மின்னினிழ லன்னவடன் மேனியது மான
அன்னமு மரம்பையரு மாரமிழ்து நாண
மன்னவை யிருந்தமணி மண்டப மடைந்தாள். 1230

உகூ. சமைத்தவரை யின்மைமறை தானுமென லாமச்
சுமைத்திரண் முலைத்தெரிவை தூய்வடிவு கண்டோர்

(பிரதி) 1 கண்ணொளி.

அமைத்திரள்கொ டோளியரு மாடவரு மெல்லாம்
இமைத்தில ருயிர்த்திலர்கள் சித்திர மெனத்தாம். 1231

௩௦. அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னியமிழ் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
உன்னுயிர் நிலைப்பதொ ரருத்தியொ டுழைத்தாண்
டின்னமிழ் தெழுக்களிகொ ளிந்திரனை யொத்தான். 1232

௩௧. நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமிழ்து பிற்குற்
றறத்தின்விளை வொத்துமுக நேந்தியரு குய்க்கும்[1]
நிறத்துவ ரிதழ்க்குயி னினைப்பினிடை யல்லாற்
புறத்துமுள ளோவென மனத்தொடு புகன்றான். 1233

௩௨. எங்கள்செய் தவத்தினி லிராமனென வந்தோன்
சங்கினொடு சக்கர முடைத்தனி முதற்பேர்
அங்கணர சாதலினவ் வல்லிமலர் புல்லும்
மங்கையிவ ளாமென வசிட்டன்மகிழ் வுற்றான். 1234

௩௩. துன்றுபுரி கோதையெழில் கண்டுலகு சூழ்வந்
தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பான்
மன்றுமுல கேழுமர செய்தியுள னேனும்
இன்றுதிரு வெய்தியதி தென்னவய மென்றான். 1235

௩௪. நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வைபநகர் கொற்றவனு மாதவரு மல்லார்
கைகடலை புக்கன கருத்துளது[2] மெல்லாம்
தெய்வமென வுற்றவுடல் சிந்தைவச மன்றே. 1236

௩௫. மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோரும்
தாதையரு கிட்டதவி சிற்றனி யிருந்தாள்
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள். 1237

௩௬. அச்செனநி னைத்தமுத லந்தண னிருந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றால்
இச்சிலை யிருக்கவரை யேழையு மிறுமே. 1238

(பிரதி) 1 யமுதூறும். 2 கருத்துளக.

௩௭. எய்வளைவி லிற்றது மெடுத்தது முணர்ந்து
மெய்விளை விடத்துமுத லையம்விட லுற்றாள்
ஐயனை யகத்துவடி வேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள். 1239

௩௮. கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
[1]அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துட றடித்தாள். 1240

௩௯. கணங்குழை கருத்தினுறை கள்வனென லாமவ்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு மவிஞ்சைகெட விஞ்சையி னகம்பா
டுணர்ந்தறிவு முற்றபய னுற்றவரை யொத்தாள். 1241

௪௰. கொல்லுயர் களிற்றரசர் கோமக னிருந்தான்
கல்விகரை யுற்றமுனி கௌசிகனை மேலோய்
வல்லிபொரு சிற்றிடை மடந்தைமண நாளாம்
எல்லைநல முற்றபக லென்றுரைசெய் கென்றான். 1242

௪௧. [1]வாளையுக ளக்கயல்கள் வாவுமதின் மேதி
மூளைமுது கைக்கதுவ மூரியவ ரான்மீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாடா
நாளைமண முற்றதென நற்றவ னுரைத்தான். 1243

௪௨. சொற்றபொழு தத்தரசர் கைதொழு தெழுத்தன்
ஒற்றைவயி ரச்சுரிகொள் சங்கினொலி பொங்கப்
பொற்றட முடிப்புது வெயிற்பொழி தரப்போய்
நற்றவ னனுச்சையொடு நன்னக ரடைந்தான். 1244

௪௩. அன்னமரி திற்பிரிய வண்ணலு மகன்றோர்
பொன்னினெடு மாடமனை புக்கனன் மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கண் மாதவர்கள் போனார்
மின்னுசுட ராதவனு மேருவின் மறைந்தான். 1245

கோலங்காண்படலம் முற்றும்.

(பிரதி) 1. அருங்கல மனங்கசர மற்றன பிழைத்துத், தருங்கலிடை பெற்றனளை யொத்துட றடித்தாள். 2. வாளையுக ளக்கயல்கொள் வாவிபடி மேதி.

உகூ-வது கடிமணப்படலம்.

க. இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேணக்
கடம்படு களிற்றரச ராதியிடை கண்டோர்
திடம்படு திறத்தசிறு தம்பியர்கள் தாமும்
உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார். 1246

உ. தேடரு நலத்தபுன லாசைதெற வெய்தார்
மாடொர்தட முற்றதனை யெய்தும்வழி காணா
நீடழிவு றத்தளர்வொ டேமுறுவ ரன்றே
ஆடக வளைக்குயிலு மந்நிலைய ளானாள். 1247

வேறு.

ந. உரவே துமிலா ருயிரீ துமெனாக்
கரவே பிரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால். 1248

ச. கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ. 1249

ரு. கனையேழ் கடல்போல் கருநா ழிகைதான்
வினையேன் [1]வினையால் விடியா விடினீ
தனியே பறவா யொர்தயா விலையோ
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ. 1250

சா. அயில்வே லனல்கா லகல்வா னிழலாய்
வெயிலே யெனநீ விரிவாய் நிலவே
செயலே துமிலா ருடறேய் வுறுவார்
உயிர்கோ ளுறுவா ருளரோ வுரையாய். 1251

எ. மன்றற்குளிர் வாசம் வயங்க னல்வாய்
மின்றொக் கநிலா நகைவீழ் மலயக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே யிரைதே டுதியோ. 1252

(பிரதி) 1. வினையாய் விடியாய் விடினீ,

௩௭. எய்வளைவி லிற்றது மெடுத்தது முணர்ந்து
மெய்வினை விடத்துமுத லையம்விட னுற்றாள்
ஐயனை யகத்துவடி வேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள். 1239

௩௮. கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
[1] அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துட றடித்தாள். 1240

௩௯. கணங்குழை கருத்தினுறை கள்வனென லாமவ்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு மவிஞ்சைகெட விஞ்சையி னகம்பா
டுணர்ந்தறிவு முற்றபய னுற்றவரை யொத்தாள். 1241

௪0. கொல்லுயர் களிற்றரசர் கோமக னிருந்தான்
கல்விகரை யுற்றமுனி கௌசிகனை மேலோய்
வல்லிபொரு சிற்றிடை மடந்தைமண நாளாம்
எல்லைநல முற்றபக லென்றுரைசெய் கென்றான். 1242

௪௧. [1] வாளையுக ளக்கயல்கள் வாவுமதின் மேதி
மூளைமுது கைக்கதுவ மூரியவ ரான்மீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாடா
நாளைமண முற்றதென நற்றவ னுரைத்தான். 1243

௪௨. சொற்றபொழு தத்தரசர் கைதொழு தெழத்தன்
ஒற்றைவயி ரச்சுரிகொள் சங்கினொலி பொங்கப்
பொற்றட முடிப்புது வெயிற்பொழி தரப்போய்
நற்றவ னுச்சையொடு நன்னக ரடைந்தான். 1244

௪௩. அன்னமரி திற்பிரிய வண்ணலு மகன்றோர்
பொன்னினெடு மாடமனை புக்கனன் மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கண் மாதவர்கள் போனார்
மின்னுசுட ராதவனு மேருவின் மறைந்தான். 1245

கோலங்காண்படலம் முற்றும்.

(பிரதி) 1. அருங்கல மனங்கசர மற்றன பிழைத்துத், தருங்கலிடை பெற்றனளை யொத்துட றடித்தாள். 2. வாளையுக ளக்கயல்கொள் வாவிபடி மேதி.

௮. தெருவே திரிவா ரொருசே வகனார்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாம்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே. 1253

௯. தெருளா வினைதீ யவர்சே ருநர்தோள்
அருளா நெறியோ டுமவா வுவதோ
கருளார் கடலோ கரைகா ணரிதால்
இருளா மிதுதா னெனையூ ழிகொலாம். 1254

௧௦. பண்ணோ வொழியா பகலோ புகுதா
தெண்ணோ தவிரா விரவோ விடியா
துண்ணோ வொழியா வுயிரோ வகலா
கண்ணோ துயிலா விதுவோ கடனே. 1255

௧௧. இடையே வளைசோ ரவெழுந் துவிழுந்
தடல்சேர் மதனன் சரமஞ் சினையோ
உடலோய் வுறநா ணுமுறங் கலையால்
கடலே யுரைநீ யுமொர்கன் னிகொலாம். 1256

௧௨. எனவின் னனபன் னியிருந் துளைவாள்
துனியுன் னிநலங் கொடுசோர் வுறுகால்
மனைதன் னின்வயங் கிருள்வை குறுபோ
தனகன் னினைகின் றனயா மறைவாம். 1257

௧௩. முன்கண் டுமுடிப் பருவேட் கையினால்
என்கண் டுணையோ டிதயத் தெழுதிப்
பின்கண் டுமொர்பெண் கரைகண் டிலனால்
மின்கண் டவரெங் கறிவார் வினையே. 1258

௧௪. திருவே யனையாண் முகமே யுயிரின்
கருவே களியே விளைகா மவிதைக்
கெருவே மதியே யிதுவென் செய்தவா
ஒருவே னொடுநீ யுறவா கலையோ. 1259

௧௫. கழியா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் ததுவீ கிலதால்
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே. 1260

கசு. நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனைநீ யுமறந் தனையா. 1261

கஎ. தன்னைக் கெரிகா றகைவா ளரவின்
பன்னைக் கியதென் பதுபண் புகொலாம்
என்னைக் கினுநெஞ் சினுமென் றுமுளார்
மென்னைக் கினதோ கடுவல் விடமே. 1262

கஅ. வல்லோர் புனைமா ளிகைவார் பொழிலோ
டெல்லா முளவா யினுமென் மனமோ
கல்லோ வெனுநெஞ் சொடுகன் னியரா
மெல்லோ தியர்தாம் விளையா டிடமே. 1263

வேறு.

கசு. வானவர் பெருமானும் மனநினை வினளுகத்
தேனகு குழலாடன் றிருமண வினைநாளை
பூநகு மலர்வாசம் புனைநக ரணிவீரென்
றூனையின் மிசையானை யணிமுர சறைவித்தான். 1264

உ0. முரசறை தனுமான முதியரு மிளையோரும்
விரைசெறி குழலாரும் விரவினர் விரைகின்றார்
உரைசெறி கிளையோடு முவகையி னுயர்வாரும்
கரைசெய வரிதாகு மிரவொரு கரைகண்டார். 1265

உக. அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளைப் புணர்குவ ரெனலோடும்
செஞ்சுட ரிருள்கீறித் தினகர னொருதேர்மேல்
மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான். 1266

உஉ. தோரண நடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரண குடமெங்கும் பொலிதர நினைவாரும்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் கின்னமு தடுவாரும். 1267

உங. அன்னமென் னடையாரும் மழவிடை யனையாரும்
கன்னிநன் னகர்வாழை கமுகொடு நடுவாரும்
இன்னிசை தெரிவாரு மிளமுலை யவரோடும்
பொன்னணி யணிவாரும் மணியணி புனைவாரும். 1268

௨௪. சந்தன மகிழுறுஞ் சந்தொடு தெருவெங்குஞ்
சிந்தினர் திரிவாருஞ் செழுமலர் சொரிவாரும்
இந்திர தனுகாணு மெரிமணி நிரைமாடத்
தந்தமில் விலையாரக் கோவைக ளணிவாரும். 1269

௨௫. தளங்கிளர் மணிகாலத் தவழ்சுட ருமிழ்தீபம்
இளங்குளிர் முளையார்நற் பாலிகை யினமெங்கும்
விளிம்புபொன் விரைநீற வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை யுயர்திண்ணைப் பத்தியின் வைப்பாரும். 1270

௨௬. மந்தர மணிமாடை முன்றிலின் வயினெங்கும்
நந்தலி லொளிமுத்தி னகனிரை யுகநாளின்
அந்தர நெடுவானம் மீனலர் குவதென்னப்
பந்தரி னிழல்வீசப் படர்வெயில் கடிவாரும். 1271

௨௭. வயிரமி னொளியீனும் மரகத மணிவேதிச்
செயிரறு மொளிர்தீபஞ் சிலதியர் கொணர்வாரும்
வெயில்விரி மிளிர்பொன்னின் மிடைகொடி மதிதோயும்
எயில்வயி னணிவாரு மகிலெரி யிடுவாரும். 1272

௨௮. பண்டியி னிறைவாசப் பனிமலர் கொணர்வாரும்
தண்டலை யிலையோடுங் கனிபல தருவாரும்
குண்டல மொளிவீசக் குரவைகள் புரிவாரும்
உண்டைகொண் மதவேழத் தோடைக ளணிவாரும். 1273

௨௯. கலவைகள் புனைவாருங் கலைநல தெரிவாரும்
மலர்குழன் மலைவாரும் மதிமுக மதிலாடித்
திலகமு னிடுவாருஞ் சிகழிகை யணிவாரும்
இலவிதழ் பொலிகோல மெழில்பெற விடுவாரும். 1274

௩௦. தப்பின மணிகாசுஞ் சங்கமு மயிலன்னார்
ஒப்பனை [1]புரிபோது முடலி னுகுபோதும்
துப்புறழ் நிறைவாசச் சுண்ணமு முதிர்தாதும்
குப்பைக ளெனவாரிக் கொண்டனர் களைவாரும். 1275

௩௧. மன்னவர் வருவாரும் மறையவர் நிறைவாரும்
இன்னிசை மணியாழி னிசைமது நுகர்வாரும்
சென்னியர் திரிவாருஞ் சிலதியர் செறிவாரும்
கன்னலின் மணவேலைக் கடிகைக டெரிவாரும். 1276

(பிரதி) 1. புரிபோதத் தூடலி.

௩௨. கணிகையர் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
பணிபணி யெனலோடும் பலவிரு நிலமன்னர்
அணிநெடு முடியொன்றொன் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை தொகுமன்னன் வாயிலின் மிடைவாரும். 1277

௩௩. கேடகம் வெயில்வீசக் கிளரயி னிலவீனக்
கோடியர் நெடுவிஞ்சைக் குஞ்சர மதுபோல
ஆடவர் திரிவாரு மரிவையர் களிகூரும்
நாடக நவில்வாரு நகையுயிர் கவர்வாரும். 1278

௩௪. கதிர்மணி யொளிகாலக் [1]கவர்பொரு டெரியாவா
றெதிரெதிர் சுடர்விம்முற் றெழுதலி னிமையோரும்
மதுவிரி குழலாரும் மதிலுடை நெடுநாகம்
அதுவிது வெனவோரா ரலமர லுறுவாரும். 1279

௩௫. தேர்மிசை வருவாருஞ் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரு மொளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாருங் கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும். 1280

௩௬. முத்தணி யணிவாரும் மணியணி முனிவாரும்
பத்தியி னணிசெம்பொற் பல்கலன் மகிழ்வாருந்
தொத்துறு தொழின்மாலை தூசுக ளணிவாருஞ்
சித்திர நிறைதெய்வச் செந்துகில் புனைவாரும். 1281

௩௭. விடநிகர் விழியாரு மமுதெனு மொழியாருங்
கிடைபுரை யிதழாருங் கிளர்நகை யினியாருந்
தடமுலை பெரியாருந் தனியிடை சிறியாரும்
பெடையன நடையாரும் பிடியென வருவாரும். 1282

௩௮. உண்ணிறை நிமிர்செல்வ மொருமுறை செலவென்றுங்
கண்ணுற லரிதென்றுங் கருதுத லரிதம்மா
எண்ணுறு சுடர்வானத் திந்திரன் முடிசூடும்
மண்ணுறு திருநாளே யொத்தது மணநாளே. 1283

வேறு.

௩௯. கரைதெரி வரியது கனகம் வேய்ந்தது
வரையென வுயர்ந்தது மணியிற் செய்தது
நிரைவளை மணவினை நிரப்பு மண்டபம்
அரைசர்த மரசனு மணுகன் மேயினன். 1284

(பிரதி) 1. கரைபொரு

௪௦. வெண்குடை யிளநிலா விரிக்க மின்னெனக்
கண்குடை மணியினம் வெயிலுங் கான்றிடப்
பண்குடை வண்டினம் பாட வாடன்மா
மண்குடை தூளிவிண் மறைப்ப வேகினான். 1285

௪௧ மங்கல முரசின மழையி னார்த்தன
சங்குகண் முரன்றன தாரை போரெனப்
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி னொலிக்குமா கடலும் போன்றவே. 1286

௪௨. பரந்ததேர் களிறுபாய் புரவி பண்ணையிற்
றரந்தர நடந்தன தானை வேந்தனை
நிரந்தரந் தொழுதெழு நேமி மன்னவர்
புரந்தரன் புடைவரு மமரர் போன்றனர். 1287

௪௩. அனையவன் மண்டப மணுகி யம்பொனின்
புனைமணி யாதனம் பொலியத் தோன்றினான்
முனைவரு மன்னரு முறையி னேறினார்
சனகனுந் தன்கிளை தழுவ வேறினான். 1288

௪௪. மன்னரு முனிவரும் வானு ளோர்களும்
அன்னமென் னடையனங் கனைய மாதரும்
துன்னினர் துவன்றலிற் சுடர்கள் சூழ்வரும்
பொன்மலை யொத்ததப் பொருவில் கூடமே. 1289

௪௫. புயலுள மின்னுள பொருவின் மீனுள
இயன்மணி யினமுள சுடரு மீண்டுள
மயன்முதற் றிருத்திய மணிகொண் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட மொத்ததே. 1290

௪௬. எண்டவ முனிவரு மரசர் யாவரும்
அண்டரும் பிறரும்புக் கடங்கிற் றுதலால்
மண்டபம் வானமு மண்ணும் வாய்மடுத்
துண்டவன் மணியணி யுதரம் போன்றதே. 1291

௪௭. தராதல முதலுல கனைத்துந் தள்ளுற
விராவின குவிந்துழி விளம்ப வேண்டுமோ
அராவணை துறந்துபோ யயோத்தி நண்ணிய
இராகவன் செய்கையை யியம்பு வாமரோ. 1292

௪௮. சங்கொடு தவழ்கட லேழிற் றந்தவும்
சிங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையின் முதலவுங் கலந்த நீரினால்
மங்கல மஞ்சன மரபி னாடியே. 1293

௪௯. கோதறு தவத்துத்தங் குலத்து ளோர்தொழும்
ஆதியஞ் சோதியை யடிவ ணங்கினான்
காதியல் கயல்விழிக் கன்னி மார்களை
வேதியர்க் கருமறை விதியி னல்கியே. 1294

௫0. அழிவரு தவத்தினா னறத்தை யாக்குவான்
ஒழிவருங் கருணைபோ ருருவு கொண்டென
எழுதரு வடிவுகொண் டிருண்ட மேகத்தைத்
தழுவிய நிலவெனக் கலவை சாத்தியே. 1295

௫௧. மங்கல முழுநிலா மலர்ந்த திங்களைப்
பொங்கிருங் கருங்கடல் பூத்த தாமெனச்
செங்கிடைச் சிகழிகைச் செம்பொன் மாலையும்
தொங்கலுந் துயல்வரச் சுழியஞ் சூடியே. 1296

௫௨. ஏதமி லிருகுழை யிரவு நன்பகல்
காதல்கண் டுணர்ந்தன கதிருந் திங்களும்
சீதைதன் கருத்தினைச் செவியி னுள்ளுறத்
தூதுசென் றுரைப்பன போன்று தோன்றவே. 1297

௫௩. கார்விடக் கறையுடைக் கணிச்சி வானவன்
வார்சடைப் புடையினோர் மதிமி லைச்சினான்
சூர்சுடர்க் குலமெலாஞ் சூடி னானென
வீரபட் டத்தொடு திலக மின்னவே. 1298

௫௪. சக்கரத் தயல்வருஞ் சங்க மாமென
மிக்கொளிர் கழுத்தணி தரள வெண்கொடி
மொய்க்கருங் குழலினாண் முறுவ லுள்ளுறப்
புக்கன நிறைந்துமேற் பொடிப்ப போன்றவே. 1299

௫௫. பந்திசெய் வயிரங்கள் பொறியிற் பாடுற
அந்தமில் சுடர்மணி யழலத் தோன்றலாற்
சுந்தரத் தோளணி வலயந் தொல்லைநாள்
மந்தரஞ் சுற்றிய வரவை மானவே. 1300

௫௬. கோவையின் பெருவட முத்தங் கோத்தன
காவல்செய் தடக்கையி னடுவட் காந்துவ
மூவகை யுலகிற்கு முதல்வ னாமென
ஏவரும் பெருங்குறி யிட்ட போன்றவே. 1301

௫௭. மாண்டபொன் மணியணி வலயம் வந்தெதிர்
வேண்டினர்க் குதவுவான் வேண்டிக் கற்பகம்
ஈண்டுதன் கொம்பிடை யீன்ற தாமெனக்
காண்டகு தடக்கையிற் கடக மின்னவே. 1302

௫௮. தேனுடை மலர்மக டிளைக்கு மார்பிடைத்
தாணிடை விளங்கிய தகையி னாரந்தான்
மீனெடுஞ் சுடரொடும் விளங்கு மேகத்துள்
வானிடு வில்லென வயங்கிக் காட்டவே. 1303

௫௯. நணுகவு மரியதா நடக்கு ஞானத்தர்
உணர்வென வொளிர்தரு முத்த ரீகந்தான்
கணிவருங் கருணைதன் கழுத்திற் சாத்திய
மணியுமிழ் கதிரென மார்பிற் றோன்றவே. 1304

௬௦. மேவருஞ் சுடரொளி விளங்கு மார்பினால்
ஏவருந் தெரிந்தினி துணர்மி னீண்டெனத்
தேவரு முனிவருந் தெரிக்க லாமுதன்
மூவருந் தானென முடித்த தொத்ததே. 1305

௬௧. சுற்றுநீ டமனியச் சோதி பொங்கமேல்
ஒற்றைமா மணியுமி ழுதர பந்தனம்
மற்றுமோ ரண்டமு மயனும் வந்தெழப்
பொற்றடந் தாமரை பூத்த போன்றதே. 1306

௬௨. மண்ணுறு சுடர்மணி வயங்கித் தோன்றிய
கண்ணுறு கருங்கட லதனைக் கைவளர்
தண்ணிறப் பாற்கட றழீஇய தாமென
வெண்ணிறப் பட்டொளி விளங்கச் சாத்தியே. 1307

௬௩. சலம்வரு தாளமுந் தயங்கு நீலமும்
அலம்வரு நிழலுமி ழும்பொற் கச்சினுற்
குலம்வரு கனகவான் குன்றை நின்றுடன்
வலம்வரு கதிரென வாளும் வீக்கியே. 1308

௬௪. முகைவிரி சுடரொளி முத்தின் பத்தியால்
தொகைவிரி பட்டிகைச் சுடருஞ் சுற்றிடத்
தகையுடை வாளெனுந் தயங்கு வெய்யவன்
நகையிள வெயிலெலைத் தொங்க ளுற்றியே. 1309

௬௫. காசொடு கண்ணிழல் கனலக் கைவினை
ஏசவில் கிம்புரி யெயிறு வெண்ணிலா
வீசலின் மகரவாய் விளங்கு வாண்முகம்
ஆசையை யொளிகளா லளந்து காட்டவே. 1310

௬௬. இனிப்பரந் துலகினை யளப்ப தெங்கெனத்
தனித்தனி தடுப்பன போலுஞ் சால்பின
துனிப்பரு நுண்வினைச் சிலம்பு நோன்கழல்
பணிப்பருந் தாமரைப் பாதம் பற்றவே. 1311

௬௭. என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றபே ரிருவினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திய
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே. 1312

௬௮. இன்னன பொலிதர விமைய வர்க்கெலாம்
தன்னையே யொப்பதோர் கோலந் தாங்கினான்
பன்னக மணிவிளக் கழலும் பாயலுள்
அன்னவர் தவத்தினா லனந்த னீங்கினான். 1313

௬௯. முப்பரம் பொருளுக்கு முதலை மூலத்தை
இப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனை யப்பினு ளமிர்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ. 1314

௭௦ பல்பதி னாயிரம் பசுவும் பைம்பொனும்
எல்லையி னிலனொடு மணிகள் யாவையும்
நல்லவர்க் காக்கியே நோக்கு நான்மறைச்
செல்வர்கள் வாழ்த்துறத் தேர்வந் தேறினான். 1315

௭௧. பொற்றிர ளச்சுருள் வெள்ளிச் சில்லிபுக்
குற்றது வயிரத்தி னுற்ற தட்டது
சுற்றுறு நவமணி சுடருந் தோற்றத்தால்
ஒற்றையா ழிக்கதிர்த் தேரொ டொப்பதே. 1316

௭௨. நூல்வருந் தகையன நுனிக்கு நோன்மைய
சால்பெருஞ் செவ்விய தரும மாதிய
நாலையு மனையன புரவி நான்கொரு
[1] பாலமை யுணர்ந்ததன் பக்கம் பூண்டவே. 1317

௭௩. அனையதே ரதன்மிசை யைய னின்றனன்
பனிவரு மலர்க்கணைப் பரதன் கோல்கொளக்
குனிசிலைத் தம்பியர் கூட வேனையர்
இனியபொற் கவரிகா லியக்க வேகினான். 1318

௭௪. அமைவரு மேனிய னழகி னுயதோ
கமையுறு மனத்தினுற் கருத வந்ததோ
சமைவுற வறிந்திலந் தக்கதி யாதென
இமையவ ராயினு ரிங்கு ளாருமே. 1319

௭௫. வரம்பறு முலகினை வலிந்து மாய்வின்றித்
திரம்பயி லரக்கர்தம் வருக்கந் தேய்வுற
நிரம்பிய தெனக்கொடு நிறைந்த தேவரும்
அரம்பையர் குழாத்தொடு மாடன் மேயினார். 1320

௭௬. சொரிந்தனர் பூமழை சுண்ணந் தூவினர்
விரிந்தொளிர் காசுபொன் றூசு வீசினர்
பரிந்தன ரழகினைப் பருகி னார்கொலோ
தெரிந்தில மந்நகர் மகளிர் செய்கையே. 1321

௭௭. வள்ளலை நோக்கிய மகளிர் மேனியின்
எள்ளரும் பூணெலா மிரிய நிற்கின்றார்
உள்ளன யாவையு முதவிப் பூண்டவும்
கொள்ளையிற் கொள்கெனக் கொடுக்கின்[2] றாரினே. 1322

வேறு.

௭௮. எஞ்சலி லுலகத் துள்ள வெறியடை யரச வெள்ளம்
குஞ்சரக் குழாத்திற் சுற்றக் கொற்றவ னிருந்த கூடம்
வெஞ்சினத் தனுவ லானு மேருமால் வரையைச் சூழ்ந்த
செஞ்சுடர்க் கடவு ளென்னத் தேரின்மேற் சென்று சேர்ந்தான்.

௭௯. இரதமாண் டிழிந்த பின்ன ரிருமருங் கிரண்டு கையும்
பரதனு மிளைய கோவும் பரிந்தன ரேந்தப் பைந்தார்
வரதனு மெய்தி னைதீர் மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம் வணங்கிமா டிருந்த வேலை. 1324

(பிரதி) 1. பான்மையு முணர்ந்ததன் 2 றுரொத்தார்

அ0. சிலையுடைக் கயல்வாட் டிங்க ளேந்தியோர் செம்பொற் கொம்பர்
முலையிடை முகிழ்ப்பத் தேர்மேன் மின்மிசை முளைத்த தன்னாள்
அலைகடற் பிறந்து பின்னை யவனியிற் றோன்றி மீள
மலையிடை யுதிக்கின் றாள்போன் மண்டப மதனில் வந்தாள்.

வேறு.

அக. நன்றிவா னவரெலா மிருந்த நம்பியைத்
துன்றிருங் கருங்கட றுவைப்பத் தோன்றிய
மன்றலங் கோதையாண் மாலை சூட்டிய
அன்றினு மின்றுடைத் தழகென் றாரரோ. 1326

அஉ. ஒலிகட லுலகினி லும்பர் நாகரிற்
பொலிவது மற்றிவள் பொற்பென் றாலினி
மலிதரு மணம்படு திருவை வாயினால்
மெலிதரு முணர்வினே னென்னவி ளம்புகேன். 1327

அங. இந்திரன் சசியொடு மெய்தி னானிளஞ்
சந்திர மௌலிதன் பாகத் தாளொடும்
வந்தனன் மலரயன் வாக்கி னாளுடன்
அந்தரஞ் சூழ்ந்தன னழகு காணவே. 1328

அச. நீந்தருங் கடலெனா நிறைந்த வேதியர்
தோய்ந்தநூன் மார்பினர் சுற்றத் தொன்னெறி
வாய்ந்தநல் வேள்விக்கு வசிட்டன் மையற
ஏய்ந்தநற் றருப்பையோ டினிதி னெய்தினான். 1329

அரு. தண்டிலம் விரித்தனன் தருப்பை சாத்தினன்
மண்டலம் விதிமுறை வகுத்து மென்மலர்
கொண்டவி சொரிந்தெரி குழும மூட்டினன்
பண்டைய மறைநெறி பரிவிற் செய்தனன். 1330

வேறு.

அசு. மன்றலின் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத்
தின்றுணை யன்னமு மெய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார். 1331

அஎ. கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமக டன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான். 1332

௮௮. அந்தண ராசி யருங்கல மன்னோர்
தந்தப லாண்டிசை தார்முடி மன்னர்
வந்தனை மாதவர் வாழ்த்தொலி போல
முந்தின பேரி முழங்கின மாதோ. 1333

௮௯. வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவு மிலங்கொளி முத்தம்
தானகு நாண்மல ரென்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய திப்பார். 1334

௯௦. வெய்ய கனற்றலை வீரனு மந்நாள்
மைபறு மந்திர முற்றும் வழங்கா
நெய்யமை யாகுதி யாவையு நேர்ந்தான்
தைய றளிர்க்கை தடக்கை பிடித்தான். 1335

௯௧. இடம்படு தோளவ னோடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையண் மாறு பிறப்பின்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள். 1336

௯௨. வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
புலம்புரி நூலவர் செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மி மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி கண்டார். 1337

௯௩. மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் தாண்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி யைக்கொடு நன்மனை புக்கான். 1338

௯௪. ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்
டார்த்தன வண்டின மார்த்தன வேலை. 1339

௯௫. கேகயன் மாமகள் கேழிரு பாதம்
தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கா
ஆயத னன்னை யடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாடொழ லோடும். 1340

௯௬. அன்னமு மன்னவ ரம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள் சிந்தைம கிழ்ந்தாள்
கன்னி யருந்ததி காரிகை காணா
நன்மக னுக்கொரு னல்லணி யென்றாள். 1341

௯௭. சங்கவ ளைக்குயி லைத்தழி நின்றார்
அங்கண னுக்குரி யாருள ராவார்
பெண்களி னிப்பிற ராருள ரென்றார்
கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார். 1342

௯௮. எண்ணமில் கோடிபொன் னெல்லையில் கோடி
வண்ண வருங்கல மங்கையர் வெள்ளம்
கண்ணக னுடையர் காசுயர் தூசும்
பெண்ணி னணங்கனை யாய்பெறு கென்றார். 1343

௯௯. நூற்கட லன்னவர் சொற்கட னோக்கி
மாற்கடல் பொங்கு மனத்தவ ளோடும்
காற்கடல் போற்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கட லொப்பதொர் பள்ளி யணைந்தான். 1344

௧௦௦. பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க விருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தால்
மங்கல வங்கி வசிட்டன் வகுத்தான். 1345

௧௦௧. கொய்நிறை தாரக் குசத்துவ சப்பேர்
நெய்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்
மைநிறை கண்ணினர் வானுறு நீரார்
மெய்நிறை மூவரை மூவரும் வேட்டார். 1346

௧௦௨. வேட்டவர் வேட்டபின் வேந்தனு மேனாள்
கூட்டிய சீர்த்தி கொடுத்தில னல்லால்
ஈட்டிய மெய்ப்பொருள் யாவுள வெல்லாம்
வேட்டவர் வேட்டவை வேண்டள வீந்தான். 1347

௧௦௩. ஈந்தள வில்லதொ ரின்ப நுகர்ந்தான்
ஆய்ந்துணர் கேள்வி யருந்தவ ரோடும்
வேந்தொடு மந்நகர் வைகினர் மெள்ளத்
தேய்ந்தன நாள்சில செய்த துரைப்பாம். 1348

கடிமணப் படலம் முற்றும்

௩௰-வது பரசிராமப் படலம்.

௧. தானாயதோர் வகையேநனி சனகன்றரு தயனும்
நானாவித விருபோகமு நுகர்கின்றவநன் னாள்வாய்
ஆனாமறை நெறிமாதவ முனிகோசிக னருளிப்
போனான்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான். 1349

௨. அப்போதினின் முடிமன்னவ னணிமாநகர் செலவே
இப்போதுந மணிகந்தனை யெழுகென்றினி துரையாக்
கைப்போதக நிகர்காவலர் குழுவந்தடி கதுவ
ஒப்போதரு தேர்மீதினி லினிதேறின னாரவோன். 1350

௩. தன்மக்களு மருமக்களு நனிதன்கழ றழுவ
மன்மக்களும் வயின்மொய்த்திட மதில்சூழ்தரு மிதிலைத்
தொன்மக்களு மனமுக்குயிர் பிரிவென்பதோர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதோர் வழிபுக்கன னாரவோன். 1351

௪. முன்னேநெடு முடிமன்னவன் முறையிற்செல மிதிலை
நன்மாநக ருறைவார்மன நனிபின்செல நடுவே
தன்னேர்புரை தருதம்பியர் தழுவிச்செல மழையுண்
மின்னேயெனு மிடையாளொடு மினிதேகினன் வீரன். 1352

௫. ஏகும்மள வையின்வந்தெதிர் வலமும்மயி லிடமும்
காகம்முத லியமுந்திய தடைசெய்வன கண்டான்
நாகம்மன னிடையிங்குள திடையூறென [1]நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றானெறி வந்தான். 1353

௬. நின்றேநெறி யுணர்வானொரு நினைவாளனை யழையா
நன்றோபழு துளதோநய முரைநீ நடுவென்னக்
குன்றேபுரை தோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றேவரு மிடையூறது நன்றாய்விடு மென்றான். 1354

௭. என்னும்மள வையின் வானக மிருணின்றது வெளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான்மிடல் மழுவான்
பொன்னின்மலை வருகின்றது போல்வானனல் கால்வான்
உன்னுஞ்சுடர் விழியானுரு மதிர்கின்றதொ ருரையான். 1355

௮. கம்பித்தலை யெறிநீருறு கலமொத்துல குலையத்
தம்பித்துயர் திசையானைக டளரக்கடல் சலியா

(பிரதி) 1. வறியா.

வெம்பித்திரி தரவானவர் வெருவுற்றிரி தரவோர்
செம்பொற்சிலை தரியாவயின் முகவாளிக டெரிவான். 1356

கூ. விண்கீழுற வென்றேபடி மேல்கீழுற வென்றே
எண்கீறிய வுயிர்யாவையும் யமன்வாயிட வென்றே
புண்கீறிய குருதிப்புனல் பொழிகின்றது புரையக்
கண்கீறிய கனலான்முனி வியாதென்றயல் கருதேம். 1357

கய. போரின்மிசை யெழுகின்றதொர் மழுவின்சிகை புரையத்
தேரின்மிசை மலைசூழ்வரு கதிருந்திசை திரிய
நீரின்மிசை வடவெங்கன னெடுவானுற முடுகிப்
பாரின்மிசை வருகின்றதொர் படிவெஞ்சுடர் படர. 1358

கக. பாழிப்புய முயர்திக்கிடை யடையப்புடை படரச்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி தோற்ற
ஆழிப்பொரு புயலேமுத லாகாயமு மழியும்
ஊழிக்கடை யுருவிற்றனி யுமைகேள்வனை யொப்ப. 1359

கஉ. அயிர்சுற்றிய கடல்மாநில மடையத்தனி படரும்
செயிர்சுற்றிய படையாருடன் மறமன்னவர் திலகன்
உயிருற்றதொர் மரமாமென வோராயிர முயர்தோள்
வயிரக்கிரி துணியத்தெறும் வடிவாய்மழு வுடையான். 1360

கங. நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலுமிழ் கடலொத்தலை யெறியும்
குருதிப்புன லதனிற்புக முழுகித்தனி குடைவான். 1361

கச. கமையொப்பதொர் தவமுஞ்சுடு கனலொப்பதொர் சினமும்
சமையப்பெரி துடையானெதிர் தளர்வுற்றிடை தவிரும்
அமையத்துயர் பறவைக்கினி தாமும்வகை கீறு
இமையக்கிரி யுருவத்தனி வடிவாளிகொ டெய்தான். 1362

கரு. சையம்புடை நிமிரக்கட றழுவும்படி சமைவான்
மையின்றுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
ஐயன்றனை யரிதிற்றரு மரசன்னது கண்டான்
வெய்யன்வர நிபமென்னைகொ லெனவெப்துறும் வேலை. 1363

கசு. பொங்கும்படை யிரியக்கிளர் புருவங்கடை நெரிய
வெங்கண்பொறி சிதறக்கடை யுருமேறென விடையாச்

சிங்கம்மென வுயர்தேர்வரு குமரன்னெதிர் சென்றான்
அங்கண்ணர சவனும்மிவ னாரோவெனு மளவில். 1364

௧௭. அரைசன்னவ னிடையேபுகுந் தாராதனை புரிவான்
விரைசெய்முடி படிமேலுற வடிமேல்விழ விழவும்
கரைசென்றில னனையானெடு முடிவின்கனல் கால்வான்
முரைசின்குரல் படவீரனை தெதிர்சென்றிவை மொழிவான்.

௧௮. இற்றோடிய சிலையின்றிற மறிவென்னினி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரிவானசை யுடையேன்
செற்றோடிய திரடோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றோர்பொரு ளிலதிங்கிதென் வரவென்றன னுரவோன்.

௧௯. அவனன்னது பகரும்மள வையின்மன்னவ னயர்வான்
புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான். 1367

௨௦. விளிவார்விளி வதுநீவினை விழைவாருழை யன்றோ
களியாலிவ னயர்கின்றவு முளவோகன னுமிழும்
ஒளிவாய்மழு வுடையாய்பொர வுரியார்களொ டல்லால்
எளியாரிடை வலியார்வலி யென்னாதுவ தென்றான். 1368

௨௧. நனிமாதவ முடையாயது பணிநீயென நல்காத்
தனிநாயக முலகேழையு முடையாயிது தவிராய்
பனிவார்கடல் புடைசூழ்படி நரபாலரை யருளா
முனிவாறினை முனிகின்றது முறையோவென மொழிவான்.

௨௨. புறநின்றவ ரிகழும்படி நடுவின்றலை புணராத்
திறனின்றுயர் வலியென்பதொ ரறனின்றது செயலோ
அறனின்றத னிலைநின்றுயர் புகழொன்றுவ தன்றோ
மறனென்பது மறவோயிது வலியென்பது வலியோ. 1370

௨௩. சலத்தோடியை விலனென்மக னனையானுயிர் தபுமேல்
உலத்தோடயர் தோளாயென துறவோடுயி ருகுவன்
நிலத்தோடிய கலிவானுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டன னென்றான்.

௨௪. என்னாவடி விழுவானையு மிகழாவெரி விழியாப்
பொன்னார்சிலை யுரவோனெதிர் புகுவானிலை யுணராத்

தன்னாலொரு செயலின்மையை நினையாவுயிர் தளரா
மின்னாலயர் வுறும்வாளர வெனவெந்துய ருற்றான். 1372

உ௫. மானம்முடை முடிமன்னவன் நிலைசோரவு மதியான்
தானன்னிலை யழிவானுறு நிலையுண்டது தவிரா
தானந்நிலை மையினண்ணலை யன்னானிறு சிலைதான்
ஊனம்முள ததன்மெய்ந்நெறி கேளென்றுரை புரிவான். 1373

உ௬. ஒருகால்வரு கதிராமென வொளிகால்வன வுலையா
வருகார்தவழ் வடமேருவின் வலிசால்வன மன்னா
அருகாவினை புரிவானுளன் மயனாலமை வனதாம்
இருகார்முக முளபாவையு மேலாதன மேனாள். 1374

வேறு.

உ௭. ஒன்றினை யுமையாள் கேள்வ னுகந்தனன் மற்றை யொன்றை
நின்றுல களந்தநேமி நெடியவ னெறியிற் கொண்டான்
என்றிவை யுணர்ந்த விண்ணோ ரிரண்டினும் வலிதியாது
வென்றிய தியாவதென்று விரிஞ்சனை வினவ வன்னான். 1375

உ௮. சீரிது தேவர் தங்கள் சிந்தனை யென்ப துன்னி
வேரியங் கமலத் தோனு மியைவதோர் வினயந் தன்னால்
யாரினு முயர்ந்த மூலத் தொருவரா மிருவர் தம்மை
மூரிவெஞ் சிலைமே லிட்டு மொய்யமர் மூட்டி விட்டான். 1376

உ௯. இருவரு மிரண்டு வில்லு மேந்தின ருலக மேழும்
வெருவரத் திசைகள் பேர வெங்கனல் பொங்க மென்மேல்
செருமலை கின்ற போது திரிபுர மெரித்த தேவன்
வரிசிலை யிற்ற தாக மற்றவன் முனிந்து மன்னோ. 1377

௩0. மீட்டும்போர் தொடங்கும் வேலை விண்ணவர் விலக்க வல்வில்
நீட்டினன் றேவர் கோன்கை நெற்றியிற் கண்ணன் வீரங்
காட்டிய கரிய மாலுங் கார்முகந் தன்னைப் பாரில்
ஈட்டிய தவத்தின் மிக்க விரிசிகற் கீந்து போனான். 1378

௩௧. இரிசிக னெந்தைக் கீய வெந்தையு மெனக்குத் தந்த
வரிசிலை யிதனை நொய்தின் வாங்குதி யாயின் மன்ன
குரிசில்க ணின்னொ டொப்பா ரில்லையான் குறித்த போரும்
புரிகில னின்னோ டின்னம் புகல்வது கேட்டி யென்றான். 1379

௩௨. ஊனவில் லிறுத்த மொய்ம்பை நோக்குமத் தூக்க மன்றால்
மானவ மற்றுங் கேளாய் வழிப்பகை யுடையே னும்பால்

ஈனமி லெந்தை சீற்ற நீக்கினு னென்ன முன்னோர்
தானவ னனைய மன்னன் கொல்லயான் சலித்து மேனாள்.

௩௩. மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லாம்
வேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட் டன்னார்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்
காவன கடன்க ணேர்ந்தே னருஞ்சின மடக்கி நின்றேன்.

௩௪. உலகெலா முனிவற் கீந்தே னுறுபகை யொடுக்கிப் போந்தேன்
அலகின்மா தவங்கள் செய்தே னருவரை யிருந்தே னுண்டைச்
சிலையைநீ யிறுத்த வோசை செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை யாகில் வாங்குதி வில்லை யென்றான். 1382

௩௫. என்றன னென்ன நின்ற விராமனு முறுவ லெய்தி
நின்றொளிர் முகத்த னாகி நெடியமால் வலியி னுண்ட
வென்றிவிற் றருக வென்னக் கொடுத்தனன் வீரன் கொண்டான்
துன்றிருஞ் சடையோ னஞ்சத் தோளுற வாங்கிச் சொல்லும்.

௩௬. பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்றான். 1384

வேறு.

௩௭. நீதியாய் முனிந்திடே னீயிங் கியாவர்க்கும்
[1]ஆதியா னறிந்தன னலங்க னேமியாய்
வேதியா விறுவதே யன்றி வெண்மதிப்
பாதியான் [2]பிடித்தவில் பற்றப் போதுமோ. 1385

௩௮. பொன்னுடை வனைகழற் பொலங்கொ டாளினாய்
மின்னுடை நேமியா னுதன் மெய்ம்மையால்
என்னுடைத் துலகினி யிடுக்கண் யான்றந்த
உன்னுடை வில்லுமுன் னுரத்துக் கீடன்றால். 1386

௩௯. எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயென்றான்
கையவ ணெகிழ்த்தலுங் கணையுஞ் சென்றவன்
மெய்யுறு தவமெலாம் கொண்டு மீண்டதே. 1387

1. ஓதியா விறுவதே யன்றி யுள்ளொரு.
2. பிடித்தவிற் பாரம்.

௪0. எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
மண்ணிய மணிநிற வண்ண வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்குங் களைக ணாகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினான். 1388

௪௧. அழிந்தவன் போயபி னமல னையுணர்
வொழிந்துதன் னுயிருலைந் தருகு தாதையைப்
பொழிந்ததோ ரன்பினாற் றொழுது புக்கனன்
கழிந்தவான் றுயர்க்கடற் கரையி னேறினான். 1389

௪௨. வெளிப்படு முணர்வினன் விம்ம னீங்கினன்
தளிர்ப்புறு மதகரித் தானை யானிடர்க்
குளிப்பருந் துயர்க்கடற் கோடு கொண்டவன்
களிப்பெனுங் கரையிலாக் கடலு ளாழ்ந்தனன். 1390

௪௩. பரிவுறு சிந்தையப் பரசு ராமன்கை
விரிசிலை வாங்கியோர் வசையை நல்கிய
ஒருவனைத் தழுவினின் றுச்சி மோந்துதன்
அருவியங் கண்ணெனுங் கலச மாட்டினான். 1391

௪௪. பொய்ம்மையிற் சிறுமையிற் புரிந்த வாண்டொழில்
மும்மையி னுலகினான் முடிக்க லாவதோ
மெய்ம்மையிச் சிறுவனை வினைசெய் தோர்களுக்
கிம்மையு மறுமையு மீயு மென்றனன். 1392

௪௫. பூமழை பொழிந்தனர் புகுந்த தேவர்கள்
வாமவேல் வருணனை மான வெஞ்சிலை
சேமியென் றளித்தனன் சேனை யார்த்தெழ
நாமநீ ரயோத்திமா நகர நண்ணினான். 1393

௪௬. நண்ணின ரின்பத்து வைகு நாளிடை
மண்ணுறு முரசிடை வயங்கு தானையான்
அண்ணலப் பரதனை நோக்கி யாண்டகை
எண்ணருந் தகையதோர் பொருளி யம்புவான். 1394

௪௭. ஆணையி னினதுமூ தாதை யையநிற்
காணிய விரைவதோர் கருத்த னாதலாற்
கேணியில் வளைமுரல் கேக யம்புகப்
பூணொளிர் மார்பநீ போதி யென்றனன். 1395

சஅ. ஏவனு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினன்
ஆவியங் கவனல தில்லை யாதலான்
ஓவலி லுயிர்பிரிந் துடல்சென் றென்னவே. 1396

சகூ. உளைவிரி புரவித்தே ருதைய சித்தெனும்
வளைமுரல் சேனையான் மருங்கு போகப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
நளிர்புனற் கேகய நகர நண்ணினன். 1397

ரு0. ஆனவன் போனபின் னரசர் கோமகன்
ஊனமில் பேரர சுய்க்கு நாளிடை
வானவர் செய்தமா தவமுண் டாதலான்
மேனனி நிகழ்ந்தது விளம்பு வாமரோ. 1398

பரசிராமப் படலம் முற்றும்.

பாலகாண்டம் முற்றும்.

Printed at The B. N. Press, Mount Road, Madras.

செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள்	எண்	செய்யுள்	எண்
அஃதையநினையெம	319	அந்தவேலையிலிந்திரன்	496
அகிலிடுகொடும்புகை	141	அந்தவேலையிற்றிதி	505
அகிலிடும்புகையட்டி	78	அப்போதினின்முடிமன்னவ	1350
அங்கண்ஞாலத்தரசு	844	அமராஞ்சொல்லணங்	845
அங்கவர்பண்ணைநன்னீ	1016	அமிர்துகுகுதலையொ	309
அங்கிடையுற்றகுற்றம	1024	அமிழ்மைத்துணைகள்	1205
அங்கிறைவனிப்பரிசு	390	அமைவருமேனியனழகி	1319
அங்குநின்றெழுந்தயன்	510	அம்பிலேசிலையைநாட்டி	18
அச்சநுண்மருங்குலாரோர்	1058	அம்புயத்தணங்கினன்னார்	983
அச்செனநினைத்தமுத	1238	அம்மாணகருக்கரச	176
அஞ்சனக்கிரியினன்ன	936	அயல்வருமுனிவரு	261
அஞ்சனவண்ணத்தான்றன்	563	அயன்புதல்வன்றயரதனை	734
அஞ்சனவொளியானுமலர்	1266	அயிர்சுற்றியகடன்மாநில	1360
அஞ்சிலேயொன்று	5	அயில்வேலனல்காலகல்	1251
அடர்ந்துவந்தனங்கனெஞ்ச	803	அயின்முகக்குலிசத்	104
அடாநெறியடைதல்செல்லா	1115	அரங்கிடைமடந்தைய	146
அடிகுரன்முரசதிர்	262	அரசபாதவனீயாதி	683
அடுப்பவரும்பழிசெய்ஞ் ஞரு	448	அரசர்தம்பெருமகன்	321
அடைந்தவணிருந்தபின்னர்	978	அரசனவன்பின்னோரை	725
அடைந்தனன்வளநகர்	240	அரசருமுனிவரு	237
அணியிழைமகளிரும்	133	அரசின்வைகியறனி	656
அண்ணன்முனிவற்கது	398	அரசனும்புலையற்கின்னே	679
அண்டர்கடுயரமும்	259	அரசனோடேகியூபத்	692*
அண்டகோளாகைக்கப் புறத்தென்னை	482	அரசெலாமவண	107
அண்டகோளகைக் கப்புறத்தாதி	538	அரத்தமுண்டனையமேனி	1153
அதிர்கழலொலிப்பன	160	அரத்தநோக்கினரற்றிரண்	854
அந்தமாமதிற்புறத்	116	அரம்பைமேனகை	487
அந்தணராசியருங்கல	1333	அரமடந்தையர்கற்பக	495
அந்தமிலழகனையணைகிலா	603	அரியநற்றவமுடை	284
அந்தர துந்துமிமுழக்கி	254	அரியயான்சொலி	477
அந்தாராகத்தைங்கணை	1000	அருக்கியமுதலிய	241
		அருக்கியமுதலினே	228
		அருகினின்றசைக்கின்ற	616

செய்யுள்	எண்	செய்யுள்	எண்
அருங்கனிமால்கனி	1113	அன்றவன்வந்ததறிந்து	440
அருட்டருங்கமலக்கண்ண	215	அற்பகலாக்குஞ்சோதிப்	950
அருந்ததிகணவன்வேந்தற்	657	அனிகம்வந்தடிதொழக்	1137
அருந்தவமுனிவரு	191	அனையதோரதன்மிசையைய	1318
அருந்தவன்றந்தையை	227	அனையவன்மண்டபமணுகி	1288
அருந்தவனுறையுடன்னை	562	அனையாண்மேனிகண்டபி	593
அருப்புமென்முலையாளங்	1170	அன்றுமுதலின்றளவு	775
அருமறைமுனிவரு	312	அன்னதம்பியுந்	341
அருவலியதிறலினரா	743	அன்னதான	2
அருவிபெய்வரையிற்பொங்கி	878	அன்னநீரகன்கிடங்கு	121
அருவியிற்றுழ்ந்து	135	அன்னமரிதிற்பிரிய	1245
அருள்சுரந்தரசனுக்	239	அன்னமாமதிலுக்	114
அருளிலானெனினும்மனத்	706	அன்னமாலையையாழிடைப்	483
அரைசன்னவனிடையே	1365	அன்னமுமன்னவரம்பொன்	1341
அலம்புமாமணியாரத்தோ	478	அன்னமென்னடையவ	625
அலகிலானைகலனைகமு	905	அன்னமென்னடையாரும்	1268
அலைகடனடுவணோர்	193	அன்னவண்மேனிகாணு	670
அலையுருவக்கடலுருவத்	747	அன்னவளையல்லளென	1232
அலம்புபாரக்குழலி	1169	அன்னவன்மகவிலா	368
அல்லினைவகுத்ததோரலங்கற்	617	அன்னவன்றனக்குவேந்த	429
அல்லின்மாரியனைய	411	அன்னவன்றன்புரந்தளிக்குந்	223
அவர்களிற்குசநாபற்கே	425	அன்னவாசகங்கேட்டுண	700
அவன்மலர்க்கைகடலண்ட	428	ஆகமாலயமாகவுளாள்	961
அவனன்னதுபகரும்மள	1367	ஆகுநல்வழியல்வழி	711
அவனெடும்பாதலத்	382	ஆக்கியகாதலாளொருததி	1098
அவ்வயினிழிந்துவேந்த	687	ஆங்கவரம்மொழியுரைப்ப	225
அவ்வரந்தந்தனமினித்தோர்	252	ஆங்கவன்வெகுளியும்	381
அவ்வுரைகேட்டம்முனியு	738	ஆங்கவன்றுறக்கமெய்த	680
அவ்வுரையிராமன்கூற	552	ஆங்குரையினையகூறு	221
அழிகின்றவறிவினாலோ	1066	ஆசலம்புரியைம்பொறி	20
அழிந்தவன்போயபினமல	1389	ஆசையாலயர்பவ	815
அழிவருதவத்தினோடறத்தை	1295	ஆசையும்விசும்புநின்	290
அறலியற்கூந்தற்கண்வா	877	ஆடகப்பொற்சுடரிமைக்கு	248
அறுசுவைத்தாயவுண்டி	658	ஆடகமால்வரையன்னது	784
அறுபதினாயிரமாண்டு	190	ஆடவராவிசோர	939
அறையுமாடரங்கும்	14	ஆடினர்பாடினர்	201

செய்யுள்	எண்
ஆடின ரரம்பைய	293
ஆடுவார் புரவியின்	156
ஆணையினினது மூதாதை	1395
ஆண்டகை யவ்வுரைகூற	441
ஆண்டங்கணையாளினை யநினைந்	633
ஆண்டுநின்றெழுந்து போகி	1117
ஆதரித்தமுதிற்கோரேய்த்	568
ஆதலாலிருவினை யறுக்கு	457
ஆதியந்தமரியென	8
ஆதித்தன் குலமுதல்வன்	722
ஆதி மறையு மருளும்	177
ஆம்பலொத்தமுதூறுசெவ்	1179
ஆயதற் குரியன	270
ஆயதறிந்தனர் வானவ	437
ஆயதிவ்விடமப்புறத்	508
ஆயவனருள்வழி	371
ஆயவனொருபக	188
ஆயிடைப்பருவம்வெந்	287
ஆயிடைக்கனலினின்	273
ஆய்ந்தோர்க்கு முணர்வரிய	749
ஆய்ந்தமேகலை யவர்	142
ஆரமுந்துகிலுங் கல	1189
ஆரிடைப் புகுதுநாபென்	786
ஆர்த்தியு முற்றது மறிஞர்க்	1101
ஆர்த்தது விசும்பைமுட்டி	893
ஆர்த்தவரைநோக்கிநகை	395
ஆர்த்தன பேரிகளார்த்தன	1339
ஆர்த்தனர் முறைமுறை	300
ஆல முலகிற் பரந்ததுவோ	631
ஆலையம் புதுக்குக	298
ஆலைவாய்க்கரும்பின்	48
ஆளுமன்னம் வெண்குடை	118
ஆறியவறிவன்கூறி	419
ஆறுபாயரவமள்ள	42
ஆறெலாங்கங்கையே	1050
ஆற்றலின்மையினாலழிந்	1047

செய்யுள்	எண்
ஆன தூயவரோடு	1034
ஆனமாமணிமண்டப	1193
ஆனவன்போனபின்னரசர்	1398
ஆனவலிங்குறைகின்ற	435
இச்சிலைபுதைத்தகோற்	760
இடங்கொள்சாயல்கண்	91
இடம்படுதோளவனோடியை	1336
இடப்படுபுகழ்ச்சனகர்	1246
இடரேட்டியெனநெடிய	729
இடியொடுமடங்கலும்	378
இடையிடையிளவெயி	830
இடையிடையெங்கணுங்	154
இடையிறமகளிர்க	82
இடையேவளைசோர	1256
இணைநெடுங்கணினிந்து	1178
இணையெடுத்திடையிடை	832
இத்தகைமாநக	302
இந்தமாநதிக்குற்றுள	511
இந்திரநீலமொத்திருண்ட	620
இந்திரன்சசியொடு	1328
இந்திரன்னிடைந்தானுடைந்	402
இப்பரிசனிநகருறையும்	320
இமையவில்வாங்கியவீசன்	763
இம்பர்நாட்டின்றரமல்ல	857
இம்மன்னன்பெருஞ்சேனை	773
இயக்கர்தங்குலத்துளான்	367
இயங்குறுபுலன்களங்கும்	583
இயல்புடைபெயர்வன	81
இரதமாண்டிழிந்தபின்ன	1324
இரவியிற்சுடர்மணி	163
இரவிதன்குலத்தெண்ணில்	31
இரிசிகனெந்தைக்கீய	1379
இருந்தகுலக்குமாரர்தமை	721
இருபதுகரந்தலையீரைந்	197
இருபிறப்பாளரெண்ணு	890
இருப்பனையகருநெடுங்கோட்	767

செய்யுள்	எண்
இருவருமிரண்டுவில்லு	1377
இலங்கையரசன் பணிய	388
இலவிதழ்த்துவர்விட	1071
இலைகுலாவயிலினு	1120
இலைமுகப்படத்தவனெழுதிக்	821
இல்லையேநுசுப்பென்ப	814
இவ்வண்ணநிகழ்ந்தவண்ண	560
இழிந்தகங்கைமுன்மன்னவன்	535
இழிந்துபோயிரதமாண்	260
இழைக்குநுண்ணிடை	546
இழைகளுங்குழைகளுமின்ன	598
இழைகுலாமுலையினளை	1222
இளைக்கலாதகொங்கை	801
இளைப்பருங்குரங்களா	157
இளையபைங்குரிசில்வந்	1138
இறங்குவமகரயா	148
இறக்கமென்பதையெண்ணல	963
இறந்துநீங்கினயாவையும்	503
இறைதவிர்ந்திடுகபார்	296
இறைக்கடைதுடித்த	393
இறைஞ்சியன்னவரேத்தின	1192
இற்றதோவெனநக்கிங்கி	677
இற்றிவணின்னதாக	795
இற்றுறுடியசிலையின்றிற	1366
இனையனநிகழ்ந்தபின்னர்க்	421
இனையவெய்தயிரும்புன	1044
[க] 3 தேவர்மேல். 5-8 எங்கண்மே லெய்யவு மரியவம் பெய்தவன்: எங்கண்மே லெய்தவு மரியவம் பெய்தவன்: எங்கண்மே லெய்யவும் பரியவம் பெய்தனன்: அங்கமே லெய்யவு மரியவம் பெய்தவன்: அங்கமே லெய்தவு மரியவம் பெய்தவன்: அங்கண்மே லெய்யவு மரியவம் பெய்தவன்: அங்கணம் பெய்யவு மரியவம் பெய்தவன். 11-12 பூளைவீந் தன்னதன்: பூளைவீந் தன்னவன். 15-16 டநங்கவே ளாயினுன். [உ] 6 றங்குமிங். 6-7 றங்கம்வெந் துகுதலா. 7 கெரிதலா. 11 யனங்கநா: யங்கனு. 12 டது வுமக். 14 குறியினுற். [ங] 2 வொடுமெனம்: வொடுமெறப்: டும்மனம். 3 பசை யிறப்: பசையுறு. 4 பரிவுபோய். 5 முற்றுவா. 6 லுணர்வுபோய்: னுணர்வு மேன்: னுணர்வுபோய். 7 முறுகினு. 9 றற்றுவா. 14 மளவிதோ. 15 வன்றி தன். [ச] 4 தவன்வயிற்: தனவயிற்: தவளவிற்: தளவினிற். 6 தெதிர் தொழுஞ்: தெதிர்கொடுஞ்: தெதிரெழுஞ். 7 சேணெறிச்: சென்னெறிச். 10 தழல்கதிர்ப். 12 டலமகன். 13-14 குன்றினின் றிவரவோர்: குன்று வந் திவரவோர்: குன்றுநின் றிழிவதோர்: குன்றின்வந் திழிவதோர்: குன்றி னின் றிவர்வதோர்: குன்றினின் றிவர்வவோர்: குன்றிகழ்ந் திழிவதோர். 14 தணைவவோர்: தணையவோர்: திவர்வதோர்: தனையவோர்.

ரு. பரிதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளுங்
கருதின்வே முள்ளமுங் காணின்வே நயனமும். 343

சு. படியின்மே லுலகும்வேம் பகரினும் பகருநா
முடியவே மிரவின்மூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னின்வே றியாவைவே வாதவே. 344

எ. விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் தமர்செயுந் திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ. 345

அ. பேய்பிளந் தொக்கநின் றலர்பெருங் கள்ளியின்
றாய்பிளந் துக்ககா ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம். 346

கூ. பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாதுகூ டாதரோ சூரியன்
றேருமோ டாதுமா மாகமீ தேறிநேர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ. 347

[ரு] 3 பசையிறப். 4 பருகலான்: பருகிவான்: பருகவான். 6 கொண் டுலா: கொண்டுலாய். 7 வேனலே. 8-9 யன்றிவே றிருதுவொன்: யன்ன தோ ரிருதுவொன்: யன்னதோ ரிருதுவென். 11 லெரிமுதற்: லெரி முகக். 13 கருதில்வே. 15 காணில்வே. [சு] 1 படியுமே. 1-2 படியின் மேல் வெம்மையைப் படியும்வேம் வெம்மையைப். 2 லுலகம்வேம். 4-6 பகருநாள் முடியுமே முடியமூ. 5-6 முடியுமே முடியமூ: முடியுமே லுல கைமூ. 6 முயிரின்மூ: முடியுமூ: 9 வெடிவின்மேல்: விடியின்மேல். 14 மென்னில்வே. 16 காதவே. [எ] 1 மிஞ்சுவான்: விஞ்சைவான். 3 லம் புமே. 5 செஞ்சவே. 7 தன்றியே. 8 திறநிலா. 10 வினையினல்: வினை களா. 11 மாவிமா. 12 மழையிழந்: மணிவிழுந். 15 லொன்றுமா. [அ] 1-2 காய்பிளந் துக்கநின். 7 ரகிலுமே: ரகிலுமோர்: ரகிலுமோ. 8 தளைவிலா: தழைபெறு: தழைவிலா: தழைகிலா. 14 துக்கநன்: துக்கமா. [கூ] 2 டாமைநீ. 4 பாலதோ. 6 டாமைகூ. 7 டாததோர்: டாததோ. 10 டாது மெய். 10-12 டாதுமெய் தேரினேர் மூரிவெங்: டாதுநேர் தேரில்வா னூர் பெருங். 11-12 தேருமே தேரினேர்: தேரின்மீ தேறினோர்: தேரினேர் மூசுவெங்: வானமே தேரினோர். 12 தேரினேர்: தேருநேர்.

க0. கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகால்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்கண்மண் மகளுடற்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே. 348

வேறு

கக. புழுங்குவெம் பசியொடு புரளும் போரரா
விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய்
முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே. 349

க௨. ஏகவெங் கனலர சிருந்த காட்டினிற்
காகமுங் கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை விழுந்த போன்றவே. 350

கஈ. கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலந்
தானகங் கரிதலிற் றலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடின் விசும்பு வேமெனா
வானவர்க் கிரங்கிநீர் வளர்ந்த தொத்ததே. 351

[க0] 1 கண்கிழிந்: கணவிழித். 3 கனவரா. 4 வரசுகார். 5 விண்கிழிந். 6 துமிழுமின். 8 மணியெலாம். 9 மண்கிழிந். 10 திடவிடுஞ். 13 புண்கிழிந். 15 குருதிநீர். 16 போலுமால்: போன்றதே. [கக] 1 புழுங்கிவெம்: புழுங்கும்வெம். 3 வாழும். 4 பேரரா. 6 தெழுந்தெதிர். 7 விரிந்த. 9 முழுங்குவெங்: முழுங்கிவெங்: 10 முகடு. 10-11 கரிபுக முடுகு: கரிபுக முழுகு. 13 வழங்கவெங். 14 கதிர்சுடா. 16 நேடியே. [க௨] 4 காட்டிடைக்: நாட்டினிற்: நாட்டிடைக். 5 காகவெங். 8 சாய்வன: சாய்ந்தன. 10 கதிரெனும். 15 வீழ்ந்த: வீழ்வ. 16 போலுமே: போன்றதே: போலவே. [கஈ] 2 தியங்கின. 3 கழுகின். 4 றேர்ப்புனல். 5-6 தானகத் தெழுதலாற்: தானகக கரிகளிற்: தானகக் கிரிகளின்: தானகக் கிரிகளிற்: தானகைக் கிரிகளிற்: தானகல் கிரிகளிற்: தானகத் தெழுதலிற்: தானமாக் கிரிகளிற். 9 மேனிமிர்த். 9-10 மேனிவெங் தெழுந்தனல். 10 தெழுந்துடன்: தணைந்திடின்: தெழுந்திடில்: தெழுந்தகல்: 11 விசும்பும். 12 வேமென. 15 வளைத்த. 16 தொக்குமே: தொத்தவே.

கச. ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
காய்ந்தவக் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே. 352

கரு. தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. 353

கசு. பொரிபரற் படர்நிலம் பொடிந்து கீழுற
விரிதலிற் பெருவெளி விளங்கித் தோன்றலால்
அரிமணிப் பணத்தரா வரச னாட்டினும்
எரிகதிர்க் கினிதுபுக் கியங்க லாயதே. 354

கஎ. எரிந்தெழு கொடுஞ்சுர மினைய தெய்தலும்
அருந்தவ னிவர்பெரி தளவி லாற்றலைப்
பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் சிறிதென மனத்தி னோக்கினான். 355

[கச] 1 ஏய்ந்ததக்: ஏய்ந்திதிக். 4 கானத்தேர்: கானத்தோர். 5 காய்ந்தநற். 6 கனல்வனங்: கனிவனங்: கரிவனங. 7 கடுக்கும். 8 வேனலின். 11 றிருப்பச். 11-12 றிருக்க மேயதோர். 12 சேயொளி. 13 பாய்ந்தநற். 14 காலிடைப். 15 பளிங்குப். [கரு] 1-4 தோமரு மிருவினை துறந்த தூநெறி: தேவரு ளிருவினை செற்று முற்றிய: தேவரி னிருவினை செற்றத் துற்றெரி: தேவரி னிருவினை செற்ற துற்றெரி: தேவரு ளிருவினை செற்றுத் தேறிய: ஓவரு மிருவினை யற்று முற்றெரி: தோமரு மிருவினைத் தொடர்பு முற்றிய. 3 தள்ளித்: தள்ளத்: துறந்து. 3-4 தள்ளி முற்றிய. 5-6 மூவகை யாணமுங். 7 கடிந்து. 10 புரிந்தவர். 12 பொய்யிலைப். 16 மற்றவே. [கசு] 1 பொரிந்துபாற். 2 படநிலம்: படுநிலம. 3 பொலிந்து: பொரிந்து: போழ்ந்து. 6 பெருவழி. 7 விளங்கத்: விளககிற் (ரே). 9 அருமணிப்: பரிமணிப். 10 பணத்தர. 10-11 பணிமுடி யரச. 11-12 வரசர் நாட்டினும். 14 கினியபுக். 16 லானதே. [கஎ] 8 லாற்றலாற்: லாற்றலிற். 12 மெல்லியார். 14 சிறிதெனா: பெரிதென. 15-16 மனத்து னோக்கினான்: மனத்து நோக்கினான். 16 னெண்ணினான்.

353 (i) திருகிக் காய்சுரஞ் சிந்திக்கச் சிந்தைநொந்
துருகிப் போமென் றுரைசெய வேண்டுமோ
கருகிக் கண்சிவந் துண்டுமெண் கான்றுநெய்
பருகிப் பின்னையும் பாற்கடற் றுஞ்சுமால்

[353 (i)] 354-ன் பின். 11 துண்டமண். 12 கான்றுநெய்ப்.

கஅ. நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக்
கோக்குமா ருமடி குறுக நான்முகன்
ஆக்கின விஞ்சைக ளிரண்டு மவ்வழி
ஊக்கின னவையவ ருள்ளத் துள்ளினார். 356

கக. உள்ளிய காலையி னூழித் தீயையும்
எள்ளுறு கொழுங்கன லெரியும் வெஞ்சுரம்
தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது
வள்ளலு முனிவனை வணங்கி வாழ்த்தியே. 357

உ0. சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டிடை
அழிவதென் காரண மறிஞ கூறென்றான். 358

உக. என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியினா ளூழித் தீயனாள். 359

[கஅ] 1 நோக்கினன். 2 வணமுக: (ன்)றன்முக: (ன்)றம்முக: (ன்) றனிமுக. 2-3 னற்புத நோக்கு. 3 நோக்கி. 3-4 நோக்கி னோக்கு டைக். 4 நோக்கிடைக். 9 ஆக்கிய. 10-12 பெலையதி பெலையென் றுய்மறை. 11-12 ளிரண்டை யவ்வழி. 12 மவ்வையின்: மவ்வயின். 13-16 நோக்கின னவரவ ருளத்து நோக்கினார்: ஒக்கின வானவ ருள்ளத் துள் ளினார். 14-15 னவரவை யுள்ளத்: (ன்) யாவையு முள்ளத். [கக*] 4 தீ யெனும்: தீயினை. 5 எள்ளுவ. 6 கொடுங்கன. 6-7 கொழுங்கதி ரெஞ்சும். 7 லெஞ்சும்: லெஞ்சி. 9 தெள்ளுவெண. 10 புனலெனச. 11-12 சென்ற தொத்ததவ். 12 லொத்தன: லொத்ததவ். 15-16 ணைங்கிக் கூறுவான்: வணங்கிச் சொல்லுவான். 16 வேண்டுவான்: யேத்தியே. [உ0] 2 கங்கை யத்: கங்கையின். 4 மோலியான். 9 பழிபட: பழிபடு. 9-13 பழிபடர் மன் னவன் படைத்த நாட்டினூங் கழிவதென். 11 பரித்த. 12 நாட்டினில்: நாட்டினும்: நாட்டிவண். 13 அழிவதன்: அழிவன: அழிவிதன். 15 மறி யக். [உக] 6 வாழ்க்கையாள். 8 றோற்றத்தாள். 14-16 வலியினா ளூறுதி கேளென்றான்: வலியினா ளூறுதி கேளனா வலியினா ளூறுதி கேட்கென.

359 (i) ஓங்கிய தவத்தி னாலே யுயர்ந்தமா முனிவர் தம்மைத்
தீங்கது செய்து கொன்று தேவர்தம் பதங்க ளெங்கு
மேங்கிடத் திரியுங் காணி லியங்குறு போதி லிந்த
வீங்கிடை யரக்கி வந்த வாறெலாம் விளம்பக் கேணீ.

௨௨. கன்னவி றோளினாய் கமலத் தோனருள்
மன்னுயி ரனைத்தையும் வாரி வாய்மடுத்
தின்னுயிர் வளர்க்குமோ ரெரிகொள் கூற்றநேர்
அன்னவள் யாவளென் றறையக் கேட்டியால். 360

௨௩. இயக்கர்தங் குலத்துளா னுலக மெங்கணும்
வியக்குறு மொய்ம்பினா னெறியின் வெம்மையான்
மயக்கில்சற் சரனெனும் வலத்தி னானருள்
துயக்கிலன் சுகேதுவென் றுளனோர் தூய்மையான். 361

௨௪. அன்னவன் மகவிலா தயருஞ் சிந்தையான்
மன்னெடுந் தாமரை மலரின் வைகுறும்
நன்னெடு முதல்வனை வழுத்தி நற்றவம்
பன்னெடும் பகலெலாம் புரிந்த பான்மையால். 362

௨௫. முந்தின னருமறைக் கிழவன் முற்றுநின்
சிந்தனை யென்னெனச் சிறுவ ரின்மையான்
நொந்தன னருள்கென நுணங்கு கேள்வியான்
மைந்தர்க ளிலையொரு மகளுண் டாமென்றான். 363

௨௬. பூமட மயிலினைப் பொருவும் பொற்பொடும்
ஏழுறு மதமலை யீரைஞ் ஞூறுடைத்
தாழுறு வலியொடுந் தநயை தோன்றுநீ
போவென மலரயன் புகன்று போயினான். 364

[௨௨**] இதுமுதல் 'மிகுந்திறன்' (௩௧) முடியவுள்ள 18 பாட்டுக்கள் சில பிரதிகளில் இல்லை. ௪௩-ன் பின்: ௪௨-ன் பின். இது 'வெள்ளி' என்று ஓர் ஏட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. 6 (ர்) யாவையும். 8 வாய்ப்படுத். 8-9 வாய்ப்பெயா வின்னுயிர்: வாய்ப்பெய ரின்னுயிர். 8-10 வாய்ப்பெய ரின்னவ ளார்த்திடு(மெ). 9-11 தென்னையும் விழுங்குவ ளெரிகொள். 10-11 வளர்த் திடு மெரிகொள்: அனைத்தையு மெரிகொள். 12 கூற்றனாள்: கூற்றினாள்: கூற்றினேர். 14-15 ஆரென வறையக். 15 றறியக். 15-16 றறியக் கேட்டியேல். [௨௩*] 3-4 னொருவ னெங்கணும். 5 வியப்புறு: வியக்குவ. 7 னெரியும். 9 மயக்கில்சச்: மயக்கிலன்: மயக்கிலச: மயக்கலிற். 11 வரத்தி. 13 துயக்கலில். 14 சுகேசனென்: கேதுவென். [௨௪*] 4 (ந்) தன்மையான். 7 மலருள். 8 வைகிய. 10 முதறனை. 15 பயினற: பயந்த: ஆய்ந்த: உழந்த. 16 பான்மையான். [௨௫*] 8 ரின்றியே. 10 னருளென. 11 நுணுகுங். 12 கேள்வியாய்: வேள்வியாய். 14 ளில்லையோர். 15 மகவுண். 16 டென்றனன். [௨௬*] 3 பொருவு. 4 பொற்புடன். 6 கதமலை. 6-7 மதலைமா வீரைஞ். 8 ஞூற்றிடைத். 9 தாமிகு. 10 வலியொடு. 11 தநயள். 12-13 தோன்று நீர் போமென. 13-14 போமதி யெனவயன். 14 மலரவன்.

உஎ. ஆயவ னருள்வழி யலர்ந்த தாமரைச்
சேயவ ளனைவளர் செவ்வி கண்டிவட்
காயவன் யார்கொலென் றாய்ந்து தன்கிளை
நாயகன் சுந்தனென் பவற்கு நல்கினான். 365

உஅ. காமனு மிரதியுங் கலந்த காட்சியி
தாமென வியக்கனு மணங்க னாளும்வே
றியாமமும் பகலுமோ ரீறு காண்கிலார்
தாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினார். 366

உகூ. பற்பல நாட்செலீஇப் பதுமை போன்றொளிர்
பொற்பினாள் வயிற்றிடைப் புவன மேங்கிட
வெற்புறழ் புயத்துமா ரீச னும்விறல்
மற்பொரு சுவாகுவும் வந்து தோன்றினார். 367

௩0. மாயமும் வஞ்சமும் வரம்பி லாற்றலுந்
தாயினும் பழகினார் தமக்குந் தேர்வொணா
தாயவர் வளர்வுழி யவரை யீன்றவக்
காய்சினத் தியக்கனுங் களிப்பின் மேன்மையால். 368

௩க. தீதுறு மவுணர்க டமை தீர்தர
மோதுறு கடலெலா மொருகை மொண்டுணும்
மாதவ னுறைவிட மதனில் வந்துநீள்
பாதவ மனைத்தையும் பறித்து வீசினான். 369

[உஎ*] 3-4 (ப்) பிறந்த வாயிழைச். 6 ளனவரு. 7 செல்வி. 8 கண்டவட். 9-10 காயவர் யாவரென. 12 தங்கிளை: தன்குல. 14 சுசந்தனென்: வசந்தனென்: சுகந்தனென். 14-15 சுதனென வவற்கு. [உஅ*] 4 காட்சிய. 8-9 னாளுமே யாமமும். 11-12 ரீறின் றென்னலாங்: ரீறின் றென்னலார்: ரீறின் றென்னலால்: ரீறின் றென்னலாத்: ரீறின் றென்னலாய்த். 13 தாமிகு. 15 சலத்தின். 16 வைகினார். [உகூ*] 2 நாட்செலப். 4 போலொளிர்: போலிய. 8 மோங்கிட. 9 வெற்பணி: வெற்பன: வெற்படு. 11-12 ரீசன் வென்றிசேர். 13 மற்பெருஞ். [௩0*] 1 மாயையும். 5 தாயிலும். 6-7 பழகினாந் தமக்குத். 8 தேரொணா. 9 வாயவர். 10 வளர்வுழீஇ. 13-14 காய்சின வியக்கனுங். 16 மேன்மையான்: வைகினான்: வைகுநாள். [௩க*] 1 தீதறு. 4 தீதர: தீய்தர. 5 வோதுறு. 8 மொண்டிடும். 10 னுறையிட. 11 மதனை. 16 வீசினார்.

௩௨. விழைவுறு மாதவம் வெஃகி னோர்விரும்
புழைகலை யிரலையை யுயிருண் டோங்கிய
வழைமுதன் மரனெலா மடிப்ப மாதவன்
தழலெழ விழித்தனன் சாம்ப ராயினான். 370

௩௩. மற்றவன் விளிந்தமை மைந்தர் தம்மொடும்
பொற்றொடி கேட்டுவெங் கனலிற் பொங்குறா
முற்றுற முடிக்குவன் முனியை யென்றெழா
நற்றவ னுறைவிட மதனை நண்ணினாள். 371

௩௪. இடியொடு மடங்கலும் வளியு மேங்கிடக்
கடிகெட வமரர்கள் கதிரு முட்குறத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப வண்டமும்
வெடிபட வதிர்த்தெதிர் விளித்து மண்டவே. 372

௩௫. தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி யொழுக வுங்கரித்
தழிவன செய்தலா லரக்க ராகியே
இழிகென வுரைத்தன னசனி யெஞ்சவே. 373

௩௬. வெருக்கொள வுலகையும் விண்ணு ளோரையும்
முருக்கியெவ் வுயிருமுண் டுழலு மூர்க்கராம்
அரக்கர்க ளாயின ரக்க ணத்தினில்
உருக்கிய செம்பென வுமிழ்கட் டீயினர். 374

[௩௨*] 2 மாதவன். 4 னோன்விரும்: னோர்விரும். 5 புழைதலை: புழைதனை: புழைகளை. 7-8 யுயிரகொண் டேகிய. 8-9 டேகியவ் வழியினில்: டேகியவ் வழியொடு. 9 வழியொடு: வழையொடு: வழைதழை: வழையுடை. 9-12 பழியொடும் பகைப்புறம் பார்த்த பண்ணவன். 10 மரமெலா. 11 மடிய. 14 விழித்தலும். 16 ராயினன். [௩௩*] 2 விளிந்தனன்: அழிந்தமை. 6-7 கேட்டுவெந் தனலிற். 8 பொங்குற. 10 முடிக்குவென். 10-16 முடிக்குவ...யென்றவர் ..நண்ணினார். 14 னுறையிட. [௩௪*] 3 எவையு: வெளியு: விளியு: ஒளியு. 4 மோங்கிடக். 6 வமரருங். 8 முட்கிடத்: முட்கறத்: மட்குறத். 13-14 வெடிகெிர்த் தெதிரவள். 14 வதிர்ந்தெதிர்: வார்த்தெதிர். 15 விழித்து. 16 மணடினன். [௩௫*] 2 மளக்கருஞ். 7 யோங்க. 8 வுட்கருத்: வுங்கருத். 9-13 தமிழ்வன .....ராதிரென் றிமிழ்கென: தமிழ்வன... யிமிழ்கென. 12 ராதிரென்(றி). 16 யெஞ்சிட: யஞ்சிட. [௩௬**] இது ‘வெள்ளி’ என்று ஒரு ஏட்டில் குறிக்கப்பெற்றுளது. 1 வெருக்கொளிவ். 6 வுலகுமுண். 7 டுமிழு. 8 மூர்க்கராய். 10 ளாயினு. 15-16 வோதி யாயினார்: வோதி யோங்கவே. 16 டீயினார்.

௩௭. ஆங்கவன் வெருளியு மறைந்த சாபமுந்
தாங்கின ரெதிர்செயுந் தருக்கி லாமையின்
நீங்கினர் சுமாலியை நேர்ந்து நிற்கியாம்
ஓங்கிய புதல்வரென் றறவு கூர்ந்தனர். 375

௩௮. அவனொடும் பாதலத் தனேக நாட்செலீஇத்
தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர்
இவரெனப் புடைத்தழீத் துலக மெங்கணும்
பவனனிற் றிரிகுநர் பதகி மைந்தர்கள். 376

௩௯. மிருந்திறன் மைந்தரை வேறு நீங்குறுத்
தகுந்தொழின் முனிவரன் சலத்தை யுன்னியே
வருந்துற வசுவரி வதிந்த திவ்வனம்
புகுந்தன ளழலெழப் புழுங்கு நெஞ்சினள். 377

௪0. மண்ணுருத் தெடுப்பினுங் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள். 378

[௩௭*] ௩௫-ன் பின். 5-7 தாங்குன ளதிசெயந் தரிக்கி. 8 லாமையால். 9 நீங்கியே. 10 மாலையை. 11 நெருக்கி: நெருங்கி. 11-12 நெருக்க நிற்குநர். 12 நிற்குநாம்: நிற்குளம்: நிற்குனர். 14 மைந்தரென். 16 கூறினார்: பூண்டனர்: கூறியே. [௩௮*] 1 அவனொடு: அவனெடும். 4 நாட்செலத். 5 தவமுறு: தவலருந்: தவமிகு. 9-10 இவரெனத் தெழித்தழித்: இவரெனத் தெழீஇத் தெழீஇ(யு). 13-16 பவனனின் விரைவினுற் றிரிவர் பாதகர். 14 றெரிபவர். [௩௯**] ௬௩-ன் பின். 1 மிருந்திடின். 3 வெறிது: வெறுத்து: வெறித்து. 4 நீக்குருள்: நீங்குருள்: நீக்குருத். 5 தகுந்திறல். 5-7 தகுந்தவ முனிவர்க டவத்தை. 8 யுள்ளியே. 9 வருந்தெரி: வருந்துவின்: வருந்திறல். 9-10 வருந்துபின் வசுவரி: வருந்தவ னசுவரி. 10 வடவரி: வடவரி: வசுவழி. 11 விரிந்த. 12 தீவனம்: வில்வனம். 14 ளனலெனப்: ளனலெழப்: ளழலெனப். 15-16 புகையுங் கண்ணினள். [௪0] இச்செய்யுளும் அடுத்த இரண்டு செய்யுட்களும் ௨௧-ன் பின். 2-6 தெடுப்பதுங் கடலை வார்வதும் விண்ணுருத் திடிப்பதும். 7 வேண்டிச். 9 எணணுமத். 15 தெரியும்.

376(i) ஆங்கவர் போய பின்னை யரக்கியிவ் வனத்தி லெய்தி
யோங்கிய முனிவ ரோடு முற்றதோர் பகையை யுன்னித்
தீங்கறு குணத்தான் மிக்க சிறப்புடை யவர்க ளோடு
மேங்கியிவ் வொலிகள் சால விறந்திடத் திரிய லுற்றாள்.

சக. பெருவரை யிரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடு மூழித் தீயொடும்
இருபிறை செறிந்தெழு கடலுண் டாமெனின்
வெருவரு தோற்றத்தண் மேனி மானுமே. 379

சஉ. சூடக வரவுழல் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாப்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே. 380

சஙு. உளப்பெரும் பிணிப்பறு வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோற்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பெரு மருதவைப் பழித்து மாற்றினாள் 381

வேறு

சச. இலங்கையர சன்பணிய மைந்தொரிடை யூறாய்
விலங்கல்வலி கொண்டெனது வேள்விநலி கின்றாள்
அலங்கன்முகி லேயிவளிவ் வங்கநில மெங்கும்
குலங்களொ டடங்கநலி கொன்றுதிரி கின்றாள். 382

[சக] 4 நெஞ்சொடும். 5 உருமுற. 7-8 மூழிக் காற்றொடும்: மூழிக் காலொடும். 10 செறித்திடு: செறித்தெழு: செறித்தெழுங்: செறிந் தெழுங். 12 டாகிலவ்: டாயிடின். 13 வெருவருந். 14 தோற்றத்தாள்: தோற்றத்த. 16 மன்னுமே. [சஉ] 2 வரவுறழ்: மரவுறழ்: வரவினள்: ொயுழல்: வாழ்வுழல். 4 கையினாள். 5 காடுறு. 6 வாழ்க்கையாள். 10-11 பெண்மை யளாவுந். 11-12 யாற்றுந் தோளினாள். 13 தாடகி. 14 யென்பவள்: யென்னுமச். 15 சளத்தின். [சஙு] ஙுஅ-ன் பின். 1 உழப்பரும்: உளப்பரும். 1-2 உளர்ப்பரும் பிணிப்புறு: உளப்பரும் பிணிப்புறு. 2. பிணிப்புற. 6 குணந்தனை. 9 கிளைப்பருங்: கிளைப்பெருங். 10 கொடுமையவ். 13 வளப்பரு. 13-15 வளப்பருந் தவத்தையே யழித்து: வளப்பெருந் தவங்களை யழித்து: வளப்பரு மருந்தவங் களைந்து. 15 பதனை. [சச] 2-3 சன்பணியின் மைந்தரிடை: சன்பெயரின் மைந்தரிடை: சன்பணிய மைந்தரிடை: சன்பெய ரியைந்தவிடை: சன்பெய ரிழைந்தவிடை: சன்பெயரொ டமைந்ததிடை: சன்பெயரொ டமைந் தொரிடை. 5 விலங்கநனி. 6 கொண்டுநனி: கொன்றெனது. 8 கின்றார். 10 லேயிவளவ்: லேயவளிவ்: லங்கவளிவ். 10-11 லேயிவளி யங்குநில: லேயவளி யங்கநில. 11 வங்கணில.

சரு. முன்னுல களித்துமுறை நின்றவுயி ரெல்லாந்
தன்னுயி ரெனக்கருது தன்மையவன் மைந்த
என்னினி யுணர்த்துவ தினிச்சிறிது நாளின்
மன்னுயி ரனைத்தையும் வயிற்றிலிடு மென்றான். 383

சசு. அங்கிறைவ னப்பரி சுரைப்பவது கேளாக்
கொங்குறை நறைக்குல மலர்க்குழ றுளக்கா
எங்குறைவ தித்தொழி லியற்றுபவ ளென்றான்
சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான். 384

சஎ. கைவரை யெனத்தகைய காளையுரை கேளா
ஐவரை யகத்திடை யடைத்தமுனி யைய
இவ்வரை யிருப்பதவ ளென்பதனின் முன்போர்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள். 385

சஅ. சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடு
நிலம்புக மிதித்தன ணெளித்தகுழி வேலைச்
சலம்புக வனற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலைக்கிரிகள் பின்றொடர வந்தாள். 386

[சரு*] 1-3 பின்னுல களித்நமுக றந்தவுயி. 2 கழித்துமுறை. 2-3 களித்தமுனி தந்தவுயி. களித்தமுபல வந்தவுயி. 3-4 நின்றவுல கெல்லாங். 5 தன்னுணர்(வெ). 5-6 தன்னுண வெனக்கருது. 7 தன்மையிவன்: தன்மையினள்: தன்மையிவள்: தன்மையவள்: தன்மையினன். 7-8 தன்மையினமைந்தாள். 8 மைந்தா: 10 துணர்த்துவ. 11 தினிசசில்பல்: தினிச்சிலபல். 15 வயிற்றடையு: வயிற்றுளிடு: வயிற்றினிடு. 15-16 வயிற்றிடுவ ளென்றான். 16 கின்றாள். [சசு] 1 அங்கறிஞ. 2 னிப்பரி. 2-3 னப்படி யுரைத்தபடி: னப்பொழு துரைத்தபடி. 3 சுரைத்நபடி. 5 கொங்கறை. 6 நறைக்குவை. 6-8 நறைக்குழல் மலர்ச்செனி துளககா. 7-8 மலர்ச்செனி குலுக்கா: மலர்ச்செனி துளக்கா. 8 றுளகக. 9 எங்குறைப(வி). 10 ளித்தொழி. 11 லியற்றுமவ. 14 கரத்திலொர். [சஎ] 6-7 யகத்தினி லடைத்தமுனி. 8 யையா. 9 எவ்வரை. 10 யிருப்பளவ. 12 முன்னம். [சஅ] 1 சிலம்பு கொள். 1-2 சிலம்பிடை சிலம்புகள். 3 செறிந்தகழ. 5 நிலம்பக. 6-7 மிதித்திட நெளித்தகுழி: மிதித்திடை நெளித்தகுழி. 7 ணெரித்தகுழி. 8-9 வேலை யலம்புக. 9-10 சலம்புகு வனத்தறுக. 10 வழற்றறுக. 13 பெலம்புக: பிலம்புகு. 14 நிலக்கிரிகள்: நிரைககிரிகள்: நிரைக்கரிகள். 15 முன்றொடர.

சசு. இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கனலி ரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள். 387

ருo. கடங்கலுழ் கடுங்களிறு கையொடுகை தெற்று
வடங்கொள நுடங்குமிடை யாண்மறாகும் வானோர்
இடங்களு நெடுந்திசையு மேழுலகு மெங்கும்
அடங்கலு நடுங்கவுரு மஞ்சநனி யார்த்தாள். 388

ருக. ஆர்த்தவரை நோக்கிநகை செய்தெவரு மஞ்சக்
கூர்த்தநுதி முத்தலை யயிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாய்முழை திறந்தோர்
வார்த்தையுரை செய்தன ளிடிக்குமழை யன்னாள். 389

ருஉ. கடக்கரும் வலத்தெனது காவலிது யாவுங்
கெடக்கரு வறுத்தன ளினிச்சுவை கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோவிதிகொ டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றாள். 390

[சசு] 1 இறக்கடை. 5 பிறக்கிடை. 6 பிறங்கிட: பிறக்கடை. 8 வாயாள். 9 மறக்கிட(வ): கறைக்கடை: மறக்கிடை: மறைக்கட (வ). 12 ரண்டே. 13 நிறககடன். 13-15 நிறைக்கட விரண்டென நெருப்பென. 16 விழிப்பாள். [ருo] 2 கடக்களிறு: தடங்களிறு: கடங்களிறு: கருங்க ளிறு. 3 கைகொடுகை. 4 தெற்றி: தெற்று: தெற்றும்: தட்டி. 5 6 வடங் களி னுடங்குமுலை: வடஙகளி னுணங்குமிடை: வடஙகளி னுடங்குமிடை. 7 யாண்மறுகி: யான்மறுகி. 8-9 வானே டிடஙகளு. 10 நெடுஙகடலு. 12 (ம்) யாவும்: மேலும். 15 வஞ்சநனி. [ருக] சஅ-ன் பின். 2-3 நோக்கியன வென்றெவரு. 3 செய்யவரு: செய்தவரு· செய்தெனினு. 4 மஞ்சிக். 5 கூர்த்துநுதி: கூர்த்தநனி. 14 யாடின. 14 15 செய்தனண் மலைக்குவமை. 15 ளலைக்குமழை. [ருஉ] 1 கடக்கரு. 2 வனத்தெனது. 3 காவலிதில். 4 யாருங். 5-6 கெடக்கரி சறுத்தன: கெடக்கரு சிறுத்தன: கெடக்கரு சறுத்தன. 7 னிசைசசுவை: னினிசசிலை. 8 கிடைக்கும். 9 விடக்கரு. 11-12 யோவிதியி ளுலோ: யோவிதிகொ ணர்ந்தோ. 15-16 வந்தபடி யென்றாள். 16 சென்றே.

௫௩. மேகமவை யிற்றுக விழித்தனள் புழுங்கா
மாகவரை யற்றுக வுதைத்தனண் மதித்திண்
பாகமென முற்றெயி றதுக்கியயில் பற்று
ஆகமுற வுற்றெறிவ னென்றெதி ரழன்றாள். 391

௫௪. அண்ணன்முனி வற்கது கருத்தெனினு மாவி
உண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழி றொடங்கியுள ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான். 392

வேறு

௫௫. வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற் றாளயில்
எறிந்து கொல்வனென் றேற்கவும் பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக் கருத்தெலாம்
அறிந்து நான்மறை யந்தணன் கூறுவான். 393

௫௬. தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினாய். 394

௫௭. நாண்மை யேயுடை யார்ப்பிழைத் தாநகை
வாண்மை யேயுடை வன்றிற லாடவர்

[௫௩] 2 யற்றுக. 2-4 பற்றுபு பிழிந்தனள் விழுங்கா. 3 விளித்தனள். 4 புழுங்க. 5 ஊகவரை. 6 யிற்றுக: யுற்றுக. 9 பாகமெனு. 10 வுற்றெயி. 11-12 றதுக்கியியல் பாரா. 12 பற்ற. 14 வுய்த்தெறிவ: முற்றெறிவ. [௫௪] 2 வற்கிது. 7 தொடுத்தில. 8 னுயிர்த்தே. 9 துண்ணென. 9-10 துண்ணெனு மறத்தொழி. 12 ளேனும். 14 மனத்திறை: மதித்திறை. 16 நினைந்தான். [௫௫] 4 றாடனை: றாடயில். 6 கொல்வளென். 6-7 கொல்வளென் றெண்கையு: கொல்வளென் றெண்கமும்: கொல்வளென் றேதமும். 8 பார்த்திலாச்: பார்கிலன். 13 அறிந்த. 16 கூறினான். [௫௬] 2 றுள்ளன. 4 செய்தனைக். 7 ளத்தனை. 9 யேதென். 10 றுன்னுவ. 14 றுன்னும. 14-15 றெண்ணுதி யோமதிப் றெண்ணுவை யோமதிப். [௫௭] 1-4 தாண்மை ... ... தார்தகு. 3-4 யார்பிழைத தார்நகும். 4 தார் நக்கு: தார்நகு. 5 ஆண்மை. 6 யேபெற்ற: யற்றிடும்: யேகற்ற.

தோண்மை·யேயிவள்·பேர்சொலத் தோற்குமால்
ஆண்மை யென்னும தாரிடை வைகுமே. 395

ருஅ. இந்தி ரன்னிடைந் தானுடைந் தோடினுர்
தந்தி ரம்படத் தானவர் வானவர்
மந்த ரம்பிவ டோளெனின் மைந்தரோ
டந்த ரம்மினி யாதுகொ லாண்மையே. 396

ருகூ. மன்னர் மன்னவன் காதல மற்றுமொன்
றின்னம் யானுரைக் கின்றதி யாதெனின்
முன்னோர் கால நிகழ்ந்த முறைமைய
தென்ன வோதனுற் றுன்றவத் தீறிலான். 397

சூO. பிருகு வென்னும் பெருந்தவன் றன்மனை
வருக யற்கட் கியாதிவல் லாசுரர்க்
குருகு காத லுறவுற வாதலே
கருதி யாவி கவர்ந்தன னேமியான். 398

12 தோற்பரேல்: தோற்பரால்: தோற்குமேல். 14-16 யென்னுமி தார்வசத் தாயதே: யென்னும தார்வச மாகுமோ: யென்னுமி தார்வசத் தாகுமோ: யென்னும தார்வசத் தாகுமோ: யென்னுமி தார்வசத் தாகுமே: யென்னுமி தார்கண்ண தாகுமோ: யென்பதிங் கார்வசத் தாகுமோ. [ருஅ] இச்செய்யுள் 'ஆதலால்' (சூஉ) என்பதன் பின்: 'சாற்று' (சூச) என்பதன் பின். 2 ரன்னுடைந். 2-3 ரன்னுடைந் தேயிடைந். 3 தானிடைந். 4 தோடினுன். 6 ரம்படைத்: ரம்படித். 10 ரம்மவ. 12-13 மைந்தவோ ரந்த: மைந்தர்தோ ளந்த. 14 ரம்மிது. 16 லாண்மையால்: லாண்மையாய் லாமைய. [ருகூ**] இதுவும் அடுத்த செய்யுளும் 'சாற்றுநாள்' (சூச) என்பதன் பின்: 'மன்னும்' (சூரு) என்பதன் பின். இது முதல் நான்கு செய்யுட்கள் 'வெள்ளி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. 3 காதலன். 4 மாறுமொன். 5 றின்மை. 7 கின்றனன். 10 காலே. 11 முயன்ற. 12 முறைமையீ: முறையிஃ: முறைமையி. 12-13 முறையதே யென்ன. 13 வென்ன. 15 றுனறத். [சூO**] இச்செய்யுளுள்ள பிரதிகள் சிலவற்றில் 'மன்னர் மன்னவன்' என்ற ருகூ-ஆம் செய்யுள் காணப்படவில்லை. 7 கெயாதிவல்: கயாதிவல்: கியாதிவ. 8 லார்சுரர்க: லாசுரற். 8-12 லாசூற வுருகு காத லுறவுல காள்தலாற். 11-12 லுறவுல கோதலாற். 12 வாதலாற். 16 னேமிமால்: னேமியாய்.

௬௧. வான கந்தனின் மண்ணினின் மன்னுயிர்
போன கந்தனக் கென்றெனும் புந்தியள்
மானம் வெஃகு மதிப்பெய ராடனை
ஊனொ ழித்தனன் வச்சிரத் தும்பர்கோன். 399

௬௨. ஆத லாலரிக் காகண்ட லன்றனக்
கோது கீர்த்தியுண் டாயத லாலிடை
ஏத மென்பன வெய்திய வோசொலாய்
தாத டர்ந்துத யங்கிய தாரினாய். 400

௬௩. கறங்க டற்றிகி ரிப்படி காத்தவர்
பிறங்க டைப்பெரி யோய்பெரி யாரொடும்
மறங்கொ டித்தரை மன்னுயிர் மாய்த்துநல்
அறங்கெ டுத்தவட் காண்மையும் வேண்டுமோ. 401

[௬௧ *] 2 கத்தினின். 2-3 கத்தினு மண்ணினும். 3 மண்ணின். 3-4 மாந்தரை மண்ணினிற். 7 கென்றெனும். 7-10 கென்றென்று புந்தியிற் றான வொள்கு. 8 புந்தியாள். 8-10 புந்திய தான வொள்கு: புந்திய தான வள்கு: புந்தியத் தான வொள்கு: புந்தியத் தான வொண்சு. 8-11 புந்தியத் தான வள்மந் தரைப்பெய. 8-16 புந்தியாற் றான மெங்குந் தனி திரிவாடன தூனொ ழித்திட னன்றென வோதினான். 9 மான. 9-10 ஆன வொள்கு. 15-16 இந்திர னொள்ளியோய். [௬௨ * *] 2-4 லாலவர்க் கண்டார்க் கன்பினு(லோ). 4 லன்னவற். 6-7 கீர்த்தி யுடையதல்: கீர்த்தி யுடையவல்: கீர்த்தி யுடைவதல். 6-8 கீர்த்தி யுடையவல் லாதிடை. 7 டாயதல்: டாவதல். 7-8 டாயதல் லாதிடை: டாயவல் லாதிடை: டாயதல் லாவிடை. 10-12 மென்பது வெய்திய தோசொலாய். 12 தோசொலாய். 16 தோளினாய். [௬௩] இதுவும் அடுத்த செய்யுளும் ‘இந்திரன் னிடைச்’ (௫௮) என்பதன் பின் 1-2 கறங்கி டத்திகி. 3 ரிப்படைச்: ரிப்படிக். 5 பிறங்கி. 5-6 பிறங்கி டப்பெரி: பிறங்கி டற்பெரி: பிறங்க டற்பெரி. 7-8 யோர்பெரி யோர்கடம்: யோய்பெரி யோனெடும். 8 யோரொடும். 10 டித்தனை. 12 மாற்றுநல்: மாய்த்துற: மாய்த்தற: மாய்த்துள. 12-13 மாய்த்துநின் றறங்கெ: மாய்த்தென தறங்கெ. 14 டுத்தவற்: டுத்தவர்க். 14-16 டுத்தவ டன்மையு மாயுமோ. 15 காரருள்.

௬௪. சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த்
தேற்றும் விண்ணென்ப தல்ல திவளைப்போல்
நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்று முண்டுகொல் கூற்றறம் வேலினாய். 402

௬௫. மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையிற் றீமைபெ தோவைய
பின்னுந் தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை யெளிமையின் பாலதே. 403

௬௬. ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தருளன் றரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினான். 404

௬௭. ஐய னங்கது கேட்டற னல்லவாய்
எய்தி னும்மிது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றோ வறஞ்செயு மாறென்றான். 405

[௬௪] 2 நாளென்ப. 2-3 நாளற வெண்ணித். 3 தென்று. 4 தருமன் பார்த். 7-8 தன்றி யிவளைப்போல்: தில்லை யிவளைப்போல். 10 கேட்பினுங்: காண்டலுங். 11 தின்ப. 12 நயந்ததோர். 13-14 கூற்றுண் டோசொலாய்: கூற்றுண் டோசொலை: கூற்றுண் டோசொல்க: கூற்றுண் டோசொலக்: கூற்றுண் டோசொலுங்: கூற்றுண் டோவுரை. 15 கூற்றுழல். 16 வேலினேய். [௬௫] 2 தன்னுயிர். 3 வாரத்தன். 6-7 தீமையத் தீமைய: புன்மையத் தீமைய: புன்மையெத் தீமைசெய்: புன்மையெத் தீமைய: தன்மையெத் தீமைய. 7 றீமைய. 7-8 றீமைய தேயைய. 8 தோவையா. 10 தார்குழல். 15 யெளிமைநின்: யிருமையின்: யெழுமையின். 16 பாலதோ. [௬௬] ௬௨-ன் பின்: ௬௪-ன் பின். 5-6 சீறு கின்றது. 6 நின்றது: நின்றதிற்: நன்றிது. 8 றேனலன்: றேனிலேன். 11 தறனன்: தருளென்: தருணன்: றறநன். 14-15 யென்றன னன்னெறி: யென் றெதிர்ந் தந்தணன். 16 கூறவான். [௬௭] 1 அய்ய. 2 னங்கவை. 3-4 கேட்டபி னல்லவும். 4-6 னல்லவு மெய்தி னலவை: னல்லவு மெய்தி னலது: னல்லவு மெய்தி னலிது: னல்லது மெய்தி னலிது. 7-8 செய்கென மேவினால். 8 றேயினால். 9-10 மெய்யி னின்னுரை. 12 மெனக்கொண்டு: மெனக்கொளாச். 13-14 செய்வ தன்றோ. 13-16 செய்யு மாறஃ தெற் கெனச் செப்பினான். 14-16 யாலறஞ் செப்புஞ் செயலென்றான்.

௬௮. கங்கைத் தீம்புன லுடன் கருத்தையும்
மங்கைத் தீயனை யாளு மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
வெங்கட் டீயொடு மேற்செல வீசினான். 406

௬௯. புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
கதிர்கொண் மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே. 407

௭௦. மாலு மக்கணம் வாளியைத் தொட்டதுங்
கோல விற்கால் குணித்ததுங் கண்டிலர்
காலனைப் பறித் துக்கடி யாள்விட்ட
சூல மிற்றன துண்டங்கள் கண்டனர். 408

௭௧. அல்லின் மாரி யனைய நிறத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கட னார்ப்பன
கல்லின் மாரியைக் கைவகுத் தாளதை
வில்லின் மாரியின் வீரன் விலக்கினான். 409

[௬௮] 2 தண்புன. 4 கருத்தையும்: கருத்தெலாம்: கருத்தைவெம். 5-6 மங்கைக் கூற்றனை. 6 தீவினை. 8 மனங்கொளாச். 11-12 தீயையத் தீயவள். 12 தீயவள். 14 டீயென. 15 மீச்செல. [௬௯] 3 யாள்புகுந். 4 தேவி யக். 5 கதிகொண். 5-6 கதிர்கொள் வேலெனுங். 10 மேற்கொடு. 11 நின்ற வர். 12 மேல்வர: மேலுற. 12-16 மேலுவாப் பதியின் மேல்வருங் கோளெனப் பாய்ந்ததே. [௭௦] 2 மக்கணை: மக்களம். 4 தொட்டலுங். 7 குணித்த துங். 9-11 ஆல மென்னவு மக்கொடி. 10 னைப்பழித். 11 தக்கடி: துக் கொடி: தக்கொடி. 12 யாள்விடச்: யாள்கொண்ட. 14 மற்றதன்: மற்றதி: மற்றதின்: மற்றது: மற்றன: மற்றிரு: மற்றுறு: மிற்றதன்: மிற்றதின்: மிற்றது. 16 கண்டவே: கண்டதே. [௭௧] 5 சொல்லு. 7 யிற்கடற். 8 னார்ப் பதோர். 12 தாளது. 14 மாரியால்.

409 (i) ஏக்க மோட விமையவ ரெங்கணும்
வாக்கின் மூந்துற மாயை வளர்ப்பவள்
மூக்கும் வார்செவி யும்முறை போயிடத்
தாக்கும் வள்ள லிளவலுந் தாக்கினான்.

[409 (i)] 409 (ii)-ன் பின். இது ‘வெள்ளி’ என்று குறிககப்பட்டுள்ளது. 7 மாய்கை. 8-11 புணர்ப்பவள் மூக்கும் வன்செவி யும்முழை. 14-15 வள்ளற் கிளவலுந். 15 லிராமனுந்.

வேறு

எஉ. சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
மல்லொக்கு நிறத்தி ணுண்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன மறையெனப் போயிற்றன்றே. 410

எங. பொன்னெடுங் குன்ற மன்னான் புகர்முகப் பகழி யென்னும்
அந்நெடுங் கால வன்காற் றடித்தலு மிடித்து வானிற்
கன்னெடு மாரி பெய்யக் கடையுகத் தெழுந்த மேகம்
மின்னொடு மசனி யோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள். 411

எச. பொடியுடைக் கான மெங்குங் குருதிநீர் பொங்கி வீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைக டோறும்

409 (i. a) எக்க மோட விமையவர்க் கெங்கணும்
தாக்கும் வள்ளற் கிளவலுந் தாக்கினான்
மூக்கும் வன்செவி யும்முறை போயிடப்
போக்கி னனவள் மாயைப் புணர்ப்பெலாம்.

[409 (i. a)] 10 வாள்செவி. 15-16 மாயம் புணர்ப்பினால்.

409 (ii) விலக்கி நின்றவன் வெங்கணை விரைவினில் விலங்கிக்
கலக்கம் வானவர் தவிர்ந்திடக் காலனுங் கலங்கத்
துலக்கி வையகத் திடுக்கணு முனிவர்தந் துயரும்
உலக்க வூழித்தீ யொப்பதோர் கணைதொடுத் தெய்தான்.

[409 (ii)] 2 நின்றபின். 4-5 விரவின வாங்கிக்: விரைவுடன் வாங்கிக். 5 வாங்கிக். 10 களிப்பத். 10-11 களிப்ப இலக்கில்: களிப்ப விலக்கும்: களிப்ப விலக்கி. 13 திடுக்கமு. 15 (ம்) இடரும். 18-20 யெனக் கொடுஞ் சிலைதொடுத் துய்த்தான்: யெனக்கொடுஞ் சிலையுட னுய்த்தான்.

[எஉ] 7 அல்லொக்கும். 8 வடிவி. 8-9 (ம்) படிவத் தாள்மேல். 9-12 ணுண்மே லாழ்தலு மாழ்ந்த வம்பு. 10 விடுவது: விடவது. 11 அருவிக். 12 குன்றம். 17 கடந்து. 19 புல்லற்கு. 21 சொல்லும். 22 பொருளெனப். [எங] 1 பொன்னிறக். 6 யோடு: யொன்றால் : தன்னால். 7 மன்னெடுங். 9 வெங்காற். 9-10 வெங்கா லடித்தலு. 10-11 றிடித்தலு மடித்து. 11 மிடித்த: மடித்து. 15 பெய்யுங். 17 தெழுந்து. 20-21 மிடியி னோடும். [எச] 1 கொடியுடைக். 5 பொங்க. 6 வீழத். 11-12 (க்) கொடியாள் பத்து: (க்) கொடியாள் வீழ்தல்.

முடியுடை யரக்கற் கந்நாண் முந்தியுற் பாத மாகிப்
படியிடை யற்றுவீழ்ந்த வென்றியம் பதாகை யொத்தாள். 412

எரு. கான்றிரிந் தாழி யாகத் தாடகை கடின மார்பத்
தூன்றிய பகழி வாயூ டொழுகிய குருதி வெள்ளம்
ஆன்றபே ருலக மெல்லா மாயின வந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானந் தொடக்கற்று வீழ்ந்த தொத்த. 413

எசு. வாசநாண் மலரோ னன்ன மாமுனி பணிம ருத
காசுலாங் கனகப் பைம்பூண் காகுத்தன் கன்னிப் போரிற்
கூசுவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க வஞ்சி
ஆசையா லுழலுங் கூற்றுஞ் சுவைசிறி தறிந்த தன்றே. 414

எஎ. யாமுமெம் மிருக்கை பெற்றே மெமக்கிடை யூறு மில்லைக்
கோமகற் கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி யென்று
மாமுனிக் குரைத்துப் பின்னை விற்கொண்ட மழைய னன்மேற்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயி னரே. 415

14 யரக்கர்க். 14-15 யரக்க ரந்நாண்: யரக்கர்க் கெல்லாம். 16 முமதியிற். 18 மாதப்: மாகப். 19 படையிடை. 20 யிற்று. 21 வீழும். 22 வெற்றியம்: வெற்றிவெம். [எரு*] 1 தான்றிரிந்: தான்றிருந்: தான்றரை: கான்றிருந். 9 வாயோ. 12 நீத்தம். 13-14 ஆன்றவக் கான. 15 மெங்கு. 17 தந்தி. 22 துடக்கத்து. 23 வீழ்வ. 24 தொத்தே: தொத்தாள். [எசு] 1 வாசமா. 3 னென்ன. 5 பணிமா: யருண்ம: பணிப்ப: யருண்மா: பணிய. 9 பைம்பூட். 13 கூசிவா. 17 குடிப்ப: கொள்ள. 21 கூற்றஞ்: கூற்றுச். 22-23 சிறுசுவை யறிந்த. 24 தென்றே [எஎ] 1-2 யாமுமே யிருக்கை. 3 பெற்று: பெற்றே. 4 முனிக்கிடை: முனக்கிடை: முமக்கிடை: முனக்கிடை. 8 கினிநீ: கியைந்த: கிளையாத். 12 யென்னு: யென்ன. 14 குரைத்த. 15 பின்னர்: பின்னும். 17 மழையி. 18 னர்மேற். 24 னரால்.

தாடகைவதைப் படலம் முற்றும்.

ஸ்ரீ:

திருஞானமுத்திரைக்கோவை எண். 15.

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

திருவயோத்தியா காண்டம்

பரிசோதித்தவர்:

ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.

அட்வகேட்

திருநெல்வேலி.

காபிரைட்] [விலை ரூ. 2—4—0

திருவயோத்தியா காண்டம்

உள்ளடக்கம்

		பக்கம்	கவி
க.	மந்திரப்படலம்	1—13—	100
உ.	மந்திரை சூழ்ச்சிப் படலம்	14—24—	87
௩.	கைகேசி சூழ்வினைப்படலம்	25—38—	110
௪.	நகர்நீங்குபடலம்	39—68—	237
௫.	தைலமாட்டு படலம்	68—79—	87
௬.	கங்கைப்படலம்	79—83—	27
௭.	குகப்படலம்	83—89—	46
௮.	வனம்புகுபடலம்	89—95—	47
௯.	சித்திரகூடப்படலம்	95-102—	58
௰.	பள்ளிபடைப் படலம்	103-120—	142
௰க.	ஆற்றுப்படலம்	120-128—	59
௰உ.	கங்கைகாண் படலம்	128-137—	72
௰௩.	திருவடிசூட்டு படலம்	137-154—	141

ஆகப் படலம் ௰௩-க்கு கவி 1213

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



கம்பராமாயணம்

திருவயோத்தியா காண்டம்

க. மந்திரப் படலம்

க. வானின் றிழிந்து வரம்பிகழ்ந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் குடைதுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் தீர்த்த கழல்வேந்தை.

உ. *மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
†பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமூ லத்திலே கழற வந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர். 1400

ங. †தீங்குழ விராவணன் செய்த பாவந்தான்
ஆங்கொரு நரையதா யணுகிற் றுமென
பாங்கில்வந் திடுநரை படிவக் கண்ணடி
ஆங்கெதிர் கண்டன னவனி காவலன். 1401

ச. மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பருமை யானையான்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினான். 1402

ரு. புக்கபின் னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினான்
ஒக்கலின் றுலகளித் துயோக மெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினான். 1403

---

* இவ்வடையாளம் செய்யுணடையின் வேறுபாட்டை யுணர்த்தும்.

† " " முன் அச்சுப்புத்தகங்களில் இல்லாது நம்சுவடியில் உள்ளவை

௬. சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை [1]யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினான். 1404

௭. பூவரும் பொலங்கழற் பொருவின் மன்னவன்
காவலி லாணைசெய் கடவு ளாமெனத்
தேவரு முனிவருந் தேடுந் தேவர்கள்
மூவரி னால்வரா முனிவந் தெய்தினான். 1405

௮. குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினார்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார். 1406

௯. *உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். 1407

௰. காலமு மிடனும் பெற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குறித்து நல்லோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செல்வமுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார். 1408

௰௧. தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கு நீரார்
செம்மையிற் றிறம்பல் செய்யாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லோ ரொருமையே மொழிய வல்லார். 1409

௰௨. *நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ ரியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார். 1410

௰௩. அறுபதி னாயிர ரென்னு மாண்டகைக்
குறுதியி னொன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினார். 1411

(பிரதி) 1 யேய்ந்தன.

௨௨. ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ [1]மீண்டெனா
விட்டவ ரல்லரே யியாவர் வீடுளோர். 1420

௨௩. இறப்பெனு மெய்ம்மையே யிம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெய் யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாவதோ. 1421

௨௪. அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வாவருந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினிதி யாவதோ. 1422

௨௫. இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரும் புலனெனத் தொடர்ந்து பராற்கிலா
நனிவரும் பெரும்பகை நவையு நீக்கிய
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே. 1423

௨௬. உம்மையா னுடைமையா லுலகம் யாவையுஞ்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனன்
இம்மையி னுதவியென் னிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கருள வேண்டுமால். 1424

௨௭. இழைத்ததொல் வினையையுங் கடக்கு மெண்ணுறத்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னுகுமேற்
குழைத்ததோ ரமுதிடைக் கோர நீக்கிவே
றழைத்ததீ விடத்தினை யருந்த லாகுமோ. 1425

௨௮. கச்சையங் கடகரிக் கழுத்திற் கண்ணகன்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
எச்சிலை நுகர்வதி னின்ப மாவதோ. 1426

௨௯. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமும்
நொந்தன னிராமனென் னோவை நீக்குவான்
வந்தன னவனினி வருந்த யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன். 1427

(பிரதி) 1 முண்டெனா.

௩௰. இறந்திலன் செருக்களத் திராமன் றாதைதான்
அறந்தலை நிரம்பிமூப் படைந்த பின்னருந்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தன னென்றலாற் பிறிதுண் டாகுமோ. 1428

௩௧. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகள் மணமுங்கண் டுவப்ப [1]உன்னினேன். 1429

௩௨. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
சிவப்புறு மலர்மிசைப் பெரிய செல்வியும்
உவப்புறு கணவனை உயிரி னெய்திய
தவப்பயன் தாழ்ப்பது தரும மன்றரோ. 1430

௩௩. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதமைத் தாய்வரு பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென இனிது கூறினான். 1431

௩௪. *திரண்ட தோளண்ண லப்படிச் செப்பவுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகை யாங் கெய்த
வெருண்டு மன்னவன் பிரிவென விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

௩௫. அன்ன ராயினு மரசற்கு மதுவல்ல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னும் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மியைந்தார். 1433

௩௬. இருந்த மந்திரக் கிழவர்த மெண்ணமு மகன்பாற்
பரிந்த சிந்தையும் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்த நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும்.

௩௭. நிருப நின்குல மரபினோர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்
கரும மும்மிது கற்றுணர்ந் தோர்க்கிது கடவ
தரும மும்மிது தக்கதே நினைந்தனை தகவோய். 1435

(பிரதி) 1 ஓங்கினேன்.

௩அ, புண்ணி யம்புரி வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ண லேயினி யிருந்தவ மியற்றவு மடுக்கும்
வண்ணமேகலை நிலமகள் மற்றுனைப் பிரிந்து
கண்ணி மூந்தில ளெனச்செயு நீதந்த கழலோன். 1436

௩௯. புறத்து நாமொரு பொருளினைப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லாற்
பிறத்தல் யாவையுங் காத்தவை பின்னின்று துடைக்குந்
திறத்தின் மூவருந் திருத்தின திருத்துமத் திறலோன்.

௪௰. பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனுந் திருவும்
இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற இராமன்
தன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
உன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா முரவோய்.

௪௧. வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னுல்வரு [1]மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் தாம்செய்த நல்லறப் பயனென விருப்பார். 1439

௪௨. மண்ணி னுநல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணி னுநல்லள் பெரும்புகழ்ச் சனகிபே ருலகின்
கண்ணி னு [2]நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினு முயிரினு மவனையே யுகப்பார். 1440

௪௩. மனிதர் வானவர் மற்றவ ரறங்கள்காத் தளிப்போர்
இனிய மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
அனைய தாதலி னரசனுக் குறுபொரு ளறியிற்
புனித மாதவ மல்லதொன் றில்லெனப் புகன்றான். 1441

௪௪. மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்க
முற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான். 1442

௪௫. அனைய தாகிய உவகையன் கண்கணீ ரரும்ப
முனிவன் மாமலர்ப் பாதங்கள் முறைமையி னிறைஞ்சி
இனிய சொல்லினை யெம்பெரு மானரு ளன்றோ
தனிய னானிலந் தாங்கிய தவற்கது தகாதோ. 1443

(பிரதி) 1 மிடை யூறு. 2 நல்லர்.

சசு எந்தை நீயுவந் திதுசொல வெங்குலத் தரசர்
அந்த மில்லதோர் பெரும்புக ழவனியி னிறுத்தி
முந்து வேள்வியு முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

சஎ பழுதின் மாதவன் பின்னொன்று பணித்தில னிருந்தான்
முழுது மெண்ணுறு மந்திரக் கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய விங்கித மிறைமகற் கேற்கத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின்றுசொல்லும்.

சஅ உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு முன்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கலாத் தருமத்தை மறப்பது வழக்கன்
றறத்தி னாங்கினிக் கொடிதென லாவதொன் றியாதோ.

சகூ புரைசெய் மால்கரி நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முள்ளம்
முரச மார்ப்பநின் முதன்மணிப் புதல்வனை முறையால்
அரச னாக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய். 1447

ருய என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டி
நின்று நின்றது செய்தது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்.

ருக. அலங்கன் மன்னனை யடிதொழு தவண்மனை மனையான்
விலங்கன் மாளிகை வீதியின் விரைவொடு செல்வான்
தலங்கள் யாவையும் பெற்றனன் றுனெனத் தளிர்ப்பான்
[1]பொலன்கொள் தேரோடு மிராகவன் றிருமனை புக்கான்

ருஉ. பெண்ணி னின்னமு தன்னவ டன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானழ கருநற வென்னக்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான். 1450

ருந. கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தான்
கொண்டல்போற்சென்று கொடிநெடுந்தேர் மிசைக்கொண்டான்.

(பிரதி) 1 புலன்கொ.

௫௪ முறையின் மொய்ம்முகி லெனமுர சார்த்திட மடவார்
இறைக ழன்றுசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறைய லங்கல்வண் டார்த்திட தேர்மிசை நடந்தான்.

௫௫ பணைநி ரந்தன பாட்டொலி நிரந்தன அனங்கன்
கணைநி ரந்தன நாணொலி கறங்கின நிறைப்பேர்
அணைநி ரந்தன வறிவெனும் பெரும்புன லனையார்
பிணைநி ரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

௫௬ நீளெ ழுத்தொடர் வாயிலிற் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினொ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மறுகச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள். 1454

௫௭ மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கற்
றொண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடு கிடந்த.

௫௮ சரிந்த பூவுள மழையொடுங் கலையுறத் தாழப்
பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப
எரிந்த பூவுள இளமுலை யிழையொடு நுழைய
விரிந்த பூவுள வந்தர வானின்று வீழ்வ. 1456

௫௯ வள்ளு றைகழித் தொளிர்வன வானுறை மதியந்
தள்ளு றச்சுமந் தெழுதரு தமனியக் கொம்பிற்
புள்ளி நுண்பனி பொடிப்பன பொன்னினிற் பொதிந்த
வெள்ளி டைப்பொரி விரிவன வுளசில விளநீர். 1457

௬௦ ஆய தவ்வழி நிகழ்தர ஆடவ ரெல்லாந்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியுந் தானுமச் சுமந்திரன் றேர்மேற்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான். 1458

௬௧ மாத வன்றனை வரன்முறை வணங்கிவா ளுளவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்.

௬௨. நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிர்நீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண் டளந்தான்.

௬௩. ஆண்டு தன்மருங் கிருத்தியங் கன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவ னெடும்புகழ் குறுக
நீண்ட தோளினாய் நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட வீவதொன் றுளதென விளம்பும்.

௬௪. அய்ய சாலவு மலசின ன்றும்பெரு மூப்பும்
மெய்ய தாயது மேவிடப் பெரும்பரம் விசித்து
தொய்யன் மாநில முழுவதுஞ் சுமையுறுஞ் சிறையான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும். 1462

௬௫. உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுபிணி நீங்கி
யிருமையும் பெறற் கென்பது முன்பினோ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யினென் கட்டுரை கோடி. 1463

௬௬. மைந்த நங்குல மரபினில் வந்தருள் வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயினா ரூழினின் றெண்ணினு முலவார். 1464

௬௭. முன்னை யூழ்வினைப் பயத்தினும் முற்றிய வேள்விப்
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய லிடும்பையி னின்றால்
நின்னை யீன்றுள பயத்தினு ணிரம்பிய தியாதோ. 1465

௬௮. ஒருத்தலைப் பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
எருத்தம் வீங்கினின் றலமரச் சுமந்திட றாழக்கும்
வருத்த நீக்கிய வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவ தருளிட வேண்டும். 1466

௬௯. ஆளு நன்னெறிக் கமைவரு மமைதியின் றாக
நாளு நங்குல நாயக னறைவிரி கமலத்
தாளி னல்கிய கங்கையைத் தந்துதந் தையரை
மீள்வி லாவுல கேற்றினா னொருமகன் மேனாள். 1467

எ௰. மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந் தொடங்கிநோன் பிழைத்தவ ரல்லர்
சொன்னலா ருமகப் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

எக. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள வேண்டாம்
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினைய வேண்டுநா னின்வயிற் பெறுவதீ தென்றான்.

எஉ. தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்தும் பணிதலை நின்றான். 1470

எங. குரிசில் சிந்தையை மனக்கொண்டு கொற்றவெண் குடையான்
தருதி யிவ்வர மெனச்சொல்லி யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் மந்திரச் சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங் கோயில்போய்ப் புக்கான்.

எச. நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கண் மடந்தைய ருழையுழைத் தொடரச்
சுமந்தி ரன்றடந் தேர்மிசைச் சுந்தரத் திரடோள்
அமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்சென் றடைந்தான்.

எரு. வென்றி வேந்தரை வருகென வுவணம்வீற் றிருந்த
பொன்றி ணிந்ததோட் டரும்பெற லிலச்சினை போக்கி
நன்று சித்திர நளிர்முடி கவித்தற்கு நல்லீர்
சென்று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் செப்ப.

எசு. உரிய மாதவ னுள்ளிதென் றுவந்தனன் விரைந்தோர்
பொருவி றேர்மிசை யந்தணர் குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு நெறிமுறை மையினுற்
றிருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன வென்றான். 1474

எஎ. இறைவன் சொல்லெனு மின்னற வருந்தினர் யாரு
முறையி னின்றிலர் முந்துறு களியிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்.

எஅ ஒத்த சிந்தைய ருவகையி னொருவரி னொருவர்
தத்தமக் குற்ற வரசெனத் தழைக்கின்ற மனத்தார்
மூத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுவார்
அத்த நன்றென வன்பினோ டறிவிப்ப தானார். 1476

எகூ *மூவெழு முறைமையெங் குலங்கண் [1]முற்றுற
பூவெழு மழுவினாற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காவவிவ் வுலகமீ தறனென் றாரரோ. 1477

அ௰ வேறிலா மன்னரும் விரும்பி யின்னது
கூறினா ரதுமனக் கொண்ட கொற்றவன்
ஊறிய வுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினான். 1478

அக மகன்வயி னன்பினான் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மையா லென்றான். 1479

அஉ இவ்வகை யுரைசெய விருந்த வேந்தர்கள்
செவ்வியோய் நின்திரு மகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க் கவ்வவ ராற்ற வாற்றுமென்
றெவ்வமி லன்பினை யினிது கேளெனா. 1480

அங தானமுந் தருமமுந் தவமுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானவ வெவையுநின் மகற்கு வைகலும்
ஈனமில் செல்வம்வந் தெதிர்ந்த தென்னவே. 1481

அச ஊருணி நிறையவு முதவு [2]மாடொரு
[3]பார்நுகர் பயன்மரம் பழுத்தற் றாகவுங்
கார்மழை பொழியவுங் கழனி வாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார். 1482

அரு பனையவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் தன்மையை நிமிர்ந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின னிராம னீண்டவற்
கனையவா றன்பின வவையு மென்பவே. 1483

(பிரதி] 1 மூப்புற. 2. மாவொரு, மாயொரு. 3 பார்நுகர் பைமரம் பழுதற்றாகவும், பார்நுகரமைமரம் பழுதற்றாகவும்.

௮௬ மொழிந்து கேட்டலு மொய்த்த நெஞ்சினைப்
பொழிந்தபே ருவகையன் பொங்கு காதலன்
கழிந்ததோர் துயரினன் களிக்குஞ் சிந்தையன்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான். 1484

௮௭ செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கென்பார்
வெம்மையி னொழுக்கத்தின் மேன்மை மேவினீர்
என்மக னென்பதெ னினிதி னூங்கவன்
நும்மகன் கையடை நோக்கு மீங்கென்றான். 1485

௮௮ அரசவை விடுத்தபி னணை மன்னனும்
புரைதபு நாளொடும் பொழுது போக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான். 1486

௮௯ ஆண்ட வந்நிலை யாக வறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட வோடின ரிற்றிடை யிற்றிலர். 1487

௯௰ ஆடு கின்றனர் பண்ணடை யின்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரஞ்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலார்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே. 1488

௯௧ கண்ட மாதரைக் காதலி னோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவ கைப்பொரு ளென்றலுந்
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்,

௯௨ மன்னெ டுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெ டும்பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனை நேமியான்
தொன்னெ டும்முடி சூட்டுகின் றானென்றார் 1490

௯௩ சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்புற
வறக்கு மாவட வைக்கன லாகுமாற்
றுறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே. 1491

௧௪ அன்ன ளாயு மரும்பெற லாரமும்
நன்ம ணிக்குவை யும்பல நல்கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினாள். 1492

௧௫ மேவி மென்மெல ராணில மாதெனுந்
தேவி மரொடுந் தேவர்கள் யாவர்க்கும்
ஆவி யும்மறி வும்முத லாயவன்
மாவு லாமலர்ப் பாதம் வணங்கினாள். 1493

௧௬ என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யத்ததென் றுனுல கியாவையும்
மன்வ யிற்றி லடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி லடக்குந் தவத்தினாள். 1494

௧௭ என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ ணல்ல தவர்க்கெலாங்
கன்று டைப்பசு வின்கட னல்கினாள் 1495

௧௮. பொன்னு மாமணி யும்புனை சாந்தமுங்
கன்னி மாரொடுங் காசினி யிட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன முந்தனி ராடையு நல்கினாள். 1496

௧௯. நல்கி நாயக னுண்மமர்ப் பாதத்தைப்
புல்கிப் போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாமணிக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினாள். 1497

௨0 *கடிகமழ் தாரினன் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முகமன் கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை முதன்மைநாள் மொழிமி னென்றனன். 1498

க. மந்திரப் படலம் முற்றும்.

உ. மந்தரை சூழ்ச்சிப் படலம்

க பொருந்துநா ளனையுன் புதல்வற் கென்றலுந்
திருந்தினா ரினியசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்மால் யானையான் பிழைப்பில் செய்தவம்
மருந்தனான் வருகென வசிட்ட னெய்தினான். 1499

உ நல்லியன் மங்கல நாளு நாளையவ்
வில்லிய றோளவற் கின்று வேண்டுவ
ஒல்லையி லியற்றியவ் வுறுதி வார்த்தையுஞ்
சொல்லுதி நீயெனத் தொழுது சொல்லினான். 1500

ங முனிவனு முவகையுந் தானு முந்துவான்
மனுகுல நாயகன் வாயின் முன்னினான்
அனையவர் வரவுகேட் டலங்கல் வீரனும்
இனிதெதிர் கொண்டுதன் னிருக்கை யெய்தினான்.

ச *ஒல்க லில்தவத் துத்தம னோதுநான்
மல்கு கேள்வியின் வள்ளலை நோக்கினான்
புல்கு காதற் புரவலன் போர்வலாய்
நல்கு நானில நாளை நினைக்கென்றான். 1502

ரு என்று பின்னு மிராமனை நோக்கினான்
ஒன்று கூறுவ துண்டுறு திப்பொருள்
நன்று கேட்டுக் கடைப்பிடி நன்கெனாத்
துன்று தாரவற் சொல்லுதன் மேயினான். 1503

சா கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால். 1504

எ அந்த ணாளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவருள்
[1]நொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையு
மைந்த வெண்ண வரம்புமுண் டாங்கொலோ. 1505

அ அனைய ராதலி னையவவ் வெய்யதீ
வினையி னீங்கிய வேதியர் தாளிணை
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
இனிய கூறிநின் றேயது செய்தியால். 1506

(பிரதி) 1 உந்தினாரையு.

௯ ஆவ தற்கு மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் றுலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சேர்த்ததே. 1507

௰ உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி னுவதுண் டாகுமே. 1508

௰௧ சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோதியே. 1509

௰௨ யாரொ டும்பகை கொள்ளில தானபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செய் யாதது தக்கபின்
வேரொ டுங்கெட வேண்டலுண் டாகுமே. 1510

௰௩ கோளு மைம்பொறி யுங்குறை [1]யப்பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர செய்தரி தன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே 1511

௰௪ உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னுட்டமோ ரெட்டுடை யானுக்குஞ்
சமைத்த தொல்வினை தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. 1512

௰௫ என்பு தோலுடை யார்க்குமெல் லார்க்குந்தன்
வன்பு லப்பகை மாசற மாய்ப்பரேல்
முன்பு பின்பன்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதொ ராக்கமுண் டாகுமோ. 1513

௰௬ வைய மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னருக்
கையமின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ. 1514

(பிரதி) 1 யப்பெரு.

௰௭ இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனில்
அனைய மன்னற் கழிவுமுண் டாகுமோ. 1515

௰௮ சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ. 1516

௰௯ ஓர்வி னல்வினை யூற்றத்தி னானுரை
சோர்வி றொல்விதி பெற்றுள தென்றரோ
தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே. 1517

௨௰ தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனா
நாம மில்லை நரகமு மில்லையே. 1518

௨௧ ஏனை நீதி யினையவும் வையகப்
போன கற்கு விளம்பிப் புலன்கொளீஇ
ஆன வன்னொடு மாயிர மௌலியான்
தான நண்ணினன் றத்துவ நண்ணினான். 1519

௨௨ நண்ணி நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணி யப்புன லாட்டிப் புலமையோர்
எண்ணு நல்வினை முற்றுவித் தேற்றினான்
வெண்ணி றத்த தருப்பை விரித்தரோ. 1520

௨௩ *ஏற்றிய வாண்டகை யினிதி ருந்தபின்
நூற்றட மார்பனு நொய்தி னெய்திப்போய்
ஆற்றல்சால் மன்னவற் குணர்த்தி னானவன்
சாற்றுக நகரணி சமைக்க வென்றனன். 1521

௨௪ ஏவிய வள்ளுவ னிராம னாணையே
பூமகள் கொழுநனாய்ப் புனையு மோலியிக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரியத்
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினான். 1522

௯ ஆவ தற்கு மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் ருலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சேர்த்ததே. 1507

௰ உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி னுவதுண் டாகுமே. 1508

௰௧ சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோதியே. 1509

௰௨ யாரொ டும்பகை கொள்ளில தானபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செய் யாதது தக்கபின்
வேரொ டுங்கெட வேண்டலுண் டாகுமே. 1510

௰௩ கோளு மைம்பொறி யுங்குறை [1]யப்பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர செய்தரி தன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே 1511

௰௪ உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னுட்டமோ ரெட்டுடை யானுக்குஞ்
சமைத்த தொல்வினை தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. 1512

௰௫ என்பு தோலுடை யார்க்குமெல் லார்க்குந்தன்
வன்பு லப்பகை மாசற மாய்ப்பரேல்
முன்பு பின்பன்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதொ ராக்கமுண் டாகுமோ. 1513

௰௬ வைய மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னருக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ. 1514

(பிரதி) 1 யப்பெரு.

௨௫ கவியமை கீர்த்தியக் காளை நாளையே
புவியமை மணிமுடி புனையு மென்றசொல்
செவியமை நுகர்ச்சிய தெனினுந் தேவர்தம்
அவியமு தன்னதந் நகரு ளார்க்கெலாம். 1523

௨௬ ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தொழில் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தன ரிருநிதி சொல்லி னார்க்கெலாம். 1524

௨௭ திணிசுட ரிரவியைத் திருத்து [1]மாறுமப்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியிடை வேகடம் வகுக்கு [2]மாறும்போல்
அணிநக ரணிந்தன ரருந்தி மாக்களே. 1525

௨௮ வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநகர்க் குழாங்கொண் டாடுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் திருநகர் புகுந்த போன்றவே. 1526

௨௯ மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மான்றன
தங்கொளி முறுவலிற் றாம நான்றன
கொங்கையி னிரைத்தன கனக கும்பமே. 1527

௩௰ முதிரொளி யுயிர்த்தன முடுகிக் காலையிற்
கதிரவன் வேறொரு கவின்கொண் டானென
மதிதொட [3]நிவந்தன மகர தோரணம்
புதியன வலர்ந்தன புதவ ராசியே. 1528

௩௧ துனியறு செம்மணித் தூண நீறுதோய்
வனிதையோர் கூற்றினன் வடிவு காட்டின
புனைதுகி லுறைதொறும் பொலிந்து தோன்றுவ
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே. 1529

௩௨ முத்திடை முழுநிலா முளைத்த மொய்ம்மணிப்
பத்தியா லிளவெயில் பரப்ப நீலத்தின்
தொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விதித்தநா ளொத்த வீதியே. 1530

(பிரதி) 1 மாறும்பைப்; மாறுபைப். 2 மாறுபோல். 3 நிவந்ததோர

௩௩ ஆடன்மான் றேர்க்குழா மவனி காணிய
வீடுசே ருலகின்வீழ் விமானம் போன்றன
ஓடைவெங் கடகளி றுதய மால்வரை
தேடருங் கதிரொடுந் திரிவ போன்றவே. 1531

௩௪ வளங்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குடை நெடுஞ்சுவர் முத்தின் பத்தியிற்
கிளர்ந்தெழு சுடர்மணி யிருளைக் கீறலாற்
தளர்ந்தில பிரிந்தில சக்கர வாளமே. 1532

௩௫ பூமழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை களத்தின் றேமில் வெண்மழை
தாமிழை நெரித்தலிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே. 1533

௩௬ காரொடுந் தொடர்மதக் களிறு சென்றன
வாரொடு தொடர்குரன் மைந்த ராமெனத்
தாரொடு நடந்தன பிடிகண் மேகலைத்
தேரொடு நடக்குமத் தெரிவை மாரினே. 1534

௩௭ ஏய்ந்தெழு செல்வமு மழகு மின்பமுந்
தேய்ந்தில [1]வனையது தெரிக்க லாமையில்
ஆய்ந்தனர் பொருநவு மமர ரும்பரிற்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால். 1535

௩௮ அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரிதுவெனப் பொலியு மெல்லையில்
இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள். 1536

௩௯ தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியள் கொதிக்கு முள்ளத்தள்
கான்றெரி நயனத்தள் கலிக்குஞ் சொல்லினாள்
மூன்றுல கினுக்குமோ[2]ரிறுதி மூட்டுவாள். 1537

௪௰ தொண்டைவாய்க் கைகயன் றோகை கோயின்மேன்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள். 1538

(பிரதி) 1 தனையது. 2 ருறுதி.

௪௧ நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணருள் பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாடனை விரைவி னெய்தினாள். 1539

௪௨ எய்தியக் கைகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினாற்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினள் காலக் கோளனாள். 1540

௪௩ தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் ணனந்தலு நீங்க நிற்கலாள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வல்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினாள். 1541

௪௪ அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போற்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள். 1542

௪௫ வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீங்கெனா. 1543

௪௬ பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள். 1544

௪௭ ஆழ்ந்தபே ரன்பினா ளனைய கூறலுஞ்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள். 1545

௪௮ அன்னசொ லனையவ ளுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனென் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள்.

௪௯ ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதுவெனச் சொல்லினாள். 1547

௫௰ மாற்றம துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரர் வீரனு
மேற்றவ ளிதையத்தி னிருக்க வேகொலாம். 1548

௫௧ ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள். 1549

௫௨ தெழித்தன ளுரப்பினள் சிறுகண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையாற்
குழித்தன ணிலத்தையக் கொடிய கூனியே. 1550

௫௩ வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே
பேதைநீ பித்திநின் பிறந்த சேயொடு
[1]மாதுயர்ப் படுநரான் னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள். 1551

௫௪ சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி திருக்க நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா [2]றென்னிதற் [3]குறுதி யாதென்றாள். 1552

௫௫ சிறந்தனள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
சிறந்தனன் றிருவினிற் றிருவு நீங்கினான்
இறந்தில னிருந்தில னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெறுத லாலென்றாள். 1553

௫௬ பரதனிப் புவியெலாந் தம்பி யோடுமிவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனு மிளவலும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுத னன்றென்றாள். 1554

(பிரதி) 1 நீதுயர்ப். 2 றெளிதினு. 3 முறுதி;

௫௭ பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறுங் கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்தில னிறந்த னன்றென்றாள். 1555

௫௮ பாக்கியம் புரிந்திலன் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலங்கழ லரச னாணையாற்
றேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போயிற்றால். 1556

௫௯ மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரந் தீர்த்துல களிக்கு நீரினாற்
றந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய் வாயென்றாள். 1557

௬௦ அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றாள். 1558

௬௧ கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய
புல்லிடை யுக்கமு தேயும் போலென்றாள். 1559

௬௨ *வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய் கனற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேகய யற்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

௬௩ வெயின் முறைக்குலத் திறைவனை முதலிய மேலோர்
உயிர் முறைப்பொரு டிறம்பினு முறைதிறம் பாதோர்
மயின் முறைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிர் முறைப்புலைச் சிந்தையா லென்சொனாய் தீயோய்.

௬௪ எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

௬௫ பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே
நிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுந் தீரா
மறந்தி றம்பினும் மயின்முறை திறம்புதல் வழக்கோ.

௬௬ போதி யென்னெதிர் நின்றநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனன் புறஞ்சில ரறியில்
நீதியல்லன நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள். 1564

௬௭ அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா தநுநலிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடியிணை வீழ்ந்துரை வழங்கும்.

௬௮ மூத்த வற்குரித் தரசெனின் முறைமையி னுலகங்
காத்த மன்னனி னிளையனன் றோகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
பார்த்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ.

௬௯ அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
அறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல். 1567

௭௦ புரியுந் தன்மகற் கரசெனிற் பூதல மெல்லாம்
எரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றால்
பரியு நின்குலப் புதல்வற்கு நினக்குமிப் படிமேல்
உரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால். 1568

௭௧ தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னோயான்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி.

௭௨ சிந்தை யென்செயத் திகைத்தனை யினிச்சில நாளிற்
றந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யுன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய்.

எ௩ காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றந்தையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைவாழ் வுண்டது மதியாய்
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார். 1571

எ௪ மற்றுன் தந்தைக்கும் வான்பகை பெரிதுள மறத்தாற்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவிற்
கொற்ற மென்பதொன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடக் கடுந்துயர்க் கடல்விழத் துணிந்தாய்.

எ௫ கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த போதவன் றன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றான்.

எ௬ தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றுள வரமுண் மையா லும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும் 1574

எஎ அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லறந் துறந்தன டூய்மொழி மடமா
னிரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே. 1575

எஅ அனைய தன்மைய ளாகிய கேகயன் றனையள்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
யெனையு வந்தனை [1]யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெரும்படி புகலுதி யென்றாள். 1576

எ௯ மாழை யொண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழ மென்னினி யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு மேழுமு னொருமகற் காக்குவ னென்றாள். 1577

அ௰ நாடி யொன்றுநன் குரைசெய்வ னருமணி யனையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டுங்
கோடி யெனறன னுள்ளமுங் கோடிய கொடியாள்.

(பிரதி) 1 யென் மகனுக்கு மிங்கனையான்.

அக. இருவ ரத்தினு மொன்றினா லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை [1]யேழிரு பருவமும் பெயர்ந்து
திரிதரச் செய்வ தொன்றினாற் [2]செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமீ தென்றாள். 1579

அஉ உரைத்த கூனியை யுவந்தன ளுள்ளுறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் றொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் றாயினி நீயெனத் [3]தணியாய். 1580

அங நன்று சொல்லினை, நம்பியை நளிர்முடி [4]சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்த லிவ்விரண்டும்
அன்ற தாமெனி லரசன்மு னென்னுயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவன்யான் போதிநீ யென்றாள்.

அச கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் சுற்றிய மாலை
வான மாமழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
தேனை வாவுறும் வண்டின மலமரச் சிதைத்தாள். 1582

அரு விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் மேகலை யோடும்
வளைது றந்தனண் மதியினை மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள். 1583

அசு தாவின் மாமணிக் கலன்மற்றுந் தனித்தனிச் சிதறி
நாவி யோதியை நானிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்டகண் ணஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவுதிர்த்ததொர்கொம்பெனப் பொடிமிசைப்புரண்டாள்.

அஎ நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் றனையள்.

உ. மந்தரை சூழ்ச்சிப் படலம் முற்றும்.

(பிரதி) 1 பதினாலு. 2 செலநில. 3 தனியாய். 4 சூட்டித்.

௩. கைகேசி சூழ்வினைப் படலம்

க நாழிகை கங்குலி னள்ள டைந்த வேலை
யாழிசை யஞ்சிய செஞ்சொ லேழை கோயில்
வாழிய வென்றயன் மன்னர் துன்ன வந்தான்
ஆழி நெடுங்[1]கை மடங்க லாளி யன்னான். 1586

உ வாயிலின் மன்னர் வணங்கி நிற்ப வந்தாங்
கேயின செய்யு மணங்கினர் சூழ வேகிப்
பாய றுறந்த படைத்த டங்கண் மென்றோள்
ஆயிழை தன்னை யடைந்த வாழி மன்னன். 1587

௩ அடைந்தன னோக்கி யரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்த தெனத்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை மானை யெடுக்கும் யானை யேபோற்
றடங்கைகள் கொண்டு தழீஇ யெடுக்க லுற்றான். 1588

ச நின்று தொடர்ந்த நெடுங்கை நீக்கி யேழை
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்
ஒன்று மியம்பல ணீடு யிர்க்க லுற்றாள்
மன்றுளர் தாரவ னாவி யன்ன மன்னாள். 1589

ரு அன்னது கண்ட வலங்கன் மன்ன னஞ்சி
என்னை நிகழ்ந்த திவ்வெழு ஞால மாள்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாஞ்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி தென்றான்

சா வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட னெடுங்கணி னாலி கொங்கை போர்ப்ப
உண்டுகொ லாமரு ளென்க ணுண்மை நோக்கிற்
பண்டைய[2]வின்று பரிந்த ளித்தி யென்றாள். 1591

எ கள்ளவிழ் கோதை கருத்துண ராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன [3]நக்கான்
உள்ள முவந்துள செய்வ னொன்று லோபேன்
வள்ள லிராமனுன் மைந்த னாணை யென்றான். 1592

அ ஆன்றவ னவ்வுரை கூற வைய மில்லாள்
தோன்றிய பேரவ லந்து டைத்த லுண்டேற்
சான்றிமை யோர்குல மாக மன்ன முன்னீ
ஏன்ற வரங்க ளிரண்டு மீதி யென்றாள். 1593

(பிரதி) 1 கண், 2 ஈன்று பரிந்து தான தென்றான். 3. நக்காங்கு.

௯ வரங்கொள வித்துணை மம்ம ரல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தில்லை யீவ னென்பாற்
பரங்கெட விப்பக லேப கர்ந்தி டென்றான்
உரங்கொண் மனத்தவள் வஞ்ச மோர்வ தில்லான். 1594

௰ ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றிற்
போய்வன மாள்வ தெனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள். 1595

௰௧ நாக மெனுங்கொடி யாட னாவின் வந்த
சோக விடந்தொட ரத்து னுக்க மெய்த
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். 1596

௰௨ பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான். 1597

௰௩ [1]உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் [2]பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்
றலந்தலை யுற்ற வரும்பு லன்க ளைந்தும். 1598

௰௪ மேவி நிலத்தி லிருக்கு நிற்கும் வீழும்
ஓவிய மொப்ப வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற [3]வெண்ணும்
ஆவி பதைப்ப வலக்க ணெய்து கின்றான். 1599

௰௫ பெண்ணென வுட்கும் பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்து யிர்த்து லாவுங்
கண்ணில னொப்ப வயர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்க வுழைக்கும் யானை போல்வான். 1600

௰௬ கம்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி விழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர் நடுங்கின ரூழி பேர்வ தொத்த்
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தேயால். 1601

(மரதி) 1 உலந்தது. 2 பொடித்தது. 3 வென்னும்.

௧௭ அஞ்சல ளையன தல்லல் கண்டு முள்ளம்
நஞ்சில ணணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மன்றே
தஞ்செ௳ மாதரை யுள்ள லார்க டக்கோர். 1602

௧௮ இந்நிலை நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதி கைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
உன்னிலை சொல்லென தானை யுண்மை யென்றான்.

௧௯ திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லைமு னீந்த வரங்க ளென்பாற்
குசைப்பரி யோய்தரி லின்று கொள்வ னன்றேல்
வசைப்பொருள் நினைவயி னிற்க மாள்வ னென்றாள்.

௨௰ இந்த நெடுஞ்சொலவ் வேழை கூற முன்னே
வெந்த கொடும்புணில் வேலு ழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன். 1605

௨௧ ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
ஓகொடி தேயற மென்னு முண்மை யொன்றுஞ்
சாக வெனுவெழு மெய்த ளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான். 1606

௨௨ நாரிய ரில்லை யிஞ் ஞால மேழு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். 1607

௨௩ கையொடு கைகள் புடைக்கும் வாய்க டிக்கும்
மெய்யுரை குற்ற மெனப் புழுங்கி விம்மும்
நெய்யெரி யுற்றெறன நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்று நடந்த வாய்மை மன்னன். 1608

௨௪ ஓறுப்பினு மந்தர முண்மை யொன்று மோவா
மறுப்பினு மந்தரமென்ற வாய்மை மன்னன்
பொறுப்பினு மந்நிலை போகிலாளை யாவி
இறுப்பினு மாவ திரப்ப [1]தென் றிரப்பான். 1609

(பிரதி) 1 னென்.

உரு *கோன்மேற்கொண்டுங்குற்ற மகற்றக்குறிகொண்டார்
போன்மேலுற்றதுண்டெனினன்றும்பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான். 1610

உசா கொள்ளா னின்சே யிவ்வர சன்னுன் கொண்டாலும்
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளா
தெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென்பயனென்ருன்

உஎ வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குத் தரையென்ருன். 1612

உஅ மண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுன தன்றே
பெண்ணே வண்மைக் கைகயன் மானே பெறுவாயேல்
மண்ணேகொண்ணீ மற்றையதொன்றும்மறவென்ருன்

உகூ வாய்தந் தின்றே மற்றினி யானே வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்தே நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ. 1614

நூ இன்னே யின்ன பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாருண்
முன்னே தந்தா யிவ்வர நல்கா முனிவாயேல்
என்னே மன்னு யாருளர் வாய்மைக் கினியென்ருள்.

நூக அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்ருன்
பொய்ச்சொற்பேணுவாய்மொழி மன்னன்பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றே வெனநாணும்
முச்சற்ருர் போற் பின்னு மிரந்தே மொழிகின்ருன்.

நூஉ நின்மக னுள்வா னியினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்ருன். 1617

௩௩. மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னுவு முலர்ந்தே னினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான். 1618

௩௪ இரந்தான் சொல்லு மின்னுரை கேளாண் முனிவஞ்சாள்
மரந்தா னன்ன நெஞ்சின ணாணாள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிரென்றால்
உரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள். 1619

௩௫ கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமற் காத்தலு மொய்கா னிடைமெய்யே
நெடியோ னீங்க நீங்குமென் னாவி யினியென்னா
இடியே றுண்ட மால்வரைபோன் மண்ணிடைவீழ்ந்தான்.

௩௬ வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னாழா வக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தா டுன்பஞ் சொற்கொடி யாள்சொற் கொடுசித்தம்
போழ்ந்தா ளுள்ளப் புன்மையை நோக்கிப் புரள்கின்றான்

௩௭ ஒன்றாய் நின்ற வாருயி ரோடு முயர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்றா ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியாளே. 1622

௩௮ ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தென்னுயிர் கொள்ளப் படுகின்றாய். 1623

௩௯ ஏண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பய னந்தப் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரோ
ஆண்பா லாரோ பேரரு ளாரோ டைவம்மா. 1624

௪௰ மண்ணாள் கின்றா ராகி வலத்தான் மதியால்வைத்
தெண்ணா நின்றோ ரியாரையு மெல்லா விகலாலும்
விண்ணோர் காறும் வென்ற வெனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த வந்தர மென்னப் பெறுகேனோ.

சக என்றென் றுன்னும் பன்னி யிரங்கு மிடரேயும்
ஒன்றொன் றல்ல வின்ன லுழக்கு முயிரோடும்
இன்றின் றென்னும் வண்ண மயர்க்கு மிடைகின்றான்
குன்றென் றென்றே டொன்றிய வென்னக் குவிதோளான்.

சஉ ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றார் முற்று மடங்கப் புரள்போதில்
ஊழிற் பெற்று யென்றுரை யன்றே வுயிர்மாய்வன்
பாழிப் பொற்றோள் மன்னவ வென்றாள் பசையற்றாள்.

சங அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
விரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னை யென்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தே றுதே யின்னுயி ருண்ணு மொரியன்னாள். 1628

சச வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்விர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானர சாள்வன் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிதென்றான். 1629

சரு கூறு முன்னங் கூறு படுக்குங் கொலைவாளின்
ஏறு வண்ணம் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறு ணுகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
ஊறு நின்ற சிந்தையி [1]னுளுந் துயில்வுற்றாள். 1630

சசா *சேணு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி னுனிட ரெய்த வொன்று மிரங்கலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்முன் னிற்கவும்
நாணி னுளென வேகி னுனளிர் கங்கு லாகிய நங்கையே. 1631

சஎ எண்ட ருங்கடை சென்ற யாம மியப்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாங்
கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை யான காமர் துணைக்கரங்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றிவி ளிப்ப போன்றன கோழியே.

சஅ தோய்க யத்து மரத்து மென்சிறை துள்ளிமீதெழு புள்ளெலாந்
தேய்கை யொத்த மருங்கின் மாதர் சிலம்பி னின்று சிலப்புவ
கேக யத்தர சன்ப யந்த விடத்தை யின்னதோர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ திந்து மனத்து வைவன போன்றவே.

(பிரதி) 1 னுளுக் துயில்வுற்றான்.

௪௯ சேம மென்பன பற்றி யன்பு திருந்த வின்றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடும் வனத்துள் யாரு மறக்கலா
நாம நம்பி நடக்கு மென்று நடுங்கு கின்ற மனத்தவாய்
யாமு மிம்ம ணிறத்து மென்பன போலெ ழுந்தன யானையே.

௫௰ சிரித்த பங்கய மொத்த செங்க ணிராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த ராசியிம் மண்ண னைத்து நிழற்றமேல்
விரித்த [1]பந்தல் பிரித்த தாமென மீனொ ளித்தது வானமே. 1635

௫௧. நாம விற்கை யிராம னைத்தொழு நாள டைந்த நமக்கெலாங்
காம விற்குடை கங்குன் மாலை கழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தது பேரி யவ்வொலி சார மாரி தழங்கலான்
மாம யிற்குல மென்ன வுள்ள மலர்ந்தெ ழுந்தனர் மாதரே. 1636

௫௨ இனைம லர்க்குலம் வாய் விடாதிள வாச மாருதம் வீசமுன்
புனைது கிற்கலை சோர நெஞ்சு புழுங்கி னார்சில பூவைமார்
மனவ னுக்கம்வி டத்த னித்தனி வள்ள லைப்புணர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம யங்கி னார்சில கன்னியார். 1637

௫௩ சாய டங்க நலங்க லந்து தழங்கு தன்குல நன்மையும்
போய டங்க நெடுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கிய தென்ன வந்து குவிந்த வண்குமு தங்களே.

௫௪ மொய்ய ராக நிரம்ப வாசை முருங்கு தீயின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் வானி லாநெடு வாடையும்
மெய்ய ராவிட வாவிசோர வெதும்பு மாதர்த மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன பண்க னிந்தெழு பாடலே.

௫௫ ஆழி யான்முடி சூடு நாளிடை யான பாவி யிதோரிரா
ஊழி யாயின வாறெ னாவுயர் போதின் மேலுறை பேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்த கண்ணுமெக்கண் மனக்களும்
வாழு நாளி தெனாவெ ழுந்தனர் மஞ்சு தோய்புய மைந்தரே.

௫௬ ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில் காண மூளு மவாவினாற்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யுறுஞ்சுடர் வேனெடுங்கண் முகிழ்த்துநெஞ்சி னினைம்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல் வண்டு பொம்மென விம்மவே

(பிரதி) 1 பந்த றிரைத்த.

ருஎ ஆடகந்தரு பூணழுந்திட வஞ்சி யஞ்சி யனந்தலால்
ஏட கந்தரு தார்பொ திந்திட யாமபேரி யிசைத்தலாற்
சேட கம்புனை கோதை மங்கையர் சிந்தையின்செறி திண்மையால்
ஊடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்க ளுய்யவே

ருஅ தழைவொ லித்தன வண்டொ லித்தன தாரொ லித்தன பேரியாம்
முழவொ லித்தன தேரொ லித்தன முந்தொ லித்தெழுமல்குலார்
இழையொ லித்தன புள்ளொ லித்தன யாழொலித்தன வெங்கணும்
மழையொ லித்தன போலொலித்தமனத்தின் முந்துறும் வாசியே

ருக வையம் ஏழு மொரேழு மாருயி ரோடு கூட வழங்குமாம்
மெய்யன் வீரருள் வீரமா மகன் மேல்வி ளைந்ததொர் காதலால்
நைய நைய நலம்பு லன்க ளவிந்த டங்க நடுங்குவான்
தெய்வ மேனி படைத்த சேயொளி போன்ம ழுங்கின தீபமே.

சா0 வங்கி யம்பல தேன்வி ளம்பின பாணி முந்தின வாணிபின்
பங்கி யம்பல வெங்கும் விம்மின பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீத நிரந்தவே, 1645

சாக தூப முற்றிய காரிருட்பகை துள்ளியோடிட வுள்ளெழுந்
தீப முற்றவு [1]நீர்த்த கன்றனச் சேய தாருயிர் தேயவப்
பாவ முற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றி மிகச்சி வந்தன னொத்த னன்குணக் குன்றின்மேல்.

சாஉ மூவ ராய்முத லாகி மூலமு மாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி லொடித்த சேவகர் சேணிலங்
காவன் மாமுடி சூடு மாமெழில் காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன வந்து மலர்ந்த பங்கய வாவியே. 1647

சாஙு இன்ன வேலையி னேழு வேலையு மொத்த போல விரைந்தெழும்
மன்னன் மாநகர் மைந்தன் மாமுடி சூடும் வைகலி தாமெனத்
துன்னு காத லுரப்ப வந்தவை சொல்ல லாம்வகை யெம்மனோர்க்
குன்ன லாவன வல்ல வென்னினு முற்ற பெற்றி யுணர்த்துவாம

சாச *குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்
பஞ்சிக ளணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார். 1649

(பிரதி) 1 தித்த,

௬௫ *பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி தம்பிய ரனைய ரானார்
செங்கையி னறவ மாந்திக் களிப்பன சிவணுங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோட் குமர ரெல்லாம்

௬௬ மாதர்கள் கற்பின் மிக்கார் கவுசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மகளி ரெல்லாஞ்
சீதையை யொத்தா ரன்று டிருவினை யொத்தா ரிவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தசரதன் றன்னை யொத்தார்.

௬௭ இமிழ்திரைப் பரவை ஞால மெங்கணும் வறுமை கூர
உமிழ்வதொத் துதவு காத லுந்திட வந்த தன்றே
குமிழ்முலைச் சீதை கொண்கன் கோமுடி புனைதல் காண்பான்
அமிழ்துணக் குழுமு கின்ற வமரரி னரச வெள்ளம்.

௬௮ பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பரவை யல்குற்
றோகையர் குழாமு மைந்தர் சும்மையுந் துவன்றி யெங்கும்
ஏகுமி னேகு மென்றன் றிடையிடை நிற்ற லாற்றார்
போகுனர் மீள்க லாகாப் பொன்னகர் வீதி யெல்லாம்.

௬௯ வேந்தரே பெரிதென் பாரும் வேதியர் பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரும் மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புகுவதே பெரிதென் பாருந்
தேர்ந்ததே தேரி னல்லால் யாவரே தெரியக் கண்டார்.

௭௦ குவளையி னெழிலும் வேலின் கொடுமையுங் குழைத்துக் கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியின் வைத்த தன்மைசா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடையா ராடுந் தோகையின் குழாத்திற் றொக்கார்.

௭௧ நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதார்
இலங்கையி னிருந்த ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

௭௨ சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
அந்தரத் தன்ன மெல்லா [1]மார்ந்தெனக் கவரி துன்ன
இந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மவுலி சூட்டு மண்டப மரபிற் புக்கார். 1657

(பிரதி) 1 மார்த்தெனக்

எ௩ முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னோடும்
இற்பயஞ் சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
அற்புதன் றிருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு நான்மறைக் கிழவ ரெல்லாம்.

எ௪ விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கங்
கண்ணகன் முரசி னோதை கேட்டவர் செவிக டூர்த்த
எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடலுந் தூர்த்த.

எ௫ விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னோருஞ் சுடரையு மறைத்த சூழ்ந்த
அளக்கர்வாழ் முத்த மூரன் முறுவலா ரணியுஞ் சோதி
வளர்ந்தலா மென்றவ் வானோர் கண்ணையு மறைத்த வன்றே.

எ௬ ஆயதோ ரமைதி யின்க ணையனை மகுடஞ் சூட்டற்
கேயுமங் கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ளொருக்க நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

எஎ கங்கையே முதல வாயக் கன்னியீ றுயதீர்த்தம்
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
துங்கிசெய் வினையிற் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா சனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்

எ௮ கணிதநா லுணர்ந்த மாந்தர் காலம்வந் துற்ற தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னெய்தி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யெனனப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

எ௯ விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயை கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

அ௦ என்றன ளென்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

அக கொற்றவர் முனிவோர் மற்றுங் குவலயத் துள்ளோ ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி சியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பினாள் செம்
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றாள்.

அஉ அய்யனு மச்சொற் கேளா வாயிர மவுலி யானைக்
கைதொழு தாசர் வெள்ளங் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவர்கள் மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் போனான்.

அங திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்திக் காதலோ டுவகை யுந்த
இருகையு மிணைத்து மொய்த்தா ரின்னுயிர் யாக்கு மொன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார் போல்வார்.

அச துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயுங்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்.

அரு சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும் வளைகளுஞ் சிந்து வாரும்
புண்ணுற வனங்கன் வாளி புதைத்ததட புணாமென் கொங்கை
கண்ணுறப் பொழிந்த காமங் கனற்றரக் கலுழ்வா ரும்.

அசு அங்கண னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணான் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தேரு மாகி
எங்கணுந் தோன்று கின்றா ரெனவரோ விராம னென்பார்.

அஎ இனையராய் மகளி ரெல்லா மிரைத்தனர் நிறைத்து மொய்த்தார்
முனைவரு நகர மூதூர் முதிஞரு மிளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டா ரன்பினுக் கெல்லை காணார்
நினைவன மனத்தால் வாயா னிகழ்ந்தது நிகழ்த்து வாம்யாம். 1672

அஅ உய்ந்ததிவ் வுலக மென்பா ருழிகாண் கிற்பா யென்பார்
மைந்தநீ கோடியெங்கள் வாழ்க்கைநாள் யாவு மென்பார்
ஐந்தவித் தாரிதிற் செய்த தவமுனக் காக வென்பார்
பைந்துணர்த் தெரிய லாய்க்கே நல்வினை பயக்க வென்பார்

அக உயரருளொண்கணுேக்குந் தாமரை நிறத்தையொக்கும்
புயல்பொழி மேகமென்ன புண்ணியஞ் செய்தவென்பார்
செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாந் தக்க தென்பார். 1674

கூ0 வாரண மரற்ற வந்து மகரங்கோள் விடுத்த நேமி
நாரணனுக்கு மிந்த நம்பிதன் கருணை யென்பார்
ஆரண மறித றேற்ரு வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார். 1675

கூக நீலமா முகிலி னுன்ற னிறைவினே டறிவு நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் றேவரி னடங்கு வானே
காலமாக் குனித்து நுண்மைக் கணக்கையுங் கடந்து நின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்தியிம் முன்ப னென்பார்.

கூஉ ஆர்கலி யகழ்ந்தோர் கங்கை யவனியிற் றந்தோர் முந்தைப்
போர்கெழு தேவர்க் காக வசுரரைப் பொருதுவென்றோர்
பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப வையன்
தார்கெழு திரடோ டந்த புகழினைத் தழுவி யென்பார்.

கூங *சந்தமிவை தூவின்மணி யாரமிவை யாவுஞ்
சிந்துரமு மிங்கிவை தெரிந்தமத வேழப்
பந்தமும் வயங்கொளி பசும்பொனின் வெறுக்கை
மைந்தர்வறி யோர்கொள வழங்கென நினைப்பார். 1678

கூச மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்திற்
றன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி மைந்துருகி நிற்பார். 1679

கூரு சத்திர நிழற்றநிமிர் தானையொடு நானு
அத்திர நிழற்றவரு ளோடவணி யாள்வார்
புத்திர ரினிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திர மெனத்தனி திகைத்துருகி நிற்பார். 1680

கூசா கார்மினொ டுலாயதென நூல்களுழு மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் வானே
நேர்மினிமிர் கோடிமணி யாலுநிதி யாலும்
தூர்மினெடு வீதியினை யென்றுசொரி வாரும். 1681

௯௭ தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தாற்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ னாள்வான்
ஆகையி லுவந்தன ளியற்கையிது வென்றாற்
றோகையவள் பேருவகை சொல்லவரி தென்பார். 1682

௯௮ பாவமு மருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுமுத லன்றுபொது வென்பார்
தேவர்பகை யுள்ளவுமிவ் வள்ளலற றுமென்பார்
ஏவல்செயு மன்னர்தவம் யாவதுகொ லென்பார். 1683

௯௯ ஆண்டினைய ராயினைய கூறவடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
மாண்டகொடி மாடநெடு வீதிமறை யப்போய்ப்
பூண்டபுகழ் மன்னனுறை கோயில்புக லோடும். 1684

௧௦௦ *ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிரு மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணான்.

௧௦௧ வேத்தவை முனிவ ரோடும் விருப்பொடுங் களிக்கு மெய்ம்மை
ஏத்தவை யிசைக்குஞ் செம்பொன் மண்டபத் தினிதினெய்தான்
ஒத்தவை யுலகத் தெவரு முள்ளவை யுணர்ந்தா னுளனாம்
பூத்தவை வடிவே லாக்குஞ் சிற்றவை கோயில் புக்கான்.

௧௦௨ புக்கவன் றன்னை நோக்கிப் புரவலர் முனிவ ரெல்லாந்
தக்கது நினைந்தான் றாதை தாமரைச் சரணஞ் சூடித்
திக்கினை நிமிர்ந்த கோலச் செல்வனே செம்பொற்சோதி
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூடுதல் விழுமி தென்றார்.

௧௦௩ ஆயன நிகழும் வேலை யண்ணலு மயர்ந்து தேருந்
தூயவன் கிடந்த சூழல் குறுகினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா லினிது பகர்வெ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

௧௦௪ வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் தொழுது நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னான்.

௧௦௫ நின்றவன் றன்னை நோக்கி யிரும்பினா லியன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரினிற் கொடுமை பூண்டாள்
இன்றெனக் குணர லாய தாயதே யென்ன லாகும்
ஒன்றுனக் குந்தை மைந்த வுரைத்ததோ ருரையுண் டென்றாள்.

௧௦௬ எந்தையே யேவ நீரே யுரைசெய வியைந்த துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தன ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணியு மென்றான்.

௧௦௭ ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்றாள்.

௧௦௮ இப்பொழு தெம்ம னோருக் கியம்புவ தெளிதே யார்க்குஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு [1]பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா. 1693

௧௦௯ தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கிசைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட வுடைய வனுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொத்தான். 1694

௧௧௦ மன்னவன் பணியன் றாகி [2]னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ
என்னினி யுறுதி யப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்.

௩. கைகேசி சூழ்வினைப் படலம் முற்றும்.

(பிரதி) 1 பின்பின், 2 னின்பணி.

ச. நகர் நீங்கு படலம்

க என்றுகொண் டினைய கூறி யடிதொழு திறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாத மத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னாளும் பூமியும் புலம்பி நையக்
குன்றினு முயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

உ குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கிச் செல்ல
மழைக்குன்ற மனையான் மவுலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்.

ந புனைந்திலன் மவுலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்தில னென்கொ லென்னு மையத்தா ணளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

ச *மங்கை யம்மொழி கூறலு ¹மானவன்
செங்கை கூப்பிநுங் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். 1699

ரு முறைமை யன்றென்ப தொன் றுண்டதல்லது
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனோர்
குறைவி லன்னெனக் கூறின ளைவர்க்கும்
மறுவி ²லன்பினில் வேற்றுமை மாற்றினாள். 1700

சு என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள். 1701

எ தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினான்
நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டொர் பணியென் றியம்பினான். 1702

அ ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டொ ரேழினோ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றானென்றான். 1703

(பிரதி) 1 மாதவன், 2 லன்பன்றி.

௯ ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்
ஏங்கி னாளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கி னாள்விம்மி னாள்விழுந் தாளரோ. 1704

௰ வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னாருயி ரஞ்சுமால். 1705

௧௧ கைகள் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்த்து விழுந்து புழுங்குமால். 1706

௧௨ நன்று மன்னன் கருணையெ னாகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று போவதெ னாவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றனள் போலுமால். 1707

௧௩ அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலவே. 1708

௧௪ அறமெ னக்கிலை யோவென வாவிநொந்
[1]திறவ டுத்ததென் றெய்வதை காளெனும்
பிறவி சைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள். 1709

௧௫ இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த வத்தி னெடுத்தருங் கற்பினோய்
பொய்த்தி றத்தின னாக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயெனா. 1710

௧௬ பொற்பு றுத்தன மென்மை பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினான்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
வற்பு றுத்தி மனங்கொளத் தேற்றுவான். 1711

(பிரதி) 1 திறம்.

௰௭ சிறந்த வெம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில னாக்கி வனத்திடை
உறைந்து தீரு முறுதிபெற் றேனினிற்
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ. 1712

௰௮ விண்ணு மண்ணுமவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூதமெ லாமழிந் தேகினும்
அண்ண லேவன் மறுக்க வடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ள ழியேயென்றான். 1713

௰௯ ஆகி லைய வரசன்ற னாணையால்
ஏக னீயென்றி யானுமு ரைக்கிலேன்
சாகிலா வுயிர் தாங்கவல் லேனையும்
போகி லுன்னொடுங் கொண்டனை போகென்றாள். 1714

௨௰ என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானம் படரத் துணிவதே
அன்னை நீயறம் பார்க்கிலை யாமெனா. 1715

௨௧ வரிவி லெம்பியிம் மண்ணர சாயவற்
குரிமை மாநில முற்றபின் கொற்றவன்
திருவி னீங்கித் தவஞ்செயு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமென்றான். 1716

௨௨ சித்த நீதிகைக் கின்றதென் றேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண்டுக ளீண்டிவை
பத்து நாலும் பகலல வோவெனா. 1717

௨௩ முன்னர்க் கோசிக னென்னு முனிவரன்
தன்ன ருட்டலை தாங்கிய விஞ்சையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
இன்ன நன்றவ ரேயது செய்தலே. 1718

௨௪ மாதவர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றிந் நகர்வரக் காண்டியால். 1719

௨௫ மகர வேலைமண் டோயதண் டோட்டினர்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையி னின்னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்றதன் றோவெனா. 1720

௨௬ மான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
தான்ம றுத்திலன் றாதைசொற் றாயையே
ஊன றக்குறைத் தானுர வோனருள்
யான்ம றுப்பதென் றெண்ணுவ தோவெனா. 1721

௨௭ இத்தி றத்த வெனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா
எத்தி றத்து மிறக்குமிந் நாடெனா
மெய்த்தி றத்து விளங்கிழை யுன்னுவாள். 1722

௨௮ அவனி காவல் பரதன தாகுக
இவனிஞ் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகை காப்பென் றகவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினாள். 1723

௨௯ போகின் றாளைத் தொழுது புரவலன்
ஆக மற்றவ டன்னையு மாற்றியிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் தோய்மணிக் கோயிலை மேவினாள். 1724

௩௰ நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினண் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயிர்
உடைந்த போதி னுடல்விழுந் தென்னவே. 1725

௩௧ *பிறிவோர் பிரிவோ விலைதான் பெரியோய் தகவோ வென்னும்
நெறியோ வடியோ நிலைநீ நினையாய் நினைவே யென்னும்
வறியோர் தனமே யென்னுந் தமியேன் வலியே யென்னும்
அறிவோ வினையே யென்னு மரசே யரசே யென்னும்.

௩௨ இருளற் றிடவுற் றொளிரு மிரவிக் கெதிருந் திகிரி
யுருளத் தனியுய்த் தொருதேர் நடையிற் கடைகா ணுலகம்
பொருளற் றிடமுற் றுறுமப் பகலிற் புகுதற் கென்றோ
அருளிற் கருதிற் றிதுவோ வரசர்க் கரசே யென்னும்.

௩௩ திரையார் கடல்சூ ழுலகின் றவமே திருவின் றிருவே
நிரையார் கலையின் கடலே நெறியார் மறையின் னிலையே
கரையா வயர்வே னெனைநீ கருணா லயனே யென்னென்
றுரையா யிதுதா னழகோ வுலகே ழுடையா யென்னும்

௩௪ மின்னின் றனைய மேனி வெறிதாய் விடநின் றதுபோல்
உன்னுந் தகைமைக் கடையா வுறுநோ யுணர்கின் றுணரான்
என்னென் றுரையா யின்னே யிதுதா னேதென் றறியேன்
மன்னன் றன்மை காண வாராய் மகனே யென்னும்

௩௫ இவ்வா றழுவா ளிரியற் குரல்சென் றிசையா முன்னம்
ஒவ்வா தொவ்வா தென்னா வொளிர்வா ணிருபர் முனிவ
அவ்வா றறிவா யென்ன 'வந்தான் முனிவன் னவனும்
வெவ்வா ளரசன் னிலைகண் டென்னும் வினையென் றுன்னா. 1730

௩௬ இறந்தா னரச னல்ல னிறவா தொழிவா னல்லன்
மறந்தா னுணர்வென் றன்னா னென்கை கயர்கோன் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத் துறவா தொழிவா ளென்னாப்
பிறந்தார் பெயருந் தன்மை பிறரா லறிதற் கெளிதோ

௩௭ என்னா வுன்னா முனிவ னிடரா லழிவா டுயரஞ்
சொன்னா லாகா ளெனமுன் னொழுகை கயர்கோன் மகளை
அன்னா யுரையா யரச னயர்வா னிலையென் னென்னத்
தன்னா னிகழ்ந்த தெல்லாந் தானே தெரியச் சொன்னாள்

௩௮ சொற்றாள் சொற்றா முன்னஞ் சுடர்வா ளரசர்க் கரைசப்
பொற்றா மரைபோற் கையாற் பொடிசூழ் படிநின் றெழுவிக்
கற்றா யயரே லவளே தருநின் காதற் கரசை
எற்றே செயலின் றொழிநீ யென்றென் றிரவா நின்றான். 1733

௩௯ சீதப் பனிநீ ரளவித் திண்கா லுக்க மென்காற்
போதத் தளவே தழுவித் தின்சொற் புகலா நின்றான்
ஓதங் கடனஞ் சனையா ளுரைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரே புகல்வா னுயிருங் கண்டான்.

௪௰ காணா வையா வினிநீ யொழிவாய் கழிபே ரவலம்
ஆணா யகனே யினிநா டாள்வா னிடையூ றுளதோ
மாணா வுரையா டரும மழையே யனையான் மகுடம்
பூணா தொழிவா னெனில்யா முளமோ பொன்றே மென்றான்.

(பிரதி) 1 வந்தார் முனிவர் வந்தான்.

சக என்ற முனிவன் றன்னை நினையா வினையே னினிநான்
பொன்றும் மளவில் லவனைப் புனைமா மகுடம் புனைவித்
தொன்றும் வனமென் றுள்ளா வண்ணஞ் செய்தென் னுரையுங்
குன்றும் பழிபூ ணுமற் காவாய் கோவே யென்றான்.

சஉ முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாண்முகமேமுன்னி
இனியுன் புதல்வற் கரசு [1]மேனை யோருக் குயிரும்
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே யென்றான்.

சங மொய்ம்மாண் வினைவே ரறவென் றுயர்வான் மொழியா முன்னம்
விம்மா விழுவா ளரசன் மெய்யிற் றிரிவா னென்னில்
இம்மா னுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொற்
பொய்மா னுமற் கின்றே பொன்று தொழியேனென்றாள்

சச கொழுநன் றுஞ்சு மெனவுங் கொள்ளா துலகு மெனவும்
பழிநின் றுயரும் மெனவும் பாவ முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன் றுணாகின் றிலையா னினிமேல்
மொழிகின்றனவென் னென்று முனியும் முறையன் றென்பான்

சரு கண்ணோ டாதே கணவ னுயிரோ டிடர்கா ணுதே
புண்ணூ டாடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயப் பேயோ கொடியாய் நீயும்
மண்ணோ டுன்னோ டென்னு மனமே வலிதே யென்றான்

சசு வாயான் மன்னன் மகனை வனமே கென்று முன்னம்
நீயோ சொன்னு யவனோ நிமிர்கா னிடைவன் னெறியிற்
போயோ புகலோ தவிரப் புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோ நின்போற் றீயோ ருளரோ செயலென் னென்றான்.

சஎ தாவின் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்
நாவின் னஞ்ச முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் னுயிரை
ஏவி னுயோ வவனு [3]மேகி னுனோ வென்ன. 1742

சஅ கண்டே னெஞ்சங் களிநின் கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனு னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்.

(பிரதி) 1 பேனை யோருக் குயிரும். 2 ஏவின் 3 மேகின்

௪௯ விழிக்குங் கண்வே றில்லா வெங்கா னென்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வரி யென்னிற் பேழ்வாய்
பழிக்கு நாணாய் மாணாப் பாவி யினியென் பலவுன்
கழுத்தி ஞாணுன் மகற்குக் காப்பு ஞாணு மென்னா. 1744

௫௰ இன்னே பலவும் பகர்வா னிரங்கா தவளை நோக்கிச்
சொன்னேன் முன்னே யிவளென் றார மல்ல டுறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

௫௧ என்னைக் கண்டு மேகா வண்ண மிடையூ றுடையான்
உன்னைக் கண்டு மிலனோ வென்னு வுயர்கோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் கண்ட துயரந்
தன்னைக் கண்டே தவிர்வா டளர்வா னிலையிற் றளர்வான்

௫௨ மாற்றாள் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ளம்
ஆற்றா தயர்ந்தா னென்று மறிந்தா ளவளும் மனத்தைத்
தேற்றா நின்றாண் மகனைத் திரிவா னென்னு ளரசன்
தோற்றான் மெய்யென் றுலகஞ் சொல்லும் பழிக்குஞ் சோர்வாள்.

௫௩ தள்ளா நிலைசான் மென்மை தழுவா வகையா லெய்தின்
எள்ளா நிலைகூர் பெருமைக் கிழிவா மென்றா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மே னினியிவ் வுலகங்
கொள்ளா தன்றோ வென்றாள் கணவன் குறையக் குறைவாள்.

௫௪ போவா னொழியா னென்றாள் புதல்வன் றன்னைக் கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் தளர்வுற் றயர்வாள்
காவா யென்னுண் மகனைக் கணவன் புகழுக் கழிவாள்
ஆவா வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே. 1749

௫௫ உணர்வா னனையா னுரையா லுயர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமா வனமே போவா னேயா மென்னா
இணரார் தருதா ரரச னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான் றேன்றா றேன்றா யென்றான்.

௫௬ கண்ணு நீரா யுயிரு மொழுகக் கழியா நின்றேன்
எண்ணு நீரான் மறையோ னெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணு நீராய் வந்த புனலே மகனே வினையேன்
உண்ணு நீரா யுதவி யுயர்கா னடையா யென்றான். 1751

௫௭ படைமாணரசைப் பலகான் மழுவா ளதனு லெறிவான்
மிடன்மாண்வலிதானனையான் வில்லோ டடுமா வல்லாய்
உடையாமகுடம்புனையென் றுரையாவுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

௫௮ கறுத்தா யுருவும் மனமுங் கண்ணுங் கையுஞ் செய்யாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன் புரமுன் றெரித்த போர்வில்
இறுத்தாய் தமியே னென்னு யென்னை யிம்மைப் பிடையே
வெறுத்தா யினிநான் வாழ்வே னேண்டேன் வேண்டேனென்றான்.

௫௯ பொன்னின் முன்னமொளிரும்பொன்னே புகழின்புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னின் புகுவே னுயர்வா னினியானென்றான்.

௬௰ நெகுதற் கொத்த நெஞ்சி னேய்த்தாலே யாவி
உகுதற் கொத்த வுடலு முடையே னுன்போ லல்லேன்
தகுதற் கொத்த சனகன் றையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணாற் போகக் காணே னென்றான்.

௬௧ எற்றே பகர்வே னினியா னென்னே யுன்னிற் பிரிய
வற்றே யுலக மெனினும் வானே வருந்தா[1]தெனினும்
பொற்றே ரரசே தமியேன புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே னென்றான்.

௬௨ அள்ளற் பள்ளப் புனல்சூ ழகனு னிலமும் மரசுங்
கொள்ளக் குறையா நிதியின் குவையுமுதலா வெவையுங்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென்[2]னுயிரை மாய்க்கும்மாய்க்குமென்றான்

௬௩ ஒலியார் கடல்சூ ழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்றா ருன்னைப் போல்வா ருளரோ பொன்னே
வலியா ருடையா ரென்றான் மழுவா ளுடையான் வரவுஞ்
சலியா நிலையா னென்றாற் றவிர்வா ருளரோ வென்றான்

௬௪ கேட்டே யிருந்தே னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே னுகி லென்றே வன்க ணென்கண் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்டியான்
நாட்டே யுறைவேனென்றானன்றென்றன்மையென்றான்

(பிரதி) 1 னெனினும். 2 னுயிரா லன்றி மறைய லென்றான்.

௬௫ மெய்யே தவமே செய்துன் மிடல்மார் பிரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு நிலமா தென்னுந்திருவும்
உய்யா ருய்யார் கெடுவே னுன்னைப் பிரியில் வினையேன்
ஐயா கைகே சியைநே ரருளா கேனோ வென்றான். 1760

௬௬ பூணு ரணியும் முடியும் பொன்னு சனமுங் குடையுஞ்
சேணுர் மார்புந் திருவும் தெரியக் காணக் கடவேன்
மாணு மாவற் கலையு மானின் றேறு லுமைதான்
காணு தொழிந்தே னன்றுய்த் தன்றே கன்றே யென்றான். 1761

௬௭ ஒன்றே டொன்றென் றெவ்வா வுரைதந் தாசன் னுயிருஞ்
சென்றே நின்று னென்னுந் தன்மை யெய்தித் தேய்ந்தான்
மென்றேல் மார்பின் முனிவன் வேந்தே யயரே லவனை
யின்றே யேகா வண்ணந் தகைவ னுலகே ரென்றான். 1762

௬௮ முனிவன் சொல்லு மளவின் முடியுங் கொல்லென் றரசன்
றனிநின் றுழறன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனு லிவனுற் போகா தொழிவா னென்னு
மனிதன் வடிவங் கொண்ட மறையோன் றானும் போனுன்

௬௯ மறந்தா னினைவும் முயிரும் மன்ன னென்ன மறுகி
இறந்தான் கொல்லோ வரச னென்னே விடருற் றழிவான்
துறந்தாய்மகனே யுலகோ டெமையுமென்னத் துணையாம்
அறந்தா னிதுவோ வையா வரசற் கரசே யென்றாள்.

௭௰ மெய்யின்மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை யோம்பா திங்ஙன் றேம்பின்
வைய முழுதுந் துயரான் மறுகு முனிவன் னுடனம்
ஐயன் வரினும் வருமா லயரே லயரே லரசே. 1765

௭௧ என்றிறன் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகனுந்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
ஒன்றுந் தெரியா மம்ம ருள்ளத் தரசன் மெள்ள
வன்றிண் சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

௭௨ [1]வன்மா யக்கை கேசி வாக்கா லென்றன் னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா ளேனுங் கூனி மொழியாற்
றன்மா மகனுந் தானுந் தரணி பெறுமா றன்றி
யென்மா மகனைக் கானே கென்று ளெறும்பின் கதையாள்

(பிரதி) 1 வன்மா மாயக் கைகேசி,

எங பொன்னூர் வலயத் தோளான் கானூடு புகுத றவிரான்
என்னு ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேண்
முன்னு ளொருமா முனிவன் மொழிந்த சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான். 1768

எச வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்றே கரியோ டரிக ளுருவித் திரிவேன்
கையிற் சிலையுங் கணையு மிறுகக் கதமா வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.

எரு ஒருமா முனிவன் மனையோ டொளியொன் றிலதாய் நயனந்
திருமா மகவே துணையாய்த் தவமே புரிபோழ் திளின்வாய்
அருமா மைந்தன் புனல்கொண் டகல்வான் வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும் பூமீ தலறிப் புரள 1770

எசு புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகமென் றுலிமேற்
கைகட் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே யன்றி தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன் மனநொந் தவண்வந் தனனால்

எஎ கையுங் குடமுந் நெகிழக் கணையோ டுழல்வோற் காணு
மெய்யுந் தனுவு மனனும் வெறிதே கிடமேல் வீழா
ஐய நீதான் யாவ னந்தோ வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன் கேணீ யென்னப் புகல்வான்.

எஅ சேலா கியமா முதல்வன் றிருவுந் தியின்மா மலரின்
மேலா கியநான் முகனூர் வேதங் களின்மா முறையின்
பாலா கியயோ னிகளிற் பலவாம் வருணந் தருவான்
நாலா கியதாம் வருணந் தனின்மே லெமைநல் கினனால்.

எகூ இருகண் களுமின் றியாய்க்கு மெந்தைக் குமிங் கிவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதா யினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா வெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தெனவே. 1774

அ௦ உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவு முரைத்துப் புதல்வன்
விண்மீ தடைவான் றெழுதான் வருந்தே லெனவும் விளம்பென்
றெண்ணீர் மையினன் வானூ ரெதிர்கொண் டிடவே கினனால்.

௮௧ மைந்தன் வரவு நோக்கும் வளர்மா தவர்பான் மகவோ
டந்தண் புனல்கொண் டணுக வையா விதுபோ தளவாய்
வந்திங் கணுகா யென்னே வந்த தென்னே நொந்தேஞ்
சந்தங் கமழுந் தோளாய் தழுவிக் கொளவா வெனவே.

௮௨ ஐயா யானோ ரரச னயோத்தி நகரத் துள்ளேன்
மையார் களபந் துருவி மறைந்தே வதிந்தேன் றிருவாய்
பொய்யா வாய்மைப் புதல்வன் புனன்மொண் டிடுமோ தையின்மேற்
கையாற் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்

௮௩ வீட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
ஓட்டந் தெதிரா நீயா ரெனவுற் றதெலா முறையா
வாட்டந் தருநெஞ் சினனாய் நின்றான் வணங்கி வானோர்
ஈட்ட மெதிர்வந் திடவே யிறந்தே கினன்விண் ணிடையே

௮௪ அறுத்தாய் கணையா லெனவே யடியேன் றன்னை யைய
கறுத்தே யருளா தியானோ கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தா னில்லான் வனமொண் டிடுமோ தையினெய் தனனாற்
பொறுத்தே யருள்வா யென்னா விருதாள் சென்னி புனைந்தேன். 1779

௮௫ வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழியே போயிற் றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலு ளையா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றா பொன்று டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தேம் வந்தே மினியே.

௮௬ என்றென் றயருந் தவரை யிருதாள் வணங்கி யானே
இன்றும் புதல்வன் னினிநீ ரேவும் பணிசெய் திடுவேன்
ஒன்றுந் தளரே லையா வொழியு மிடரென் றிடலும்
வன்றிண் சிலையாய கேணமோ வென்று வொருசொல் வகுத்தார்.

௮௭ கண்ணுண் மணிபோன் மகவை யிழந்து முயிர்கா தலியா
உண்ண வெண்ணி யிருந்தா லுலகோ ரென்னென் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா னுடையா யடைவாய் படர்வா னெனவே.

௮௮ தாவா தொளிருங் குடையாய் தவறிங் கிதுநின் சரணங்
காவா யென்று யதனாற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றினையா
போவா யுதல்வா னென்னுப் பொன்றுட் டிடைபோ யினரால்,

௮௯ சிந்தை தளர்வுற் றயர்வுஞ் சிறிது மிலனா யின்சொல்
மைந்த னுளனென் றதனான் மகிழ்வோ டிவண்வந் தனனால்
அந்த முனிசொற் றமையு மண்ணல் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு மிறையுந் தவறா தென்றான். 1784

௯௰ *உரைசெய் பெருமை யுயர்குணத்தோ [1]ரோங்கல்
புரைசெய் மதகளிற்றான் பொற்கோயின் முன்னம்
முரச முழங்க முடிசூட்ட மொய்த்தாண்
டரச ரினிதிருந்த நல்லவையி னாயினான். 1785

௯௧ வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுந்த விடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தாழ்தகுரற் றானென்ன
சிந்தை தெளிந்தாய் தெளியெமக்கீ தென்றுரைத்தார்.

௯௨ வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பார்காப்பா னாயினான்
ஏந்துந் தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறைபோய்க் காடுறைவா னாயினான். 1787

௯௩ கொண்டாள்வர மிரண்டுங் கைகயர்கோன் கொம்பவட்குத்
தண்டாத செங்கோற் றசரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலே வனம்போகென் றொருப்படுத்தாள்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான். 1788

௯௪ வாரார் முலையாரு மற்றுள்ள மைந்தர்களும்
ஆராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரைசெவியுட்
சாராத முன்னந் தசரதனைப் போல்வீழ்ந்தார். 1789

௯௫ புண்ணுற்ற தீயிற் புகையுற் [2]றுயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகிற் றுடம்பெல்லாங்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டழுத பேரோசை.

௯௬ மாத ரருங்கலமு மங்கலமுஞ் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்பதைப்பத் தாம்பதைத்துப் பார்வீழ்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடிபோல்வார். 1791

(பிரதி) 1 னோங்கற். 2 றுரை பதைப்ப,

௯௭ ஆவா வரச னருளிலனே [1]யாமென்பார்
காவா வறத்தையினிக் கைவிடுவோம் [2]யாமென்பார்
தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந் தேங்கினார்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்வீழ்ந்தார். 1792

௯௮ கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

௯௯ சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றேன்றப் புணர்முலைமேற் பூண்டரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றாமழலை நங்கைமா ரேங்கினார். 1794

௧௦௦ ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவான் மன்னவனை மானவே. 1795

௧௦௧ நானீயு முய்கலா மென்றோதே நாயகனைக்
கானீயு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனீயு மல்லாற் கொடியார் பிறருளரே
மேனீயு மெல்லாம் வெறுநீரே யாயினார். 1796

௧௦௨ தேரு தறிவழிந்தா ரெங்குலப்பார் தேரோட
நீராகிச் சுண்ண நிறைந்த தெருவெல்லாம்
ஆறாகி யோடின கண்ணினீ ரருணெஞ்சங்
கூறாகி யோடாத வித்த னயே குற்றமே. 1797

௧௦௩ மண்செய்த பாவ முளதென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ மிதனிற் பெரிதென்பார்
புண்செய்தார் நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங்[3]கடலிற் பெரிதென்பார். 1798

௧௦௪ ஆளான் பரத னரசெல் பா ரையனினி
மீளா னமக்கு விதிகொடிதே காணென்பார்
கோளாகி வந்தவா கொற்ற முடியென்பார்
மாளாத நம்மின் மனம்வலியா ராரென்பார் 1799

(பிரதி) 1 யாமென்றுங. 2 யாமென்றுங். 3 கடலென்ப தாயினார்

௧௦௫ ஆதி யரச னருங்கை கயர்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா னுமென்பார்
சீதை மணவாளன் றன்னோடுந் தீக்கானம்
போது மதுவன்றேற் புகுது மெரியென்பார். 1800

௧௦௬ கையாளி லந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள்பொற் கோசலையென் றோதுவார் வெய்துயிர்ப்பார்
ஐயாவி ளங்கோவே யாற்றுதியோ நீயென்பார்
நெய்யார முலுற்ற துற்றுரந் நீணகரார். 1801

௧௦௭ தள்ளூறு வேறில்லாத் தன்மகற்குப் பார்கொள்வான்
எள்ளூறு தீக்கரும நேர்ந்தா ளிவளென்பார்
கள்ளூறு செவ்வாய்க் கணிகையருங் கைகேசி
உள்ளூறு காதலிலள் போலெலன் [1] றுள்ளழிந்தார் 1802

௧௦௮ நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ
வன்றி யுலகத்து ளாருயிரை வாழ்வாரைக
கொன்று களையக் குறித்த பொருளன்றோ
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார். 1803

௧௦௯ பெற்றுடைய மண்ணவளுக் கீய்ந்து பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறையும் யாரு முறையவே சின்னாளிற்
புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார். 1804

௧௧௦ என்னே நிருப னியற்கை யிருந்தவா
தன்னேரொன் றில்லாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பியற்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.

௧௧௧ கோதை வரிவிற் குமரற் கொடுத்தநில
மாதை யொருவர் புணர்வராம் வஞ்சித்த
பேதை சிறுவனையே பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியினுந் தீரா டிருவென்பார். 1806

௧௧௨ உந்தாது [2] நெய்வார்த் துதவாது சாலெறிய
நந்தா விளக்கி னடுங்குகின்ற நங்கைமார்
செந்தா மரைப்பெருங்கட் செவ்வி யருணோக்கம்
அந்தோ பிரிதுமோ வாவிதியே யோவென்பார். 1807

(பிரதி) 1 றுள்ளழிவார். 2 நெய்வந் துறையாது.

சொன்னேன் முன்னே யிவளென் றார மல்ல டுறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

௫௧ என்னைக் கண்டு மேகா வண்ண மிடையூ றுடையான்
உன்னைக் கண்டு மிலனோ வென்னா வுயாகோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் கண்ட துயரந்
தன்னைக் கண்டே தவிர்வா டளர்வா ணிலையிற் றளர்வான்

௫௨ மாற்றாள் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ளம்
ஆற்றா தயர்ந்தா னென்று மறிந்தா ளவளும் மனத்தைத்
தேற்றா நின்றாண் மகனைத் திரிவா னென்னா ளரசன்
தோற்றான் மெய்யென் றுலகஞ் சொல்லும் பழிக்குஞ் சோர்வாள்.

௫௩ தள்ளா நிலைசான் மென்மை தழுவா வகையா லெய்தின்
எள்ளா நிலைகூர் பெருமைக் கிழிவா பென்றா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மே னினியிவ் வுலகங்
கொள்ளா தன்றோ வென்றாள் கணவன் குறையக் குறைவாள்.

௫௪ போவா னொழியா னென்றாள் புதல்வன் றன்னைக்கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் தளர்வுற் றயர்வாள்
காவா யென்னாண் மகனைக் கணவன் புகழுக் கழிவாள்
ஆவா வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே. 1749

௫௫ உணர்வா னனையா னுரையா லுயர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமா வனமே போவா னேயா மென்னா
இணரார் தருதா ரரச னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான் றேன்றா றேன்றா யென்றான்.

௫௬ கண்ணா னீரா யுயிரு மொழுகக் கழியா நின்றேன்
எண்ணா னீரான் மறையோ ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணா னீராய் வந்த புனலை மகனே வினையேன்
உண்ணா னீரா யுதவி யுயர்கா னடையா யென்றான். 1751

௫௭ படைமாணரசைப் பலகான் மழுவா ளதனு லெறிவான்
மிடன்மாண்வலிதானனையான் வில்லோ டுமா வல்லாய்
உடையாமகுடம்புனையென்றுரையாவுடனேகொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

௫௮ கறுத்தா யுருவும் மனமுங் கண்ணுங் கையுஞ் செய்யாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன் புரமுன் றெரித்த போர்வில்
இறுத்தாய் தமியே னென்று மென்னை யிம்மூப் பிடையே
வெறுத்தா யினிநான் வாழேன் வேண்டேன் வேண்டேனென்றான்.

௫௯ பொன்னின் முன்னமொளிரும்பொன்னே புகழின்புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் றெளியே னல்லேன்
உன்னின் முன்னின் புகுவே னுயர்வா னினியானென்றான்.

௬௰ நெகுதற் கொத்த நெஞ்சி னேய்த்தாலே யாவி
உகுதற் கொத்த வுடலு முடையே னுன்போ லல்லேன்
தகுதற் கொத்த சனகன் தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணுற் போகக் காணே னென்றான்.

௬௧ எற்றே பகர்வே னினியா னென்னே யுன்னிற் பிரிய
வற்றே யுலக மெனினும் வானே வருந்தா [1]தெனினும்
பொற்றே ரரசே தமியேன புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே னென்றான்.

௬௨ அள்ளற் பள்ளப் புனல்சூ ழகனு னிலமும் மரசுங்
கொள்ளக் குறையா நிதியின் குவையுமுதலா வெவையுங்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் [2]னுயிரை மாய்க்கும்மாய்க்குமென்றான்

௬௩ ஒலியார் கடல்சூ ழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்றா ருன்னைப் போல்வா ருளரோ பொன்னே
வலியா ருடையா ரென்றான் மழுவா ளுடையான் வரவுஞ்
சலியா நிலையா னென்றாற் றவிர்வா ருளரோ வென்றான்

௬௪ கேட்டே யிருந்தே னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே னுகிலன் றேவன கனென்கண் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்டியான்
நாட்டே யுறைவே னென்றா னன்றெறன்றன்மையென்றான்

(பிரதி) 1 னெனினும். 2 னுயிரா லன்றி மறையே னென்றான்.

௬௫ மெய்யே தவமே செய்துன் மிடல்மார் பரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு நிலமா தென்னுந்திருவும்
உய்யா ருய்யார் கெடுவே னுன்னைப் பிரியில் வினையேன்
ஐயா கைகே சியைநே ரருளா கேளே யென்றான். 1760

௬௬ பூணு ரணியும் முடியும் பொன்னா சனமுங் குடையுஞ்
சேணுர் மார்புந் திருவும் தெரியக் காணக் கடவேன்
மாணு மாவற் கலையு மானின் றோலு மவைதான்
காணு தொழிந்தே னன்றாய்த் தன்றோ கன்றே யென்றான். 1761

௬௭ ஒன்றோ டொன்றொன் றெவ்வா வுரைதந் தாசன் னுயிருஞ்
சென்றோ நின்றா னென்னுந் தன்மை யெய்தித் தேய்ந்தான்
மென்றோல் மார்பின் முனிவன் வேந்தே யயரே லவனை
யின்றே யேகா வண்ணந் தகைவ னுலகோ டென்றான். 1762

௬௮ முனிவன் சொல்லு மளவின் முடியுங் கொல்லென் றரசன்
றனியின் றுழறன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனு லிவனுற் போகா தொழிவா னென்னு
மனிதன் வடிவங் கொண்ட மறையோன் றானும் போனான்

௬௯ மறந்தா னினைவும் முயிரும் மன்ன னென்ன மறுகி
இறந்தான் கொல்லோ வரச னென்னு விடருற் றழிவான்
துறந்தாய்மகனே யுலகோ டுமையுமென்னத் துணையாம்
அறந்தா னிதுவோ வையா வரசற் கரசே யென்றாள்.

௭௰ மெய்யின்மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை யோம்பா திங்ஙன் றேம்பின்
வைய முழுதுந் துயரான் மறுகு முனிவன் னுடனம்
ஐயன் வரினும் வருமா லயரே லயரே லரசே. 1765

௭௧ என்றெறன் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகனுந்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
ஒன்றுந் தெரியா மம்ம ருள்ளத் தரசன் மெள்ள
வன்றிண் சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

௭௨ [1]வன்மா யக்கை கேசி வாக்கா லென்றன் னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா ளேனுங் கூனி மொழியாற்
றன்மா மகனுந் தானுந் தரணி பெறுமா றன்றி
யென்மா மகனைக் கானே கென்றா ளெறும்பின் கதையாள்

(பிரதி) 1 வன்மா மாயக் கைகேசி,

௭௩ பொன்னூர் வலயத் தோளான் கானே புகுத றவிரான்
என்னு றுயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேண்
முன்னு ளொருமா முனிவன் மொழிந்த சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான். 1768

௭௪ வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்றே கரியோ டரிக ளுருவித் திரிவேன்
கையிற் சிலையுங் கணையு மிறுகக் கதமா வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.

௭௫ ஒருமா முனிவன் மனையோ டொளியொன் றிலதாய் நயனந்
திருமா மகவே துணையாய்த் தவமே புரிபோழ் திளின்வாய்
அருமா மைந்தன் புனல்கொண் டகல்வான் வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும் பூமீ தலறிப் புரள 1770

௭௬ புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகமென் றொலிமேற்
கைகட் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே யன்றீ தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன் மனநொந் தவண்வந் தனனால்

௭௭ கையுங் குடமுந் நெகிழக் கணையோ டுழல்வோற் காணா
மெய்யுந் தனுவு மனனும் வெறிதே கிடமேல் வீழா
ஐய நீதான் யாவ னந்தோ வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன் கேணீ யென்னப் புகல்வான்.

௭௮ சேலா கியமா முதல்வன் றிருவுந் தியின்மா மலரின்
மேலா கியநான் முகனூர் வேதங் களின்மா முறையின்
பாலா கியயோ னிகளிற் பலவாம் வருணந் தருவான்
நாலா கியதாம் வருணந் தனின்மே லெமைநல் கினனால்.

௭௯ இருகண் களுமின் றியாய்க்கு மெந்தைக் குமிங் கிவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதா யினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா வெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தெனவே. 1774

௮௰ உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவுமுரைத் துப்புதல்வன்
விண்மீ தடைவான் றெழுதான் வருந்தே லெனவும் விளம்பென்
றெண்ணீர் மையினான் வாளோ டெதிர்கொண் டிடவே கினனால்.

௮௧ மைந்தன் வரவு நோக்கும் வளர்மா தவர்பான் மகவோ
டந்தண் புனல்கொண் டணுக வையா விதுபோ தளவாய்
வந்திங் கணுகா யென்னே வந்த தென்னே நொந்தேஞ்
சந்தங் கமழுந் தோளாய் தழுவிக் கொள்வா யெனவே.

௮௨ ஐயா யானே ரரச னயோத்தி நகரத் துள்ளேன்
மையார் களபந் துருவி மறைந்தே வதிந்தேன் றிருவாய்
பொய்யா வாய்மைப் புதல்வன் புனன்மொண் டிடுமோ தையின்மேற்
கையாற் கணைசென் றதலாற் கண்ணீற் றெரியக் காணேன்

௮௩ வீட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
ஓட்டந் தெதிரா நீயா ரெனவுற் றதெலா முறையா
வாட்டந் தருநெஞ் சினனாய் நின்றான் வணங்கி வானோர்
ஈட்ட மெதிர்வந் திடவே யிறந்தே கினன்விண் ணிடையே

௮௪ அறுத்தாய் கணையா லெனவே யடியேன் றன்னை யைய
கறுத்தே யருளா தியானே கண்ணீற் கண்டே னல்லேன்
மறுத்தா னில்லான் வனமொண் டிடுமோ தையினெய் தனனாற்
பொறுத்தே யருள்வா யென்று விருதாள் சென்னி புனைந்தேன். 1779

௮௫ வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழியே போயிற் றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலு ளையா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றா பொன்று டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தேம் வந்தே மினியே.

௮௬ என்றென் றயருந் தவரை யிருதாள் வணங்கி யானே
இன்றும் புதல்வன் னினிநீ ரேவும் பணிசெய் திடுவேன்
ஒன்றுந் தளரே லையா வொழியு மிடரென் றிடலும்
வன்றிண் சிலையாய கேணமோ வென்று வொருசொல் வகுத்தார்.

௮௭ கண்ணுண் மணிபோன் மகவை யிழந்து முயிர்கா தலியா
உண்ண வெண்ணி யிருந்தா லுலகோ ரென்னென் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா னெனவே.

௮௮ தாவா தொளிருங் குடையாய் தவறீங் கிதுநின் சரணங்
காவா யென்று யதனாற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றினையா
போவா யகல்வா னென்றுப் பொன்றுட் டிடைபோ யினரால்,

௮௯. சிந்தை தளர்வுற் றயர்வுஞ் சிறிது மிலனா யின்சொல் கூடு
மைந்த னுளனென் றதனான் மகிழ்வோ டிவண்வந் தனனால்
அந்த முனிசொற் றமையு மண்ணல் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு மிறையுந் தவறா தென்றான். 1784

௯௰ *உரைசெய் பெருமை யுயர்குணத்தோ [1]ரோங்கல்
புரைசெய் மதகளிற்றான் பொற்கோயின் முன்னம்
முரச முழங்க முடிசூட்ட மொய்த்தாண்
டரச ரினிதிருந்த நல்லவையி னாயினான். 1785

௯௧ வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுந்த விடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தாழ்குதூற் றினென்ன
சிந்தை தெளிந்தாய் தெளியமக்கி தென்றுரைத்தார்.

௯௨ வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பார்காப்பா னாயினான்
ஏந்துந் தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறைபோய்க் காடுறைவா னாயினான். 1787

௯௩. கொண்டாள்வர மிரண்டுங் கைகயர்கோன் கொம்பவட்குத்
தண்டாத செங்கோற் றசரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலை வனம்போகென் றுருப்படுத்தான்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான். 1788

௯௪ வாரார் முலையாரு மற்றுள்ள மைந்தர்களும்
ஆராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரைசெவியுட்
சாராத முன்னந் தசரதனைப் போல்வீழ்ந்தார். 1789

௯௫ புண்ணுற்ற தீயிற் புகையுற் [2]றுயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகிற் றுடம்பெல்லாங்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டெழுத பேரோசை.

௯௬. மாத ருருங்கலமு மங்கலமுஞ் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்பதைப்பத் தாம்பதைத்துப் பார்வீழ்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடிபோல்வார். 1791

(பிரதி) 1 ரோங்கற். 2 றுரை பதைப்ப.

௯௭ ஆவா வரச னருளிலனே [1]யாமென்பார்
காவா வறத்தையினிக் கைவிடுவோம் [2]யாமென்பார்
தாவாத மன்னர் தலத்தலைவீழ்ந் தேங்கினார்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்வீழ்ந்தார். 1792

௯௮ கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

௯௯ சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்முலைமேற் பூண்டரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றாமழலை நங்கைமா ரேங்கினார். 1794

௧௦௦ ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவான் மன்னவனை மானவே. 1795

௧௦௧ நானீயு முய்கலா மென்னாதே நாயகனைக்
கானீயு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனீயு மல்லாற் கொடியார் பிறருளரே
மேனீயு மெல்லாம் வெறுநீரே யாயினார். 1796

௧௦௨ தேறா தறிவழிந்தா ரெங்குலப்பார் தேரோட
நீராகிச் சுண்ண நிறைந்த தெருவெல்லாம்
ஆறாகி யோடின கண்ணீ ரருநெஞ்சங்
கூறாகி யோடாத வித்த னயே குற்றமே. 1797

௧௦௩ மண்செய்த பாவ முளதென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ மிதனிற் பெரிதென்பார்
புண்செய்தார் நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங்[3]கடலிற் பெரிதென்பார். 1798

௧௦௪ ஆளான் பரத னரசெல் பா ரையனினி
மீளா னமக்கு விதிகொடிதே காணென்பார்
கோளாகி வந்தவா கொற்ற முடியென்பார்
மாளாத நம்மின் மனம்வலியா ராரென்பார் 1799

(பிரதி) 1 யாமென்றுங. 2 யாமென்றும். 3 கடலென்ப தாயினார்

கஂ0௫ ஆதி யரச னருங்கை கயர்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா ளுமென்பார்
சீதை மணவாளன் றன்னோடுந் தீக்கானம்
போது மதுவன்றேற் புகுது மெரியென்பார். 1800

கஂ0௬ கையாளி லந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உயயாள்பொற் கோசலையென் றேதுவார் வெய்துயிர்ப்பார்
ஐயாவி ளங்கோவே யாற்றுதியோ நீயென்பார்
நெய்யார முலுற்ற துற்றூரங் கீணகரார். 1801

கஂ0௭ தள்ளூறு வேறில்லாத் தன்மகற்குப் பார்கொள்வான்
எள்ளூறு தீக்கரும நேர்ந்தா ளிவளென்பார்
கள்ளூறு செவ்வாய்க் கணிகையருங் கைகேசி
உள்ளூறு காதலிலள் போலெலன் [1]றுள்ளழிந்தார் 1802

கஂ0௮ நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ
வன்றி யுலகத்து ளாருயிரை வாழ்வாரைக
கொன்று களையக் குறித்த பொருளன்றே
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார். 1803

கஂ0௯ பெற்றுடைய மண்ணவளுக் கீய்ந்து பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறையும் யாரு முறையவே சின்னாளிற்
புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார். 1804

கககஂ0 என்னே நிருப னியற்கை யிருந்தவா
தன்னேரொன் றில்லாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பியற்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.

கககக கோதை வரிவிற் குமரற் கொடுத்தநில
மாதை யொருவர் புணர்வராம் வஞ்சித்த
பேதை சிறுவனையே பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியினுந் தீரா டிருவென்பார். 1806

கககஉ உந்தாது [2]நெய்வார்த் தூதவாது காலெறிய
நந்தா விளக்கி னடுங்குகின்ற நங்கைமார்
செந்தா மரைப்பெருங்கட் செவ்வி யருணோக்கம்
அந்தோ பிரிதுமோ வாவிதியே யோவெனபார். 1807

(பிரதி) 1 றுள்ளழிவார். 2 நெய்வந் துறையாது.

ககங *கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தினாலே
மீட்டா ளளித்தாள் வனந்தம்முனை வெம்மை முற்றித்
தீட்டாத வேற்கட் சிறுதாயென யாவராலும்
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்தான்.

ககச கண்ணிற் கடைத்தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடருஞ் சுடர்தோன்ற மெய்நீர் விரிக்க
உண்ணிற்கு முயிர்ப்பெனு மூதை பிறக்க நின்ற
அண்ணற் பெரியோன் றனதாதியின் மூர்த்தி யொத்தான். 1809

ககரு சிங்கக் குருளைக்கிடு தீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் சிறுகுட் டனுக்கூட்ட விரும்பி னாளால்
நங்கைக் கறிவின் றிறநன்றிது நன்றி தென்னாக்
கங்கைக் கிறைவன் கமலக்கை புடைத்து நக்கான். 1810

ககசா சுற்றார் மணியின் வடிவாள்புடை தோன்ற வார்த்து
விற்றாங்கி வாளிப் பெரும்புட்டில் புறத்து வீக்கிப்
பற்றார்ந்த செம்பொற் கவசம்பனி மேரு வாங்கொர்
புற்றா மென வோங்கிய தோளொடு மார்பு போர்க்க.

ககஎ அடியிற் சுடர் பொற்கழ லார்கலி நாண வார்ப்பப்
பிடியிற் றடவுஞ் சிறுநாண் பெரும் பூச லோசை
இடியிற் றொடரக் கடலேழு மெடுத்து ஞாலம்
முடிவிற் குமிறும் மழை மும்மையின் மேன்முழங்க.

ககஅ வானு நிலனு முதலீறில் வரம்பில் பூதம்
மேனின்று கிழ்காறும் பிரிந்தன வீழ்வ போலத்
தானுந் தனதம்முனு மல்லது மும்மை ஞாலத்
தூனு முயிரு முடையார்க ளுளைந் தொதுங்க. 1813

கககூ புவிப்பாவை பரங்கெட போரில்வந் தோரை யெல்லாம்
அவிப்பானு மின்றே யவித்தாக்கையை யண்ட முற்றக்
குவிப்பானு மின்றே யெங்கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானு [1]நின்றே னிதுகாக்குனர் காமி னென்றான்.

கஉ0 விண்ணாட்டவர் விஞ்சையர் மண்ணவர் நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவொர் மூவ ராகி
மண்ணாட்டுநர் காக்குநர் நீக்குநர் வந்த போதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப்பே ருலகத்து ளென்னா.

(பிரதி) 1 மின்றே யிதுகாக்குனர்.

கஉக ஞாலக் கதிரோ னடுவுற்றதொர் வெம்மை காட்டி
ஞாலத்தவர் கோமக னங்கக ரத்து நாபபண்
மாலைச் சிகரத் தனிமந்தர மேரு முந்தை
வேலைத் திரிகின் றதுபோற் றிரிகின்ற வேலை. 1816

கஉஉ வேற்றுக் கொடியாண் முடிப்பித்த வினைக்கு விம்மித்
தேற்றத் தெளியா தயர்சிற் றவைபா லிருந்தான்
ஆற்றத் தனித் தம்பிதன் விற்புய லண்ட கோளங்
கீற்றெருத் துடையப்படு நாணுரு மேறு கேளா. 1817

கஉங வீருக்கிய பொற்கலன் வில்லிட வார மின்ன
மாருத் தனிச்சொற் றுளிமாரி வழங்க வந்தான்
காருக்க நிமிர்ந்து கனன்று புகைந்து [1]பொங்கும்
[2]ஆருக்கன லாற்றுமொ ரஞ்சன மேக மென்ன. 1818

கஉச மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்ற
பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கை யானை
என்னத்த னென்னீ யிமையோரை முனிந்தி லாதாய்
சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேது வென்றான். 1819

கஉரு மெய்யைச் சிதைவித்துநின் [3]மென்முறை நீத்தநெஞ்சின்
மையிற் கரியாளெதிர் நின்னையம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குநர் தேவ ரேனுந்
துய்யைச் சுடுவெங் கனலிற் சுடுவான் றுணிந்தேன்.

கஉசா வலக்கார் முகமென் கையதாகவவ் வானு ளோரும்
விலக்கா ரவர்வந்து விலக்கினு [4]மென்கை வாளி
இலக்கா யெரிவித் துலகேழினொ டேழு மன்னர்
குலக்கா வலுமின் றுனக்கியான் றரக்கோடி யென்றான்.

கஉஎ இளையா னிதுகூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
[5]விளையாவறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்.

கஉஅ நீட்டா னதுரைத்தது நித்திலந் தோன்ற நக்குச்
சேண்டான் றொடர்மாநில நின்னது தாதை செப்பப்
பூண்டாய் பகையா லிழந்தாய்வனம் போதி யென்றால்
யாண்டோ வடியேற் கினிசீற்ற மடுப்ப[6]தென்னா. 1823

(பிரதி) 1 பொங்கி. 2 மாருக. 3 மென்மை 4 மென்மை
5 உளையாவர மறநிட ஊழ்வழு வறற. 6 தென்றே.

௧௪௯ நின்கட் புரிவில்லவர் நீள்வனத் துன்னை நீக்கப்
புன்கட் பொறியாக்கை பொறுத்துயிர் போற்றுகேனோ
என்கட் புலமுன் னுனக்கீய்ந்துவைத் தில்லையென்ற
வன்கட் புலந்தாங்கிய மன்னவன் [1]போல வென்றான்.

௧௫௰ பின்குற்ற மன்னும் பயக்கு மரசென்றல் பேணேன்
முன்குற்ற மன்ன முடிகொள்கெனக் கொள்ள மூண்ட
என்குற்ற மன்றி விகல்மன்னவன் குற்றம் யாதோ
மின்குற்றொளிரும் வெயிலிற்கொண் டமைந்த வேலோய்

௧௫௧ நதியின் பிழையன்று நறும்பெய லின்மை மற்றப்
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்தா
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்.

௧௫௨ உதிக்கும்முலை யுள்ளூறு தீயென வூதை பொங்கக்
கொதிக்கும்மன மெங்ஙன மாறுமிச் சோளி மைத்தாள்
மதிக்கும்மதி யாமுதல் வானவர்க் கும் மற்றை
விதிக்கும் விதியாமென் விற்றொழில் காண்டியென்றான்

௧௫௩ ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மைய னின்றான்
வாய்தந் ததுகூறு தியோமறை தந்த நாவாய்
நீதந்த தன்றே [2]நெறியின்க ணிலாத தீன்ற
தாய்தந்தை [3]யென்று லவர்மேற் சலிக்கின்ற தென்னே.

௧௫௪ நற்றா தையுநீ தனிநா யகனீ வயிற்றிற்
பெற்றாயு நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்றா யிதுகாணுதி யின்றெனக் கைம்ம றித்தான்
முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை யன்னான். 1829

௧௫௫ வரதன் பகர்வான் வரம்பெற்றவ டானிவ் வையஞ்
சரதம் முடையா ளவளென்றனித் தாய ரன்றேற்
பரதன் பெறுவா னினியான் படைக்கின்ற செல்வம்
விரதம் மிதனல்லது வேறினி யாவ தென்றான். 1830

௧௫௬ செல்லுஞ்சொல் வல்லானெதிர் தம்பியுந் தேவர் சொல்லுஞ்
சொல்லுஞ் சுமந்தே னிருதோளெனச் சோம்பி யோக்கும்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலுங் கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டென்னையென்னை

(பிரதி) 1 காண்கொ ளென்றான். 2 நெறியோர் களனைத்து மீன்ற.
3 யரென் றிவர்மேற் சலிக்கின்ற தென்றான்.

நன்சொற் கடந்தான் டனைநாளும்வளர்த்தமேலோன்
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தன்றால்
என்சொற் கடந்தா லுனக்கியாதுள தாற்ற மென்றான்
தென்சொற்கடந்தான்வடசொற்கடற்கெல்லைகண்டான்

௧௫௮ ஆன்றான் பகர்வான் பகரையவோ ரைய மெங்குந்
தோன்றா நெறிவாழ் துணைத்தம்பியைப் போதொலைத்தோ
சான்றோர் புகழுந் தனித்தாதையை வாகைகொண்டோ
னீன்றாளை வென்றோ வினியிக்கதந் தீர்வ தென்றான்.

௧௫௯ சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கெனு வாங்கல்செல்லா
நாற்றெண் டிரைவேலையி னம்பிதனுணை யாலே
யேற்றந் தொடங்காக் கடலிற்றணி வெய்தி நின்றான்.

௧௬௰ அன்னான்றனை யையனு மாதியொ டந்த மென்னுந்
தன்னாலு மளப்பருந் தானுந்தன் பாக நின்ற
பொன்மா னுரியானுந் தழீஇயெனப் புல்லிப் பின்னைச்
சொன்மாண் புடையன்னைசுமித்திரை கோயில்புக்கான்.

௧௬௧ கண்டாண் மகனும் மகனுந்தன் கண்கள் போல்வார்
தண்டா வனஞ்செல் வதற்கே சமைந்தார்க டம்மைப்
உண்டாய துன்பக் கடற்கெல்லை யுணர்ந்தி லாதாள்.
புண்டாங்கு நெஞ்சத்தினளாய்ப் புரண்டான் பொடிமேல் விழுந்து

௧௬௨ சோர்வாளை யோடித்தொழுதேத்தினன் றுன்பமென்னும்
ஈர்வாளை வாங்கி மனந்தேற்றுதற் கேற்ற செய்வான்
போர்வா ளரசர்க்கிறை பொய்த்தன னுக்க கில்லேன்
கார்வா னெடுங்கா னிறைகண்டுபின் மீள்வ னென்றான்.

௧௬௩ கான்புக் கிடினுங் கடல்புக் கிடினுங் கலிப்பேர்
வான்புக் கிடினு மெனக்கன்னவை மாண யோத்தி
யான்புக்க தொக்கும் மெனையார் நலிகிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக் குணர்வுக் குலையற்க வென்றான். 1838

௧௬௪ தாயாற்றுகிலாடனை யாற்றுகின் றார்க டம்பாற்
றீயாற்று கின்றாரெனச் சிந்தையி னின்று தேற்ற
நோயாற்று கில்லா வுயிர்போல நுடங்கி டையார்
மாயாப் பழியாடர வற்கலை யேந்தி வந்தார். 1839

௧௪௫ கார்வான மொப்பான்றனைக் காண்டொறுங் காண்டொறும்போய்
நீராயுகக் கண்ணினு நெஞ்சழி கின்ற நீரார்
பேரா விடர்ப்பட் டயலாருறு பீழை கண்டுந்
தீரா மனத்தாடர வந்தது சீரை யென்றார். 1840

௧௪௬ வாணித்தில நன்னகை யார்களை வள்ள றம்பி
யாணர்த் திருநா டிழந்தீய்ந்தவ னீய்ந்த வெல்லாம்
பூணப் பிறந்தானு நின்றனது போர்வி லோடுங்
காணப் பிறந்தேனு நின்றேனவை காட்டு மென்றான்.

௧௪௭ அன்னா னவையினம் மடவாரவை யங்கை நல்க
இன்னா விடர்தீர்த் தெனையே கெனவெம் பிராட்டி
சொன்னா [1]லதுவே துணையாமெனத் தூய நங்கை
பொன்னா ரடிமேற் பணிந்தா னவளும் புகல்வாள். 1842

௧௪௮ ஆகாத தன்றா லுனக் கவ்வன மிவ்வ யோத்தி
மாகாதன் மன்னனிவன் வையக மீது வானிற்
போகாவிரு தாயரும் பூங்குழற் சீதை யென்றே
ஏகாயினி யிவ்வயி னிற்றலு மேத மென்றாள். 1843

௧௪௯ பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்செல் தம்பி
யென்னும் படியன்றி யடியாரி னேவல் செய்தி
மன்ன னகர்க் கீண்டிவன் வந்திடின்வா வதன்றேல்
முன்ன முடியென்றனள் பால்முலை சோர நின்றாள்.

௧௫௦ *இருவருந் தொழுதன ரிரண்டு கன்றுநீஇ
வெருவருந் தாயெனத் தாயும் விம்மினாள்
பொருவருங் குமரரும் போயி னார்புனை
திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே. 1845

௧௫௧ தான்புனை சீரையைத் தானுஞ் சாத்துமத்
தேன்புரை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புரை யிசையினாய் மறுக்க லாதுநீ
யான்புக றகையதோ ருறுதி கேளெனா. 1846

௧௫௨ அன்னைய ரனைவரு மாழி வேந்தனும்
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினார்
என்னையும் பிரிந்தன ரிடரு றுவகை
உன்னைநீ யென்பொருட் டுதவு வாயென்றான். 1847

(பிரதி) 1 எதுவே.

கருங ஆண்டகை யம்மொழி பகர வையனுந்
தூண்டரு திரள்புயந் துளங்கத் துண்ணெனா
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டுனக் கடியனேன் பிழைத்த [1]தியாதெனா 1848

கருச நீருள வெனிலுள மீனு நீலமும்
பாருள வெனிலுள பாரம் போற்புறு
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனிலுள மருளு நீயெனா. 1849

கருரு பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகள்
நைந்துயிர் நடுங்கவு [2]நடத்தி கானெனா
உய்ந்தன விருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னாயெனா. 1850

கருசு மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
ஆறினை தவிர்கென வைய வாணையிற்
கூறிய மொழியினுங் கொடிய தாமெனா. 1851

கருஎ செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தெனைக்
கைதுடைத் தேகவுங் கடவையோ வையா
[3]நெய்துடைத் தடையலார் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் மறங்கொள் வேலினாய். 1852

கருஅ உரைத்தபி னிராமனொன் றுரைக்க நேர்கலன்
வரைத்தடந் தோளினான் வதன நோக்கினான்
விரைத்தடந் தாமரைக் கண்ணின் மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நெடிது நிற்கின்றான். 1853

கருகூ அவ்வயி னரசவை நின்று மன்பினன்
எவ்வமி லருந்தவ முனிவ னெய்தினான்
செவ்விய குமரருஞ் செங்கை கூப்பினார்
கவ்வையின் பெருங்கடல் முனியுங் கால்வைத்தான்.

கசுo அன்னவர் முகத்தினோ டகத்தை நோக்குவான்
பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினான்
என்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தாற்
றன்னையு முணர்ந்தில னுணருந் தன்மையான். 1855

(பிரதி) 1 யாதெனா. 2 நடக்கின் றானெனா.
3 நெய்துடை யடையலார்.

௧௬௧ வாழ்வினை நுதலிய மங்கலத்து நாட்
டாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவன் றோன்றினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ. 1856

௧௬௨ வெவ்வினை யவடர விளைந்த தேயுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்ததோ [1]வேவ ரெண்ணமோ
செவ்விதென் றொருமுறை தெரியும் பின்னெனா. 1857

௧௬௩ விற்றடந் தாமரைச் செங்கை வீரனை
உற்றடைந் தையநீ யொருவி னாயகன்
கற்றடங் கானுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் தானையான் வாழ்கிலா னென்றான். 1858

௧௬௪ அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடனவ னிடரை நீக்குதல்
நின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலிற் பள்ளி நீங்கினான். 1859

௧௬௫ வெவ்வரம் பனையசம் பரனை வென்றநாட்
டெவ்வரம் பனையசொற் றீட்டினா டனக்
கவ்வரம் பொருதவே லரச னாய்கிலா
திவ்வரந் தருவெனென் றேன்ற துண்டென்றான். 1860

௧௬௬ ஏன்றவ னெந்தையிவ் வரத்தி னேவினாள்
ஈன்றவள் யானது சென்னி யேந்தினேன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றான்
தோன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினான். 1861

௧௬௭ என்றனன் முனிவனொன் றியம்ப நேர்ந்திலன்
நின்றன னெடுங்கணீர் நிலத்து [2]நீர்த்துகக்
குன்றன தோளவற் றொழுது கொற்றவன்
பொன்றிணி நெடுமதில் வாயில் போயினான். 1862

௧௬௮ சுற்றிய சீரையன் றொடருந் தம்பியன்
முற்றிய வுவகையின் முளரிப் போதினுங்
குற்றமில் முகத்தினன் கொள்கை கண்டவர்
உற்றதை யொருவகை யுணர்த்து வாமரோ. 1863

(பிரதி) 1 தெய்வ, 2 நீத்துகக்.

கசுக அய்யனைக் காண்டலு மணங்க ளூரெலாம்
மொய்யிளந் தளிர்களால் முளரி மேல்விழும்
மையலின் மதுகரங் கடியு மாறெனக்
கைகளின் மதர்நெடுங் கண்ணி னெற்றினூர். 1864

கஎ௦ தம்மையு முணர்ந்திலர் தணப்பி லன்பினல்
அம்மையி னிருவினை யகற்ற வோவன்றே
விம்மிய பேருயிர் மீண்டி லாமைகொல்
செம்மறன் ருதையிற் சிலவர் முந்தினூர். 1865

கஎக விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விம்மிமேல்
எழுந்தனர் சிலர்சில ரிழிக ணீரிடை
அழுந்தினர் சிலர்பதைத் தளக வல்லியங்
கொழுந்தன லுற்றெனத் துயரங் கூர்கின்றார். 1866

கஎஉ கரும்பன மொழியவர் கண் பனிக்கிலர்
வரம்பறு துயரினுன் மயங்கி யேகொலாம்
இரும்பன மனத்தவ ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார். 1867

கஎங நெக்கென வுயிருட னிலையி னின்றில
இக்கண மிக்கண மென்னுந் தன்மைய
புக்கன புறத்தன புண்ணிற் கண்மலர்
உக்கன நீர்வறந் துதிர வாரியே. 1868

கஎச இருகையிற் கரிநிக ரெண்ணி றந்தவர்
பெருகையிற் பெயர்த்தநந் தலையைப் பேணலர்
ஒருகையிற் கொண்டன ருருட்டு கின்றனர்
சுரிகையிற் கண்மலர் சூழ்ந்து நீக்கினூர். 1869

கஎரு சிந்தின வணியணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் மாலையிற் பரிந்த மேகலை
நந்தின நகையொளி விளக்க நங்கைமார்
சுந்தர வதனமு மதிக்குந் தோற்றவே. 1870

கஎசு அறுபதி னுயிர ரரசன் றேவியர்
மறுவறு கற்பினர் மலர்க்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயினர்
எறிதிரைக் கடலென விரங்கி யேங்குவார் 1871

௧௭௭ கன்னிநன் மயில்களுங் குயிற்க ணங்களும்
அன்னமுஞ் சிறையிழந் தவனி சேர்ந்தன
என்னவீழ்ந் துழன்றன ரிராம னல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார். 1872

௧௭௮ கிளையினு நரம்பினு நிரம்புங் கேளென
அளவிறந் துயரவிட் டரற்றுந் தன்மையாற்
றுளைபடு குழலினோ டியாழ்க்குந் தோற்றன
இளையவ ரமுதினு மினிய சொற்களே. 1873

௧௭௯ புகலிடங் கொடுவனம் போது மென்றுதம்
மகன்வயி னிரங்குறு மகளிர் வாய்களால்
அகன்மதி வெண்டுமனை யரத்த வாம்பல்கள்
பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே. 1874

௧௮௦ திடருடைக் குங்குமச் சேறுஞ் சாந்தமும்
இடையிடை வண்டலிட் டார மீர்த்தன
மிடைமுலைக் குவட்டொரீஇ மேக லைத்தடங்
கடலிடைப் பரந்ததக் கலுழி யாறரோ. 1875

௧௮௧ தண்டலைக் கோசலைத் தலைவன் மாதரைக்
கண்டன னிரவியங் கமல வாண்முகம்
விண்டலத் துறையுள வேந்தற் காயினும்
உண்டிட ருற்றபோ தென்னு ருதன. 1876

௧௮௨ தாயருங் கிளைஞருஞ் சார்ந்து ளோர்களுஞ்
சேயரு மணியருஞ் சிறந்த மாதருங்
காயெரி யுற்றன ரனைய கவ்வையர்
வாயினு முன்றிலு மறைய மொய்த்தனர். 1877

௧௮௩ இரைத்தன ரிரைத்தெழுந் தேங்கி யெங்கணுந்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல
உரைப்பதை யுணர்ந்திலன் றுழிப்ப தோர்கிலன்
வரைப்புயத் தண்ணறன் மனையை நோக்கினன். 1878

௧௮௪ நன்னெடு நளிர்முடி சூட நன்மணிப்
பன்னெடுந் தேரொடும் பவனி போனவன்
துன்னெடுஞ் சீரைகள் சுற்றி மீண்டுமப்
பொன்னெடுந் தெருவிடைப் போத நோக்கினார். 1879

கஅ௫ அந்தண ரருமறை முனிவர் காவலர்
நந்தலி னகருளோர் நாட்டு ளோர்கடஞ்
சிந்தையென் புகல்வது தேவ ருள்ளமும்
வெந்தனர் மேல்வரு முறுதி வேண்டலார். 1880

கஅ௬ அஞ்சன மேனியவ் வழகற் கெய்திய
வஞ்சனை கண்டபின் வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் [1]வலிதுயிர் நினைப்ப தென்சில
நஞ்சினும் வலியநம் நலமென் றார்சிலர். 1881

கஅ௭ மண்கொடு வருமென வழியிருந் தயாம்
எண்கொடு தொடர்வனத் தேகல் காணவே
பெண்கொடு வினைசெயப் பெற்ற நாட்டினிற்
கண்கொடு பிறத்தலுங் கடையென் றார்சிலர். 1882

கஅஅ வலங்கடிந் தேழைய ராய மன்னரை
நலங்கடிந் தறங்கெட நயத்தி யோவெனுக்
குலங்கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் றார்சிலர். 1883

கஅ௯ முழுவதே பிறந்துல குடைய மொய்ம்பினோன்
உழுவைசேர் கானகத் துறைவன் யானெனா
எழுவதே யெழுதல்கண் டிருப்ப தேயிருந்
தழுவதே யழகிதெம் மன்பென் றார்சிலர். 1884

க௯௦ திருவரை சுற்றிய சீரை யாடையன்
பெருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவ ளீன்ற கான்முளை
ஒருவனோ விவற்கிவ்வூ ருறவென் றார்சிலர். 1885

க௯க புழுக்கலின் வலியன பூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்துமென் றோடு வார்வழித்
தொழுக்கிய கலுழியாற் றிடை விழுந்துயர்
இழுக்கலி விழுக்கவீழ்ந் திடருற் றார்சிலர். 1886

க௯௨ பொன்னணி மணியணி மெய்யிற் போக்கினர்
மின்னென மின்னென விலக்கி மெய்விலைப்
பன்னிறத் துகிலெனப் பறித்து நீக்கினர்
சின்னநுண் டுகிலரை புனைகின் றார்சிலர். 1887

(பிரதி) 1 வலியரு

௧௧௩ நிறைமக வுடையவர் நெறிசெ லைம்பொறி
குறைமகன் குறையினுங் கொடுப்ப ராருயிர்
முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற
இறைமகன் றிருமன மிரும்பென் றார்சிலர். 1888

௧௧௪ †மானமே யனையதோர் கருணை மாண்பலால்
ஊனமே வேறிலா னுலகம் யாவையுங்
கானமே புகுமினிக் காதன் மைந்தனுந்
தானுமே யாளுங்கொ றறையென் றார்சிலர். 1889

௧௧௫ வாங்கிய மருங்குலார் வைத்த கொங்கையர்
பூங்கொடி யொதுங்குவ போலொ துங்கினார்
ஏங்கிய குரலின ரிணைந்த காந்தளிற்
றாங்கிய செங்கைதன் தலையின் மேலுளார் 1890

௧௧௬ தலைக்குவட் டயல்மதி தவழு மாளிகை
நிலைக்குவட் டிடையிடை நின்ற நங்கைமார்
முலைக்குவட் டிழிகணீ ராலி மொய்த்துக
மலைக்குவட் டகவுறு மயிலின் மாழ்கினார். 1891

௧௧௭ மஞ்சன வகிற்புகை வழங்கு மாளிகை
எஞ்சலில் சாளரத் திரங்கு மின்சொலார்
அஞ்சனக் கண்கணீ ரருவி சோர்தரப்
பஞ்சரத் திருந்தழுங் கிளியிற் பன்னினார். 1892

௧௧௮ நன்னெடுங் கண்களி னூன்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைக டலத்தின் வீழ்தலால்
அன்னெடுங் குமரர்மாட் டழுங்கி மாடமும்
பொன்னெடுங் கண்குழிந் தழுவ போன்றவே. 1893

௧௧௯ மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட முணர்ந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்கநின் றறிவினைச் சூறை யாடவே. 1894

௨௦௦ காமரங் கனிந்தெனக் கனிந்த [1]மென்மொழி
மாமடந் தையரெலா மறுகு சேர்தலாற்
றேமரு நறுங்குழற் றிருவி னீங்கிய
தாமரை யொத்ததத் தவள மாடமே. 1895

(பிரதி) 1 தம்மொழி.

உ0க மழைக்குலம் புரைகுழல் விரிந்து மண்ணுறக்
குழைக்குல முகத்தியர் குழாங்க ளேங்கின
இழைக்குலஞ் சிதறிட வேவுண் டோய்வுறும்
உழைக்குல முழைப்பன வொத்த பாரெலாம். 1896

உ0உ கொடியடங் கினமணிக் குன்றங் கோபுர
முடியடங் கினமுழக் கிழந்த பல்லியம்
படியடங் கலுமுயிர் பசுங்கண் மாரியாற்
பொடியடங் கினமதிட் புறத்து வீதியே. 1897

உ0ங அட்டிலு மிழந்தன புகைய கிற்புகை
கொட்டிலு மிழந்தன நிறைந்த பால்கிளி
வட்டிலு மிழந்தன மகளிர் சால்மணித்
தொட்டிலு மிழந்தன மகவுஞ் சோர்ந்தவே. 1898

உ0ச ஒளிதுறந் தனமுக முயிர்து றந்தெனத்
துளிதுறந் தனமுகிற் றெருகையுந் தூயவாம்
தளிதுறந் தனபலி தானம் யானையுங்
களிதுறந் தனமலர்க் கள்ளுண் வண்டினே. 1899

உ0ரு நிழல்பிரிந் தனகுடை நெடுங்க ணேழையர்
குழல்பிரிந் தனமலர் குமரர் தாளிணை
கழல்பிரிந் தனசினக் காமன் வாளியும்
அழல்பிரிந் தனதுணை பிரிந்த வன்னமே. 1900

உ0சு தாரொலி நீத்தன புரவி தண்ணுமை
வாரொலி நீத்தன மழையின் விம்முறுந்
தேரொலி நீத்தன தெருவுந் தெண்டிரை
நீரொலி நீத்தமு நீத்த போலவே. 1901

உ0எ முழவெழு மொலியில முறையின் யாழ்நரம்
பெழவெழு மொலியில விமைப்பில் கண்ணினர்
விழவெழு மொலியில வேறு மொன்றில
அழவெழு மொலியெழு மரச வீதியே. 1902

உ0அ தெள்ளொலிச் சிலம்புகள் சிலம்பு பொன்மனை
நள்ளொலித் திலநளிர் கலையு மன்னவே
புள்ளொலித் திலபுனற் பொழிலு மன்னவே
கள்ளொலித் திலமலர் களிறு மன்னவே. 1903

௨௦௯ செய்மறந் தனபுனல் சிவந்த வாய்ச்சியர்
கைமறந் தனவருங் குழவி காந்தெரி
நெய்மறந் தனநெறி யறிஞர் யாவரும்
மெய்மறந் தனரொலி மறந்த வேதமே. 1904

௨௧௦ ஆடின ரழுதன ரமுத வேழிசை
பாடின ரழுதனர் பரிந்த கோதையர்
ஊடின ரழுதன ருயிரி னன்பரைக்
கூடின ரழுதனர் குழாங்கு ழாங்கொடே. 1905

௨௧௧ நீட்டில களிறுகை நீரி னீரின்வாய்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையும்
ஊட்டில கறவைநைந் துருகிச் சோர்ந்தவே. 1906

௨௧௨ மாந்தர்த மொய்ம்பினின் மகளிர் கொங்கையாம்
ஏந்திள நீர்களும் வெறுமை யெய்தின
சாந்தயர் சடையவாந் தார்பெய் குஞ்சியின்
கூந்தலின் வறுமைய மலரின் கூலமே. 1907

௨௧௩ *ஓடை நல்லணி முனிந்தன வுயர்களி றுச்சி
சூடை நல்லணி முனிந்தன தொடர்மனை கொடியின்
ஆடை நல்லணி முனிந்தன வம்பொன்செ [1]யிஞ்சி
பேடை நல்லணி முனிந்தன [2]மென்னடைப் புறவம்.

௨௧௪ திக்கு நோக்கிய தீவினைப் பயமிது சிந்தை
நெக்கு நோக்கிய நல்வினைப் பயமென நேராப்
பக்க நோக்கலாப் பருவர லின்பமென் றிரண்டும்
ஒக்க நோக்கிய யோகரு மருந்துய ருழந்தார். 1909

௨௧௫ ஓவ னல்லுணர் வுயிர்ப்பினோ டுடல்பதைத் துலைய
மேவு தொல்லழ கெழில்கெட விம்மனோய் விம்மத்
தாவி லைம்பொறி மறுகுறத் தசரத னென்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம். 1910

௨௧௬ உயங்கி யந்நக ருலைவுற வொருங்குழைச் சுற்ற
மயங்கி யேங்கினர் வயின்வயின் வரம்பிலர் தொடர
இயங்கு பல்லுயிர்க் கோருயி ரெனநின்ற விராமன்
தயங்கு பூண்முலைச் சானகி யிருந்துழிச் சார்ந்தான்.

(பிரதி) 1 யன்னம், 2 வெள்ளிடைப் பிறக்கம்.

உகஎ அழுது தாயரொ டந்தணர் முனிவரோ டரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொருமப்
பழுதில் சீரையி னுடையினன் வரும்படி பார்த்தாள்
எழுதுபாவையன் னாண்மனத் துணுக்கமொடெழுந்தாள்.

உகஅ எழுந்த மங்கையை மாமியர் தழுவின ரேந்திப்
பொழிந்த வெண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் புலம்பி
அழிந்த சிந்தையன் னாண்மதி யின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினாள் வள்ளலை நோக்கி. 1913

உகக *பொன்னை யுற்றபொ லங்கழ லோய்புகழ்
மன்னை யுற்றதுண் டோவினை யன்றுயர்
என்னை யுற்றதி யம்பென் றியம்பினாண்
மின்னை யுற்றந டுக்கத்து மேனியாள். 1914

உஉ0 பொருவி லெம்பி புவிபுரப் பான்புகழ்
இருவ ராணையு மேந்தின னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்கடங் கண்டுநான்
வருவ னீண்டு வருந்தலை நீயென்றான். 1915

உஉக நாய கன்வன நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுட விம்முவாள். 1916

உஉஉ துறந்து போமென்று சொற்றசொற் றேறுமே
உறைந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்தி றம்புமென் றய்யன யோத்தியிற்
பிறந்த பின்பும் பிரியல ளாயினாள். 1917

உஉங அன்ன தன்மைய ளன்னையுந் தாதையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை யென்னை யிருத்தியென் றாயென்றாள்
உன்ன வுன்ன வுயிருமி ழாநின்றாள். 1918

உஉச வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்
தல்ல ரக்கி னுருக்கழற் காட்டதர்க்
கல்ல ரக்குங் கடுமைய வல்லவின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான். 1919

௨௨௫ பரிவி கந்தம னத்தொரு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு [1]மென்பதி யாண்டைய தீண்டுமின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காவென்றாள். 1920

௨௨௬ அண்ண லன்னசொற் கேட்டன னன்றியும்
உண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடற் கைவிட [2]நேர்கிலன்
எண்ணு கின்றன னென்செயற் பாற்றென்றான். 1921

௨௨௭ அனைய வேலை யகன்மனை யெய்தியப்
புனையுஞ் சீரை துணிந்து புனைந்தனள்
நினைவின் வள்ளல்பின் வந்தய னின்றனள்
பனையி னீள்கரம் பற்றிய கையினாள். 1922

௨௨௮ ஏழை தன்செயல் கண்டபின் யாவரும்
வீழ மண்ணிடை வீழ்ந்தனர் வீய்ந்திலர்
வாழு நாளுள வென்றபின் மாள்வரோ
ஊழி பேரினு முய்குவ ருய்குவார். 1923

௨௨௯ தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடியர்
ஆய [3]மன்னிய வன்பின ரென்றிவர்
தீயின் மூழ்கின ரொத்தனர் சேவகன்
றூய தையலை நோக்கினன் சொல்லுவான். 1924

௨௩௦ முல்லை யுங்கடன் முத்துமெ திர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விளை வெண்ணுவாய்
அல்லை போத வமைந்தனை யாதலின்
எல்லை தீர்ந்த விடர்தரு வாயென்றான். 1825

௨௩௧ கொற்ற வன்னது கூறலுங் கோகிலஞ்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள். 1926

௨௩௨ பிறிதொர் மாற்றம் பெருந்தகை பேசலன்
மறுகி வீழ்ந்தழு மைந்தரு மாதருஞ்
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்
நெறிபெ ருமை யரிதென நீங்குவான். 1927

(பிரதி) 1 என்பன யாண்டைய வீண்டுமின். 2 நோக்கினன்.
3 மன்னவ ரன்பின.

உ௩௩ சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செல
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்றது ணர்த்தவு மொண்ணுமோ. 1928

உ௩௪ ஆரும் பின்ன ரழுதவ லித்திலர்
சோருஞ் சிந்தையர் யாவருஞ் சூழ்ந்தனர்
வீரன் முன்வன மேவுது யாமெனப்
போரொன் றொல்லொலி கைம்மிகப் போயினார். 1929

உ௩௫ தாதை வாசல் குறுகினன் சார்தலுங்
கோதை வேலவன் றுயரைக் கும்பிடா
ஆதி மன்னனை யாற்றுமி னீரென்றான்
மாத ராரும் விழுந்து மயங்கினார். 1930

உ௩௬ வாழ்த்தி னார்தம் மகனை மருகியை
ஏத்தி னாரிளை யோனை வழுத்தினார்
காத்து நல்குமின் றெய்வதங் காளென்றார்
நாத்த ழும்ப வரற்றி நடுங்குவார். 1931

உ௩௭ அன்ன தாய ரரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழா
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினான். 1932

௪. நகர் நீங்குபடலம் முற்றும்.

ரு. தைலமாட்டு படலம்

க ஏவிய குரிசில்பின் யாரு மேகினார்
மாவிய றனைய மன்ன னீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர் தெய்வ மாநகர்
ஓவிய [1]மொழிந்தன வுயிரி லாமையால். 1933

உ கைகணீர் பரந்துகா றொடரக் கண்ணுகும்
வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச் சேறலால்
உய்யவே முலகுமொன் றுன நீருழல்
தெய்வமீ னொத்ததச் செம்பொற் றேரரோ. 1934

(பிரதி) 1 மொததன.

௩ மீன்புகழ் பெறவெயி லொதுங்க மேதியோ
டான்புகக் கதிரவ னத்தம் புக்கனன்
கான்புகக் காண்கிலே னென்று கல்லதர்
தான்புக முடுகின னென்னுந் தன்மையான். 1935

௪ பகுத்தவான் மதிகொடு பதுமத் தண்ணலே
வகுத்தவா னுதலியர் வதன ராசிபோல்
உகுத்தகண் ணீரென வொளிவு நீங்கின
முகிழ்த்தமு கிழுந்தன முளரி யீட்டமே. 1936

௫ அந்தியின் வெயிலொளி யழிய வான்கம்
நந்தலில் கைகயன் பயந்த நங்கைதன்
மந்தரை யுரையெனுங் கடுவின் வட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே. 1937

௬ பரந்துமீ னரும்பிய பசலை வானகம்
அரந்தையின் முனிவர னறைந்த சாபத்தால்
நிரந்தர மிமைப்பிலா நெடுங்க ணீண்டிய
புரந்தர னுருவெனப் பொலிந்த தெங்குமே. 1938

௭ திருநகர்க் கோசனை யிரண்டு சென்றொரு
விரைசெறி சோலையை [1]விரைவி னெய்தினார்
இரதமின் றிழிந்துபி னிராம னின்றுணை
உரைசெறி முனிவரோ டுறையுங் காலையே. 1939

௮ வட்டமே யோசனை வளைவிற் றுய்நடு
எட்டனை யிடவுமோ ரிடமி லாவகை
புட்டகு சோலையின் புறத்துப் போர்த்தன
விட்டது குரிசிலை விடாத சேனையே. 1940

௯ குயின்றன குலமணி நதியின் கூலத்திற்
பயின்றுயர் வாலுகப் பரப்பிற் பைம்புலின்
வயின்றொறும் வயின்றொறும் வைகி னாரொன்றும்
அயின்றிலர் துயின்றில ரழுது விம்மினார். 1941

௧௦ *வாவிவிரி தாமரையின் மாமலரின் வாசக்
காவிவிரி நாண்மலர் முகிழ்த்தனைய கண்ணார்
ஆவிவிரி பானுரையி னுடையணை யாக
நாவிவிரி கூழையிள நவ்வியர் துயின்றார். 1942

(பிரதி) 1 விரவி னெய்தினார்.

கக பெரும்பகல் வருந்தினர் பிறங்குமுலை தெங்கின்
குரும்பைகள் பொருஞ்செவிலி மங்கையர் குறங்கில்
அரும்பனைய கொங்கையயி லம்பனைய வுண்கட்
கரும்பனைய செஞ்சொனவில் கன்னியர் துயின்றார்.

கஉ பூவக நிறைந்தபுளி னத்திடர்க டோறும்
மாவகிரி லுண்கணின் மடப்பிடியின் வைகுஞ்
சேவக மணைந்தசிறு கட்கரிக ளென்னத்
தூவக லிலங்குமயின் மன்னர்கடு யின்றார். 1944

கங தகவுமிகு தவமுமிவை தழுவவுயிர் கொழுநர்
முகமுமவ ரருளுநுகர் கிலர்துயர முறுவார்
அகவுமிள மயில்களுயி ரலசியன வனையார்
மகவுமுலை வருடவிள மகளிர்கடு யின்றார். 1945

கச மாகமணி வேதிகையின் மாதவிசெய் பந்தற்
கேகய நெடுங்குல மெனச்சிலர் கிடந்தார்
பூவகன மூடுபடு கர்ப்புளின முன்றிற்
றோகையிள வன்னநிரை யிற்சிலர் துயின்றார். 1946

கரு சம்பக நறும்பொழி லியற்றருண வஞ்சிக்
கொம்பழ கொசிந்தன வெனச்சிலர் குழைந்தார்
வம்பளவு கொங்கையொடும் வாலுகம் வளர்க்கும்
அம்பவள வல்லிக ளெனச்சில ரயர்ந்தார். 1947

கசு குங்கும மலைக்குளிர் பனிக்குமிழி யென்னத்
துங்கமுலை யிற்றுக ளுறச்சிலர் துயின்றார்
அங்கையணை யிற்பொலி வழுங்கமுக மெல்லாம்
பங்கய முகிழ்ப்பன வெனச்சிலர் படிந்தார். 1948

கஎ தொடுத்த புருவச்சிலை துவண்டனர் துயின்றார்
அடுத்தகலி டைச்சில ரழிந்தன ரயர்ந்தார்
உடுத்ததுகில் சுற்றொரு தலைச்சில ருறைந்தார்
படுத்ததளி ரிற்சிலர் பதைத்தனர் திகைத்தார். 1949

கஅ ஏனையரு மின்னண முறங்கின ருறங்கா
மானவனு மந்திரி சுமந்திரனை வாவென்
றூனமில் பெருங்குண மொருங்குடைய வன்னான்
மேனிகழ்வ துண்டவுரை கேளென விளம்பும். 1950

௧௯ *பூண்டபே ரன்பி னுரைப் போக்குவ தரிது போக்கா
தீண்டுநின் றேகல் பொல்லா தெந்தைநீ யிரத மின்னே
தூண்டினை மீள நோக்கிச் சுவடுதேர்ந் தென்னை யங்கே
மீண்டனை யென்ன மீள்வா ரிதுநின்னை வேண்டிற் றென்றான்.

௨௦ செவ்விய குரிசில் கூறத் தேர்வல்லா னுணர்த்து வானவ்
வெவ்விய தாயிற் றீய விதியினின் மேலன் போலாம்
இவ்வயி னின்னை நோக்கி யின்னுயிர் நீக்கென் றேகி
அவ்வயி னனைய காண்டற் கமைந்தன னடியனென்றான்

௨௧ *தேவியு மிளவலுந் தொடரச் செல்வனைப்
பூவுயர் கானகம் புகவுய்த் தேனென்கோ
கோவினை யுடன்கொடு குறுகி னேனென்கோ
யாவது கூறுகே னிரும்பி னெஞ்சினேன். 1953

௨௨ தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்
தேரிடை வந்தனன் றீதி லேனென்கோ. 1954

௨௩ வன்புலக் கன்மன மதியி னெஞ்சினேன்
என்புலப் புறவுடைந் திரங்கு மன்னன்பால்
உன்புலக் குரியசொ லுணர்த்திச் செல்கென்றோ
தென்புலக் கோமகன் றூதிற் செல்கென்றோ. 1955

௨௪ நாற்றிசை மாந்தரு நகர மாக்களுந்
தேற்றினர் கொணர்வருன் சிறுவன் றன்னையென்
றாற்றின வரசனை யைய வெய்யவெங்
கூற்றன சொல்லினாற் கொலைசெய் வேன்கொலோ.

௨௫ அங்கிமேல் வேள்விசெய் தரிதி னீபெற்ற
சிங்கவே றகன்றதென் றுணர்த்தச் செல்கென்றோ
எங்கள்கோ மகற்கினி யெண்ணிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால். 1957

௨௬ முடிவுற வின்னண மொழிந்த பின்னரும்
அடியுற வணங்கினன் றழுங்கும் பையரா
இடியுறத் துவளுவ தென்னு மின்னலன்
படியுறப் புரண்டன னின்ன பன்னினான். 1958

௨௭ தடக்கையா லெடுத்தவற் றழுவிக் கண்ணினீர்
துடைத்துவே றிருத்திவைந் தினைய சொல்லினான்
அடக்குமைம் பொறியொடுங் கரணத் தப்புறங்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகுங் காட்சியான். 1959

௨௮ பிறத்தலொன் றுற்றபின் பெறுவ யாவையுந்
திறத்துளி யுணர்வதோர் செம்மை யுள்ளத்தாய்
புறத்துறு பெரும்பழி பொதுவன் றெய்தவும்
அறத்தினை மறத்தியோ வவல முண்டெனா. 1960

௨௯ முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம்வந் துறுமெனி லினிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனிற் றுறக்கற் பாலதோ. 1961

௩௦ நிறப்பெரும் படைக்கல நிறத்தி னெய்தவும்
மறப்பயன் துறப்பன வளவை யன்றரோ
இறப்பெனுந் திருவெலா மிழப்ப வெய்தினுந்
துறப்பில ரறமெனல் சூர ராதலே. 1962

௩௧ கான்புகச் சேறலி லருமை காண்டியால்
வான்பிறங் இயபுகழ் மன்னர் தொல்குலம்
யான்பிறந் தறத்தினின் றிழிக்கிற் றென்பவோ
வூன்றுறந் துயிர்குடித் தொளிரும் வேலினாய். 1963

௩௨ வினைக்கரு மெய்ம்மையின் வனத்து விட்டனன்
மனக்கரும் புதல்வனை [1]யென்றல் மன்னவன்
தனக்கருந் தவமிது தலைக்கொண் டேகலே
எனக்கருந் தவமிதற் கிரங்க லெந்தைநீ. 1964

௩௩ முந்தினை முனிவனைக் குறுகி முற்றுமென்
வந்தனை முதலிய மாற்றங் கூறினை
எந்தையை யவனொடு மெய்தி யீண்டென
சிந்தையை யுணர்த்துதி யென்று செப்புவாய். 1965

௩௪ முனிவனை யெம்பியை முறையி னின்றரும்
புனிதவே தியர்க்குமே லுறைபுத் தேளிர்க்கும்
இனியன விழைத்தியென் றியம்பி யெற்பிரி
தனிமையுந் தீர்த்தியென் றுணர்த்தி தன்மையோய்.

(பிரதி) 1 யென்ன.

௬௫ வெவ்விய தன்மையால் விளைந்த தீண்டொரு
கவ்வையென் றிறையுந்தன் கருத்தி [1]னேகலா
தெவ்வரு ளன்வயின் வைத்த தென்சொலால்
அவ்வரு ளவ்வயி னருளு கென்றியால். 1967

௬௬ வேண்டின னிவ்வர மென்று மேலவன்
ஈண்டரு ளெம்பிரா னிறுவி யேபினைப்
பூண்டமா தவனொடுங் கோயில் புக்கினி
தாண்டகை வேந்தனை யவல மாற்றிப்பின். 1968

௬௭ ஏழிரண் டாண்டுநீத் தீண்டு வந்துனைத்
தாழ்குவன் றிருவடித் தலத்தி லீண்டெனாச்
சூழிவெங் கடகளிற் றரசர் சொல்லிப்பின்
வாழிமா தவன்சொலால் மனந்தெ ருட்டுவாய். 1969

௬௮ முறைமையா லெற்பயந் தெடுத்த மூவர்க்குங்
குறைவிலா நன்னெடு வணக்கங் கூறிப்பின்
இறைமகன் றுயர்துடைத் திருத்தி யாண்டென்றான்.
மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகுவான். 1970

௬௯ ஆள்வினை யாணையிற் றிறம்ப லன்றெனாத்
தாள்முதல் வணங்கிய தனித்திண் டேர்வலான்
ஊழ்வினை வருந்துயிர் நிலையென் றுன்னுவான்
வாள்விழி நோக்கியை வணங்கி நோக்கினான். 1971

௭௦ அன்னவள் கூறுவா ளரசற் கத்தையர்க்
கென்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையுங் கிளியும் போற்றுகென்
றென்னுடை யெங்கையர்க் குணர்த்து வாயென்றாள்.

௭௧ தேர்வலா னவவுரை கேட்டுத் தீங்குறு
ஆர்வலா ருயிர்துறப் பெளிதன் றேயெனாப்
போர்வலான் றடுக்கவும் பொருமி விம்மினான்
சோர்விலா ளறிவிலாத் துயர்க்குச் சோர்கின்றான். 1973

௭௨ ஆறினன் போற்சிறி தவல மவ்வழி
வேறிலா வன்பினாய் விடைதந் தீகென
ஏறுசே வகற்றொழு திளைய மைந்தனைக்
கூறுவ தியாதென வினைய கூறினான். 1974

(பிரதி) 1 னேக்கலா.

௪௩ உரைசெய்தெங் கோமகற் குதவி யோதிய
தரைசெறி செல்வத்தைத் தவிர மற்றொரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யினை
அரசனென் றின்னமொன் றுணர்த்த லாகுமோ. 1975

௪௪ கானகம் பற்றியிப் புதல்வன் காயுணப்
போனகம் பற்றுமப் பொருவில் மன்னவற்
கூனகம் பற்றிய வுயிரோ டின்னம்போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்றான். 1976

௪௫ மின்னுடன் பிறந்தவாட் பரத வேந்தற்கென்
மன்னுடன் பிறந்திலன் மண்கொண் டாள்கின்றான்
தன்னுடன் பிறந்திலன் றம்பி முன்பலென்
என்னுடன் பிறந்தயான் வலிய னன்றியால். 1977

௪௬ ஆரிய னிளவலை நோக்கி யையநீ
சீரிய வல்லன செப்ப லென்றபின்
பாரிடை வணங்கினன் பரியு நெஞ்சினன்
தேரிடை வித்தகன் சேறல் மேயினான். 1978

௪௭ கூட்டினன் றேர்ப்பொறி கூட்டிக் [1]கொண்முறை
பூட்டினன் புரவியப் புரவி போநெறி
காட்டினன் காட்டித்தன் கல்வி மாட்சியால்
ஓட்டின னொருவரு முணர்வு றாமலே. 1979

௪௮ தையறன் கற்புந்தன் றகவுந் தம்பியும்
மையறு கருணையு முணர்வும் வாய்மையுஞ்
செய்யகை வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயினா னல்லி னாப்பணே. 1980

௪௯ *பொய்வினைக் குதவும் வாழ்க்கை யரக்கரைப் பொருந்தி யன்னார்
செய்வினைக் குதவி நட்பாற் செல்பவர்த் தடுப்பதொக்கும்
மைவிளக் கியதே யன்ன மயங்கிரு டுரக்க வானங்
கைவிளக் கெடுத்த தென்ன வந்தது கடவுட் டிங்கள்.

௫0 மருமத்துத் தன்னை யூன்று மாக்கொடும் பாவந் தீர்க்கும்
உருமொத்த சிலையி னோரை யொருப்படுத் துதவி நின்ற
கருமத்தின் வினையை யெண்ணிக் களிப்பொடுங் காண வந்த
தருமத்தின் வதன மென்னப் பொலிந்தது தனிவெண் டிங்கள்.

(பிரதி) 1 கோன்முறை.

௫௧ காம்புயர் கானஞ் செல்லுங் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலுஞ் செங்கழு நீருஞ் சேரைப்
பாம்பின தலைய வாகிப் பரந்தன குவிந்து சோர்ந்த
ஆம்பலு மென்ற போது போதெலா மலர்வ துண்டோ.

௫௨ அஞ்சனக் குன்ற மன்ன வழகனு மழகன் றன்மேல்
எஞ்சலி லன்பு போர்த்த விளவலு மிந்து வென்பான்
வெஞ்சிலைப் புருவத் தாடன் மெல்லடிக் கேற்ப வெண்ணூற்
பஞ்சிடைப் படுத்தா லன்ன வெண்ணிலாப் பரப்பப் போனார்.

௫௩ சிறுவிலை மருங்குல் கொங்கை யிர்திரை செல்வ மென்னுஞ்
செறியிருங் கூந்த னங்கை சீறடி நீர்க்கொப் பூழின்
றறியன தொடர்ந்து சென்று நடந்தன ணவையு ணீங்கி
உறுவலி யன்பி னூங்கொன் றுண்டென வுணாவ துண்டோ.

௫௪ பரிதிவா னவனுங் கீழ்பாற் பருவரை பற்று முன்னந்
திருவினா யகனுந் தென்பால் யோசனை யிரண்டு சென்றான்
அருவிபாய் கண்ணும் புண்ணா லழிகின்ற மனமுந் தானுந்
துரகமான் றேரிற் போனான் செய்தது சொல்ல லுற்றாம்.

௫௫ கடிகையோரிரண்டுமூன்றிற்கடிமதிளயோத்திகண்டான்
அடியினை தொழுதா னாதி முனிவனை யவனு முற்ற
படியெலாங் கேட்டா னெஞ்சிற் பருவர லுழந்தான முன்னம்
முடிவெலா முணர்ந்தா னந்தோ முடிந்தனன் மன்ன னென்றான்.

௫௬ நின்றுயர் பழியை யஞ்சி நேர்ந்திலன் றடுக்க வள்ளல்
ஏன்றுநா னுரைத்த தேகொன் றருமத்துக் குறுதி யார்ப்பான்
ஒன்றவ ருளரோ மேலை விதியினை யென்று விம்மாப்
பொன்றிணி மன்னன் கோயில் சுமந்திர னோடும் புக்கான்

௫௭ தேர்கொண்டு வள்ளல் வந்தா னென்றுதஞ் சிந்தை யுந்த
ஊர்கொண்ட திங்க ளென்ன மன்னனை யுழையர் சுற்றக்
கார்கொண்ட மேனி யானைக் கண்டிலர் கண்ணில் வற்றா
நீர்கொண்ட நெடுந்தேர்ப் பாக னிலைகண்டே நிலையிற் றீர்ந்தார்.

௫௮ இரதம்வந் துற்ற தென்றாங் கியாவரு மியம்ப லோடும்
வரதன்வந் துற்றா னென்ன மன்னனு மயக்கந் தீர்ந்தான்
புரைதபு கமல நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான் வீரன்வந் தானோ வென்றான்

௫௯ இல்லையென் றுரைக்க லாற்று தேங்கிமா முனிவ னின்றான்
வல்லவன் முகமே நம்பி வந்தில [1]னென்ற மாற்றஞ்
சொல்லலு மரசன்சோர்ந்தான் [2]றுயர்பெறு முனிவனுனிவ்
அல்லல்காண்கில்லேனென்று வாங்குநின் றகலப்போனான்

௬௦ நாயகன் பின்னு நற்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணிய னோவென் றுரைத்தலுந் தேர்வ லானும்
வேயுயர் கானிற் றானுந் தம்பியு மிதிலைப் பொன்னும்
[3]போயினனென்று னென்ற போழ்தத்தே யாவிபோனான்

௬௧ இந்திரன் முதல்வ ரான கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர னனைய தாங்கோர் விமானத்தின் றலையிற் றாங்கி
அந்தன னெந்தை தந்தை யெனமனங் களித்து வள்ளல்
உந்தியா னுலகத் தும்பர்ப் போக்கிலா வுலக்த் துய்த்தார்

௬௨ உயிர்ப்பிலன் றுடிப்புமில்ல னென்றுணர்ந் துருந்திண்டி
அயிர்த்தனர் நோக்கி மன்னற் காருயி ரின்மை தேறி
மயிற்குல மனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்
வெயிற்சுடுங்கோடை தன்னி லென்பிலா வுயிரின்வேவாள்

௬௩ இருந்தவந் தனையோ டெல்லா மீன்றவன் றன்னை யீன்ற
பெருந்தவஞ் செய்த நங்கை கணவனைப் பிரிந்து தெய்வ
மருந்திழந் தவரின் விம்மி மணிபிரி யராவின் மாந்தி
அருந்துணை பிரிந்தவன்றிற் பெடையென வரற்ற லுற்றாள்

௬௪ *வடித்தாழ் கூந்தற் கைகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை பேரா வரமின்னே
முடித்தா யன்றே மந்திர மென்றாண் முகில்வாய்மின்
துடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றாள்.

௬௫ நோயும் மன்றே நோன்கதிர் வாள்வே லிவையன்றி
மாயுஞ் செல்வ மக்களி ளுக மறமன்னன்
காயும் புள்ளிக் கற்றட நாகங் கனிவாழை
வேயும் போன்று னென்று மயங்கி விழுகின்றாள். 1997

௬௬ தானே தானே தஞ்சமி லாதான் றகவில்லான்
போனான் போனா னெங்களை நீத்திப் பொழுதென்னா
வானீர் சுண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே யென்ன மெய்தடு மாறி மெலிகின்றாள். 1998

(பிரதி) 1 னென்னு. 2 றுயருறு. 3 போயினரென்று.

௯௭ [1]ஒன்றா நன்றா டுய்க்குவ ரிந்நாட் டுயிர்காப்பார்
அன்றே மக்கட் பெற்றுயிர் வாழ்வா னறமுண்டோ
இன்றே வந்தீண் டஞ்சலென் றானென் மகனென்பான்
கொன்றா னென்றே தந்தையை யென்றாள் குலைகின்றாள்.

௯௮ அருந்தே ரானைச் சம்பர னைப்பண் டமர்வென்றாய்
இருந்தார் வானோர் நின்னரு ளாலே யினிதன்னோர்
விருந்தா கின்றா யென்றனள் வேழத் தரசொன்றைப்
பெருந்தா ளன்பிற் றாழ்பிடி யென்னப் பிரிவுற்றாள். 2000

வேள்விச்செல்வந் துய்த்திகொல் மெய்ம்மைத் துணையின்மைச்
௯௯ சூழிச் செல்வந் துய்த்திகொ றோலா மனுநூலால்
வாழிச் செல்வந் துய்த்திகொல் மன்னென் றனள்வானோர்
கேள்விச் செல்வந் துய்க்க வயிற்றோர் கிரிதந்தாள். 2001

௱ *ஆழி வேந்தன் பெருந்தேவி யணைய பன்னி யழுதரற்றத்
தோழி யன்ன சுமித்திரையுந் துளங்கி யேங்கி யுயிர்சோர
ஊழி பேர்வ தெனக்கோயி லுலையும் வேலை மற்றொழிந்த
மாழையொண்கட்டேவியருமயிலின்குழாத்தின்வந்திரைத்தார்

துஞ்சினானைத் தம்முயிரின் றுணையைக் கண்டார் துணுக்கத்தார்
நஞ்சு நுகர்ந்தா ரென்றுடல நடுங்கா நின்றா ரென்றாலும்
அஞ்சி யழுங்கி விழுந்திலரா லன்பிற் றறுகண் பிறிதுண்டோ
வஞ்ச மில்லா மனத்தானை வானிற்றொடர்வான் மனம்வலித்தார்

அளங்கொ ளளக்க ரிரும்பரப்பி லண்ட ருலகி னப்புறத்தில்
விளங்கு மாதர் கற்பினா ரிவரி னினியா ரென்கின்றார்
களங்க நீத்த முகத்தினார் கான வெள்ளங் கால்கோப்பத்
துளங்க லில்லாத் தனிக்குன்றிற் றொக்க மயிலிற் சூழ்ந்திருந்தார்.

கைத்தசொல்லா லுயிரிழந்தும் புதல்வற்பிரிந்தும் கடையோட
மெய்த்த வேந்தன் றிருவுடம்பைப் பிரியார் பற்றி விட்டிலரால்
பித்த மயக்கிற் சுறவெறியும் பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயிற் றாமும் போவா ரொக்கின்றார். 2005

௱௪ மாத ரார்க ளறுபதினா யிரர்தம் முள்ளம் வலித்திருப்பக்
கோதில் குணத்துக் கோசலையு மிளைய மாதுங் குழைந்தேங்கச்
சோதிமணித்தேர்ச்சுமந்திரன்சென்றரசன்றன்மை சொலவந்த
வேத முனிவன் விதிசெய்த வினையை நோக்கி விம்முவான்.

(பிரதி) 1 ஒன்றே.

௭௫ †வந்த முனிவன் வரங்கொடுத்து மகனை நீத்த வன்கண்மை
எந்தைதீர்ந்தானென வுள்ளத் தெண்ணியெண்ணியிரங்குவான்
உந்து கடலிற் பெருங்கலமொன் றுடையாநிற்பத் தனிநாய்கன்
நைந்துநீங்கச் செயலோரா மீகா மனைப்போ னலிவுற்றான்.

௭௬ செய்தற் குரிய செயற்குரிய சிறுவ ரவரண் டையரல்லர்
எய்தக் கடவ பொருளெய்தா ரிகலா ரென்ன வியலென்று
மையற் கொடியாண் மகனீண்டு வந்தால் முடித்து மற்றென்னைத்
தையற் கடலிற் கிடந்தவனைத் தயிலக் கடலின் றலையுய்த்தான்.

௭௭ தேவி மாரை யிவற்குரிமை செய்யு நாளிற் செந்தீயில்
ஆவிபோக்கீ ரெனநீக்கி யரிவை மார்க ளிருவரையுந்
தாவில் கோயிற் றலையிருத்தித் தண்டார்ப் பரதற் கொண்டணாசென்
றேவி னான்மன் னவனாணை யெழுது முடங்கல் கொடுத்தவரை.

௭௮ போனா ரவருங் கேகயர்கோன் பொன்மா நகரம் புகவெய்த
ஆனா வறிவி னருந்தவனு மறமார் பள்ளி [1]யதுசேர்ந்தான்
சேனா பதியிற் சுமந்திரனை செயற்பாற் குரிய செய்கென்றான்
மேனாஞ் சொன்ன மாந்தர்க்கு விளைந்த பரிசு விளம்புவாம்.

௭௯ மீனார் வேலை முரசியம்ப விண்ணோ ரேத்த மண் ணிறைஞ்சத்
தூநீரொளிவாள் புடையிலங்கச் சுடர்த்தேரேறித் தோன்றினான்
வானே புக்கா னரும்புதல்வன் மக்க ளகன்றார் வருமளவும்
யானே காப்ப னிவ்வுலகை யென்பான் போல விரிகதிரோன்.

௮0 வருந்தாவண்ணம் வருந்தினார் மறந்தார் தம்மைவள்ள லுமாங்
கிருந்தானென்றே யிருந்தார்களெல்லா மெழுந்தா ரருளிருக்கும்
பெருந்தா மரைக்கட் கருமுகிலைப் பெயர்ந்தார் காணார் வெய்துயிர்த்தார்
பொருந்தாநயனம்பொருந்திமைப்பொன்றச்சூழ்ந்தவெனப்புரண்டார்

௮௧ எட்டுத்திசையு மோடுவாரெழுவார்விழுவா ரீடர்க்கடலுள்
விட்டு நீத்தா னமையென்பார்வெய்ய னையன் வினையென்பார்
ஓட்டுப் படர்ந்த தண்டகமிவ் வுலகத் துளதன் றோவுணர்வைச்
சுட்டுச்சோரா தாற்றுமோ தொடர்துந்தேரின் சுவடென்பார்

௮௨ தேரின் சுவடு நோக்குவார் திருமா நகரின் மிசைத்திரிய
ஊருந் திகிரிக் குறியொற்றா யுணர்ந்தா ரெல்லா முயிர்வந்தார்
ஆரு மஞ்ச லய்யன்போ யயோத்தி யடைந்தா னெனவசனிக்
காருங் கடலு மொருவழிக் கொண் டார்த்த தென்னக் கடித்தார்த்தார்.

(பிரதி) 1 யறை சேர்ந்தான்.

மானவரவின்வாய்த்தீயின் வளைவான்றுளைவர் ளெயிற்றின்வழி
யான கடுவுக் கருமருந்தா மருந்து மமுதம் பெற்றுய்ந்து 2015
போனபொழுதிற்புகுந்தவுயிர்போர்த்தாரோத்தார்பொருவரிய
வேளின்மதனன்மதனழித்தான் மீண்டானென்னவாண்டையார்

௮௪ ஆறு செல்லச் செல்லத்தே ராளி கண்டா ராயப்பால்
வேறு சென்ற நெறிகாணார் விம்மு கின்ற வுவகையராய்
மாறி யுலகம் வகுத்தநாள் வரம்பு கடந்து மண்முழுதும்
ஏறி யொடுங்கு மெறிகடல்போ லெழின்மா நகர மெய்தினார்.

புக்காரரசன்பொன்னுலகிற்போனானென்னும்பொருள்கேட்டார்
உக்கார் நெஞ்ச முயிருகுத்தா ருற்ற தெம்மா லுரைப்பரிதால்
தக்கான் போனான்வனமென்னுந்தகையுமுணர்ந்தார்மிகையாவீ
அக்கா லத்தேயழியுமோ வறுதியென்றுன் றுளதானல். 2017

௮௬ மன்னற் கல்லார் வனம் புகுந்த மைந்தற் கல்லர் வாங்கரிய
இன்னற்சிறையி லிடைப்பட்டா ரிருந்தார் நின்ற வருந்தவனும்
உன்னற் கரிய பழியஞ்சி யன்றே வொழிந்த தியானென்று
பன்னற் கரிய பலநெறியும் பகர்ந்து பதைப்பை விலக்கினான்.

௮௭ வெள்ளத் திடைவாழ் வடவனலை யஞ்சி வேலை கடவாத
பள்ளக் கடலின் முனிபணியாற் பையு ணகரம் பதைப்படங்க
வள்ளற் றுதை பணியினார் வானோர் தவத்தால் வயங்கிருளில்
நள்ளிற் போன வரிசிலைக்கை நம்பி செய்கை நடத்துவாம்.2019

௫. தைலமாட்டு படலம் முற்றும்.

---

௬. கங்கைப் படலம்.

௧ *வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதோ ரழியாவழ குடையான். 2020

௨. அளியன்னதொ ரறல்பன்னிய குழலாள்கட லமுதின்
தளியன்னதொர் மொழியாணிறை தவமன்னதொர் பொறையாள்
வெளியன்னதொ ரிடையாளொடும் விடையன்னதொர் நடையான்
களி யன்னமு மடவன்னமு முடனாடுவ கண்டான். 2021

௧௧ பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி னோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார். 2030

௧௨ எதிர்கொண் டேத்தின ரின்னிசை பாடினர்
வெதிர்கொள் கோலின ராடினர் வீரனைக்
கதிர்கொ டாமரைக் கண்ணனைக் கண்ணினால்
மதுர வாரி யமுதென மாந்துவார். 2031

௧௩ மனையி னீங்கிய மக்களை வைகலும்
நினையு நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்
அனையர் வந்துற வாண்டெதிர்ந் தார்கள்போல்
இனிய மாதவப் பள்ளிகொண் டேகினார். 2032

௧௪ பொழியுங் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்மலர் சூட்டினர்
அழிவி லன்பெனு மாரமிர் தூட்டினர்
வழியின் வந்த வருத்தம் வருந்தவே. 2033

௧௫ காயுங் கானிற் கிழங்குங் கனிகளுந்
தூய தேடிக் கொணர்ந்தனந் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடிமுத்
தீயு மோம்பினை செய்யமு தென்றனர். 2034

௧௬ மங்கை யர்க்கு விளக்கன்ன மானையுஞ்
செங்கை பற்றினன் றேவருந் துன்புறப்
பங்கயத் தயன் பண்டுதன் பாதநீர்
அங்கை யிற்றந்த கங்கையி னாடினான். 2035

௧௭ கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரு பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீக்கின னுய்ந்தனன் யானென்றாள். 2036

௧௮ வெங்க ணாகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காணநின் றாடின் றான்வயிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான். 2037

௧௯ தள்ளு நீர்க்குறை கங்கைத் தரங்கத்தால்
வள்ளி நுண்ணிடை மாமல ராளொடும்
வெள்ளி வெண்ணிறப் பாற்கடன் மேலைநாட்
பள்ளி நீங்கிய பான்மையிற் றோன்றினான். 2038

௨௦ வஞ்சி நாணி வணங்க மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க வடிக்குமென்
கஞ்ச நீரி லொளிப்பக் கயலுகப்
பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினாள். 2039

௨௧ தேவர் தேவன் செறிசடைக் கற்றையுட்
கோவை மாலை யெருக்கொடு கொன்றையின்
பூவு நாறலள் பூங்குழற் கற்றையின்
நாவி நாண்மலர் கங்கையு நாறினாள். 2040

௨௨ நுரைக்கொ ழுந்தெழுந் தோடி நுடங்கலால்
நரைத்த கூந்தல ணங்கைமந் தாகினி
உரைத்த சீதை தனிமைகண் டுன்னுவாள்
திரைக்கை நீட்டிச் செவிலியி னாட்டினாள். 2041

௨௩ மங்கை வார்குழற் கற்றை மழைக்குலந்
தங்கி நீரிடைத் தாழ்ந்து குழைப்பன
கங்கை யாற்றுட னாடுங் கரியவள்
பொங்கு நீர்ச்சுழி போயது போன்றதே. 2042

௨௪ சுழிபட் டோங்கிய தூங்கொலி யாற்றுத்தன்
விழியிற் சேலுகள் வானிற வெள்ளத்து
முழுகித் தோன்றுகின் றாண்முன்னை யாற்கடல்
அழுவத் தன்றெழு [1]வாளென லாயினாள். 2043

௨௫ செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகந் தீர்த்து விளங்கினாள்
அய்யன் மேனி யெலாமளைந் தாளினி
வைய மாநர கத்திடை வைகுமோ. 2044

௨௬ துறைந றும்புன லாடிச் சுருதியோர்
உறையு ளெய்தி யுணர்வுடைத் தம்பியோ
டிறைவற் கைதொழு தேந்தெரி யோம்பிப்பின்
அறிஞர் காதற் கமைவிருந் [2]தாயினான். 2045

(பிரதி) 1. வாளென வாயினாள். 2. தாகினான்.

௨௭ வருந்தித் தான்றர வந்த வமுதையும்
அருந்து நீரென் றமரரை யூட்டினான்
விருந்து மெல்லட குண்டு விரும்பினான்
திருந்தி னார்வயிற் செய்வன தேயுமோ. 2046

௬. கங்கைப் படலம் முற்றும்.

௭. குகப் படலம்

௧ ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனென நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான். 2047

௨ துடிய னாயினன் றோற்செருப் பார்த்தபேர்
அடிய னற்செறிந் தன்ன நிறத்தினான்
நெடிய தானை நெருக்கலி னீர்முகில்
இடியி னோடெழுந் தாலன்ன வீட்டினான். 2048

கொம்பூ தித்துடி கொட்டு முறைமயன்
பம்பை பம்பும் படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாயக னழிகவுட்
டும்பி யீட்டம் புரைகிளை சுற்றினான். 2049

௪ காழ மிட்ட குறங்கினன் கங்கையின்
ஆழ மிட்ட நெடுமையி னாரைத்
தாழ விட்டசெந் தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினான். 2050

௫ பற்றொடுத் தன பல்கு லவடியன்
கற்றொடுத் தன போலுங் கழலினான்
அற்றொடுத் தன்ன குஞ்சியி னளியின்
நெற்றொ டுத்து நெரிந்த புருவத்தான். 2051

பெண்ணை [1]வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வார்மயிர் வார்ந்துயர் முன்கையான்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லினான்
எண்ணெ யுண்ட விருள்புரை மேனியான். 2052

(பிரதி) 1 வன்செறுப்.

எ கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளினான்
நச்ச ராவு நடுக்குறு நோக்கினான்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ரம்புரை கின்ற மருங்கினான். 2053

அ ஊற்ற மென்னற லூனொடு மீனுகர்
நாற்ற மெய்ய னணைகயின் முகத்தினான்
சீற்ற மன்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமிருங் குரலினான். 2054

கூ [1]சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான். 2055

கῦ சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
சுற்ற நீத்த மனத்தின னன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினான். 2056

கக கூவா முன்ன மிளையோன் குறுகிநீ
யாவா யாரென வன்பி னிறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேடுவ னாயடி யேனென்றான். 2057

கஉ *நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானு முள்ளந் தூயவன் றாயி னல்லன்
எற்றுநீர்க் கங்கை [2]நாவாய்க் கிறைகுக னொருவ னென்றான்.

கங அண்ணலும் விரும்பி யென்பா லழைத்தி நீயவனை யென்னப்
பண்ணவன் வருக வென்றான் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் கனிந்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி [3]வளைத்துவாய் புதைத்து நின்றான்

கச இருத்தியீண் டென்ன லோடு மிருந்திலன் னெல்லை நீத்த
அருத்தியன் றேனு மீனு மமுதினுக் கமைந்த வாகத்
திருத்தினன் கொணர்ந்தே னென்கொ றிருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 2060

(பிரதி) 1 சிருங்க வேரி மெனத்திரைக். 2 நாவா யிறையவ.
3 வளைந்து.

கரு அரியதா முவப்ப வுள்ளத் தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றா லமுதினுஞ் சீர்த்த தன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திர மெம்மனோர்க்கும்
உரியன வினிதி னாமு முண்டன மன்றோ வென்றான். 2061

கசு சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை யேறுது நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந் தினிது னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ் சாருதி விடிய லென்றான். 2062

கஎ கார்குலா நிறத்தான் கூறக் [1]காதல னுணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ வுன்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேனா னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னாண்டு மீண்டு [3]செய்வனா னடிமை யென்றான்.

கஅ கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்னுங் கருணையின் மலர்ந்த கண்ணான்
யாதினு மினிய நம்பி யிருத்தியீண் டெம்மோ டென்றான்.

ககூ †அடிதொழு துவகை தூண்டி வழைத்தன னாழி யன்ன
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சுற்ற வேவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கின னம்பு பற்றி
இடியுடை மேக மென்ன விணையடி யேத்தி நின்றான்.

உ0 திருநகர் தீர்ந்த தன்மை மானவ தெரித்தி யென்னப்
பருவர றம்பி கூறப் பரிந்தவன் பையு ளெய்தி
இருகணீ ரருவி சோரக் குகனுமாண் டிருந்தா னன்னே
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலு மென்னா.

உக விரியிருட் பகையை யோட்டித் திசைகளை வென்று மேனின்
றொருதனித் திகிரி யுந்தி யுயர்புகழ் நிறுவி நாளும்
இருநிலத் தேவர்க்கு முள்ளத் திருந்தன னென்ன வீய்ந்த
செருவலி வீர னென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான்

உஉ மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி யியற்றி வைசல்
வேலைவா யமுத னாளும் வீரனும் விரிந்த நாணற்
பாலவாம் பாரின் பாயல் வைகினன் பருவி லேந்திக்
காலைகாண் பளவுந் தம்பி யிமைத்திலன் காத்து நின்றான்.

(பா-ம்) 1 காதலி. 2. செய்குவ.

உ௩ †வெயில்விரி கனகக் குன்றத் தெழில்கெட விலகு சோதிக்
கயில்விரி வயிரப் பைம்பூண் கடுந்திறன் மடங்க லன்னான்
துயிலெனு மணங்கு வந்து தோன்றலு மவளை நாமே
எயிலுடை யயோத்திமூதூ ரெய்துநா ளெய்துகென்றான்

உ௪ †மறக்கவா ரிளைய வீர னுணையை மறுக்கல் செல்லா
உறக்கமா மாது மண்ண லுபையபங் கயங்கள் போற்றித்
துறக்கமா மென்ன லாய தூய்மதி எயோத்தி யெய்தி
இறுக்குநா ளெந்தை பாதம் மெய்நுவ னென்னப் போனாள்.

உ௫ †மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசி னீங்காப்
பொற்றொடி யோடு மையன் றுயிறுரு புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச முகி யிருகணீ ரருவி சோர
உற்றவோ வியமதென்ன வொருசிலை யதனி னின்றான்.

தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் றொடுத்த வில்லன்
உ௬ வெம்பிவெந் துயியா னின்ற நெஞ்சினன் விழித்தகண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் றன்மை நோக்கி
அம்பியின் றலைவன் கண்ணீ ரருவிசோர்குன்றி னின்றான்.

உ௭ துறக்கமே முதல வான தூயன யாவை யேனும்
மறக்குமா னினைய லம்மா வரம்பிலாத் தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னைநாளிறந்தான் பின்னாட்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்

செஞ்செவே சேற்றிற் றோன்றுந் தாமரை தேரிற் றோன்றும்
உ௮ வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேறோர்
அஞ்சன நாயி றன்ன வையனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே.

உ௯ நாண்முதற் கமைந்த யாவு நயந்தன னியற்றி நாமத்
தோண்முதற்றொடர்ந்தவில்லான் மறையவர் தொடரப் போனான்
ஆண்முதற் கமைந்த கேள்வி யன்பனை நோக்கி யையன்
கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி விரைவினென்றான்

௩௦ *ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணான்
ஆவியு நைகின்றா னடியிணை பிரிகில்லான்
காவியின் மலர்காயாக் கடன்மழை யனையானைத்
தேவியொ டடிதாழாச் சிந்தனை யுரைசெய்தான். 2076

௩௧ பொய்ம்முறை யலராலெம் புகலிடம் வனமேயாம்
கொய்ம்முறை யுறுதாரீர் குறையிலம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குது மடியோமை
இம்முறை யுறவென்னா வினிதிரு நெடிதெம்மூர். 2077

௩௨ தேனுள தினையுண்டாற் றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயோ முயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையுநீ யினிதிரு நாடெம்பால். 2078

௩௩ தோலுள துகில்போலுஞ் சுகமுள தொடர்மஞ்சம்
போலுள பரண்வைகப் புரையுள கடிதோடுங்
காலுள சிலைபூணுங் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்.

௩௪ ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியோமால்
உய்குது மடியேமெங் குடிவிடை யொருநாணீ
வைகுதி ரெனின்மேலும் வாழ்விலை பெரிதென்பான்.

௩௫ அண்ணலு மதுகேளா வகநிறை' யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமிப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான். 2081

௩௬ சிந்தனை யுணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தன னெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லா மருளுதிர் விடையென்னா
இந்துவி னுதலாளோ [1]டிளவலொ டினிதேறா. 2082

௩௭ விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானும்
முடுகின னெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றார்
இடருறு மறையோரு மெரியுறு மெழுகானார். 2083

௩௮ பாலுடை மொழியாளும் பகலவ னனையானுஞ்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிய நெடுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் செனறது கடிதம்மா. 2083

(பிரதி) 1 டிளவலு மினிதேறா.

௩௯ சாந்தணி புளினத்தின் றடமுலை யுயர் கங்கை
காந்தின மணிமின்னக் கடிகமழ் கமலத்திற்
சேந்தொளி விரியுந்தெண் டிரையெனு மிமிர்கையால்
ஏந்தின னொருதானே யேற்றின னினிதிப்பால். 3986

௪௦ அத்திசை யுற்றைய னன்பனை முகநோக்கிச்
சித்திர கூடத்தின் சென்னெறி புகலென்னப்
பத்தியி னுயிரீயும் பரிவின னடிதாழா
உத்தம நாயேனுன் கூறுவ துளதென்றான். 2086

௪௧ நெறியிடு நெறிவல்லே னேடின வழுவாமல்
நறியன கனிகாயு நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னொடிவரை யளவும்மைப்
பிறியல னுடனேகப் பெறுகுவ [1]னெனினாயேன். 2087

௪௨ தீயன வகையாவுந் திசைதிசைச் செலநூறித்
தூயன வுறைகானந் துருவினன் வரவல்லேன்
மேயன பொருணாடித் தருகுவன் வினைமுற்றும்
ஏயின செயல்வல்லே னிருளினு நெறிசெல்வேன். 2088

௪௩ கல்லுவன் மலையேனுங் கவலையின் முதல்யாவுஞ்
செல்லுவ னெறிதூரஞ் செறிபுன றரவல்லேன்
வில்லினு முளனென்றும் வெருவல னிருபோதும்
மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேனால். 2089

௪௪ திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
டொருவல னிருபோது முறைகுவ னுளராணார்
மருவல ரெனின்முன்னே மாள்குவ னழிகல்லேன்
பொருவரு மணிமார்பா போதுவ னுடனென்றான். 2090

௪௫ அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லிவணின்கே ணளிர்கட லுலகெல்லாம்
உன்னுடை யதுநானுன் னுரிமையி லுளனென்றான்.

௪௬ துன்புள [2]தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புள [3]மொருநால்வோ முடிவுள தெனவுன்னா
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானோம். 2092

(பிரதி) 1 னினிநாயேன். 2 தெனிலொன்றே சுகமெனி லதுவன்றே. 3. தொருநால்வோ,

௪௭ படருற வுளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு தகையாயோ யானென வுரியாய்நீ
சுடருறை வடிவேலாய் சொன்முறை கடவேனுன்
வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன். 2093

௪௮ அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் காருள ரிசையாய்நீ
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யதுகாவென் னேவலி னினிதென்றான். 2094

௪௯ பணிமொழி கடவாதான் பருவர [1]லிகவாதான்
பிணியுடை மனனென்னாப் பெநினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடு மையனு மிளையானுந்
திணிமர நிறைகானிற் சேணுற நெறிசென்றார். 2095

௭. குகப் படலம் முற்றும்.

௮. வனம்புகு படலம்.

௧ பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னும்
ஈரமு முளதில்லென் றறிவரு மிளவேனில்
ஆரியன் வரலோடு மமுதள வியசீதக்
காருறு குறிமானக் காட்டிய தவணெங்கும். 2096

௨ வெயிலிள நிலவேபோல் விரிகதி ரிடைவீசப்
பயின்மர நிழலீனப் பனிபுரை துளிமேகம்
புயறர விளமென்கால் பூவள வியதெய்த
மயிலின நடமாடும் வழியினி யனபோனார். 2097

௩ மன்றலின் மலிகோதை மயிலிய லிளமாதே
இன்றுயில் வதிகோபத் தினம்விரி வனவெங்குங்
கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குவிமாலை
பொன்றிணி மணிமானப் பொலிவன பலகாணாய். 2098

௪ பாணில மிஞிறுகப் படுமழை பணையாக
நாணின தொகுபீலிக் கோலின நடமாடும்
பூணிய னின்சாயற் பொலிவுறு மதுகண்ணிற்
காணிய வெனலாகுங் களிமயி லிவைகாணாய். 2099

(பிரதி) 1 விகழாதான்.

௫ நெய்ந்நிறை நெடுவேலி னிழலுரு திறமுற்றிக்
கைந்நிறை நிமிர்கண்ணோய் கருதினை வினையென்றே
மெய்ந்நிறை விரிசாயல் கன்றுநின் விழிகண்டு
மஞ்ஞையு மடமானும் வருவன பலகாணாய். 2100

௬ பூவலர் குரவோடும் புடைநிற விடைவீனும்
மாவலர் செறிசூழற் றுயிலொடு மயிலொன்றின்
றூவியின் மணம்நாறுந் துணையிரி பெடைதானச்
சேவலோ டுறவூடித் திரிவது வியல்காணாய். 2101

௭ அருந்ததி யனையாளே யறமதினு மினியாளே
செருந்தியின் மலர்தாங்குஞ் செறியித [1]முனசோகம்
பொருந்தின களிவண்டிற் பொலிவன பொன்னூதும்
இருந்தையி னெழுதீயொத் தெழுவன விவைகாணாய்.

௮ சேந்தொளி விரிசெவ்வாய்ப் பைங்கிளி செறிகோலக்
காந்தளின் மலரேறிக் கோதுவ கவினூரும்
மாந்தளிர் நறுமேனி மங்கைநின் மணிமுன்கை
ஏந்தின வெனலாகு மியல்பின விவைகாணாய். 2103

௯ ஏந்திள முலையாளே யெழுதரு மெழிலாளே
காந்தளின் முகைகண்ணிற் கண்டொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனவுன்னிக் கவ்விய படிபாராத்
தேந்தளை யுகள்செய்யுஞ் [2]சிறுநகை பலகாணாய். 2104

௧௦ குன்றுறை வயமாவின் குருளையு மிருள்சிந்திப்
பின்றின தெனலாகும் பிடிதரு சிறுமாவும்
அன்றல பிரிவொல்லா வண்டர்த மனையாவின்
கன்றொடு முடனாடுங் [4]களியன பலகாணாய். 2105

௧௧ அகில்புனை குழல்மாதே யணியிழை யெனலாகும்
நகுமலர் நிறைமாலைக் கொம்புக ணதிதோறுந்
துகில்புரை திரைநீரிற் றோய்வன துறையாடும்
முகிழிள முலையாரின் மூழ்குவ பலகாணாய். 2106

௧௨ முற்றுறு முகைகிண்டி [3]முரல்கில சிறுதும்பி
விற்றிரு நுதன்மாதே யார்மலர் விரிகோங்கின்
சுற்றுறு மலரேறித் துயில்வன சுடர்பின்றும்
பொற்றக டுறுநீலம் புரைவன பலகாணாய். 2107

(பிரதி) 1 புனகோக்கம். 2 சிறுகுறு நகைகாணாய். 3 முரல்சில
4 களியது.

கங கூடிய நறைவாயிற் கொண்டன விறிகொள்ளா
மூடிய [1]களிமன்ன முடுகிய நெறிகாணா
ஆடிய சிறைமாவண் டந்தரி னிசைமுன்னம்
பாடிய பெடைகண்ணாய் வருவன பலகாணாய். 2108

கச கன்னிய ரணிகோலங் கற்றறி குனரென்னப்
பொன்னணி நிறவேங்கைக் கோங்குகள் புதுமென்பூ
அன்னமென் னடையாய்நின் னளகநந் நுதலப்புஞ்
சின்னநன் மலர்மானச் சிந்துவ பலகாணாய். 2109

கரு மணங்கிளர் மலர்வாச மாருதம் வரவீசக்
கணங்கிளர் தருசுண்ணங் கல்லிடை யனகானத்
தணங்கினு மிலையாயுன் னணிவட முலைமுன்றிற்
சுணங்கின மனைமானத் தூறுவன பலகாணாய். 2110

கசு அடியிணை புரைகல்லி தென்றுகொ லதரெங்கும்
இடையிடை மலர்சிந்தி மினமர மிவைகாணாய்
கொடியிறு மடைவாசக் கொம்புகள் குயிலேயுன்
றுடிபுரை யிடைமானத் துவள்வன பலகாணாய். 2111

கஎ வாள்புரை விழியாயுன் மலர்புரை யடிமானத்
தாள்புரை தளிர்வைதந் தனைஞிமி றிவைகாணாய்
கோள்புரை யிருள்வாசக் குழல்புரை மழைகாணாய்
தோள்புரை யிளவேயின் தொகுதிக ளிவைகாணாய். 2112

கஅ பூநனை சினைதுன்றிப் புள்ளிடை யிடைபம்பி
நானிற நளிர்வல்லிக் கொடிநவை யிலபல்கி
மானின மயின்மாலை குயிலினம் வருகானந்
தீநிகர் தொழிலாடைத் திரைபொரு வனகாணாய். 2113

கக என்றனன் மடவாளோ டினிதினின் விளையாடிப்
பொன்றிணி திரடோளான் போயின னெறிபோதுஞ்
சென்றது குடபாலைத் திருமலை யிதுவன்றோ
வென்றரு வினைவென்றோர் மேவிட மெனவோடும்.

உ0 அருந்தியி னகம்விம்ம மன்பின [2]நெடுநாளிற்
றிருத்திய வினைமுற்றிற் றின்றெனத் தெரிகின்றான்
பரத்துவ னெனுநாமப் பரமுனி பவநோயின்
மருத்துவ னனையானை வரவெதிர் கொளவந்தான். 211

(பிரதி) 1 களிமன்னு. 2 நெடுநாளிற.

உக குடையின னிமிர்கோலன் குண்டிகை யினன்மூரிச்
சடையின னுரிமானின் சருமனன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவின னெறிபேணும்
நடையினன் மறைநாலு நடநவி றருநாவான். 2116

உஉ செந்தழல் தருசெல்வன் றிசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரெனநல்கும்
அந்தண னுலகேழு மமைமயெனி னமரேசன்
உந்தியி னுதவாமே யுதவிடு தொழில் வல்லான். 2117

உ௩ அம்முனி வரலோடு மழகனு மலர்தூவி
மும்முறை தொழுதானை முனிவனு மெதிர்புல்லி
இம்முறை யுருவோநான் காண்பவ தெனவுள்ளம்
விம்மின [1]னிழிகண்ணீர் விழிவழி யுகநின்றான். 2118

உ௪ அகலிட நெடிதாளு மமைதியை யதுதீரப்
புகலிட மெமதாகும் புரையிடை யிந்நாளிற்
றகவில தலைவேடந் தழுவினை வருவானேன்
இகலடு மலவீரா விளையவ னெடுமென்றான். 2119

உ௫ உற்றுள பொருளெல்லாம் முணர்வுற வுரைசெய்தான்
நற்றவ முனியந்தோ விதிதரு நவையென்பான்
இற்றதுசெயலுண்டோ [2]விசையென விடர்கொண்டான்
பெற்றில டவமந்தோ பெருநில மகளென்றான். 2120

உ௬ துப்புறழ் துவர்வாயிற் றூய்மொழி யவளோடும்
அப்புறு கடன்ஞால மாளுதி கடிதென்னு
ஒப்பரு மகனுன்னை யுயர்வன முறையேகென்
றெப்பரி சுயிருய்ந்தா னென்றுனை யவனென்றான்.

உ௭ அல்லலு முளவின்ப மனுகலு முளவந்தோ
நல்லன வுளசெய்யு நவைகளு முளதன்றோ
இல்லையோர் [3]பயநானிங் கிடருறு மிதிலென்னுப்
புல்லின னுடனேகொண் டினிதுறை புரைபுக்கான்.

உ௮ புக்குறை வீடநல்கிப் பூசனை முறைபேணித்
தக்கன கனிகாயு தந்துறை தருமன்பாற்
றொக்கன முறைகூறித் தூயவ னுயிர்போலும்
மக்களி னருளூற்றான் மைந்தனு மகிழ்வுற்றான். 2123

(பிரதி) 1 னழிகண்ணீர். 2 வினியென. 3 பயனுனிங்.

உ௯ வைகினா னினிதன்று ரவ்வழி மறையோனும்
உய்குவ னெடியானு முடனுறை தவினெனன்பான்
செய்தன வினிதெல்லாஞ் செல்வனை முகமன்னுக்
கொய்குல மலர்மார்பா கூறுவ துளதென்றான். 2124

௩௦ *நிறையு நீர்மலர் நெடுங்கனி கிழங்குகாய் கிடந்த
குறையுந் தீயவை தூயவை குறைவில வெம்மோ
டுறையு மவ்வழி யுயாதவ முயலுவா னெழுக
இறைபு மீதிலா தினியதோ ரிடமரி தின்னும். 2125

௩௧ கங்கை யாளொடு கரியவ ளாமகள் கலந்த
சங்க மாதலிற் பிரியலன் றுமைச் செங்கண்
அங்க ணாயக வயனுக்கு மருட்பெற றீர்த்தம்
எங்கள் போலியர் தரத்ததன் றிருத்தி ரீண்டென்றான்.

௩௨ பூண்ட மாதவ னவ்வழி விரும்பினன் புநித
நீண்ட தன்றிரு நிறைபுன லாட்டுக்கு [1]நடுவாம்
மாண்ட சிந்தைய [2]விவ்வழி வைகுவ னென்றால்
ஈண்டி யாவரு நெருக்குவ ரென்றன னிராமன். 2127

௩௩ ஆவ துள்ளதே யையகே ளாயிரண் டமைந்த
[3]கூவிடைப் பொழிற் கப்புறம் போனபின் குறுகி
மேவு கானத்தி லேகுதி விண்ணினு மினிதாற்
றேவர் கைதொழுஞ் சித்திர கூடமென் றுளதே. 2128

௩௪ என்று காதலி னேயின னடிதொழு திறைஞ்சிக்
கொன்றை வேய்ங்குழற் கோவலா முல்லையங் குறிஞ்சி
சென்று செங்கதிர்ச் செல்வனு நடுவுறச் சிறுமான்
கன்று நீர்நுகர் கரையுடைக் காளிந்தி கண்டான். 2129

௩௫ ஆறு கண்டன ரகமகிழ்ந் திறைஞ்சின ரறிந்து
நீறு தோய்மணி மேனியர் நெடும்புனல் படிந்தார்
ஊறு மென்கனி கிழங்கினோ டுண்டுநீ ருண்டார்
ஏறி யேகுவ தெங்ஙன மென்றிட விளையோன். 2130

௩௬ வாங்கு வேய்ங்கழை துமித்தனன் மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றிழைத்தன னும்பர்தம் பதிபோல்
வீங்கு தோளனன்னை றேவியோ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னானந்த நெடுநதி யிருகையா னிந்தி. 2131

(பிரதி) 1 நெடு நாண். 2 ரிவ்வழி வைகுவரென்றால். 3 கூவுடைப்.

௩௭ ஆலை பாய்வய லயோத்திய ராண்டகைக் கிளையான்
மாலை மால்வரை தோளெனு மந்தரந் திரிய
காலை வேலையை யுற்றது கழிந்தநீர் கடிதின்
மேலை வேலையிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம். 2132

௩௮ அனைய ரப்புனல் கடந்தன ரக்கரை யுற்றார்
புனையும் வற்கலைக் கோலத்தார் நெடுநெறி போனார்
சினையு மூலமும் வேரும்வெந் தருநிலந் தீய்ந்து
நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுநெறி சேர்ந்தார்.

௩௯ நீங்க லாற்றலள் சனகியென் றிராகவ னினைந்தான்
ஓங்கு வெய்யவ னுடுபதி யெனக்கதி ருகுத்தான்
தாங்கு வெங்கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த. 2134

௪௦ வறுத்து வித்திய வனையன வல் அயில் பரற்கள்
பறித்து வித்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
[1]இறுத்தெ ரிந்தன வல்லிக ளிளந்தளி ரின்ற
கறுத்த வாளர வெயிற்றினா டமுதுகக் களித்த. 2135

௪௧ குழுமி மேகங்கள் குமுறின நறுந்துளி கொணர்ந்த
முழுவில் வேடரு முனிவரின் முனிவில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட. 2136

௪௨ கல்லிடைக் கிடந்த கடுவெந் தயர்கின்ற கதழ்பாம்
பல்ல வூற்றில வலைபுனற் கிடந்தன வனைய
வல்லை யுற்றவேய் புற்றொடு மெரிவன மணிவாழ்
புல்லெ யிற்றிளங் கன்னியர் தோளொடும் பொலிந்த.

௪௩ படர்ந்தெ ழுந்தபுற் பசுந்திறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன மஞ்ஞையுந் தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம் பயின்றெழு நவின்ற
தொடர்ந்து பாணரிற் றூங்கிசை முரன்றன தும்பி.

௪௪ கால மன்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மன்றியு முளைத்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன வலரிளங் கொம்பர்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ. 2139

(பிரதி) 1 இறுத்த ரகலென.

௪௫ எயினர் தங்கிட மிருடிக ளிருப்பிட மெய்ந்த
வெயின்மெ யின்றெறு மணிநிறக் கோபங்கண் மலர்ந்த
பயின்ம ரந்தொறும் பிரிந்தன பேடையைப் பயிலுங்
குயிலி ரங்கின முருந்தினின் றரும்பின குருந்தம். 2140

௪௬ பந்த ஞாட்புறு பாசறைப் பொருள்வயிற் பருவந்
தந்த நென்வரை யுயிரெனத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்புறக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்தது வனமே. 2141

௪௭ வெளிறு நீங்கிய பாலையின் மெல்லெனப் போனார்
ஒளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயி றுதைப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பணைத் தடக்கை
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார். 2142

அ. வனம்புகு படலம் முற்றும்.

௯. சித்திரகூடப் படலம்.

க நினையுந் தேவர்க்கு நமக்குமொத் தொருநெறி நின்ற
வனக னங்கனை யாயிரம் பேருடை யமலன்
சனகன் மாமட மயிற்குஞ் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை யழகெலாந் தெரிவுறக் காட்டும். 2143

உ வாளும் வேலும்விட் டளாவின வனையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமுஞ் சுடர்தருஞ் சாரல்
நீள மாலைய துயில்வன [1]நிண்டரு கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணாய். 2144

௩ குருதி வாளெனச் செவ்வரி பரந்தகட் குயிலே
மருவி மால்வரை யும்பரிற் றுதிக்கின்ற வருடை
சுருதி [2]போற்றெறி மரகதக் கொழுஞ்சுடர் சுற்றப்
பருதி வானவன் பசும்பரி நிகர்ப்பன பாராய். 2145

௪ வடங்கொள் பூண்முலை மடமயி லேமழை மதமா
அடங்கு பாழ்வயிற் றரவுரி யமைதொறுந் தொடக்கித்
தடங்க டோறுநின் றுடலை தண்டலை யயோத்தி
நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்.

(பிரதி) 1 நீண்டக மஞ்சூற. 2 போற்றெளி.

ரு உவரி வாயன்றிப் பாற்கட லுதவிய வமுதே
துவரி னீண்மணித் தடந்தொறு மிடந்தொறுந் துவன்றிக்
கவரி பானிற வால்புடை பெயர்வன கடிதிற்
பவள மால்வரை யருவியைப் பொருவின பாராய். 2147

சு சலந்த லைக்கொண்ட சீயத்தாற் றனிமதக் கதமா
உலந்து வீழ்தலிற் சிந்தின வுதிரத்தின் மடவார்
புலந்த [1]காலையிற் றுக்கன குங்குமப் பொதியிற்
கலந்த முத்தென வேழமுத் திமைப்பன காணாய். 2148

எ நீண்ட மால்வரை மதியுற நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்க்கனற் சுற்றையிற் சொருகி
மாண்ட வானிற வருவியம் மனைவிடைப் பாகன்
காண்ட குஞ்சடைக் கங்கையை நிகர்ப்பன காணாய்.

அ விடங்கொ ளேக்கினின் னிடையினை மின்னென வெருவிப்
படங்கொ ளுரகங்கள் முறைபுறப் பதைப்பன பாராய்
மடங்கல் வாளரி யெனக்கொண்டு மழையின முழங்கக்
கடங்கொள் கார்மதக் கைம்மலை யிரிவன காணாய். 2150

கூ நெய்கொ ணீருண்டு நெருப்புண்டு [2]நீண்டமை நிறைந்த
வைகொள் வேலெனக் காலனு மறுகுறுங் கண்ணாய்
மெய்க ளேகின்ற பிடிகளை விரும்பிய வேழங்
கைக ளேகில தாங்கின நிற்பன காணாய். 2151

கO தொட்ட வார்சுனை சுடரொளி மணியொடுந் தூவி
விட்ட சென்றன விடாமத மழையெழில் வேழம்
வட்ட வேங்கையின் மலரொடுந் ததைந்தன வயங்கும்
பட்டஞ் சுற்றிய வணையவே போல்வன பாராய். 2152

கக இழைந்த நூலிடை மணிக்குடஞ் சுமக்கின்ற வென்னக்
குழைந்த நுண்ணிடை துவியிள வனமுலைக் கொம்பே
தழைந்த சந்தனச் சோலைநன் செலவினைத் தடுப்ப
நுழைந்து போகின்ற தொங்கின்ற மதியினை நோக்காய்.

கஉ உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்று வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய். 2154

(பிரதி) 1 காலையி. 2 நீண்டகை.

க௩ அளிக்கு நாயகன் மாயையுக் கடங்கின னெனினுங்
களிப்பி லிந்தியத்து யோகியிற் கரக்கிலா ததுபோல்
ஒளித்து நின்றுள ராயினு ¹முருத்தெரிக் கின்ற
பளிக்க றைச்சில பரிபுர மகளிரைப் பாராய். 2155

க௪ ஆடு கின்றமா மயிலினு மழகிய குயிலே
கூடு ²கின்றவர் கொடிச்சியர் தம்மனங் கொதிப்ப
ஊடு கின்றனர் கொழுநரை யுருகினர் நோக்கப
பாடு கின்றன கின்னர மிதுனங்கள் பாராய். 2156

க௫ வில்லி வாங்கிய சிலையெனப் பொலிநுதல் விளக்கே
வல்லி தாங்கமை தாக்கலின் வழிந்திழி பிரசங்
கொல்லி வாங்கிய குன்றவர் கொடிச்சிநடுங் கவலை
கல்லி வாங்கிய குழிகளை நிறைப்பன காணாய். 2157

க௬ ஒருவில் ³பெண்மையென் றுரைக்கின்ற வுடலினுக்குயிரே
மருவு காதலி னினிதுட னுடிய மந்தி
அருவி நீர்கொண்டு விசத்தா னப்புறத் தேறிக்
கருவி மாமழை யுருப்பதோர் கடுவனைக் காணாய். 2158

க௭ வீறு பஞ்சினி லமுதநெய் யாடிய விளக்கே
சீறு வெங்கதிர் செறிந்தன பேர்கல திரிய
மாறில் மண்டில நிரம்பிய மாணிக்க மணிக்கற்
பாறை மற்றொரு பரிதியிற் பொலிவன பாராய். 2859

க௮ சில மின்னதென் றருந்ததிக் குதவிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துட னிமிர்ந்த
கோல வேங்கையின் கொம்புகள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றொழு தெழுவன நிகர்ப்பன காணாய். 2160

க௯ விற்கொள் வாணுதல்விளங்கிழையிளந்தளிர்க்கொழுந்தே
எற்கொள் மால்வரை யும்பரி னிரும்புனங் காக்குங்
கொற்கொள் வேற்கணார் குரீஇயினத் தெறிதரக் குறித்த
கற்கள் வானிடை மீனென விழுவன காணாய். 2161

௨௦ நான நாண்மலர் நறையகி லுவிதே னுறுஞ்
சோனை வார்குழற் சுமைபெறுத் துடியிடைத் தோகாய்
வான யாறுமீ னலர்ந்தன வெனப்புனல் வறந்த
கான யாறுகள் கதிர்மணி யிமைப்பன காணாய். 2162

(பிரதி) 1 முருத்தெரிகின்ற. 2 கின்றிலர். 3 பெண்மையைய யுரைக்கின்ற.

உக வரிகொ [1]ளொண்சிலை வயவர்தங் கணிச்சியின் மறிந்த
பரிய காரகில் சுடர்நிமிர் பசுங்கதிர்ப் படலம்
அரிய வேதிய ராகுதிப் புகையொடு மளவிக்
கரிய மால்வரைக் கொழுந்தெனப் படர்வன காணாய்.

உஉ மஞ்ச ளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ
செஞ்செ வேநெடு மரகதப் பாறையிற் றெரிவ
விஞ்சை நாடியர் கொழுநரோ டாடிய விமலப்
பஞ்ச ளாவிய சீறடிச் சுவடுகள் பாராய். 2164

உங சுழித்த செம்பொனின் றுளைபுரை யுந்தியென் றுணையே
கொழித்த மாமணி யருவியோ டிழிவன கோலம்
அழித்து மேவிய வரம்பைய ரறல்புரை கூந்தல்
கழித்து நீக்கிய கற்பக நறுமலர் காணாய். 2165

உச அறைக ழற்சினக் குன்றவ ரகன்புனங் காவற்
பறையெ டுத்தொரு கடுவனின் றடிப்பது பாராய்
பிறையை யெட்டினள் பிடித்ததற் கிதுபிழை யென்னாக்
கறைது டைக்குறுங் கொடிச்சியோர் பேதையைக்காணாய்

உரு அடுத்த பல்பக லன்பரிற் பிரிந்தன ரென்ப
தெடுத்து நந்தமக் கியம்புவ தெனக்கரிந் திருண்ட
தொடுத்த மாதவிச் சூழலிற் சூரர மகளிர்
படுத்து வைகிய பல்லவ சயனங்கள் பாராய். 2167

உசா நினைந்த போதினு மமுதொக்கு நேரிழாய் நிறைதேன்
வனைந்தவேங்கையிற்கோங்கினில்வயின்கொளத் தொடுத்து
குனிந்த வூசலிற் கொடிச்சிய ரெடுத்தவண் குறிஞ்சி
கனிந்த பாடல்கேட் டசுணமா வருவன காணாய். 2168

உஎ இலவு மிந்திர கோபமும் புரையித ழினியாய்
அலவு நுண்டுளி யருவிநீ ரரம்பைய ராடக்
கலவை சாந்துசெங் குங்குமங் கற்பகங் கொடுத்த
பலவுந் தோய்தலிற் பரிமளங் கமழ்வன பாராய். 2169

உஅ செம்பொ னாற்செய்து குலிகமிட் டெழுதிய செப்போர்
கொம்பு தாங்கிய தெனப்பொலி வனமுலைக் கொடியே
அம்பொன் மால்வரை யலர்கதி ருச்சிசென் றணையப்
பைம்பொன் மாமுடி மிலைச்சிய தொப்பது பாராய்.

(பிரதி) 1 ஞேன்.

௨௯ மடந்தை மார்களிற் றிலதமே மணிநிறத் [1]திணிகல்
தொடர்ந்த பாறையின் வேயினஞ் சொரிமணி முத்தம்
இடந்தொ றுங்கிடந் திமைப்பன வெரிகதிர்ச் செக்கர்
படர்ந்த வானிடைத் தாரகை புரைவன பாராய். 2171

௩௦ குழுவி நுண்டுளை வேயினுங் குறிநரம் பெறிவுற்
றெழுது தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே
முழுவ தும்மலர் விரிந்தநாள் முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவிய தொப்பன பாராய். 2172

௩௧ வளைகள் காந்தளிற் பெய்தன வனையகை மயிலே
துளைக டாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றூக்கி
அளவின் மூப்பின ரருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணாய். 2173

௩௨ வடுவின் [2]மாவகி ரிவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணின ரிடருறு மூப்பின ரேக
நெடுகு கூலவா ணீட்டின வுருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய். 2174

௩௩ அலம்பு வார்குழ லாய்மயிற் பெண்ணருங் கலமே
நலம்பெய் வேதியர் மார்பினுக் கிசைவன நாடிச்
சிலம்பி பஞ்சினூல் சிக்குறத் திரித்தன தேமாப்
பலம்பெய் மந்தியோ டுடன்வந்து கொடுப்பன பாராய்.

௩௪ தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே
பெரிய [3]மாக்கனி பலாக்களின் வாழையங் கனியோ
டரிய மாக்கனி கடுவன்கள் கடிதுகொண் டளிப்பக்
கரிய மாக்கிழங் ககழ்ந்தவர்க் கொணர்ந்தன காணாய்.

௩௫ ஐவ னக்குர லேனலின் கதிரினுங் [4]கவரை
மெய்வ ணக்குறும் வேழநின் றளித்தமெல் லரிசி
பொய்வ ணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவ ணத்தவாய்க் கிள்ளைதந் தளிர்ப்பன காணாய். 2177

௩௬ இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்தன விழுங்குங்
கடிய மாசுணங் [5]கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலா தவர்மிதித் தேறப்
படிக டாமெனத் தாழ்வரைக் கிடப்பன பாராய். 2178

(பிரதி) 1 திணிதல். 2 மாவடு வகிரெனப். 3 மாக்கனி பிறங்கிய.
4 கவையவரை. 5 கற்றிறந்.

௫௭ பாந்த டேரினை [1]பரிபடப் பரந்தபே ரல்குல்
ஏந்து நூன்மணி மார்பின ராகுதிக் [2]கிசைய
கூந்தன் மென்மயில் குறுகின நெடுஞ்சிறை கோலிக்
காந்து குண்டத்தி லடங்கெரி யெழுப்புவ காணாய்.

௫௮ அசும்பு பாய்வரை யருந்தவ முடித்தவ ரனையத்
தசும்பு வேய்ந்தென வொத்தவர் தமக்குவிண் டருவான்
விசும்பு தூர்ப்பன வாமென வெயிலென வீங்கும்
பசும்பொன் மானங்கள் போவன வருவன பாராய் 2180

௫௯ இனைய யாவையு மேந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை யருந்தவ ரெதிர்வர வணங்கி
வினையி னீங்கிய வேதியர் விருந்தின னானான்
மனையின் மெய்யினு மாதவம் புரிந்தவன் மைந்தன்.

௬௦ *மாவிய லுதயமாந் [3]துளசி வானவன்
ஏவிய பகையிரு ளவுணர் வீய்ந்துக
காவியல் குடவரைக் கால நேமிமேல்
ஏவிய திகிரியி னிரவி யேகினான். 2182

௬௧ சக்கரந் தானவ னுடலிற் றுக்குற
வெக்கிய குருதியிற் பரந்த தெங்கணுஞ்
செக்கரத் தீயவன் வாயிற் றீர்ந்துவே
றுக்கவான் றனியெயி றொத்த திந்துவே. 2183

௬௨ ஆனன மகளிருக் களித்த தாமரைப்
பூநனி முகிழ்த்தென வலரி போனபின்
மீனென விளங்கின வெள்ளி யாம்பல்வீ
வானெனு மணித்தட மலர்ந்த தெங்குமே. 2184

௬௩ மந்தியுங் கடுவனு மரங்க ளேறின
தந்தியும் பிடிகளுந் தடங்க ளேறின
நிந்தையில் சகுந்தமும் [4]நீள நோக்கின
அந்தியை நோக்கினா னறிவை நோக்கினான். 2185

௬௪ மொய்கிளர் நறுமலர் முகிழ்த்த வர்ஞ்சில
மையறு நறுமலர் மலர்ந்த வாஞ்சில
[5]ஐயனோ டிளவலு மமுதன் னாளுக்குங்
கைகளுங் கண்களுங் கமலம் போன்றவே. 2186

1 பரிபட டேர்ந்தபே. 2 கிசையந்த. 3 துளதி 4 நீட்டு.
5 ஐயனு மி. வலு.

௪௫ மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் துமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினான் றவத்தி [1]னெய்தினான். 2187

௪௬ நெடுங்கழைக் குறுந்துணி நிரவி மேனிரைத்
தொடுங்கலி னெடுமுக டொழுக்கி யூழுற
இடுங்கலில் கைவிரித் தெற்றி யெங்கணும்
முடங்கலில் [2]வரிச்சுமேல் விரித்து மூட்டியே. 2188

௪௭ தேக்கடைப் படலையிற் செறிவு செய்துபின்
பூக்கிளர் நாணலின் புல்லு மேய்ந்துகீழ்த்
தூக்கிய வேய்களிற் சுவரின் சுற்றுறப்
போக்கிமண் ணெறிந்தவை புனலிற் றீற்றியே. 2189

௪௮ வேறிடம் வீரற்கு மிதிலை நாடிக்குங்
கூறிய முறைநெறி குயிற்றிக் குங்குமச்
சேறுகொண் டழகுறத் திருத்தித் திண்சுவர்
ஆறிடு மணியொடு கனக மப்பியே. 2190

௪௯ மயிலுடைப் பீலியின் விதான மேல்வகுத்
தயிலுடைச் சுரிகையா லருகு தூக்கறுத்
தெயிலிளங் கழைகளா லியற்றி யாறிடு
புயலுடைப் பொழின்மலர் பூவுஞ் சிந்தியே. 2191

௫௦ இன்னண மிளையவ னிழைத்த சாலையிற்
பொன்னிறத் திருவொடுங் குடிபுக் கானரோ
நன்னெடுந் திசைமுக னகத்து நம்மனோர்க்
குன்னரு முயிருளு மொத்து வைகுவான். 2192

௫௧ *மாய நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தஞ் சொல்லலாம்
ஆய சாலை யரும்பெற [3]லன்பினான்
நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினான். 2193

௫௨ மேவு கான மிதிலையர் கோமகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதுமி லார்க்கிசை யாதவே. 2194

(பிரதி) 1 மேயினான். 2 வரித்துமேல் 3 லன்பினன்.

௫௩ என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
[1]குன்று போலக் குலவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலெனாத்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான். 2195

௫௪ அடருஞ் செல்வத்த னெந்தைத னாணையாற்
படரு நல்லறம் பாலித் திரவியிற்
சுடரு மெய்ப்புகழ் சூடின னென்பதென்
இடரு னக்கிழைத் தேனெடு நாளென்றான். 2196

௫௫ அந்த வாய்மொழி யைய னியம்பலும்
நொந்த சிந்தை யிளையவ னோக்கினான்
எந்தை காண்டி யிடரினுக் கங்குரம்
முந்தி வந்து முளைத்ததன் றோவென்றான். 2197

௫௬ ஆக செய்தக்க தில்லை யறத்தினின்
றேக லென்ப தரிதென்று மெண்ணினான்
ஓகை [2]கண்டில னுன்னிடர் நோக்கியென்
சோக பந்தந் தொடர்வரி தாலென்றான். 2198

௫௭ பின்னுந் தம்பியை நோக்கிப் பெரியவன்
மன்னுஞ் [3]செல்வத்திற் குண்டுவ ரம்பிதற்
கென்ன கேடுண்டிவ் வெல்லையி லின்பத்தை
உன்னு மேல்வரு மூதியத் தோடெனா. 2199

௫௮ தேற்றித் தம்பியைத் தேவருங் கைதொழ
நோற்றி ருந்தன னேன்சிலை யோனிப்பால்
[4]ஆற்றன் மாதவ னாணையிற் போனவர்
கூற்றி னுற்றது கூறலுற் றாமரோ. 2200

௯. சித்திரகூடப் படலம் முற்றும்.

(பிரதி) 1 குன்றம். 2 கொண்டவ னுள்ளிடர் நோக்கினான், 3 செல்வத்துக். 4 ஆற்றி.

௰. பள்ளிபடைப் படலம்.

௧ பொருவி றூதுவர் போயினர் பொய்யிலார்
இரவு நன்பக லுங்கடி தேகினார்
பரதன் கோயிலுற் றார்படி காரரெம்
வரவு சொல்லுமின் மன்னவற் [1]கேயென்றார். 2201

௨ தூதர் வந்தன ருந்தைசொல் லோடெனக்
காதல் முந்திக் களிக்கின்ற சிந்தையான்
போது கென்னெனப் புக்கனர் கைதொழத்
தீதி லன்கொ றிருமுடி யானென்றான். 2202

௩ வலிய னென்றவர் கூற மகிழ்ந்தனன்
இலைகொள் பூணிளங் கோனெம் பிரானொடும்
உலைவில் செல்வத்த னேவென வுண்டெனத்
தலையி லேந்தினன் றாழ்தடக் கைகளே. 2203

௪ மற்றுஞ் சுற்றத்து ளார்க்கும் வரன்முறை
உற்ற தன்மை வினவி யுவந்தனன்
இற்ற தாகு மெழுதரு மேனியாய்
கொற்ற மன்னன் றிருமுகங் கொள்கென்றார். 2204

௫ என்று கூறலு மேத்தி யிறைஞ்சினான்
பொன்றி ணிந்த பொருவி றடக்கையான்
நின்று வாங்கி யுருகிய நெஞ்சினன்
துன்று தார்மலர்ச் சென்னியிற் சூடினான். 2205

௬ சூடிச் சாதனந் தோலுடைச் சுற்றமண்
மூடல் தோட்டி முடங்க னிமிர்த்தனன்
ஈடு நோக்கிவந் தெய்திய தூதர்க்குக்
கோடி மேனிதி யங்கொடுத் தானரோ. 2206

௭ வாணி லாநகை தோன்ற மயிர்ப்புறம்
பூண வானுயர் காதலிற் பொங்கினன்
றாணி லாமலர் தூவினன் றம்முனைக்
காண லாமெனு மாசை கடாவவே. 2207

௮ எழுக சேனையென் றேவின [2]னெய்தினான்
தொழுது கைகயர் கோமகன் சொல்லொடுந்
தழுவு தேரிடைத் தம்பியோ டேறினான்
பொழுது நாளுங் குறித்திலன் [3]போயினான். 2208

(பிரதி) 1 கென்கின்றார். 2 னெய்தினன். 3 போகின்றான்.

௯ ஆனை சுற்றின தேரிரைத் தீண்டின
மான வேந்தர் குழுமினர் வாளுடைத்
தானை சூழ்ந்தன சங்க முரன்றன
மீன வேலையின் விம்மின பேரியே. 2209

௧௰ கொடி நெருங்கின தொங்கல் குழீஇயின
வடிநெ டுங்கண் மடந்தைய ரூர்மடப்
பிடிது வன்றின பூணொளி போர்ந்தன
இடிது டங்கிய மின்னென வெங்குமே. 2210

௧௧ பண்டி யெங்கும் பரந்தன பல்லியங்
கொண்டி யம்பின கொண்டலிற் கோதையில்
வண்டி யம்பின வாளியில் வாவுறுஞ்
செண்டி யங்கு பரியுஞ் செறிந்தவே. 2211

௧௨ துளை [1]முகத்திற் சுருதி விளம்பின
இளைமு கத்தினி தும்பரி னேவிடில்
விளைமு கத்தன வேலையின் மீநுசெல்
வளைமு [2]கத்தனல் வாசியும் வந்தவே. 2212

௧௩ வில்லின் வேதியர் வாள்செறி வித்தகர்
மல்லின் மல்லர் சுரிகையின் வல்லவர்
கொல்லும் வேல்குந்தங் கற்றுயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகருந் துன்னினார். 2213

௧௪ எறிப கட்டின மாடுக ளேற்றினர்
குறிகொள் கோழி சிவல்குறும் பூழ்நெடும்
பொறிம யிர்க்கவு தாரிகள் போற்றறு
நெறியின் மாக்களு முந்தி நெருங்கினார். 2214

௧௫ நிறைந்த மாந்தர் நெருங்கினர் நெஞ்சினிற்
பறந்து போதுங்கொ லென்று பதைக்கின்றார்
பிறந்த தேவ ருணர்ந்து பெயர்ந்துபோய்
உறைந்த வானுறு வார்களை யொக்கின்றார். 2215

௧௬ ஊன [3]ளைந்த வுடற்குயி ராமென
தான ளந்து தழுவின தண்ணுமை
தேன ளந்து செவியுற வார்த்தென
வான ளந்தது மாகதர் பாடலே. 2216

(பிரதி) 1 நுகத்திற் றுருதம் விளக்கின, நுகத்திற்றுருதி விளக்கின.
2 கத்தன. 3 ளந்த.

௧௭ ஊறு கொண்ட முரசிமி ழோதையின்
வீறு கொண்டன வேதியர் வாழ்த்தொலி
ஏறு கொண்டெழு மல்ல ரிடிப்பினை
மாறு [1]கொண்டன வந்திக ரேத்தரோ. 2217

௧௮ ஆறுங் கானு மகன்மலை யுங்கடந்
தேறி யேழ்பக லீந்திப்பி னெந்திரத்
தூறு பாகு மடையுடைத் தொண்முளை
நாறு பாய்நெடுங் கோசல நண்ணினான். 2218

௧௯ ஏர்து றந்த வயலிள மைந்தர்தோள்
தார்து றந்தன தண்டலை நெல்லினும்
நீர்து றந்தன தாமரை நீத்தெனப்
பார்து றந்தனள் பங்கயச் செல்வியே. 2219

௨௦ பிதிர்ந்து சாறு பெருந்துறை மண்டிடச்
சிதர்ந்து சிந்தி யழிந்தன தேங்கனி
முதிர்ந்து கொய்குந ரின்மையின் மூக்கவிழ்ந்
துதிர்ந்து லர்ந்தன வொண்மல ரீட்டமே. 2220

௨௧ ஏய்ந்த கால மிதுவிதற் காமென
வாய்ந்த மள்ள ரரிகுந ரின்மையாற்
பாய்ந்த சூதப் பசுநறுந் தேறலாற்
சாய்ந்தொ சிந்து முளைத்தன சாலியே. 2221

௨௨ எட்கு லாமல ரேசிய நாசியர்
புட்கு லாவயற் பூசற் கடைசியர்
கட்கி லார்களை காதற் கொழுநரோ
டுட்க லாமுடை யாரி னுயங்கினார். 2222

௨௩ அலர்ந்த பைங்கூ ழகன்குளக் கீழ்மடை
மலர்ந்த வாயிற் புனல்வழங் காமையால்
உலர்ந்த வன்க ணுலோபர் கடைத்தலை
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே. 2223

௨௪ ஓது கின்றில கிள்ளையு மோதியர்
தூது சென்றிலர் வந்திலர் தோழர்பான்
மோது கின்றில பேரி முழாவிழாப்
போது கின்றில பொன்னணி வீதியே. 2224

(பிரதி) 1 கொண்டென.

உரு பாட னீத்தன வண்டொடு பாண்குழல்
ஆட னீத்த வரங்கொ டகன்புனல்
சூட [1]னீத்தன சூடிகை சூளிகை
மாட நீத்தன மங்கல வள்ளையே. 2225

உசா நகையி ழந்தன வாண்முக நாறகிற்
புகையி ழந்தன மாளிகை பொங்கழற்
சிகையி ழந்தன தீவிகை தேமலர்த்
தொகையி ழந்தன தோகைய ரோதியே. 2226

உஎ நாவி [2]னீத்தரு நல்வளந் துன்னிய
பூவி [3]னீத்தன நாடு பொலிவொரீஇத்
தேவு நீத்தன சேணெறி [4]தாவிட
வாவி நீத்த வுடலென லாயதே. 2227

உஅ என்ற நாட்டினை நோக்கி யிடருழந்
தொன்று முற்ற துணர்ந்தில னுன்னுவான்
சென்று கேட்பதொர் தீங்குள வாமென
நின்று நின்று நெடிதுயிர்த் தானரோ. 2228

உகூ மீண்டு மேகியம் மெய்யெனு நல்லணி
பூண்ட வேந்தன் றிருமகன் புந்திதான்
தூண்டு தேரினு முந்துறத் [5]தூண்டுவான்
நீண்ட வாயி னெடுநகர் நோக்கினான். 2229

நo அண்ட முற்றுந் திரிந்தயர்ந் தாயமிர்
துண்டு போதியென் றுண்கதிர்ச் செல்வனை
விண்டொ டார்ந்து விலக்குவ போல்வன
கண்டி லன்கொடி யின்னெடுங் கானமே: 2230

நக ஈட்டு நன்புகழ்க் கிட்டிய யாவையும்
வேட்ட வேட்டவர் கொண்மின் விரைந்தெனக்
கோட்டி மாக்களைக் கூவுவ போல்வன
கேட்டி லனமுர சின்கிள ரோதையே. 2231

நஉ கள்ளை மாக்களர் கண்ணியன் கண்டிலன்
பிள்ளை மாக்களி றும்பிடி யீட்டமும்
வள்ளன் மாக்க ணிதியும் வயிரியர்
கொள்ளை மாக்களிற் கொண்டன ரேகவே. 2232

(பிரதி) 1 நீத்தன. 2 நீத்தரு. 3. நீத்தன, 4 தாவிடா.
5 தூவகுவான்.

௩௩ காவன் மன்னவன் கான்முளை கண்டிலன்
ஆவு மாவு மழிகவுள் வேழமும்
மேவு காத [1]னிதியின் வெறுக்கையும்
பூவின் வானவர் கொண்டனர் போகவே. 2233

௩௪ சூழ [2]மைந்த சுரும்பு நரம்புந்தம்
ஏழ மைந்த விசையிசை யாமையால்
மாழை யொண்கண் மயினெடுஞ் சாயலார்
கூழை போன்ற பொருனர் குழாங்களே. 2234

௩௫ தேரு மாவுங் களிறுஞ் சிவிகையும்
ஊரும் பண்டியு மூருந ரின்மையால்
யாரு மின்றி யெழிலழி வீதிகள்
வாரி யின்றிய வாலுக வாற்றினே. 2235

௩௬ அன்ன தன்மை யகனகர் நோக்கித்தன்
பின்னி ளைப்பெரி யோர்க்குப் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமீ
தென்ன தன்மை யிளையவ னேயென்றான். 2236

௩௭ வேற்ற டங்கல ரூறென மெல்லிதாற்
சூற்ற டங்கருங் கார்புரை தோற்றத்தான்
சேற்ற டங்கட் டிருவொடு நீங்கிய
பாற்ற டங்கட லொத்தது பாரென்றான். 2237

௩௮ குருமணிப்பூ ணரசிளங் கோளரி
இருகை கூப்பி யிறைஞ்சின னெய்திய
தொருவ னைத்தன் றுறுதுய ரூழிவாழ்
திருந கர்த்திரு தீர்ந்தன ளாமென்றான். 2238

௩௯ அனைய வேலையி லச்சுடைத் தேரணி
மனையி னீணெடு மங்கல வாயிலை
நினையு மாத்திரத் தெய்தலு நேமியான்
றனைய னுந்தந்தை சார்விட மெய்தினான். 2239

௪0 விருப்பி னெய்தினன் வெந்திறல் வேந்தனை
இருப்பு நல்லிட மெங்கணுங் கண்டிலன்
அருப்ப மன்றிதென் றையுற வெய்தினான்
பொருப்பு நாண வுயர்ந்த பொற்றோளினான். 2240

(பிரதி) 1 னிதியும். 2 மைந்தர்.

௪௧ ஆய காலையி லையனைத் தந்தவத்
தூய தாயைத் தொழுதுறு வான்றனைக்
கூய ளன்னை குறுகுதி ரென்றொரு
வேய்கொ டோளி தொழுது விளம்பினாள். 2241

௪௨ வந்து தாயை யடியில் வணங்கலுஞ்
சிந்தை யாரத் தழுவின டீதிலர்
எந்தை யன்னைய ரெங்கைய ரென்றனள்
அந்த மில்குணத் தானும தாமென்றான். 2242

௪௩ *மூண்டெழு காதலான் முளரித் தாடொழு
வேண்டின னெய்தின னுள்ளம் விம்முமால்
ஆண்டகை நெடுமுடி யரசர் கோமகன்
யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினான்.

௪௪ ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிகெட நிமிர்ந்த தானையத்
தேனமர் தெரியலான் றேவர் கைதொழ
வானக மெய்தினன் வருந்த னீயென்றான். 2244

௪௫ எறிந்தன கடியசொல் செவியி னெய்தலும்
நெறிந்தலர் குஞ்சியா னெடிது வீழ்ந்தனன்
அறிந்தில னுயிர்த்தில னசனி யேற்றினான்
மறிந்துயர் மராமர மண்ணுற் றென்னவே. 2245

௪௬ வாயொளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
ஆய்மலர் நயனங்க ளருவி சோர்தரத்
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயல துரைசெய நினைப்ப ரோவென்றான். 2246

௪௭ எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்
அழிந்தன னரற்றின னரற்றி யின்னன
மொழிந்தனன் பின்னரு முருகற் செல்வியான். 2247

௪௮ அறந்தனை வேரறுத் தருளைக் கொன்றயற்
சிறந்தநின் றண்ணளித் திருவைத் தேசழித்
திறந்தனை யாமெனி னினைறவ நீதியை
மறந்தனை யுனக்கிதின் மாசு வேண்டுமோ. 2248

௪௯ சினக்குறும் பெறிந்தெழு காமத் தீயவித்
தினக்குறும் பியாவையு மெற்றி யாவர்க்கும்
மனக்குறு நெறிசெலும் வள்ளி யோய்மனந்
தனக்குறு நெறிசெலத் தவத்தின் பாலதோ. 2249

௫௦ பூதலவன் முதலிய முந்தை யோர்பழங்
கதையையும் புதுக்கிய தலைவன் கண்ணுடை
நுதலவன் சிலைவலி நோன்மை நூறிய
புதல்வனை யெங்ஙனம் பிரிந்து போயினாய். 2250

௫௧ செவ்வழி யுருட்டிய திகிரி மன்னவ
எவ்வழி மன்னரு மிரவ லாளரும்
இவ்வழி யுலகினி லினிய நண்பினோர்
அவ்வழி யுலகினு முளர்கொ லோவய்யா. 2251

௫௨ பற்பக னிமுற்றுநின் கவிகைப் பானிழல்
நிற்பன பல்லுயி ருணங்க நீநெடுங்
கற்பக நறுநிழல் காத லித்தியோ
மற்பக மலர்ந்ததோண் மனனர் மன்னனே. 2252

௫௩ இம்பர்நின் றேகினை யிருக்குஞ் சார்பிழந்
தும்பர்வந் துன்கழ லொதுங்கி னார்களோ
சம்பர னனையவத் தானைத் தானவர்
அம்பரத் தின்னமு முளர்கொ லோவையா. 2253

௫௪ இயங்கெழு தானைய ரிறுத்த மாத்திறை
உயங்கலின் மறையவர்க் குதவி யும்பரின்
அயங்கெழு வேள்வியோ டமரர்க் காக்கிய
வயங்கெரி வளர்க்கலை வைக வல்லையோ. 2254

௫௫ ஏழுயர் மதகளிற் றிறைவ வேகினை
வாழியாய் கரியவன் வறியன் கையெனப்
பாழியம் புயத்துநின் பணியு நீங்கலா
ஆழியை யினியவற் களிக்க வெண்ணியோ. 2255

௫௬ பற்றிலை தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுல களித்துநீ முறையி [1]னெய்திய
[2]கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலுநின் பெரிய கண்களால். 2256

(பிரதி) 1 னேகிய. 2 கொற்றநன்.

௫௭ [1]ஆற்றில னின்னன பன்னி யாவலித்
தூற்றுறு கண்ணின னுருகு வான்றனைத்
தேற்றின னொருவழி சிறிது தேறிய
கூற்றுறழ் வரிசிலைக் குரிசில் கூறுவான். 2257

௫௮ எந்தையு மாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலாற்
சிந்தைவெங் கடுந்துயர் தீர்க லாதென்றான். 2258

௫௯ அவ்வுரை கேட்டலு மசனி யேறன்ன
வெவ்வுரை வல்லவண் மீட்டுங் கூறுவாள்
தெவ்வடு சிலையினாய் தேவி தம்பியென்
றிவ்வவ ரொடுநெடுங் கானத் [2]தானென்றாள். 2259

௬௦ வனத்தின னென்றவ ளிசைத்த மாற்றத்தை
நினைத்தன னிருந்தன னெருப்புண் டாலென
வினைத்திற மியாதினி விளைவ தின்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யாதென்றான். 2260

௬௧ [3]ஏங்கினன் விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காவலன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனிலோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதி னோவெனா. 2261

௬௨ தீயன விராமனே செய்யு [4]மேலவை
தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெல்லாம்
போயது தாதைவிண் புக்க பின்னரோ
ஆயதன் முன்னரோ வருளு வீரென்றான். 2262

௬௩ குருக்களை யிகழ்தலி னன்று கூறிய
செருக்கினா லன்றொரு தெய்வத் தாலுமன்
றருக்கனே யனையநம் மரசர் கோமகன்
இருக்கவே வனத்தினி னேகி னானென்றாள். 2263

௬௪ குற்றமொன் றில்லையேற் கொதித்து வேறுளோர்
செற்றது மில்லையே றெய்வத் தாலன்றேற்
பெற்றவ னிருக்கவே பிரிந்து கான்புக
உற்றதென் றெரிதர வுரைசெய் வீரென்றான். 2264

(பிரதி) 1 ஆற்றலன். 2 தெய்தினன். 3 ஏங்கின 4 மேலது.

கூ௫ வாக்கினுல் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்
காக்கினே னவனது பொறுக்க லாமையால்
நீக்கினுன் றன்னுயிர் நேமி வேந்தென்ருள். 2265

கூகூ சூடிய மலர்க்கரஞ் சொல்லின் முன்செவி
கூடின புருவங்கள் குனித்துக் கூத்துநின்
ருடின வுயிர்ப்புடை யழற்கொ ழுந்துகள்
ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே. 2266

கூஎ துடித்தன கபோலங்கள் சுற்றுந் தீச்சுடர்
பொடித்தன மயிர்த்தொளை புகையும் போாத்தது
மடித்தது வாய்நெடுந் தடக்கை [1]மண்பக
அடித்தன வொன்ருெடொன் றசனி யஞ்சவே. 2267

கூஅ பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும்
பூதங்கொள் கடலெனப் பொருவில் கூம்பொடு
மாதங்கம் வருகல மறுகிக் கால்பொர
ஓதங்கொள் கடலினின் றலைவ போன்றவே 2268

கூகூ [2]அஞ்சினர் வானவ ரவுண ரச்சத்தாற்
றஞ்சின [3]ரேணைப்பல சொரி மதத்தொளை
எஞ்சின [4]திசைக்கரி யிரவி மீண்டனன்
வெஞ்சினக் கூற்றுந்தன் விழிபு தைத்ததே. 2269

எ0 கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
கடியவ டாயெனக் கருது கின்றிலன்
நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்
இடியுரு மனையவெம் மொழி யியம்புவான். 2270

எக மாண்டன னெந்தையென் றம்முன் மாதவம்
பூண்டன னின்கொடும் புணர்ப்பி னுலென்ருற்
கீண்டிலென் வாயிது கேட்டு நின்றயான்
ஆண்டன னுமன்றே வரசை யாசையால். 2271

எ௨ நீயின மிருந்தனை யானு நின்றனன்
ஏயெனு மாத்திரத் தெற்று கின்றிலன்
ஆயவன் முனியுமென் றஞ்சி னேனலாற்
ருயெனும் பொருளெனைத் தடுக்கப் பாலதோ. 2272

(பிரதி) 1 மண்புக. 2 அஞ்சலின். 3 ரேணைப்பலர். 4 திசை களி னிரவி மீண்டன.

எ௩ சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்தொரு
பழியுடைத் தாக்கினன் பரதன் பண்டெனும்
மொழியுடைத் தாதலின் முறைமை வேண்டுமோ. 2273

எ௪ மாளவு முளனொரு மன்னன் வன்சொலான்
மீளவு முளனொரு வீரன் வெய்யபார்
ஆளவு முளனொரு பரத னாயினுற்
கோளல தறநெறி குறையுண் டாகுமோ. 2274

எ௫ †எவ்வர விதுவென விருத்திர் கற்பெனும்
அவ்வரம் பழித்துமை யகத்து ளேவைதத
வெவ்வரம் பொருதவே லரசை வேரறுத்
திவ்வரம் கொண்டநீ ரினியென் கொள்திரோ. 2275

எ௬ *நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரல்லீ ரின்ன மிருக்கப் பெறுவீரே
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்ன மெனக்கென் றருவீரே. 2276

எஎ ஒன்றும் பொய்யா மன்னனை வாயா லுயிரோடுந்
தின்றுந் தீரா வன்பழி கொண்டீர் திருவெய்தி
என்றும் நீரே வாழ வுகந்தீ ரவனேகக்
கன்றுந் தாயும் போல்வன கண்டுங் கழியீரோ. 2277

எஅ இறந்தான் றந்தை யெந்தை வரத்துக் கிழிவென்று
அறந்தா னீதென் றன்னவன் மைந்த னரசெல்லாந்
துறந்தான் றாயார் சூழ்ச்சியின் ஞால [1]மவனோடே
பிறந்தா னுண்டா னென்னுமி தென்றாற் பெறலாமால்.

எகூ மாளு மென்றே தந்தையை யுன்னான் வதைகொண்டான்
கோளு மென்றே லேயெனல் கொண்டா னதுவன்றேல்
மீளு மின்றே யென்னையு மெய்யே யுலகெல்லாம்
ஆளு மென்றே போயின னன்றே வரசாள்வான். 2279

அ0 ஓதா நின்ற திண்குண நன்னூ லுணர்வப்பால்
ஏதே னுந்தா னாகவெ னக்கே பழிசெய்வான்
நீதாய் நின்ற சிந்தனை செய்தா னவனென்னப்
போதா தோவென் றாயிவள் கொண்ட பொருளம்மா.

(பிரதி) 1 மவரோடே.

அக உய்யா நின்றே னின்னமு மென்முன் னுடன்வந்தோன்
கையார் கல்லைப் புல்லடகுண்ணக் கலமேற்றி
ஐயோ நானின் சாலியின் வெண்சோ றமுதென்ன
செய்யோ டுண்ணு நின்றது நின்றூர் நினையாரோ. 2281

அஉ வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னையன் றஞ்சின னஞ்சே யனையானைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவுற்றேன்
அல்லே னோநா னன்புடை யார்போ லழுகின்றேன்.

அங பாரோர் கொள்ளார் யானுயிர் பேணிப் பழிபூணேன்
நீரா தொன்றோ நின்பழி யூரிற் றிருநில்லாள்
ஆரோ டெண்ணிற் றுருரை கொண்டா யறமெல்லாம்
வேரோ டுங்கே டாக முடித்தென் விளைவித்தாய். 2283

அச கொன்றே னுனென் றுதையை மற்றுன் கொலைவாயால்
ஒன்றோ கானத் தண்ணலை யுய்த்தே யுலகாள்வான்
நின்றே னென்று னின்பிழை யுண்டோ பழியுண்டோ
என்றே னுந்தா னென்பழி மாயு மிடமுண்டோ. 2284

அரு கண்ணு லேயென் செய்வினை யின்னஞ் சிலர்காண்பார்
விண்ணோர்மண்ணோர் கொள்ளலர் வினைபழிபூண்டாய்
உண்ணு நஞ்சங் கோறல தென்னு முரையுண்டென்
றெண்ணு நின்றே னன்றி [1]யிரேனென் னுயிரோடே.

அசு என்றுன் பாவிக் கும்பி வயிற்றி னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக முற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றுங் காண மாதவ னானே முயல்கின்றேன். 2286
சிறந்தார்சொல்லுநல்லுரைசொன்னேன் செயலெல்லாம்

அஎ மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னை
துறந்தா யாயிற் றாயையு மாயை யுலகத்தே
பிறந்தா யாவை [2]யிதில தில்லைப் பிறிதென்றான். 2287

அஅ *இன்னன பலபல விளம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாலிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவனென் றெழுந்து போயினான்.

(பிரதி) 1 யிருந்தே. 2 யிதல.

௮௯ ஆண்டகை கோசலை யருகி னெய்தினான்
ஈண்டுமண் கிழிதர வீழ்ந்து கேழ்கிளர்
காண்டகு தடக்கையிற் கமலச் சீறடி
பூண்டனன் கிடந்திடை புலம்பி னானரோ. 2289

௯௦ எந்தையெவ் வுலகுள னெம்முன் யாண்டையான்
வெந்தது தமியனேன் மருக்கங் காணவோ
சிந்தையி லுறுதுயர் தீர்த்தி ராலெனும்
அந்தரத் தமரரு மழுது சோரவே. 2290

௯௧ அடித்தலங் கண்டிலன் யானென் னையனைப்
படித்தலங் காவலன் பெயரற் பாலனோ
பிடித்திலீர் போலுநீர் பிழைத்தி ராலெனும்
பொடித்தலந் தோளுறப் புரண்டு சோர்கின்றான். 2291

௯௨ கொடியவர் யாவருங் குலங்கள் வேரற
நொடிகிலர் யானது நுவல்வ தெங்ஙனங்
கடியவள் வயிற்றிலே பிறந்த கள்வனேன்
முடிகுவ னருந்துயர் முடிய வென்னுமால். 2292

௯௩ இரதமொன் றூர்ந்துபா ரிருளை நீக்குநம்
வரதனி லொளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதனென் றொருபழி படைத்த தென்னுமால்
மரகத மலையென மலர்ந்த தோளினான். 2293

௯௪ வாடொடு தாளையான் வானின் வைகிடக்
காடொரு தலைமக னெய்தக் கண்ணிலா
நாடொரு துயரிடை நைய வோவெனுந்
தாடொடு தடக்கையத் தரும மேயனான். 2294

௯௫ புலம்புறு குரிசிறன் புலம்ப னோக்கினாள்
குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை
நிலம்பொறை யாற்றல [1]னெஞ்சு தூய்தெனச்
சலம்பிறி துறமனந் தளர்ந்து கூறுவாள். 2295

௯௬ மையறு மனத்தொரு மாசு ளானலள்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐயநீ யறிந்திலை போலு மாலென்றாள். 2296

௯௭ தானூறு குரிசிலத் தாய்சொற் கேட்டலுங்
கோனூறு மடங்கலிற் குமுறி விம்முவான்
நானூறு நல்லற நடுங்க நாவினாற்
கூனூறு கட்டுரை [2]சொல்லல் மேயினான். 2297

௯௮ அறங்கெட முயன்றவ னருளி னெஞ்சினன்
பிறங்கடை நின்றவன் பிறர்கட் சிறியோன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்பவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன். 2298

௯௯ குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோன்
புரவல னொருபொருள் புவியின் வவ்வினோன்
விரவலர் வென்னிடை விழிக்க மீண்டுளோன்
இரவல ரிருநிதி யெறிந்து வவ்வினோன் 2299

௧௦௦ தழைத்ததண் டுளதியான் றலைவ னல்லனென்
றழைத்தவ ரருநெறி யந்த ணாளரிற்
பிழைத்தவர் பிழைப்பிலா மறையைப் [3]பின்னிநூல்
றிழைத்தவ ருளரேனு மிழுதை நெஞ்சினார். 2300

௧௦௧ தாய்பசி யுழன்றுயிர் தளரத் தான்றனிப்
[4]பாய்பெரும் பாழ்வயிற் றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான். 2301

௧௦௨ தாளடைந் துறைபவர் தம்மைத் தாமொரு
கோளுற வருதலிற் கொடுத்த பேதையும்
நாளினு [5]மறமறந் தவனு நண்ணுமம்
மீளரு நரகத்துள் கடிது வீழ்கயான். 2302

௧௦௩ பொய்க்கரி கூறினன் போரி லஞ்சினன்
கைப்படுத் தடைக்கலங் கரந்து வவ்வினோன்
எய்த்திடத் திட்டசெய தோனென் றின்னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவில் வீழ்கயான். 2303

௧௦௪ அந்தண ருறைபதி யனலி னூட்டினோன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்துளோன்
நிந்தனை தேவரி னிகழ்த்தி னோன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே. 2304

(பிரதி) 1 னெஞ்சக. 2 சொல்ல. 3 பின்னின். 4 பாயவரும. 5 நறைநுகர்ந்.

கூ௦௫ கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்வினேன்
நன்றியை மாய்த்தற மறந்த நாவினேன்
என்றிவ ருறுகதி யென்ன தாகவே. 2305

கூ௦௬ ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரைக்
[1]ஊறுகொண் டலைக்கத்தா னுயிர்கொண் டோடினேன்
சோறுதன் னயல்சிலர் பதைக்கத் துய்த்துளோர்
ஏறிய கதியிடை யானு மேறவே. 2306

கூ௦௭ ஏஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொல்கின னுயிரலைத் துண்ணு மாசையான்
அஃகலி லறநெறி யாக்கி [2]யோன்பொருள்
வெஃகிய மன்னன்வீழ் நரகின் வீழ்கயான். 2307

கூ௦௮ வழிவரு மரசிய லெய்தி யாகுமென்
றிழிவருஞ் சிறுதொழி லியற்றி யாண்டுதன்
வழிவரு தருமத்தை மறந்து மற்றொரு
பழிபடர் நெறிபடர் பதக னாகயான். 2308

கூ௦௯ கன்னியைக் கட்டழித் தேகி னேன்குரு
பன்னியை நோக்கினேன் பருகி னேனறை
பொன்னிருட் களவிடைப் பொருந்தி னேனெனும்
இன்னவ ருறுகதி யென்ன தாகவே. 2309

கூக௦ தஞ்சென வொதுங்கினோர் தனது பாருளோர்
எஞ்சின மனத்தினொ டிரியல் போயுற
வஞ்சிசென் றிறுத்தவன் வாகை மீக்கொள
அஞ்சிய மன்னவ னவனு மாகயான். 2310

கூகக மறுவில குலங்களை மாசிட் டேற்றினேன்
சிறுவிலை யெளியவ ருணவு சிந்தினேன்
நறியவென் றயலவர் நாவி னீர்வர
உறுபத நுங்கிய வொருவ னாகயான். 2311

கூகஉ ஊணல உண்வழி நாயி னுண்டவன்
ஆணலன் பெண்ணல னூர்கொ லாமென
நாணல னரகமுண் டென்னு நல்லுரை
பேணலன் பிறன்பழி பிதற்றி [3]யாகயான். 2312

(பிரதி) 1 கூறை. 2 யொண்பொருள். 3 வாழ்கயான்.

௧௧௩ வில்லினும் வாளினும் விரிந்த வாண்டொழில்
புல்லிடை யுகுத்தவன் பொய்மை யாக்கையைச்
சில்பக லோம்புவான் செறுநர் சீறிய
இல்லிடை யிடுபத னேற்க வென்கையால் 2313

௧௧௪ ஏற்றவற் கொருபொரு ளுள்ள தில்லென
மாற்றல னுதவலன் வரம்பில் பல்பகல்
ஆற்றலி னுழற்றுமோ ராத னெய்துமோர்
கூற்றுள நரகிலோர் கூறு கொள்கயான். 2314

௧௧௫ பிணிக்குறு முடையுடல் பேணிப் பேணலார்த்
துணிக்குறும் வயிரவாட் டடக்கை தூக்கிப்போய்
மணிக்குறு நகையிள மங்கை மார்கண்முன்
றணிக்குறு பகைஞரைத் தாழ்க வென்றலை. 2315

௧௧௬ கரும்பலர் சென்னலங் கழனிக் கானநாட்
டரும்பகை கவர்ந்துணை வாவி பேணினன்
இரும்பலர் நெடுந்தலை யீர்ந்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான். 2316

௧௧௭ * தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீயகானகந் திருவி னீங்கிமுன்
போயி னான்வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலா ளழுது புல்லினாள். 2317

௧௧௮ செம்மை நன்மனத் தண்ணல் செய்கையும்
அம்மை தீய்மையு மறித றேற்றினாள்
கொம்மை வெம்முலை குமுறு பாலுக
விம்மி விம்மினின் றழுது வீங்கினாள். 2318

௧௧௯ முன்னை நின்குல முதலி னோர்கடாம்
பின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவ வென்று வாழ்த்தினாள்
உன்ன வுன்னநெஞ் சுருகி நைகுவாள். 2319

௧௨௦ மருவில் மைந்தனே வள்ள லுந்தையார்
இறுதி யெய்தினா ளேழி றந்தன
சிறுவர் செய்கடன் செய்தி போதியென்
றுறுவல் மேயினா னுரையின் மேயினாள். 2320

கஉக அன்னை யேவினா ளடியி றைஞ்சினாள்
பொன்னின் வார்சடைப் புனித னோடும்போய்த்
தன்னை நல்கிய தரும நல்கினான்
பன்னு தொல்லறப் படிவ நோக்கினான். 2321

கஉஉ மண்ணின் மேல்விழுந் தலறி மாழ்குவான்
அண்ண லாழியா னவனி காவலன்
எண்ணெ யுண்டபொன் னெழில்கொண் மேனியைக்
கண்ணி னீரினாற் கழுவி யாட்டினான். 2322

கஉ௩ பற்றி யவ்வயிற் பரிவின் வாங்கினார்
சுற்று நான்மறைத் [1]துறைசொல் கேள்வியார்
கொற்ற மங்கலங் குமுற மன்னனை
மற்றோர் பொன்னின்மா மான மேற்றினார். 2323

கஉ௪ உந்து பொற்றடந் தேர்வ லானொடும்
மந்தி ரப்பெருந் தலைவர் மற்றுளோர்
தந்தி ரத்தனித் தலைவர் நண்பினோர்
வந்து சுற்றமுற் றழுது மாழ்கினார். 2324

கஉ௫ கரைசெய் வேலைபோ னகரி கையெடுத்
துரைசெய் பூசலிட் டுயிர்த்து ளங்குவார்
அரச வேலைசூழ்ந் தழுது கைதொழப்
புரசை யானையிற் கொண்டு போயினார். 2325

கஉ௬ சங்கு பேரிகை தழுவு சின்னமும்
எங்கு மெங்குமின் றிரங்கி யேங்குவ
மங்குறோய்நகர் மகளி ராமெனப்
பொங்கு கண்புடைத் தழுவ போன்றவே. 2326

கஉ௭ மாவும் யானையும் வயங்கு தேர்களுங்
கோவு நான்மறைக் குழுவு முன்செலத்
தேவி மாரொடுங் கொண்டு தெண்டிரை
தாவு வண்புனல் சரயு எய்தினார். 2327

கஉ௮ எய்தி நூலுளோர் மொழிந்த யாவையுஞ்
செய்து தீக்கடன் செலுத்திச் செல்வனை
வெய்தி னேற்றினார் வீர நுந்தைபாற்
பொய்யின் மாக்கடன் கழித்தி போயென்றார். 2328

(பிரதி) 1 துறைசெய்.

க௨௯ என்னும் வேலையி [1]லெழுந்த வீரனை
அன்னை தீமையா லரச னின்னையுந்
துன்னு துன்பத்தாற் றுறந்து போயினான்
முன்ன ரேயென முனிவன் கூறினான். 2329

க௩௦ துறந்து போயினா னுந்தை தோன்றனீ
பிறந்து பேரறம் பிழைத்த தென்றபோ
திறந்து போயினா னிருந்த தாண்டது
மறந்து வேறொரு மன்ன னேகொலாம். 2330

க௩க †என்று கொண்டுமா தவனி யம்பலும்
நின்று நின்றுதா னெடிது யிர்த்தலும்
நன்று நன்றெனா நகைமு கிழ்த்தனன்
குன்று குன்றுறக் குலவு தோளினான். 2331

க௩௨ இடிக்கண் வாளரா விடைந்த தாமெனப்
படிக்கண் வீழ்ந்தகம் பதைக்கு நெஞ்சினான்
தடுக்க லாகலாத் துயரந் தன்னுளே
துடிக்க விம்முவா னழுது சொல்லினான். 2332

க௩௩ உரைசெய் மன்னர்மற் றென்னில் யாவரே
இரவி தன்குலத் தெந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறிலேன்
அரசு செய்யவோ வாவ தாயினேன். 2333

க௩௪ பூவி னான்முகன் புதல்வ [2]னாதியாய்க்
காவின் மன்னர்கந் தரும நீதியார்
தேவ ராயினார் சிறுவ னாகியே
ஆவ நான்பிறந் தவத்த மானவா. 2334

க௩௫ துன்னு தாள்வளஞ் சுமந்த தாமரையிற்
பன்னு வான்குலப் பதடி யாயினேன்
என்னை யென்னையே யின்று காத்தவெம்
அன்னை யாரெனக் கழுது செய்தவா. 2335

க௩௬ என்று கூறிநோய் திடரின் மூழ்குமத்
துன்று தாரவற் கிளைய தோன்றலால்
அன்று நேர்கட னமைவ தாக்கினன்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான். 2336

(பிரதி) 1 லெழுந்து. 2 ராதியாய்த்.

௧௫௭ இழையு மாரமு மிடையு மின்னிடக்
குழையு மாமலர்க் கொம்ப னார்கடாந்
தழையு முள்ளியுந் தழுவு கானிடை
நுழையு மஞ்ஞைபோ லெரியின் மூழ்கினார். 2337

௧௫௮ அங்கி நீரினுங் குளிர [1]வம்புயத்
திங்கள் வாண்முகத் திருவி ளங்குறச்
சங்கை தீர்தவந் தழுவு கற்புடை
நங்கை மார்புகு முலக நண்ணினார். 2338

௧௫௯ அனைய செய்கையா லரசர் கோமகற்
கினைய செய்கையா விசைவ செய்துபின்
[2]மனையி னெய்தினான் மரபின் வாழ்வினை
வினையி னெய்துமோர் பிணியின் [3]வேலையான். 2339

௧௬௦ ஐந்து மைந்துநா ளேழு யாமென
மைந்தன் வெந்துயர்க் கடலின் வைகினான்
தந்தை தன்மையிற் றருமம் யாவையும்
முந்த நூலுளோர் முறையின் முற்றினான். 2340

௧௬௧ முற்று முற்றுவித் துதவி மும்மைநாற்
சுற்றம் யாவையுந் தொடரத் தோன்றினான்
வெற்றி மாதவன் வினைமு டித்தவக்
கொற்ற [4]வனொடுங் குமரற் கூறுவான். 2341

௧௬௨ மன்ன ரின்றியே வைகும் வைகருன்
ஒருன்மை யன்றெனத் துணியு நெஞ்சினார்
அன்ன மாநிலத் தறிஞர் தம்மொடும்
முன்னை மந்திரக் கிழவர் முன்னினார். 2342

௰. பள்ளிபடைப் படலம் முற்றும்

---

௧௧. ஆற்றுப் படலம்

௧ *வரன்முறை தெரிந்துணர் மறையின் மாதவத்
தருமறை [5]முனிவனும் யாண்டை யார்களும்
விரைவின்வந் தீண்டினார் விரகி னெய்தினார்
பரதனை வணங்கினார் பரியு நெஞ்சினார். 2343

(பிரதி) 1 வம்புபாய், வம்புவாய். 2 மனையுனெய்தினான். 3 வெஃகலான். 4 வேனொடுங் 5 முனிவனு மாண்டை.

௨ மந்திரக் கிழவரு நகர மாந்தருந்
தந்திரத் தலைவருந் தரணி வாணரும்
அந்தர முனிவரோ டறிஞர் யாவருஞ்
சுந்தரக் குரிசிலை மரபிற் சுற்றினார். 2344

௩ சுற்றின ரிருந்துழிச் சுமந்தி ரப்பெயர்ப்
பொற்றடந் தேர்வலான் புலமை யுள்ளத்தான்
கொற்றவக் குரிசிலைக் குறித்துக் கொள்கையான்
முற்றுணர் முனிவனை முகத்து நோக்கினான். 2345

௪ நோக்கினான் சுமந்திர னுவல லுற்றதை
வாக்கினா லன்றியே யுணர்ந்த மாதவன்
காக்குதி யுலகினின் கடனி தாமெனக்
கோக்கும ரனுக்கது தெரியக் கூறினான். 2346

௫ வேதிய ரருந்தவர் விருத்தர் வேந்தர்கள்
[1]ஆதியாய் நின்வயி னடைந்த காரியம்
நீதியுந் தருமமு நிறுவி நீயது
கோதறு குணத்தினாய் மனத்திற் கோடியால். 2347

௬ தருமமென் றொருபொரு டந்து நாட்டுதல்
அருமையென் பதுபிறி தறிதி யையநீ
இருமையுந் தருவதற் கியைவ தீண்டது
தெருண்மனத் துனக்கது சோர்வி லாமையால். 2348

௭ [2]வள்ளுறை வயிரவா ளரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலு நாடொறுந்
தெள்ளுறு மதியிலா விரவுந் [3]தேர்தரின்
உள்ளுறை யுயிரிலா வுடலு [4]மொக்குமால். 2349

௮ தேவர்தம் முலகினுந் தீமை செய்துழல்
மாவலி யவுணர்கள் வைகு நாட்டினும்
ஏவையு முலகமென் றிசைக்கி [5]னல்லவே
காவல்செய் தலைவரை யின்மை காட்டியால். 2350

௯ முறைதெரிந் தொருவகை முடிய நோக்குறின்
மறையவன் வகுத்தன மண்ணில் வானிடை
நிறைபெருந் தன்மையி னிற்ப செல்வன
இறைவனை யில்லன யாவுங் [6]காண்கில. 2351

(பிரதி) 1 ஆதியர். 2 வள்ளுறு. 3 தேர்தர. 4 மொக்குமே.
5 னல்லது. 6 காண்கிலம்.

க0 பூத்தநாண் மலரயன் முதல புண்ணியர்
ஏத்துவா னன்றள வின்று காறுமுன்
காத்தனர் பின்னொரு களைக ணின்மையால்
நீத்தன ருடைகல மீர தாகுமே. 2352

கக உந்தையு மிறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னைதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரர சளித்தி யன்னது
சிந்தனை யெமக்கெனத் தெரியக் கூறினான். 2353

கஉ தஞ்சமிவ் [1]வுலகநீ தாங்கு வாயெனச்
செஞ்செவே முனிவரன் செப்பக் கேட்டலும்
நஞ்சினை நுகரென நடுங்கு வாரினும்
அஞ்சின னயர்ந்தன னருவிக் கண்ணினான். 2354

கங நடுங்கின னுத்தடு மாறி நாட்டமும்
இடுங்கினன் மகளிரி லிரங்கு நெஞ்சினன்
ஒடுங்கிய வுயிரின னுணர்வு கைதரத்
துடங்கின னரசவைக் குள்ளஞ் சொல்லுவான். 2355

கச மூன்றுல கினுக்கொரு முதல்வ னும்முதற்
றோன்றின னிற்கயான் மகுடஞ் சூடுதல்
சான்றவ ருரைசெயத் தரும மாயதே
ஈன்றவள் செய்கையி லிழுக்குண் டாகுமோ. 2356

கரு அடைவருங் கொடுமையென் னன்னை செய்கையை
நடைவருந் தன்மைநீர் நன்றி தென்றலின்
இடைவரு காலமீண் டாண்டு நீத்தது
கடைவரு காலத்தின் கலியி னாட்சியோ. 2357

கசு வேத்தவை யிருந்தநீர் விமல னுந்தியிற்
பூத்தவன் முதலினர் புவியிற் றோன்றினோர்
மூத்தவ னிருக்கவே முறைமை யாளிலங்
காத்தவ ருளரெனிற் காட்டிர் காண்டிரால். 2358

கஎ நன்னெறி யென்னினு நானின் னானிலம்
மன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் றனைக்கொணர்ந் தலங்கன் மாமுடி
சொன்னநன் முறைமையிற் சூட்டல் காண்டிரால். 2359

(பிரதி) 1 வுலகைநீ.

௧௮ அன்றெனி லவனொடு மரிய கானிடை
நின்றினி தருந்தவ நெறியி னூற்றுவன்
ஒன்றினி உரைப்பினென் றுயிரை நீக்குவன்
என்றனன் னென்றலு மிருந்த பேரவை. 2360

௧௯ ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
ஏன்றன னிருநில மேந்த வேந்தனீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றென்றினர். 2361

௨௦ ஆழியை யுருட்டியு மவனி தாங்கியும்
வேள்வியை யியற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினொ டேழனு முலக மெஞ்சினும்
வாழியாய் நின்புக ழென்று வாழ்த்தினர். 2362

௨௧ குரிசிலுந் தம்பியைக் கூவிக் கொண்டலின்
முரசறைந் திந்நகர் முறைமை வேந்தனைத்
தருதுமீண் டென்பது சாற்றித் தானையை
விரைவினி லெழுகென விளம்பு வாயென்றான். 2363

௨௨ நல்லவ னுரைசெய நம்பி கூறலும்
அல்லலி [1]னழுந்திய வளவின் மாநகர்
ஒல்லென வொலித்ததவ் வுயிரில் யாக்கையைச்
சொல்லெனு மமுதினாற் றுளிர்த்த தென்னவே. 2364

௨௩ அவித்தவைம் புலத்தவ ராதி யாயுள
புவித்தலை யுயிரெலா மிராமன் பொன்முடி
கவிக்குமென் றுரைக்கவே களித்த தாலது
[illegible] லொலாம். 2365

௨௪ படுமுர [illegible]
[illegible]
[illegible]
உடுபதி வேலையி னுதயம் போன்றதே. [illegible]

௨௫ எழுந்தது பெரும்படை பேர [2]வேலையின்
மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கைகயன் மடந்தை யாசைபோற்
கழிந்தது துயர்நெடுங் காத லாண்டவே. 2367

(பிரதி) 1 னழுங்கிய. 2 வேலையுட.

௨௬ பண்ணின பகடுதேர் புரவி பண்டியும்
மண்ணினை மறைத்தன மலிந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன விரிந்த மாத்துகள்
கண்ணினை மறைத்தது கமலத் தோனையே. 2368

௨௭ ஈசனிவ் வுலகிழைத் தொழிக்கு நாண்மறை
ஓசையி னிமிர்ந்துள தொல்லென் பேரொலி
[1]காசெயிற் கரியவற் காண மூண்டெழும்
ஆசையி னிமிர்ந்ததவ் வணிக ராசியே. 2369

௨௮ [2]படியொடு திருநகர் துறந்து பன்மரஞ்
[3]செடியொடு தொடர்வன நோக்கிச் சீதையாங்
கொடியொடு நடந்தவக் கொண்ட லாமெனப்
பிடியொடு நடந்தன பெருங்கை வேழமே. 2370

௨௯ [4]சேற்றிள மரைமலர் சிறந்த வாமெனக்
[5]காற்றிளம் பொலிதரு கவினச் சென்றன
[6]ஏற்றிளம் பிடிக்குல மிகலி [7]யின்னடை
தோற்றிள மகளிரைச் சுமப்ப போன்றவே. 2371

௩௦ வேதனை வெயிற்கதிர் தணிக்க மென்மழைச்
[8]சீதநீ ரொடுநெடுங் கொடியுஞ் சென்றன
கோதைவெஞ் சிலையவன் கோலங் காண்கிலா
மாதரி னுடங்குவ வரம்பில் கோடியே. 2372

௩௧ வெண்மதி மீச்செல மேக மூர்ந்தென
அண்ணல்வெங் கதிரவ னாவில் மூர்த்தியாய்
மண்ணிடை யிழிந்தொரு வழிக்கொண் டானென
எண்ணரு மன்னவர் களிற்றி னேகின்றார். 2373

௩௨ தேர்மிசைச் சென்றதோர் பரவை செம்முகக்
கார்மிசைச் சென்றதோ ருவரிக் கார்க்கடல்
ஏர்முகப் பரிமிசை யேகிற் றெங்கணும்
பார்மிசைச் சென்றது பதாதி வேலையே. 2374

௩௩ தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்புகள்
வார்மிசைப் பம்பையுந் துடியு மற்றவும்
பேரியு மியம்பல சென்ற பேதைமை
பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே. 2375

(பிரதி) 1 காசையில் கரியவாற். 2 படியொடுக். 3 செடியொடுக். 4 சேற்றின. 5 காற்றின. 6 ஏற்றினம். 7 மென்னடை. 8 சீதநீர் கொடுநெடுங்.

௩௪ தாவரு நாண்முத லணிய லாற்றகை
[1]மேவரு கலன்களை வெறுத்த மேனியர்
தேவரு மருள்செயத் தெரியுங் காட்சியர்
பூவுதிர் கொம்பென மகளிர் போயினர். 2376

௩௫ அதிர்கடல் வையக மனைத்துங் காத்தவன்
விதிவரு மதிக்குடை மீதி லாப்படை
பொதிவரு [2]கவிகைமீன் பூத்த தாயினுங்
கதிர்மதி நீங்கிய கங்குல் போன்றதே. 2377

௩௬ செல்லிய செலவினிற் சிறிய திக்கெனச்
சொல்லிய சேனையைச் சுமந்த தேயெனில்
ஒல்லொலி வேலைநீ ருடுத்த பாரையோர்
மெல்லிய லென்றவர் மெலிய ரேகொலாம். 2378

௩௭ தங்குதண் சாந்தில கலவை சாத்தில
குங்குமங் கொட்டல கோவை முத்தில
பொங்கிளங் கொங்கைகள் புதுமை வேறில
தெங்கிள நீரெனத் தெரிந்த காட்சியே. 2379

௩௮ இன்றுணை யவர்முலை யெழுது சாந்தினும்
மன்றலந் தாரினு மறைந்தி லாமையால்
துன்றிளங் கொடிமுகிற் றூறு நீக்கிய
குன்றெனப் பொலிந்தன குவவுத் தோள்களே. 2380

௩௯ நறையகிற் கோதையர் நாட்செய் கோலத்தின்
துறையற வஞ்சனந் துறந்த நாட்டங்கள்
குறைவற நிகர்த்தன கொற்ற முற்றுவான்
கறையறக் கழுவிய கால வேலினே. 2381

௪௦ விரிமணி மேகலை விரகி னார்த்தில
தெரிவைய ரல்குற்று ரொலியிற் றேரெனப்
பரிபுர மார்க்கில பவளச் சீரடி
அரியின மார்க்கிலாக் கமல மென்னவே. 2382

௪௧ மல்கிய கேகயன் மடந்தை வாசகம்
நல்கிய தரிவையர் நடுவிற் கேகொலாம்
புல்கிய மணிவடம் பூண்கி லாமையால்
ஒல்கிய வொருவகைப் பொறையு யிர்த்தவே. 2383

(பிரதி) 1 மேவருங். 2 கவிகைமீப்.

௪௨ கோமகன் பிரிதலிற் கோல நீத்துளா
தாமரைச் செல்வியுந் தவத்தை மேவினாள்
காமனு மருந்துயர்க் கடலின் மூழ்கினான்
ஆமென நிகழ்ந்ததவ் வளவில் சேனையே. 2384

௪௩ மண்ணையும் வானையும் வயங்கு திக்கையும்
உண்ணிய நிமிர்கட லொக்கு மென்பதென்
கண்ணினு முகத்தினுங் கமலத் தண்ணறன்
எண்ணினு நெடிதவ ணெழுந்த சேனையே. 2385

௪௪ அலைகட னெடும்புன லறக் குடித்தலால்
நிலைபெற [1]நிலைநெறி நிறுத்த லானொடு
மலைகளை மண்ணுற வழுத்த லாற்றமிழ்த்
தலைவனை நிகர்த்ததத் தயங்கு தானையே. 2386

௪௫ அறிஞருஞ் சிறியரு மாதி [2]யந்தமாச்
செறிபெருந் தானையுந் திருவு நீங்கலால்
குறியவன் புனலெலாம் வயிற்றிற் கொண்டநாள்
மறிகட லொத்ததவ் வயோத்தி மாநகர். 2387

௪௬ பெருந்திரை நதிகளும் வயலும் பெட்புறு
மரங்களு மலைகளு மண்ணுங் கண்ணுறத்
திருந்தவி லயோத்தியாரு செல்வ மாநகர்
அருந்தெரு வொத்ததப் படைசெ லாறரோ. 2388

௪௭ தார்கடாங் கோதைதாஞ் சாந்தந் தான்றகை
ஏர்கடாங் கலவைதாங் கமழ்ந்தின் றென்பரால்
கார்கடாங் கடத்தன வனைய கைமலை
வார்கடா மில்லதம் மன்னன் சேனையே. 2389

௪௮ ஆளுலாங் கடலினு மகன் [illegible]
தோளுலாங் குணடல [illegible]
கேளுலா [illegible]
வாளுலா நுதலியா மருங்கு [illegible]தே. [illegible]

௪௯ மத்தள முதலிய வயங்கு பல் [illegible]
ஒத்தன சேறலி னுரையி லாமையிற்
சித்திரச் சுவர்நெடுஞ் சேனை திட்டிய
பத்தியை நிகர்த்ததப் படையி னீட்டமே. 2391

(பிரதி) 1 நிலைபெற. 2 அந்தமாய்ச.

௫௰ ஏடுறை கோதையர் விழியி னெய்தகோல்
ஊடுற வுரந்தொளைத் துயிரு ணாவகை
ஆடவர்க் கரும்பெருங் கவச மாயது
காடுறை வாழ்க்கையக் கண்ண னண்ணவே. 2392

௫௧ கனங்குழைக் கேகயன் மகளிற் கண்ணிய
சினங்கிடந் தெரிதலிற் றீர்ந்த வேகொலாம்
அனங்கனைங் கடுங்கணை யடரு மாடவர்
மனங்கிடந் துணங்கில மகளிர் கொங்கையே. 2393

௫௨ இன்னண நெடும்படை யேக வேந்தலுந்
தன்னுடை நெடுவரைச் சீரை சாத்தினான்
பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினான். 2394

௫௩ தாயரு மருந்தவத் தவருந் தந்தையின்
ஆயமந் திரியரு மளவில் சுற்றமுந்
தூயவந் தணர்களுந் தொடர்ந்து சூழ்வரப்
போயினன் றிருநகர்ப் புரிசை வாயிலே. 2395

௫௪ மந்தரைக் கூற்றமும் வழிச்செல் வாரொடும்
[1]உந்தினன் போதல்கண் டிளவ லோடிப்போய்
அந்தரத் தெற்றுவா னழன்று பற்றலுஞ்
சுந்தரத் தோளவன் விலக்கிச் செல்லுவான். 2396

௫௫ முன்னையர் முறைகெட முடித்த பாவியை
சினனபின் ளஞ்செய்து சினத்தைத் தீர்வனேல்
என்னையன் றன்னையன் றுறக்கு மென்றலால்
அன்னையென் றுணர்ந்திலெ னையநா னென்றான். 2397

௫௬ ஆதலான் முனியுமென் றைய னந்தமில்
வேதனைக் கூனியை வெகுண்டு மென்னினுங்
கோதிலா வருமறைக் குலவு நூல்வலாய்
போதுநா மென்றுகொண் டரிதிற் போயினான். 2398

௫௭ மொய்பெருஞ் சேனையு மூரி ஞாலமும்
கைகலந் தயலொரு கடலிற் சுற்றிட
ஐயனுந் தேவியு மிளைய வாளியும்
வைகின சோலையிற் றானும் வைகினான். 2399

(பிரதி) 1 உய்ந்தன்ன, உய்ந்தனள்.

௫௮ அல்லணை நெடுங்கணீ ரருவி யாடினன்
கல்லணை கிழங்கொடு கனியு முண்டிலன்
வில்லணை மருங்கிற்றன் வீரன் வைகிய
புல்லணை மருங்கிற்றான் பொடியின் வைகினான். 2400

௫௯ ஆண்டுநின் றாண்டகை யடியி னேகினான்
ஈண்டிய நெறியெனத் தானு மேகினான்
தூண்டிய தேர்களுந் துரக வெள்ளமுங்
காண்டகு கரிகளுந் தொடரக் காலினே. 2401

௧௧. ஆற்றுப் படலம் முற்றும்.

---

௧௨. கங்கை காண் படலம்.

௧ பூவிரி பொலன்கழற் பொருவி [1]றாளினான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர [2]சங்கம மென்னுந் தன்மையாம்
[3]யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். 2402

௨ எண்ணருஞ் சுரும்புதன் னினத்துக் கல்லது
நண்ணகன் பெரும்புனற் கங்கை யெங்கணும்
அண்ணல்வெங் கரிமதத் தருவி பாய்தலால்
உண்ணவுங் குடையவு முரித்தன் றாயதே. 2403

௩ அடிமிசைத் தூளிபுக் கடைந்த தேவர்தம்
முடிமிசைப் பரந்ததோர் முறைமை தேர்ந்துதான்
நெடிதுயிர்த் துண்டவு நீந்தி நின்றவும்
பொடிமிசைப் புரண்டவப் புரவி யீட்டமே. 2404

௪ பாலையேய் நிறத்தொடு பண்டு தான்படர்
ஓலையேய் நெடுங்கட லோடிற் றில்லையான்
மாலையேய் நெடுமுடி வரதன் சேனையாம்
வேலையே மடுத்தது கங்கை வெள்ளமே. 2405

௫ கான்றலை நண்ணிய காளை பின்றொடர்
தோன்றலை யவ்வழி தொடர்ந்து சென்றுழி
ஆன்றவ ருணர்த்திய வக்கு ரோணிகண்
மூன்றுபத் திரட்டியா யிரத்தின் முற்றுமே. 2406

(பிரதி) 1 றோளினான். 2 சங்கமே யென்னும். 3. யாவரு.

௬ அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான். 2407

௭ குகனெனும் பெயரினன் கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமுகக் கண்கடீ நாற நாசியிற்
புகையுறக் குனிக்குறும் புருவக் கோளினான். 2408

௮ மையற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயிற் கால னென்னும்பேர்
ஐயுறு மாறுதா னுருவ மாயினான்
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான். 2409

௯ கட்டிய [1]சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
இட்டிய தமரெனக் கிளருந் தோளினான். 2410

௰ எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுழையிற் கூவினான்
வலியிலா வுலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த தென்னவே. 2411

௧௧ மருங்குடைத் தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்குடை நெடும்படை யொல்லெ னார்ப்பினான்
அருங்கடை யுகந்தனி லசனி [2]மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே. 2412

௧௨ தோன்றிய புளினரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசரீ ரமைதிர் போர்க்கென்றான். 2413

௧௩ துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஓடியெறி யம்பிகள் யாவு மோட்டலீர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனாப் [3]பெயர்த்துங் கூறுவான். 2414

(பிரதி) 1 சுரிகையான் 2 யாமழை. 3 பெயர்த்துக்.

க௪ *அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரோ
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போயிடி னாயென வென்னையு மோதாரோ

கரு ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமையென்றவர்சொல்லியசொல்லொருசொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.

க௬ முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றன னென்றில னன்னது பேசாரோ
என்னிலை னென்னையி கழ்ந்ததிவ் வெல்லைக டந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர்வி டுஞ்சரம் வாயாவோ.

க௭ பாவமு நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பனை மண்ணுல காள்பவ ரெண்ணாரோ
ஆவது போகவென் னாள்வினைத் தோழமை தந்தான்மேற்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றோ.

க௮ அருந்தவ மென்றுணை யாளவி வன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டது மாயேனோ
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்றுக ழிக்குவ னென்கட னின்றோடே.

க௯ தும்பியு மாவுமி டைந்தபெ ரும்படை சூழ்வாரும்
வம்பிய னாரவர் வாள்வலி கங்கைக டந்தன்றோ
வெம்பிய வேடரு ளீர்துறை யோடம்வி லக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் போவது நன்றன்றோ.

௨0 போன படைத்தலை வீரர்த மக்கிரை போதாவிச்
சேனைகி டக்கிடு தேவர்வ ரிற்சிலை மாமேகஞ்
சேனைப டக்குடர் சூறைப டச்சுடர் வாளோடுந்
தானைப டத்தனி யானைப டக்கடை 'சாயேனோ. 2421

௨க நின்றகொ டைக்கையெ னன்பனு டுக்கநெ டுஞ்சிலை
அன்றுகொ டுத்தவண் மைந்தர்ப லத்தையெ னம்பாலே
கொன்றுகு வித்துநி ணங்கொள்பி ணக்குவை கோண்டோடித்
துன்றுதி ரைக்கடல் கங்கைம டுத்திடை தூராதோ. 2422

உஉ ஆடுகொ டிப்படை சாடிய றத்தவ ரேயாள
வேடுகொ டுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடுகொ டுத்தவென் னுயக னுக்கிவர் நாமாளுங்
காடுகொ [1]டுக்கில ராகியெ டுத்தது காணீரோ. 2423

உங மாமுனி வர்க்குற வாகிவ னத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்றும ணத்திடை கொள்ளேமால்
ஏமுனை யுற்றிடி லேழுக டற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ. 2424

உச என்பன சொல்லியி ரும்பன மேனிய ரேனோரும்
வன்பனை வில்லினன் மல்லுயர் தோளினர் வாள்வீரர்
கன்பனு நின்றனர் நின்றது கண்டரி யேறன்னான்
முன்பனின் வந்துமொ ழிந்தனன் மூரிய தேர்வல்லான்.

உரு *கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்தோழ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த [2]வேலையினான்
கொங்கலருந றுந்தண்டார்க்குகனென்னுங் குறியுடையான்

உசு கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண்மழைகாணுமணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்

உஎ தன்முன்னே யவன்றன்மை தந்தைதுணை முந்துரைந்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசில்லாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பன் யானேசென் றெனவெழுந்தான்

உஅ என்றெழுந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையார்ந்தான்
துன்றுகருந றுங்குஞ்சி யெயினர்கோன் [illegible]ணென்றான்

உகூ வற்கலையி னுடையானை மாசடைந்த [illegible]
நற்கலையின் மதியென்ன நகை[illegible]
கற்கனியக் கனிகின்ற [illegible]
விற்கையினின் றிடைவீழ விம்முற்று [illegible]ழுந்[illegible].

(பிரதி) 1 டுத்தில னுயலெ. 2 வேலையான்.

௩0 நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயலினின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழையென்றான்.

௩௧ உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையி னாவாயி னொருதனியே தான்வந்தான். 2432

௩௨ வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

௩௩ *தழுவிய புளினர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவிறு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களிக்குந் தந்தை முந்தையோர் முறையி னீண்டு
வழுவினன தனைநீக்கி மன்னனைக்கொணர்வா னென்றான்

௩௪ கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர னாகி
மீட்டுமண் ணதனில்வீழ்ந்தான் விம்மினா னுவகைபொங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூமேற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தான் புகல லுற்றான்.

௩௫ தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை [1]முகத்துத் தேக்கிப்
போயினை யென்ற போது புகழினோர் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா. 2436

௩௬ என்புகழ் கின்ற தேழை யெயினரோ மிரவி யென்பான்
தன்கதிர்க் கற்றைமற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ்ப் பெருமை நுங்கள் மரபினோர் பெருமையெல்லாம்
உன்புக ழாக்கிக்கொண்டா யுயர்குணத் துரவுத்தோளாய்

௩௭ எனவிவை யினிய மாற்ற மிசைவன பலவுங் கூறிப்
புனை கழற் புலவுவேற்கை புளினர்கோன் பொருவில்காதல்
அனையவற் கன்பு செய்தா னாரவற் கன்பிலாதார்
நினைவருங் [2]குணங்கொடன்றோ விராமன்மேனிமிர்ந்தகாதல்.

(பிரதி) 1 முகத்துக் கேற்பப். 2 குணங்கடம்மா லிராமன்மே.

௩௮ அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்றிசை செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்த தெம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இல்வழி வீர யானே காட்டுவ னெழுதி யென்றான். 2439

௩௯ காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலால் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

௪0 இயன்றதென் பொருட்டி னாலே யிடருனக் கென்ற போதும்
அயின்றனை யிருங்குங் காயு மமுதெனை வரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி துறந்திலென் சுடருங் காசுங்
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வன் யானே.

௪௧ தூண்டர நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லு வானோர்
நீண்டவன் றுயின்ற சூழ[1] லிதுவெனி னிவந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென வினிது கேட்டா னெயினர்கோ னிதனைச் சொன்னான்

௪௨ அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சோரக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்

௪௩ என்பத்தைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்ற
முன்பொத்த தோற்றத் [2]தோமில் யானென்று முடிவிலாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைத்து நின்றான்
[3]அன்பதுக் கெல்லையுண் டோ வழகிதென் னடிமை யென்றான்

௪௪ அவ்வழி யண்ண றானு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் றாக்குஞ் செருவிடைப் புளினர் கோவே
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை [4]யாயி னெம்மை
வெவ்விடர்க் கடலி னேற்றி வேந்தன்பால் விடுதி யென்றான்

௪௫ நன்றெனப் புளினர் வேந்த னண்ணினன் றமரை நாவாய்
சென்றுநீர் தருதி ரென்ன வந்தன சிவண்சேர் வெள்ளிக்
குன்றெனக் குணிக்கு மேருக் குழுவெனக் குபேரன் மானம்
ஒன்றென [5]நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான.

(பாடம்) 1 லிதுவென நிவந்த. 2 தோமேல். 3 இன்பத்துக்.
4 யாகி வெம்மை. 5 நாணப்.

௪௬ நங்கையர் நடையி லன்ன நாணுறு செலவி னாவாய்
கங்கையு மிடமில் லாமை மிடைவன கலந்த வெங்கும்
அங்கொடிங் கிழித்தி யேற்று மமைதியா லமரர் வையத்
திங்கொடங் கிழித்தி யேற்று மிருவினை யென்ன லான.

௪௭ வந்தன வரம்பி னாய் வரிசிலைக் குரிசில் மைந்த
சிந்தனை யாவ தென்று சிருங்கவே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவில் லானுஞ் சுமந்திரன் றன்னை நோக்கி
எந்தையித் தானை தன்னை யேற்றுதி விரைவி னென்றான்.

௪௮ குரிசில தேவ லாலக் குரகதத் தேர்வ லானும்
வரிசையில் வழாமை நோக்கி மரபுளி வகையி னேற்றிக்
கரிபரி யிரதங் காலாள் கணக்கில கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங் கங்கையா [1]றேறிற் றன்றே.

௪௯ இடிபடு முழக்க மேங்க வினமழை மகர நீரை
முடிவுற முகப்ப வூழி யிறுதியின் மொய்ப்ப போலக்
கொடியொ:பாடு வங்கம் வேலைக் கூம்பொடு படர்வ போல
நெடியகை யெடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம்.

௫௦ சங்கமு மகர மீனுந் தரளமு மணியுந் தள்ளி
வங்கநீர்க் கடலும் வந்து தன்வழி படர்வ மானப்
பொங்குவெங் களிறுநூக்கக்கரையொரீஇப்போயிற்றம்மா
கங்கையு மிராமற் காணக் காதலித் தென்ன மாதோ 2451

௫௧ கொடிஞ்சொடு தட்டு மச்சு மாழியுங் கோத்த மொட்டும்
நெடுஞ்சுவர்க் கொடியும் யாவு நெறிவரு முறையி னீக்கி
விடுஞ்சுவர்ப் புரவி யோடும் வேறும்வே றேற்றிச் சென்ற
மடிஞ்சபி னுயிர்கள் கூட்டும் வினையென வயிரத் தேர்கள்.

௫௨ நாலிரண் டாய கோடி நவையில நாவாய் தண்ணீர்ச்
சேல்திரண் டனைய [2]வாய கதியென நிமிரச் சென்ற
பால்திரண் டனைய மெ ய பயந்திரண் டனைய நெஞ்ச
கால்திரண் டனையகால கடுநடைக் கவினப் பாய்மா. 2453

௫௩ ஊடுறநெருக்கியோடத் தொருவர்முன் னொருவர்கிட்டிச்
சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர் துவன்றித்தோன்றப்
மாடிளங் களிமால் யானை யத்தியங் [3]கடையிற் குத்தக்
கோடுகள் மிடைந்ததொ ான மிடைந்தன ருவ ஞக்கொங்கை

(பிரதி) 1 றேறித்தன்றே. 2 வான. 3 குடையிற்.

ருச பாங்கினுத் தரிக மான படர்திரை தவழப் பாரின்
வீங்குநீ ரழுவந் தன்னுள் வீழ்மதக் கலுழி வெள்ளத்
தோங்கல்க டலைகடோன்ற வொளித்தவ ணுயர்ந்தகும்பம்
பூங்குழற் கங்கை நங்கை முலையெனப் பொலிந்த மாதோ.

ருரு பொலங்குழைமகளிர்நாவாய்போக்கினென்றென்றுதாக்க
மலங்கின ரிரண்டு பாலு மறுகினர் வெருவி நோக்க
அலங்குநீர் வெள்ளந் தன்னி லழுந்தலா லங்கு மிங்கும்
கலங்கின வெருவிப் பாயுங் கயற்குல நிகர்த்த கண்கள்.

ருசு இயல்வுறு செலவி னாவா யிருகையு மெயினர் தூண்டத்
துயல்வன துடுப்பு வீசுந் துவலைகண் மகளிர் மென்றா
சுயல்வுறு பரவை யல்கு லொளிப்பற வொளிப்ப வுள்ளத்
தயர்வுறு மதுகை மைந்தர்க் கயாவுயிர்ப் பொழிந்த தன்றே

ருஎ இக்கரை யிரைத்த சேனை யெறிகடன் முகந்த வேகி
அக்கரை யடைய வீசி யெறியன வணுகு நாவாய்
புக்கலை யாறி நன்னீர் பொறுத்தன போக்கிப் போக்கி
அக்கண முவரி மீளு மகன்மழை நிகர்த்த வம்மா. 2458

ருஅ அகிலிடு தூப மன்ன வாய்மயிற் பீலி யார்த்த
முகிழுடை முரண்மாத் தண்டு கூம்பென முகிலின் வண்ணத்
துகிலொடு தொடுத்த செம்பொற் றட்டிடை தொடுத்தமுத்தம்
நகுகொடி நெடிய பாயி னறுவெனச் சென்ற நாவாய்.

ருகூ ஆனனங் கமல மன்ன மின்னென வமுதச் செவ்வாய்த்
தேனலர் குழலா ரேறு மம்பிகள் சிதறு முத்தம்
மீனென விரிந்த கங்கை விண்ணெனப் பண்ணை முற்றி
வானவர் மகளி ரூரு மானமே நிகர்த்த மாதோ. 2460

சுo துளிபடத் துழாவு திண்கோற் றுடுப்பிரு காலிற் றோன்ற
நளிர்புனற் கங்கை யாற்றி னடந்தெனச் செல்லு நாவாய்
களியுடை மஞ்ஞை யன்ன கனங்குழை கயற்கண் மாதர்
ஒளிரடிக் கமலந் தீண்ட வுயிர்படைத் தனவே யொத்த.

சுக மய்யறு விசும்பில் மண்ணின் மற்றுமோ ருலகின் முற்றும்
மெய்வினை தவமே யன்றி வேறுமொன் றுளதோ ஈமோர்
செய்வினை நாவா யேறித் தீண்டலர் மனத்திற் செல்லு
மொய்விசும் போடே மாகத் தேவரின் முனிவர் போனார்.

௬௨* அறுபதி னாயிர மக்கு[1] ரோணியென்
[2]றிறுதிசெய் சேனையு மெல்லை தீர்நகர்
மறுவறு மாந்தரு மகளிர் வெள்ளமுஞ்
செறிதிரைக் கங்கையின் கிடக்கச் சென்றதே. 2463

௬௩ சுழித்துநீர் வருந்துறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக் கள்ள வாசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமே லேறினான் றானு மேறினான். 2464

* சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்றகோசலையைத் தொழுதுநோக்கிக்
கொற்றத்தார்க்குரிசிலிவ ராரென்றுகுகன்வினவவேந்தர்வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகுமீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தாற்பெருஞ்செல்வம்யான் பிறத்தலாற்றுறந்த பெரியாளென்றான்.

௬௫ என்றலுமே யடியின்மிசை நெடிதுவிழுந் தழுவானை யிவனாரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவற்கு மிலக்குவற்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற குரிசி லென்றான்.

௬௬ நைவீர லீர்மைந்தீ ரினித்துயரா னாடிழந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றன்றே விலங்கற் றிண்டோட்
கைவீரக் களிறனைய காளையிவன் றன்னோடுங் கலந்துநீங்கள்
ஐவீரு மொருவீர்போ லகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்.

௬௭ அறந்தானே யென்கின்றா ளயனின்றா னைநோக்கி யைய வன்பின்
நிறைந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத் [3]தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் பெருந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தாரு முளரென்னப் பிரியாதான் றனைப்பயந்த பெரியா ளென்றான்.

௬௮ சுடுமயா னத்திடைதன் றுணையேகத் தோன்றறுயர்க் கடலி லேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார் கலியேகக் கழற்கான் மாயன்
நெடுமையா னன்றளந்த வுலகெலாந் தன்வசமாய் நினைந்து [4]செய்யுங்
கொடுமையா லளந்தாளை யாரிவரென் றுரைசெய்யக் குரிசில் கூறும்.

படரெலாம்படைத்தானைப்பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்பாழ்த்தபாவிக்
௬௯] குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடலெலா முயிரிழந்த வெனத்தோன்று முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யுணர்ந்திலையோ விந்நின்றா ளென்னை யீன்றாள்.

(பிரதி) 1 ரோணியின். 2 இறுதிசெய். 3 தன்மை யுண்மை.
4 செய்த.

எ0 *என்னக் கேட்டவி ரக்கமில் லாளையும்
தன்னற் கையின்வ ணங்கினன் றாயென
அன்னப் பேடுசி றையில [1]தாய்க்கரை
துன்னிற் றென்னவும் சென்றது தோணியே. 2471

எக இழிந்த தாயர்சி விகையி னேகத்தான்
பொழிந்த கண்ணிற்பு துப்புனற் போயினான்
ஒழிந்தி லான்குக னுமுட னேகினான்
கழிந்த நண்பகற் காவதங் காலினே. 2472

எஉ பரத்தி [2]னீங்கும்ப ரத்துவ னென்னும்பேர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூரவ ணுகின னாண்டவன்
விருத்தி வேதிய ரோடுடன் மேவினான். 2473

கஉ. கங்கை காண் படலம் முற்றும்

கங. திருவடி சூட்டு படலம்

க வந்த மாதவத் தோனையம் மைந்தனுந்
தந்தை யாமெனத் தாழ்ந்துவ ணங்கினான்
இந்து மோலிய னானுமி ரங்கினான்
அந்த மில்நலத் தாசிகள் கூறினான். 2474

உ எடுத்த மாமுடி சூடியின் பாலியைந்
தடுத்த பேரர சாண்டிலை யையநீ
முடித்த வார்சடைக் கற்றையை மூசுதூ
சுடுத்து நண்ணுதற் [3]குற்றுள யாவதோ. 2475

ங சினக்க [4]டுப்பினச் சீற்றவெந் தீயினான்
மனக்க டுப்பினன் மாதவத் தோங்கலை
எனக்க டுப்பது செய்திலை யென்றசொல்
உனக்க டுப்பதன் றாலுர வோயென்றான். 2476

ச மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முழுநிலங் கொள்கிலேன்
இறைவன் கொள்கில னாமெனி லாண்டெலாம்
உறைவன் கானத்தொ ருங்குட னேயென்றான். 2477

(பிரதி) 1 வாய்க்கரை. 2 னிற்கும். 3 குற்றுளதி. 4 டுப்பின்.

௫ உரைத்த வாசகங் கேட்டலு முள்ளமெழுந்
திரைத்த காதலி ருந்தவத் தோர்க்கெலாங்
குரைத்த மேனியெ யாடுள்ளங் குளிர்ந்தவால்
அரைத்த சாந்துகொண் டப்பிய தென்னவே. 2478

௬ ஆய காலையி லையனைக் கொண்டுதன்
ஆய சாலையு றையிடந் துன்னினான்
நேய நேர்ந்த மைப்பென் விருந்தெனத்
தீயி னாற்றி செங்கையி னேச்சினான். 2479

௭ துறந்த செல்வ [1]னினையத் துறக்கந்தான்
பறந்து வந்துப டிந்தது பல்சனம்
பிறந்து வெரூரு லகுபெற் றாரென
மறந்து வைகினர் முன்னர்ந்தம் வாழ்வெலாம். 2480

௮ நந்த வில்லற நந்தின ராமென
அந்த ரத்தின ரம்பைய ரன்பினர்
வந்து வந்தெதி ரேத்தினர் மைந்தரை
இந்து விற்சுடர் கோயில்கொண் டேகினார். 2481

௯ நான நன்குரைத் தார்நளிர் வானிடை
ஆன கங்கைய கன்புன லாட்டினார்
கான மாமணிக் கற்பகந் தாங்கிய
ஊன மின்மல ராடை யுடுத்தினார். 2482

௧௦ கொம்பி னின்றநு டங்குறு கொள்கையார்
[illegible]ர்பொ றின்[illegible]ல ராசி திருத்தினார்
அம்ப ரத்தின ரம்பைய ரன்னவர்
உம்பர் கோனுக ரின்னமு தூட்டினார். 2483

௧௧ அஞ்ச டுத்தவ மளிய லத்தகப்
பஞ்ச டுத்தப ரிபுரப் பல்லவ
நஞ்ச டுத்தந யனியர் நவ்வியிற்
றுஞ்ச வத்தனை மைந்தருந் துஞ்சினார். 2484

௧௨ ஏந்து செல்வத்தி மையவ ராமெனக்
கூந்த [2]தெய்வம களிர்கொண் டாடினார்
வேந்த [3]ராதிசி வினையின் வீங்குதோண்
மாந்தர் [4]காறும்வ ரிசைவ ழாமலே. 2485

(பி - ம்) 1 வினைப. 2 லேழை. 3 ராதியர். 4 காறு மவரின்.

கங நந்த நந்த வனங்களி னுண்மலர்க்
கந்த முந்திய கற்பகக் காவினின்
றந்தர் வந்தென வந்திதன் கைதர
மந்த மந்த நடந்தது வாடையே. 2486

கச மான்ற ளிக்குல மாமதம் வந்துணத்
தேன்ற ளிர்த்தக வளமுஞ் செந்தளிர்
கான்ற நெற்றழைக் கற்றையுங் கற்பகம்
ஈன்ற ளிக்கநு கர்ந்தன யானையே. 2487

கரு [1]நரக தர்க்கற நல்கு நலத்தினீர்
கரக தக்கரி கானிமிர்ந் துண்டன
மரக தத்தினை கொ ழுந்தென வார்ந்தடல்
குரக தத்தின்கு ழாங்களுங் கொண்டவே 2488

கசு மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதில் செல்வத்து வைகினர் கொவ்வை வாய்த்
தீதில் செல்வம டந்தையர் சேடியர்
தாதி மாரெனத் தம்பணி கேட்பவே. 2489

கள இன்ன ரின்னணம் யாவருமிந்திரன்
துன்னு போகங்க டுய்த்தனர் தோன்றுமுன்
அன்ன காயுங்கி ழங்குமுண் டப்பகற்
பொன்னின் மேனிபொ டியுறப் போக்கினான். 2490

கஅ நீல நல்லிரு ணீங்கலு நீங்குறும்
மூல மில்கன விற்றிரு [2]முற்றுற
ஏல நல்வினை துய்ப்பவர்க் கீறுசெல்
கால் மென்னக் கதிரவன் றோன்றினன் [illegible]

ககூ ஆதி [illegible]
பாறி வியந்[illegible] செல் [illegible]
[illegible]
[illegible] ந்தன்ன [illegible].

உ0 [illegible] றெழுந்தது கன் [illegible]
வேலையன றனிகமே யென்று வி [illegible]
சோலையுங் கிரிகளுஞ் சுண்ண மாயயுறப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே 2493

(பிரதி) 1 நரகதற்கற. 2 முந்துற.

உக எழுந்தவத் துகளதி னெரியும் வெய்யவன்
அழுந்தின னவிப்பரும் வெம்மை யாறினான்
பொழிந்தன கரிமதம் பொடிவெங் கானகம்
இழிந்தன வழிநடந் தேரு னாமையே. 2494

உஉ வடியுடை யயிற்படை மன்னர் வெண்குடை
செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொறி
படியுடைப் பரலுடைப் பாலை மேலுயர்
கொடியுடைப் பந்தரிற் குளிர்ந்த தெங்குமே. 2495

உங பெருகிய செல்வநீ பிடியென் றுள்வயிற்
றிருகிய சீற்றத்தாற் செம்மை யானிறங்
கருகிய வண்ணலைக் கண்டு காதலின்
உருகிய தளிர்த்தன வுலவை யீட்டமே. 2496

உச வன[illegible] பாலையை மருத மாமெனச்
செ[illegible] சித்திர கூடஞ் சேர்ந்தது
ஒன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே. 2497

உரு தூளியின் படலையுந் துரகத் தோதையும்
மூளிருஞ் சினக்கரி முழங்கு மோதையும்
ஆளியின் குழுவினோ ராரவாரமுங்
கோளிரும் படையிதென் றுணரக் கூறவே. 2498

உசு எழுந்தன னிளையவ னேறினா னிலங்
கொழுந்துயர்ந் தனையதோர் நெடிய குன்றின்மேற்
செழுந்திரைப் பரவையைச் சிறுமை செய்தவக்
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான். 2499

உஎ பரதனிப் படைகொடு பார்கொண் [1]டாண்மறங்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காந்தலால்
விர[illegible]ழுற் றிருந்தவன் மேல்வந் தானிது
சரதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான். 2500

உஅ குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினான்
மதித்திலன் பரதனின் மேல்வந் தான்மதிட்
பதிப்பெருஞ் சேனையும் பரபபி னானே. 2501

(பிரதி) 1 டான்மறங்.

௨௯ கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றினைய சொல்லினான். 2502

௩0 இருமையு மிகழ்ந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு [1]மின்றொரு பின்பு வந்தவென்
னொருமையுங் கண்டினி துவத்தி யுள்ளநீ 2503

௩௧ படரெலாம் படிபடப் பருமயானையின்
திடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்தன குருதி யாறுகள்
கடலெலா நிறைப்பன பலவுங் காண்டியால். 2504

௩௨ கருவியுங் கைகளுங் கவச [2]மார்பமும்
உருவின வுயிரினோ டுதிரந் தோய்வில
தெரிவன சுடாக்கணை திசைக்கை யானைகள்
வெருவரச் செல்வன காண்டி வீரநீ. 2505

௩௩ கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை யலகை யற்றுகு
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடக நடிப்பன காண்டி நாதநீ. 2506

௩௪ பண்முது களிற்றொடு பரந்த சேனையின்
எண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையாள்
மண்முது காற்றவுங் காண்டி வள்ளனீ. 2507

௩௫ சிவந்தவான் குருதிக ணீந்தி நீந்தமேற்
சிவந்தசா தகரொடு சிறுகட் கூளியுங்
உவந்தமு முலகுநின் கைய தாயதென்
றுவந்தன குனிப்பன காண்டி யும்பர்போல். 2508

௩௬ சூழிவெங் கடகரி துரக ராசிகள்
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
வாழிவெங் குருதியா லாழ்ந்த வேலையவ்
வேழுமொன் றாகநின் றிரைப்பக் காண்டியால். 2509

(பிரதி) 1 முன்றொரு. 2 மாரமும்.

௩௭ தழைத்தவான் சிறையன தசையுங் கவ்வின
அழைத்தவான் பறவைக ளலங்கு பொன்வடிம்
பிழைத்தவான் பகழிபுக் கிரு மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போவ காண்டியால். 2510

௩௮ ஆளற வலங்குதே ரழிய வாடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளறத் தலையறப் புரவி தாரொடுந்
தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டியால். 2511

௩௯ [1]ஒருமகள் காதலிவ் வுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் முன்பெறும்
இருநில மாள்கைவிட் டின்றென் னேவலால்
அருநர காள்வது காண்டி யாழியாய். 2512

௪௰ வையகந் துறந்துவந் தடவி வைகுதல்
எய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல் கண்டுவந்தவ ளவையி னோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால். 2513

௪௧ அரஞ்சுட வழனிமி ரலங்கல் வேலினாய்
விரைஞ்சொரு நொடியினிவ் வனிக வேலையை
உரஞ்சுடு வடிக்கணை யொன்றில் வென்றுமுப்
புரஞ்சுடு மொருவனிற் பொலிவன் யானென. 2514

௪௨ இலக்குவ வுலகமோ ரேழோ டேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தருமையாம் விளம்ப வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால். 2515

௪௩ நங்குலத் துதித்தவர் நவைக ணீங்கினார்
எங்குலப் புறுவர்க ளெண்ணில் யாவரே
தங்குலத் தொருவருந் தரும நீங்கினார்
பொங்குலத் திரளொடும் பொருத தோளினாய். 2516

௪௪ எனைத்துள மறையவை யியம்பற் பாலவோ
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வய்ய வன்னது
நினைக்கிலை யென்வயி னேய நெஞ்சினால். 2517

(பிரதி) 1 ஒருமகன்.

௪௫ பெருமக னேவலிற் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை யென்வயிற்
றருமென நினைகையுந் தவிர்த்துத் தானையாற்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ. 2518

௪௬ பொன்னொடும் பொருகழற் பரதன் போந்துதான்
நன்னெடும் பெரும்படை நல்க லின்றியே
என்னொடும் பொருமென வியம்பற் பாலதோ
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய். 2519

௪௭ சேணுயர் தருமத்தி னறிவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியல் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயது பின்னுங் காண்டியால். 2620

௪௮ என்றன னிளவலை நோக்கி யேந்தலும்
நின்றனன் பரதனு நிமிர்ந்த தானையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலிற்
றன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான். 2521

௪௯ தொழுதுயர் கையினன் றுவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னவல மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான். 2522

௫0 கார்ப்பெரு மேனியக் கண்ணன் காட்டினான்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையனைத்
தேர்ப்பெருந் தானையப் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கென்றான்.

௫௧ எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழுஞ்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணினீர் நிலத்து வீழவே. 2524

௫௨ கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்துத னலத்தி னீங்கினாள்
வேதனைத் திருமகள் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது முன்சென்றான். 2525

௫௩ அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையு மென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் றாதையை யெதிர்கண் டென்னவே. 2526

௫௪ உண்டுகொ லுயிரென வொடுங்கி னானுருக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனலவன் சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே. 2527

௫௫ அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருமன முருகப் புல்லினான்
நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்
தயாமுத லறத்தினைத் தழீஇய தென்னவே. 2528

௫௬ புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினான் பலவு முன்னினான்
அல்லவி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளவன் வலிய னேயென்றான். 2529

௫௭ அரியவ னுரைசெயப் பரத னையநின்
பிரிவெனும் பிணியினா லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னாற்றனக்
குரியமெய் நிறுவிப்போ யும்ப ரானென்றான். 2530

௫௮ விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொற்
புண்ணுழை யயிலெனச் செவிபு காமுனங்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவன்
மண்ணிடை விழுந்தனன் வானி னும்பரான். 2531

௫௯ இருநிலஞ் சேர்ந்தன னிறையு யிர்த்திலன்
உருமினை யரவென வுணர்வு நீங்கினான்
அருமையி னுயிர்வர வயர்வு யிர்த்தகம்
பொருமினன் பன்முறை புலம்பி னானரோ. 2532

௬௦ *நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் றாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையோ
அந்தோ வினிவாய்மைக் காருளரோ மெய்யுற்றார். 2533

௬௧ சொற்பெற்ற நோன்பிற் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி [1]நவைநீங்க நீயியற்றி
எற்பெற்ற நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

௬௨ மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந்தாரோய் பொறையுயிர்த்தவா றிதுவோ
உன்னுயிர்க்குக் கூற்றா யரசாள வுற்றேனே
[2]மின்னுயிர்க்குத் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வேலோய்.

௬௩ எம்பரத்த தாக்கி யரசுரிமை யிந்தியங்கள்
தம்பரத்த தாக்கித் தவமிழைத்த வாறிதுவோ
சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளிச் சதமகற்கன்
றம்பரத்தி னீங்கா [3]வரசீந்த வாழியாய். 2536

௬௪ வேண்டு திறத்தாரும் வேண்டா வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லால் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தே நோக்கவோ. 2537

௬௫ தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுவந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய். 2538

௬௬ வண்மையு மானமும் வானவர்க்கும் பேர்க்ககலாத்
திண்மையுஞ் செங்கோ னெறியுந் திறம்பாத
உண்மையு மெல்லா முடனேகொண் டேகினையோ
தண்மை தகைமதிக்கு [4]மீந்த தனிக்குடையோய். 2539

௬௭ என்றெடுத்துப் பற்பலவும் பன்னி யிடருழக்குங்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவருஞ்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவசிட்டன் றேற்றினான்.

௬௮ பன்னரிய நோன்பிற் பரத்துவனே யாதியாம்
பின்னுசடை யோரும் பேருலக மோரேழின்
மன்னவரு மந்திரிய ரெல்லோரும் வந்தடைந்தார்
தன்னுரிமைச் சேனைத் தலைவோரும் வந்தடைந்தார். 2541

(பிரதி) 1 நவையறநின் கண்ணியற்றி. 2 மின்னுயிர்த்துத்.
3 வரசீய்ந்த. 4 மீய்ந்த தனிக்கொடையோய்.

௬௯ மற்றும் வரற்பால ரெல்லாரும் வந்தடைந்து
சுற்று மிருக்கு மமைதியினிற் றுன்புழக்குங்
கொற்றக் குரிசின் முகநோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான். 2542

௭௦ *துறத்தலு நல்லறத் தொழிலு மல்லது
புறத்தொரு பொருளிலை பொருந்து மன்னுயிர்
இறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ. 2543

௭௧ உண்மையில் பிறவிக ளுலப்பில் கோடிகள்
தண்மையில் வெம்மையிற் றழுவி னூறெனும்
வண்மையை நோக்கிய வலிய கூற்றின்பாற்
[1]கண்மையு முண்டெனக் கருதற் பாலதோ. 2544

௭௨ பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு சிறப்பினில் வையம் யாவையும்
அறுபதி னுயிர மாண்டு மாண்டவன்
இறுவது கண்டதற் கிரங்க வொண்ணுமோ. 2545

௭௩ சிலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையுஞ்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கினோர்
மூலம்வந் துதவிய மூவர்க் காயினுங்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ. 2546

௭௪ கண்முதற் காட்சிய கரையி லாதன
உண்முதற் பொருட்கெலா மூற்ற மாயின
மண்முதற் பூதமு மாயு மென்றபோ
தெண்முத லுயிர்க்கெலா மியம்ப வேண்டுமோ. 2547

௭௫ புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதிதன் றீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினால்
அண்ணலே வீவதற் கழிவுண் டாகுமோ. 2548

௭௬ இவ்வுல கத்தினு மிடரு ளோகிடந்
தவ்வுல கத்தரு நரகி லாழ்ந்துதம்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்
எவ்வுல கிற்செல வென்ன லாகுமோ. 2549

(பிரதி) 1 கண்மைய. 2 சிறப்பினில்

எஎ உண்டுகொ லீதுவல துதவி நீசெய்வ
[1]தெண்டரு குணத்தினாய் தாதை யென்றலாற்
புண்டரீ கத்தனி முதற்கும் போக்கரும்
விண்டுவி னுலகிடை விளங்கி னானரோ. 2550

எஅ ஐயநீ யாதொன்று மவலிப் பாயலை
உய்திற மவர்க்கினி யிதனின் வேறுண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேர்ந்தநின்
கைகளா லோம்புதி கடனெ லாமென்றான். 2551

எகூ விண்ணுநீர் மொக்குளின் விளியு மாக்கையை
எண்ணினீ [2]யழுங்குத லிழுதைப் பாலதாற்
கண்ணினீ ருகுத்தலிற் கண்ட தில்லையான்
மண்ணுநீ ருகுத்திநீ மலர்க்கை யாலென்றான். 2552

அ0 என்றபி னேந்தலை யேந்தி வேந்தரும்
பொன்றிணிந் தனசடைப் புனித னோடும்போய்ச்
சென்றனர் செறிதிரைப் புனலிற் செய்கென
நின்றன னிராமனு நெறியை நோக்கினான். 2553

அக புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையன் சடங்கு காட்டத்தான்
முக்கைநீர் விதியது முறையி னீந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறு முணவை நல்குவான். 2554

அஉ ஆனவன் செய்கடன் பிறவு மாற்றிப்பின்
மானவன் [3]மந்திரித் தலைவர் மன்னவர்
ஏனையர் பிறர்களுஞ் சுற்ற வேகினன்
சானகி யிருந்தநற் சாலை யெய்தினான். 2555

அங எய்திய வேலையிற் றமிய ளெய்திய
தையலை நோக்கியச் சாலை நோக்கினான்
கைகளிற் கண்மலர் புடைத்துக் கான்மிசை
ஐயனைப் பரதன்வீழ்ந் தரற்றி னானரோ. 2556

அச வெந்துயர் தொடர்ந்தெழ விம்மி விம்மிநீர்
உந்தின நிரந்தர மூற்று மாறில
[4]சிந்திய குருதியைச் செம்மல் [5]சேந்தகண்
இந்தியங் களிலெறி கடலுண் டென்னவே. 2557

(பிரதி) 1 தெண்டருங். 2 ரழுங்குத. 3 மந்திரத். 4 சிந்தையை. 5 சேர்ந்தகண்.

௮௫ அந்நெடுந் துயருறு மரிய வீரனைத்
தன்னெடுந் தடக்கையிலி ராமன் றாங்கினான்
நன்னெடுங் கூந்தலை நோக்கி நாயகன்
என்னெடும் பிரிவினாற் றுஞ்சி னானென்றான். 2558

௮௬ துண்ணெனு நெஞ்சின டுளங்கி னாடுணைக்
கண்ணெனு நெடுங்கடல் கலுழி கான்றிட
[1]மண்ணெடுஞ் செல்விமேல் வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியாற் பன்னி யேங்கினாள். 2559

௮௭ கன்னகு திரள்புயக் கண்ணன் பின்செல
நன்னக ரொத்தது நடந்த கானமும்
மன்னவன் [2]றுஞ்சின னென்ற மாற்றத்தால்
அன்னமுந் துயர்க்கடற் கடிவைத் தாளரோ. 2560

௮௮ ஆயவ டன்னைநேர்ந் தங்கை யேந்தினர்
தாயரின் முனிவர்தந் தருமப் பன்னியர்
துயநீ ராட்டினார் துயர நீக்கினார்
நாயகற் சேர்த்தினார் நவையி னீங்கினார். 2561

௮௯ [3]தேன்றருந் தெரியலச் செம்ம றால்வரை
ஈன்றவர் மூவரோ டிருமை நோக்குறுஞ்
சான்றவர் குழாத்தொடு தரும நோக்குறுந்
தோன்றல்பால் சுமந்திரன் றொழுது தோன்றினான்.

௯0 *எந்தை யாண்டையா னியம்பு வீரென
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்த நின்றனன் சேந்த கண்ணினீர்
முந்தை நான்முகத் தவற்கு முந்தையான். 2563

௯௧ தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
ஓய்வி றுன்பினா லுலறி யேங்கினார்
ஆய சேனையு மணங்க னார்களுந்
தீயில் வீழ்ந்தன மெழுகிற் றேம்பினார். 2564

௯௨ பின்னர் வீரரைப் பெற்ற பற்றியப்
பொன்ன னார்களுஞ் சனகன பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினார்
இன்னல் வேலைபுக் கிடைந்த பூங்குவார். 2565

(பிரதி) 1 மண்ணெனுஞ் செவிலிமேல். 2 துஞ்சினை 3 தேன்றரு.

௯௩ சேனை வீரருந் திருநகர் மாநகர்
மான மாந்தரு மற்று ளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவருங்
கோனை யெய்தினார் குறையுஞ் சிந்தையார் 2566

௯௪ படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடஞ்செய் தங்குலத் திறைவ னாதலாற்
றடஞ்செய் தேரினான் றானு நீரினாற்
கடஞ்செய் வானெனக் கடலின் மூழ்கினான். 2567

௯௫ அன்று தீர்ந்தபின் னரச வேலையுந்
துன்று செஞ்சடைத் தவருஞ் சுற்றமுந்
தன்று ணைத்திருத் தம்பி மாரொடுஞ்
சென்று சூழவாண் டிருந்த செம்மலான். 2568

௯௬ வரதன் றாஞ்சினான் வைய மாணையாற்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனாப் பரிந்து கூறினான். 2569

௯௭ என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கிநீ
அன்றி யாவரே யறத்து ளோரதிற்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான். 2570

௯௮ மனைக்கொன் றாதவள் வரத்தி னின்னையும்
நினைக்கொன் றாநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றாடருந் தனைய னாதலால்
எனக்கொன் றாதவ மடுப்ப தெண்ணினால். 2571

௯௯ ே ாவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியான்
சாவ தோர்கிலன் றவஞ்செய் வேனலேன்
யாவ னாகவிப் பழிநின் றேறுவேன். 2572

௧௦௦ நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருட்
டுறையி னீங்கிய வறமுந் தொல்லையோர்
முறையி னீங்கிய வரசு முந்துமோ. 2573

கக பிறந்து நீயுடைப் பிரிவி ரெல்லறந்
துறந்த மாதவந் தொடங்கு வாயென்றான்
மறந்து நீதியிற் [1]றிறம்பி வாளிற்கொன்
றறந்தின் றானென யான தாள்வனே. 2574

கஉ தொகையி லன்பினு லிறைவன் றஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனு யரசு வென்றயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன். 2575

கங உந்தை தீமையு முலகு றுதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனுச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினன். 2576

கச சொற்ற வாசகத் துணிவு ணர்ந்தபின்
இற்ற தோவிவன் மனமென் றெண்ணுவான்
வெற்றி வீரநான் விளம்பக் கேளென
முற்ற நோக்கினன் மொழிதன் மேயினன். 2577

கரு முறையும் வாய்மையு முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறமு மாதியாந்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
இறைவ ரேவலா லியைவ காண்டியால். 2578

கசு பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவருங்
குரவ ரேயெனப் பெரிது கோடியால். 2579

கஎ அந்த மில்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினல்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால். 2580

கஅ தாய்வ ரங்கொளத் தந்தை யேவலான்
மேய வெங்குலத் தரும மெய்தினேன்
நீவ ரங்கொளத் தீர்த னீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறியு மேவினாய். 2581

(பிரதி) 1 திறம்புவாளிற்கொன்.

௧௦௯ தன்னைய ராயினார் தாதை தாயரை
வினையி னல்லசொ லிசையை [1]வேய்தலோ
நினைத லோவிடா நெடிய வன்பழி
புனைத லோவையா புதல்வ ராதருன். 2582

௧௧௦ இம்மை பொய்யுரைத் திவறி யெந்தையார்
அம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை வெம்முலைக் குவையில் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வனே. 2583

௧௧௧ வரனி லுந்தைசொல் வரத்தி னாலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனி னிற்பின்வந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்தி யையநீ. 2584

௧௧௨ முன்னர் வந்துதித் துலக மூன்றிலும்
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யா னுனக்கின் றீய்ந்தனன்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடெனா. 2585

௧௧௩ மலங்க வையகம் வருந்தி [2]வைகநீ
உலங்கொ டோளுனக் குறுவ செய்தியோ
கலங்கு ருவணங் காத்தி போந்தெனாப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினான். 2586

௧௧௪ பசைந்த சிந்தைநீ பரிவில் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யேவசைக்
கசந்த வெந்தையா ரருள வன்றுநான்
இசைந்த வாண்டெலா [3]மன்னொ டொன்றுமோ. 2587

௧௧௫ வாய்மை யென்னுமீ தன்றி வையகந்
தூய்மை வேறுமோ ருண்மை சொல்லுமோ
தீமை தானதிற் றீர்த லன்றியே
ஆமெய் யாகவே றெண்ணு லாகுமோ. 2588

௧௧௬ எந்தை யேயவாண் டேழொ டேழெனா
வந்த காலநான் வனத்து வைகநீ
தந்த பாரகந் தாங்க மேன்மையால்
அந்த நாளெலா மாளென் றாணையால். 2589

(பிரதி) 1 வெய்தலோ. 2 வைகனீ. 3 மின்னொ

ககஎ *மன்னவ னிருக்க வேறோர் மணியணி மகுடஞ் சூடு
கென்னயா னியைந்த தன்று னேயது மறுக்க வஞ்சி
அன்னது நினைந்து நீயென் றுணையை மறுக்க லாமோ
சொன்னது செய்தி யைய துயருழந் தயர லென்றான்.

ககஅ ஒள்ளியோனினையவெல்லாமுரைத்தலு முரைக்கலுற்ற
பள்ளநீர் வெள்ள மன்ன பரதனை விலக்கிப் பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை சிக்குறச் சிந்தைநோக்கி
வள்ளியோய்கேட்டியென்று வசிட்டமாமுனிவன்கூறும்

கககூ *ஔரகன் புனலினின் றரியெனார் கேழலாய்
இளையெனுந் திருவினை யெய்தி னானரோ
உளைவரும் பெருமையோ ரெயிற்றின் னுட்புரை
வளரிளம் பிறையிடை மறுவிற் றோன்றவே. 2592

கஉ0 ஆதியி னவதியி னமைதி யைம்பெரும்
பூதமும் வெளியொழித் தெவையும் புக்கபின்
நாதனிவ் வகன்புன னண்ணி நண்ணருஞ்
சோதியாந் தன்மையிற் [1]றுயில மேயினான். 2593

கஉக ஏற்றவித் தன்மையா லமரர்க் கின்னமு
தூற்றுடைக் கமலவ னுந்தி யுந்திய
நாற்றிதழ்க் கமலத்தி னெய்தின் யாவையுந்
தோற்றுவித் துதவிட முதல்வன் றோன்றினான். 2594

கஉஉ அன்றவ னுலகினை யளிக்க வாகிய
உன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்கள்
இன்றுள வினுமுறை யிகந்து ளாரிலை
ஒன்றுள துறையினை [2]முணர்த்தல் கேட்டியால். 2595

கஉங இதவிய வியற்றிய குரவர் யாரினும்
[3]மதவியல் களிற்றினாய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய வொருவனே யுயரு மென்பரால். 2596

கஉச என்றலால் யானுனை யெடுத்த விஞ்சைகள்
ஒன்றலா தனபல வுதவிற் றுண்மையால்
அன்றெலா மின்றெனா தாணை யையநீ
நன்றுபோந் தருளுனக் குரிய நாடென்றான். 2597

கஉரு கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கணான்
ஆறிய சிந்தனை யறிஞ வொன்றுரை
கூறுவ துளதெனக் கூறன் மேயினான் 2598

(பிரதி) 1 துயிறல். 2 முணர்த்தக். 3 மதவிய.

கஉசு சான்றவ ராகதங் குரவ ராகதாய்
போன்றவ ராகபொய்ப் புலைய ராகதான்
றேன்றரு மலருளான் சிறுவ செய்வனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ. 2599

கஉஎ தாய்பணித் துவந்தது தந்தை செய்கென
ஏயவப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையரிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிபவை நல்ல வல்லவோ. 2600

கஉஅ முன்னுறப் பணித்தவர் மொழியை யானது
சென்னியிற் கொண்டனன் செய்வ னென்றபின்
பின்னுறப் பணித்தனை பெருமை யோயெனக்
கென்னினிச் செய்வதென் றுரைசெ யீங்கென்றான்.

கஉகூ முனிவனு முரைப்பதோர் முறைமை கண்டிலன்
இனியென விருந்தன னிளைய மைந்தனும்
அனையதே வாண்டவ ராள்க நாடு நான்
பனிபடர் காடுடன் படர்தன் மெய்யென்றான். 2602

கங0 அவ்வழி யிமையவ ரறிந்து கூறினார்
இவ்வழி யிராமனை யிவன்கொண் டேகுமேற்
செவ்வழித் தன்றுநஞ் செயலென் றெண்ணினார்
கவ்வையர் விசும்பிடைக் கழறி னாரரோ. 2603

கஙக ஏத்தரும் பெருங்குணத் திராம னிவ்வழி
போந்தருந் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தவாண் டேழிரண் டேழு மந்நிலங்
காத்தலுன் கடனிது கடமை யென்றனர். 2604

கஙஉ வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தன னீயென் னாணையால்
ஆனதோ ரமைதியி னளித்தி பாரெனத்
தானவ னறுமலர்த் தடக்கை பற்றினான். 2605

கஙங ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமது சரதநின் னாணை சாற்றினேன். 2606

கஙச என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பில னன்னது துணிவை நோக்கினான்
அன்பினி னுருகின னன்ன தாகென்றான்
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான். 2607

௧௩௫ விம்மினன் பரதனும் வேறுசெய்வ தொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மைநின் றிருவடித் தலந்தந் தீகென
எம்மையுந் தவிர்ப்பன விரண்டு நல்கினான். 2608

௧௩௬ அடித்தல மிரண்டையு மழுத கண்ணினன்
முடித்தல மிவையென முறையிற் சூடினான்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினாள்
பொடித்தல மிலங்குறப் பொலங்கொண் மேனியான்.

௧௩௭ ஈன்றவர் முதலிய வெண்ணில் சுற்றமுஞ்
சான்றவர் குழுவொடு தவத்து ளோர்களும்
வான்றரு சேனையு மற்றுஞ் சுற்றுற
மூன்றுநூல் கிடந்ததோண் முனியும் போயினான். 2610

௧௩௮ பண்டைநா றெரிபரத் துவனும் போயினாள்
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினார்
எண்டிசை வானரு மிரங்கிப் போயினார்
கொண்டல தானையாற் குகனும் போயினான். 2611

௧௩௯ பாதுகந் தலைக்கொடு பரதன் பைம்புனல்
மோதுகங் கையின்கரை கடந்து முந்தினான்
போதுகுங் கடிபொழி லயோத்தி புக்கிலன்
ஓதுகங் குலினெடி துறக்க நீங்கினான். 2612

௧௪0 நந்தியம் பதியிடை நாதன் பாதுகஞ்
செந்தனிக் கோன்முறை செலுத்து சிந்தையான்
இந்தியங் களையவித் திருத்தன் மேயினான்
அந்தியும் பகலுநீ ரருத கண்ணினான். 2613

௧௪௧ குன்றினி லிருந்தன னென்னுங் கொள்கையால்
நின்றவர் நலிவரா னேசத் தாரெனத்
தன்றுணைத் தம்பியுந் தானுந் தையலுந்
தென்றிசை யிராமனுஞ் சேறன் மேயினான். 2614

திருவடி சூட்டு படலம் முற்றும்.

திரு வயோத்தியா காண்டம் முற்றும்.

ஸ்ரீ:

திருஞானமுத்திரைக்கோவை எண். 16

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

ஆரண்ய காண்டம்

ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.
வக்கீல்
வண்ணார்பேட்டை
பரிசோதித்தது.

பதிப்பாசிரியர்:
பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்
ஆழ்வார்திருநகரி

Copy Right] 1944 [ரூ. 2—4—0

திருஞான முத்திரைக் கோவைகள்

கோவை எண்.		ரூ.	அ.
1	ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ...	0	4
2	ஸ்ரீ சடகோபன் சந்திர கலாமாலை	0	1
3	ஸ்ரீ சடகோபன் திவ்ய சரித்திரம்	2	0
	ஆழ்வார்திருநகரி தேவராஜ பாரதிகளியற்றியது (சில ஆண்டுகளுக்குமுன் B A வகுப்புக்குப் பாடமாக உள்ளது)		
4	ஸ்ரீ ராமாயணம் (பாசுரப்படி) இனாம்		
5	தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான் சந்திர கலாமாலை ...	0	1
6	ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ்	0	4
7	திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்	0	4
8	குருகூர்ப்பள்ளு	0	6
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது		
9	ஆழ்வார்கள் வைபவம் (முதலாழ்வார், பெரியாழ்வார்) ...	0	6
10	தென்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணி மாலைகள் ...	0	6
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது		
11	திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்	0	8
	ராவ்சாகிப் மு. ராகவையங்கார் ஸ்வாமி பரிசோதித்தது		
12	கம்ப ராமாயணம் பாலகாண்டம் (பிரதி பேதங்களுடன் தாடகை வதைப் படலமுடிய)	0	10
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., P. N. அப்புசாமி அய்யரவர்கள், B. A., B. L., பரிசோதித்தது		
13	தெய்வச்சிலையார் விறலிவிடுதூது	0	10
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது		
14	கம்ப ராமாயணம் பாலகாண்டம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)	2	0
	ராவ்சாகிப் மு. ராகவையங்கார் ஸ்வாமி பரிசோதித்தது		
15	கம்ப ராமாயணம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி) திருவயோத்தியா காண்டம்	2	4
	ஸ்ரீ A. N. மகரபூஷணமையங்கார், B. A., B. L., அட்வகேட் ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L., வக்கீல், பரிசோதித்தது.		
16	கம்ப ராமாயணம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி) ஆரண்ய காண்டம்	2	4
	ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L., வக்கீல், பரிசோதித்தது.		
17	ஸ்ரீ பராங்குச நாடகம் (அச்சில்)		

அடிபிற்கண்டவர்களிடம் நேரிலும் தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம்:

கிருஷ்ணையர்
வேம்பத்தூர் மடம்
தெற்கு ரதவீதி
திருநெல்வேலி டவுண்

பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்
பதிப்பாளர்
திருஞான முத்திரைக்கோவை பிரசுராலயம்
ஆழ்வார்திருநகரி.

முன்னுரை

கம்பன் — ஆரண்ய காண்டம்

இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிச் செந்தமிழன்னையைப் போற்றி, அவளது பேரணிகலங்களைப் பாதுகாத்து, புத்தணிகலங்களைப் புனைந்து தமிழ் நாட்டிற்கும் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டுகள் இயற்றிவந்த பெருமுது நகர்களுள் குருகூர் எனப் பெயர்பெற்ற ஆழ்வார் திருநகரி தலைசிறந்து விளங்குவதாகும். நம்மாழ்வாரது திருவவதாரச் சிறப்பால் பெருமை பெற்று ஒளிரும் இத் திருப்பதி பக்தர்களெல்லாம் தரிசனஞ் செய்தற்குரிய திவ்ய க்ஷேத்திரமாயுள்ளது. தமிழ்க்கு உரையாணி போன்ற பல பெருமக்கள் வாழ்ந்து தமிழைப் போற்றி வளர்த்த பெருமையினாலே இப்பொழுது பக்தர்களேயன்றி தமிழ்நாட்டினர் அனைவரும் சென்று தரிசித்தற்குரிய பெருந் தகுதியையும் புண்ணியத்தையும் அடைந்துவிட்டது. இங்குச் செழித்த ஆராய்ச்சித்துறையாளர்களின் நன்முயற்சியின் மூலமாகவே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர், உ. வே சாமிநாதையர், மஹாவித்வான். ரா. ராகவையங்கார் முதலியோர்களுக்குப் பண்டைத் தமிழ்க் கருவூலங்கள் அகப்பட்ட புண்ணிய ஸ்தலம் இதுவேயாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை இந்நகரினர் குன்றாத ஊக்கங்கொண்டு தமிழ் கற்றுத் தமிழ்க் கருவூலங்களைப் பேணி வந்தனர். தமிழ் இலக்கிய சரித்திரம் எழுதப் புகுவார் இத்திருப்பதியின் இலக்கிய வாழ்க்கையை மறந்துவிட முடியாது.

பண்டை இலக்கியங்களைக் கற்றுப் பெயர்த்தெழுதிப் பின்சந்ததியினருக்கு இந்நகரினர் உதவியதுபோலவே தமிழ்க் கலைவாணியின் மணி மகுடமாகிய கம்ப ராமாயணத்தையும் இவர்கள் போற்றிவந்தார்கள். இப்பொழுது கன்னடம் பேசும் பிரதேசம் ஒன்றில் 14-ம் நூற்றாண்டில் கம்பராமாயணப் பிரவசனம் செய்துவந்த குடும்பமொன்று இருந்ததாகச் சாசனததால் அறிகிறோம். இவ்வாறாயின், தமிழையும் வைஷ்ணவ சமயத்தையும் ராம சரிததததையும் ஒருங்கே போற்றிவந்த திருக்குருகூரினர் ராமாயணப் பிரவசனத்தில் அறுநூற்றாண்டிற்கு முன்பு தொட்டே ஈடுபட்டிருந்தனர் என்பது சொல்லாமலே அமையும். சில குடும்பத்தினர் ராமாயணப் பிரவசனத்தினாலேயே சிறப்புப்பெற்றிருந்தனர் என்பதும் விளங்குகிறது. குருகூரை அடுத்துள்ள வாசிகள் பலரும் இங்கு வந்து பிரதிகள எழுதுவிததுப் பெற்றுககொள்வது வழக்கமாயிருந்தது. இவ்வூரிலுள்ள வித்துவான்களை அழைத்துச்சென்று பிரதிகள் எழுதுவித்துக் கொள்ளுதலும் உண்டு. எனவே இப்பிரதேசத்திலுள்ள பிரதிகள் வித்வப் பரம்பரையினருள் ஒரு சாராரால் மரபு நெறி தவறாது எழுதப்பட்டனவாம்.

இங்ஙனம் வந்த பிரதிகளின்படியே எனது நண்பர் பேரியன் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களால் ஆரண்ய காண்டம் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பு பால காண்டமும், அயோத்தியா காண்டமும் இவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. நண்பர் அவர்கள் ராமாயணம்பற்றிச் செய்துள்ள முயற்சிகள் பெரிதும் பாராட்டற்பாலன.

இங்ஙனமே பல பிரதேசத்து இராமாயணப் பிரதிகளும் அச்சிடப் பெறுமாயின் ஆராய்ச்சி முறையில் திருந்திய இராமாயணப் பதிப்பு வெளிவருவதற்குப் பெரிதும் அநுகூலமாயிருக்கும். தமிழ்நாடு முழுதும் ஆவலோடு எதிர்நோக்கியிருக்கும் இவ்வாராய்சசிப் பதிப்பிற்கு முதற்படியாக எனது நண்பர் இப்பதிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆரண்யகாண்டத்திலே ராம சரிதத்தின் இருதய ஸ்தானம் என்று சொல்லத்தக்க சீதாபஹரணம் நிகழுகிறது. கம்பனது அரிய கவித்வம் சூர்ப்பணகைப் படலத்தில் வெளியாகிறது. விராதன் துதி, இராவணன் காமம், மாயமான் வதம், சடாயுவின் சரித்திரம் முதலியன ராமாயண—அன்பர்கள் அடிக்கடி பயிலும் சரித்திரப் பகுதிகளே. இவற்றை இப் பதிப்பிலுள்ளபடி கற்றல் மிக்க பயனைத் தரும்.

இப்பதிப்பினை ஆதரித்து இதன் பதிப்பாசிரியருக்கு மேன்மேலும் ஊக்கமளித்தல் தமிழ் மக்கள் கடனாகும்.

சென்னை
பல்கலைக்கழகம்
1—3—44

எஸ். வையாபுரிப் பிள்ளை
தமிழ் - ஆராய்ச்சித்துறைத் தலைவர்

ஆரண்ய காண்டம் படல அட்டவணை

எண்	படலம்	பக்கம்	கவி
1.	விராதன் வதைப் படலம்	1	74
2.	சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்	10	44
3.	தண்டகாரண்யப் படலம்	16	26
4.	அகத்தியப் படலம்	19	33
5.	சடாயுப் படலம்	23	47
6.	பஞ்சவடிப் படலம்	29	7
7.	சூர்ப்பநகி மூக்கரி படலம்	30	136
8.	திரிசிரா வதைப் படலம்	47	140
9.	தூடணன் வதைப் படலம்	65	21
10.	கரன் வதைப் படலம்	68	31
11.	சூர்பநகி சூட்சிப் படலம்	72	170
12.	மாரீசன் வதைப் படலம்	93	84
13.	சடாயு மோட்சப் படலம்	104	221
14	அசோமுகி மூக்கரி படலம்	132	101
15.	கவந்தப் படலம்	144	58
16.	சவரி பிறப்பு நீங்கு படலம்	151	10

ஆகப் படலம் 16-க்கு திருவிருத்தம் 1203

உரிமையுரை

ஏர்மிகுந்தவி ராமச ரித்திரத்
திமையவர்த மிருஞ்சிறை நீங்கவே
சீர்பெறுந்திரு தான்சிறை புக்கதைச்
செப்பிடும்வன காண்டமும் செவ்வனே
நேர்பெறத்தன நிதியுநல் லாசியும்
நிறைத்தனனிறை நின்ற குறுங்குடி
பேரருள்தனை யாண்டவன் பின்வழிப்
பெரியன் மாறனற் பேரெதிராஜனே.

[illegible]

ஸ்ரீ [illegible] ஸ்வாமி பரம்பரை

[illegible]

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ [illegible] கோ[illegible] ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



கம்பராமாயணம்

ஆரண்ய காண்டம்

க. விராதன் வதைப் படலம்

க பேதி யாதுநிமிர் பேத வுருவம் பிறழ்கிலா
[1] ஓதி யோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் வெளியிடா
ஆதி நாத ரவரெம் மறிவுனுக் [2] கறிவரோ. 2615

உ முத்தி ருத்திய திருத்தனைய மொய்ந கையொடுஞ்
சித்தி ரக்குனி சிலைக்குமரர் சென்ற ணுகினார்
அத்தி ரிப்பெய ரருந்தவ னமைந்த வமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழி றுவன்ற பழுவம். 2616

ங திக்கு றுஞ்செறி மரந்தெரிய நின்ற திரள்பொற்
கைக்கு றுங்கண்மலை போற்குமரர் காம முதலாம்
முக்கு றும்பற வெறிந்த வினைவான் முனிவனைப்
புக்கி றைஞ்சின ரருந்தவ னும்வந்து புகலும். 2617

ச குமரர் நீரிவ ணடைந்துதவு கொள்கை யெளிதோ
அமரர் யாவரொடு மெவ்வுலகும் வந்த தலைவோ
எமரின் யார்தவ முயன்றனர் களென்று ருகினன்
தமரெ லாம்வர வுவந்தனைய தன்மை முனிவன். 2618

ரு அன்ன மாமுனியொ டன்றவ ணுறைந்த வனரும்
பன்னி கற்பினன சூயை பணியா லணிகலன்
துன்னு தூசினொடு சந்திவை சுமந்த சனகன்
பொன்னொ டேகி யுயர்தண் டகவனம் புகுதலும். 2619

(பிரதி) 1 தோதி. 2 கறிவரே.

௬ எட்டொ டெட்டு மதமா கரியிரட்டி வயமா
வட்ட வெங்கண்வரை யாளி பதினாறு வலியிற்
கிட்ட விட்டிடை செறிந்தன கிடந்த தொருகைத்
தொட்ட முத்தலை [1] யயிற்றொகை மிடற்க ழுவொடே.

௭ செஞ்சு டர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்த செனியன்
நஞ்சு தொட்டுருவு பெற்றிடை நடந்த தெனமா
மஞ்சு தட்டிய வயங்குகிரி வாத விசையிற்
பஞ்சு பட்டது படப்படி யின்மேன் முடுகியே 2621

௮ புண்டு ளங்கிய கண்க ளனல்பொங்க மழைசூழ்
விண்டு ளங்கிட விலங்கல்கள் குலுங்க வெயிலும்
கண்டு ளங்கதி குறைந்திட நெடுங்க டல்சுலாய்
மண்டு ளங்கவய வந்தகன் மனந்த ளரவே. 2622

௯ புக்க வாளரி முழங்கு செவியின் பொறியுறப்
பக்க மின்னு மணிமேரு சிகரங் குழைபடச்
செக்கர் வான்மழை நிகர்த்த வெதிருற்ற [2] செருவத்
துக்க வீரருதி ரத்தினொளிர் செச்சையி னொடே. 2623

௰ படையொ டாடவர்கள் மால்களிறு பாய்புரவி தேர்
நடைய வாளரிகள் கோளுழுவை நண்ணின வெலாம்
அடைய வாரியர வான்முடி யனேக விதவன்
தொடையன் மாலை துயல்வந் துலவுதோள் பொலியவே.

௧௧ குன்று துன்றிய வெனக்குமுறு கோப மதமா
வொன்றி னொன்றிடை யடுக்கிய தடக்கை யுதவப்
பின்று கின்ற பிலனிற் பெரியவாயி னொருபான்
மென்று தின்று விளியாது விரியும் பசியொடே. 2625

௧௨ பன்ன [3] காதிபர் பணாமணி பறித்த வைபகுத்
தின்ன வானவர் விமான மிடையிட் டரவிடைத்
துன்னு தோளினொடு தாரகை தொடுத்த துழனிச்
சன்ன வீர மிடைமின்னு தடமார்பி னொடுமே. 2626

௧௩ பம்பு செக்க ரெனவொக்கு மயிர்பக்க மெரியக்
கும்ப முற்ற வுயர்நெற் றியின்விசித் தொளிர்குலா
உம்ப ருக்கரசன் மால்களிறி னோடை யெயிறொண்
கிம்பு ரிப்பெரிய தோள்வ ளையொடுங் கிளரவே. 2627

(பிரதி) 1 யயிற்றெழின். 2 செருவங். 3 காதியர்.

கச தங்கு திண்கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடுமை யென்பது புழுங்கி யெழமா
மங்குல் பாதகம் விடங்கனல் வயங்கு [1] திமிரக்
கங்குல் பூசிவரு கின்றகலி கால மெனவே. 2628

கரு செற்ற வாளுழுவை வன்செறி யதட் டுருகுறச்
சுற்றி வாரண வுரித்தொகுதி நீவி தொடரக்
கொற்ற மேவுதிசை யானையின் மணிக்குல முடைக்
கற்றை மாசுணம் விரிந்த வுரிகச் சொளிரவே. 2629

கசா செங்க ணங்கர வெனும்பொரு வில்செம் மணிவிராய்
வெங்க ணங்கை வலயங்களும் விலங்க விரவிச்
சங்க ணங்கிய சலஞ்சல மலம்பு தவளக்
கங்க ணங்களு மிலங்கிய கரம்பி றழவே 2630

கஎ முந்து வெள்ளிமலை பொன்னின் மலையோடு முரணப்
பந்தி னுந்துகழல் பாடுபட வூடு படர்வோன்
வந்து மண்ணினிடை யானெனினும் வானி னிடையோர்
சிந்தை யுள்ளும் விழியுள்ளு முளனென்ற திறலோன்.

கஅ பூத மத்தனையு மோர்வடிவு கொண்ட புதிதென்
றோத வொத்த வுருவத்த னுருமொத்த குரலன்
காத லித்தய னளித்த கடையிட்ட கணிதப்
பாத [2] லக்கமத வெற்பவை படைத்த வலியான். 2632

கசூ சார வந்தெதிர் விலங்கினன் மரங்க டரையிற்
பேர வன்கிரி பிளந்துக வளர்ந்தி கல்பெரு
வீர வெஞ்சிலையி னேரெதிர் விராத னெனுமக்
கோர வெங்க ணுருமே றனகொடுந் தொழிலினான். 2633

உ0 நில்லு நில்லுமென வந்து நிணமுண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறு மினனு பகுவாய் முழைதிறந்
தல்லி புல்லுமல ரன்ன மனையாளை யொருகைச்
சொல்லு மெல்லையின் முகந்துயர் விசும்பு தொடர. 2634

உக காளை மைந்தரது கண்டு கதம்வந்து [3] கதுவத்
தோளில் வெஞ்சிலை யிடங்கொடு தொடர்ந்து சுடர்வாய்
வாளி தங்கிய வலங்கை யவர்வஞ்சனை யெடா
மீள்தி யெங்ககறி யென்பது விளம்ப வவனும். 2635

(பிரதி) 1 திமிரங். 2 லத்தமத. 3 கதுவித்.

உ௨ ஆதி நான்முகன் வரத்தி னெனதாவி யகலேன்
ஏதி யாவதுவு மின்றி யுலகியாவு மிகலிற்
சாதி யாதனவு மில்லை யுயிர்தந் தனனெடா
போதி மாதிவளை யுந்தி யினிதென்று புகல. 2636

உ௩ வீர னுஞ்சிறிது மென்முறு வல்வெண் ணிலவுகப்
போர றிந்தில னிவன்றனது பொற்பு முரணுந்
தீரு மஞ்சியென நெஞ்சி னுறுசிந்தை திரியப்
பார வெஞ்சிலையி னாணொலி படைத்த பொழுதே. 2637

உ௪ இலைகொள் வேலட லிராம னெழுமேக வுருவன்
சிலைகொணா ணெடிய கோதை யொலியேறு திசைநீர்
மலைக ணீடுலக நாகர்பிலம் வான முதலாம்
உலக மேழு முருமே றெனவொலித் துரறவே. 2638

உ௫ வஞ்ச கக்கொடிய பூசை வருவாயின் மறுகும்
பஞ்ச ரக்கிளி யெனக்கதறு பாவை யைவிடா
நெஞ்சு ணுக்கின னெனச்சிறிது நின்று நினையா
அஞ்ச னக்கிரி யனானெதி ரரக்க னழலா. 2639

உ௬ பேய்மு கப்பிணி யறப்பகைஞர் பெட்பி னுதிரந்
தோய்மு கத்தது கனத்தது சுடர்க்கு திரையின்
வாய்மு கத்திடை நிமிர்ந்து வடவேலை பருகுந்
தீமு கத்திரி சிகைப்படை திரித்தெ றியவே. 2640

உ௭ திசையும் வானவரு நின்ற திசைமாவு முலகும்
அசையு மாலமென வன்னவயின் மின்ன வரனும்
வசையின் மேருமுதல் மால்வரைக ளேழின் வலிசால்
விசைய வார்சிலை யிராம னொருவாளி விடவே. 2641

உ௮ இற்ற தின்றொடிவ் வரக்கர்குல மென்று பகலே
வெற்ற விண்ணினிடை நின்று நெடுமீன் விழுவபோற்
சுற்றமைந்த சுட ரெஃகம திரண்டு துணியா
அற்ற கண்டமவை யாசையி னதந்த முறவே. 2642

உ௯ சூரொ டுங்கயி றுணிந்திறுதல் கண்டு சிறிதும்
போரொ டுங்கலன் மறங்கொடு புழுங்கி நிருதன்
பாரொ டுங்குறு கரங்கொடு பருப்ப தமெலாம்
வேரொ டுங்கடி தெடுத்தவன் விசைத்து விடலும்.

௩௦ வட்ட மிட்டுமிளிர் நெற்றியின் வயங்கு வயிரக்
கட்ட மைத்தகதிர் வாளியெதி ரேகடவ லால்
விட்ட விட்டவரை மீளவவன் மெய்யின் விசையாற்
பட்ட பட்டவிட மெங்குமுட னூறு படலும். 2644

௩௧ ஓம ராமரை யொருங்குமுணர் வோருணர் வுறும்
நாம ராமவரை நல்லற நிறுத்த நணுகித்
தாம ராவணை துறந்து தரைநின்ற வரையோர்
மாம ராமர மிறுத்தது கொடெற்ற வரலும். 2645

௩௨ ஏறு சேவக னிரண்டினொ டிரண்டு கணையால்
வேறு வேறுதுணி செய்தது விழுந்தி விசையான்
மாறு மாறுநிமிர் தோளிடையு மார்பி னிடையும்
ஆறு மாறுமயில் வெங்கணை யழுத்த வவனும். 2646

௩௩ மொய்த்த முட்டன துடற்றலை முளைத்த முடுகிக்
கைத்த லத்தினிமிரக் கடிது கன்றி விசிறும்
மெய்த்த மெய்ப்பெரிய கேழலென வெங்கும் விசையிற்
றைத்த வெங்கணை தெறிப்பமெய் சிலிர்த்து தறவே.

௩௪ எரியின் வார்கணை யிராமன்விட வெங்கு நிலையா
துருவி யோடமற மோடுதல் செயா வுணர்வினன்
அருவி பாயும்வரை போற்குருதி யாறு பெருகிச்
சொரிய வேகவலி கெட்டுணர்வு சோர்வு றுதலும். 2648

௩௫ மெய்வ ரத்தினன் மிடற்படை விடப்ப டுகிலன்
செய்யு மற்றுமிக லென்று சினவா னுருவிவன்
கைது ணித்துமென முந்துகடு கிப்படர் புயத்
தெய்தி மற்பொருவு தோளிருவ ரேற நிருதன். 2649

௩௬ உண்டெ டுந்தவுணர் வவ்வயி னுணர்ந்து முடுகித்
தண்டெ டுந்தனைய தோள்கொடு சுமந்து தழுவிப்
பண்டெ டுந்தனது வன்கதி [1] பதிற்றின் முடுகிக்
கொண்டெ டுந்தனன் விழுந்தழி கொழுங்கு ருதியான்.

௩௭ முந்து வான்முக டுறக்கடிது முட்டி முடுகிச்
சிந்து சோரியொடு சாரிகை திரிந்தன னரோ
வந்து மேருவினை நாடொறும் வலஞ்செய் தழலும்
இந்து சூரியரை யொத்திரு வரும்பொ லியவே. 2651

(பிரதி) 1 பயிற்றல் கடுகிக்.

௩அ சுவண வண்ணனொடு கண்ணன்மிசை கொள்ளவிசை தோய்
அவண விண்ணிடை யெழுந்துபடர் கின்றவ னறஞ்
சிவண வன்னசிறை மன்னவரொ டேகுசெ யல்வந்
துவண வண்ணனெனு மன்னனையு மொத்தன னரோ. 2652

௩௯ மாத யாவுடைய தன்கணவன் வஞ்சன் வலியிற்
போத லோடுமல மந்தனள் புலர்ந்து பொடியிற்
கோதை யோடுமொசி கொம்பென விழுந்த னள்குலச்
சீதை சேவல்பிடி யுண்ட சிறையன்ன மனையாள். 2653

௪0 பின்னை யேதுமுத வுந்துணை பெறாளுரை பெறாண்
மின்னை யேயிடை நுடங்கிட விரைந்து தொடரா
அன்னை யேயனைய வன்பினற வோர் கடமைவிட்
டென்னை யேநுகர்தி யென்றன ளெழுந்து விழுவாள்.

௪௧ அழுது வாய்குழறி யாருயி ரழுங்கி யலையா
எழுது பாவைய னையாணிலை யுணர்ந் திளையவன்
தொழுது தேவிதுயர் கூரவிளை யாடெரு ழிலோ
பழுது வாழியென வூழி யொருவன் பகர்வுறும். 2655

௪௨ ஏக நின்றநெறி யெல்லைகடி தெய்தி யினிதிற்
போகை நன்றென நினைந்தன னிவன்பொரு விலோய்
சாகை யின்றுபொரு ளன்றென நகுந்தகை மையோன்
வேக வெங்கழலி லுந்தலும் விராதன் விழலும். 2656

௪௩ தோளி ரண்டும்வடி வாள்கொடு துணித்து விசையான்
மீளி மெய்ம்பினர் குதித்தலும் வெருண்டு புருவத்
தேளி ரண்டுநெரி யச்சினவு செங்க ணரவக்
கோளி ரண்டு சுடருந் தொடர்வதிற் குறுகலும் 2657

௪௪ புண்ணி டைப்பொழி புதுப்புனல் பரந்து விழவும்
விண்ணி டைப்படர்தல் விட்டெழு விகற்ப நினையா
எண்ணி டைக்குரிசி லெண்ணியிளை யோயிவ னையிம்
மண்ணி டைக்கடிது பொத்துதல் வழக்கெ னலுமே.

௪௫ மதநல் யானையனை யானிலம் வகிர்ந்தகுழி வாய்
நதமு லாவுநளி நீர்வயி னமுந்த நவைதீர்
கதழ்வ மாய்நறுநெ யுண்டுலகி லன்பர் கருதிற்
றுதவு சேவடி யினலமல னுந்து தலுமே. 2659

௪௬ பட்ட தன்மையு முணர்ந்து படர்சாபம் விடமுன்
கட்ட வன்பிறவி தந்த கடையான வுடமுன்
விட்ட விண்ணிடை விளங்கினன் விரிஞ்ச னெனவோர்
முட்டை தந்ததனில் வந்தமுதல் முன்ன வணிலே.

௪௭ பொறியி னொன்றி யயல்சென்று திரிபுந்தி யுணரா
நெறியி னொன்றி நிலைநின்ற நினைவுண் டதனினும்
பிறிவி லன்புதனி பண்டுடைய பெற்றி தரலால்
அறிவு வந்துதவ நம்பனை யறிந்து பகர்வான். 2661

௪அ * வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனநின்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றுவ்வாப்
பூதங்க டோறுமுறைந் தாலவையுன்னைப் பொறுக்குமோ. 2662

௪௯ கடுத்துநிமிர் கராங்கவ்வக் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பொருளே பரமாவென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்.

௫௦ புறங்காணா ரகங்காணார் பொருண்முகத்தி னருணோக்கம்
இறங்காத தாமரைக்க ணெம்பெருமா னியம்புதியால்
அறங்காத்தற் குனக்கொருவ ராருமொரு துணையின்றிக்
கறங்காகு மெனத்திரிய நீயேயோ கடவாயே. 2664

௫௧ துறப்பதே தொழிலாகத் தோன்றினார் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மையது வன்றாகின் மற்றவர்போற்
பிறப்பரே லவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
இறப்பதே பிறப்பதே [1]வெனும்விளையாட் டுவந்தனையே.

௫௨ பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் புணைபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் றனிமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதற்றேவ ரென்கொண்டென் செய்வாரே.

௫௩ ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீயாதி முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரோ தருமத்தின் றனிமூர்த்தி. 2667

---

* இவ்வடையாளம் செய்யுணடையின் வேறுபாட்டை யுணர்த்தும்.

(பிரதி) 1 மெனும் விளையாட்.

௫௪ நீயாதி பரப்பிரம்ம நின்னதே யுலகங்கள்
ஆயாத சமயமுநின் னடியனவே [1] யயலில்லை
தீயாரி லொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாய விளையாட்டும் வேண்டுமோ. 2668

௫௫ தாய்தன்னை யறியாத [2] கன்றில்லை தன்கன்றை
யாயு மறிவுறுமவ் வுலகின்றாய்க் கில்லையால்
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய். 2669

௫௬ பன்னலா மென்றுலகம் பலபலவு நினையனுமற்
றுன்னலாம் பெருந்தெய்வ முயர்ந்துளோ ரொழுக்கன்றே
அன்னவூர் திணைமுதலா வந்தணர்மாட் டருந்தெய்வம்
நின்னலா தில்லாமை நெறிநின்றார் நினையாரோ. 2670

௫௭ பொருவரிய சமயங்க ளறைகின்ற புத்தேளிர்
இருவினையு முடையார்போ லருந்தவநின் றியற்றுவரால்
திருவுறையு மணிமார்பா நினக்கென்ன செயற்பால
ஒருவினையு மில்லார்போ லுறங்குதியா லுறங்காதாய்.

௫௮ அரவாகிச் சுமத்தியா லணியெயிற்றி னேந்துதியால்
ஒருவாமல் விழுங்குதியா லோரடியா லொளித்தியால்
திருவான நிலமகளை யதுவறிந்தாற் சீறாளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்.

௫௯ மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தா னாகாதோ வுனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் வானகத்தார் மழுவாளிக் கன்றளித்த
ஐயத்தாற் சிறிதையந் தெளிந்தாரு முளரையா. 2673

௬0 அன்னமா யருமறைக ளறைந்தாய்நீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா ரெல்லாரு முடிந்தாரோ
பின்னமா யொன்றுதல் [3] பிறிந்தேயோ பிறியாதோ
என்னமா மாயமிவை யேனமாய் மண்ணிடந்தாய். 2674

௬௧ ஒப்பிறையும் பிறிதறியா யொருவினைமுன் னுவந்துறையும்
அப்பொறையு டுறந்தடியே னருந்தவத்தா லணுகுதலால்
இப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையுந்
துப்பறநீத் தனையசுடர்த் திருவடியாற் றுடைத்தாய்நீ.

(பிரதி) 1 யயலில்லைத். 2 கன்றில்லைத். 3 பிறிந்தாயோ பிறியாயோ.

௬௨ * இற்றெ லாமி யம்பினான், நிற்ற லோடு நீயிவ்வா
றுற்ற வாறு ணர்த்தெனா, வெற்றி யான்வி ளம்பினான்.

௬௩ கள்ள மாய வாழ்வெலாம், விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேளெனா, உள்ள வாறு ணர்த்தினான்.

௬௪ ஆட ரம்பை [1] நீடரங், கூடு நின்று பாடலால்
ஊடல் வந்து [2] கூடவிக், கூடு வந்து கூடினேன். 2678

௬௫ இம்ப ருற்றி தெய்தினேன், வெம்பு விற்கை வீரபேர்
தும்பு ருத்த னாழிவாழ், அம்ப ரத்து ளென்பரே. 2679

௬௬ கரக்க வந்த காமநோய், துரக்க வந்த தோமினால்
இரக்க மின்றி யேயினான், அரக்கன் மைந்த னாயினேன்.

௬௭ வலஞ் செய்திந்த வானெலாம், நலிஞ்சு தின்று நாமவேற்
பொலிஞ்ச வென்றி பூணுமக், கிலிஞ்சன் மைந்த னாயினேன்.

௬௮ வெம்பு விற்கை வீரநீ, அம்ப ரத்து நாதனாற்
றும்பு ருத்தன் வாய்மையால், இம்ப ருற்ற தீதரோ. 2682

௬௯ அன்ன மாய மேவினார், இன்ன றீரு மீகையா
னின்ன தாளின் வீடுமென், [3] றன்னுமெற்குணர்த்தினான்.

௭0 அன்று மூல மாதியாய், இன்று காறு மேழையேன்
நன்று தீது நாடலேன், நின்று தீய னேடினேன். 2684

௭௧ தூண்ட நின்ற தொன்மைதான்,வேண்ட நின்ற வேதநூல்
பூண்ட நின்பொ லன்கொடாள், தீண்ட வின்று தேறினேன்

௭௨ திறத்தின் வந்த தீதெலாம், மறுத்த வுன்னை யாதனேன்
ஒருத்த தன்மை யூழியாய், பொறுததி யென்று போயினான்.

௭௩ தேவு காதல் சீரியோன், ஆவி போயி னானெனாப்
பூவு லாவு பூவையோ, டேவ லாரு மேகினார். 2687

௭௪ கைகொள் கால வேலினார், மெய்கொள் வேத மெய்யர்வாழ்
மொய்கொள் சோலை முன்னினார், வைக லானும் வைகினான்.

விராதன் வதைப்படலம் முற்றும்.

(பிரதி) 1 நீடரங்கி; னூடு. 2 கூடவெய்ய. 3 றன்னலாலுணர்த்தினான்.

உ. சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்

க குரவங் குவிகோங் கலர்கொம் பினொடும்
இரவங் கணுகும் பொழுதெய் தினரால்
சரபங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர் வாசவனம். 2689

உ செவ்வே லவர்சென் றனர்சேர் தலுறும்
அவ்வே லையிலெய் தினனா யிரமுந்
தவ்வா திரவும் பொலிதா மரையின்
வெவ்வே றலர்கண் ணினன்விண் ணவர்கோன். 2690

ங அன்னச் செலவிற் படிமே லயல்சூழ்
பொன்னிற் பொலிவா ரணிபூண் முலையார்
மின்னிற் செறிகற் றைவிரிந் தனபோற்
பின்னிச் சுடரும் பிறழ்பே ரொளியான். 2691

ச வானிற் பொலிகோ தையர்கண் மலர்வான்
கானிற் படர்கட் களிவண் டொடுதார்
மேனித் திருநா ரதன்வீ ணையிசைத்
தேனிற் படியுஞ் செவிவண் டுடையான். 2692

ரு அனலின் றுறையைம் பதொடைம் பதுநூல்
நினைவின் படிவேள் விநிரம் பியமா
முனைவன் முதுதே வரின்மூ வரலாற்
புனையு முடிதுன் றுபொலங் கழலான். 2693

சு செம்மா மலரா ணிகர்தே வியொடு
மும்மா மதவெண் ணிறமுன் னுயர்தாள்
வெம்மா மிசையான் விரிவெள் ளிவிளங்
கம்மா மலையண் ணலையே யனையான். 2694

எ தானின் றயனின் றொளிர்தண் கதிரோன்
யானென் றதெனென் றொளியெஞ் சிடமா
வானின்ற பெரும் பதம்வந் துருவாய்
மேனின் றனநின் றொளிர்வெண் குடையான். 2695

அ திசைகட் [1] டியமால் கரிதெட்ட மதப்
பசைகட் டினகிட் டினபற் பலபோர்
விசைகட் டினதா னவர்விட் டிகல்பேர்
இசைகட் டினவொத் திவர்சா மரையான். 2696

(பிரதி) 1 டினமால்.

௯ தேரிற் றிரிசெங் கதிர்தங் குவதோர்
ஊரிற் றதெனப் பொலியொண் முடியான்
போர்வித் தகனே மிபொறுத் தவன்மா
மார்பிற் றிருவிற் பொலிமா லையினான். 2697

௧௦ செற்றிக் கதிரிற் பொலிசெம் மணியின்
கற்றைச் சுடர்விட் டெரிகஞ் சுகியான்
வெற்றித் திருவின் குளிர்வெண் ணகைபோற்
சுற்றிச் சுடருங் கிளர்தோள் வளையான். 2698

௧௧ பல்லா யிரமா மணிபா டமுறுந்
தொல்லா ரணிகால் சுடரின் றொகைதான்
எல்லா முடனா வெழலா லொருதன்
வில்லா லொளிர்மே கமெனப் பொலிவான். 2699

௧௨ மானா வுலகந் தனிமன் றல்பொருந்
தேனா றுநலஞ் செறிதொங் கலினான்
மீனோ டுகடுத் துயர்வெண் [1]றியவாம்
வானா டியர்கண் ணெனும்வா ளுடையான். 2700

௧௩ வெல்வா னசையின் விசையின் [2]விடுநாள்
எல்வாள் சுடர்மா லையிரா வணன்மேல்
நெல்வா னுமரு தநிறம் பிறிதாய்
வல்வாய் மடியா வயிரப் படையான். 2701

௧௪ நின்றா னெதிர்நின்ற நெடுந் தவனுஞ்
சென்றா னெதிர்கொண் டுசிறப் பயர்வான்
என்றா னிவணெய் தியவா றெனலும்
பொன்றா தபொலங் கழல்மால் புகலும். 2702

௧௫ நின்னா லியைநீ திநெடுந் தவமின்
றென்னா லும்விளம் பரிதென் றுணர்வான்
அந்நான் முகனுன் னையழைத் தனனாற்
பொன்னார் சடைமா தவபோ துதியால். 2703

௧௬ எந்தா யுலகியா வையுமெவ் வுயிருந்
தந்தா னுறையு நெறிதந் தனனால்
நந்தாத பெரும் பதநா [3]டதுநீ
வந்தா யெனினின் னெதிரே வருவான். 2704

(பிரதி) 1 றியவா. 2 விடுநால். 3 டதனில்.

கஎ எல்லா வுலகுக் குமுயர்ந் தமையான்
சொல்லா வகைநீ யுணர்தொன் மையையால்
நல்லா யுடனே நடநீ யெனலும்
அல்லே னெனவா லறிவா லறைவான். 2705

கஅ சொற்பொங் குபெரும் புகழோய் தொழின்மாய்
சிற்பங் களில்வீ வனதேர் குவனே
அற்பங் கருதே னெனருந் தவமோ
கற்பம் பலசென் றனகா ணுதியால். 2706

ககூ சொற்றுந் தரமன் றிதுசூழ் கழலாய்
பெற்றும் பெறலா யதொர்பெற் [1] றியதே
மற்றென் பலநீ யிவண்வந் ததனால்
முற்றும் பகறா னுமுடிந் துளதால். 2707

உ0 சிறுகா பெருகா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவன்வா னுடையாய். 2708

உக என்றின் னவிளம் பிடுமெல் லையின்வாய்
வன்றிண் சிலைவீ ரரும்வந் தணுகா
ஒன்றுங் கிளரோ சையினூ லுணர்வார்
நின்றென் னைகொலின் னதெனா நினைவார். 2709

உஉ கொம்பொத் [2] தனநா லொளிர்கோள் வயிரக்
கம்பக் கரிநின் றதுகண் டனமால்
இம்பர்த் தலைமா தவர்பா லினனும்
உம்பர்க் கரசெய் தினனென் றுணரா. 2710

உ௩ மானே ரனையா ளொடுமைந் தனையப்
பூநேர் பொழிலின் புறமே நிறுவா
வானே றெனவா ளரியே றிதெனத்
தானே யவகன் பொழில்சா ருதலும். 2711

உச கண்டா மவையா யிரமுங் கதுவக்
கண்டா மரைபோல் கருநா யிறெனக்
கண்டா னிமையோ ரிறைகா சினியின்
கண்டா னருநான் மறையின் கனியை. 2712

(பிரதி) 1 றியதோ. 2 தொளிர்நா.

உரு காணா மனமொனாந் துகவன் றனனால்
ஆணா தனையந் தணர்நா யகனை
நாணா ளும்வணங் கினனன் முடியாற்
றாணா கியதோள் கொடவற் றெழுவான். 2713

உசு* துவசமார் தொல்லமருட் டுன்னாரைச் செற்றுஞ்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள் கற்பித்துந்
திவசமார் நல்லறத்தின் சென்னெறியி னுய்த்துந்
திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள்
கவசமா யாருயிராய்க் கண்ணாய்மெய்த் தவமாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணா
அவசமாய்ச் சிந்தை யழிந்தயலே நின்றா
னறியாதான் போல [1]வறிந்தவெல் லாஞ்சொன்னான்.

உஎ தோய்ந்து பொருளனைத்துந் தோயாது நின்ற
தொல்சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த லரிய நெடுங்கரு ணைக்கெல்லா
நிலைமையே வேத நெறிமுறை யி னேடி
ஆய்ந்த வுணர்வி னுணர்வேவெம பகையா
லலைப்புண் டடியே மடிபோற்ற வந்நாள்
ஈய்ந்த வரமுதவ வெய்தினையே யெந்தா
யிருநிலத் தவோநின் னிணையடித் தாமரைதான். 2715

உஅ மேவா தவரில்லை மேவினரு மில்லை
வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை
[2]மூவாமை யில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டீறில்லை முன்னொடு பின்னில்லை
தேவாவிங் கிதுவோ நின்றோன்று நிலையென்றாற்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ணோவக்
காவாது நீயொழியிற் பழிபெரிதோ வன்றே
கருங்கடலிற் கண்வளரக் கைமாறு முண்டோ. 2716

உகூ நாழி நவைதீ ருலகமெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவு நின்றளந்தா லென்று
மூலவாப் பெருங்குணத்தெ முத்தமனே மேனாட்
டாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா முனக்கடிமை யல்லாமை யுண்டோ.

(பிரதி) 1 வறிந்தனவெல். 2 மூவாதமை.

௩௰ ஒன்றாகி மூலத் துருவம் பலவா
யுரையா யுயிராய்ப் பிறிதாகி யூழி
சென்று சறுங்காலைத் தன்னிலைய தாகித்
[1] திறத்துலகந் தானாகிச் செவ்வேதா னின்ற
நன்றான ஞானத் தனிக்கொழுந்தே யெங்க
ணவைதீர்க்கு நாயகனே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயலாரைக் காய்தி
நிலையாத தீவினையு நீதந்த தன்றே. 2718

௩௧ வல்லைவரம் பில்லாத மாயவினை தன்னான்
மயங்கினர் களோடே மதிமயங்கி மேனாள்
அல்லை யிறையவனீ யாதியெனப் பேதுற்
றலமரு வோர்முன்னை யறப்பய னுண்டாக
எல்லை வலயங்க ளெம்முறையென் றந்நா
ளெரியோனைத் தீண்டி யெழுவ ரெனநின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற வையந் துடைத்திலையோ வெந்தாய்.

௩௨ *இன்னன பலநினைந் தேத்தின னியம்பாத்
துன்னுத லிடையுள தெனநனி துணிவான்
தன்னிகர் முனிவனைத் தவிருதி யென்னாப்
பொன்னொளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான். 2720

௩௩ போனவ னகநிலை புலமையி னுணர்வான்
வானவர் தலைவனை வரவெதிர் கொண்டான்
ஆனவ னடிதொழ வருள்புரி முனிவன்
தானுடை யிடவகை தழுவின னுழைவான். 2721

௩௪ ஏழையு மிளவலும் வருகென வினிதால்
வாழிய வவரொடு வள்ளலு மகிழா
ஊழியின் முதன்முனி யுறையுளி னுறைவான்
ஆழியில் விழிதுயி லெனவக மகிழ்வான். 2722

௩௫ அவ்வயி னழகனும் வைகின னறிஞன்
செவ்விய வறவுரை செவிவயி னுதவ
நவ்வியின் விழியவ ளொடுநனி யிருளைக்
கவ்விய நிசியொரு கடையுறு மளவில். 2723

(பிரதி) 1 தீர்த்துலகந்.

௩௬ விலகிடு நிழலினன் வெயில்விரி யயில்வாள்
இலகிடு சுடரவன் விசையின திசைதோய்
அலகிட வரிதெனு மவிர்கர நிரையால்
உலகிடு நிறையிரு ளுறையினை யுரியர். 2724

௩௭ ஆயிடை யறிஞனு மவனெதிர் தழுவத்
தீயிடை நுழைவதொர் தெளிவினை யுடையான்
நீவிடை தருகென நிறுவின னெறியாற்
காயெரி வரன்முறை கடிதினி லிடுவான். 2725

௩௮ வரிசிலை யுழவனு மறையுழ வனைநீ
புரிதொழி லெனையது புகலுதி யெனலுந்
திருமக டலைவசெய் யிருவினை யறயான்
எரிபுக நினைகுவ னருளென விறைவன். 2726

௩௯ யான்வரு மமைதியி லிதுசெய லிவனே
மான்வரு தனியுரி மார்பினை யெனலும்
மீன்வரு கொடியவன் விறலடு மறவோன்
ஊன்விடு முவகைய னுரைநனி பகர்வான். 2727

௪௰ ஆயிர முகமுள தவமுயல் குவன்யான்
நீயிவண் வருதிகொ லெனுநினை வுடையேன்
போயின திருவினை புரவல விதியான்
மேயினை யினியொரு வினையிலை விறலோய். 2728

௪௧ இந்திர னருளின னிறுதிசெய் பகர
வந்தனன் மருவுதி மலரய னுலகந்
தந்தன னெனவது சாரல னுரவோய்
அந்தமி லுயர்பத மடைதலை முயல்வேன். 2729

௪௨ ஆதலி னிதுபெற வருளென வுரையாக்
காதலி யவளொடுங் கதழெரி முழுகிப்
போதலை மருவின னொருநெறி புகலா
வேதமு மறிவரு மிகுபொரு ளுணர்வான். 2730

௪௩ தேவரு முனிவரு முறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலரயன் முதலோர்
ஏவரு முடிவினி லிருவினை யொருவிப்
போவது கருதுமவ் வருநெறி புக்கான். 2731

சச அண்டமு மகிலமு மறிவரு நெறியால்
உண்டவ னொருபெய ருணர்குந ருறுபே
றெண்டவ [1] நெடிதுயி ரிறுதியி லவனைக்
கண்டவ ருறுபொருள் கருதுவ [2] தெளிதே. 2732

சரபங்கன் பிறப்புநீங்கு படலம் முற்றும்

ரு. தண்டகாரண்யப் படலம்

க அனையவ னிறுதியி னமைதி நோக்கலின்
இனியன ரின்னல ரிரங்கு நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதன துறையுணின் றரிதிற்போயினார். 2733

உ மலைகளு மரஙகளு மணிக்கற் பாறையும்
அலைபுன னதிகளு மருவிச் சாரலும்
இலைசெறி பழுவமு மினிய சூழலும்
நிலைமிகு தடங்களு மினிது நீங்கினார். 2734

ந பண்டைய வயன்றரும் பால கில்லரும்
முண்டரு மோனரு முதலினோர் களத்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கடாங்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார். 2735

ச கனல்வரு கடுஞ்சினத் தரக்கர் காயவோர்
வினைபிறி தின்மையின் வெதும்பு கின்றனர்
அனல்வரு கானகத் தமுத னாவிய
புனல்வர வுயிர்வரு முலலை போல்கின்றார். 2736

ரு ஆய்வரும் பெருவலி யரக்கர் நாமமே
வாய்வெரீஇ யலமரு மறுக்க நீங்கினார்
தீய்வரும் வனத்திடை விட்டுத் தீர்ந்ததோர்
தாய்வர நோக்கிய கன்றின் றன்மையார். 2737

சு காக்கருங் கடுந்தொழி லரக்கர் காய்தலிற்
போக்கிட மின்மையிற் புழுங்கிச் சோர்குனர்
ஆக்கருங் கடலிடை யாழ்கின் றொரொரு
மாக்கலம் பெற்றென மறுக்க நீங்கினார். 2738

(பிரதி) 1 னெடிதுயி. 2 தெளிதோ.

௭ தெரிஞ்சுற நோக்கினர் செய்த செய்தவம்
அருஞ்சிறப் புதவநல் லறிவு கைதர
விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெந்துயர்ப்
பெருஞ்சிறை வீடுபெற் றனைய பெற்றியார். 2739

௮ வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
[1] பூண்டுளா ராயினும் பொறையி னாற்றலார்
மூண்டெழு வெகுளியின் முறையி னீங்கினார்
ஆண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ. 2740

௯ எழுந்தன ரெய்தின ரிருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றவக் குரிசில் வீரனைப்
பொழிந்தெழு காதலிற் பொருந்தி னாரவன்
தொழுந்தொறுந் தொழுந்தொறு மாசி சொல்லுவார்.

௧௦ இனியதோர் சாலைகொண் டெய்தி யிவ்வயின்
நனியுறை யென்றக மமைய நல்கித்தாந்
தனியிட மெய்தினார் தங்கி மாதவர்
அனைவரு மெய்தின ரல்லல் சொல்லுவான். 2742

௧௧ எய்திய முனிவரை யிறைஞ்சி யேத்திவந்
தையனு மிருந்தன னருளு மென்றலும்
வையகங் காவலன் மைந்த வந்ததோர்
வெய்யவெங் கடுந்துயர் விளைவு கேளென. 2743

௧௨ இரக்கமென் றொருபொரு ளிலாத நெஞ்சினர்
அரக்கரென் றுளர்சில ரறத்தி னீங்கினோர்
நெருக்கவும் யாம்பட ரெறியலா நெறி
துரக்கவு மருந்தவத் துறையு ணீங்கினோம். 2744

௧௩ வல்லியம் பலதிரி வனத்து மானென
எல்லியும் பகலுநொந் திரங்கி யாற்றலஞ்
சொல்லிய வறநெறித் துறையு ணீங்கினோம்
வில்லியன் மொய்ம்பினாய் வீடு காண்டுமோ. 2745

௧௪ மாதவத் தொழுகில மறைகள் யாவையும்
ஓதில மோதுவார்க் குதவ லாற்றலம்
மூதெரி வளர்க்கில முறையி னீங்கினேம்
ஆதலி லந்தண ரேயு மாகிலேம். 2746

(பிரதி) 1 பூண்டுளோ.

கரு இந்திர னெனிலவ னரக்க ரேவின
சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையான்
எந்தைமற் றியாருள ரிடுக்க ணீக்குவார்
வந்தனை யாஞ்செய்த தவத்தின் மாட்சியால். 2747

கசா உருளுடை நேமியா லுயிர்க ளோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளிடை வைகினே மிரவி தோன்றினாய்
அருளுடை வீரநின் னபயம் யாமென்றார். 2748

கஎ * புகல்பு குந்திலரேற் புறத்தண் டத்தின்
அகல்வ ரென்னினு மம்பொடு வீழ்வரால்
தகவி றுன்பந் தவிருதி ரீரெனப்
பகல வன்குல மைந்தன் பணிக்கின்றான். 2749

கஅ வேந்தன் வீயவும் யாய்துயர் மேவவும்
ஏந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவு மாவனம்
போந்த தென்னுடைப் புண்ணியத் தாலென்றான். 2750

ககூ அறந்த வாநெறி யந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலை யேனெனில்
இறந்து போகினு நன்றிது வல்லது
பிறந்து நான்பெறும் பேறென்பதி யாவதோ. 2751

உ0 நிவந்த வேதியர் நீவிருந் தீயவர்
கவந்த பந்தங் களிநடங் காண்டிரால்
அமைந்த வில்லு மருங்கணைத் தூணியுஞ்
சுமந்த தோளும் பொறைத்துயர் தீருமால். 2752

உக ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
ஏவர்க் கேயு மெளியவர்க் காயினுஞ்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார். 2753

உஉ சூர றுத்த வனுஞ்சுடர் நேமியும்
ஊர றுத்த வொருவனுங் காப்பினும்
ஆர றத்தினொ டன்றிநின் றாரவர்
வேர றுப்பன் வெருவன்மி னீரென்றான். 2754

உரு உரைத்த வாசகங் கேட்டுவந் தோங்கிய
இரைத்த காதல ரேகிய வின்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
நிருத்த மாடினர் நின்று விளம்புவார். 2755

உச தோன்ற னீமுனி யிற்புவ னத்தொகை
மூன்று போல்வன முப்பது கோடிவந்
தேன்ற போது மெதிரிலை யென்றலிற்
சான்ற லோவெந் தகைப்பெரு ஞானமே. 2756

உரு அன்னை காதலி னேயின வாண்டெலாம்
இன்னல் காத்திங் கினிதுறை வாயெனச்
சொன்ன மாதவர் பாதந் தொழுதுயர்
மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினன். 2757

உசு ஐந்தொ டைந்து மமைதியி னண்டவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை யெண்ணி யகத்தியற் சேர்கென
இந்து நன்னுத றன்னொடு மேகினர்.

தண்டகாரண்யப் படலம் முற்றும்

ச. அகத்தியப் படலம்

க விடர கங்களும் வேய்செறி கானமும்
படருஞ் சின்னெறி [1] பைப்பைய நீங்கினர்
சுடரு மேனிச் சுதீட்டனென் பான்றொடர்
இடரி லானுறை சோலைசென் றெய்தினர். 2759

உ அருக்க னன்ன முனிவனை யவ்வழி
செருக்கில் சிந்தையர் சேவடி தாழ்தலும்
இருக்க வீண்டென் றினியன கூறினன்
மருக்கொள் சோலையின் மைந்தரும் வைகினர். 2760

௩ வைகும் வைகலின் மாதவன் மைந்தர்பாற்
செய்கை யாவதுஞ் செய்திவண் செல்வநீ
எய்த யான்செய்த தெத்தவ மென்றனன்
ஐயனு மவற் [2] கன்பினன் கூறினன். 2761

(பிரதி) 1 யைப்பைய 2 கன்பன.

௪ சொன்ன நான்முகன் றன்வழித் தோன்றினர்
முன்னை யோருன் முயறவ முற்றினோர்
உன்னில் யாருள ருன்னரு ளெய்திய
என்னின் யாருள ரிற்பிறந் [1] தாரென்றான். 2762

௫ உவமை நீங்கிய தோன்ற லுரைக்கெதிர்
நவமை தோன்றிய நற்றவன் சொல்லுவான்
அவமி லாவிருந் தாகவென் னாலமை
தவமெ லாங்கொளத் தக்கனை யாலென்றான். 2763

௬ மறைவ லானெதிர் வள்ளலுங் கூறுவான்
இறைவ நின்னரு ளெத்தவத் திற்கெளி
தறைவ நீண்டுண் டகத்தியற் காண்பதோர்
குறைகி டந்த தினியெனக் கூறினான். 2764

௭ நல்லதே நினைந் தாயது நானுமுன்
சொல்லு வான்றுணி கின்றது தோன்றல்நீ
செல்க வாண்டவற் சேருதி சேர்ந்தபின்
இல்லை நின்வயி னெய்தகி லாதவே. 2765

௮ அன்றி யுநின் வரவினை யாதரித்
தின்று காறுநின் றேமுறு மாலவற்
சென்று சேருதல் செய்குதி செவ்வியோய்
நன்று தேவர்க்கும் யாவர்க்கு நன்றரோ. 2766

௯ வழியுங் கூறி வரம்பில [2] வாசிகண்
மொழியு மாதவன் மொய்மலர்த் தாடொழாப்
பிழியுந் தேனிற் பிறங்கரு வித்திரள்
பொழியுஞ் சாரல் விரைவினிற் போயினோர். 2767

௧௦ *ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தான்
ஈண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர தன்சரண் வணங்கவெதிர் வந்தான்
நீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான். 2768

௧௧ பண்டவுணர் மூழ்கினர் படார்களென வானோர்
எண்டவ வெமக்கரு ளெனக்குறை யிரந்தார்
கண்டொருகை வாரினன்மு கந்துகட லெல்லாம்
உண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலு முமிழ்ந்தான்.2769

(பிரதி) 1 தானென்றான். 2 தாசிகண்.

கஉ தூயகட லீரடிசி லுண்டவை துரந்தான்
ஆயவத னாலமரு மெய்யுடைய வன்னான்
மாயவினை வாளவுணன் வாதவிதன் [1] வன்மைக்
காயமினி துண்டுலகி னாரிடர் களைந்தான். 2770

கஙு யோகமுறு பேருயிர்க டாமுலைவு றாமற்
[2] றேகுநெறி யாதென மிதித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தமெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான். 2771

கச மூசரவு சூடுமுத [3] லோனுரையின் மூவா
மாசிறவ னேவலில் வடாதுலக மேனாண்
மீசமுற நேமிநெடு மாமலையை மேவா
ஈசனிக ராயுலகு சீர்பெற விருந்தான். 2772

கரு உழக்குமறை நாலினு முணர்ந்துலக மோதும்
வழக்கினு [4] மதிக்கவினி னும்பரிவி னாடி
நிழற்பொழி கணிச்சிமணி நெற்றியுகு செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான். 2773

கசு விண்ணினி னிலத்தினில் விகற்ப வுலகிற்பேர்
எண்ணினி லிருக்கினி லிருக்குமென யாரும்
உண்ணினை கருத்தினை யுறப்பெறுவ னாலென்
கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான். 2774

கஎ இரைத்தமறை நாலினொ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெறி ஞானநிமிர் கல்விநெடு நாளிட்
டரைத்துமய னாருமறி யாதபொரு ளோவின்
றுரைத்ததுவு மாலெனு முணர்ச்சியி னுவப்பான். 2775

கஅ உய்ந்தன ரிமைப்பில ருயிர்த்தனர் தவத்தோர்
அந்தணர் மனத்துய ரகன்றதென நோனா
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவ னெனத்தனி வலிப்பான். 2776

ககூ ஏனையுயி ராமுலவை யாவுமிடை வேவித்
தானுக ரரக்கர்வெரு வச்சுடு சினத்தின்
கானவ னலைக்கடி தவித்துல களிப்பான்
வானமழை வந்ததென முந்துறு மனத்தான். 2777

(பிரதி) 1 வண்மைக். 2 றேகநெறி. 3 லோனுறையு. 4 மதிக்கவயி.

௨௦ கண்டன னிராமனை வரக்கருணை கூரப்
புண்டரிக வாணயன நீர்பொழிய நின்றான்
எண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரி கொணர்ந்தான். 2778

௨௧ நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணான்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான். 2779

௨௨ வேதியர்கள் வேறுபல வேதமொழி கூறக்
காதன்மிக நின்றொளிர் கமண்டலவி னன்னீர்
மாதவர்கள் வீசிநெடு மாமலர்க டூவப்
போதுமண நாறுகுளிர் சோலைகொடு புக்கான். 2780

௨௩ பொருந்தவன் மலர்ப்பொழி லகத்தினிது புக்கான்
விருந்தவ னமைத்தபின் விருமபினன் விரும்பி
இருந்தவ மியற்றுமென தில்லிடையில் வந்தென்
அருந்தவ முடித்தனை யருட்கரச வென்றான். 2781

௨௪ என்றமுனி யைத்தொழு திராம னிமையோரும்
நின்றதவ முற்றிநெடி யோரினெடி யோரும்
உன்றனருள் [1] பெற்றவர்க ளுன்னருள் சுமந்தேன்
வென்றன னனைத்துலகு மேலினியெ னென்றான். 2782

௨௫ தண்டக வனத்துறைதி யென்றுரை தரக்கொண்
டுண்டுவர வித்திசை யெனப்பெரி துவந்தேன்
[2] எண்டகு குணத்தினை யெனக்கொடுயர் சென்னி
துண்டமதி வைத்தவனை யொத்தமுனி சொல்லும். 2783

௨௬ ஈண்டுறைதி யையவினி யிவ்வயி னுறைந்தால்
வேண்டியன மாதவம் விரும்பின முடிப்பாய்
தூண்டுசின வாணிருதர் தோன்றியுள ரென்றால்
மாண்டுக மலைந்தெமர் மனத்துயர் [3] துடைப்பாய். 2784

௨௭ வாழுமறை வாழுமனு நீதியறம் வாழுந்
தாழுமிமை யோருயர்வர் தானவர்க டாழ்வார்
ஆழியுழ வன்புதல்வ வையமிலை மெய்யே
ஏழுலகும் வாழுமினி யிங்குறைதி யென்றான். 2785

(பிரதி) 1 பெற்றிலர்கள். 2 எண்டரு. 3 முடிப்பாய்.

௨௮ செருக்குடை யரக்கர்புரி தீமைசிதை வெய்தத்
தருக்கழி தரக்கடிது கொல்வது சமைந்தேன்
வருக்கமறை யோயவர் வருந்திசையின் முந்துற்
றிருக்கைநல மென்றன னெனக்கடி திராமன். 2786

௨௯ விழுமியது சொற்றனையிவ் வில்லிதிவண் மேனாண்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட விருப்பதிது தன்னைவடி வாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி. 2787

௩0 இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டால்
ஒப்புவர [1] வற்றென வுரைப்பரிய தொவ்வா
வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லான்
முப்புர மெரித்ததனி [2] மொய்கணையு நல்கா. 2788

௩௧ ஓங்குமர னோங்கிமலை யோங்கிமண லோங்கிப்
பூங்குவை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள கானுறையுள் பஞ்சவடி மைந்தா. 2789

௩௨ கன்னியிள வாழைகனி [3] யீவகதிர் வாலின்
சென்னெலுள தேனொழுகு போதுமுள தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள போதா
அன்னமுள பொன்னிவளொ டன்பின்விளை யாட. 2790

௩௩ ஏகியினி யவ்வயி னிருந்துறைமி னென்றான்
மேகநிற வண்ணனும் வணங்கிவிடை கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பிபரி விற்பின்
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனான். 2791

அகத்தியப் படலம் முற்றும்.

---

௫. சடாயுப் படலம்

௧ நடந்தனர் காவதம் பலவு நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையிற்
றொடர்ந்தன துவன்றின சூழல் யாவையுங்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே. 2792

(பிரதி) 1 வற்றன. 2 மொய்க்கணையு. 3 மீறுகதிர்.

௨ முந்தொரு கருமலை முகட்டின் முன்றினாட்
சந்திர னொளியொடு தழுவச் சாத்தின
அந்தமில் கனைகட லமரர் நாட்டிய
மந்தர மலையென வயங்கு வான்றனை. 2793

௩ உருக்கிய சுவணமொத் துதயத் துச்சிசேர்
அருக்கனி னிழல்படைத் தலங்கு திக்கெலாந்
தெரிப்புறு தெரிசுடர்ச் சிறையி னாற்றிசை
விரித்திருந் தனனென விளங்கு வான்றனை. 2794

௪ வானிற விசும்பெழின் மறையத் தன்மணிக்
காணிறச் சேயொளி கதுவக் கண்ணகல்
நீணிற [1]வரையினிற் பவள நீள்கொடி
போனிறம் பொலிந்திடப் பொலிகின் றான்றனை. 2795

௫ தூயவ னிருங்கலை துணிந்த கேள்வியன்
வாய்மையன் மறுவிலான் மதியின் கூர்மையன்
ஆய்வுறு மந்திரத் தறிஞ னாமெனச்
[2]சேய்மையி னோக்குறுஞ் சிறுக னான்றனை. 2796

௬ வீட்டிவா ளவுணரை விருந்து கூற்றினை
ஊட்டிவீழ் மிச்சிறா னுண்டு நாடொறுந்
தீட்டிமே லிந்திரன் சிறுகண் யானையின்
தோட்டிபோற் றேய்ந்தொளிர் துண்டத் தான்றனை. 2797

௭ கோளிரு நாலினோ டொன்று கூடிய
வாளுறு திகிரிபோ லாரத் தான்றனை
நீளுயர் மேனியி னெற்றி முற்றிய
வாளிர வியிற்பொலி மவுலி யான்றனை. 2798

௮ சொற்பங்க முறநிமி ரிசையின் சும்மையை
அற்பங்க முறவரு மருணன் செம்மலைச்
சிற்பங்கொள் பகலெனக் கடிது சென்றெதிர்
கற்பங்க ளனைப்பல கண்டு ளான்றனை. 2799

௯ ஓங்குயர் நெடுவரை யொன்றி னின்றது
தாங்கல திருநிலந் தாழ்ந்து தாழ்வுற
வீங்கிய வலியின னிருந்த வீரனை
ஆங்கவ ரணுகின ரயிர்க்குஞ் சிந்தையார். 2800

(பிரதி) 1 வரையினைப். 2 சேயினி.

க0 இறுதியைத் தன்வயி னியற்ற வெய்தினான்
அறிவிலி யரக்கனா மல்லனா மெனில்
உறுவலிக் கலுழனே யென்ன வுன்னியச்
செறிகழல் வீரருஞ் செயிர்த்து நோக்கினார். 2801

கக வனைகழல் வரிசிலை மதுகை மைந்தரை
அனையவன் றானுங்கண் டயிர்த்து நோக்கினான்
வினையறு நோன்பின ரல்லர் வில்லினர்
புனைசடை முடியினர் புலவரோ வெனா. 2802

கஉ புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தர நோக்குவ னேமி யானுமவ்
வரந்தரு மிறைவனு மழுவ லாளனுங்
கரந்தில ரென்னையா னென்றுங் காண்பனால். 2803

கங காமனென் பவனையுங் கண்ணி னோக்கினேன்
தாமரைச் செங்கணித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழற் பொடியி னோடுமொப்
[1] பாமென வருபவ ரார்கொலா மிவர். 2804

கச உலகொரு மூன்றுந்தம் முடைமை யாக்குறும்
அலகறு மிலக்கண மமைந்த மெய்யினர்
மலர்மகட் குவமையா ளோடும் வந்தவிச்
சிலைவலி வீரரைத் [2] தெரிகிலே னெனா. 2805

கரு கருமலை செம்மலை யனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தினென் றுணைவ னாழியான்
ஒருவனை யிருவரு மொத்த வாறரோ. 2806

கசு எனப்பல நினைப்பினன் மனத்து ளெண்ணுவான்
சினப்படை வீரர்மேற் செல்லு மன்பினான்
கனப்படை வரிசிலைக் காளை நீங்கள்யார்
மனப்பட வெனக்குரை வழங்கு வீரென்றான். 2807

கஎ வினவின காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையாற்
கனைகடல் நெடுநிலங் காவ லாழியான்
வனைகழற் றசரதன் மைந்தர் யாமென்றார். 2808

(பிரதி) 1 பாமலன். 2 தெரிக்கிலே.

க௮ உரைத்தலும் பொங்கிய வுவகை வேலையன்
தரைத்தலை யிழிந்தவர்த் தழுவு காதலன்
விரைத்தடந் தாரினான் வேந்தர் வேந்தன்றன்
வரைத்தடந் [1]தோளிணை வலியவோ வென்றான். 2809

க௯ மறக்கமுற் றாதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் றானென விராமன் சொல்லலும்
இறக்கமுற் றானென வேக்க மெய்தினான்
உறக்கமுற் றானென வுணர்வு நீங்கினான். 2810

௨0 தழுவின ரெடுத்தனர் தடக்கை யான்முகங்
கழுவின ரிருவருங் கண்ணி னீரினால்
வழுவின வின்னுயிர் வந்த மன்னனும்
அழிவுறு நெஞ்சின னரற்றி னானரோ. 2811

*பரவலருங்கொடைக்குநின்றன் றனிக்குடைக்கும்பொறைக்குநெடும்பண்பு
கரவலருங் கற்பகமு முடிபதியுங் கடலிடமுங் களிதது வாழப் [தோற்ற
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே மெய்க்கணியே புகழின் வாழ்வே
இரவலரு நல்லறமும் யானுமினி யென்படநீத் தேகினாயே. 2812

௨௨ அலங்கார மெனவுலகுக் குயிரளிக்குந் தனிக்குடையா யாழி சூழ்ந்த
நிலங்காவ லிதுகிடக்க நிலையாத நிலையுடையே னேய நெஞ்சின்
நலங்காண நடந்தனையென் னாயகனே நீவினையே னம்பி யின்று
விலங்கானே னாதலினால் விலங்கினே னின்னுமுயிர் விட்டிலேனே.

௨௩ தயிருடைக்கு மதமென்ன வுலகைநலி சம்பரனைத் தடிந்த வாளாய்
அயிர்கிடக்குங் கடல்வலயத் தவரறிய நீயுடல்யா னாவி யென்னச்
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய் செப்பினாய் திறம்பாய்நின்சொல்
உயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினா [2]றுணர்விறந்த கூற்றினாரே. 2814

௨௪ எழுவதோ ரிசைபெருக விப்பொழுதே யொப்பரிய வெரியுந்தீயில்
விழுவதோ நிற்கமட மெல்லியலார் தம்மைப்போ னிலத்தின் மேல்வீழ்ந்
தழுவதோ யானென்னா வழிவுற்றா னென்னவெழுந் தவரை நோக்கி
முழுவதே ழுலகுடைய முன்பினீர் கேண்மினென முறையிற்சொன்னான்.

தக்கன்மனை வயிற்றுதித்தோ ரைம்பதிமர் தடங்கொங்கைத் தையலாருள்
தொக்கபதின் மூவரையக் காசிபனும் புணர்ந்தனனத் தோகை மாருள்
மிக்கவதி திப்பெயராள் [3]முப்பத்து முக்கோடி விண்ணோ ரீன்றாள்
மைக்கருங்கட் டிதியென்பா ளதிலிரட்டி யசுரர்தமை வயிறு வாய்த்தாள்.

(பிரதி) 1 தோளினை. 2 றுணர்வுடைய. 3 முக்கோடி சுரருடன் விண் டுவையு மீன்றாள்.

தானவரே முதலோரைத் தனுப்பயந்தாள் மதியென்பாள் மனிதர் தம்மோ
[1] டானவரு ணங்களவை யடைவடைவே பயந்தனளாற் சுரபி யென்பாள்
தேனுவுடன் சராசரமற் றுளவாய பிறபயந்தா டெரிக்குங் காலை
மானமுடைக் குரோதவசைகழுதைமரையொட்டகமும்வயிறு வாய்த்தாள்.

மழைபுரையுங் குழல்வினதை வளியிடிமி னருணனுடன்வயினன் மற்றைத்
தழைபுரையுஞ் சிறைக்கூகை பாறுமுதற் பெரும்பறவை தன்னையீன்றாள்
இழைபுரையுங்காம்பிரையூர்க்குருவிசிவல்காடைமுதல்பிறவுமீன்றாள் [லாம்
கழையெனுமக்கொடிபயந்தாள்கொடியுடனேசெடிமுதலாய்க் கண்ட வெல்

வெருட்டியெழுகணபணத்தின்வியாளமெல்லாங்கத்துருவாமின்னுமீன்று
மருட்டியெழுமொருதலையபுயங்கமெல்லாஞ்சுதையென்னுமாது தந்தாள் [ள்
அருட்டையெனு மவளளித்தா ளோரந்தியுடும்பவைமுதலா வன்னவெல்லாந்
தெருட்டருமா திழையீந்தாள் செலசரமா கியபிறவுந் தெரிக்குங் காலை.

உகூ அதிதிதிதி தனுவருட்டை சுதைகழையே சுரபியணி வினதை யான்ற
மதியிழைகத் துருவுடனே குரோதைவசை காம்பிரையா மடநல் லார்கள்
விதிமுறையே யிவையனைத்தும் பயந்தனர்கள் வினதைசுதனருணன்மென்
புதுமதிசேர் நுதலரம்பை தனைப்புணரவுதித்தனம்யாம்புபியின்மீதே. [றோட்

௩௦ அருணன்றன் புதல்வன்யா னவன்படரு முலகெல்லா மடைவ ளுழி
இருணன்கு கெடத்துரந்த தசரதற்கின் னுயிர்த்துணைவனிமையோரோடும்
வருணங்கள் விதிக்கின்ற காலத்தே வந்துதித்தேன் கழுகின் வேந்தன்;
தருணங்கொள் பேரொளியீர் சம்பாதி யுடன்பிறந்த சடாயு வென்றான்.

௩௧ ஆண்டவன துரைசெய்யவஞ்சலித்தமலர்க்கையாரன்பி னோடும் [ர்
மூண்டபெருந்துன்பத்தார்முறைமுறையினிறைமலர்க்கண்மொய்த்த [2]நீரா
பூண்டபெரும் புகழ்நிறுவித் தம்பொருட்டாற் பொன்னுலகம் புக்க தாதை
மீண்டனன்வந் தானவனைக் கண்டனரே யொததாரவ் வீங்கு தோளார்.

௩௨ மருவினிய குணத்தவரை வருசிறகா லுறத்தழுவி மக்க ணீரே
உரியகடன் வினையேற்கு முதவுவீ ருடலிரண்டுக் குயிரொன் றன்னான்
பிரியவுந்தான் பிரியாதேயினிதிருக்குமுடற்பொறையாற்பிழைப்பாரரோ
எரியதனி லின்றேபுக் கிறவேனே லித்துயர மறவே னென்றான். 2823

௩௩ * உய்விடத் துதவற் குரியா னுந்தன்
மெய்வி டற்கரி தாகிவிண் ணேறினான்
இவ்வி டத்தினி லெம்பெரு மானைமைக்
கைவி டிற்பினை யார்களை கண்ணுளார். 2824

(பிரதி) 1 டானவரு டங்களவை. 2 நீராற்.

௩௪ தாயு நீங்கருந் தந்தையுந் தன்னகர்
வாயி னீங்கி வனம்புகுந் தெய்திய
நோயு நீங்கிய நுண்ணிய வெங்களை
நீயு நீங்குதியோ நெறி நீங்கலாய். 2825

௩௫ என்று சொல்ல விருந்தழி நெஞ்சினன்
நின்ற வீரரை நோக்கி நினைந்தவன்
அன்ற தென்னி லயோத்தியி லையநீர்
சென்ற பின்னவற் சேர்குவன் யானென்றான். 2826

௩௬ வேந்தன் விண்ணடைந் தானெனில் வீரர்நீர்
ஏந்து ஞால மினிதளி யாதிவட்
போந்த தென்னை புகுந்தவென் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீரென்றான். 2827

௩௭ தேவர் தானவர் திண்டிற லுகர்வே
றேவ ராக விடரிழைத் தாரெனிற்
பூவ ராவு பொலங்கதிர் வேலினீர்
சாவ தாக்கித் தருவ னரசென்றான். 2828

௩௮ தாதை கூறலுந் தம்பியை நோக்கினான்
சீதை கேள்வ னவனுந்தன் சிற்றவை
மாதரால் வந்த செய்கை வரம்பிலா
ஓத வேலை யொழிவி னுணர்த்தினான். 2829

௩௯ உந்தை யுண்மைய னாக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
எந்தை வல்ல தியாவர் வல்லாரென. 2830

௪௰ அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்தகண் ணீரினன்
வல்லை மைந்தவம் மன்னையு மென்னையும்
எல்லை யில்புக ழெய்துவித் தாயென்றான். 2831

௪௧ பின்னருமப் பெரியவன் பெய்வளை
அன்ன மன்ன நடைய வணங்கினை
மன்னர் மன்னவன் மைந்தவிவ் வாணுதல்
இன்ன ளென்ன வியம்புதி யாலென்றான். 2832

சஉ அல்லி றுத்தவன் தாடகை யாதியாய்
வில்லி றுத்த திடையென்று மேலைநாட்
புல்லி றுத்தன யாவும் புகன்றுதன்
சொல்லி றுத்தனன் றோன்றல்பின் றோன்றினான். 2833

சங கேட்டு வந்த கிளரொளி மோலியான்
றோட்ட லங்கலி னீர்துறந் தீர்வள
நாட்டு நீரினி நண்ணுதல் காறுமிக்
காட்டில் வைகுதிர் காக்குவன் யானென்றான். 2834

சச இறைவ வெண்ணி யகத்திய னீந்துள
அறையு நன்மணி யாற்றி னகன்கரைத்
துறையி னுண்டொரு சூழலச் சூழல்புக்
குறைது மென்றன னுள்ளத் துறைகுவான். 2835

சரு பெரிது நன்றப் பெருந்துறை வைகிநீர்
புரியு மாதவம் போதுமின் யானது
தெரிவு றுத்துவ னென்றனன் றன்சிறை
விரியு நீழலின் மேவவிண் சென்றனன். 2836

சசா ஆய சூழ லறிய வுணர்த்திய
தூய சிந்தையத் தோமில் குணத்தவன்
போய பின்னைப் பொருசிலை வீரரும்
ஏய சோலை யினிதுசென் றெய்தினார். 2837

சஎ வார்ப்பொற் கொங்கை மருங்கியை மக்களே
ஏர்ப்பச் சிந்தனை யிட்ட வரக்கர்தஞ்
சீர்ப்பைச் சிக்கறத் தேற்றினன் சேக்கையிற்
பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான். 2838

சடாயுப் படலம் முற்றும்

---

௬. பஞ்சவடிப் படலம்

க புவியினுக் கணியா யான்ற [1] பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறியளாவிச்
சவியுறதெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினைத் தெரியக் கண்டார். 2839

(பிரதி) 1 பொருடந்த

உ வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாசங்
கொண்டுறை குவளை யொண்க ணொருங்குற நோக்கி யூழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப் பொலிவது கடவுள் யாறு.

ங *எழுவுகா தலின்வந் தென்ன விரைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி
அழுவது மொத்த தால்வ் வலங்குநீ ராறு மன்னோ. 2841

ச நாளங்கொ ணளினப் பள்ளி நயனங்க ளனைய நேமி
வாளங்க ளுறைவ கண்டு மங்கைதன் கொங்கை நோக்க
நீளங்கொள் சிலையோன் மற்ற நேரிழை நெடிய நம்பி
தோளின்க ணயனம் வைத்தாள் சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

ரு ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

சா வில்லியற் றடக்கை வீரன் வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக ளுடக்கங் கண்டான் மங்கைதன் மருங்கு நோக்கி
எல்லுயர் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டா ளண்ணல்கண் ணவளுங் கண்டாள்.

எ அனையதோர் தன்மை யான வருவிநீ ராற்றின் பாங்கர்
பனிதரும் படிவப் பஞ்ச வடியெனும் பழுவச் சோலைத்
தனியிட மதனை நண்ணித் தம்பியாற் சமைக்கப் பட்ட
இனியன சாலை யெய்தி யிருந்தன னிராம னிப்பால். 2845

பஞ்சவடிப் படலம் முற்றும்

எ. சூர்ப்பநகி மூக்கரி படலம்

க நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு முன்பினுள்
மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள். 2846

௨ செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா கம்பெற விளைந்து வீங்கலால்
உம்பரா னவர்க்குமொண் டவர்க்கு மோதநீர்
இம்பரா னவர்க்குமோ ருறுதி யீட்டுவாள். 2847

௩ வெய்யதோர் காரண முண்மை மேவினுள்
வைகலுந் தமியளவ் வனத்து வைகுவாள்
நொய்தினிவ் வுலகெலா நுழையு நோன்மையாள்
எய்தின ளிராகவ னிருந்த சூழல்வாய். 2848

௪ எண்டரு மிமையவ ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலைநாள்
அண்டசத் தருந்துயி றுறந்த வையனைக்
கண்டன டன்கிளைக் கிறுதி காட்டுவாள். 2849

௫ சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததால்
இந்திரற் காயிர நயன மீசற்கு
முந்திய மலர்க்கணோர் மூன்று நான்குதோள்
உந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள். 2850

௬ கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவ னன்றுதொட் டின்று காறுந்தான்
நற்றவ மியற்றிய வனங்க னல்லுருப்
பெற்றன னெனப் பெயர்த்து மெண்ணுவாள். 2851

௭ தரங்களி னமைந்துதாழ்ந் துயர்ந்த தாலமார்
மரங்களு நிகர்க்கிலா மலையும் புல்லிய
உரங்களி னுயர்திசை யோங்கு மானையின்
கரங்களே யிவன்மணிக் கையென் றுன்னுவாள். 2852

௮ வின்மலை [1] வல்லவன் வீரத் தோணெடுங்
கன்மலை நிகர்க்கில கனிந்த நீலத்தின்
நன்மலை யன்றது நாம மேருவும்
பொன்மலை யாதலிற் பொருவ லாதென்பாள். 2853

௯ தாளுயர் தாமரைத் தடங்க டம்மொடு
கேளுறு நாட்டத்துக் கிரியின் றோற்றத்தான்
தோளொடு தோளிணை தொடர்ந்து பார்க்கவும்
நீளிய வல்லகண் ணெடிய மார்பென்பாள். 2854

(பிரதி) 1 யல்லவன்.

க0 அதிகநின் றொளிருமிவ் வழகன் வாண்முகம்
பொதியவிழ் தாமரை பூத்த பொங்கிருங்
கதிர்மதி யாமெனிற் கலைக டேயுமம்
மதியெனி லதற்கொரு மறுவுண் டென்பரால். 2855

கக எவன்செய வினியவ னழகை யெய்தினான்
அவஞ்செய்து திருவுடம் பசைய நோற்கின்றான்
நவஞ்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவஞ்செயத் தவஞ்செய்த தவமெ னென்கின்றான்.

கஉ உடுத்தநீ ராடைய ளுருவச் செவ்வியாள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவன்
அடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன போலுமிப் புல்லென் றுன்னுவாள். 2857

கங வாணிலா முறுவலான் வயங்கு சோதியைக்
காணலா னேகொலாங் கதிரி னாயகன்
சேணுலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையுள்
நாணிலன் மீமிசை நடக்கு மென்கின்றாள். 2858

கச குப்புறற் கரியமாக் குன்றை வென்றுயர்
இப்பெருந் தோளவ னிதழுக் கொப்பதோர்
ஒப்பென வுலகமே லுரைக்க வொண்ணுமேல்
துப்பினிற் றுப்புடை [1] யாதைச் சொல்லுகேன். 2859

கரு நற்கலை மதியுற வயங்கு நம்பிதன்
எற்கலை திருவரை யெய்தி யேமுற
வற்கலை நோற்றன மாசிலாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள். 2860

கசு தொடையமை நெடுமழைத் தொங்க லாமெனக்
கடைகுழன் றிடைநெறி கரிய குஞ்சியைச்
சடையெனப் புனைந்தில னென்னிற் றையலார்
உடையுயிர் யாவையு முடையு மாலென்றாள். 2861

கஎ நாறிய நகையணி நல்ல புல்லினால்
ஏறிய செவ்விமே லியற்று மோவெனா
மாறகன் முழுமணிக் காசின் மாட்சிதான்
வேறொரு மணியினால் விளங்கு மோவென்றாள். 2862

(பிரதி) 1 யாரைச்.

௧௮ கரந்தில னிலக்கண மெடுத்துக் காட்டின
பரந்தரு நான்முகன் பழியுற் றானரோ
இருந்தவ னிணையடிப் பொடியு மொக்கிலாப்
புரந்தர னுலகெலாம் புரக்கின் றானென்றாள். 2863

௧௯ நீத்தமும் பரவையுங் குறுக நெஞ்சிடைக்
கோத்தவன் புணர்விடைக் குளிப்ப மீக்கொள
ஏத்தவும் புரியவொன் றீக லான்பொருள்
காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினாள். 2864

௨௦ வான்றனில் வரைந்ததோர் மாத ரோவியம்
போன்றன னின்றனள் புழுங்கு நெஞ்சினாள்
தோன்றறன் சுடர்மணித் தோளி னாட்டங்கள்
ஊன்றின பறிக்கவோ ராற்றம் பெற்றிலாள். 2865

௨௧ நின்றன னின்றவ னெடிய மார்பகம்
ஒன்றுவ னன்றெனி லமுத முண்ணினும்
பொன்றுவன் போக்கினி யரிது போலெனாச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள். 2866

௨௨ எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
வயிறுடை யாளெனின் மறுக்கு மாதலாற்
குயிறொடர் குதலையோர் கொவ்வை வாயிள
மயிறொட ரியலியாய் மருவ [1] னன்றெனா. 2867

௨௩ பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அங்கையி னாயமந் திரத்தை யாய்ந்தனள்
திங்களிற் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினாள்.

௨௪ *பஞ்சியொளி விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி பெயர்ப்பாள்
அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். 2869

௨௫ பொன்னொழுகு பூவினது பூவொடொளிர் பூவைப்
பின்னியல்கொள் வாளிணை [2] பிறழ்ந்தொளிர் முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்னிழிவி றன்மையது விண்ணிழிவ தென்ன. 2870

(பிரதி) 1 நன்றெனா 2 பிறந்தொளிர்.

௨௬ காணினுயர் கற்பக முயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யொத்தினிய செவ்விநனி கொண்டோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள். 2871

௨௭ நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோதை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னுக்
கோமகனு மத்திசை குறித்தனன் விழித்தான். 2872

௨௮ விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்கவரு மானை
எண்ணருளி யேழைமை துடைத்தெழு [1] மெய்ஞ்ஞானக்
கண்ணருளு கண்ணனிரு கண்ணினெதிர் கண்டான்.

௨௯ பேருழைய நாகருல கிற்பிறிதில் வானிற்
பாருழையி னில்லதொரு மெல்லுருவு பாரா
ஆருழைய டங்குமழ கிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவ ணோரென நினைந்தான். 2874

௩௦ அவ்வயினவ் வாசைதன் மனத்துடைய வன்னுள்
செவ்விமுக முன்னியடி செங்கையி னிறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசியயல் பாரா
நவ்வியி னொதுங்கியிறை நாணியய னின்றாள். 2875

௩௧ தீதில்வர வாகதிரு நின்வரவு செய்யோய்
போதவுள தெம்முழையொர் புண்ணியமி தன்றோ
ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள். 2876

௩௨ * பூவிலோன் புவல்வன் மைந்தன் பாவைமுப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னான செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைய வெள்ளி மலையெடுத் துலக மூன்றுங்
காவலோன் றங்கை காம வல்லியாங் கன்னி யென்றாள். 2877

௩௩ அவ்வுரை கேட்ட வீர னையுறு மனத்தான் செய்கை
செவ்விதென் றறிக லாகுஞ் சிறியளென் றுணரச் செங்கண்
வெவ்வுரு வமைந்தோன் றங்கை யென்பது மெய்ம்மை யாகில்
இவ்வுரு வமைந்த தன்மை யியம்புதி விரைவி னென்றான். 2878

(பிரதி) 1 மெஞ்ஞானக்.

௩௪ தூயவன் பணியா முன்னஞ் சொல்லுவாள் சோர்வி லாளம்
மாயவல் லரக்க ரோடும் வாழ்வினை மதிக் கிலாதே
ஆய்வுறு மனத்தே னாகி யறந்தலை நிற்ப தானேன்
தீவினை தீய நோற்றுத் தேவரிற் பெற்ற தென்றாள். 2879

௩௫ இமையவர் தலைவ னேயு மெளிமையி னேவல் செய்யும்
அமைதியி னுலக மூன்று மாள்பவன் றங்கை யாகிற்
சுமையுறு செல்வத் தோடுந் தோன்றலை துணையு மின்றித்
தமியைநீ வருதற் கொத்த தன்மையென் னைய லென்றான்.

௩௬ வீரன துரைத்த லோடு மெய்யிலாள் விமல யானச்
சீரிய ரல்லார் மாட்டுச் சேரலன் றேவர் பாலும்
ஆரியர் முனிவர் பாலு மடைந்தன னிறைவ வீண்டோர்
காரிய முண்மை நின்னைக் காணிய வந்தே னென்றாள்.

௩௭ அன்னவ ளுரைத்த லோடு மையனு மறிதற் கொவ்வா
நன்னுதன் மகளிர் சிந்தை நன்னெறிப் பால வல்ல
பின்னிது தெரியு மென்பான் பெய்வளைத் தோளி யென்பால்
என்ன காரியத்தைச் சொல்ல திசையுமே [1] விழைப்ப னென்றான்.

௩௮ தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
தாமெனி லாவ தன்றா லருங்குல மகளிர்க் கம்மா
ஏமுறு முயிர்க்கு நோவே னென்செய்கே னாருமில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி யென்றாள்.

௩௯ சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேணுற மிளிர்ந்து நாளு விதம்புரண் டிருண்ட வாட்கட்
பூணியல் கொங்கை யன்னா ளம்மொழி புகல லோடும்
நாணில ளைய ளொய்ய னல்லளு மல்ல ளென்பான். 2884

௪0 பேசல னிருந்த வள்ள லுள்ளத்தின் பெற்றி யோராள்
பூசல்வண் டரற்றுங் கூந்தற் பொய்மகள் புகன்ற வென்கண்
ஆசைகண் டருளிற் றுண்டோ [2] வன்றென லுண்டோ வென்னும்
ஊசலி லுலாவு கின்றான் மீட்டுமோ ருரையைச் சொன்னாள்.

௪௧ எழுதரு மேனியா யீண் டெய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவ ரேவற் செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடு மிளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலு மென்றாள்.

(பிரதி) 1 விசைப்ப. 2 வன்றெனி.

௪௨ நிந்தனை யரக்கி நீதி நிலையிளாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே வள்ளலுண் டாட்டங் கொண்டான்
சுந்தரி மணதநுக் கொத்த தன்மையின் றுணையிற் றன்றால்
அந்தணர் பாவை நீயா னரசரில் வந்தே னென்றான்.

௪௩ ஆரண மறையோ னெந்தை யருந்ததிக் கற்பி னெம்மோய்
தாரணி புரந்த சால கடங்கடர் மரபிற் றையல்
போரணி பொலங்கொள் வேலோய் பொருந்தலை யிகழ்தற்கொத்த
காரண [1]மிதுவே யாகி லென்னுயிர் காண்ப னென்றாள். 2888

௪௪ அருத்திய ளன்ன கூற வகத்தெழு நகையின் வெள்ளைக்
குருதமெழு கின்றதென்னக்கொண்டலுண்டாட்டங்கொண்டான்
வருத்தநீங் கரக்கர் தம்மின் மானுடர் மணத்த னங்கை
பொருத்தமன் றென்று சாலப் புலமையோர் புகல்வ ரென்றான்.

௪௫ பசாவரு வித்தி யாதர் பன்னியான் பயத்தை யோரேன்
இராவணன் றங்கை யென்ற தேழைமைப் பால தென்பால்
அராவணை யமல னன்னை யறிவித்தேன் முன்னந் தேவர்ப்
பராவிநோய் நீங்கி னேனப் பழிபடு பிறவி யென்றாள்.

௪௬ ஒருவனே யுலக மூன்றிற் கோங்கொரு தலைவ னாங்கில்
ஒருவனே குபேர னின்னி னுடன்பிறந் தார்க ளன்னோர்
தருவரேற் கோடு மன்றேற் றமியைவே றிடத்துச் சார
வெருவுவ னங்கை யென்றான் மீட்டவ ளினையசொன்னாள்.

௪௭ காந்தற்ப மென்ப துண்டாற் காதலிற் கலந்த மாற்கம்
மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்தகூட்டம்
ஏந்தற்பொற் றோளி னைய விசைந்தபி னெனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்ப முற்றும் வேறுமோ ருரையுண் டென்றாள்.

௪௮ முனிவரோ டுடைய முன்னே முதிர்பகை முறைமை நோக்கார்
தனியைநீ யாத லான்மற் றவரொடுந் தழுவற் கொத்த
வினையமீ தல்ல தில்லை விண்ணுநின் னாட்சி யாக்கி
இனியவர் மகிழ்ந்து வந்துன் னேவலி னிற்ப ரென்றாள்.

௪௯ நிருதன தருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னோ
டொருவருங் கால மெல்லா முறையவும் பெற்றே னென்றே
திருநகர் தீர்ந்த வேந்தன் செய்தவம் பயந்த தென்று
வரிசிலை வடிவுத் தோளான் வாளெயி றிலங்க நக்கான்.

(பிரதி) 1 மிதுமெய்.

ருo விண்ணிடை யிம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க் கெல்லாங்
கண்ணுடை யொளியின் பாங்கர் கடிகமழ் சோலை நின்று
பெண்ணுடை யரசி தேவர் பெற்றுயர் வரத்தாற் பின்னை
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே [1] போல்வாள் வந்தாள். 2895

ருக ஊன்சுட வுணங்கு பேழ்வா யுணர்விலி யுருவ நாறும்
வான்சுடர் சோதி வெள்ளம் வந்திடை வயங்க நோக்கி
மீன்சுடர் விண்ணு மண்ணும் விரிந்தபோ ரரக்கரென்னுங்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்.

ருஉ பண்புற நோக்கி மீண்டு படைக்குனர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகுக் கெல்லை யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி லஃதே கண்ட
பெண்பிறந் தேனுக்கென்றா லென்படும் பிறருக்கென்றாள்.

ருங பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருதமற் றினிவே றில்லை கமலத்துக் கடவு டானும்
ஒருதிறத் துணர நோக்கி யுருவினுக் குலக மூன்றில்
இருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பிவ ரிருவ ரென்றாள்.

ருச மருவொன்று கூந்த லாரை வனத்திவன் கொண்டு வாரான்
உருவிங்கி துடைய ராக மற்றையோர் யாரு மில்லை
அரவிந்த மலரு ணீங்கி யடியிணை படியிற் றோயத்
திருவிங்கு வருவதென்னோ வென்றகந் திகைத்துநின்றாள்.

ருரு பொன்னைப்போற் பொருவு மேனிப்பூவைபோல்வண்ணத்தானிம்
மின்னைப்போ லிடையா ளோடு முறைந்தவே டத்த னல்லன்
தன்னைப்போற் றகையா ரில்லாத தளிரைப்போ லடியி னாளும்
என்னைப்போ லிடையே வந்தா ளிகழ்விப்பே னிவளை யென்னா.

ருசு வருமிவள் மாயம் வல்லள் வஞ்சனை யரக்கி நெஞ்சந்
தெரிவில தேறுந் தன்மை சீரியோய் செயலிற் றன்றால்
உருவமு மெய்ய தன்றா லூனுகர் வாழ்க்கை யாளை
வெருவின னெய்தி டாமல் விலக்குதி வீர வென்றாள்.

ருஎ ஒள்ளிதின் னுணர்வு மின்னே யுன்னையா ரொளிக்கு மீட்டார்
தெள்ளிய நலத்தி னாலுஞ் சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் லரக்கி போலா மிவளுநீ காண்டி யென்னா
வெள்ளிய முறுவன் முத்தம் வெளிப்பட வீரனக்கான்.

(பிரதி) 1 போல.

௫௮ ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
வேயுடைத் தோளி னாளும் வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை நிருதர்தம் பாவை யென்னாக்
காயெரி யனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்

௫௯ அஞ்சினள் வஞ்சி யன்ன மின்னிடை யலச வோடிப்
பஞ்சின்மெல் லடிக ணோவப் பதைத்தனள் பருவக் கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லியே போற்
குஞ்சரமனைய வீரன் குவவுத்தோ டழுவிக் கொண்டாள்.

௬௦ வளையெயிற் றவர்க ளோடும் வரும்விளை யாட்டென் றாலும்
விளைவன தீமை யேயா மென்பதை யுணர்ந்த வீரன்
உளைவன வியற்ற லொல்லை யுன்னிலை யுணரு மாகில்
இளையவன் முனியு நங்கை யேகுதி விரைவி னென்றான்.

௬௧ பொற்புடை யரக்கி பூவிற் புனலினிற் பொருப்பில் வாழும்
அற்புறை யுள்ளத் தாரு மனங்கனு மமரர் மற்றும்
எற்பெறத் தவஞ்செய் கின்றா ரென்னைநீ யிகழ்வ தேயிந்
நற்பொறை நெஞ்சி லில்லாக் கள்வியை நச்சி யென்றாள்.

௬௨ தன்னொடுந் தொடர்வி லாதோ மென்னவுந் தவிரா டாணிக்
கன்னெடு மனத்தி சொல்லுங் கள்ளவா சகங்க ளென்னா
மின்னொடு நடந்து செல்லு மேகம்போல் மிதிலை வேந்தன்
பொன்னொடும் புனிதன் போயப் பூம்பொழிற் சாலை புக்கான்.

௬௩ புக்கபின் போன தென்னு முணர்வினள் பொறையி னீங்கி
உக்கதா முயிர்க ளொன்று முயிர்க்கில ளொடுங்கி நின்றாள்
தக்கிலன் றகுதி யாதுந் தழுவலன் சலமுங் கொண்டான்
மைக்கருங் குழலி னண்மாட் டன்பினன் வலிய னென்றாள். 2908

௬௪ நின்றில ளவனைச் சேரு [1] நெறியினை நினைந்து போனாள்
இன்றிவ னகம் புல்லே னெனினுயி ரிழப்ப னென்னாப்
பொன்றிணி சாரற் சீதப் பளிக்கறைப் பொதும்பர் புக்காள்
சென்றது பரிதி மேல்பாற் செக்கர்வந் திறுத்த தன்றே. 2909

௬௫ * அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
மொழிந்த காமக் கடுங்கனன் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்றுளை வாளெயிற்
றிழிந்த கார்விட மேறிய தென்னவே. 2910

(பிரதி) 1 நெறியென.

௬௬ தாட கைக்கொடி யாடட மார்பிடை
ஆட வர்க்கர சன்னயி லம்புபோற்
பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி யுயிருளைந் தாளரோ. 2911

௬௭ [1] கலையு வாமதியே கறி யாகவன்
சிலைய மாரனைத் தின்னா நினைப்பினாள்
மலைய மாருத மாநெடுங் காலவேல்
உலைய மார்பிடை யூன்றிட வேயுமால். 2912

௬௮ அலைக்கு மாழி யடங்கிட வங்கையான்
மலைக்கு லங்களிற் றார்க்கு மனத்தினாள்
நிலைக்கும் வானி னெடுமதி நீணிலா
வலைக்கு நீங்கு மிடுக்கிலள் மாந்துவாள். 2913

௬௯ பூவெலாம் பொடி யாகவிப் பூமியிற்
காவெலாம் பொடிப் பேனெனக் காந்துவாள்
சேவலோ டுறை செந்தலை யன்றிலின்
நாவினால் வலி [2] யெஞ்சி நடுங்கினாள். 2914

௭0 அணைவி றிங்களை நுங்க வராவினைக்
கொணர்வ னோடி யெனக்கொதித் துன்னுவாள்
பணையின் மென்முலை மேற்பணி மாருதம்
புணர வாருயிர் வெந்து புழுங்குமால். 2915

௭௧ கைக ளாற்றன் கதிரிளங் கொங்கைமேல்
ஐய தண்பனி யள்ளின ளப்பினாள்
மொய்கொ டீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால். 2916

௭௨ அளிக்கு மென்னுயி ரென்றழ லஞ்சினள்
குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை வெங்கண ணைங்கணைக்
கொளிக்க லாமிடம் யாதென வுன்னுவாள். 2917

௭௩ வந்து கார்மழை தோன்றினு மாமணிக்
கந்து காணினுங் கைத்தலங் கூப்புமால்
இந்து காந்தத்தி னீர நெடுங்கலும்
வெந்து காந்த [3] வெதுப்புறு மேனியாள். 2918

(பிரதி) 1 கலைய். 2. யஞ்சி. 3 வெதும்புறு.

எச வாம மாமதி யும்பனி வாடையுங்
காம னுந்தனைக் கண்டுணை ராவகை
நாம வாளெயிற் றேர்கத நாகமாய்ச்
சேம மால்வரை யின்முழைச் சேருமால். 2919

எரு அன்ன காலை யழன்மிகுத் தேறவும்
முன்னன் மேனிய ளாய்முலை வெந்துக
இன்ன வாசெய்வ னென்றறி யாதிளம்
பொன்னின் வார்தளி ரிற்புரண் டாளரோ. 2920

எசு வீரன் மேனி வெளிப்பட வெய்தவன்
கார்கொண் மேனியைக் கண்டன ளாமெனச்
சோரும் வெள்குந் துணுக்கெனு மவ்வுருப்
பேருங் காமப் பிணியிறை போகலாள். 2921

எஎ ஆகக் கொங்கையி லையனென் றஞ்சன
மேகத் தைத்தழு வுமவை [1] வெந்தன
போகக் கண்டு புலம்புமப் புன்மையாள்
மோகத் துக்கொர் முடிவுமுண் டாங்கொலோ. 2922

எஅ ஊழி வெங்கன லுற்றன ளொத்துமவ்
வேழை யாவி யிறந்தில ளென்பரால்
ஆழி யானை யடைந்தவள் பின்னையும்
வாழலா மெனு மாசை மருந்தினே. 2923

எகூ வஞ்ச னைக்கொடு மாயை வளர்க்குமென்
நெஞ்சு புக்கென தார்வத்தை நீக்கெனும்
அஞ்ச னக்கிரி யேயரு ளாயெனும்
நஞ்சு நக்கினர் போல நடுங்குவாள். 2924

அ0 காவி யோகய லோவெனுங் கண்ணிணை
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்
பாவி யோங்களைப் பார்க்குங்கொ லோவெனும்
ஆவி யோயினு [2] மாசையி னோய்விலாள். 2925

அக மாண்ட கற்புடை யாண்மலர் மார்பகம்
ஈண்டி ருக்குநல் லாண்மக னென்னுமால்
வேண்ட கிற்பின னல்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றேதெறுங் காமமே. 2926

(பிரதி) 1 வெந்துகும். 2 மாசையை யோய்விலாள்.

அஉ ஆன்ற காத லளைந்துற வெய்துயிர்
மூன்று லோகமு மூண்ட வரக்கராம்
ஏன்ற காரிரு ணீக்க விராகவன்
தோன்றி னானென வெய்யவன் றோன்றினான். 2927

அங * விடியல் காண்டலி லீண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்
படியி லாண்மருங் [1] குள்ளள வெனையவன் பாரான்
கடிதி னேகின னெடுத்தொலை கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே மதியென மதியா. 2928

அச வந்து நோக்கினள் வள்ளல்போ யொருமணித் தடத்திற்
சந்தி நோக்கியே யிருந்தது கண்டன ளம்பி
இந்து நோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்த நோக்கிய சோலையி லிருந்தது காணாள். 2929

அரு தனியி ருந்தனள் சமைந்ததென் கருத்தெனத் தாழ்வுற்
றினியி ருந்தெனக் கெண்ணுவ தில்லென வெண்ணாத்
துனியி ருந்தவன் மனத்தின டோகையைத் தொடர்ந்தாள்
கனியி ரும்பொழில் காத்தய லிருந்தவன் கண்டான்.

அசு நில்லடீ யெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்
வில்லெ டாதவள் வீங்கெரி யாமென விரிந்த
சில்ல லோதியைச் சிக்குறச் செங்கையாற் பற்றி
[2] ஒல் வயிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி.

அஎ ஊக்கித் தாக்கிவிண் படர்வனென் றுருத்தெழு வாளை
நூக்கி நொய்தினில் வெய்திழை யேலென நுவலா
மூக்குங் காதுமென் முருகுமுலைக் கண்களு முறையாற்
போக்கிப் போக்கிய சினத்தோடும் புரிகுழல் விட்டான்.

அஅ அக்க ணத்தவள் வாய்திறந் தரற்றிய வோசை
திக்க னைத்தினு நின்றது தேவர்தஞ் செவியும்
புக்க துற்றது புகல்வதென் மூக்கெனும் புழையூ
டுக்க சோரியி னீரமுற் றுருகிய வுலகம். 2933

அகூ கொலைது மித்துயர் கொழுங்கதிர் வாளினக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முகத்து
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்செய்த தொத்ததத் தன்மை.

(பிரதி) 1 குள்ளென; 2 ஒல்லை யீர்த்துதைத் தொளிர்கிளர்.

கூ0 அதிர மாநிலத் தடிபதைத் தரற்றிய வரக்கி
கதிர்கொள் காலவேற் கரன்முத னிருதர்தங் கதப்போர்
எதிரி லாதவ ரிறுதியி னிமித்தமா யெழுந்தாண்
டுதிர மாரிபெய் கார்நிற மேகமொத் துயர்ந்தாள். 2935

கூக உயரும் விண்ணிடை மண்ணிடை விழுங்கிடந் துழைக்கும்
அயருங் கைகுலைத் தலமரு மாருயிர் சோரும்
பெயரும் பெண்பிறந் தியான்பட்ட பழியெனப் பிதற்றுந்
துயரு மஞ்சிமுன் றொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள். 2936

கூஉ ஒற்று மூக்கினை யுலையுறுந் தீயென வுயிர்க்கும்
எற்றுங் கையினை நிலத்தினி லிணைத்தடங் கொங்கை
பற்றிப் பார்க்குமெய் நோக்குந்தன் பருவரன் மயக்காற்
சுற்று மோடும்போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும்.

கூங ஊற்று மிக்கநீ ரருவியி னொழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துட் டிரிபவ டேவரு மிரியக்
கூற்று முட்குந்தன் சுற்றத்தார் பெயரெலாங் கூறி
ஆற்று கிற்றிலள் பற்பல பன்னிநின் றழுதாள். 2938

கூச *1 நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமைச் சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ. 2939

கூரு புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படாதென்னும்
ஒலியாழி யுலகுரைக்கு முரைபொய்யோ வூழியினுஞ்
சலியாத மூவருக்குந் தானவர்க்கும் வானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ. 2940

கூசு ஆர்த்தானைக் கரசுந்தி யமரர்கணத் தொடுமார்த்த
போர்த்தானை யிந்திரனைப் பொருதவனைப் போர்தொலைத்து
வேர்த்தானை யுயிர்கொண்டு மீண்டானை வெரிந்பண்டு
பார்த்தானே யான்பட்ட பழிகாண வாராயோ. 2941

கூஎ காற்றினையும் புனலினையுங் கனலினையுங் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையுங் கோளினையும் பணிகோடற்
காற்றினைநீ யீண்டிருவர் மானிடவர்க் காற்றுது
மாற்றினையோ வுன்வலத்தைச் சிவன்றடக்கை வாள்கொண்டாய்.

(பிரதி) 1 நிலையெடுத்தார்.

கூஅ [1]உருப்படிவ மன்மதனை யொத்துளரே யானுஞ்
செருப்படியிற் பொடியொவ்வா மானிடரைச் சீறுதியோ
நெருப்பொடியப் பொடிசிதற நிறைமதத்த திசையானை
மருப்பொடியப் பொருப்பொடியத் தோணிமிர்த்த [2]வலியானே.

கூகூ தேனுடைய நறுந்தெரியற் றேவரையுந் தெறுமாற்றல்
தானுடைய விராவணற்குந் தம்பியர்க்குந் தவிர்ந்ததோ
ஊனுடைய வுடம்பினரா யெங்குலத்தோர்க் குணவான
மானுடவர் மருங்கேபுக் கொடுங்கினதோ வலியம்மா.

க00 மரனேயு நெடுங்கான மறைந்துறையுந் தாபதர்கள்
உரனேயோ வடலரக்கர் கோவேயோ வுற்றெதிர்ந்தார்க்
கரனேயோ வரியேயோ வயனேயோ வெனுமாற்றற்
கரனேயோ யான்பட்ட கையறவு காணாயோ. 2945

க0க இந்திரனு மலரயனு மிமையவரும் பணிகேட்பச்
சுந்தரிபல் லாண்டிசைப்ப வுலகேழுந் தொழுதேத்தச்
[3]சந்திரன்போற் குடைநிழற்ற விசைந்திருந்த சபைநடுவே
வந்தடியே னுறுது முகங்காட்ட வல்லேனோ. 2946

க0உ உரனெரிந்து விழவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நானிருந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றோ விவைபடவுங் கடவேனோ
அரனிருந்த மலையெடுத்த வையாவோ வையாவோ. 2947

க0ங நசையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே நின்புகழு மாசுண்ட தாகாதோ
திசையானை விசைகலங்கச்செருச்செய்து மருப்பொசித்த
இசையாலே வெழுதுபெய ரிராவணவோ விராவணவோ.

க0ச கல்லீரும் படைத்தடக்கை யடற்கரதூ டணன்முதலா
அல்லீருஞ் சுடர்மணிப்பூ ணரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்லீரும் படைக்கும்பகருணனைப்போற்கொடியீர்கள்
எல்லீரு முயங்குதிரோ யானழைப்பக் கேளீரோ. 2949

க0ரு கானதனி லிடையிருவர் காதோடு மூக்கரிய
மானமிழந் தியானேதா னிவைபடவும் வல்லேனோ
தானவரைத் துரிசறுத்துப் புரந்தரனைத் தளையிலிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ.

(பிரதி) 1 உருப்பொடியா; 2 வாளானே; 3 சந்திரன்பொற்.

௧௦௬ ஒருகாலத் துலகேழு முருத்தெரிக்கத் தனுவொன்றால்
திருகாத சினந்திருகித் திசைதிசையே செலநூறி
இருகாலிற் புரந்தரனை யிருஞ்சிறையி லிட்டலைத்த
மருகாவோ மானிடவர் வலிகாண வாராயோ. 2951

௧௦௭ என்றின்ன பலபன்னி யிகலரக்கி யழைத்திரங்கிப்
பொன்றுன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து நிறைதவத்தின் குறைமுடித்து
வன்றிண்கைச் சிலைநெடுந்தோண் மரகதத்தின் மலைவந்தான்.

௧௦௮ வந்தானை முகநோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு மிருநிலத்தைச் சேறாக்கி
அந்தோவுன் றிருமேனிக் கன்பிழைத்த வன்பிழையால்
எந்தாயான் பட்டபடி யிதுகாணென் றடிவீழ்ந்தாள்.

௧௦௯ விரிந்தாய கூந்தலாள் வெய்யவினை யாதானும்
புரிந்தாளென் பதுந்தனது பொருவரிய திருமனத்தாற்
தெரிந்தானின் றிளையோனே யிவளைநெடுஞ் செவியொடுமூக்
கரிந்தானென் பதுமுணர்ந்தா னம்மனைநீ யாரென்றான். 2954

௧௧௦ அவ்வுரைகேட் டவ்வரக்கி யறியாயோ நீயென்னைத்
தெவ்வுலகென் றோருலகு மில்லாத சீற்றத்தான்
வெவ்விலைவே லிராவணனிவ் விண்ணுலக முதலாய
எவ்வுலகு முடையானுக் குடன்பிறந்தேன் யானென்றாள். 2955

௧௧௧ தாமிருந்த சவையரக்கர் புகலொழியத் தவம்புரியும்
யாமிருந்த நெடுஞ்சூழற் கென்செயவந் தாயெனலும்
வேமிருந்தீ யெனக்கனலு மெரிகாம வெம்பிணிக்கு
மாமருந்தே நெருனலினும் வந்திலனோ யானென்றாள்.

௧௧௨ செங்கயல்போற் கருநெடுங்கட் டேமருதா மரையுறையும்
நங்கையிவ ரெனநெருனல் நடந்தவரோ நாமென்னக்
கொங்கைகளுங் குழைகாதுங் கொடிமூக்குங் குறைந்தழிந்தால்
அங்கணர சேயொருவர்க் கழியாதோ வழகென்றாள்.

௧௧௩ மூரன்முறு வலனிளைய மொய்ம்பினான் முகநோக்கி
வீரவெகுண் டனையிவடன் விடுகாதுங் கொடிமூக்கும்
ஈரநினைந் திவளிழைத்த பிழையென்னென் றிவைவினவச்
சூரநெடுந் தகையவனை யடிவணங்கிச் சொல்லுவான்.

௧௧௪ தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்துண்டோ குறித்தபொரு ளுணர்ந்திலனால்
நாட்டந்தா னெரியுமிழ நல்லாண்மேற் பொல்லாதாள்
[1] ஓட்டந்தா ளரிதினிவ ளுடன்றெழுந்தா ளெனவுரைத்தான்.

௧௧௫ ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமுன் னிகலரக்கி
சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை துனியுழக்குந் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள்.

௧௧௬ பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை யொருங்கவிப்பான்
தேடிப்போந் தனமின்று தீமாற்றஞ் சிலவிளம்பி
வீடிப்போ காதேயிம் மெய்வனத்தை விட்டகல
ஓடிப்போ வென்றுரைத்த வுரைகடந்தாற் கிவையுரைத்தாள்.

௧௧௭ நரைதிரையொன் றில்லாத நான்முகனே முதலமரர்
கரையிறந்தோ ரிராவணற்குக் கடனிறுக்குங் குடியென்றால்
விரையுமது நன்றன்று வேறாக யானுரைக்கும்
உரையுளது நுமக்குறுதியுணர்வுளதே [2]லென்றுரைப்பாள்.

௧௧௮ ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
நாக்கரியுந் தசமுகனார் நாகரிக ரல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெல்லாம் புல்லிடையி லுகுத்தீரே.

௧௧௯ வான்காப்போர் மண்காப்போர் மாநகர் வாழுலகந்
தான்காப்போ ரினித்தங்க டலைகாத்து நின்றுங்கள்
ஊன்காக்க வுரியார்யா ரென்னையுயிர் நீர்காத்தால்
யான்காப்ப தல்லாலிவ் விராவணனா ருளரென்றால். 2964

௧௨௦ காவற்றிண் கற்பமைந்தார் தங்காவ றாங்கழறார்
ஆவற்பே ரன்பினா லறைகின்றே னாமன்றே
தேவர்க்கும் வலியான்றன் றிருத்தங்கை யானிவணீண்
டேவர்க்கும் வலியானுக் கிளையானீ ரியம்பீரோ. 2965

௧௨௧ மாப்போரிற் புறங்காப்பன் வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபோலச் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென்னீர் கருதியதே தரவல்லேன்
பூப்போலு மெல்லியலாற் பொருளென்ன புகல்வீரால்.

(பிரதி) 1 ஓட்டந்தா னரிதினிவ. 2 யென்றுரைப்பாள்.

கஉஉ குலத்தாலு நலத்தாலுங் குறித்தனவே கொணர்த்தக்க
வலத்தாலு மதியாலும் வடிவாலு மடப்பாலும்
நிலத்தாரும் விசும்பாரு நேரிழையா ரென்னைப்போற்
சொலத்தானிங் குரியாரைச் சொல்லீரே வல்லீரேல்.

கஉ௩ போக்கினீ ரென்றாசி போய்த்தென்னீர் போக்கலிரேல்
ஆக்குவனோர் நொடிவரையி லழகமைவ னருள்கூடும்
பாக்கியமுண் டெனிலதனாற் பெண்மைக்கோர் பழிப்புண்டோ
மேக்குயர்ந்த நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றோ.

கஉ௪ விண்டாரே யல்லாரோ வேண்டாதார் மனம்வேண்டில்
உண்டாய காதலிலென் னுயிரென்ப துமதன்றோ
கண்டாரே காதலிக்குங் கட்டழகு விடமன்றோ
கொண்டாரே கொண்டாடு முருப்பெற்றாற் கொள்ளீரோ. 2969

கஉ௫ சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
தவனுமெழுந் தொன்றாகி நின்றன்ன வுருவோனே
புவனமனைத் தையுமொருவன் பூங்கணையா லுயிர்வாங்கும்
அவனுமுனக் கிளையானோ ¹வவனேபோ லருளிலனால். 2970

*பொன்னுருவப்பொருகழலீர்பிழைகாணீர் மூக்கரிவான் பொருள்வேறுண்
என்னுருவைக்கைக்கொண்டிரிருநதொழியுநம்மருங்கேயேகாளப்பாற்[டோ
பின்னிவளை யயலொருவர் பாரரா மெனவரிந்தீர் பிழைசெய் தீரோ
அன்னதனை யறிந்தன்றோ வன்பிரட்டி கொண்டதுநா னறிவி லேனே.

கஉ௭ வெப்பழியா நெடுவெகுளி வேலரக்க ரீதறிந்து வெகுண்டு நோக்கில்
அப்பழியா லுலகனைத்து மும்பொருட்டா லழிந்தனவா மறத்தை நோக்கி
ஒப்பொழியச் செய்கிலீ ருயர்குலத்துத் தோன்றினீ ருணர்ந்து நோக்கி
இப்பழியைத துடைததுதவி யினிதிருத்தி ரென்னொடுமென் றிறைஞ்சி
[நின்றாள்.

கஉ௮ நாடயரத்துயரிழைத்தவையரக்கி ²நின்னன்னைதன்னைநல்கும்
தாடகையை யுயிர்கவர்ந்த சரமிருந்த தன்றியுநான் றவமேற் கொண்டு [ன்
தோடகையத்துறுமலர்த்தாரிகலரக்கர்குலந்தொலைப்பான்தோன்றிநின்றே
போடகலப்புல்லொழுக்கின்வல்லரக்கியென்றிறைவன்புகலும்பின்னும்.

தரையளித்த தனிநேமித் தசரதன்றன் புதல்வர்யாந் தாய்சொற் றாங்கி
விரையளித்த கான்புகுந்தேம் வேதியரு மாதவரும் வேண்ட நின்ற
கரையளிததற்கரியபடைக்கடலரக்கர்குலந்தொலைத்துக்கண்டாய்பண்டை
வரையளிதத குலமாட நகாபுகுவ திதுதெரிய மனக்கொ ளென்றான்.2974

(பிரதி) 1 வவனேயோ வருளிலனால். 2 நின்னவ்வைதெளவை
நல்காத்.

௧௫௦ நெறித்தாரை செல்லாத நிருதரெதிர் நில்லாத நெடிய தேவர்
மறித்தாரீண் டிருவரிவர் மானிடவ ரென்றது வல்லை யாகில்
வெறித்தாரை வேலரக்கர் விறலியக்கர் முதலினர்நீ மிடலோ ரென்று
குறித்தாரை யாவரையுங் கொணருதியே னின்னெதிரே கோறுமென்றான்.

௧௫௧ கொல்லலா மாயங்கள் குறித்தனவே கொள்ளலாங் கொற்ற மூற்ற
வெல்லலா மவரியற்றும் வினையமெல்லாஞ் சடக்கலா மேல்வாய் நீங்கிப்
பல்லெலா முறததோன்றும் பகுவாய ளென்றது பார்த்தி யாகில்
நெல்லெலாஞ் சுரந்துதவு நீர்நாடா கேளென்று நிருதி கூறும். 2976

௧௫௨ காம்பறியுந்தோளாளைக்கைவிடீரென்னிலும்யான்மிகையோகள்வர்
ஆம்பொறியி லடரக்க ரவரோடே செருமலைய வமைந்தீ ராகில்
தாம்பொறியிற் பலமாயந் தரும்பொறியி லறிந்தவற்றைத் தடுப்பனன்றே
பாம்பறியும் பாம்பின்கா லெனமொழியும் பழமொழியும் பார்க்கி லீரோ.

உளங்கோடாத்துணையிழைத்தாளுண்டொருத்தியென்னுதியேனிருதரோ
களங்கோடற் கரியசெருக் கண்ணியக்கா லொருமூவேங் கலந்த போது[டுங்
குளங்கோடுமென்றெய்திக் கொடியவிறல் வீரர்தமைக்கொன றபின்னர்[றே.
இளங்கோவோடனையிருத்தியிருகோளுஞ்சிறைவைத்தாற்கிளையாளென்

௧௫௪ பெருங்குலாவுறுநகர்க்கேயேகுநாள்வேண்டுமுருப்பிடிப்பனென்றால்
அருங்கலா முற்றிருந்தா ளென்னலுமா மிளையவன்றா னரிந்த நாசி
ஒருங்கிலா விவளோடு முறைவதோ வென்பானே லிறைவ வொன்றும்
மருங்கிலா தவளோடு மன்றோநாம் நெடுங்காலம் வாழ்ந்த தென்பாய்.

என்றலுமே யிளையவன்றா னிலங்கிலைவாட் கடைக்கணியா விவளை யீண்டு
கொன்றுகளையோமென்னி னெடிதலைக்குமருளென்கொல்கோவேயென்ன
நன்றதுவே யாமன்றோ போகாளே லாகவென நாதன் கூற
ஒன்றுமிவ ரெனக்கிரங்கா ருயிரிழப்ப னிற்கிலென வரக்கி யுன்னா. 2980

௧௫௬ ஏற்றநெடுங் கொடிமூக்கு மிருகாது முலையிரண்டு மிழந்து வாழல்
ஆற்றுவனே வஞ்சனையா லும்மையுள்ள பரிசறைவா னமைந்த தன்றோ
காற்றினிலுங் கனலினுங் கடியானைக் கொடியானைக் கரனை யுங்கள்
கூற்றுவனையிப்பொழுதேகொணர்கின்றேனென்றுசலங்கொண்டுபோனாள்.

சூர்ப்பநகி மூக்கரி படலம் முற்றும்.

அ. திரிசிரா வதைப் படலம்

௧ இருந்த மாக்கரன் றாளிணை யின்மிசைச்
சொரிந்த சோரியள் கூந்தல டுமெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேக மெனவிழுந் தாளரோ. 2982

௨ அழுங்கு நாளிதென் றந்தக னணையால்
தழுங்கு பேரி யெனத்தனித் தேங்கிவான்
விழுங்கு மேக மிடித்தவெந் தீயினாற்
புழுங்கு நாக மெனப்புரண் டாளரோ. 2983

௩ வாக்கிற் கொப்பப் புகைமுந்து வாயினன்
நோக்கிக் கூசிடா நுன்னையித் தன்மையை
ஆக்கிப் போனவ ரார்கொலென் றனவண்
மூக்கிற் சோரி மொழிகொண்ட கண்ணினாள். 2984

௪ இருவர் மானிடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தசரதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார். 2985

௫ ஒன்று நோக்கல ருன்வலி யோங்கற
நின்று நோக்கி நிறுத்து நினைப்பினால்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையார். 2986

௬ மண்ணி னோக்கரும் வானினின் மற்றினில்
எண்ணி நோக்குறில் யாவரு நேர்கிலாப்
பெண்ணி னோக்குடை யாளொரு பேதையென்
கண்ணி னோக்கி யுரைப்பருங் காட்சியாள். 2987

௭ கண்டு நோக்கியக் காரிகை யாடனைக்
கொண்டு போவ னிலங்கையர் கோக்கெனா
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்ட மாக்கினர் மூக்கெனச் சொல்லினாள். 2988

௮ கேட்ட னனுரை கண்டனன் றீண்டியத்
தோட்ட நுங்கிற் றளையுறு மூக்கினைக்
காட்டெ னாவெழுந் தானெதிர் கண்டவர்
நாட்டந் தீய வுலகை நடுக்குவான். 2989

௯ எழுந்து நின்றல கேழு மெரிந்துகப்
பொழிந்த கோபக் கனலினிற் பொங்குவான்
கழிந்து போயினர் மானிட ரென்னுங்கால்
அழிந்த தோவிவ் வரும்பழி யென்னுமால். 2990

க0 வருக தேரெனு மாத்திரை மாடுளோர்
இருகை மால்வரை யேழினொ டேழனார்
ஒருகை யாழுல கேந்து முரத்தினார்
தருக விப்பணி யெம்வயிற் றானென்பார். 2991

கக சூலம் வாண்மழுத் தோமரஞ் சக்கரங்
கால பாசங் கதைபொரு கையினார்
வேலை ஞாலம் வெருவுறு மாண்பினார்
ஆல காலந் திரண்டன்ன வாக்கையார். 2992

கஉ வெம்பு வேலைக் கனலன்ன வெம்மையார்
நம்பி நம்மடி மைத்தொழி னன்றெனா
உம்பர் மேலு முருத்தனை போதியோ
இம்பர் மேலினி யாமுள மென்கின்றார். 2993

கங நன்று சொல்லுதிர் நாணில் சிறார்கண்மேற்
சென்று போர்செயிற் றேவர் சிரிப்பரால்
கொன்று சோரி குடித்தவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடென்றான். 2994

கச என்ன லோடும் விரும்பி யிறைஞ்சினார்
சொன்ன நாணிலி யந்தகன் றாதென
அன்ன கர்ப்படர் வாரென லாயினார்
மன்னன் காதலர் வைகிட நண்ணினார். 2995

கரு துமிலப் போர்வில் லரக்கர்க்குச் சுட்டினாள்
அமலத் தொல்பெய ராயிரத் தாழியான்
நிமலப் பாத நினைவி லிருந்தவக்
கமலக் கண்ணனைக் கையினிற் காட்டினாள். 2996

கசு எற்று வாம்பிடித் தென்குன ரென்குனர்
பற்று வாநெடும் பாசத்தி னென்குனர்
முற்று நாமிறை சொன்முறை யாலெனாச்
சுற்றி னார்வரை சூழ்ந்தன்ன தோற்றத்தார். 2997

கஎ ஏத்த வாய்மை யிராம னிளவலைக்
காத்தி தையலை யென்றுதன் கற்பகம்
பூத்த தன்ன பொருவி றடக்கையின்
ஆர்க்க நாணி னருவரை வாங்கினான். 2998

கஅ வாங்கி வாளொடு வாளிபெய் புட்டிலுந்
தாங்கித் தாமரைக் கண்ணனச் சாலையை
நீங்கி யிவ்வயி னேர்மி னெடாவென
வீங்கு தோளன் மலைதலை மேயினான். 2999

க௯ மழுவும் வாளும் வயங்கொளி முச்சிகைக்
கழுவுங் காலவெந் தீயன்ன காட்சியார்
எழுவி னீட்டக் கையெழு நான்கையுந்
தழுவும் வாளிக ளாற்றலஞ் சேர்த்தினான். 3000

உ0 மரங்கள் போனெடும் வாளொடுந் தோள்விழ
உரங்க ளோடடர்த் தார்க்குர வோன்விடு
சரங்க ளோடின தைத்த வரக்கர்தஞ்
சிரங்க ளோடின தீயவ ளோடினாள். 3001

உக ஒளிறு வேற்கரற் குற்ற துணர்த்தினாள்
குளிறு கோபவெங் கோளரி மாவடக்
களிறெ லாம்படக் கைதலை வேலுறப்
பிளிறி யோடும் பிடியன்ன பெற்றியாள். 3002

உஉ அங்க ரக்க ரவிந்தொழிந் தாரெனப்
பொங்க ரத்தம் விழிவழி போந்துக
வெங்க ரப்பெய ரோன்வெகுண் டான்விடைச்
சங்க ரற்குந் தடுப்பருந் தன்மையான். 3003

உ௩ அழையென் றேவ வரக்கர்வன் போர்ப்படை
உழைய ரோடி யொருநொடி [1] யும்பல்மேல்
மழையின் மாமுர சேற்றினர் வல்லையின்
முழையின் வாளரி யஞ்ச முழக்குவார். 3004

உ௪ பெரி யோசை பிறத்தலும் பெட்புறு
மாரி மேகம் வரம்பில வந்தெனத்
தேரின் சேனை திரண்டது தேவர்தம்
ஊரு நாக ருலகு முலைந்தவே. 3005

உ௫ போர்ப் பெரும்படை பொம்மென் முழக்கமாய்
நீர்த்தரங்க நெடுந் தடந் தேர்களால்
ஆர்த்தெ ழுந்த திறுதியி னார்கலி
கார்க்க ருங்கடல் கால்கிளர்ந் தென்னவே. 3006

(பிரதி) 1 யும்பன்.

உசு காடு துன்றி விசும்பு கரந்தன
நீடி யெங்கு நிரந்த நெடுங்கொடி
ஓடு மெங்கள் பசியென் றுவந்தெழுந்
தாடு கின்ற வலகையி னுடவே. 3007

உஎ தறியி னீங்கிய தாழ்தடக் கைத்தனிக்
குறிகொண் மாமத வேழக் [1] குழுவனார்
செறியின் வாளொடு வாளிடை தேய்த்துகும்
பொறியிற் கானெங்கும் வெங்கனல் பொங்கவே. 3008

உஅ முருடி ரண்டு முழக்கு முழக்கொலி
உருடி ரண்டெழுந் தேரொலி யுட்புக
அருடி ரண்ட வருக்கன்றன் மேல்வழங்
கிருடி ரண்டுவந் தீண்டெழுந் தென்னவே. 3009

உகூ தலையின் மாசுணந் தாங்கிய தாரணி
நிலை யிலாது முதுகை நெளிப்புற
உலைவி லேழுல கத்தினு மோங்கிய
மலையெ லாமொரு மாடுதொக் கென்னவே. 3010

௩0 * வல்லியக் குழாங்களோ மழையி னீட்டமோ
[2] ஒல்லிபத் தொகுதியோ வோங்கு மோங்கலோ
அல்லமற் றரிகளி னனிக மோவெனப்
பல்பதி னாயிரம் படைக்கை வீரரே. 3011

௩க ஆளிகள் பூண்டன வரிகள் பூண்டன
மீளிகள் பூண்டன வேங்கை பூண்டன
ஞாளிகள் பூண்டன நரிகள் பூண்டன
கூளிகள் பூண்டன குதிரை பூண்டன. 3012

௩உ ஏற்றின மார்த்தன வேன மார்த்தன
காற்றின மார்த்தன கழுதை யார்த்தன
தோற்றின மாத்திரத் துலகு சூழ்வரும்
பாற்றின மார்த்தன பணில மார்த்தன. 3013

௩௩ தேரினந் துவன்றின சிறுகட் செம்முகக்
காரின நெருங்கின காலிற் காற்பரித்
தாரினங் குழுவின தடையில் கூற்றென
பேரினங் கடலெனப் பெயருங் காலையே. 3014

(பிரதி) 1 குழுவினர்; 2 புல்லியற் றொகுதியோ பொங்கு லோகமோ.

௩௪ மழுக்களு மயில்களும் வயிர வாட்களும்
எழுக்களுந் தோமரத் தொகையு மீட்டியும்
முழுக்கலு முசுண்டியுந் தண்டு முத்தலைக்
கழுக்களு முலக்கையுங் கால பாசமும். 3015

௩௫ குந்தமுங் குலிசமுங் கோலும் பாலமும்
அந்தமில் சாபமுஞ் சரமு மாழியும்
வெந்தொழில் வலயமும் விலங்குஞ் சங்கமும்
பந்தமும் கப்பணப் படையும் பாசமும். 3016

௩௬ ஆதியி னருக்கனு மனலு மஞ்சுறு
சோதிய வுதிரமுந் தூவுந் துன்னின
ஏதிகண் மிடைந்தன விமை யவர்க்கெலாம்
வேதனை கொடுத்தன வாகை வேய்ந்தன. 3017

௩௭ ஆயிர மாயிரங் களிற்றி னாற்றலர்
மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்
தீயெரி விழியினர் நிருதர் சேனையின்
நாயகர் பதின்மரோ டடுத்த நால்வரே. 3018

௩௮ ஆறினோ டாயிர மமைந்த வாயிரங்
கூறின தொருபடை குறித்த வப்படை
ஏறின தேழின திரட்டி யென்பரால்
ஊறின சேனையின் றொகுதி யுன்னுவார். 3019

௩௯ உரத்தின ருருமென வுரற்றும் வாயினர்
கரத்தெறி படையினர் கமலத் தோன்றரும்
வரத்தினர் மலையென மழைதுயின் றெழுஞ்
சிரத்தினர் தருக்கினர் செருக்குஞ் சிந்தையார். 3020

௪௦ விண்ணள விடநிமிர்ந் துயர்ந்த மேனியர்
கண்ணள விடலரு மார்பர் காலினான்
மண்ணள விடநெடு வரத்தர் வானிடை
எண்ணள விடநெடுஞ் செருவென் றெய்தினார். 3021

௪௧ இந்திரன் முதலின ரெறிந்த மாப்படை
சிந்தின தெறித்துகச் செறிந்த தோளினர்
அந்தக னடிதொழு தடங்கு மாணையார்
வெந்தழ லுருவுகொண் டனைய மேனியார். 3022

௪௨ சூலமும் பாசமுந் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெயிறுந் தாங்கினர்
ஆலமும் வெளிதெனு நிறத்த லாதலாற்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார். 3023

௪௩ கழலினர் தாளினர் கவச மார்பினர்
நிழலுறு பூணினர் நெறித்துப் பொங்கிய
அழலுறு குஞ்சிய ரமரை வேட்டுவந்
துழலுறு மனத்தின ரொருவ ரேயனார். 3024

௪௪ மருப்பிரு மதக்களிற் றமரர் மன்னனும்
விருப்புறு முகத்தெதிர் விழிக்கில் வென்னிடும்
உருப்பெறு துலைவுறு முலக மூன்றினுஞ்
செருப்பெறு தினவுறுஞ் சிகரத் தோளினர். 3025

௪௫ குஞ்சரங் குதிரைபேய் குரங்கு கோளரி
வெஞ்சினக் கரடிநாய் வேங்கை யாளியென்
[1] றஞ்சுறக் கனல்புரை முகத்த ரார்கலி
[2] நஞ்சுதொக் கெனப்புரை நயனத் தார்களும். 3026

௪௬ எண்கைய ரெழுகைய ரேழு மெட்டுமாய்க்
கண்கனல் சொரிதரு முகத்தர் காலினால்
மண்கையில் வளைத்துயிர் வாரி வாயிடும்
உண்கைய ருலக்கைய ருலப்பி லோர்களும். 3027

௪௭ இயக்கரிற் பறித்தன வவுண ரிட்டன
மயக்குறுத் தமரரை வலியின் வாங்கின
துயக்கில்கந் தற்பரைத் துரந்து வாரின
நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின. 3028

௪௮ கொடிதழை கவிகையின் றொங்கல் குஞ்சரம்
படியுறு பதாகைமீ விதானம் பன்மணி
குடைமிளிர் சாமரை குழாங்கொண் டெங்கணும்
மிடைதலி னுலகெலாம் வெயிலி ழந்தவே. 3029

௪௯ எழுவரொ டெழுவரா முலக மேழொடேழ்
தழுவிய வென்றியர் தலைவர் [3] தானையர்
மழுவினர் வாளினர் வயங்கு சூலத்தர்
உழுவையொ டரியென வுரற்றுஞ் சீற்றத்தார். 3030

(பிரதி) 1 றஞ்சுதற். 2 நஞ்சுகொக். 3 தானையின்.

ருo வில்லினர் வாளின ரிதழை மீதிடும்
பல்லினர் மேருவைப் பறிக்கு மாற்றலர்
புல்லினர் திசைதொறும் புரவித் தேரினர்
சொல்லின முடிக்குறுந் துணிவி னெஞ்சினர். 3031

ருக தூடணன் றிரிசிராத் தோன்ற லாதியாய்க்
கோடணை முரசினங் குளிறு சேனையர்
ஆடவ ருயிர்கவ ரலங்கல் வேலினர்
பாடல நிலையினர் பலருஞ் சுற்றினர். 3032

ருஉ ஆன்றமை யெறிபடை யழுவத் தார்கலி
வான்றொடர் மேருவை வளைத்த தாமென
ஊன்றின தேரின னுயர்ந்த தோளினன்
தோன்றினன் யாவருந் துணுக்க மெய்தவே. 3033

ருங அசும்புறு மதகரி புரவி யாடகத்
தசும்புறு திணிபுயத் தரக்கர் தாடரு
விசும்புறு தூளியால் வெண்மை மேயின
பசும்பரிப் பகலவன் பைம்பொற் றேரரோ. 3034

ருச வனந்துகள் பட்டன மலையின் வானுயர்
கனந்துகள் பட்டன கடல்க டூர்ந்தன
இனந்தொகு தூளியா லிசைப்ப தென்னினிச்
சினந்தொகு நெடுங்கடற் சேனை செல்லவே. 3035

ருரு நிலமிசை விசும்பிடை நெருக்க லானெடு
மலையினம் வருவபோன் மலைத்த மால்கரித்
தலைமிசைத் தலைமிசைத் தாவிச் சென்றனர்
கொலைமிசை நஞ்செனக் கொதிக்குஞ் சிந்தையார். 3036

ருசு * வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கின் மாயாப்
பந்தமாம் வினையின் மாளப் பற்றிய பயத்தி னார்க்கும்
உந்தரு நிலைய தாகி யுடனுறைந் துயிர்க டம்மை
அந்தகற் களிக்கு நோய்போ லரக்கிமுன் னாக வம்மா.

ருஎ தூரியக் குரலி னோசை வான்முகி றுணுக்கங் கொள்ள
வார்சிலை யொலியி னஞ்சி யுருமின மறுக்கங் கொள்ள
ஆர்கலி யார்ப்பை யுட்கி யமைவுற வரக்கர் சேனை
போர்கருத் திருந்த வீர னுறைவிடம் புக்க தன்றே. 3038

ருஅ வாய்புலர்ந் தழிந்த மெய்யின் வருத்தத்த வழியி லாண்டும்
ஓய்வில நிமிர்ந்து வீங்கு முயிர்ப்பின வுலைந்த கண்ண
தீயவர் சேனை வந்து சேர்ந்தவை தெரியச் சென்று
வேய்தெரிந் துரைப்ப போன்ற புள்ளொடு விலங்கு மம்மா.

ருகூ தூளியின் படலை வந்து தொடர்வுற மரமுந் தூறுந்
தாளிடை யொடியு மோசை சடசட வொலிப்பக் கானத்
தாளியு மரியு மஞ்சி யிரிதரு மமலை நோக்கி
மீளிமொய்ம் பினருஞ் சேனை மேல்வந்த துளதென் றுன்னா.

கூ0 மரம்படர் கான மெங்கு மதர்பட வந்த சேனை
கரன்படை யென்பதெண்ணிக் கருநிறக் கமலக் கண்ணன்
சரம்படர் புட்டில் கட்டிச் சாபமுந் தரித்தான் றள்ளா
உரம்படர் தோளின் மீளாக் கவசமிட் டுடைவா ளார்த்தான்.

கூக மின்னின்ற சிலையன் வீரக் கவசத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையு நெஞ்சன்
நின்னின்று காண்டி யான்செய் நிலையென விரும்பி நோக்கி
முன்னின்று பின்வந் தானை நோக்கினன் மொழிய லுற்றான்.

கூஉ நெறிக்கொண்மா தவர்க்கு முன்னே நேர்ந்தன னரக்க ராவி
பறிக்குவன் யானே யென்னும் பழமொழி பழுது றாமே
வெறிக்கொள் பூங்குழலி னாளை வீரநீ வேண்டினேன் யான்
குறிக்கொண்டு காத்தி யின்றே கொல்வனிக் குழுவை யெல்லாம்.

கூங மீளருஞ் செருவில் விண்ணு மண்ணுமென் மேல்வந் தாலும்
நாளுலந் தழியு மன்றே நானுனக் குரைப்ப தென்னே
ஆளியின் மொய்ம்பி னாயிவ் வமரெனக் கருளி யின்றென்
தோளிணை தினவின் வைகுஞ் சோம்பினைத் துடைத்தி யென்றான்.

கூச என்றலு மிளைய வீர னிசைந்தன னிராம னேந்து
குன்றன்ன தோளி னாற்ற லுள்ளத்தி னுணரக் கொண்டான்
அன்றியு மண்ண லானை மறுக்கில னங்கை கூப்பி
நின்றன னிருந்து கண்ணீர் நிலம்புகப் புலர்கின் றாள்பால். 3045

கூரு குழையுறு மதியம் பூத்த கொம்பனாள் குழைந்து சோரத்
தழையுறு சாலைநின்று தனிச்சிலை தரித்த மேரு
மழையென முழங்கு கின்ற வாளெயிற் றரக்கர் காண
முழையினின் றெழுந்து செல்லுமடங்கலின் முனிந்துசென்றான்.

௬௬ தோன்றிய தோன்ற றன்னைச் சுட்டினள் காட்டிச் சொன்னாள்
வான்றொடர் [1]மூங்கி றந்த வயங்குவெந் தீயி தென்னத்
தான்றொடர்குலத்தையெல்லாந் தொலைக்குமாசமைந்துநின்றாள்
ஏன்றுவந் தெதிர்ந்த வீர னிவனிக லிராம னென்றாள்.

௬௭ கண்டனன் கனகத் தேர்மேற் கதிரவன் கலங்கி நீங்க
விண்டனி நின்ற வென்றிக் கரனெனும் விலங்கற் றோளான்
மண்டமர் யானே செய்திம் மானிடன் வலியை நீக்கிக்
கொண்டனன்வாகையென்றுபடைஞரைக்குறித்துச்சொன்னான்

௬௮ மானிட னொருவன் வந்த [2]வலிகெழு சேனைக் கம்மா
கானிட மில்லை யென்னுங் கட்டுரை கலந்த காலை
யானுடை வென்றி யென்னும் யாவருங் கண்டு நிற்றீர்
ஊனுடை யிவனை யானே யுண்குவ னுயிரை யென்றான்.

௬௯ அவ்வுரை கேட்டு வந்தா னகம்பனென் றமைந்த கல்விச்
செவ்வியா னொருவ னைய செப்புவன் செருவிற் சால
வெவ்வலி யாத லன்றே வீரரு ளாண்மை வீர
இவ்வயி னுளதாந் தீய நிமித்தமென் றியம்ப லுற்றான்.

௭௦ *குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறிப்
பருதி வானவ னூர்வளைப் புண்டது பாரய்
கருது வீரநின் கொடிமிசைக் காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன புலம்புவ நிலம்படப் புரள்வ. 3051

௭௧ வாளி வாய்களை யீய்வளைக் கின்றன வயவர்
தோளு நாட்டமு மிடந்துடிக் கின்றது தூங்கி
மீளி மொய்ம்புடை யிவுளிகள் விழுவன விறலோய்
ஞாளி யோடுநின் றுளைப்பன நரிக்குலம் பலவால். 3052

௭௨ பிடியெ லாமதம் பெய்திடப் பெருங்கவிழ் வேழம்
ஒடியும் வாண்மருப் புலகமுங் கம்பிக்கு முயர்வான்
இடியும் வீழ்ந்திடு மெரிந்திடும் பெருந்திசை யெவர்க்கும்
முடியின் மாலைகள் புலாலொடு முழுமுடை நாறும்.

௭௩ இனைய வாதலின் மானிட னொருவனென் றிவனை
நினைய லாவதொன் றன்றது நீதியோய் நின்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந் தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென் னுரையெனப் புகன்றான்.

(பிரதி) 1 மூங்கிற். 2. வழுகெழு.

௭௪ உரைத்த வாசகங் கேட்டலு முலகெலா முலையச்
சிரித்து நின்றுதன் சேவகந் தேவரைத் தேய
அரைத்த வம்பியா மலங்கெழிற் றோளமர் வேண்டி
இரைத்து வீங்குவ மானிடற் கெளியவோ வென்றான்.

௭௫ என்னு மாத்திரத் தெறிபடை யிடியென விடியா
மன்னர் மன்னவன் மதலையை வளைத்தன வனத்து
மின்னும் வாலுளை மடங்கலை முனிந்தின வேழந்
துன்னி னாலெனச் சுடுசினத் தரக்கர்தந் தொகுதி. 3056

௭௬ வளைந்த காலையில் வளைந்ததவ் விராமன்கை வரிவில்
விளைந்த போரையு மாவதும் விளம்புதும் விசையாற்
புளைந்த பாய்பரி புரண்டன புகர்முகப் பூட்கை
உளைந்த மால்வரை யுருமிடி படவொடிந் தென்ன. 3057

௭௭ சூல மற்றன வற்றன சுடர்மழுத் தொகைவாள்
மூல மற்றன வற்றன முரட்டண்டு பிண்டி
பால மற்றன வற்றன பகழிவெம் பகுவாய்
வேலு மற்றன வற்றன வில்லொடு பலவும். 3058

௭௮ தொடிது ணிந்தன தோளொடுந் தோமரந் துணிந்த
அடிது ணிந்தன கடகளி றச்சொடு நெடுந்தேர்
கொடிது ணிந்தன குரகதந் துணிந்தன குலமா
முடிது ணிந்தன துணிந்தன முளையொடு முசலம். 3059

௭௯ கருவி மாவொடுங் கார்மதக் கைமலைக் கணத்தோ
டுருவி மாரியொத் தோடின சுடுசர முதிரம்
அருவி மாலையிற் பிறங்கின தவனியி லரக்கர்
திருவின் மார்பகந் திறந்தன துறந்தன சிரங்கள். 3060

௮0 ஒன்று பத்துநூ றாயிரங் கோடியென் றுணராத்
துன்று பத்திய விராகவன் சுடுசரந் துரக்கச்
சென்று பத்திரத் தலையின மலைதிரண் டென்னக்
கொன்று பத்தியிற் குவித்தன பிணப்பெருங் குன்றம்.

௮௧ காடு கொண்டகா ருலவைகள் காயெரி கதுவச்
சூடு கொண்டன வெனத்தொடர் குருதிமீத் தோன்ற
ஆடு கின்றன வறுகுறை யயிலம்பு விண்மேல்
ஓடு கின்றன வுயிரையுந் தொடர்வன வொத்த. 3062

௮௨ கைகள் வாளொடு களப்பட கழுத்தறக் கவசம்
மெய்கள் போழ்படத் தாள்விழ மிகநெடு நிருதர்
செய்ய மாத்தலை சிந்திடச் சிதைவுறச் சென்ற
தைய லார்நெடு விழியெனக் கொடியன சரங்கள். 3063

௮௩ மாரி யாக்கிய வடிக்கணை வரைபுரை நிருதர்
பேரி யாக்கையின் பெருங்கரை வயின்றொறும் பிறங்க
ஏரி யாக்கின வாறுக ளாக்கின விரைக்குஞ்
சோரி யாக்கின போக்கின வனமெனுந் தொன்மை. 3064

௮௪ அலைமி தந்தன குருதியின் பெருங்கட லரக்கர்
தலைமி தந்தன நெடுந்தடி மிதந்தன தடக்கை
மலைமி தந்தன வயப்பரி மிதந்தன வயப்போர்ச்
சிலைமி தந்தன கொடியொடு மிதந்தன தேர்கள். 3065

௮௫ ஆய காலையி னனல்விழித் தார்த்திரைத் தரக்கர்
தீய வார்கணை முதலிய சினத்தடு படைகள்
மேய மால்வரை யொன்றினை வளைத்தின மேகந்
தூய தாரைகள் சொரிவன வாமெனச் சொரிந்தார்.

௮௬ சொரிந்த பல்படை துணிபடத் துணிபடச் சரத்தால்
அரிந்து சிந்திட வெந்தன திசைதிசை யகற்றி
நெரிந்து பார்மக ணெளிவுற வனமுற்று நிறைய
விரிந்த செம்மயிர்க் கருந்தலை மலையென விழுந்த. 3067

௮௭ கவந்த பந்தங்கள் களித்தன குளித்தகை மலைகள்
சிவந்து பாய்ந்தவெங் குருதியிற் றிருகின சினத்தால்
நிவந்த வெந்தொழி னிருதர்தம் நெடுநிணந் தெவிட்டி
உவந்த வன்கழு துயிர்சுமந் துளுக்கிய தும்பர். 3068

௮௮ மருட ருங்களி வஞ்சனை வளையெயிற் றரக்கர்
கருட னஞ்சுறு கண்மணி காகமுங் கவர்ந்த
இருட ரும்புறத் திழுதையர் பழுதுரைக் கெளிதோ
அருட ருந்திறத் தறனன்றி வலியதுண் டாமோ. 3069

௮௯ *பல்லாயிர மிருள்கீறிய பகலோனென வொளிரும்
வில்லாளனை முனியாவெயி லயிலாமென விழியாக்
கல்லார்மழை கணமாமுகில் கடைநாள்விழு வனபோல்
எல்லாமொரு தொடையாவுட னெய்தார்படை யெறிந்தார்.

௯௦ எறிந்தாரென வெய்தாரென வெறியாவினைந் தனவும்
அறிந்தானென வறியாவகை யயில்வாளியி னறுத்தான்
செறிந்தாரையும் பிரிந்தாரையுஞ் செறுத்தாரையுந் திறத்தால்
மறிந்தாரையும் வலித்தாரையு மடித்தான்சிலைபிடித்தான்.

௯௧ வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல வதனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைமுற்றிய கரியின்
தானத்தன காகுத்தன சரமுந்திய சிரமே. 3072

௯௨ மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடுவேலையி னிடைமேயன மிடலோர்
புண்மேலன குருதிப்பொரு திரையாறுகள் பொங்கத்
திண்மேருவை நகுமார்பினை யுருவுந்தெரி சரமே. 3073

௯௩ பொலந்தாரின ரனலின்சிகை பொழிகண்ணின ரிமையோர்
வலந்தாங்கிய வடிவெம்படை விடுவார்சர மழையால்
உலந்தாருட லடலோதுறந் துலவாவுட னுற்றார்
அலந்தார்நிசி சரராமென விமையோரெடுத் தார்த்தார்.

௯௪ ஈரற்செறி கமலத்தன விரதத்துறை புளினம்
வீரக்கரி முதலைக்குல மிதக்கின்றன வுதிர்க்கும்
பாரக்குடர் மிடைபாசடை படர்கின்றன பலவான்
மூரித்திரை யுதிரக்குள முழுகிக்கழு தெழுமே. 3075

௯௫ அழைத்தார்சில ரார்த்தார்சில ரழிந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சில ருயிர்த்தார்சில ருருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தார்திரைக் குருதிக்கடற் குளித்தார்சிலர் குளியா
மழைத்தாரைகள்படப்பாரிடைமடிந்தார் [1] சிலருடைந்தார். 3076

௯௬ உடைந்தார்களை நகைசெய்தன ருருடேரின ருடனாய்
அடைந்தார்படைத் தலைவீரர்கள் பதினால்வரு மயில்வாள்
மிடைந்தார்நெடுங் கடற்றானையர் மிடல்வில்லினர் விரிநீர்
கடைந்தார்வெரு வுறமீதெழு கடுவாமெனக் கொடியார்.

௯௭ நாகத்தனி யொருவில்லியை நளிர்முப்புர முன்னாள்
மாகத்திடை வளையுற்றன வெனவள்ளலை மதியார்
ஆகத்தெழு கனல்கண்வழி புகவுற்றெதி ரழன்றார்
மேகத்தனி நெடுவில்லியை வளைத்தார்செரு விளைத்தார்.

(பிரதி) 1 சிலர் மருண்டார்

௯௮ எய்தார்பல ரெறிந்தார்பல ரெழுவோச்சினர் மழுவால்
பொய்தார்பலர் புடைத்தார்பலர் இடைத்தார்பலர் பொருப்பால்
பெய்தார்மழை பிதிர்த்தாரெறி பிறைவாளெயிற் றரக்கர்
வைதார்பலர் தெழித்தார்பலர் மலையாமென வளைத்தார்.

௯௯ தேர்பூண்டன விலங்கியாவையுஞ் சிலைபூண்டெழு கொலையாற்
பார்பூண்டன மதமால்கரி பலபூண்டன பரிமாத்
தார்பூண்டன வுடல்பூண்டில தலைவெங்கதிர் தழீஇவந்
தூர்பூண்டன பிரிந்தாலென விரிந்தாருயி ருலந்தார்.

௧௦௦ மால்பொத்திய மறவோருடன் மலையொத்துட னழிசெம்
பால்பொத்தின நதியிற்கிளர் படியொத்தது பணிவான்
மேல்பொத்திய குழுவிண்ணவர் விழிபொத்தினர் மிடல்வெங்
கால்பொத்தனர் நமன்தூதுவர் கடிதுற்றுயிர் கவர்வார்.

௧௦௧ பேயேறினர் செருவேட்டெழு பித்தேறினர் பிலவாய்த்
தீயேறிக லரியேறினர் முகிலேறினர் செருவால்
நாயேறின தலையேநெடு நரியேறின வெரிகால்
வாயேறிய வடிவாளியின் வானேறினர் வந்தார். 3082

௧௦௨ தலைசிந்தின விழிசிந்தின தழல்சிந்தின தரைமேன்
மலைசிந்தின படிசிந்தின வரிசிந்துர மழைபோற்
சிலைசிந்தின கணைசிந்தின திசைசிந்தின சிலையூ
டுலைசிந்தின பொறிசிந்தின வுயிர்சிந்தின வுடலம். 3083

௧௦௩ *படைத்தலை வருமவர் படைத்த தேர்களும்
உடைத்தடம் படைகளு மொழிய வுற்றெதிர்
விடைத்தடர்ந் தெழுந்தவர் வீரன் வாளியால
முடைத்தவெங் குருதியின் கடலின் மூழ்கினார். 3084

௧௦௪ சுற்றுற நோக்கினர் தொடர்ந்த சேனையின்
அற்றில தலையெனு மாக்கை கண்டிலர்
தெற்றின ரெயிறுக டிருக்கினார் சின
முற்றின ரிராமனை முழங்கு தேரினார். 3085

௧௦௫ ஏழிரு தேரும்வந் திமைப்பின் முன்பிடைச்
சூழ்வன கணைகளிற் றுணிய நூறினான்
ஆழியு மாணியு மாளு மற்றவை
ஊழிவெங் காலெறி யோங்க லொத்தவே. 3086

க0சு அழிந்தன தேரவ ரவனி நீண்டுக
இழிந்தனர் வரிசிலை யெடுத்த கையினர்
ஒழிந்திலர் சரங்களை யுருமி னேறெனப்
பொழிந்தனர் மிகுகனல் பொடிக்குங் கண்ணினார். 3087

க0எ நூறிய சரமெலா நுறுங்க வாளியால்
ஈறுசெய் தவர்சிலை யேழொ டேழையும்
ஆறினொ டாறுமோ ரிண்டு மம்பினாற்
கூறுசெய் தமர்த்தொழிற் கொதிப்பை நீக்கினான். 3088

க0அ வில்லிழந் தனைவரும் வெருளி மீக்கொளக்
கல்லுயர் நெடுவரை கடிதி னேந்தினார்
ஒல்லையி னுருத்தவர் விசும்பி னோங்கிநின்
றெல்லையில் பொறியுக வெறிதன் மேயினார். 3089

க0௯ கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்
இலைகொள்வெம் பகழியே யிரண்டு வாங்கினான்
கொலைகொள்வெஞ் சிலையொடு புருவங் கோட்டினான்
மலைகளுந் தலைகளு விழுந்த மண்ணின்மேல். 3090

கக0 படைத்தலை வீரர்கள் படலும் பல்படை
புடைத்தடர்த் தார்த்தெரி புகையுங் கண்ணினார்
கிடைத்தன ரரக்கர்கள் கீழுமேலு மொய்த்
தடைத்தனர் திசைகளை யமர ரஞ்சினார். 3091

ககக முழங்கின பெரும்பணை மூரி மால்கரி
முழங்கின வரிசிலை முடுகு நாணொலி
முழங்கின சங்கொலி புரவி மொய்த்துற
முழங்கின வரக்கர்தம் முகிலி னார்ப்பரோ. 3092

ககஉ * வெம்படை நிருதர் வீச விண்ணிடை மிடைந்த வீரன்
அம்பிடை யறுக்கச் சிந்தி யற்றன விழுமென் றஞ்சி
உம்பரு மிரியல் போனா ருலகெலா முலைந்து சாய்ந்த
கம்பமி றிசையி னின்ற களிறுங்கண் ணிமைத்த வன்றே.

ககந * அத்தலைத் தானையி னளவி லாற்றலன்
முத்தலைக் குரிசில்போர் முடிவில் முக்கணான்
கைத்தலைச் சூலமே யனைய காட்சியான்
வைத்தலைப் பகழியான் மழைசெய் வில்லினான். 3094

ககச அன்னவ னடுவுற வாழி யூழியி
தென்னவர் தெங்கணு மிரைத்த சேனையுந்
தன்னிகர் வீரனுந் தமியன் வில்லினன்
துன்னிரு ளிடையதோர் விளக்கிற் றோன்றினன். 3095

ககரு ஓங்கிய வாளின னுருமி னார்ப்பினன்
வீங்கிய கவசத்தன் வெய்ய கண்ணினன்
ஆங்கவ னணிக்கெதி ரணிக ளாகநேர்
தாங்கின னிராமனுஞ் சரத்தின் றானையால். 3096

ககசு தாளிடை யற்றன தலைக ளற்றன
வாளிடை யற்றன மழுவு மற்றன
தோளிடை யற்றன தொடைக ளற்றன
கோளிடை யற்றன குடைக ளற்றன. 3097

ககஎ கொடியொடு கொடுஞ்சறப் புரவிக் கூட்டறப்
படியொடு படிந்தன பருதித் தேர்ப்பணை
நெடியவன் கடகரி புரண்ட நெற்றிவீழ்
இடியொடு முறிந்துவீழ் சிகர மென்னவே. 3098

ககஅ அற்றன சிரமென வறித றேற்றலர்
கொற்றவெஞ் சிலைச்சரங் கொதித்து வாங்குவார்
இற்றன தாமென வெழுந்து விண்ணினைப்
பற்றினர் மழையெனப் படைவ ழங்குவார். 3099

ககசு கேடகத் தடக்கைய கிரியின் றோற்றத்த
ஆடகக் கவசத்த கவந்த மாடுவ
பாடகத் தரம்பையர் மருளப் பல்வித
நாடகத் தொழிலின நாந்த கத்தின. 3100

கஉ0 கவரிவெண் குடையெனு நுரைசெய் கைமலைச்
சுவரன கவந்தமாழ் [1] சுழிய தண்டுறைப்
பவரினப் படுமணி குவிக்கும் பண்ணைய
உவரியைப் புதுக்கின வுதிர வாறரோ. 3101

கஉக சண்டவெங் கடுங்கணை தடியத் தாஞ்சில
திண்டிறல் வளையெயிற் றரக்கர் தேவராய்
வண்டுழல் புரிகுழல் மடந்தை மாரொடுங்
கண்டனர் தம்முடற் கவந்த நாடகம். 3102

(பிரதி) 1 சுரிய.

கஉஉ ஆய்வளை மகளிரோ டமர ரீட்டத்தர்
தூயவெங் கடுங்கணை துணித்த தங்கடோள்
பேயொரு தலைகொளப் பிணங்கி வாய்விடா
நாயொரு தலைகொள நகையுற் றார்சிலர். 3103

கஉ௩ தெரிகணை மூழ்கலிற் றிறந்த மார்பினர்
இருவினை கடந்துபோ யும்ப ரெய்தினார்
நிருதர்தம் பெரும்படை நெடிது நின்றவன்
ஒருவனென் றுள்ளத்தி னுணர்வுற் றார்சிலர். 3104

கஉ௪ கைக்களி றனையவன் பகழி கண்டகர்
மெய்க்குலம் வேரொடுந் துடைத்து வீழ்த்தன
மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொற் போலவே. 3105

கஉ௫ அஞ்சுதற் கறுபகை யறுத்து நீதியர்
தஞ்செனத் தம்வய மாக்குந் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரை வளைந்து வள்ளறான்
செஞ்சரத் தூய்மையாற் றேவ ராக்கினான். 3106

கஉ௬ வலங்கொள்போர் மானிடன் வலிந்து கொன்றமை
அலங்கல்வே லிராவணற் கறிவிப் பாமெனச்
சலங்கொள்வே லரக்கர்த முருக்க டாங்கின
இலங்கையி னீர்த்ததக் குருதி யாறரோ. 3107

கஉ௭ சூழ்ந்தன நெடும்படை பகழி சுற்றுறப்
போழ்ந்துயிர் குடித்தலிற் புரளப் பொங்கினான்
தாழ்ந்திலன் முத்தலைத் தலைவன் றாணினைந்
தாழந்ததே ரம்பரத் தோட்டி யார்க்கின்றான். 3108

கஉ௮ ஊன்றிய தேரின னுருமின் வெங்கணை
வான்றொடர் மழையென வாய்மை யாவர்க்குஞ்
சான்றென நின்றவத் தரும மன்னவன்
தோன்றினன் றிருவுரு மறையத் தூவினான். 3109

கஉ௯ தூவிய சரமெலாந் துணிய வெங்கணை
ஏவின னிராமனு மேவி யேழிரு
பூமுக வாளியாற் பொலங்கொ டேரழித்
தாவிவெம் பாகனை யகற்றி மாற்றினான். 3110

கங௦ அன்றியு மக்கணத் தமர ரார்த்தெழப்
பொன்றெரி வடிம்புடைப் பொருவில் வாளியால்
வன்றொழி றீயவன் மகுட மாத்தலை
ஒன்றொழித் திரண்டையு முருட்டி னானரோ. 3111

கங௧ தேரழிந் தவ்வழித் திரிசிரா வெனும்
பேரழிந் தனனென்று மறம் பிழைக்கிலான்
வாரழிந் துமிழ்சிலை வனைய நாட்டுழிக்
காரழிந் தாலெனக் கணைவ ழங்கினான். 3112

கங௨ ஏற்றின நுதலின னிருண்ட கார்மழை
தோற்றிய வில்லொடுந் தொடர மீமிசைக்
காற்றிடை யழித்தெனக் கார்மு கத்தையும்
மாற்றரும் பகழியா லறுத்து மாற்றினான். 3113

கஙங *வில்லி ழந்தன னென்னினும் விடுத்தவாண் முகத்தின்
எல்லி ழந்தில னிழந்திலன் வெங்கத மிடிக்குஞ்
சொல்லி ழந்திலன் றோள்வலி யிழந்திலன் சொரியுங்
கல்லி ழந்தில னிழந்திலன் கறங்கெனத் திரிதல். 3114

கஙச ஆளி ரண்டுநூ றுளவென வந்தரத் தொருவன்
மூளி ரும்பெரு மாயையின் செருமுயல் வானைத்
தாளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றடிந்து
தோளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றுணித்தான்.

கஙரு அற்ற தாளொடு தோளின னயிலெயி றிலங்கப்
பொற்றை மாமுழைப் புலானுடை வாயினிற் புகுந்து
பற்ற வாதரிப் பான்றனை நோக்கினன் பரிவான்
கொற்ற வார்சரத் தொழிந்ததோர் சிரத்தையுங் குறைத்தான்.

கஙசு திரிசி ராவெனுஞ் சிகரமண் சேர்தலுஞ் சிதறி
நிருத ரோடினர் தூடணன் விலக்கவு நில்லார்
பரிதி வாளினர் கேடகத் தடக்கையர் பரந்த
குருதி நீரிடை வார்கழல் கொழுங்குடர் தொடக்க.

கஙஎ கணத்தின் மேனின்ற வானவர் கைபுடைத் தார்ப்பப்
பணத்தின் மேனிலங் குலைவுறக் கால்கொடு பறப்பார்
நிணத்தின் மேல்விழுந் தழுந்தினர் சிலர்சிலர் நிற்பப்
பிணத்தின் மேல்விழுந் தழுந்தின ருயிர்கொடு பிழைப்பார்.

௧௧௮ வெய்ந்த வாளொடு வேலிடை மிடைந்தன ரோட்டம்
ஒய்ந்து ளார்சில ருலைந்தன ருதிரநீ ராற்றிற்
பாய்ந்து கால்பறித் தொழுகினர் சிலர்சிலர் பயத்தால்
நீந்தினார் நெடுங் குருதியங் கடல்புக்கு நிலையார். 3119

௧௧௯ மண்டி யோடினர் சிலர்நெடுங் கடகரி வயிற்றுப்
புண்டி றந்தமா முழையிடை வாளொடும் புகுவார்
தொண்டை நீங்கிய கவந்தத்தை துணைவநீ யெம்மைக்
கண்டி லமெனக் கழறெனக் கைதலைக் கொண்டார்.

௧௨௦ கச்சும் வாளுந்தங் காறொடர்ந் தீர்ப்பன காணார்
அச்ச மென்பதொன் றுருவுகொண் [1] டாலென வழிவார்
உச்ச வீரன்கைச் சுடுசர நிருதர்நெஞ் சுருவித்
தச்சு நின்றன கண்டன ரவ்வழித் தவிர்ந்தார். 3121

திரிசிரா வதைப் படலம் முற்றும்

---

௯. தூடணன் வதைப் படலம்

க அனைய ராகிய வரக்கரை யாண்டொழிற் கமைந்த
வினைய நீங்கிய மனித்தரை வெருவன்மி னென்னா
நினையு யாரென்று நிரப்புவ துண்டென நின்றான்
றுணையும் வார்பரித் தேரினன் றூடணன் சொன்னான்.

உ வச்சை யாமெனப் பயமனத் துண்டென வாழுங்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிருங் கூசார்
நிச்சய மெனுங் கவசத்தா னிலைநிற்கு மன்றேல்
அச்ச மென்னுமீ தாருயிர்க் கருந்துணை யாமோ. 3123

௩ பூவ ராவுவேற் புரந்தரன் றன்னொடு பொன்றா
மூவ ரோடுதான் முன்னின்று முட்டிய முனையில்
ஏவ ரோடினா ரிராக்கதர் நமக்கிடைந் தோடுந்
தேவ ரோடுகற் றறிந்துளி ரோமனந் திகைத்தீர். 3124

ச இங்கொர் மானிடற் கித்தனை வீரர்க ளிடைந்தீர்
உங்கை வாளொடு புகழ்விழுந் தூர்புக விரைந்தீர்
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புறுங் கொழுங்கண்
நங்கை மார்களைப் புல்லுதி ரோநல நுகர்வீர். 3125

(பிரதி) 1 டாமென.

௫ செம்பு காட்டிய கண்ணிணை பாலெனத் தெளிந்தீர்
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க் கம்மா. 3126

௬ ஏக்க மிங்கிதன் மேலுமுண் டோவிகன் மனிதர்க்
காக்கும் வெஞ்சமத் தாண்மையவ் வமரர்க்கு மரிதால்
தாக்கரும் புயத் துங்குலத் தலைமகன் றங்கை
மூக்கொ டன்றிநும் முதலொடும் போம்படி முயன்றீர்.

௭ ஆர வாழ்க்கையின் வணிகரா யமைதிரோ வயில்வேல்
வீர வாட்கொழு வெனமடுத் துழுதிரோ வெறிப்போர்த்
தீர வாட்கையிற் றேவரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையீ ரெங்ஙனம் வாழ்திரோ விளம்பீர். 3128

௮ என்று தானுந்த னெறிகடற் சேனையு மிறைநீர்
நின்று காண்டிரென் னெடுஞ்செரு நிலையென நேராச்
சென்று தாக்கினன் றேவரு மருள்கொண்டு திகைத்தார்
நன்று காத்தியென் றிராமனு மெதிர்செல நடந்தான்.

௯ ஊட றுப்புண்ட மொய்படைக் கையொடு முயர்ந்த
கோட றுப்புண்ட குஞ்சரங் கொடிஞ்சொடு கொடியின்
காட றுப்புண்ட கால்வயத் தேர்கதிர்ச் சாலிச்
சூட றுப்புண்ட வெனக்கழுத் தறுப்புண்ட துரகம்.

௧௦ துருவி யோடின வுயிர்நிலை சுடுசரந் துரந்த
கருவி யோடுவன் கச்சையுங் கவசமுங் கழல
அருவி யோடின வெனவிழி குருதியா றலைப்ப
உருவி யோடின கேடகத் தட்டொடு முடலம். 3131

௧௧ ஆய்ந்த கங்கபத் திரங்கள்புக் கரக்கர்தம் மார்பில்
தோய்ந்து தோய்விலாப் பிறைமுகச் சரஞ்சிரந் துமித்த
காய்ந்த வெஞ்சர நிருதர்தங் கவசமார் புருவப்
பாய்ந்த வஞ்சக ரிதயங்கள் பிளந்தன பல்லம். 3132

௧௨ தூடணன் விடுசுடு சரமவை யாவையுந் துணியா
மாடு நின்றவர் வழங்கிய படைகளு மாற்றூ
ஆடல் கொண்டன வளப்பரும் பெருவலி யரக்கர்
கூடி நின்றவக் குரைகடல் வறள்படக் குறைத்தான்.

கங ஆர்த்தெ ழுந்தனர் வானவ ரருவரை மரத்தோ
டார்த்தெ ழுந்தன குருதியின் பெருநதி யிராமன்
தூர்த்தசெஞ்சரந்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்த
போர்த்த வெஞ்சினத் தரக்கரைப் புரட்டின புவியில்.

கச தோன்று மால்வரைத் தொகையெனத் தோன்றிய பிணச்சேற்
றூன்ற பாழ்வயிற் றலகையைப் புகல்வதெ னமர்வேட்
டூன்றினு ரெலா முலந்தன ரொல்லைவாய் மடிந்தார்
கான்ற வவ்வுயிர் காலனும் வலித்துமெய் கவன்றான்.

கரு களிறு தேர்பரி கடுத்தவர் முடித்தலை கவந்தம்
ஒளிறு பல்படைத் தங்குலத் தரக்கர்த முடலம்
வெளிறு சேர்பிணம் பிறங்கிய வடுக்கலின் மீதிற்
குளிறு தேர்கடி தோட்டினன் றூடணன் கொதித்தான். 3136

கசு அறங்கொள் ளாதன வரக்கர்க ளடுக்கிய வடுக்கல்
பிறங்க நீண்டன கணிப்பில பெருங்கடு விசையாற்
கறங்கு போன்றுள தாயினும் பிணப்பெருங் காட்டில்
இறங்கு மேறுமத் தேர்பட்ட தியாதென வுரைப்பாம்.

கஎ அரிதி னெய்தின னையைந்து கொய்யுளைப் பரியால்
உருளு மாழிய தொருதனித் தேரின [1] னுலகத்
[2] திருளை நீக்கிய விந்துவிற் பொலிகின்ற விராமன்
தெருளும் வார்கணைக் கூற்றெதி ராவிசென் றென்ன.

கஅ சென்ற தேரையுஞ் சிலையுடை மலையெனத் தேர்மேல்
நின்ற தூடணன் றன்னையு நெடியவ னோக்கி
நன்று நன்றுநின் னிலையென வருளிறை நயந்தான்
என்ற காலத்தவ் வெய்யவன் பகழிமூன் றெய்தான்.

கக தூர வட்டவெண் டிசைகளைத் தனித்தனி சுமக்கும்
பார வெட்டினோ டிரண்டினி லொன்றுபார் புரக்கப்
பேர விட்டவ னுதலணி யோடையிற் பிறங்கும்
வீர பட்டத்திற் பட்டன விண்ணவர் வெருவ. 3140

உ0 எய்த காலமும் வலியுநன் றெனநினைந் திராமன்
செய்த சேயொளி முறுவலன் கடுங்கணை தெரிந்தான்
நொய்தி னங்கவ னெறில்பரித் தேர்பட நூறிக்
கையில் வெஞ்சிலை யறுத்தொளிர் கவசமுங் கடிந்தான்.

(பிரதி) 1 மேகத்; 2 திருளை நீங்கிய.

உக தேவ ரார்த்தெழ முனிவர்க டிசைதொறுஞ் சிலம்பும்
ஓவில் வாழ்த்தொலி கார்க்கடன் முழக்கென வோங்கக்
காவடாவிது வல்லையே னீயெனக் கணையொன்
றேவினானவ னெயிறுடை நெடுந்தலை யிழந்தான். 3142

தூடணன் வதைப்படலம் முற்றும்.

கo. கரன் வதைப் படலம்

க தம்பிதலை யற்றபடி யுந்தய ரதன்சேய்
அம்புபடை யைத்துணி படுத்தது மறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய கொலைக்கரியொ டார்ப்ப. 3143

உ அந்தகனு முட்கிட வரக்கர்கட லோடுஞ்
சிந்துரம் வயக்கரிக டேர்மிசை பரப்ப
இந்துவை வளைக்குமெழி லிக்குல மெனத்தான்
வந்துவரி விற்கைமத யானையை வளைத்தான். 3144

ங அடங்கலில் கொடுந்தொழி லரக்கரவ் வனந்தன்
படங்கிழி வுறப்படி படப்பல விதப்போர்
கடங்கலுழ் கருங்களிறு தேர்பரி கடாவித்
தொடங்கினர் நெடுந்தகையும் வெங்கணை துரந்தான்.

ச துடித்தன கடக்கரி துடித்தன பரித்தேர்
துடித்தன முடித்தலை துடித்தன தொடித்தோள்
துடித்தன மணிக்குடர் துடித்தன தசைத்தோல்
துடித்தன கழற்றுணை துடித்தன விடத்தோள். 3146

ரு வாளின்வனம் வேலின்வனம் வண்சிலைவ னந்திண்
தோளின்வன மன்னவை துவன்றிநிரு தப்போர்
ஆளின்வன நின்றதனை யம்பின்வன மென்னுங்
கோளின்மழு வின்குழு விடைக்குறை படுத்தான். 3147

சா தானுருவு கொண்டதரு மன்றெரி சரந்தான்
மீனுருவு மேருவை விலங்குருவு மேலாம்
வானுருவு மண்ணுருவும் வாளுருவி வந்தார்
ஊனுருவு மென்னுமி துணர்த்தவு முரித்தோ. 3148

௭ அன்றிடை வளைந்தவர் குலங்களொ டடங்கச்
சென்றுலை வுறும்படி தெரிந்துகணை சிந்தா
மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளிற்கடிது கொன்றான். 3149

௮ கடுங்கர னெனப்பெயர் படைத்த கழல்வீரன்
அடங்கலு மரக்கரழி வுற்றிட வழன்றான்
ஒடுங்கலி னிணக்குருதி யோதமதி னுள்ளான்
நெடுங்கடலின் மந்தர மெனத்தமிய னின்றான். 3150

௯ செங்கணெரி சிந்தவரி விற்பகழி சிந்தப்
பொங்குகுரு திப்புணரி யுட்புகையு நெஞ்சன்
கங்கமொடு காகமிடை யக்கடலி னோடும்
வங்கமென லாயதொரு தேரின்மிசை வந்தான். 3151

௧௦ செறுத்திறுதி யிற்புவனி தீயவெழு தீயின்
மறத்தின்வயி ரத்தொருவன் வந்தணுகு முந்தைக்
கறுத்தமணி கண்டர்கட வுட்சிலை கரத்தால்
இறுத்தவனும் வெங்கணை தெரிந்தன னெதிர்ந்தான்.

௧௧ தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை யரக்கர்பதி யெய்தான்
தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை யிராமனு மறுத்தான். 3153

௧௨ ஊழியெரி யிற்கொடிய பாய்பகழி யொன்பான்
ஏழுலகி னுக்குமொரு நாயகனு மெய்தான்
சூழ்சுடர் வடிக்கணை யவற்றெதிர் தொடுத்தான்
ஆழிவரி விற்கரனு மன்னவை யறுத்தான். 3154

௧௩ கள்ளவினை மாயவமர் கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தான்
உள்ளமுலை வுற்றமர ரோடின ரொளித்தார்
வெள்ளெயி றிதழ்ப்பிறழ வீரனும் வெகுண்டான். 3155

௧௪ * முடிப்பெ னின்றொரு மொய்கணை யாலெனத்
தொடுத்து நின்றுயர் தோளுற வாங்கினான்
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
இடிப்பி னோசை படக்கடி திற்றதே. 3156

கரு வெற்றி கூறிய வானவர் வீரன்வில்
இற்ற போது துணுக்கமுற் றேங்கினர்
மற்று வெஞ்சிலை யின்மை மனக்கொளா
அற்ற தாலெம் வலியென வஞ்சினர். 3157

கசு என்னு மாத்திரத் தேந்திய கார்முகஞ்
சின்ன மென்றுந் தனிமையுஞ் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மன் மரபினுற்
பின்னு றத்தன் பெருங்கர நீட்டினன். 3158

கஎ கண்டு நின்று கருத்துணர்ந் தானென
அண்டர் நாதன் றடக்கையி னத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுற்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன். 3159

கஅ கொடுத்த வில்லையக் கொண்ட னிறத்தினன்
எடுத்து வாங்கி வலங்கொண் டிடக்கையிற்
பிடித்த போது நெறிபிழைத் தார்க்கெலாந்
துடித்த தாமிடக் கண்ணெடுந் தோள்களே. 3160

கக ஏற்றி நாணிமை யாமுன் னெடுத்தது
கூற்றி னுருங் குனிக்கக் குனித்தெதிர்
ஆற்றி னைவ னுழியந் தேர்சரம்
நூற்றி னுனுண் பொடிபட நூறினன். 3161

உ0 எந்தி ரத்தடந் தேரிழுந் தானிழுந்
தந்த ரத்திடை [1] யார்த்தெழுந் தம்பெலாஞ்
சுந்தரத் தனி வில்லிதன் றூளெனும்
மந்த ரத்தின் மழையின் வழங்கினன். 3162

உக தாங்கி நின்ற தசரத ராமனுந்
தூங்கு தூணி யிடைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்ற வலக்கையை வாளியால்
வீங்கு தோளொடும் பாரிடை வீழ்த்தினன். 3163

உஉ வலக்கை வீழ்தலு மற்றைக்கை யால்வெற்றி
உலக்கை வானத் துருமென வீசினன்
இலக்கு வற்குமுன் வந்த விராமனும்
விலக்கி னுெருரு வெங்கதிர் வாளியால். 3164

(பிரதி) 1 யார்த்தெழு மம்பெலாஞ்.

உ௩ விரா வருங்கடு வெள்ளெயி றிற்றபின்
அரா வழன்ற தனையதோ ராற்றலான்
மரா மரங்கையின் வாங்கிவந் தெய்தினான்
இராம னங்கொர் தனிக்கணை யேவினான். 3165

உ௪ வரம ரக்கர் படைத்தலின் வாய்மையின்
உரமு டைத்தன்மை யாலுல கேழையும்
பரமு றாத்திய பாவத்தி னால்வலக்
கரமெ னக்கரன் கண்டமுற் றனரோ. 3166

உ௫ ஆர்த்தெ ழுந்தன ராடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதி ரோன்றிசை
போர்த்த மென்பனி போக்கிய போலவே. 3167

உ௬ முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
இனிய சிந்தை யிராமனு மேகினான்
அனிக வெஞ்சமத் தாருயிர் போகத்தான்
தனியி ருந்த வுடலன்ன தையல்பால். 3168

உ௭ விண்ணி னீங்கிய வெய்யவன மேனியிற்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனைத் தம்பியு மன்னமுங்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினார். 3169

உ௮ மூத்த மொன்றின் முடிந்தவர் மொய்ம்புணீர்
நீத்த மோடி நெடுந்திசை நேருறக்
கோத்த வேலைக் குரலென வானவர்
ஏத்த வீர னினிதிருந் தானரோ 3170

உ௯ இங்கு நின்ற துரைத்து மிராவணன்
தங்கை தன்கை வயிறு தகர்த்தனள்
கங்குலன்ன கரனைத் தழீஇநெடும்
பொங்கு வெங்குரு திப்புரண் டாளரோ. 3171

௩௦ ஆக்கி னேன்மனத் தாசையிவ் வாசையென்
மூக்கி னோடு முடிய முடிந்திலேன்
வாக்கி னாலுங்கள் வாழ்வையு நாளையும்
போக்கி னேன்கொடி யேனென்று போயினாள். 3172

௩௧ அலங்கல் வேற்கை யரக்கரை யாசறக்
குலங்கள் வேரறப் பான்குறித் தாழ்கடற்
கலங்கு றைத்தன போனெடுங் காலென
இலங்கை மாநகர் நொய்திற்சென் றெய்தினாள். 3173

கரன் வதைப் படலம் முற்றும்

---

௧௧. சூற்பநகி சூட்சிப் படலம்

௧ இறைத்தநெடுங் கடலரக்க ரிறந்ததனை மறந்தனள்போ லிராமன் றுங்க
வரைப்புயத்தி னிடைக்கிடந்த பேராசை மனங்கவற்ற வாற்றா ளாகித்
திரைப்பரவைப் பேரகழித் திண்ணகரிற் கடிதோடிச் சீதை தன்மை
உரைப்பனெனச் சூர்ப்பணகை வரவிருந்தா னிருந்தபரி சுரைத்து மன்னோ.

௨ நிலையிலா வுலகினிடை நின்றனவுந் திரிந்தனவு நெறியி னீந்த
மலரின்மே னான்முகற்கும் வகுப்பரிய நுனிப்ப தொரு வரம்பிலாத
உலைவிலா வகையிழைத்த தருமமென நினைந்ததெல்லா முதவுந் தச்சன்
புலனெலாந் தெரிந்ததொரு புனைமணிமண் டபத்தினிழற் பொலியமன்னோ.

௩ புலியினத ளுடையானும் பொன்னாடை புனைந்தானும் பூவினானும்
நலியும்வலத் தாரல்லர் தேவரிலிங் கியாவரினி நாட்ட லாவார்
மெலியுமிடை தடிசகுழலை வேயிளந்தோட் சேயரிக்கண் வென்றி மாதர்
வலியநெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை வயங்க மன்னோ.

௪ வாளுலா முழுமதியின் வயங்கொளியின் றொகைவழங்க வயிரக் குன்றத்
தோளெலாம் படிசுமந்த விடவரவின் படநிரையிற் றோன்ற வான்ற
நாளெலாம் புடைதயங்க நாமநீ ரிலங்கையின்கண் வாரி யிட்ட
கோளெலாங் கிடந்தநெடுஞ் சிறையனைய நிறையாரங் குலவ மன்னோ.

வண்டலங்கு நுதற்றிசைய வயக்களிற்றின் மருப்பொடிய வடர்த்த பொற்
விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய மால்வரையின் விளங்க மீதிற் [றோள்
குண்டலங்கள் குலவரையை வலம்வருவா னிரவிகொழுங் கதிர்சூழ் கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்ப் பொலிந்ததென வயங்க மன்னோ.

௬ *ஆய்வரும் பெருவலி யரக்க ராதியோர்
நாயகர் நளிர்மணி மகுட நண்ணலால்
தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து செஞ்சுடர்
ஆய்மணிப் பொலன்கழ லடிநின் றார்ப்பவே. 3179

௭ மூவகை யுலகினு முதல்வர் முந்தையோர்
ஓவல ருதவிய பரிசி னோங்கல்போல்
தேவரு மவுணரு முதலி னோர்திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே. 3180

௮ இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
உன்னலர் கரதலஞ் சுமந்த வுச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே. 3181

௯ மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினுந்
தங்களை யாமெனத் தாழுஞ் சென்னியர்
அங்கையு முள்ளமுங் குவிந்த வாக்கையர்
சிங்கவே றெனத்திறற் சித்தர் சேரவே. 3182

௧௦ அன்னவ னமைச்சரை நோக்கி யாண்டொரு
நன்மொழி பகரினு நடுங்குஞ் சிந்தையர்
என்னைகொல் பணியென விறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயங் கிடந்த நெஞ்சினார். 3183

௧௧ பிரகர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத் தண்ணலைக் கண்ணி னோக்கிய
நரகின ராமென நடுங்குஞ் சிந்தையார்
உரகருந் தம்மன முலைந்து சூழவே. 3184

௧௨ திசையுறு கரிகளைச் செயித்துத் தேவரும்
வசையுறக் கயிலையை மறித்து வாழ்வெலாம்
நசையுறப் புரந்தன நடந்த தோள்களின்
இசையினைத் தும்புரு விசையி னேத்தவே. 3185

௧௩ சேணுயர் நெறிமுறை திறம்ப லன்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணடை
வீணையி னரம்பிடை விளைந்த தேமறை
வாணியி னாரதன் செவியின் வார்க்கவே. 3186

௧௪ * மேகமென் றுருத்தி வீக்கி விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமுஞ் சுரந்த தீந்தே னறுபுன லோட லாவித்
தோகையர் துகிலிற் றோய்க்கு மென்பதோர் துணுக்கந் தோடுஞ்
சீகர மகர வேலை காவலன் சிந்த மன்னோ. 3187

கரு நறைமலர்த் தாதுந் தேனு நளிர்நெடு மருட கோடி
முறைமுறை யறையச் சிந்தி முரிந்துகு மணியு முத்துந்
தறையிடை யுகாத முன்னந் தாங்கினன் றழுவி வாங்கித்
துறைதொறுந் தொடர்ந்து நின்று சமீரணன் றுடைப்ப மன்னோ.

கசு *மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
துன்னிடு கஞ்சுகத் துகிலர் சோர்விலாப்
பொன்னொடு வெள்ளியிற் புரந்த ராதியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே. 3189

கஎ சூலமே முதலிய துறந்து சுற்றிய
சேலையாற் செய்யவாய் புதைத்த செங்கையன்
தோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாங்
காலன்வந் திசைக்குநாட் கடிகை கூறவே. 3190

கஅ நயங்கிளர் நானநெய் யளாவி நந்தலில்
வியங்கருப் பூரமென் பஞ்சின் மீக்கொளீஇக்
கயங்களின் மரைமலர்க் காடு பூத்தென
வயங்கெரிக் கடவுடீ விளக்க மாட்டவே. 3191

ககூ அதிசய மளிப்பதற் கருளிற் றந்ததால்
புதிதலர் கற்பகத் தருவும் பொய்யிலாக்
கதிர்நெடு மணிகளுங் கறவை யான்களும்
நிதிகளு முறைமுறை நின்று நீட்டவே. 3192

உ0 குண்டல முதலிய குலங்கொள் பேரணி
மண்டிய பேரொளி வயங்கி வீசலால்
உண்டுகொ லிரவினி யுலக மேழினும்
எண்டிசை மருங்கினு மிருளின் றென்னவே. 3193

உக கங்கையே முதலிய கடவுட் கன்னியர்
கொங்கைகள் சுமந்திடை கொடியி னொல்கிடச்
செங்கையி னரிசியும் மலருஞ் சிந்தினர்
மங்கல முறைமொழி கூறி வாழ்த்தவே. 3194

உஉ ஊருவிற் றோன்றிய வுருப்பசிப் பெயர்க்
காரிகை யார்முதற் கலாப மஞ்ஞைபோல்
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியின்
ஆரிய ரருநட நடிப்ப நோக்கியே. 3195

உ௩ இருந்தன னுலகமீ ரேழு மெய்திய
அருந்தவ முடைமையி னளவி லாற்றலிற்
பொருந்திய விராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே. 3196

உ௪ தங்கையு மவ்வழி தலையிற் றாங்கிய
செங்கையள் சோரியின் றாரை சேர்ந்திழி
கொங்கையள் மூக்கிலள் குழையில் காதிலள்
மங்குலி னொலிபடத் திறந்த வாயினாள். 3197

உ௫ முடையுடை வாயினள் முறையிட் டார்த்தெழு
கடையுகக் கடலொலி காட்டிக் காந்துவாள்
குடதிசைச் செக்கரிற் சேந்த கூந்தலாள்
வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள். 3198

உ௬ தோன்றலுந் தொன்னக ரரக்கர் தோகையர்
என்றெதிர் வயிறலைத் திரங்கித் தாங்கினர்
மூன்றுல குடையவன் றங்கை மூக்கிலள்
தான்றனி யிவள்வரத் தரிக்க வல்லரோ. 3199

உ௭ பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கிலர்
அரக்கரு மிரைத்தன ரசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களை
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றார். 3200

உ௮ இந்திரன் பாலதோ வுலக மீன்றபேர்
அந்தணன் பாலதோ வாழி யானதோ
சந்திர மவுலிபாற் றங்கு மோகொலிவ்
வந்தர மிதுவென வழல்கின் றார்சிலர். 3201

உ௯ போரிலான் புரந்தர னேவல் பூண்டவன்
ஆருலா நேமியா னாற்ற றேற்றுப்போய்
நீரினு னெருப்பனுன் பொருப்பி னுனினி
யார்கொலா மீதென வறைகின் றார்சிலர். 3202

௩0 செப்புதற் குரியன தெவ்வ ராருளர்
முப்புறத் துலகமு மடங்க மூடிய
இப்புறத் தண்டத்தோர்க் கிசைவ தன்றிது
அப்புறத் தண்டத்தா ராரென் றார்சிலர். 3203

௩௧ என்னையே யிராவணன் றங்கை யென்றபின்
அன்னையே யென்றடி வணங்க லன்றியே
உன்னவே யொண்ணுமோ வொருவ ராலிவள்
தன்னையே யரிந்தன டானென் ஞர்சிலர். 3204

௩௨ சொற்பிறந் தார்க்கிது துணிய வொண்ணுமோ
இற்பிறந் தார்தமக் கிசைவ செய்திலள்
கற்பிறந் தாளெனக் கரன்கொலா மிவள்
பொற்பிறந் தானெனப் புகல்கின் ஞர்சிலர். 3205

௩௩ தத்துறு சிந்தையாய்த் தளருந் தேவரிற்
பித்துற வல்லரேற் பிழைப்பில் சூட்சியார்
முத்திறத் துலகையு முடிக்க வெண்ணுவார்
இத்திறம் புணர்த்தவ ரென்கின் ஞர்சிலர். 3206

௩௪ இனியொரு கற்பமுண் டென்னி லன்றியே
வனைகழல் வயங்குவாள் வீரர் வல்லரோ
பனிவரு கானிடைப் பழிப்பி னேன்புடை
முனிவர்தம் வெகுளியின் முடிவென் ஞர்சிலர். 3207

௩௫ கரையறு திருநகர்க் கருங்க ணங்கைமார்
நிரைவளைத் தளிர்க்கர நெரித்து நோக்கினர்
பிரையுறு பாலென நிலையிற் பின்றிய
உரையினு ரொருவர்மு னொருவர் முந்தினார். 3208

௩௬ முழவினில் வீணையின் முரனல் யாழினிற்
றழுவிய குழலினிற் சங்கிற் றுரையில்
எழுகுர லின்றியே யென்று மில்லதோர்
அழுகுரல் பிறந்ததவ் விலங்கைக் கன்றரோ. 3209

௩௭ கள்ளுடை வள்ளமுங் களித்த தும்பியும்
உள்ளமு மொருவழி கிடக்க வோடினார்
வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினார்
தள்ளுறு மருங்கினர் தழீஇக்கொண் டேகினார். 3210

௩௮ நாந்தக வுழுவன்மே னுடுந் தண்டத்தார்
காந்தின மனத்தினர் புலவி கைமிகச்
சேந்தகண் மதிமுகஞ் சிவந்து நீருக
வேந்தனுக் கிளையவ டாளின் வீழ்ந்தனர். 3211

௩௯ பொற்றலை மரகதப் பூக [1]நோவுறச்
சுற்றிய மணிவடத் தூங்கு மூசலின்
முற்றிய வாடலை முனிவுற் றேகினார்
சிற்றிடை யலமரத் தெருவு சேர்கின்றார். 3212

௪0 எழுவென மலையென வேந்து தோள்களைத்
தழுவிய வளைத்தளிர் நெகிழ்ந்த தாமரை
முழுமுகத் திருநயன் முத்தி னாலிகள்
பொழிதரச் சிலருளம் பொருமி விம்முவார். 3213

௪௧ *நெய்ந்நிலைய வேலரச னேருநரை யில்லான்
இந்நிலையு ணார்ந்தபொழு தெந்நிலைய னென்று
மைந்நிலைநெ டுங்கண்மழை வானிலைய மாகப்
பொய்ந்நிலைம ருங்கினர் புலம்பினர் புரண்டார். 3214

௪௨ மனந்தலை வருங்கனவி னின்சுவை மறந்தார்
கனந்தலை வருங்குழல் சரிந்துகலை சோர
நனந்தலைய கொங்கைக டதும்பிட நடந்தார்
அனந்தலின மங்கைய ரழுங்கியயர் கின்றார். 3215

௪௩ அங்கையி லரன்கயிலை கொண்டதிற லையன்
தங்கைநிலை யிங்கிதுகொ லென்றுதளர் கின்றார்
கொங்கையிணை செங்கையின் மலைந்துகுலை கோதை
மங்கையர்க ணங்கையடி வந்துவிழு கின்றார். 3216

௪௪ இலங்கையில் விலங்குமிவை யெய்தலில வென்றும்
வலங்கையி லிலங்குமயின் மன்னனுள னென்று
நலங்கையி லகன்றதுகொ னம்பியென நைந்தார்
கலங்கலி னலங்கணிணை வாரிகலுழ் கின்றார். 3217

௪௫ என்றினைய வன்றுய ரிலங்கைநக ரெய்த
நின்றவ ரிருந்தவரொ டோடுநெறி தேடக்
குன்றினிடை வந்துபடி கொண்டலென மன்னன்
பொன்றிணி பொலன்கழல் விழுந்தனள் புரண்டாள்.

௪௬ மூடிய திருட்படல மூவுலகு முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்
ஆடிய குலக்கிரி யருக்கனு மயிர்த்தான்
ஓடின திசைக்கரிக ளும்பரு மொளித்தார். 3219

(பிரதி) 1 நேர்வுறச்.

சஎ விரிந்தவல யங்கண்மிகு தோள்படர மீதிட்
டெரிந்தநய னங்களெயி றின்புற மெரிப்ப
நெரிந்தபுரு வங்களிடை நெற்றியினை முற்றத்
திரிந்தபுவ னங்கள்வினை தேவரு மயர்த்தார். 3220

சஅ தென்றிசை நமன்றனொடு தேவர்குல மெல்லாம்
இன்றிறுதி வந்தது நமக்கென விருந்தார்
நின்றுட னடுங்கவுயிர் விம்மிநிலை யில்லா
தொன்றுமுரை யாடலில ரும்பரினொ டிம்பர். 3221

சகூ மடித்தபில வாய்கடொறும் வந்துபுகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுருக்கொள வுயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்கனல மேகத்
திடித்தவுரு மொத்துரறி யாவர்செய லென்றான். 3222

ருo கானிடை யடைந்துபுவி காவல்புரி கின்றார்
மீனுடை நெடுங்கொடியி னோன்முதல கீழ்மேல்
ஊனுடை யுடம்புடைமை யோருவமை யில்லா
மானிடர் தடிந்தனர்கள் வாளுருவி யென்றாள். 3223

ருக செய்தனர்கண் மானிடர்க ளெனத்திசை யனைத்தும்
எய்தநகை வந்ததெரி சிந்தினக னெல்லாம்
நொய்தவர் வலித்தொழி லுவன்றபொரு ளொன்றோ
பொய்தவிர் பயத்தையொழி யுற்றபுக லென்றான். 3224

ருஉ மன்மதனை யொப்பர்மணி மேனிவட மேருத்
தன்மதன ழிப்பர்திர டோளின்வலி தன்னால்
என்னதனை யிப்பொழு துரைப்பதுல கேழின்
நன்மதம ழிப்பரொ ரிமைப்பினனி வில்லால். 3225

ருங வந்தனைமு னித்தலைவர் பாலுடையர் வானத்
திந்துவின்மு கத்தரெறி நீரிலெழு நாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர்கழல் கையர்
அந்தமிற வத்தொழில ராரவரை யொப்பார். 3226

ருச வற்கலையர் வார்கழலர் மார்பிலணி நூலர்
விற்கலையர் வேதமுறை நாவர்தளிர் மெய்யர்
உற்கலைய ருன்னையொர்து கட்டுணையு முன்னோர்
சொற்கலையெ னத்தொலைவி றாணிகள் சுமந்தார். 3227

௫௫ மாரருள ரேயிருவ ரோருயிரின் வாழ்வார்
வீரருள ரோவவரின் வில்லின்வலி வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர்க ளையா
ஓரொருவ ரேமுதல்வர் மூவரையு மொப்பார். 3228

௫௬ ஆறுமன மஞ்சின மரக்கரை யெனச்சென்
றேறுநெறி யந்தண ரியம்பவுல கெல்லாம்
வேறுமெனி னுங்கள்குலம் வேரொடு மடங்கக்
கோறுமென முந்தையொரு சூளுறவு கொண்டார். 3229

௫௭ தராவலைய நேமியுழ வன்றயர தப்பேர்ப்
பராவருந லத்தொருவன் மைந்தர்பழி யில்லார்
விராவரும் வனத்தவன் விளம்பவுறை கின்றார்
இராமனு மிலக்குவனு மென்பர்பெய ரென்றாள். 3230

௫௮ மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரு மானிட ரறிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் வெள்கா
திருந்தன னிராவண னு மின்னுயிர்கொ டின்னும். 3231

௫௯ கொற்றமது முற்றிவலி யாலரசு கொண்டேன்
உற்றபயன் மற்றிதுகொ லாமுறை யிறந்தேன்
முற்றவுல கத்துமுதல் வீரர்முடி யெல்லாம்
அற்றபொழு திற்றிதுபொ ருந்துமென லாமோ. 3232

௬0 மூளுமுள தாயபழி யென்வயின் முடித்தோர்
ஆளுமுள தாமவர்த மாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கு
நாளுமுள தோளுமுள நானுமுள னன்றே. 3233

௬௧ பொத்துற வுடற்பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ தென்னைமன னேதளர லம்மா
எத்துய ருனக்குள தினிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல வன்றே. 3234

௬௨ என்றுரை செயாநகை செயாவெரி விழிப்பான்
வன்றுணையி லாவிருவர் மானிடரை வாளாற்
கொன்றிலர்க ளானெடிய குன்றுடைய கானில்
நின்றகர னேமுதலி னோர்நிருத ரென்றான். 3235

௬௩ *அற்றவ னுரைத்த லோடு மழுதழு தருவிக் கண்ணள்
எற்றிய வயிற்றள் பாரி னிடைவிழுந் தேங்கு கின்றாள்
சுற்றமுந் தொலைந்த தையா வென்றனள் சுமந்த கையள்
உற்றது தெரியும் வண்ண மொருவகை யுரைக்க லுற்றாள். 3236

௬௪ சொல்லென்றென் வாயிற் கேட்டார் தொடர்ந்தெழு சேனையோ
கல்லென்ற வொலியிற் [1] சென்றார் கரன்முதற் காளை வீரர் [டுங்
எல்லொன்று கமலச் செங்க ணிராமனென் றியைந்த வேந்தல்
வில்லொன்றிற் கடிகை யொன்றி [2] லேறினர் விண்ணிலென்றாள்.

௬௫ தாருடைத் தானை யோடுந் தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தா ரென்ற வுரைசெவி புகாத முன்னங்
காரிடை யுருமின் மாரி கனலொடு பிறக்கு மாபோல்
நீரொடு நெருப்புக் கான்ற நிறைநெடுங் கண்க ளெல்லாம்.

௬௬ ஆயிடை யெழுந்த சீற்றத் தழுந்திய துன்ப [3] மாறித்
தீயிடை யுருத்த நெய்யிற் சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்ற மென்னவர் நின்னை யின்னே
வாயிடை யிதழு மூக்கும் வலிந்தனர் கொய்ய வென்றான்.

௬௭ என்வயி னுற்ற குற்றம் யாவர்க்கு மெழுத வொண்ணாத்
தன்மைய னிராம னோடுந் தாமரை தவிரப் போந்தாள் [ள்
மின்வயின் மருங்குகொண்டாள் வேயினின் மென்றோள்கொண்டா
பொன்வயின் மேனிகொண்டாள் பொருட்டினாற் புகுந்ததென்றாள்.

௬௮ ஆரவ ளென்ற லோடு மரக்கியு மைய வாழித்
தேரவளல்குல்கொங்கைசெம்பொன்செய்குலிகச்செப்புப்
பாரவள் பாதந் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேரவள் சீதை யென்று வடிவெலாம் பேச லுற்றாள்.

௬௯ காமரம் பழுத்த பாடற் கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் செறிந்த கூந்தற் றேவர்த மணங்கா மென்னத்
தாமரை யிருந்த நங்கை [4] சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்க லென்ப தேழைமைப் பாலதன்றே. 3242

௭௰ மஞ்சொக்கு மளக வோதி மழையொக்கும் வடிந்த கூந்தல்
பஞ்சொக்கு மடிகள் செய்ய பவளத்தின் விரல்க ளான
அஞ்சொற்க ளமுதி னள்ளிக் கொண்டவள் வதன மைதீர்
கஞ்சத்தி னளவிற் றேனுங் கடலினும் பெரிய கண்கள்.

(பிரதி) 1 சென்ற; 2 லேற்றினன்; 3 மாறித்; 4 சேடியர்.

௭௧ ஈசனார்கண்ணின்வெந்தானென்னுமிதிழுதைச் சொல்லால்
வாசநா றோதி யாளைக் கண்டனன் வவ்வ லாற்றான்
பேசலாந் தகைமைத் [1] தல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையா லழிந்து வெந்தா னநங்கனவ் வுருவ மம்மா. 3244

௭௨ தெவ்வுல கத்துங் காண்டி சிரத்தினிற் பணத்தி னோர்கள்
அவ்வுல கத்துங் காண்டி யலைகட லுலகிற் காண்டி
வெவ்வுலை யுற்ற வேலை வாளினை வென்ற கண்ணாள்
[2] இவ்வுல கத்தா ளங்கம் யாவர்க்கு மெழுதொ ணாதாள்.

௭௩ தோளையே சொல்லு கேனோ சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ வல்குலை வழுத்து கேனோ
மீளவுந் திகைப்ப தல்லாற் றனித்தனி விளம்ப லாற்றேன்
நாளையே காண்டி யன்றே நானுனக் குரைப்ப தென்னோ. 3246

வில்லொக்கு நுதலென் றாலும் வேலொக்கும் விழியென் றாலும்
பல்லொக்கு முத்தென் றாலும் பவளத்தை யிதழென் றாலுஞ்
சொல்லொக்கும் பொருளொவ் வாதாற் சொல்லலா முவமை யுண்டோ
நெல்லொக்கும் புல்லென் றாலும் நேருரைத் தாக [3] வற்றே.

௭௫ இந்திரன் சசியைப் பெற்றா னிருமூன்று வதனத் தோன்றன்
தந்தையு முமையைப் பெற்றான் றாமரைச் செங்க ணானுஞ்
செந்திரு மகளைப் பெற்றான் சீதையை நீயும் பெற்றால்
[4] அந்தரம் பார்க்கி னன்மை யவர்க்கில்லை யுனக்கே யையா.

பாகத்தி லொருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தி லொருவன் வைத்தா னந்தண னாவின் வைத்தான்
மேகத்திற் பிறந்த மின்னை வென்றநுண் ணிடையி னாளை
மாகத்தோள் வீர பெற்றா லெங்ஙனம் வைத்து வாழ்தி.

௭௭ பிள்ளைபோற் பேசு வாளைப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வ மவளுக்கே கொடுத்தி யையா
வள்ளலே யுனக்கு நல்லேன் மற்றுநின் மனையின் வாழுங்
கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங் கேடுசூழ் கின்றே னன்றே.

௭௮ தேர்ந்தந்த வல்குற் சீதை தேவர்த முலகி லிம்பர்
வார்தந்த முலையி னார்தம் வயிறுதந் தாளு மல்லள்
தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
நீர்தந்த வவளை வெல்வா ணிலந்தந்து நிரம்பிற் றன்றே.

(பிரதி) 1 தல்லாற்; 2 எவ்வுல; 3 வற்றோ; 4 அந்தர மவர்க்கே நன்மை.

௭௯ மீன்கொண்ட கொடியி னார்க்கு விழாப்பரிந் துலகமேத்தத்
தேன்கொண்ட நறுமென் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னும்
மான் கொண்டுண் டாட நீநின் வாள்வலி யுலகங் காண
யான் கொண்டுண் டாடும் வண்ண மிராமனைத் தருதி யென்பால்.

௮0 தருவது விதியே யென்றாற் றவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூட வற்றோ
ஒருபது முகமுங் கண்ணு முருவமு மார்புந் தோள்கள்
இருபதும் படைத்த செல்வ மெய்துவ தினிநீ யெந்தாய்.

௮௧ அன்னவ டன்னை யுன்பா லுய்ப்பதென் றனுக லுற்ற
என்னையவ் விராமன் றம்பி யிடைபுகுந் திலங்கு வாளான்
முன்னைமூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வு முன்னிற்
சொன்னபி னுயிரை நீப்பான் றுணிந்தன னென்னச் சொன்னாள்.

௮௨ கோபமு மறனு மானக் கொதிப்புமென் றினைய வெல்லாம்
பாவநின் றிடத்தி னில்லாப் பெற்றிபோற் பற்று விட்ட
தீபமொன் றொன்றை யுற்றா லென்னலாஞ் செயலிற் புக்க
காமமு நோயு மொன்றா யுயிரொடுங் கலந்த தன்றே. 3255

௮௩ கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து நின்றார்
உரனையு மறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காம னம்பினான் முன்பு பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்.

௮௪ சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றா லொன்றொழித் தொன்றை யுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றறி ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ.

௮௫ மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்ன நீண்ட
எயிலுடை யிலங்கை வேந்த னிதயமாஞ் சிறையில் வைத்தான்
அயிலுடை யரக்க னுள்ள மவ்வழி மெள்ள மெள்ள
வெயிலுடை நாளி லுற்ற வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே.

௮௬ விதியது வலியி னாலு மேலுள்ள வினையி னாலும்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னாலும்
கதியது பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

அஎ பொன்மய மான நங்கை மனம்புக மடமை பூண்ட
தன்மையோவரக்கன்றன்னை யயர்த்ததோர்தகைமையாலோ
மன்மதன் வாளி தூவி நலிவதோர் வலத்த னானான்
வன்மையை மாற்று மாற்றல் காமத்தே வகுத்த தன்றே.

அஅ எழுந்தன னிருக்கை நின்றாண் டேழுல கத்து ளோரும்
மொழிந்தன ராசி யோதை முழங்கின சங்க மெங்கும்
பொழிந்தன பூவின் மாரி போயினர் புகுந்தோ ரெல்லாம்
அழிந்தழி சிந்தை யோடு மாடகக் கோயில் புக்கான். 3261

அகூ பூவினால் வேய்ந்து செய்த பொங்குபே ரமளி கொங்கைத்
தேவிமார் வெள்ள நீங்கிச் சேர்ந்தனன் சேர்த லோடும்
நாவினா ளோதி நவ்வி நயனமு மனமும் புக்குப்
பாவியாள் கொடுத்த வெம்மை பயப்பயப் பயந்த தன்றே.

கூ0 * தூக்க லாக லாத காத னூறு நூறு கோடியாய்ப்
பூக்கள் வாச வாடை வீசு சீதநீர் பொதிந்த மென்
சேக்கை வீக ரிந்து திக்க யங்க ளெட்டும் வென்றதோள்
ஆக்கை தேய வுள்ள னைய வாவி வேவ தாயினான். 3263

கூக தாது கொண்ட சீத மேவு சந்து சந்த மென்றளிர்ப்
போது கொண்ட டுத்த போது பொங்கு தீம ருந்தினால்
வேது கொண்ட தென்ன மேனி வெந்து லைந்து விம்முதீ
ஊது வன்று ருத்தி போலு யிர்த்து யிர்த்து யங்கினான்.

கூஉ தாவி யாது தீதெ னாது தைய லாளை மெய்யுறப்
பாவி யாத போதி லாத பாவி மாழை பானல்வேல்
காவி யான கண்ணி மேனி காண மூளு மாசையால்
ஆவி சால நொந்து நொந்த ழுங்கு வானு மாயினான்.

கூங பரங்கி டந்த மாதி ரஞ்சு மந்த பாழி யானையின்
கரங்கி டந்த கொம்பொ டிந்த டங்க வென்ற காவலான்
மரங்கு டைந்த தும்பி போல நங்க பாணம் வந்துவந்
துரங்குடைந்துருங்கநொந்துளைந்துளைந்தொதுங்கினான்.

கூச கொன்றைதுன்றுகோதையோடொர்கொம்புவந்தெனெஞ்சிடை
நின்ற தூடு கண்ட தென்ற ழிந்த ழுங்கு நீர்மையான்
மன்ற றங்க லங்கன் மாரன் வாளி போல மல்லிகைத்
தென்றல் வந்தெ திர்ந்த போது சீறு வானு மாயினான்.

௯௫ அன்ன காலை யங்கு நின்றெ ழுந்த ழுங்கு சிந்தையான்
இன்னவாறுசெய்வெனென்றுரெண்ணிலாதிரங்குவான்
பன்னு கோடி தீப மாலை பாலையாழ் பழித்த சொற்
பொன்ன னாரெ டுக்க வங்கொர் சோலை யூடு போயினான்.

௯௬ * மாணிக்கம் பனசம் வாழை மரகதம் வயிரந் தேமா
ஆணிப்பொன் வேங்கை கோங்க மரவிந்த ராகம் பூகஞ்
சேணுற்ற நீலஞ் சாலங் குருவிந்தந் தெங்கு வெள்ளி
பாணித்தண் பளிங்கு நாகம் பாடலம் பவள மன்னோ.

௯௭ வானுற நிவந்த செங்கேழ் மணிமரந் துவன்றி வான
மீனொடு மலர்க டம்மில் வேற்றுமை தெரித றேற்றாத்
தேனுகு சோலை நாப்பண் செம்பொன்மண் டபத்து ளாண்டோர்
பானிற வமளி சேர்ந்தான் பையுளுற் றயங்கி நைவான். 3270

௯௮ கனிகளின் மலரின் வந்த கள்ளுண்டு களிகொ ளன்னம்
வனிதையர் மழலை யின்சொற் கிள்ளையுங் குயிலும் வண்டும்
இனியன மிழற்று கின்ற யாவையு மிலங்கை வேந்தன்
முனியுமென் றமைந்த வாய மூங்கையர் போன்ற வன்றே.

௯௯ பருவத்தால் வாடை தந்த பசும்பனி யனங்கன் வாளி
உருவிப்புக்கொளித்தபுண்ணிற் குளித்தலுமுலைந்துவிம்மி
இருதுத்தான் யாத டாவென் றியம்பின னியம்ப லோடும்
வெருவிப்போய்ச் சீத நீங்கி வேனில்வந் திறுத்த தன்றே.

௧௦௦ வன்பனை மரமும் யாவு மலைகளுங் குளிர வாழும்
மென்பனி யெரிந்த தென்றால் வேனிலை விளம்ப லாமோ
அன்பெனும் விடமுண் டாரை யாற்றலா மருந்து முண்டோ
இன்பமுந் துன்பந் தானு முள்ளத்தோ டியைந்த தன்றே. 3273

௧௦௧ மாதிரத் திறுதி காறுந் தன்மனத் தெழுந்த மையல்
வேதனை வெப்பஞ் செய்ய வேனிலும் [1] வெதுப்புங் காலை
யாதுமிங் கிதனின் முன்னைச் சீதநன் [2] றிதனை நீக்கிக்
கூதிராம் பருவந் தன்னைக் கொணருதிர் விரைவி னென்றான்.

௧௦௨ கூதிர்வந் தடைந்த காலை கொதித்தன குவவுத் திண்டோள்
சீதமுஞ் சுடுமோ முன்னைச் சீதமே காணி தென்றான்
ஆதியா யஞ்சு மன்றே யருளல தியற்ற லென்ன
யாதுமிங் கிருது மாகா யாவையு மகற்று மென்றான்.

(பிரதி) 1 வெதும்புங்; 2 றெளிதி னீக்கிக்.

க0௩ என்னனு மிருது வெல்லா மேகனும் யாவுந் தந்தம்
பன்னரும் பருவஞ் செய்யா யோகியிற் பற்று நீத்த
பின்னரு முலக மெல்லாம் பிணிமுதற் பாசம் வீசித்
துன்னருந்தவத்திற்றோன்றுந்துறக்கம்போற்றோன்றிற்றன்றே.

க0௪ கூலத்தா ருலக மெல்லாங் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க
நீலத்தா ரரக்கன் மேனி நெய்யின்றி யெரிந்த தன்றே
காலததால் வருவ தொன்றோ காமத்தாற் கனலும் வெந்தீச்
சீலத்தா லவிப்ப தன்றிச் செய்யத்தா னாவ துண்டோ.

க0௫ நாரமுண் டெழுந்த மேகந் தாமரை வளைய ஞான
சாரமுண் டிருந்த சீதச் சந்தனந் றளிர்மென் றாதோ
டாரமுண் டெரிந்த சிந்தை யயர்கின்றா னயனின் றாரை
ஈரமுண் டென்ப வோடி யிந்துவைக் கொணரு மென்றான்.

க0௬ வெஞ்சினத் தரக்க னாண்ட வியனகர் மீதுபோக
நெஞ்சினி லொதுங்கு கின்ற நிறைமதி யோனை நேடி
அஞ்சலை வருதி நின்னை யழைத்தன னரச னென்னச்
சஞ்சலந் துறந்து தானச் சந்திர னுதிக்க லுற்றான். 3279

க0௭ அயிருறக் கலந்த நன்னீ ராழிநின் றாழி யிந்து
செயிருறச் சேதித தாண்டோர் தேய்வுவந் துற்ற போழ்தின்
வயிரமுற் றுடைந்த செற்றோர் வலியவர்ச் செல்லு மாபோல்
உயிர்தெறக் கால னென்பா னொத்தன னுதயஞ் செய்தான்.

க0௮ பராவருங் கதிர்க ளெங்கும் பரப்பிமீப் படர்ந்து வானிற்
றராதலத் தெவரும் பேண வவனையே சலிக்கு நீரால்
அராவணைத் துயிலு மண்ணல் காலமோர்ந் தற்ற நோக்கி
இராவண னுயிர்மே லுய்த்த திகிரியு மென்ன லானான்.

க0௯ அருகுறு பாலின் வேலை யமுதெலா மளைந்து வாரிப்
பருகின பரந்து வாய்நத நிலாச்சுடர் பனிமென கற்றை
நெரிவுறு புருவச் செங்க ணரக்கற்கு நெருப்பி னாப்பண்
உருகிய வெள்ளி யள்ளி வீசினா லொத்த தன்றே. 3282

கக0 மின்னலங் திகழுஞ் சோதி விழுநிலா மிதிலை சூழ்ந்த
சென்னலங் கழனி நாடன் றிருமகள் செவ்வி கேளா
நன்னலந் தொலைந்து சோரு மரக்கனை நாளுந் தோலாத்
துன்னல னொருவன் பெற்ற புகழெனச் சுட்ட தன்றே.

௧௧௧ கருங்கழற் கால னஞ்சுங் காவலன் கருத்து நோக்கித்
தருங்கதிர்ச் சீத யாக்கைச் சந்திரற் றருதி ரென்ன
முருங்கிய கனலின் மூரி விடத்தினை மொய்க்குஞ் சீற்றத்
தருங்கதி ரருக்கன் றன்னை யாரழைத் தீர்க ளென்றான்.

௧௧௨ அவ்வழி சிலத ரஞ்சி யாதியா யருளில் லாரை
இவ்வழி தருது மென்ப தியம்பலா மியல்பிற் றன்றால்
செவ்வழிக் கதிரோ னென்றுந் தேரின்மே லன்றி வாரான்
வெவ்வழித் தெனினுந் திங்கள் விமானத்தின் மேல தென்றார்.

௧௧௩ *பணந்தா ழல்குற் பணிமொழியார்க் கன்பு பட்ட படுங்காமக்
குணந்தான் முன்ன மறியாதான் கொதியா நின்றான் மதியாலே
தணந்தாமரையின் றனிப்பகைஞனென்னுந்தன்மையொருதானே
உணர்ந்தானுணர்வுற்றவன்மேலிட்டுயிர்காத்துய்க்கவுரைசெய்தான்.

௧௧௪ தேயா நின்றாய் மெய்வெளுத்தா யுள்ளங் கறுத்தாய் நிலைதிரிந்து
காயா நின்றா யொருநீயுங் கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயா நின்ற மலர்வாளி பறியா நின்றா றில்லையால்
ஓயா நின்றே னுயிர்காத்தற் குரியா ராரே யுடுபதியே.

௧௧௫ ஆற்றா ராகிற் றம்மைக்கொண் டடங்கா ரோவென் னுருயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச் சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றாயதனுலகங்கரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத்தொடங்கி
மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ. [னாய்

௧௧௬ என்னப் பன்னி யிடருறுவா னிரவோ டிவனைக் கொண்டகற்றி
முன்னைப் பகலும் பகலோனும் வருக வென்றான் மொழியாமுன்
உன்னற் கரிய வுடுபதியு மிரவு மொளித்த தொருநொடியிற்
பன்னற் கரிய பகலவனும் பகலும் வந்து பரந்ததால். 3289

௧௧௭ இருக்கின்மொழியாலெரிமுகத்தினீய்ந்தநெய்யினெரிசெம்பொ
உருக்கி யனைய கதிர்பாய வனல்போல் விரிந்த வுயர்கமலம் [ன்
அருக்க னெய்த வவிந்தடங்கி வாளா தடாத பொருளெய்திச்
செருக்கி யிடையே திருவிழந்த சிறியோர் போன்ற சேதாம்பல்.

௧௧௮ நாணி நின்ற வொளிமழுங்கி நடுங்கா நின்ற வுடம்பினனாய்ச்
சேணி னின்றும் புறஞ்சாய்ந்து கங்குற் றாரம் பின்செல்லப்
பூணின் வெய்யோ னொருதிசையேபோதப்போவான்புகழ்வேந்தர்
ஆணை செல்ல நிலையிழந்த [1] வரசர் போன்றா னல்லாண்டான்.

---

* (பிரதி) 1 வமைச்சன்.

௧௧௯ மணந்தபே ரன்பரை மலரின் சேக்கையுள்
புணர்ந்தில ரிடையொரு வெகுளி பொங்கலால்
கணங்குழை மகளிர்கள் கங்குல் நீங்கிட
உணர்ந்திலர் கனவினு மூட றீர்ந்திலர். 3292

௧௨௦ அணைமலர்ச் சேக்கையு ளாட றீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோல்
இணைமலர்க் கைகளி னிறுக வின்னுயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின் றார்சிலர். 3293

௧௨௧ தள்ளுறு முயிரினர் தலைவர் நீங்கலால்
நள்ளிர விடையுறு நடுக்க நீங்கினார்
கொள்ளையி லாக்கருங் குவளை நாண்மலர்க்
கள்ளுகு வனவெனக் கலுழுங் கண்ணினார். 3294

௧௨௨ அளியினந் தடந்தொறு மார்ப்ப வாய்கதிர்
ஒளிபட வுணர்கில வுறங்கு கின்றன
தெளிவில வின்றுயில் விளைக்குஞ் சேக்கையுட்
களியரை நிகர்த்தன களிநல் லன்னமே. 3295

௧௨௩ விரிந்துறை யுறைதொறும் விளக்கம் யாவையும்
எரிந்துற நிழற்றலி னொளியி ழந்தவால்
அருந்துறை நிரம்பிய வுயிரி னன்பரைப்
பிரிந்துறை தருங்குலப் பேதை மாரினே. 3296

௧௨௪ புனைந்தித ழுரிஞ்சுறும் பொழுது புக்ககம்
வனைந்தில வைகறை மலரு மாமலர்
நனந்தலை யமளியிற் றுயிலு நங்கைமார்
அனந்தலி னெடுங்கணோ டொத்த வாமரோ. 3297

௧௨௫ இச்சையிற் றுயில்வதற் கியாவர் கண்களும்
நிச்சயம் பகலுந்த மிமைக ணீக்கல
பிச்சையு மிடுதுமென் றுணர்தல் பேணலா
வச்சையர் நெடுமனை வாயின் மானவே. 3298

௧௨௬ நஞ்சுறு பிரிவினி னாளி னீளமோர்ந்
தஞ்சுற நடுவதோ ரயர்வுந் தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையி னாரென
நெஞ்சுறக் களித்தன நேமிப் புள்ளெலாம். 3299

கஉஎ நாண்மதிக் கல்லது நடுவ ணெய்திய
ஆணையிற் றிறக்கலா வலரிற் பாய்வன
மாண்வினைப் பயன்படா மாந்தர் வாயில்சேர்
பாணரிற் றளர்ந்தன பாடற் றும்பியே. 3300

கஉஅ அருமணிச் சாளர மதனி னூடுபுக்
கெரிகதி ரின்றுயி லெழுப்பி யெய்தவும்
மருளொடு தெருளுறு நிலைமை மங்கையர்
தெருளுறு மெய்ப்பொரு டெரிந்தி லாரினே. 3301

கஉகூ ஏவலின் வன்மையை யெண்ண றேற்றலர்
நாவல ரியற்றிய நாழி நாமநூல்
காவலர் நுனித்துணர் கணித மாக்களுங்
கூவுறு கோழியுந் துயில்வு கொண்டவே. 3302

கஙஂ இனையன வுலகினி னிகழு மெல்லையிற்
கனைகழ லரக்கனுங் கண்ணி னோக்கினன்
நினைவுறு மனத்தையு நெருப்பிற் றீய்க்குமால்
அனையவத் திங்களே யாகுமா லென்றான். 3303

கஙக திங்களோ வன்றிது செல்வச் செங்கதிர்
பொங்குளைப் பச்சையம் புரவித் [1] தேரதால்
வெங்கதிர் சுடுவதே யன்றி மெய்யுறத்
தங்குதண் கதிர்சுடத் தகாதென் றார்சிலர். 3304

கஙஉ * நீலச் சிகரக் கிரியன்னவ னின்ற வெய்யோன்
ஆலத்தினும் வெய்ய னகற்றி யாற்று கின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள்ளையைக் கூவுதிர் வல்லை யென்றான்.

கஙங சொன்னா னிருதர்க்கிறை யம்மொழி சொல்ல லோடும்
அன்னாளி னிரம்பிய வம்மதி யாண்டொர் சில
முன்னாளி னிளம்பிறை யாகி முளைத்த தென்றால்
என்னாளு மருந்தவ மன்றி யியற்ற லாமோ. 3306

கஙச குடபாலின் முளைத்தது கண்ட குணங்க டேயோன்
வடவாவன லன்றெனின் மண்பிடர் வைத்த பாம்பின்
விடவா ளெயிறன்றெனி லென்னை வெகுண்டு மாலை
அடவா ளுருவிக்கொடு தோன்றிய தாகு மன்றே. 3307

(பிரதி) 1 தேர்கொலாம்.

௧௩௫ தாதுண் சடிலத்தலை வைத்தது தண்ட ரங்க
மோதுங் கடலிற் படமுந்து பிறந்த போதே
ஓதுங் கடுவைத்தன் மிடற்றி லொளித்த தக்கோன்
ஈதுங் கடுவாமென வெண்ணிய வெண்ண மன்றே. 3308

௧௩௬ உருமொத்த வலத்துயிர் நுங்கிய திங்க ளோடித்
திருமிச் சிறுமென் பிறைநீமை குறைந்த தில்லைக்
கருமைக் கறைநெஞ்சின னஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச் சிறுமைக்கொரு பெற்றி குறைந்த துண்டோ.

௧௩௭ கன்னக் கனியுமிரு டன்னையுங் காண்டு மன்றே
முன்னைக் கதிர்நன்றி தகற்றுதிர் முன்பு சான்ற
என்னைச் சுடுமேயெனி லேழுல கத்தில் வாழ்வோர்
பின்னைச்சிலா வாழ்வரென் றங்கொரு பேச்சுமுண்டோ.

௧௩௮ ஆண்டப் பிறைநீங்கலு மெய்திய தந்த காரந்
தீண்டற் கரிதாய்ப்பல தேய்ப்பினுந் தேய்க்க லாகா
வேண்டிற் கரபத்திர பத்தியி னீர்ந்து வீழ்த்துக்
காண்டற் கருஞ்சேணுய ரகந்து திரட்ட லாகி. 3311

௧௩௯ முருடீர்ந் துருட்டற் கெளி தென்பது முற்று முற்றிப்
பொருடீர்ந் தஞானச் சுடர்புக்கு வழங்க லின்றிக்
குருடீங்கிதென்னக்குறிகொண்டகண்ணோட்டங்குன்றி
அருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்ப தவ்வந்த காரம். 3312

௧௪௦ விள்ளாது செறிந்திடை மேலுற வீங்கி யெங்கும்
நள்ளா விருள் வந்தகன் ஞாலம் விழுங்கலோடும்
எள்ளா வுலகியாவையும் யாவரும் வீவ தென்ப
உள்ளா வுமிழ்ந்தான் விடமுண்ட வொருத்த னென்றான்.

௧௪௧ வேலைத் தலைவந் தொருவன்வலி யால்வி ழுங்கும்
ஆலத்தி னடங்குவ தன்றி தறிந்து ணர்ந்தேன்
ஞாலத்தொடு விண்முதல் யாவையு நாவி னக்குங்
காலக் கனல்கார் விடமுண்டு கறுத்த தன்றே. 3314

௧௪௨ [1] மருளூடு வந்த மயக்கோமதி மற்று முண்டோ
தெருளாமி தென்னே திணிமை யிழைத்தாலு மொவ்வா
[2] இருளூ டிருகுண்டலங் கொண்ட விருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே. 3315

(பிரதி) 1 மருளோடு; 2 இருளோ.

௧௪௩ அம்பு மனனு நுழையாக் [1]கனவந்த காரந்
தும்பு மழைகொண் டயலொப் பரிதாய துப்பின்
[2]கொம்பர் குரும்பைக் குலங்கொண்டது திங்க டாங்கி
வெம்புந் தமியேன்முன் விளக்கெனத் தோன்று மன்றே.

௧௪௪ புடைகொண்டெழு கொங்கையு மல்குலும் புல்கி நிற்கும்
இடைகண்டில மல்ல தெல்லா வுருவுந் தெரிந்தாம்
விடநுங்கிய கண்ணுடை யாரிவர் மெள்ள மெள்ள
மடமங்கைய ராயென் மனத்தவ ராயி னாரே. 3317

௧௪௫ பண்டே யுலகேழினு முள்ள படைக்க ணாரைக்
கண்டே னிதுபோலொரு பெண்ணுருக் கண்டி லேனான்
உண்டே யெனில் வேறினி யெங்கை யுணர்த்து கின்ற
வண்டேறு கோதை மடவாளிவ ளாகு மன்னோ. 3318

௧௪௬ பூண்டிப் பிணியா னுறுகின்றது தான் பொறாதான்
றேண்டிக் கொடுவந்தனள் செய்வதொர் மாறுமுண்டோ
காண்டற் கினியாளுருக் கண்டவட் கேட்கு மாற்றால்
ஈண்டிப் பொழுதே விரைந்தெங்கையைக் கூவு கென்றான்.

௧௪௭ என்றா னெனலுங் கடிதேகினர் கூவு மெல்லை
வென்றா னிருதக்குலம் வேரற மாய்த்தல் செய்வாள்
ஒன்றாத காமக் கனலுட்டெற லோடு நாசி
பொன்றாழ் குழைகொங்கைகள் போக்கினள் போய்ப் புகுந்தாள்.

௧௪௮ பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவ னேருற நோக்கி நங்கை
மைந்நின்ற வாட்கண் மயிலின்றென வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொ லியம்பிய சீதை யென்றான். 3321

௧௪௯ செந்தா மரைக்கண்ணொடுஞ் செங்கனி வாயி னோடுஞ்
சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தா ரகலத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனாகுமவ் வல்வி லிராம னென்றாள். 3322

௧௫௦ பெண்பா லுருநானிது கண்டது பேதை நீயீண்
டெண்பாலு மிலாததோ ராணுரு வென்றி யென்னே
கண்பா லுறுமாயை கவற்றுதல் கற்ற வெம்மை
மண்பா லவரேகொல் விளைப்பவர் மாயை யென்றான்.

(பிரதி) 1 கையனந்த; 2 கொம்பன்ன.

கருக ஊன்று முணர்வப் புறமொன்றினு மோட லின்றிச்
சான்று முளதானெடி தாசை தகைந்து நின்றாய்க்
கேன்றுன் னெதிரே விழிநோக்கு மிடங்க டோறுந்
தோன்று மனையாளிது தொன்னெறி யாகு மென்றாள்.

கருஉ அன்னா ளதுகூற வரக்கனு மன்ன தாக
நின்னால விராமனைக் காண்குறு நீரெ னென்றான்
என்னாளவ னென்னை யித்தீர்வரு மின்னல் செய்தான்
அன்னாள்முதல் யானு மயர்த்தில னாகு மென்றாள். 3325

கருங ஆமாம தடுக்குமெ னாக்கையொ டாவி நைய
வேமால் வினையேற்கினி யென்விதி யாகு மென்னக்
கோமா னுலகுக்கொரு நீகுறை கின்ற தென்னே
பூமாண் குழலாடனை வவ்வுதி போதி யென்றாள். 3326

கருச என்றா ளகன்றா ளரக்கனு மீட ழிந்தான்
ஒன்றா னுமுணர்ந்தில னாவி யுலர்ந்து சோர்ந்தான்
நின்றாரு நடுங்கினர் நின்றுள நாளி னாலே
பொன்றா துளனாயின னத்தனை போது மன்றே. 3327

கருரு இறந்தார் பிறந்தாரென வின்னுயிர் பெற்ற மன்னன்
மறந்தா னுணர்ந்தானவன் மாடுநின் றாரை நோக்கிக்
கறந்தாலென நீர்தரு சந்திர காந்தத் தாலோர்
சிறந்தார் மணிமண்டபஞ் செய்கெனச் செப்பு கென்றான்.

கருகூ வந்தா னெடுவானுறை தச்சன் மனத்து ணர்ந்தான்
சிந்தா வினையன்றியுஞ் செய்வினை யாலுஞ் செய்தான்
அந்தாம நெடுந்தறி யாயிரத் தால மைத்தான்
சந்தார் மணிமண்டபந் தாமரை யோனு நாண. 3329

கருஎ காந்தம் மமிர்தின்றுளி கால்வன கால மீனின்
வேந்தன் னொளியன்றியு மேலொடு கீழ்வி ரித்தான்
பூந்தென்றல் புகுந்துறை சாளர மும்பு னைந்தான்
ஏந்தும் மணிக்கற்பகச் சீதளக் காவி ழைத்தான். 3330

கருஅ ஆணிக் கனகச் சுடரா யிரமா விளக்கஞ்
சேணுற் றிருள்சீப்பன தெய்வ மடந்தை மார்கள்
பூணிற் பொலிவார் புடையேந்திடப் பொங்கு தோளான்
மாணிக்க மானத்திடை மண்டபங் காண வந்தான். 3331

கருகூ அல்லாயிர கோடி யடுக்கிய தொத்த [1]தேனும்
நல்லார் முகமாய் நளிர்வானில வின்றி நாமப்
பல்லாயிர கோடி பனிச்சுட ரீன்ற திங்கள்
எல்லா முடனு விருளோடி யிரிந்த தன்றே. 3332

கசூ0 பொற்புற்றன மாமணி யொன்பதும் பூவி னின்ற
கற்பத் தருவின் கதிர்நாணிழற் கற்றை நாற
அற்பற் றழியப் பகலாக்கிய தால ருக்கன்
நிற்பத் தெளிகின்றது நீள்சுடர் மேன்மை யன்றோ 3333

கசூக ஊறோசை முதற்பொறி யாவையு மொன்றி னொன்று
தேறா நிலையுற்றதொர் சிந்தையின் செய்கை யோரான்
வேறாய பிறப்பிடை வேட்கை விரிந்த தீர்ப்ப
மாறோ ருடல்புக்கென மண்டபம் வந்து புக்கான். 3334

கசூஉ * தண்டலி றவஞ்செய் வோர்கள் வேண்டின தான நல்கும்
மண்டல மகரவேலை யமிர்தொடும் வந்த தென்னப்
பண்டருஞ் சுரும்பு சேரும்பசுமரமுயிர்த்தபைம்பொற்
றெண்டளிர் மலரிற் செய்த சீதளச்சேக்கைசேர்ந்தான்.

கசூங நேரிழை மகளிர் கூந்த னிறைநறை வாச நீந்தி
வேரியஞ் சாளச் சோலை வேனிலான் விருந்து செய்ய
ஆர்கலி யழுவந் தந்த வமிழ்தென வொருவ ராவி
தீரினு முதவற் கொத்த தென்றல்வந் திறுத்த தன்றே.

கசூச சாளரத் தூடு வந்து தவழ்தலுந் தரித்த றேற்றான்
நீளரத் தங்கள் சிந்த நெருப்புக நோக்கு நீரான்
வாழ்மனை புகுந்த தாண்டோர் மாசுணம் வரக்கண்டன்ன
கோளுறக்கொதித்துவிம்மி யுழையரைக்கூவிச்சொன்னான்.

கசூரு கூவலி னுயிர்த்த சின்னீ ருலகினைக் குப்புற் றென்னத்
தேவரி னொருவ னென்னை யின்னலுஞ் செயத் தக்கானோ
ஏவலி னன்றி வந்திங் கிவ்வழ லெய்திற் றென்னக்
காவலி னுழையர் தம்மைக்கொணருதிர் கடிதினென்றான்.

கசூகூ அவ்வழி யுழைய ரோடி யாண்டவர்க் குணர்த்த லோடும்
வெவ்வழியமைந்தசெங்கண்வெருவுறநோக்கிவெய்யோன்
செவ்வழி தென்றலார்க்குத் திருத்தினீர் நீர்கொ லென்ன
இவ்வழி யிருந்த காலைத் தடையவர்க் கில்லை யென்றான்.

(பிரதி) 1 தானும்.

கசுஎ வேண்டிய நினைந்து செய்வான் விண்ணவர் வருவரென்றால்
மாண்டது போலுங் கோள்கை யானுடை வன்மைவல்லை
தேண்டிநீர் திசைக டோறுஞ் சேணுற விசையிற் செல்குற்
றீண்டிவன் றன்னைப் பற்றி யிருஞ்சிறை யிடுதி ரென்றான்.

கசுஅ *காற்றினோன் றன்னை வாளா முனிதலிற் கண்ட தில்லை*
கூற்றும்வந் தென்னையின்னே குறுகுமாற் குறித்தவாற்றால்
வேற்றருங் கருங்கட் சீதைமெய்யருள் புனையேனென்றால்
ஆற்றலா லடுத்த தெண்ணு மமைச்சரைக் கொணர்தி ரென்றான்.

கசுகூ *ஏவின சிலத ரோடி யேயெனு மளவி லெங்குங்*
கூவினர் கூவலோடுங் குறுகினர் கொடித்திண் டேர் மேல்
மாவினிற் சிவிகை தன்மேன் மழைமதக் களிற்றின் மீதில்
தேவரும் வானந் தன்னிற் றிசைதொறுஞ் சிந்தை சிந்த.

கஎ௦ *வந்தமந் திரிக ளோடு மாசற மனத்தி னெண்ணிச்*
சிந்தையி னினைந்து செய்யுஞ் செய்கையன் றெளிவி னெஞ்சன்
அந்தரஞ் செல்வ தாண்டோர் விமானத்தி னுரு மின்றி
இந்திய மடங்கி நின்ற மாரீச னிருக்கை சேர்ந்தான். 3343

சூற்பநகி சூட்சிப் படலம் முற்றும்.

கஉ. *மாரீசன் வதைப் படலம்*

க *இருந்தமா [1]ரீசன ரந்த விராவண னெய்த லோடும்*
பொருந்திய பயத்தின் சிந்தை பொருமுற்று வெருவு கின்றான்
கருந்தட மலைய னானை யெதிர்கொண்டு கடன்கள் யாவுந்
திருந்திய செய்து செவ்வித் திருமுக நோக்கிச் செப்பும்.

உ * *கந்த மலர்த்தண் கற்பக நீழற் றலைவற்கும்*
அந்தக னுக்கு மஞ்ச வடுக்கு மரசாள்வாய்
இந்த வனத்தென் னின்ன விருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி யென்றான் மருள்கின்றான்.

ங *ஆனை தனக்கு மாவி தரித்தே னயர்கின்றேன்*
போனது பொற்பு மேன்மையு மற்றென் புகழோடும்
யான துனக்கின் றெங்ங னுரைக்கே னினிதின்று
வான வருக்கு நாணமடுக்கும் வகை யம்மா. 3346

(*பிரதி*) 1 *ரீசன் வந்த.*

௪ வன்மை தரித்தோர் மானிடர் மற்றங் கவர்வாளால்
நின்மரு கிக்கு நாசி யிழக்கு நிலைவந்தால்
என்மர புக்கு நின்மர புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி யொன்றோ புகழ்வேலோய்.

௫ திருகு சினத்தான் முதிர மலைந்தோர் சிறியோர்நாட்
பருகின னென்றால் வென்றி நலத்திற் பழியன்றோ
இருகை சுமந்தா னினிதி னிருந்தா னிகல் வேலுன்
மருக னுலந்தா னொருவன் மலைந்தான் வரிவில்லால். 3348

௬ வெப்பழி யாதென் னெஞ்சு முலர்ந்தேன் விளிகின்றேன்
ஒப்பில ராவார் போர்செய வொல்லே னுடன்வாழுந்
துப்பழி செவ்வாய் வஞ்சியை வவ்வத் துணைகொண்டிட்
டிப்பழி நின்னிற் றீரிய வந்தே னிவணென்றான். 3349

௭ இச்சொ லனைத்துஞ் சொல்லி யரக்க னெரிகின்ற
கிச்சி னரக்கிட் டுய்த்தன னென்னக் கிளர்வான்முன்
சிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தித் தெருண்மைந்தன்
அச்ச மகற்றிச் செற்ற மனத்தோ டறைகின்றான். 3350

௮ மன்னா நீயுன் வாழ்வை முடித்தாய் மதியற்றாய்
உன்னா லன்றி தாழ்வினை யென்றே யுணர்கின்றேன்
இன்னா நெஞ்ச னேனு முரைப்ப னிதமென்னச்
சொன்னா னன்றே யன்னவ னுக்குத் துணிவெல்லாம்.

௯ அற்ற கரத்தோ டுன்றலை நீயே யனன்முன்னிற்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
உற்றுயி ருள்ளே தேய வுலந்தாய் பினையன்றோ
பெற்றன செல்வம் பின்னு மிழந்தாற் பெறலாமோ. 3352

௧௦ திறத்திற னாலே செய்தவ முற்றித் திருவுற்றாய்
மறத்திற னாலே கொல்லுதி கொல்லா மறைவல்லோய்
அறத்திற னாலே யெய்தினை யன்றோ வதுநீயும்
புறத்திற னாலே யின்னு மிழக்கப் புகுவாயோ. 3353

௧௧ நாரங் கொண்டார் நாடு [1] கவர்ந்தார் நடுவில்லா
வாரங் கொண்டார் மற்றொரு வற்காய் மனைவாழுந்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா. 3354

(பிரதி) 1 துறந்தார்.

கஉ அந்தர முற்றா னகலிகை பொற்பா லழிவுற்றான்
இந்திர னொப்பா ரெத்தனை யோர்தா மியல்பற்றார்
செந்திரு வொப்பா ரெத்தனை யோர்நின் றிருவுண்பார்
மந்திர மற்றா ருற்ற துரைத்தாய் மதியற்றாய். 3355

கங செய்தா லேனுந் தீவினை யோடும் பழியல்லால்
எய்தா தெய்தா னென்னி லிராம னுலகின்றான்
வைதா லன்ன வாளிகள் கொண்டுன் வழியோடுங்
கொய்தா னன்றே கொற்ற முடித்துன் குழுவெல்லாம்

கச என்றா [1]லென்னே யெண்ணலை யோநீ கரனென்பான்
நின்றா னைக்கு மேலுள னென்னு நிலையம்மா
தன்றா னைதனிண் டேரொடு மாளத் தனுவொன்றாற்
கொன்றான் முற்றுங் கொல்ல மனத்திற் குறிகொண்டான்.

கரு வெய்யார் யாரே வீர விராதன் றுணைவெய்யோர்
ஐயா போனா னடபொடு மும்பர்க் கவனென்றால்
உய்வார் யாரே நடமில் வரக்கொண் டுணர்தோறும்
நையா நின்றே னீயி துரைத்து நலிவாயோ. 3358

கசு மாண்டார் மாண்டார் நீயினி மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா செய்திடி லுய்வான் விதியுண்டோ
ஆண்டா ராண்டா ரெத்தனை யென்கே னறனுள்ளார்
ஈண்டா ரீண்டார் நின்றவ ரெல்லா மிலரன்றோ. 3359

கஎ எம்பிக் கும்மெ னன்னை தனக்கு மிறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி தனக்கு மயனிற்குந்
தம்பிக் கும்மென் னாண்மை தவிர்ந்தே சயநிற்குங்
கம்பிக் கும்மென் னெஞ்சவ னென்றே கவல்கின்றேன்.

கஅ நின்றுஞ் சென்றும் வாழ்பவை யாவு நிலையாவாற்
பொன்று மென்னு மெய்ம்மை யுணர்ந்தாய் புலையாடற்
கொன்று முன்னா யென்னுரை கொள்ளா யுயர்செல்வத்
தென்று மென்றும் வைகுதி யையா வினியென்றான்.

க௯ *கங்கைசடை வைத்தவ னொடுங்கயிலை வெற்போர்
அங்கையி னெடுத்தவென தாண்டொழின் மணித்தோள்
இங்கொர்மனி தற்கெளிய வென்றனை யெனத்தன்
வெங்கணெரி யப்புருவ மீதுற விழித்தான். 3362

(பிரதி) 1 னென்னே.

௨௦ நிகழ்ந்ததை நினைந்திலையென் னெஞ்சினிலை யஞ்சா
திகழ்ந்தனை யெனக்கிளைய நங்கைமுக மெங்கும்
அகழ்ந்தவரை யொப்புற வமைத்தவரை யையா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனனி தென்றான். 3363

௨௧ தன்னைமுனி வுற்றதறு கட்டகவி லோனைப்
பின்னைமுனி வுற்றிடுமெ னத்தவிர்தல் பேணா
துன்னைமுனி வுற்றனைகு லத்தைமுனி வுற்றாய்
என்னைமுனி வுற்றிலையி தின்றென விசைத்தான். 3364

௨௨ எடுத்தமலை யேநினையி னீசனிகல் வில்லா
வடித்தமலை நீயிது வலித்தியென வாரிப்
பிடித்தமலை நாணிடை பிணித்தொருவன் மேனாள்
ஒடித்தமலை யண்டமுக டுற்றமலை யன்றோ. 3365

௨௩ யாதுமறி யாதுரைகொ ளாயிக லிராமன்
கோதைபுனை யார்முனுயிர் கொள்ளைபடு மன்றே
பேதையுரு வோவிதுவொர் பெண்ணுருவ மன்றே
சீதையுரு வோநிருதர் தீவினைய தன்றோ. 3366

௨௪ உஞ்சுபிழை யாயுறவி னேடுபென வுன்னாய்
நெஞ்சுபறை போதுமது நீநினைய கில்லாய்
அஞ்சுமென தாருயி ரறிந்தருகு நின்றார்
நஞ்சுநுகர் வாரையிது நன்றெனலு நனறோ. 3367

௨௫ ஈசன்முத லாகவிமை யோருலகு மற்றைத்
தேசமுதன் முற்றுமோ ரிமைப்பினுயிர் தின்னக்
கோசிக னளித்தகட வுட்படை கொதிப்போ
டாசில கணிப்பில விராமனரு ளிற்க. 3368

௨௬ ஆயிரம டற்கையுடை யானைமழு வாளால்
ஏயெனு முரைக்குளுயிர் செற்றவெதி ரில்லோன்
மேயவிறன் முற்றும்வரி வெஞ்சிலையி னேடுந்
தாயவன் வலித்தகைமை யாமுறு தகைத்தோ. 3369

௨௭ வேதனைசெய் காமவிட மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கை சிதைவன்றோ
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேனிதனை யெந்தைதவிர் கென்றான். 3370

உஅ என்னவுரை யித்தனையு மெத்தனையு மெண்ணிச்
சொன்னவனை யேசின வரக்கர்பதி சொன்னான்
அன்னையுயிர் செற்றவனை யஞ்சியுறை கின்றாய்
உன்னையொரு வற்கொருவ னென்றுணர்த னன்றோ.

உகூ திக்கய மொளிப்பநிலை தேவர்கெட வானம்
புக்கய னிருக்கைபுகை வித்துலகம் யாவுஞ்
சக்கர நடத்துமெனை யோதயர தன்றன்
மக்கணலி கிற்பதிது நன்றுன்மதி யன்றோ. 3372

௩௰ மூவுலகி னுக்குமொரு நாயக முடித்தேன்
மேவலர் கிடைக்கிலிதன் மேலினிய துண்டோ
ஏவல்செய கிற்றியென தாணைவழி யெண்ணிக்
காவல்செ யமைச்சர்கட னீகடவ துண்டோ. 3373

௩க மறுத்தனை யெனப்பெறினு நின்னைவடி வாளால்
[1] ஒறுத்தென மனக்குறை முடிப்பதொழி கல்லேன்
வெறுத்தன கிளத்தலுறு மித்தொழிலை விட்டென்
குறிப்பின்வழி நிற்றியுயிர் கொண்டுழலி னென்றான். 3374

௩உ *அரக்கனஃ துரைத்த லோடு மறிந்தன னடங்கி நெஞ்சந்
தருக்கினர் கெடுவ ரென்ற றத்துவ நிலையிற் றன்றோ
செருக்கினிற் றீர்து மென்பார் தம்மிலார் செருக்கரென்னு
உருக்கிய செம்பொ னுற்ற நீரென வுரைக்க லுற்றான்.

௩௩ உன்வயி னுறுதி நோக்கி யுண்மையி னுணர்த்தி னேன்மற்
றென்வயி னிறுதி நோக்கி யச்சத்தா லிசைத்தே னல்லேன்
நன்மையுந் தீமை யன்றே நாசம்வந் துற்ற போழ்திற்
புன்மையி னின்ற நீராய் செய்வது புகறி யென்றான். 3376

௩௪ என்றலு மெழுந்து புல்லி யேறிய வெகுளி நீக்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கு மம்பாற்
பொன்றலி லிராம னம்பாற் பொன்றலே புகழுண் டன்றே
தென்றலைப் பகைக்கச் செய்த சீதையைத் தருதி யென்றான்.

௩௫ ஆண்டையா னனைய கூற வரக்கரோ ரிருவ ரோடும்
பூண்டவென் மானந் தீரத் தண்டகம் புக்க காலை
தூண்டிய சரங்கள் பாயத் துணைவர்பட் டுருள வஞ்சி
மீண்டயான் சென்றுசெய்யும் வினையென்கொல் விளம்புகென்றான்

(பிரதி) 1 ஒறுத்துமென்.

௩௬ ஆயதாங் கனைய கூற வரக்கர்கோ னைய நொய்துன்
தாயையா ருயிருண் டானைக் கொல்லயான் சமைந்து நின்றேன்
போயையா புணர்ப்ப தென்னையென்பதுபொருந்திற்றென்றான்
மாயையால் வஞ்சித் தன்றோ வவ்வுத லவளை யென்றான். 3379

௩௭ புறத்தினி யுரைப்ப தென்னை புரவலன் றேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத் தாகும்
அறத்துள தொக்கு மன்றே யமர்த்தலை வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்னா வென்னமா ரீசன் சொன்னான்.

௩௮ ஆனவ னுரைக்க நக்க வரக்கர்கோ னவரை வெல்லத்
தானையும் வேண்டு மோவென் றடக்கைவா டக்க தன்றோ
ஏனைய ரிறக்கிற் றானுந் தமியனு மிறக்கு மன்றே
மானவ ளாதலாலே மாயையின் வலித்து மென்றாள்.

௩௯ தேவியைத் தீண்டா முன்ன மிவன்றலை சரத்திற் சிந்திப்
போவது புணாப்ப னென்று புகுதியிற் புகலின் றேற்கும்
ஆவதீ தல்ல தில்லை யார்விதி வினையை வெல்வார்
ஏவிய செய்த லல்லா லில்லைவே றெண்ண தென்னா.

௪0 என்னமா மாயம் யானிங் கியற்றுவ தியம்பு கென்னப்
பொன்னின்மா னாகப் புக்கப் பொன்னைமால் புணர்த்து கென்ன
அன்னது செய்வெ னென்னா மாரீச னமைந்து போனான்
மின்னும்வே லரக்கர் கோனும் வேறொரு நெறியிற் போனான்.

௪௧ *மேனா ளவர்வில் வலிகண் டமையால்
தானாக வமைந் துசமைந் திலனான்
மானா குதியென் றவன்வாள் வலியால்
போனான் மனமுஞ் செயலும் புகல்வாம். 3384

௪௨ வெஞ்சுற் றநினைந் துகும்வீ ரரைவே
றஞ்சுற் றுமறுக் குறுமாழ் குழிநீர்
நஞ்சுற் றுறுமீ னினடுக் குறுவான்
நெஞ்சுற் றதொர்பெற் றிநினைப் பரிதால். 3385

௪௩ அக்கா லமும்வேள் வியிலன் றிவனோ
டக்கா லுநலிந் துமொரீ றுபெறான்
முக்கா லின்முடிந் திடுவான் முயல்வான்
புக்கா னவிரா கவன்வை குபுனம். 3386

௪௪ தன்மா னமிலா ததயங் கொளிசால்
மின்மா னமுமண் ணும்விளங் கொளிசேர்
பொன்மா னுருவங் கொடுபோ யினனால்
நன்மா னனையா டனைநா டுறுவான். 3387

௪௫ கலைமான் முதலா யினகண் டவெலாம்
அலைமா னுறுமா சையில்வந் தனவால்
நிலையா மெனவஞ் சனைநே யமிலா
விலைமா தர்கண்யா ரும்விழுந் தெனவே. 3388

௪௬ பொய்யா மெனவோ துபுறஞ் சொலினான்
நையா விடைநோ வநடந் தனளால்
வைதே விதன்வால் வளைமென் கையெனுங்
கொய்யா மலரா லலர்கொய் குறுவாள். 3389

௪௭ உண்டா கியகே டுடையார் துயிலா
எண்டா னுமிலா தியையா வுருவங்
கண்டா ரெனலாம் வகைகண் டனளால்
பண்டா ருமுறா விடர்பா டுறுவாள். 3390

௪௮ காணா விதுகை தவமென் றுணராள்
பேணா தநலங் கொடுபே ணினளால்
வாணா ளவ்விரா வணன்மா ளுதலால்
வீணா ளிலறம் புவிமே வுதலால். 3391

௪௯ நெற்றிப் பிறையா ளிறைநின் றிலடன்
முற்றிப் பொழிகா தலின்முந் துறுவாள்
பற்றித் தருகென் பதெனப் பதையா
வெற்றிச் சிலைவீ ரனைமே வினளால். 3392

௫௦ ஆணிப் பொனினா கியதாய் கதிராற்
சேணிற் சுடர்கின் றதுதிண் செவிகான்
மாணிக் கமயத் தொருமா னுளவாற்
காணத் தகுமென் றனள்கை தொழுவாள். 3393

௫௧ இம்மா னினிலத் தினிலில் லையெனா
எம்மா னிதனைச் சிறிதெண் ணல்செயான்
செம்மா னவள்சொற் கொடுதே மலரோன்
அம்மா னுமருத் தியனா யினனால். 3394

ருஉ ஆண்டங் கிளையோ னுரையா டினனால்
வேண்டும் மெனலான் விளைவன் றிதெனாப்
பூண்டுஞ் சுபொலங் கொடியோ யதுநாங்
காண்டும் மெனவள் ளல்கருத் துணர்வான். 3395

ருங காயங் கனகம் மணிகால் செவிவால்
பாயு முருவோ டிதுபண் பெனலான்
மாய மெனலன் றிமனக் கொளவே
ஏயு மிறையை யுறவென் றனனால். 3396

ருச நில்லா வுலகின் னிலைநேர் மையினால்
வல்லா ருமுணர்ந் திலர்மன் னுயிர்தாம்
பல்லா யிரகோ டிபரந் துளவால்
இல்லா தனவில் லையிளங் குமரா. 3397

ருரு என்னென் றுநினைந் ததிழைத் துளதாங்
கன்னங் களில்வே றுளகா ணாதுமால்
பொன்னின் குளிர்மே னிபொருந் தினவேழ்
அன்னங் கள்பிறந் ததறிந் திலையோ. 3398

ருசு முறையு முடிவும் மிலைமொய் யுயிரென்
றிறைவ னிளையோ னொடியம் பினனாற்
பறையுந் துணையன் னதுபன் னெறிபோய்
மறையு மெனவே ழைவருந் தினளால். 3399

ருஎ * அனையவள் கருத்தை யுன்னா வஞ்சனக் குன்ற மன்னான்
புனையுழை காட்ட தென்றுபோயினான்[1]பொருத சிந்தைக்
கனைகழற் றம்பி பின்பு சென்றனன் கடக்க வொண்ணா
வினையென வந்துநின்ற மானெதிர் விழித்த தன்றே. 3400

ருஅ நோக்கிய மானை நோக்கி நுதியுடை மதியா லொன்றுந்
தூக்கல னன்றி தென்றா னறன்பொருள் சொல்ல லாகுஞ்
சேக்கையி னரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கிய முடைமை யன்றோ வன்னது பழுது போமோ.

ருகூ என்னொக்கு மென்ன லாகு மிளவலே யிதனை நோக்காய்
தன்னொக்கு மென்ப தல்லாற் றனையொக்கு முவமை யுண்டோ
பன்னக்க தரள மொக்கும் பசும்புன்மேற் படரு மென்னா
மின்னொக்குஞ் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும்புள்ளி.

(பிரதி) 1 பொருத.

௬௦ வரிசிலை மறைவ லோனே மானிதன் வடிவை யுற்ற
அரிவையர் மைந்தர் யாரே யாதரங் கூர்கிலாதார்
உருகிய மனத்த வாகி யூர்வன பறப்ப யாவும்
விரிசுடர் விளக்குக் கண்ட விட்டிலின் வீழ்வ காணாய்.

௬௧ ஆரிய னனைய கூற வன்னது தன்னை நோக்கிச்
சீரிய தன்றி [1] தென்றுஞ் சிந்தையிற் றெளிந்த தம்பி
காரிய மென்னை யீண்டு கண்டது கனக மானும்
வேரியந் தெரியல் வீர மீள்வதே கரும மென்றான்.

௬௨ அற்றவன் பகரா முன்ன மழகனை யழகி யாழிக்
கொற்றவன் மைந்த மற்றிக் குழைவுடை யுழையை வல்லை
பற்றினை தருதி யாயிற் பதியிடை யவதி யெய்தப்
பெற்றுழி யினிதுண் டாடப் பெறற்கருந் தகைத்த தென்றாள்.

௬௩ ஐயநுண் மருங்கு னங்கை யஃதுரை செய்ய வையன்
செய்வதென் றமைய நோக்கித் தெளிவுடைத் தம்பி சொல்லும்
வெய்யவல் லரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையின் செய்கைக்
கைதவ மானென் றண்ணல் காணுதி கடையி னென்றான். 3406

௬௪ மாயமேன் மடியு மன்றே வாளியின் மடிந்த போது
காய்சினத் தவரைக் கொன்று கடன்கழித் தோமு மாகுந்
தூயதேற் பற்றிக் கோடுஞ் சொல்லிய விரண்டி னொன்று
தீயதே யுரைத்தி யென்றான் தேவரை யிடுக்கண் டீர்ப்பான்.

௬௫ பின்னின்றா ரெனைய ரென்று முணர்கிலம் பிடித்த மாயம்
என்னென்றுந் தெரித றேற்றாம் யாவதீ தென்று மோராம்
முன்னின்ற முறையி னின்றார் முடிந்துள வேட்டை முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய் புகழுடைத் தாமன் றென்றான்.

௬௬ பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது மென்றால்
நகையுடைத் தாகு மன்றே யாதலி னலனே யென்னத்
தகையுடைத் தம்பிக் கன்னாட் சதுமுகன் றாதை சொன்னான்.

௬௭ அடுத்தவு மெண்ணிச் செய்த லண்ணலே யமைதி யன்றோ
விடுத்ததன் பின்னின் றார்கள் பலருள ரெனினும் வில்லாற்
றொடுத்தவெம் பகழி தூவித் தொடர்ந்தனன் விரைந்து சென்று
படுக்குவ னதுவன் றாகிற் பற்றினன் கொணர்வ னென்றான்.

(பிரதி) 1 தென்னுஞ் சிந்தையிற் றெரிந்த.

௬௮ ஆயிடை யன்ன மன்னா ளமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் கிளியினுங் குழறி மாழ்கி
நாயக [1]நீயே பற்றி நல்கலை போலு மென்னாச்
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு சீறிப் போனாள். 3411

௬௯ போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன்கொ டாராய்
மானிது நானே பற்றி வல்லையின் வருவ னின்றே
கானியன் மயிலன் னாளைக் காத்தனை யிருத்தி யென்னா
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய லுற்றான். 3412

௭௰ முன்னமு மகவாய் வந்த மூரிவே லொருவன் போனான்
அன்னமா ரீச னென்றே யயிர்த்தன னிவனை யையா
இன்னமுங் காண்டி வாழி யேகென விருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றான்.

௭௧ மந்திரத் திளையோன் சொன்னவாய்மொழிமனத்துட்கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினா னம் மானினைத் தொடர லுற்றான்.

௭௨ மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக் குரப்பத முரத்தைக் கூட்டி
உதித்தெழு மூதை யுள்ள மென்றிவை யுருவச் செல்லுங்
[2]கதித்தொரு கல்வி வேறே காட்டுவ தொத்த தன்றே.

௭௩ நீட்டினா னுலக மூன்று நின்றெடுத் தளந்த பாதம்
மீட்டுநா னுரைத்தற் கம்மா வேறுமோ ரண்ட முண்டோ
ஓட்டினான் றொடர்ந்த தென்னை யொழிவற நிறைந்த தன்மை
காட்டினா னன்றி யன்றக் கடுமையார் கணிக்கற் பாலார். 3416

௭௪ குன்றிடை யிவரு மேகக் குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடு லகனுந் தாளிற் றீண்டலாந் தகைத்த தாகும்
நின்றது போல நீங்கு நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போய தம்மான். 3417

௭௫ காயம்வே றாகச் செய்யுங் கருமம்வே றாயிற் றன்றே
எயுமே யென்னின் முன்ன மெண்ணமே யிளவற் குண்டே
ஆயுமே யுறுதல் செல்லா தாதலா லரக்கர் செய்த
மாயமே மாறு மென்ன வருந்திய தென்றான் வள்ளல்.

(பிரதி) 1 னீயே. 2 கதிக்கொரு.

௭௬ *பற்று வானினி யல்லன் பகழியாற்
செற்று வானிற் செலுத்தலுற் றானென
மற்ற மாய வரக்கன் மனக்கொளா
உற்ற வேகத்தி னும்பரி னோங்கினான். 3419

௭௭ அக்க ணத்தினி லையனும வெய்யதன்
சக்க ரத்திற் றகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
புக்க தேயம்புக் கின்னுயிர் போக்கெனா. 3420

௭௮ நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினால்
அட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென வீழ்ந்தனன். 3421

௭௯ வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலுஞ்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லனென் னாருயிர் வல்லன்யான்
உய்ய வந்தனன் வலலனென் றுன்னினான். 3422

௮௦ ஆசை நீளத் தரற்றினன் வீழ்ந்தவந்
நீசன் மேனியை நின்றுட னோக்கினான்
மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவ னென்பதுந் தேறினான். 3423

௮௧ புழைத்த வாளி யுரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையி னென்குரல் போலெடுத்
தழைத்த துண்டது கேட்டயர் வெய்துமான்
மழைக்கண் மங்கையென் றுள்ளம் வருந்தினான். 3424

௮௨ மாற்ற மென்னிது மாயமா ரீசனென்
றேற்ற முன்னுணர்ந் தானிருந் தானென
தாற்ற றேறு மறிவின னாதலாற்
றேற்று மாலிளை யோனெனத் தேறினான். 3425

௮௩ மாள்வ தோர்தொழி லாகவந் தானலன்
சூழ்வ தோர்பொரு ளுண்டிவன் சொல்லினாற்
றாழ்வ தேயெனிற் றையல் வருந்துமால்
மீள்வ தேநல னென்றவன் மீண்டனன். 3426

அச சங்க டுத்த தனிக்கடன் மேனியாற்
கங்க டுத்த நிலைமை யறைந்தனங்
கொங்க டுத்த மலர்க்குழற் கொம்பனாட்
கிங்க டுத்த தகைமை யியம்புவாம். 3427

மாரீசன் வதைப் படலம் முற்றும்.

க௯. சடாயு மோட்சப் படலம்

க எயிற லைத்த முழைதிறந் தேங்கிய
செயிற லைக்கொண்ட சொற்செவி சேர்தலுங்
குயிற லத்திடை யுற்றதொர் கொள்கையாள்
வயிற லைத்து விழுந்து மயங்கினாள். 3428

உ பிடித்து நல்கிவ் வுழையெனப் பேதையேன்
முடித்த னன்முதல் வாழ்வென மொய்குழல்
கொடிப் படிந்த தெனநெடுங் கோளரா
இடிக் கிடைந்த தெனபுரண் டேங்கினாள். 3429

ங குற்றம் வீய்ந்த குணத்தினெங் கோமகன்
மற்ற வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றியோ விளையோ யொருநீ யென்றாள். 3430

ச * எண்மையா ருலகினி லிராமற் கேற்றமோர்
திண்மையா ருளரெனச் செப்பற் பாலரோ
பெண்மையா லுரைசெயப் பெறுதி ராலென
உண்மையா னனையவட் குணரக் கூறினான். 3431

ரு ஏழுமேழ் கடலுல கேழு மேழுமேற்
சூழுமேழ் மலையிவை தொடர்ந்த சூழ்வாய்
வாழுமே மையர்சிறு வலிக்கு வாளமர்
தாழுமே யிராகவன் தனிமை தையலீர். 3432

சு பாரெனப் புனலெனக் கனலெனப் பகர்
பேரனைத் தவையவன் முனியிற் பேருமால்
காரெனக் கரியவக் கமலக் கண்ணனை
யாரெனக் கருதியிவ் விடரின் மூழ்கினீர். 3433

௭ இடைந்துபோய் நிசாசரற் கிராம னெவ்வம்வந்
தடைந்தபோ தழைக்குமோ வழைக்கு [1]மாமெனின்
மிடைந்தபே ரண்டங்கண் மேல கீழன
உடைந்துபோ யயன்முத லுயிருந் தீயுமால். 3434

௮ மாற்றமென் பகர்வது மண்ணும் வானமும்
போற்றவன் றிரிபுர மெரித்த புங்கவன்
ஏற்றினின் றெய்தவில் லிற்ற தெம்பிரான்
ஆற்றலின் வருவதோ ராற்ற லின்மையால். 3435

௯ காவல னீண்டுநீர் கருதிற் றெய்துமேன்
மூவகை யுலகமு முடியு முந்துள
தேவரு முனிவரு முதல செவ்வியோர்
ஏவரும் வீவர்நல் லறமு மெஞ்சுமால். 3436

௧௦ பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
துரக்கவங் கதுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கனவ் வுரையெடுத் தாற்றி னானதற்
கிரக்கமுற் றிரங்கலீ ரிருத்தி ரீண்டென்றான். 3437

௧௧ என்றவ னுரைத்தலு மெழுந்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்தள்
நின்றநின் னிலையிது நெறியிற் றன்றென
வன்றறு கண்ணினாள் வலிந்து கூறினாள். 3438

௧௨ ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமக [2]னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை கடிதுபுக் கிறப்ப னீண்டெனா. 3439

௧௩ தாமரை வனத்திடைத் தாவு மன்னம்போற்
றாமவெங் காட்டெரி தொடர்கின் றாடனைச்
சேமவிற் குமரனும் விலக்கிச் சீரடிப்
பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுவான். 3440

௧௪ துஞ்சுவ தென்னைநீர் சொன்ன சொல்லையான்
அஞ்சுவன் மறுக்கிலெ னவலந் தீர்ந்திரும்
எஞ்சினே னடியனே னேகு கின்றனன்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ 3441

(பிரதி) 1 மாலெனின். 2 னுலைவுற்ற.

கரு போகின்றே னடியனேன் பொருந்தி வந்துகே
டாகின்ற தரசன்ற னுணை நீர்மறுத்
தேகென்றீ ரிருக்கின்றீர் தமிய ளென்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் [1] டேகினான். 3442

கசு இருப்பனே லெரியிடை யிறப்பரா லிவர்
பொருப்பனை யானிடைப் போவனே யெனில்
அருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
விருப்பனேற் கென்செய லென்று விம்மினான். 3443

கஎ அறந்தன்னு லழிவிலா தாக லாக்கலாம்
இறந்துபா டிவர்க்குறு [2] மிதனி லிவ்வழி
துறந்துபோ மிதனையே துணிவன் றொல்வினைப்
பிறந்துபோந் திதுபடும் பேதை யேனென்று. 3444

கஅ போவது புரிவனுன் புகுந்த துண்டெனிற்
காவல்செ யெருவையின் றலைவன் கண்ணுறும்
ஆவது காக்குமென் றறிவித் தவ்வழி
தேவர்செய் தவத்தினுற் செம்ம லேகினான். 3445

கசு இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற
வளையெயிற் றிராவணன் வஞ்ச முற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி தவத்தர்தம் வடிவந் தாங்கினான். 3446

உ0 ஊணில னுமென வுலர்ந்த மேனியன்
சேணெறி வந்ததோர் வருத்தச் செய்கையன்
பாணியி னளந்திசை படிக்கின் றூனென
வீணையி னிசைபட வேதம் பாடுவான். 3447

உக பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந் தாலென மிதிக்குஞ் [3] செய்கையான்
காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினான். 3448

உஉ தாமரை மணிதுழாய் தரித்த மாலையன்
ஆமையி னிருக்கையன் வளைந்த வாக்கையன்
நாமநூல் மார்பின னணுகி னனரோ
தூமனத் தருந்ததி யிருந்த சூழல்வாய். 3449

(பிரதி) 1 டேனென்று. 2 மிதனை. 3 சிந்தையான்.

௨௩ தோமறு சாலையின் வாயி றுன்னினான்
நாமுதல் குழறிட நடுங்கு சொல்லினான்
யாவரிவ் விருக்கையு ளிருந்து ளீரென்றான்
தேவரு மருடரத் தெரிந்த மேனியான். 3450

௨௪ தோகையு மவ்வழி தோமில் சிந்தனை
சேகறு நோன்பின ரென்னுஞ் சிந்தையால்
பாகியல் கிளவியோர் பவளக் கொம்பர்போல்
ஏகுமி னீண்டென வெதிர்வந் தெய்தினாள். 3451

௨௫ வெற்பிடை மதமென வேர்க்கு மேனியன்
அற்பினிற் றிறைபுர ளாசை வேலையன்
பொற்பின தணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னோக்கினான் 3452

௨௬ தூங்கலி னுருகெழு சொல்லி னும்பரின்
ஓங்கிய வழகினா ளுருவங் காண்டலும்
ஏங்கினன் மனநிலை யாதென் றுன்னுவாம்
வீங்கின மெலிந்தன வீரத் தோள்களே. 3453

௨௭ புனமயிற் சாயற னெழிலிற் பூநறை
சுனைமடுத் துண்டிசை முரலுந் தும்பியின்
இனமெனக் களித்துள தென்ப தென்னவன்
மனமெனக் களித்தன கண்ணின் மாலையே. 3454

௨௮ சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண்
மேயவண் மணிநிற மேனி காணுதற்
கேயுமே யிருபதிங் கிமைப்பி னாட்டங்கள்
ஆயிர மில்லையென் றவல மெய்தினான். 3455

௨௯ அரைகடை யிட்டமுக் கோடி யாயுவும்
புரைதபு தவத்தினான் படைத்த போதுமே
நிரைவளை முன்கையி னின்ற நங்கைதன்
கரையறு நன்னலக் கடற்கென் றுன்னினான். 3456

௩௦ தேவரு மவுணருந் தேவி மாரொடுங்
கூவல்செய் தொழிலினர் குடிமை செய்திட
மூவுல கமுமிவர் முறையி னாளயான்
ஏவலின் வைகுவ னினியென் றெண்ணினான். 3457

௩௧ உளைவுறு துயர்முகத் தொளியி தாமெனின்
முளையெயி றிலங்கிடு முறுவ லென்படுந்
தளையவிழ் குழலிவட் கண்டு தந்தவவ்
விளையவட் களிப்பனென் னரசென் றெண்ணினான். 3458

௩௨ ஆண்டையா னனையன வுன்னி யாசைமேன்
மூண்டெழு சிந்தனை முறையி லோன்றனைக்
காண்டலுங் கண்ணினீர் துடைத்த கற்பினாள்
ஈண்டெழுந் தருளுமென் றினைய கூறினாள். 3459

௩௩ ஏத்தின ளேத்தலு மிருத்தி ரீண்டென
வேத்திரத் தாசனம் விருப்பி னல்கினாள்
மாத்திரி தண்டயல் வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையி னிருந்த போதினே. 3460

௩௪ நடுங்கின மலைகளு மரனு நாவவிந்
தடங்கின பறவையும் விலங்கு மஞ்சின.
படங்குறைந் தொடுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணுங் கண்ணினே 3461

௩௫ இருந்தவன் யாவதிவ் விருக்கை யீங்குறை
அருந்தவன் யாவனீ யாரை யென்றலும்
விருந்தின ரிவ்வழி விரகி லாரெனாப்
பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினாள். 3462

௩௬ தயரதன் றொல்குலத் தனையன் றம்பியோ
டுயர்குலத் தன்னைசொ லுச்சி யேந்தினான்
அயர்வில னிவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமையீ ரென்றாள். 3463

௩௭ கேட்டனன் கண்டிலன் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை யொருமுறை நண்ணி னேன்மலர்
வாட்டடங் கண்ணினீர் யாவன் மாமகள்
காட்டிடை யரும்பகற் கழிக்கின் றீரென்றான். 3464

௩௮ அனகமா நெறிபட ரடிக ளும்மலால்
நினைவதோர் தெய்வம்வே றிலாத நெஞ்சினான்
சனகன்மா மடமகள் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனண் மறுவில் கற்பினாள். 3465

௩௯ அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருந்தினீர் விளைந்த மூப்பினீர்
இவ்வழி யிருவினை கடக்க வெண்ணினீர்
எவ்வழி நின்றுமின் றெய்தி னீரென்றாள். 3466

௪௦ இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னன்முகன் மரபிற் றோன்றினான்
அந்தரத் தோடுமெவ் வுலகு மாள்கின்றான்
மந்தரத் தருமறை வைகு நாவினான். 3467

௪௧ ஈசனாண் டிருந்தபே ரிலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித் தருட்டு மூற்றத்தான்
ஆசைகள் சுமந்தபே ரமரி யானைகள்
பூசல்செய் மருப்பினை பொடிசெய் தோளினான். 3468

௪௨ நிற்பவர் கடைத்தலை நிறைந்த தேவரே
சொற்பகு மற்றவன் பெருமை சொல்லுங்காற்
கற்பக முதலிய நிதியங் கையன
பொற்பதி விமானங்தே ரிலங்கை பொன்னகர். 3469

௪௩ பொன்னக ரத்தினும் பொலங்கொ ணாகர்தந்
தொன்னக ரத்தினுந் தொடர்ந்த மாநிலத்
தென்னக ரத்தினு மினிய வீண்டவன்
நன்னக ரத்தன நவையி லாதன. 3470

௪௪ தாளுடை மலருளோன் தந்த வந்தமில்
நாளுடை வாழ்க்கைய னரி பாகத்தன்
வாளுடை தடக்கையன் வாரி வைத்தவெங்
கோளுடை சிறையினான் குணங்கண் மேயினான். 3471

௪௫ வெம்மைதீ ரொழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் திகைக்குஞ் செவ்வியான்
எம்மையோ ரனைவரு மிறைவ ரேயெனும்
மும்மையோர் பெருமையு முற்றும் பெற்றியான். 3472

௪௬ அனைத்துல கினுமழ கமைந்த நங்கையர்
எனைப்பல ரவன்றன தருளி னிச்சையோர்
நினைத்தன ருருகவு முதவ நேர்கலன்
மனக்கினி யாளொரு மாதை நாடுவான். 3473

சஎ ஆண்டையா னரசுவீற் றிருந்த வந்நகர்
வேண்டியான் சிலபக லுறைய வேண்டினேன்
நீண்டநா ளிருந்தவற் பிரியு நெஞ்சிலேன்
மீண்டன னென்றனன் வினைய முற்றுவான். 3474

சஅ வேதமும் வேதிய ரருளும் வெஃகலாச்
சேதன ரின்னுயிர் தின்னுந் தீவினைப்
பாதக வரக்கர்தம் பதியின் வைகுதற்
கேதுவென் னுடலமு மிகையென் றெண்ணுவீர். 3475

சகூ வனத்திடை மாதவர் மருங்கு வைகலீர்
புனற்றிரு நாட்டிடைப் புனித ரூர்புக
நினைக்கிலீ ரறநெறி நினைக்கி லாதவர்
இனத்திடை வைகினீ ரென்செய் தீரென்றாள். 3476

ருO *மங்கைய துரைத்தல் கேட்ட வரம்பிலான் மறுவற் றீர்ந்தாள்
வெங்கண்வா ளரக்க னென்ன வெருவுவாள் மெய்ம்மை நோக்கித்
திங்கள்வாண் முகத்தி னாளே தேவரிற் றீய ரன்றே
எங்கள்போ லியர்க்கு நல்லார் நிருதரே போலு மென்றான்

ருக சேயிழை யன்ன சொல்லத் தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவ ரல்லர் சொல்லிற் றொன்னெறி தொடர்ந்த சொல்லான்
மாயைவல் லரக்கர் வல்ல ரென்பதை மறுவொன் றில்லாள்
ஆயவ ளறித றேற்றா ளாதலி லயலொன் றெண்ணாள்.

ருஉ அயிர்த்தன ளாகு மென்றோரையுறவகத்துக்கொண்டான்
பெயர்த்தது துடைக்க வெண்ணிப் பிறிதுற வுரைக்க லுற்றான்
[1] மயக்கறு முலக மூன்றில் வாழ்பவர்க் கனைய வல்லோர்
இயற்கையி னிற்ப தல்லா லியற்றலா நெறியே தென்றான்.

ருங திறந்தெரி வஞ்ச னச்சொற் செப்பலுஞ் செப்ப மிக்காள்
அறைந்தனள் வள்ள லீண்டிங் கருந்தவ முயலு நாளுள்
மறந்தலை திரிந்த வாழ்க்கை யரக்கர்தம் வருக்கத் தோடும்
இறந்தனர் முடிவர் பின்னை யிடரிலை யுலக மென்றாள்.

ருச [2] மானவ னுரைத்த லோடு மானிட ரரக்கர் தம்மை
மீனென மிளிருங் கண்ணாய் வேரற வெல்வ ரென்னில்
யானையி னினத்தை யெல்லா மிளமுயல் கொல்லு மின்னுங்
கூனுகிர் மடங்க லேற்றின் குழுவை மான் கொல்லு மென்றான்.

(பிரதி) 1 மயக்கரு. 2 ஆனவ.

௫௫ மின்றிரண் டனைய பங்கி விராதனும் வெகுளி பொங்கிக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்முதற் கணக்கி லோரும்
பொன்றிய பூச லொன்றுங் கேட்டிலீர் போலு மென்றாள்
அன்றவற் கடுத்த துன்னி மழைக்கணீ ராலி சோர்வாள்.

௫௬ வாளரி [1] வள்ள றன்னால் மானுய ரரக்க ரானோர்
கேளொடு மடியு மாறும் வானவர் கிளரு மாறும்
நாளையே காண்டி ரன்றே நவையிலீ ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவ மென்றாள்.

௫௭ தேனுட னமுத ளாய வண்ணமென் சிலசொன் மாலை
தானுடைச் செவிக ளூடு தவழ்வுறத் தளிர்த்து வீங்கும்
ஊனுடை யுடம்பி னாலு முருகெழு மான மூன்ற
மானிடர் வலிய ரென்ற மாற்றத்தாற் சீற்றம் வைத்தான்.

௫௮ சீறின னுரைசெய் வானத் தெறுவலிப் புல்லி யோர்கட்
கீறொரு மனிதன் செய்தா னென்றெடுத் தியம்பி னாயேற்
றேறுதி நாளை யேயவ் விருபது திரடோள் வாடை
வீறிய பொழுது பூளை வீயென வீவ ரன்றே. 3485

௫௯ மேருவைப் பறிக்க வேண்டில் விண்ணினை [2] யிடிக்க வேண்டில்
நீரினைக் கலக்க வேண்டி னெருப்பினை யவிக்க வேண்டிற்
பாரினை யெடுக்க வேண்டிற் பலவினை சிலசொல் லேழை
யாரெனக் கருதிச் சொன்னா யிராவணற் கரிதோ வென்றான்.

௬௦ அரண்டரு திரடோள் சால வுளவெனி லாற்ற லுண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன்
திரண்டதோள் வலத்தையெல்லாஞ் சிறியதோர் பருவந் தன்னில்
இரண்டுதோ ளொருவ னன்றோ மழுவினா லெறிந்தா னென்றாள்.

௬௧ என்றவ ளுரைத்த லோடு மெரிந்தன நயனந் திக்கிற்
சென்றன திரடோள் வானந் தீண்டின மகுடந் திண்கை
ஒன்றொடொன் றடித்த மேகத துருமென வெயிறு தம்மின்
மென்றன வெகுளி பொங்க விட்டது மாய வேடம். 3488

௬௨ இருவினை துறந்த மேலோ ரல்லர்கொ லிவரென் றெண்ணி
அரிவையு மைய மெய்தி யாரிவர் தாமென் றொன்றுந்
தெரிவரு நிலைய [3] ளாகத் தீவிடத் தரவந் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப் பணம்விரித் துயர்ந்த தொத்தான்.

(பிரதி) 1 வள்ளல் சொன்ன. 2 யிடக்க. 3. தாய.

௬௩ ஆற்றவெந் துயரத் தன்னு ளாண்டுற்ற வலக்க ணோக்கி
ஏற்றமென் னினைக்க லாகும் பிறிதெடுதெ தியம்ப லாகும்
மாற்றமொன் றில்லைச் செய்யும் வினையில்லை மதிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற காலத் துயிரெனக் குலைவு கொண்டாள். 3490

௬௪ விண்ணவ ரேவல் செய்ய வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவில் வாழு மானிடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா யல்லை யுன்னையான் பிசைந்து தின்ன
எண்ணுவ னெண்ணிற் பின்னை யென்னுயி ரிழப்ப னென்னு.

௬௫ குலைவுற லன்ன முன்னம் யாரையுங் கும்பிடா வென்
தலைமிசை மகுட மென்னத் தனித்தனி யினிது தாங்கி
அலகில்பூ ணமரர் மாத ரடியிணை யேவல் செய்ய
உலகமோ ரேழு மாளுஞ் செல்வத்து ளுறைதி யென்றான். 3492

௬௬ செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவியையுங் கடக்கும் வென்றிக் காகுத்தன் கற்பி னேனைப்
புவியுடை யொழுக்க நோக்காய் பொங்கெரிப் புனித நீயும்
அவியை நாய் வேட்ட தென்ன வென்சொன்னு யரக்க வென்னு

௬௭ புன்னுனை நீரி னெய்தாய்ப் போதலே புரிந்து நின்ற
என்னுயி ரிழத்த லஞ்சி யிற்பிறப் [1] பழித லுண்டோ
மின்னுயிர்த் துருமிற் சீறும் வெஞ்சரம் விரவா முன்னம்
உன்னுயிர்க் குறுதி நோக்கி யொளித்தியா லொல்லை யென்றாள்.

௬௮ என்றவ ளுரைக்க நின்ற விரக்கமி லரக்க ரேந்தல்
உன்றுணைக் கணவ [2] னம்பவ் வுயர்திசை சுமந்த வோங்கல்
வன்றிறை மருப்பி னுற்றன்மடித்தவென்மார்பின் வந்தாற்
குன்றிடை தொடுத்து விட்ட பூங்கணை கொல்ல தென்றான். 3495

௬௯ அணங்கினுக் கணங்க னுளே யாசைநோ யகத்துட் பொங்க
உணங்கிய வுடம்பி னேனுக் குயிரினை யுதவி யும்பர்க்
கணங்குழை மகளிர்க் கில்லாப் பெரும்பதங் கைக்கொ ளென்னு
வணங்கின னுலகந் தாங்கு மலையினும் வலிய தோளான்.

௭௦ * தறைவா [3] யவன்வந் தடிதா ழுதலுங்
கறைவாள் படவா விகலங் கினள்போல்
இறைவா வினையோ வெனவேங் கினளாற்
பொறைதா னுருவா னதொர்பொற் புடையாள். 3497

(பிரதி) 1 பழித்த. 2 னம்போ. 3 யிடைவந்

௭௧ ஆண்டா யிடைதீ யவனு யிழையைத்
தீண்டா னயன்மே லுரைசிந் தைசெய்வான்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலமோ சனைகீழ் புடையே. 3498

௭௨ கொண்டா னுயர்தே ரதுகோல் வளையாள்
கண்டா டனதா ருயிர்கண் டிலளான்
மண்டா னுறுமின் னின்மயங் கினளால்
விண்டான் வழியா யெழுவான் விரைவான். 3499

௭௩ விடுதே ரெனவெங் கனல்வெந் தழியுங்
கொடிபோல் புரள்வாள் குலைவா ளயர்வாள்
துடியா விழுவா டுயரா லழுவாள்
கடியா யறனே யிதுகா வெனுமால். 3500

௭௪ மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே நிலைதே டினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர். 3501

௭௫ செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரே லடியேன்
உஞ்சா லதுதா னிழிவோ வுரையீர். 3502

௭௬ நிருதா தியர்வே ரறநீர் முகில்போற்
சரதா ரைகள்வீ சினர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறுவேது மிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ. 3503

௭௭ கோதா விரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழைவா டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ. 3504

௭௮ முந்துஞ் சுனைகாண் முழைவா ளரிகாள்
இந்தந் நிலனோ டுமெடுத் தகைநா
லைந்துந் தலைபத் துமலைந் துலையச்
சிந்தும் படிகண் டுசிரிக் கிலிரோ. 3505

எகூ *என்றின்ன பலவும் பன்னி யிரியலுற் றரற்று வாளைப்
பொன்றுன்னும் புணர்மென் கொங்கைப் பொலங்குழை போரி லென்னை
வென்றுன்னை மீட்பர் கொல்லா மானிடர் கொள்கை யென்னா
வன்றிண்கை யெறிந்து நக்கான் வாழ்க்கைநாள் வறிது வீழ்ப்பான். 3506

அ0 வாக்கினா லன்னான் சொல்ல மாயையால் வஞ்ச மானான்
றாக்கினா யாக்கிப் பின்னா னாருயி ருண்ணுங் கூற்றைப்
பேக்கினாய் புகுந்து கொண்டு போகின்றாய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயிற் கடவலுன் தேரை யென்றாள்.

அக மீட்டுமொன் றுரைசெய் வாணீ வீரனேல் விரைவின் மற்றுன்
கூட்டமா மரக்கர் தம்மைக் கொன்றுங்கை முலையு மூக்கும்
வாட்டினார் வனத்தி லுள்ளார் மானிட ரென்ற வார்த்தை
கேட்டுமிம் மாயஞ் செய்த தச்சத்தின் கிளர்ச்சி யன்றே. 3508

அஉ மொழிதரு மளவி னங்கை கேளிது முரணி லாக்கை
இழிதரு மனித ரோடே யான்செரு வெதிர்ப்ப னென்றால்
விழிதரு நெற்றி யான்றன் வெள்ளிவெற் பெடுத்த தோட்குப்
பழிதரு மதனிற் சாலப் பயன்றரும் வஞ்ச மென்றான்.

அங பாவையு மதனைக் கேளாத் தங்குலப் பகைஞர் தம்பாற்
போவது குற்றம் வாளிற் பொருவது நாணம் போலாம்
ஆவது கற்பினாரை வஞ்சிக்கு மாற்ற லேயாம்
ஏவமென் பழிதா னென்னே யிரக்கமி லரக்கர்க் கென்றாள்

அச என்னுமவ் வேலை யின்க ணெங்கடா போவ தெங்கே
நின்னிலென் றிடித்தசொல்லானெருப்பிடைப்பரப்புங்கண்ணன்
மின்னெனவிளங்கும்வீ ரத்துண்டத்தன்மேருவென்னும்
பொன்னெடுங்குன்றம்வானில்வருவதேபோலுமெய்யான்

அரு பாழிவன் கிரிக ளெல்லாம் பறிதெழுந் தொன்றோ டொன்று
பூழியி னுதிர விண்ணிற் புடைத்துகக் கிளர்ந்து பொங்கி
ஆழியு முலகு மொன்றா யழிதர முழுதும் வீசும்
ஊழிவெங் காற்றி தென்ன விருஞ்சிறை யூதை மோத. 3512

அசு *சாகைவன் றலையொடு மரமுந் தாழ்வன
மேகமும் விண்ணின்மீச் செல்ல மீமிசை
மாகவெங் கலுழனும் வருகின் றானென
நாகமும் படமொளித் தொதுங்கி னையவே. 3513

அஎ ஆனையு மாளியு முதல யாவையுங்
கானெடு மரத்தொடு தூறுங் கல்லிவை
மேனிமிர்ந் திருசிறை விசையி னெற்றலால்
வானமுங் கானமு மாறு கொள்ளவே. 3514

அஅ உத்தமன் றேவியை யுலங்கொ டோங்குதேர்
வைத்தனை யேகுவ தெங்கு வாணினோ
டித்தனை திசையும்யா னென்கின் றானெனாப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான். 3515

அகூ வந்தன னெருவையின் மன்னன் மாண்பிலான்
எந்திரத் தேர்செல வொழிக்கு மெண்ணினான்
சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கயிலையை நிகர்க்குங் காட்சியான். 3516

கூ0 *ஆண்டுற் றவணங் கினையஞ் சலெனாத்
தீண்டுற் றிலனென் றுணர்சிந் தையினான்
மூண்டுற் றெழுவெங் கதமுற் றிலனாய்
மீண்டுற் றுரையா டலைமே வினனால். 3517

கூக கெட்டாய் கிளையோ டுநின்வாழ் வையெலாஞ்
சுட்டா யிதுவென் னைதொடங் கினைநீ
பட்டா யெனவே கொடுபத் தினியை
விட்டா லுனையான் விளிகின் றிலனால். 3518

கூஉ பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைந் தனையே கலெடா
ஆதா ரநினைக் கினியா ருளரோ. 3519

கூ௩ உய்யா மன்மலைந் துமரா ருயிர்தான்
மெய்யா கவிரா மன்விருந் திடவே
கையா ரமுகந் துகொடந் தகனார்
ஐயா புதிதுண் டதறிந் திலையோ. 3520

கூச கொடுவெங் கரிகொல் லியவந் ததன்மேல்
விடு முண் டைகடா வவிரும் பினையே
அடுமென் பதுணர்ந் திலையா யினும்வன்
கடுவுண் டுயிரின் னிலைகா ணுதியால். 3521

௯௫ எல்லா வுலகங் களுமிந் திரனும்
அல்லா தவர்மூ வருமந் தகனும்
புல்வாய் புலிகண் டனபோல் வதலால்
வில்லா [1]ளரைவெல் லுமிடுக் கினரோ. 3522

௯௬ இம்மைக் குறவோ டுமிறந் தழியும்
வெம்மைத் தொழிலிங் [2]கிதன்மே லிலையால்
அம்மைக் கருமா நரகந் தருமால்
எம்மைக் கிதமாக விதெண் ணினைநீ. 3523

௯௭ முத்தே வரின்மூ லமுதற் பொருளாம்
அத்தே வரிம்மா னிடரா தலினால்
எத்தே வரொடெண் ணுவதெண் ணமிலாப்
பித்தே றினையா கபிழைத் தனையால். 3524

௯௮ புரம்பற் றியபோர் விடையோ னருளால்
வரம்பெற் றவுமற் றுளவிஞ் சைகளும்
உரம்பெற் றனவா யினுமுண் மையினோர்
சரம்பற் றியசா பம்விடுந் தனையே. 3525

௯௯ வானாள் பவன்மைந் தன்வளந் தவில்லான்
தானே வரினின் றுதடுப் பரிதால்
நானே யிவனுய்ப் பெனிநன் னுதலைப்
போநீ கடிதென் றுபுகன் றிடலும். 3526

௧௦௦ கேட்டா னிருதர்க் கிறைகேழ் கிளர்தன்
வாட்டா ரைநெருப் புகவாய் மடியா
ஓட்டா யினிநீ யுரைசெய் குனரைக்
காட்டாய் கடிதென் றுகதழ்ந் திடலும் 3527

௧௦௧ வரும்புண் டரவா ளியுன்மார் புருவிப்
பெரும்புண் டிறவா வகைபே ருதிநீ
இரும்புண் டநீர்மீ ளினுமென் னுழையிக்
கரும்புண்ட சொன்மீள் கிலள்கா ணுதியால். 3528

௧௦௨ *என்னும் மளவிற் பயமுன்னி னிரட்டி யெய்த
அன்னம் மயர்கின்றது நோக்கி யரக்க னுக்கை
சின்னம் முறுமிப் பொழுதே சிலையேந்தி யெங்கண்
மன்னன் மகன்வந் திலனென் றவருந் தலன்னை. 3529

(பிரதி) 1. ளனைவெல் லமிடுக்; 2. கிதுமே வுதியால்.

க0௩ முத்துக் கனபோன் முகத்தாலி முலைக்கண் வீழ்ந்து
தத்தத் தலையிங் கிவைதால பலத்தி னோனும்
கொத்தப் பனகொண் டிவன்கொண் டனவென்ற வாசை
பத்திற்கு மின்றே பலியீவது பார்த்தி யென்றான். 3530

க0௪ இடிப்பொத்த முழக்கி னிருஞ்சிறை வீசி யெற்றி
முடிப்பத்தி களைப் படியிட்டு முழங்கு துண்டங்
கடிப்பக் கடிதுற்றவன் காண்டகு நீண்ட வீணைக்
கொடிப்பற் றியொடித்துயர் வானவ ராசி கொண்டான்.

க0௫ அக்காலை யரக்க னுருக்கரக் கன்ன கண்ணன்
எக்காலமு மின்னதொ ரீடழி வுற்றி லாதான்
நக்கா னுலகேழு நடுங்கிட நாக மன்ன
கைக்கார் முகத்தோடு கடைப்புரு வங்கு னித்தான். 3532

க0௬ சண்டப் பிறைவா ளெயிற்றான் சரதாரை மாரி
மண்டச் சிறகா லடித்தான் சிலவள் ளுகிராற்
கண்டப் படுத்தான் சிலகாலனுங் காண வுட்குந்
துண்டப் படையாற் சிலதுண்ட துண்டங்கள் கண்டான்.

க0௭ மீட்டு மனுகா நெடுவெங்க ணநந்த நாகம்
வாட்டுங் கலுழ னெனவன்றலை பத்தின் மீதும்
நீட்டுந் நெடுமூக்கெனு நேமியன் சேம விற்கால்
கோட்டும் மளவில் மணிக்குண்டலங் கொண்டெ ழுந்தான். 3534

க0௮ எழுந்தான் றடமார்பினி லேழினொ டேழு வாளி
அழுந்தாது கழன்றிட வெய்தெடுத் தார்த் தரக்கன்
பொழிந்தான் சரமாரிகள் மீளவும் போர்ச் சடாயு
விழுந்தா னெனவிண்ணவ ரஞ்சினர் வெய்து யிர்த்தார்.

க0௯ புண்ணிற் புதுநீர் பொழியப்பொலி புள்ளின் வேந்தன்
மண்ணிற் கரனேமுத லோருதி ரத்தின் வாரி
கண்ணிக் கடலென்று கவர்ந்தது கான்று மீள
விண்ணிற் பொலிகின்றதொர் வெண்ணிற மேக மொத்தான். 3536

கக0 ஒத்தா னுடனே யுயிர்த்தா னுருத்தா னவன்றோள்
பத்தோடு பத்தின் னெடுப்பத்தியிற் றத்தி மூக்கால்
கொத்தா நகத்தாற் குடையாச் சிறையாற் புடையா
முத்தார மார்பிற் கவசத்தையு மூட்ட றுத்தான். 3537

ககக அறுத்தானை யரக்கனு மைம்பதொ டைம்ப தம்பு
செறித்தான் றடமார்பிற் செறித்தலுந் தேவ ரஞ்சி
வெறித்தார் வெறியாமு னிராவணன் வில்லைப் பல்லாற்
பறித்தான் பறவைக்கிறை விண்ணவர் பண்ணை யார்க்க.

ககஉ எல்லிட்ட வெள்ளிக் கயிலைக்கிரி யீச னோடும்
மல்லிட்ட தோளா லெடுத்தான்சிலை வாயின் வாங்கி
வில்லிட் டுயர்ந்த நெடுமேக மெனப்பொ லிந்தான்
சொல்லிட் டவன்றோள்வலி யாருளர் சொல்ல வல்லார்.

ககங மீளா நிறத்தாயிரங் கண்ணவன் விண்ணி னோடை
வாளா லறுத்தான் சிலைவாயிடை நின்று வாங்கித்
தாளா லிறுத்தான் றழல்வண்ணன் றடக்கை வில்லைத்
தோளா லிறுத்தான் றுணைத்தாதைத னன்பிற் றோழன்.

ககச ஞாலம் மெடுப்பான்றன தாற்றலுக்கேற்ற நல்வின்
மூலம் மொடிப்புண்டது கண்டு முனிந்த நெஞ்சன்
ஆலம் மிடற்றான்புர மட்டதொ ரம்பு போலுஞ்
சூலம் மெடுத்தார்த் தெறிந்தான்மறந் தோற்றிலாதான்.

ககரு ஆற்றா னிவனென் றுணராதெனை தாற்றல் காணென்
றேற்றா னெருவைக் கிறை முத்தலை யெஃகை மார்பின்
மேற்றா னிதுசெய்பவ ராரென விண்ணு ளோர்கள்
தோற்றாது நின்றார்தம தோள்புடை கொட்டி யார்த்தார்.

ககசு பொன்னோக்கியர் தம்புல னோக்கிய புன்க ணோரும்
இன்னோக்கிய ரில்வழி யெய்திய நல்வி ருந்துந்
தன்னோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த
மென்னோக்கியர் நோக்கமு மாமென மீண்ட தவ்வேல்.

ககஎ வேகம்முடன் வேலிழந் தான்படை வேறெ டாமுன்
மாகம் மறையும்படி நீண்ட வயங்கு மான்றேர்ப்
பாகன் றலையைப் பறித்துப் படர்கற்பி னாண்மேன்
மோகம் படைத்தான் றலைவெய்த முகத் தெறிந்தான்.

ககஅ எறிந்தா னதுநோக்கி யிராவண னெஞ்சி லாற்றல்
அறிந்தான் முனிந்தாண்டி னோ ராடகத் தண்டு வாங்கிப்
பொறிந்தாங் கெரியின்சிகை பொங்கி யெழப்பு டைத்தான்
மறிந்தா னெருவைக்கிறை மால்வரை போல மண்மேல். 3545

கககூ மண்மேல் விழுந்தான் விழலோடும் வயங்கு மான்றேர்
கண்மே லொளியுந் தொடரா விசையிற் கடாவி
விண்மே லெழுந்தா னெழுமெல்லிய லாளும் வெந்தீப்
புண்மே னுழையத் துடிக்கின்றனள் போற் புரண்டாள். 3546

கஉ0 கொழுந்தேயனை யாள்குழைந்தேங்கியகொள்கைகண்டான்
அழுந்தே லவலத்திடை யஞ்சலை யன்ன மென்று
எழுந்தா னுயிர்த்தா னடவெங் கினிப்போவ தென்று
விழுந்தா னவன்றேர்மிசை விண்ணவர் பண்ணை யார்ப்ப.

கஉக பாய்ந்தா னவன்பன் மணித்தண்டு பறித்தெ றிந்தான்
ஏய்ந்தார் கதிர்த்தேர்ப் பரியெட்டினொ டெட்டு மெஞ்சித்
தீய்ந்தா சறவீசிய திண்டிறற் றண்ட வாளாற்
காய்ந்தான் கவர்ந்தா னுயிர் காலனுங் கைவி திர்த்தான்.

கஉஉ திண்டே ரழித்தாங்கவன் றிண்புறஞ் சேர்ந்த தூணி
விண்டான் மறைப்பச் செறிகின்றன வில்லி லாமை
மண்டா ரமர்தான் வழங்காமையில் வச்சை மாக்கள்
பண்டார மொக்கின்றன பல்லுகி ராற்ப றித்தான். 3549

கஉங [1] மாச்சிச்சிரம் பாய்ந்தவன் மார்பினுந் தோளின் மேலும்
ஓச்சிச் சிறகாற் புடைத்தா னுலையா விழுந்து
மூச்சித்த விரா வணனும் முடிசாய்த் திருந்தான்
போச்சித் தனைபோ லுநின்றாற் றலெனப் புகன்றான்.

கஉச அவ்வே லையினே முனிந்தான் முனிந்தாற்ற லென்ன
வெவ்வே லரக்கன் விடலாம்படை வேறு காணான்
இவ்வே லையிலே யிவனின்னுயி ருண்ப னென்னாச்
செவ்வே பிழையா நெடுவாளுறை தீர்த் தெறிந்தான்.

கஉரு வலியின் றலைதோற்றிலன் மாற்றருந் தெய்வ வாளால்
நலியுந் தலையன்றிது வன்றியும் வாழ்க்கை நாளும்
மெலியுங் கடைசென்றுள வாகலின் விண்ணின் வேந்தன்
குலிசம் மெறியச் சிறையற்றதொர் குன்றின் வீழ்ந்தான். 3552

கஉசு விரிந்தார் சிறைகீழுற வீழ்ந்தனன் மண்ணின் விண்ணோர்
இரிந்தா ரிழுந்தா டுணையென்ன முனிக் கணங்கள்
பரிந்தார் படர்விண்டுவி னொட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தா ரதுநோக்கிய சீதை துணுக்க முற்றாள். 3553

(பிரதி) 1 மாச்சிச்சிரல் பாய்ந்தென.

கஉஎ வெள்கும் மரக்கன் னெடுவிண்புக வார்த்து மிக்கான்
றெள்கின் றலையெய்திய மானெனச் சோர்ந்து நைவாள்
உள்கும் மயங்கு முயிர்க்குமமொரு சார்வு காணாள்
கொள்கொம்பொடியக்கொடிவீழ்ந்ததுபோற் குலைந்தாள்

கஉஅ *வன்றுணை யுளனென வந்த மன்னனும்
பொன்றின னெனக்கினி புகலென் னென்கின்றாள்
இன்றுணை பிரிந்திருந் தின்ன லெய்திய
அன்றிலம் பெடையென வரற்றி னாளரோ. 3555

கஉகூ அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் றோற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினாள். 3556

கந0 நாணிலே னுரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று ளோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த நண்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள். 3557

கநக எல்லியல் விசும்பிடை யிருந்த [1]நேமியாய்
சொல்லிய வறநெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்து நம்பியைப்
புல்லுதி யோவென பொருமி யேங்கினாள். 3558

கநஉ கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையினேன் வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள். 3559

கநந ஏங்குவா டனிமையு மிறகி ழந்தவன்
ஆங்குறு நிலைமையு மரக்க னோக்கினான்
வாங்கினன் றேரிடை வைத்த மண்ணொடும்
வீங்குதோண் [2]மீக்கொடு விண்ணி னேகினான். 3560

கநச விண்ணிடை வெய்யவ னேகும் வேகத்தாற்
கண்ணொடு மனமவை சுழலுங் கற்பினாள்
உண்ணிறை வுணர்வழிந் தொன்று மோர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையு மறந்து சாம்பினாள். 3561

(பிரதி) 1 நேமியான்; 2 மீக்கொண்டு.

௧௫௫ ஏகின னரக்கனு மெருவை வேந்தனும்
மோகவெந் துயர்சிறி தாறி முன்னியே
மாகமே நோக்கினான் வஞ்சன் வல்லையிற்
போகுதல் கண்டகம் புலர்ந்து சொல்லுவான். 3562

௧௫௬ வந்திலர் மைந்தர்தாம் மருகிக் கெய்திய
வெந்துயர் துடைத்தன னென்னு மெய்ப்புகழ்
தந்திலா விதியினார் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலெ னாங்கொலோ. 3563

௧௫௭ வெற்றியா ருளரென்னின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் கிந்நிலை புகுதப் பாலதோ
உற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ. 3564

௧௫௮ பஞ்சணை பாம்பணை யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே யிராம னாதலால்
வெஞ்சின வரக்கனால் வெல்லற் பாலனோ
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயையால். 3565

௧௫௯ வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் சிறுவனே தீண்ட வஞ்சுமால்
ஆரியன் றேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால். 3566

௧௬௦ பரிஞ்சிறை யின்னன பன்னி யுன்னுவான்
அருஞ்சிறை யுற்றன ளாமெனா மனம்
பொருஞ்சிறை யற்றதே பூவை கற்பெனும்
இருஞ்சிறை யறுதென யிடரு நீங்கினான். 3567

௧௬௧ அஞ்சிறை குருதியா லழிந்து சோரவும்
வஞ்சியை மீட்டில னென்னு மானமுஞ்
செஞ்செவே மக்கள்பாற் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றன னுணர்வு நீங்கலான். 3568

௧௬௨ வஞ்சியை யரக்கனும் வல்லை கொண்டுபோய்ச்
செஞ்செவே திருவுருத் தீண்ட வஞ்சுவான்
நஞ்சிய லரக்கியர் நடுவ ணாயிடைச்
சிஞ்சுவா வனத்திடைச் சிறைவைத் தானரோ. 3569

கசங இந்நிலை யிணையவன் செயலி யம்பினோம்
பொன்னிலை மானின்பின் றொடர்ந்து போகிய
மன்னிலை யறிகென மங்கை யேவிய
பின்னவன் றன்னிலை பேசு வாமரோ. 3570

கசச ஒருமக டனிமையை யுன்னி யுள்ளுறும்
பருவரல் மீதிடப் பதைக்கு நெஞ்சினன்
பெருமகன் றனைத்தனி பிரிந்து வெய்துறுந்
திருநகர் செல்லுமப் பரதன் செய்கையான். 3571

கசரு தெண்டிரைக் கலமென விரைவிற் செல்கின்றான்
புண்டரீ கத்தடங் காடு பூத்தொரு
கொண்டல்வந் திழிந்தன்ன கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினான். 3572

கசசு துண்ணெனு மவ்வுரை தொடர்ந்த தோகையும்
பெண்ணெனும் பேதமை மயக்கப் பேதினால்
உண்ணிறை சோருமென் றாச லாடுமக்
கண்ணனு மிளவலைக் கண்ணி னோக்கினான். 3573

கசஎ *புன்சொற்க டந்த பகுவாய ரக்க னுரைபொய்யெ னாது புலர்வாள்
வன்சொற்க டந்த மடமங்கை யேவ நிலைதேர வந்த மருளோ
தன்சொற்க டந்து தளர்கின்ற நெஞ்ச முடையோன் மருங்கு தனியே
என்சொற்க டந்து மனமுந்த ளர்ந்தி விளவீரன் வந்த வியல்பே.

என்றுன்னி யென்னை விதியார்மு டிப்ப தெனவெண்ணி நின்ற விறையைப்
பொன்றுன்னு விற்கை யிளவீரன் வந்து புனைதாளி றைஞ்சு பொழுதின்
மின்றுன்னு நூலின் மணிமார்ப மூந்த விரைவோடு புல்லி யொருகால்
நின்றுன்னி வந்த நிலையென்னை யென்றுநெடியோன விளம்ப நொடிவான்

இல்லாநி லத்தி னிசையாத வெஞ்சொ லெழுவஞ்சி யெவ்வ முறயான்
வல்வாய ரக்க னுரையாகு மென்ன மதியாண்ம றுக்க முறுவாள்
நில்லாது மற்றி தறிபோதி யென்ன நெடியோய் புயத்தின் வலியென்
சொல்லான்ம னத்தி னடையாள்சி னத்தின் முனிவோடு நின்று துவள்வாள்

கருO ஏகாது நிற்றி யெனின்யா னெருப்பி னிடைவீழ்வெ னென்று முடுகா
மாகான கத்தி னிடையோட லோடு மனனஞ்சி வஞ்ச வினையேன்
போகாது நிற்கி லிறவாதி ருக்கை புணராளெ னக்கொ டுணரா
ஆகாதி றக்கை யறனன்றெ னக்கொ டிவண்வந்த தென்ன வமலன்.

கருக சாவாதி ருத்த லிலளான துற்ற தகைதயோ தடுக்க முடியா
தாவாவ லக்க ணுறுவாளு ரைத்த பொருளோவ கத்தி னடையாள்
காவாநி லத்தின் வருமேத மற்ற தொழியாது கைக்கொ டகலப்
போவார்பி ரிக்க முயல்வார்பு ணர்த்த பொருளாமி தென்று தெருளா.

கருஉ வந்தாய்தி றத்தி னுளதன்று குற்ற மடவாண் மறுக்க முறுவாள்
சிந்தாகு லத்தொ டுரைசெய்த செய்கை யதுதீரு மென்று தெளிவாய்
முந்தேத டுக்க வொழியாதெ டுத்த வினையேன்மு டித்த முடிவால்
அந்தோவெ டுத்த தெனவுன்னி யுன்னி யழியாத வுள்ள மழியா.

கருங பாணித்து நின்று பயனுவ தென்னை பயில்பூவை யன்ன குயிலைக்
காணிற்க லந்து துயர்தீரு மன்றி யயலில்லை யென்று கடுகிச்
சேணுற்ற கன்ற நெறியூடு சென்ற சிலைவாளி யன்ன விசைபோய்
ஆணிப்ப சும்பொ னனையாளி ருந்த வவிர்சோலை வல்லை யணுகா

கருச *ஓடி வந்தனர் சாலையுஞ் சோலையு முதவுந்
தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ லாடனைக் காணார்
கூடு தன்னுடை யதுபிரிந் தாருயிர் குறியா
நேடி வந்தது கண்டில ராமென நின்றார். 3581

கருரு கைத்த சிந்தையன் கனங்குழை யணங்கினைக் காணா
துய்த்து வாழ்தற்கு வேறொரு பொருளில னுதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைத்தனர் வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றானையும் போன்றான்.

கருசா மண்சு ழன்றது மால்வரை சுழன்றது மதியோர்
எண்சு ழன்றது சுழன்றதவ் வெறிகட லேழும்
விண்சு ழன்றது வேதமுஞ் சுழன்றது விரிஞ்சன்
கண்சு ழன்றது சுழன்றது கதிரொடு மதியும். 3583

கருஎ அறத்தைச் சீறுங்கொ லருளையே சீறுங்கொ லமரர்
திறத்தைச் சீறுங்கொன் முனிவரைச் சீறுங்கொ றீயோர்
மறத்தைச் சீறுங்கொ லென்கொலோ முடிவென்று மறையின்
திறத்தைச் சீறுங்கொ னெனநெந்தகை யோனெனத் தியங்க 3584

கருஅ நீல மேனிய னெடியவன் மனநிலை திரியா
மூல காரணத் தவனொடு முடிவுற முற்றுங்
கால மாமெனக் கடையிடுங் கணிக்கரும் பொருள்கண்
மேல கீழுறக் கீழன மேலுறும் வேலை. 3585

௧௫௯ தேரி னாழியுந் தெரிந்தனன் தீண்டுத லஞ்சிப்
பாரி னேடுங்கொண் டகன்றதும் பார்த்தனன் பலநின்
றோருந் தன்மையீ தென்னென்ப துரனிலா தவர்போற்
றாரம் போதன்முன் றொடர்துமென் றிளையவன் சொன்னான்.

௧௬௦ ஆம தேயினி யாவதென் றமலனு மெய்யிற்
றாம வார்கணைப் புட்டிலு முதலிய தாங்கி
வாம மால்வரை மாநிலம் படிந்ததே வயவும்
பூமி மேலவன் றேர் சென்ற நெடுநெறி போனார். 3587

௧௬௧ மண்ணின் மேலவன் தேர்சென்ற சுவடெலா மாய்ந்து
விண்ணி னோங்கிய தொருநிலை மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென மனமிகப் புழுங்கி
எண்ணி நாமினிச் செய்வதென் னிளவலே யென்றான். 3588

௧௬௨ தெற்கு நோக்கிய தெனும்பொரு டெரிந்தது திண்டேர்
மற்கு நோக்கிய திரள்புயத் தண்ணலே வானும்
விற்கு நோக்கிய பகழியி னெடிதன்று விம்மி
நிற்க நோக்கியென் பயத்ததென் றிளையவ னேர்ந்தான்.

௧௬௩ ஆகு மன்னதே கருமமென் றத்திசை நோக்கி
ஏகி யோசனை யிரண்டுசென் றாரிடை யெதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல்.

௧௬௪ கண்டு கண்டக ரோடுமக் காரிகை பொருட்டால்
அண்ட ராதிமற் றாரமர் விளைத்ததென் றயிர்த்தான்
துண்ட வாளியிற் சுடர்க்கொடி துணிந்ததென் றுணராப்
புண்ட ரீகக்கண் புனல்வரப் புரவலன் புகன்றான்.

௧௬௫ நோக்கி னனைய நொய்தின்வந் தெய்திய நுந்தை
மூக்கி னலிது முறிந்தமை முடிந்ததால் மொய்ம்பிற்
றாக்கி னனடு வடுத்தது தெரிகிலந் தமியன்
யாக்கை தேம்பிட வெண்ணரும் பருவங்க ளிறந்தான்.

௧௬௬ நன்று சாலவு நடுக்கரு மிடுக்கின னாமுஞ்
சென்று கூடலாம் பொழுதெலாந் தடுப்பது திடனால்
வென்று மீட்கினு மீட்குமால் வேறுற வெண்ணி
நின்று தாழ்ந்தொரு பயனிலை யென்றனு நெடியோன்.

கசுஎ தொடர்வ தேநல மாமெனப் படிமிசை சுற்றிப்
படரும் காலெனக் கறங்கெனச் செல்பவர் பார்த்தார்
மிடல்கொள் வெஞ்சிலை விண்ணிடு வின்முறிந் தென்னக்
கடலின் மாடுயர் கரையெனக் கிடந்தது கண்டான்.

கசுஅ சிலைகி டந்ததா விலக்குவ தேவர்நீர் கடைந்த
மலைகி டந்தன்ன வலியவேல் வடிவினான் மதியின்
கலைகி டந்தன்ன காட்சியி னிதுகடித் தொடித்தான்
நிலைகி டந்தவா நோக்கென நோக்கின னின்றான். 3595

கசுகூ நின்று பின்னரு நெடுநெறி கடந்துற நிமிரச்
சென்று நோக்கினர் திரிசிகைக் கதிர்நெடுஞ் சூலம்
ஒன்றும் பல்கணை மழையுறை புட்டிலோ டிரண்டுங்
குன்று போல்வன கிடந்தகண் டதிசயங் கொண்டார்.

கஎ0 மறித்துஞ் சென்றனர் வானிடை வயங்குற வழங்கி
எறிக்குஞ் சோதிகள் யாவையுந் தொக்கன வெனலாய்
நெறிக்கொள் கானக மறைதர நிருதர்கோ னெஞ்சிற்
பறித்து வீசிய கவசமுங் கிடந்தது பார்த்தார். 3597

கஎக கான் கிடந்தது மறைதரக் கால்வயக் கலிமாத்
தான் கிடந்துழிச் சாரதி கிடந்துழிச் சார்ந்தார்
ஊன் கிடந்தொளி ருதிரமுங் கிடந்துள துலகின்
வான் கிடந்தது போல்வது கிடந்துழி வந்தார். 3598

கஎஉ கண்ட லங்குதங் கைத்தலம் விதிர்த்தனர் கவினார்
விண்ட லந்துறந் திறுதியின் விரிகதிர்ப் பருதி
மண்ட லம்பல மண்மிசைக் கிடந்தென மணியின்
குண்ட லம்பல குலமணிப் பூண்களின் குப்பை. 3599

கஎ௩ தோள ணிக்குலம் பலவுள குண்டலத் தொகுதி
வாளி மைப்பன பலவுள மணிமுடி பலவால்
நாள னைத்தையுங் கடந்தனன் றமியனந் தாதை
யாளி [1]போல்பவர் பலருளர் பொருதன ரிளையோய். 3600

கஎச திருவி னாயக னுரைசெயச் சுமித்திரை சிங்கந்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றாற்
பொருது தாதையை யித்தனை நெறிகொடு போனான்
ஒருவ னேயவ னிராவண னாமென வுரைத்தான். 3601

(பிரதி) 1 யொப்பவர்.

கஎரு மடலு ளூட்டிய தாரிளை யோன்சொலை மதியா
மிடலு ளூட்டங்க டீயுக நோக்கினன் விரைவான்
உடலு ளூட்டிய குருதியம் பரவையி னும்பர்க்
கடலு ளூட்டிய மலையன்ன தாதையைக் கண்டான்.

கஎசு துள்ளி யோங்குசெந் தாமரைக் [1]கண்கணீர் சொரியத்
தள்ளி யோங்கிய வமலன்றன் றனியுயிர்த் தந்தை
வள்ளி யோன்றிரு மேனியின் மழைநிற வண்ணன்
வெள்ளி யோங்கலி லஞ்சன மலையென வீழ்ந்தான்.

கஎஎ உயிர்த்தி லன்னொரு நாழிகை யுணர்விலன் கொல்லென்
றயிர்த்த தம்பிபுக் கங்கையி னெடுத்தன னருவிப்
புயற்க லந்தநீர் தெளித்தலும் புண்டரீ கக்கண்
பெயர்த்து டன்பைய வயர்வுதீர்ந் தினையன பேசும். 3604

கஎஅ *தந்தா தையரைத் தனையர் கொலை சூழ்ந்தார்
முந்தாரே யுள்ளார் முடிந்தானே முன்னொருவன்
எந்தாயே யெற்காக நீயு [2]மிறந்தனையோ
அந்தோ வினையே னருங்கூற்ற மானேனே. 3605

கஎகூ பின்னுறவ தோராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன்னுறவ தீர்ப்பான் றனியுறவ தோராதேன்
உன்னுறவு [3]தீர்ந்தா யொருறவு மில்லாதேன்
என்னுறவான் வேண்டி யிடருறுவே [4]னெந்தாயே. 3606

கஅ0 மாண்டானே யன்றோ மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரத மதனா னுயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றொழிந்தேன் புன்றொழிலேன்
வேண்டேனிம் மாமாயப் புன்பிறவி [5]வேண்டேனே. 3607

கஅக என்றாரம் பற்றுண்ண வேன்றாயைச் சான்றாயைக்
கொன்றானு நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்றாட் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போ னின்றேனே. 3608

கஅஉ சொல்லுடையா ரென்போ ரினியுளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப்
பல்லுடையா னுன்னைப் படையுடையான் கொன்றேக
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லேனே.

(பிரதி) 1 நயனங்கள்; 2 மிறந்தனையால்; 3 தீர்ந்தாயோ வோருறவு; 4 னெந்தாயோ; 5 வேண்டேனால்.

கஅங அன்ன பலபலவும் பன்னியழு மயங்குந்
தன்னே ரிலாதானுந் தம்பியுமத் தன்மையனாய்
முன்னே யுணர்வுசிறி துண்முளைப்பப் புள்ளரசன்
இன்னுயிர்ப் பாறொத்தா னிருவரையு நோக்கினான். 3610

கஅச உற்ற துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவரைக் கண்டான் றன்னுள்ளங் குளிர்ப்புற்றான்
இற்ற விருசிறகு மேழுலகு மின்னுயிரும்
பெற்றனனே யொத்தான் பெயர்த்தேன் பழியென்றான்.

கஅரு பாக்கியத்தா லின்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வாருமென்று
தாக்கி யரக்கன் மகுடத் தலைதகர்த்த
மூக்கினா லுச்சி முறைமுறையான் மோக்கின்றான். 3612

கஅசா வஞ்சனையால் வந்த வரவென்ப தென்னுடைய
1 நெஞ்சகமே முன்னே நினைவித்த தானாலும்
அஞ்சொன் மயிலை யருந்ததியை நீங்கினிரோ
எஞ்சலிலா வாற்ற லிருவீரு மென்றுரைத்தான். 3613

கஅஎ *என்றவ னியம்பலு மிளைய கோமகன்
ஒன்றுமாண் டுறுபொரு ளொழிவுறா வகை
வன்றிறல் மாயமான் வந்த தாதியாய்
நின்றது நிகழ்ந்தது நிகழ்த்தி னானரோ. 3614

கஅஅ ஆற்றலா னவ்வுரை பகர வானையால்
ஏற்றுணர்ந் தெண்ணிய வெருவை வேந்தனும்
மாற்றருந் துயரிவர் மனக்கொ ளாவகை
தேற்றுத னன்றென வினைய செப்பினான். 3615

கஅகூ அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவலி யென்பதே மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ. 3616

ககூ௦ தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
எரிவுசெய் தொழியுமீ திழுதை நீரதால்
பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியினார்க் கரிதுண் டாகுமோ. 3617

(பிரதி) 1 நெஞ்சமே முன்ன.

கககக அலக்கணு மின்பமு மணுகு நாளவை
விலக்குவ மென்பது மெய்யிற் றூகுமோ
இலக்கமுப் புறங்களே யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ. 3618

ககசஉ பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீக்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால். 3619

கககூ அந்தரம் வருதலு மனைய தீர்தலுஞ்
சுந்தரத் தோளினிர் தொன்மை யாதலால்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
இந்திர னுற்றன வெண்ண வொண்ணுமோ. 3620

ககசச தடைக்கரும் பெருவலிச் சம்பரப் பெயர்க்
கடைத்தொழி லவுணனுற் குலிசக் கையினன்
படைத்தனன் பழியது பகழி வில்லின்வாய்த்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினால். 3621

ககசரு *பிள்ளைச்சொற் கிளியி னளைப் [1] பிரிவுற லுற்றபெற்றி
தள்ளுற்ற வறமுந் தேவர் துயரமுந் தந்த தேயாற்
கள்ளப் போரரகக ரென்னுங் களைகளைக் களைந்து வாழ்தி
புள்ளுக்கும் [2] புலனில் பேய்க்குந் தாயன்ன புலவு வேலோய். 3622

ககசசா வடுக்கண்வார் கூந்த லாளை யிராவணன் மண்ணி னேடும்
எடுத்தன னேகு வானை யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னவ னெல்லாந் தவத்தவன் [3] தந்த வாளால்
படுத்தன னிங்கு வீழ்ந்தே னிதுவின்று பட்ட தென்றான். 3623

ககசஎ கூறின மாற்றஞ் சென்று செவித்தலங் குறுகா முன்னம்
ஊறின வுதிரஞ் செங்க ணுயிர்த்தன வுயிர்ப்பச் செந்தீ
ஏறின புருவ மென்மே லிழந்தன சுடர்க ளெங்கும்
கீறின தண்ட கோளங் கிழிந்தன கிரிக ளெல்லாம். 3624

ககசஅ மண்ணகந் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன் புனலுங் காலுங் கதிரொடுந் திரியக் காவல்
விண்ணகந் திரிய மேலை விரிஞ்சனுந் திரிய வீரன்
எண்ணரும் பொருள்க ளெல்லா மென்பது தெரிந்த தன்றே.

(பிரதி) 1 பிரிவுறப் பெற்ற பெற்றி; 2 புலம்பு; 3 சமைத்த.

ககூக குறித்தவெங் கோபம் யார்மேற் கொள்ளுறுங் கொல்லென் றஞ்சி
வெறித்துநின் றுலக மெல்லாம் விம்முறு கின்ற வேலை
பொறிப்பிதிர் படலைச் செந்தீப் புகையொடும் பொடிப்பப் பொம்
றெறிப்பதோர் முறுவ றோன்ற விராமனு மியம்ப லுற்றான்.[மென்

உ00 பெண்டனி யொருத்தி தன்னைப் பேதைவா ளரக்கன் பற்றிக்
கொண்டன னேக நீயிக் கோளுறக் குலுங்கல் செல்லா
எண்டிசை யிறுதி யான வுலகங்க ளிவற்றை யின்னே
கண்டவா னவர்க ளோடுங் களையுமா றின்று காண்டி.

உ0க தாரகை யுதிரு மாறுந் தனிக்கதிர் பிதிரு மாறும்
போகல் வான மெல்லாம் பிறங்கெரி பிறக்கு மாறும்
நீரொடு நிலனு மற்று நின்றவுங் கிடந்த யாவும்
வேரொடு மடியு மாறும் விண்ணவர் விளியு மாறும்.

உ0உ இக்கண மொன்றி னின்ற வேழினோ டேழு சான்ற
மிக்கன போன்று தோன்று முலகங்கள் வீயு மாறுந்
திக்குடை யண்ட கோளந் திறக்கவுந் தெரித்த நீரின்
மொக்குளி னுடையு மாறுங் காணென முனித லோடும்.

உ0ங வெஞ்சுடர்க் கடவுண் மீண்டு மேருவின் மறைய லுற்றான்
எஞ்சலி றிசையி னின்ற யானையு மிரியல் போன
துஞ்சின துலக மெல்லா [1] மென்பதென் றுணிந்த நெஞ்சன்
அஞ்சின னிளைய கோவு மயலுளோர்க் கவதி யுண்டோ.

உ0ச இவ்வழி நிகழும் வேலை யெருவையர்க் கரசன் யாதுஞ்
செவ்வியோய் முனியல் வாழி தேவரு முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்னால் வெல்லுமென் றேமுற் றுய்வார்
எவ்வலி கொண்டு வெல்வா ரிராவணன் செயலை யென்னா.

உ0ரு நாட்செய்த கமலத் தண்ண லல்கின னவையி னாற்றல்
தோட்செய்த வீர மென்னிற் கண்டனை சொல்லு முண்டோ
தாட்செய்த நளினத தோனே முதலினர் தலைபத் தோனுக்
காட்செய்கின் றார்க ளன்றி யறஞ்செய்கின் றார்கள் யாரே. 3632

உ0சா தெண்டிரை யுலகந் தன்னுட் செறுநர்மாட் டேவல் செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றோ யிதுவன்றோ தேவர் பெற்றி
பண்டுல களந்தோன் றந்த பாற்கட லமுதம் வாய்க்கொண்
டுண்டில ராகி லிந்நா ளன்னவர்க் குய்த லுண்டோ. 3633

(பிரதி) 1 மென்பது.

உ0எ வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி பூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவிற் செங்கை யையன்மீ ராயுங் காலை
உம்பிழை யென்ப தல்லா லுலகஞ்செய் பிழையு முண்டோ. 3634

உ0அ ஆதலால் முனிவா யல்லை யருந்ததி யனைய கற்பின்
காதலா டுயர நீக்கித் தேவர்தங் கருத்து முற்றி
வேதநூன் முறையின் யாவும் விதியுளி நிறுவி வேறுந்
தீதுள துடைத்தி யென்றான் தேவர்தம் முலகஞ் சேர்வான். 3635

உ0கூ புயனிற வண்ண னண்டப் புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னச் சிந்தையிற் றாங்கி நின்றான்
அயலினி முனிவ தென்னை யரக்கர்தம் வருக்கந் தீர்க்குஞ்
செயலினிச் செயலென் றெண்ணிக் கண்ணிய சீற்றந் தீர்ந்தான்.

உக0 ஆயபின் னமலன் றானு மரசநீ யமைதி யென்ன
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலு முண்டோ
போயதவ் வரக்க னெங்கே புகலெனப் புள்ளின் வேந்தன்
ஓய்வின னுணர்வு தேய வுரைத்தில னுயிருந் தீர்ந்தான்.

உகக சீதங்கொண் மலரு ளோனுந் தேவரு மென்ப தென்னே
வேதங்கள் காண்கி லாதான் வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கணணிற் பார்த்தான் படிவங்க ணெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும் போக்கிலா வுலகம் புக்கான்.

உகஉ வீடவ னெய்தும் வேலை விரிஞ்சனே முதல மேலோர்
ஆடவர்க் கரச னோடுந் தம்பியு மழுது சோர்ந்தார்
காடமர் மரமும் புல்லுங் கற்களுங் கரைந்து சாய்ந்த
சேடரும் பாரு ளோருங் கரஞ்சிரஞ் சேர்த்தா ரன்றே.

உகங அறந்தலை நின்றிலாத [1] வாதனி னுண்மை வீந்தேன்
துறந்தனன் றவஞ்செய் கேனோ அறப்பனோ யுயிரைச் சொல்லாய்
பிறந்தனன் பெற்று நின்ற பெற்றியாற் பெற்ற தாதை
இறந்தன னிருந்து ளேனோ னென்செய்கே னிளவ லென்றான்.

உகச என்றலு மிளைய கோவு மிராமனை யிறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் றன்மை யிவன்முதல் விளைந்த தன்றோ
நின்றினி நினைவ தென்னே நெருக்கிய வரக்கர் தம்மைக்
கொன்றபி னன்றோ வெய்ய கொடுந்துயர் குளிப்ப தென்றான்.

(பிரதி) 1 வாதனேன்.

உகரு எந்தைநீ யியம்பிற் றென்னே யெளிமைய னாகி யேழைச்
சந்தவார் குழலி னாளைத் துறந்தனை தணிதி யேனும்
உந்தையை யுயிர்கொண் டோனை யுயிர் கொள்ளு மூற்ற மில்லாச்
சிந்தையை யாகி நின்று செய்தவஞ் செய்கை யென்றான். 3642

உகசு அவ்வழி யிளவல் கூற வறிவனு மயர்வு நீங்கி
இவ்வழி யினைய வெண்ண லேழைமைப் பால தென்றா
வெவ்வழி பொழியுங் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை
செவ்வழி யுரிமை யானே திருத்துவன் சிறுவ வென்றான்.

உகஎ இந்தன மினைய வென்னக் காரகி லீட்டத் தோடுஞ்
சந்தனங் குவித்து வேண்டுந் தருப்பையுந் திருத்திப் பூவுஞ்
சிந்தினன் மணலின் வெந்நீத் தருககடைந் தியற்றித் தெண்ணீர்
தந்தனன் றாதை தன்னைத தடக்கைமீ தெடுததுச் சார்வான்.

உகஅ ஏந்தின னிருகை தன்னா லேற்றின னீமந் தன்மேற்
சாந்தொடு மலரு நீருஞ் சொரிந்தனன் றலையின் வைத்து
காந்தெரி கனல மூட்டிக் கடன்முறை கடவா வண்ணம்
நேர்ந்தன னிரம்பு நன்னூான் மந்திர நெறியின் வல்லான்.

உகக தளிர்த்தன கிளர்ந்த பச்சைத் தாமரைக் கொழுவுஞ் செம்பூத்
துளித்தன வினைய வெனனத் துள்ளிசேர் வெள்ளக் கண்ணான்
குளித்தனன் கொண்ட லாற்றிற் குளித்தபின் கொண்ட[1] நன்னீர்
அளித்தன னரக்கர்ச் செற்ற சீற்றத்தா னவலந் தீர்ப்பான். 3646

உஉ௦ மீட்டினி யுரைப்ப தென்னே விரிஞ்சனே முதல மேல்கீழ்
காட்டிய வுயிர்க ளெல்லா மருந்தின களித்த போலாம்
பூட்டிய கைக ளாலப் புள்ளினுக் கரசைக் கொள்கென்
றாட்டிய நன்னீ ரைய னுண்டநீ ரொத்த தன்றே. 3647

உஉக பல்வகைத் துறையும வேதப் பலிக்கடன் பலவு முற்றி
வில்வகைக் குமர னின்ற வேலையின் வேலை சார்ந்தான்
றொல்வகைக் குலத்தின் வந்தான் றன்பத்தாற் புனலுந் தோய்ந்து
செல்வகைக் குரிய வெல்லாஞ் செய்குவா னென்ன வெய்யோன்.

சடாயு மோட்சப் படலம் முற்றும்.

(பிரதி) 1 னன்னீர்.

கச. அயோமுகி மூக்கரி படலம்

க அந்திவந் தணுகும் வேலை யவ்வழி யவரு நீங்கிச்
சிந்துரச் செந்தீக் காட்டோர் மைவரைச் சேக்கை சேர்ந்தார்
இந்திரற் கடங்கல் செல்லா விராக்கத ரெழுந்த தென்ன
வெந்துயர்க் கூற்ற மான விரியிருள் வீங்கிற் றன்றே. 3649

உ தேனுக வருவி சிந்தித் தெருமர லுறுவ போலக்
கானமு மலையு மெல்லாங் கண்ணினீ ருகுக்கும் காலை
மானமுஞ் சினமுந் தாதை மரணமு மைந்தர் சிந்தை
ஞானமுந் துயருந் தம்முண் மலிந்தன நலிந்த [1] வன்றே.

ந மெய்யுற வறிவு செல்லா வறிவினை வினையி னூங்கு
பொய்யுறு பிறவி போலப் போக்கரும் பொங்கு கங்குல்
நெய்யுறு நெருப்பின் மான நிமிர்தர வுயிர்ப்பு நீளக்
கையற வுறுகின் றாராற் காணலாங் கரையிற் றன்றோ.

ச யாமது தெரித றேற்றா மின்னனைச் சனகி யென்னுங்
காமரு திருவை நீத்தோ முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல் வீரன் கண்ணெனத் தெரிந்த செய்ய
தாமரை கங்குற் போதுங் குவிந்திலாத் தன்மை யென்னோ.

ரு பெண்ணியற் றீப மன்ன பேரெழி லாட்டி மாட்டு
நண்ணிய பிரிவு செய்த நவையினுர் வங்கொல் சிந்தை
எண்ணிய தறித றேற்று மிமைப்பில விராம னென்னும்
புண்ணியன் கண்ணும் வன்றோட் டம்பிகண் போன்ற தன்றே.

சு வண்டுளர் கோதைச் சீதை வாண்முகம் போல வானிற்
கண்டன னென்ன வீரற் காண்டொரு காதல் காட்டத்
தண்டமிழ்த தென்ற லென்னுங் கோளரா தழுவுஞ் சாரல்
விண்டலம் விளக்குஞ் செவ்வி வெண்மதி விரிந்த தன்றே.

எ களியுடை யனங்கக் கள்வன் கரந்துறை கங்குற் காலம்
வெளிபடுத் துலக மெல்லாம் விளக்கிய நிலவின் வெள்ள
நளியிருட் பிழம்பென் றீண்டு நஞ்சொடு கலந்த நாகத்
துளையெயிற் றூற லுற்ற வாலெனச் சுட்ட வன்றே.3655

அ இடம்படு மானந் துன்ப மிருடர [2] வெண்ணந் தீர்ந்தான்
விடம்பரந் தனைய தாய வெண்ணிலா வெதுப்ப வீரன்
படம்பரந் தனைய வல்குற் பால்பரந் தனைய தீஞ்சொற்
றடம்பெருங் கண்ணி னுடன் றனிமையை நினையலுற்றான் 3656

(பிரதி) 1 தன்றே ; 2 வெண்ணறீர்ந்தான்.

௯ *மடித்த வாயன் வயங்கு முயிர்ப்பினன்
துடித்து வீங்கி யொடுங்குறு தோளினன்
பொடித்த தண்டளிர்ப் பூவொடு மால்கரி
ஒடித்த கொம்பனை யாடிறத் துன்னுவான். 3657

௧௦ வாங்கு வில்லன் வரும்வரு மென்றிரு
பாங்கி னீணெறி பார்த்தனை யோவெனும்
வீங்கு வேலை விரிதிரை யாமென
ஓங்கி யோங்கி யொடுங்கு முயிர்ப்பினான். 3658

௧௧ தன்னி னேந்தில ளென்பது சாலுமோ
மின்னி னேந்த வெயிற்றின் விலங்கனான்
நின்னி லென்று நெருக்கிய போதவண்
என்னி னேந்த னளோவென வெண்ணுமால். 3659

௧௨ நஞ்சு காலு நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயின் மதியென மட்குவாள்
வெஞ்சி னஞ்செ யரக்கர்தம் வெம்மையை
அஞ்சி னன்கொலென் றையுறு மாலென்பான். 3660

௧௩ பூண்ட மானமும் போக்கருங் காதலுந்
தூண்ட நின்றிடை தோமுறு மாருயிர்
மீண்டு மீண்டு வெதுப்ப வெதும்பினான்
வேண்டு மோவெனக் கின்னமும் வில்லென்பான். 3661

௧௪ வில்லை நோக்கி நகுமிக வீங்குதோட்
கல்லை நோக்கி நகுங்கடைக் கால்வருஞ்
சொல்லை நோக்கித் துணுக்குறுந் தொன்மறை
எல்லை நோக்கினர் யாவரு நோக்குவான். 3662

௧௫ கூதிர் வாடைவெங் கூற்றினை நோக்கினான்
வேத வேள்வி விதிமுறை மேவிய
சீதை யென்வயிற் றீர்ந்தன ளோவெனும்
போதகம் மெனப் பொம்மெ னுயிர்ப்பினான். 3663

௧௬ நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என்று ணைக்குல மங்கையொ ரேந்திழை
தன்று ணைக்குந் தகைப்பில தாயினேன்
நன்று நன்றென் வலியென நாணுமால். 3664

கஎ தேயுந் தம்பி திருத்திய தண்டளிர்
தீயு மங்கவை தீய்தலுஞ் செவ்விருந்
தாயு மாவியு நெஞ்சு மழுங்கிட
ஓயுமோயு முயிர்க்கு முயிர்க்குமே. 3665

கஅ பிரிந்த பேதங்கொல் பேரபி மானங்கொல்
தெரிந்த தில்லை திருமலர்க் கண்ணிமை
பொருந்த வாயிரங் கற்பங்கள் போக்குவான்
இருந்து கண்டிலன் கங்குலி னீறரோ. 3666

க௯ வென்றி வேற்கை யிளவலை மேலெலாம்
ஒன்று போல வுலப்பில நாட்கடான்
நின்று காண்டியன் றேநெடுங் கங்குறான்
இன்று நீள்வதற் கேதுவென் னென்னுமால். 3667

உ0 நீண்ட மாலை மதியினை நித்தலும்
மீண்டு மீண்டு மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாண்முகம் போதலால்
ஈண்டு சால விளங்கினை யென்னுமால். 3668

உக சுட்ட கங்கு னெடிதெனச் சோர்கின்றான்
முட்டி மூந்த நெடுமுடக் கோனொடுங்
கட்ட வாளரக் கன்கதி ரோனையும்
இட்ட னன்கொ லிருஞ்சிறை யென்னுமால். 3669

உஉ நீணி லாவி னிசைநிறை தன்குலத்
தாணி யாய பழிவர வன்னது
நாணி நாடு கடந்தன னுங்கொலோ
சேணு லாந்தனித் தேரவ னென்னுமால். 3670

உ௩ துடியி னேரிடை [1] தோன்றல ளாமெனிற்
கடிய காரிருட் கங்குலின் கற்பம்போய்
முடியு மாகின் முடியுமிம் மூரிநீர்
நெடிய மாநில மென்ன நினைக்குமால். 3671

உச திறத்தி னாதன செய்தவத் தோருற
ஒறுத்து ஞாலத் [2] துயிர்தமை யுண்டுமுன்
மறத்தி னார்கள் வலிந்தனர் வாழ்வரேல்
அறத்தி னாலினி யாவதென் னென்னுமால். 3672

(பிரதி) 1 தோன்றுவ; 2 துயிர்தனை.

உரு தேனின் றெய்வத் திருநெடு நாண்சிலைப்
பூநின் றெய்யும் பொருகணை வீரனும்
மேனின் றெய்ய விமலனை நோக்கினான்
தானின் றெய்ய கிலான்தடு மாறினான். 3673

உசு உழந்த யோகத் தொருமுதல் கோபத்தால்
இழந்த மேனியு மெண்ணி யிரங்குவான்
அழுந்து வன்றுய ராமென வஞ்சினான்
பழந்து யர்க்குப் பரிவுறும் பான்மையான். 3674

உஎ நீல மான நிறத்த னிணைந்திடை
சூல மாகத் தொலைவுறும் வேலையின்
மூல மாமலர் முன்னவன் முற்றுறுங்
கால மாமெனக் கங்குல் கழிந்ததே. 3675

உஅ * வெள்ளஞ் சிலம்பும் பாற்கடலின் விரும்புந் துயிலை வெறுத்தளியுங்
கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதை கற்பின் கடலிற் படிவாற்குப்
புள்ளுஞ் சிலம்பும் பொழில்சிலம்பும் புனலுஞ் சிலம்பும் புனைகோலம்
உள்ளுஞ் சிலம்புஞ் சிலம்பாவா லுயிருண் டாகும் வகையுண்டோ.

உகூ மயிலும் பெடையு முடன்றிரிய மானுங் கலையு மருவிவரப்
பயிலும் பிடியுங் கடகளிறும் வருவ திரிவ பார்க்கின்றான்
குயிலுங் கரும்பும் பெருந்தேனும் குழலும் யாழுங் கொழும்பாகும்
அயிலு மமுதுஞ் சுவைதீர்த்த மொழியைப் பிரிந்தா னழியானோ.

௩0 முடிநாட் டியகோட் டுதயத்தின் முற்ற முற்று முதுகங்குல்
விடிநாட் கண்டு கிளிமிழற்று மென்சொற் கேளா வீரற்காண்
டடிநாட் பைந்தா மரையோங்கு மன்ன மிவளால் யானடைத்த
கடிநாட் கமலத் தாட்டிறந்து காட்டு வான்போற் கதிர்வெய்யோன்.

பொழிலை நோக்கும் பொழிலுறையும் புள்ளை நோக்கும் பூங்கொம்பின்
எழிலை நோக்கு மிளமயிலி னியலை நோக்கு மியல்பாளன்
குழலை நோக்கிக் கொங்கையிணைக் குவட்டை நோக்கி யக்குவட்டின்
தொழிலை நோக்கித் தன்னுடைய தோளை நோக்கி நாள்கழிப்பான்.

௩௨ அன்ன காலை யிளவீர னடியின் வணங்கி நெடியோயப்
பொன்னை நாடா நீண்டிருத்தல் பொருளோ வென்னப் புகழோனுஞ்
சொன்ன வரக்க னிருக்குமிடந் துருவி யறிந்து தொடர்துமென
மின்னுஞ் சிலையார் மலைதொடர்ந்த வெயில்வெங் கானம் போயினரால்.

௩௩ *ஆசை சுமந்த நெடுங்கரி யன்னார்
பாசிலை துன்று வனம்பல பின்னாக்
காசறு குன்றினொ டாறு கடந்தார்
ஓசனை யொன்பதொ டொன்பது சென்றார். 3681

௩௪ மட்படி செய்த தவத்தினின் வந்த
கட்படி கோதையை நாடினர் காணார்
உட்படி கோப முயிர்ப்பொடு பொங்கப்
புட்படி யுங்குளிர் வார்பொழில் புக்கார். 3682

௩௫ ஆரியர் சிந்தை யலக்க ணறிந்தான்
நாரியை யெங்கணு நாடின னாடிப்
பேருல கெங்கு முழன்றனன் பின்னா
மேருவின் வெங்கதி ரோனு[1]ம் விரைந்தான். 3683

௩௬ அரண்டரு குஞ்செறி யஞ்சன புஞ்ச
முரண்டன பேருல கெங்கணு முந்தித்
தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாதிர மெட்டு மிரண்டும். 3684

௩௭ இளிக்கறை யுஞ்சொ லியைந்தன பூவை
கிளிக்கறை யுங்கிளர் கிஞ்சுக வேலி
ஒளிக்கறை மண்டில மொத்துள தங்கோர்
பளிக்கறை கண்டதில் வைகல் பயின்றார் 3685

௩௮ அவ்விடை யெய்திய வண்ண லிராமன்
வெவ்விடை போலிள வீரனை வீரா
இவ்விடை நாடினன் னீர்கொணர் கென்றான்
தெவ்விடை வில்லவ னுந்தனி சென்றான். 3686

௩௯ எங்கணு நாடினன் னீரிடை காணான்
சிங்க மெனத்தமி யன்றிரி வானை
அங்கவ னத்தி லயோமுகி யென்பாள்
வெங்க ணரக்கி விரும்பினள் கண்டாள். 3687

௪0 நன்மதி யோர்புகல் மந்திர நாமச்
சொன்மதி யாவர விற்றொடர் கிற்பாள்
தன்மத னோடுதன் வெம்மை தணிந்தாள்
மன்மத னுமிவ னென்னு மனத்தாள். 3688

(பிரதி) 1 மறைந்தான்.

ச௧ அழுந்திய சிந்தைய ளாகிய லக்கண்
எழுந்தன காத லெழுத்தனி நின்றாள்
புழுங்குறு நோய்கொடு புல்லுவ னென்கோ
விழுங்கு வனோவென வெம்மை யுழந்தாள். 3689

ச௨ இரந்தன னெய்திய போதியை யாது
கரந்தன னென்னிற் கொண்டு[1]க டந்தென்
உரந்தனில் மேவி யுயங்குவ னென்று
விரைந்தனள் வந்தன டயெனும் வெய்யாள். 3690

ச௩ உயிர்ப்பு நெருப்புமிழ் கின்றன போன்ற
எயிற்றின் மலைக்குல மெண்ணில துண்ணும்
வயிற்றள் வலக்கொடு மாசுணம் வீசுங்
கயிற்றி னிரைத்த முலைக்குழி கண்ணாள். 3691

ச௪ பற்றிய கோளரி யாளி பணிக்கட்
டெற்றிய பாத சிலம்பு சிலம்ப
எற்றிய யாவையும் வீவுறு மந்நாண்
முற்றிய ஞாயிறு போல முகத்தாள். 3692

ச௫ ஆழி வறக்க முகக்க வமைத்த
மூழை யெனப்பொலி மொய்பில வாயாள்
கூழை புறத்து வரிந்ததொர் கொட்பால்
ஊழி நெருப்பி னுருத்தனை யொப்பாள். 3693

ச௬ தடிதட விப்பல தலைதழு வித்தாள்
நெடிதடை யக்குடர் கெழுவு நிணத்தாள்
அடிதட வப்பட வரவ மிசைக்குங்
கடிதட மொத்தவ ளுருமு கறிப்பாள் 3694

ச௭ இவர் பிறை யொப்பன வெளின திறிப்பாம்
அவைகன லக்கடி கழலு மெயிற்றாள்
குவைகுலை யக்கடல் குமிற வுரைப்பாள்
நவையில் புவித்திரு நாண நடப்பாள். 3695

ச௮ நீளர வச்சரி தாழ்கை நிரைத்தாள்
ஆளிவ யப்புலி யார மணைத்தாள்
தாளரி யைப்பல தாலி யிசைத்தாள்
கோளரி யைக்கொடு தாழ்குழை யிட்டாள். 3696

(பிரதி) 1 நடந்தென்.

௪௯ நின்றன ளாசையி னீர்கலு ழுங்கண்
குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்
மின்றிரி கின்ற வெயிற்றின் விளக்காற்
கன்றிரு ளூற்றிரி கோளரி கண்டான். 3697

௫௰ பண்டையி னாசி யிழந்து பதைக்குந்
திண்டிற லாளொடு தாடகை சீராள்
கண்டக ராய வரக்கர் கணத்தோர்
ஒண்டொடி யாமிவ ளென்ப துணர்ந்தான். 3698

௫௧ பாவிய ராமிவர் பண்பிலர் நண்பால்
மேவிய காரணம் வேறிலை யென்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவளை ஐயுரை செய்கடி தென்றான். 3699

௫௨ பேசின னங்கவள் பேச்சுற நாணு
ஊசலி ழுந்தழி சிந்தையி னோடு
நேசமி லன்பில னாயினு நின்பால்
ஆசையின் வந்த வயோமுகி யென்றாள். 3700

௫௩ பின்னுமு ரைத்தனள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடாமுலை யோடுன்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயி ரைக்கடி தீகுதி யென்றாள். 3701

௫௪ ஆறிய சிந்தைய ளஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
[1] மாறில வார்கணை யிவ்வுரை வாயிற்
கூறிடி னின்னுடல் கூறிடு மென்றான். 3702

௫௫ மற்றவ ளவ்வுரை செப்ப மனத்தாற்
செற்றிலள் கைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நீயெனை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடி னின்று பிழைத்தன னென்றாள். 3703

௫௬ வெங்கத மில்லவள் பின்னரும் வேலோய்
இங்கு நறும்புன லாடுதி யென்னின்
அங்கையி னாலெனை யஞ்சலை யென்றாற்
கங்கையி னீர்கொணர் வன்கடி தென்றாள். 3704

(பிரதி) 1 மாறிலி.

ருஎ சுமித்திரை சேயவள் சொன்னசொ லன்ன
கமித்தில னின்னிரு காதொடு நாசி
துமிப்பதன் முன்னக லென்பது சொல்ல
இமைப்பற நின்றன ளின்ன லுழந்தாள். 3705

ருஅ எடுத்தன னேகின னென்முறை தன்னுள்
அடைத்திவன் [1]வெம்மை யடக்கிய பின்றை
உடற்படு மாறுட னேயுறை தன்மை
திடத்தது வேநல னென்றயல் சென்றாள். 3706

ருகூ மோகனை யென்பது முந்தி முயன்றாள்
மாக நெடுங்கிரி போலியை வவ்வா
ஏகின ளும்பரி னிந்துவொ டேகும்
மேக மெனும்படி நொய்தினில் வெய்யாள். 3707

சுo மந்தர வேலையின் வந்தது மான
இந்திர னூர்முகி லென்னலு மானாள்
வெந்திறல் வேல்கொடு சூரடும் வீரச்
சுந்தர னூர்தரு தோகையு மொத்தாள். 3708

சுக ஆங்கவள் மார்பொடு கையி னடங்கிப்
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
ஓங்க லுரிக்கு முருத்திர னொத்தான். 3709

சுஉ இப்படி யன்னவ ளேகின ளிப்பால்
அப்பிடை தேடி நடந்த வெனாவித்
துப்புடை மால்வரை தோன்றல னென்னா
வெப்புடை மெய்யுடை வீரனு ரைத்தான். 3710

சுங * வெய்தா கியகா னிடைமே வருநீர்
ஐதா தலினோ வயலொன் றுளதோ
நொய்தாய வலாதவு நொய்தி னவால்
எய்தா தொழிவா னிடரென்னை கொலாம். 3711

சுச நீர்கொண் டனனிவ் வழிநே டியெனைச்
சார்கின் றிலனித் துணைசார் கிலனால்
வார்கொண் டணிகொங் கையைவவ் வினர்பாற்
போர்கொண் டனனோ பொருளுண் டிதெனா. 3712

(பிரதி) 1 மென்மை.

௬௫ அஞ்சொற் கிளியன் னவணங் கினைமுன்
வஞ்சித் தவிரா வணன்வவ் வினனோ
நஞ்சிற் கொடியார் நடலைத் தொழிலாற்
றுஞ்சுற் றனனோ விதியின் றுணிவால். 3713

௬௬ வரிவிற் கையனு ருயிர்வந் திலனாற்
றருசொற் கருதே னொருதை யலையான்
பிரிவித் தனனென் றொருபீ ழைபெருத்
தெரிவித் திடவா வியிறந் தனனோ. 3714

௬௭ உண்டா கியகா ரிருளோ [1]டொருவென்
கண்டா னயல்வே றொருகண் ணிலனால்
புண்டா னுறுநெஞ் சுபுழுங் குறுவேன்
எண்டா னினியெங் ஙனநா டுகெனோ. 3715

௬௮ தள்ளா வினையேன் றனியா ருயிராய்
உள்ளா யொருநீ யுமொளித் தனையோ
பிள்ளாய் பெரியாய் பிழைசெய் தனையால்
கொள்ளா துலகுன் னையிதோ கொடிதே. 3716

௬௯ பேரா விடர்வந் தனபேர்க் கவலாய்
தீரா விடர்தந் தனைதெவ் வர்தொழும்
வீரா வெனையிங் ஙன்வெறுத் தனையோ
வாராய் புறமித் துணைவை குதியோ. 3717

௭௦ என்னைத் தருமெந் தையையா யரையப்
பொன்னைப் பொருகின் [2]றபொலன் குழையாள்
தன்னைப் பிரிவே னுளதா யதுதான்
உன்னைப் பிரியா தவுயிர்ப் பலவோ. 3718

௭௧ பொற்றோ டிவர்கின் றபொலங் குழையாள்
தற்றே டிவருந் துதவம் புரிவேன்
நிற்றே டிவருந் தநிரப் பினையோ
எற்றே டிடவந் தவிளங் களிறே. 3719

௭௨ இன்றே யிறவா தொழியே னெமரோ
பொன்றா தொழியார் புகல்வா ருளரோ
ஒன்றா கியவுன் கிளையோ ரையெலாங்
கொன்றாய் கொடியா யிவையுன் குணமோ. 3720

(பிரதி) 1 டொருவன். 2 றபொலங்.

௭௩ மாந்தா முதன்மன் னவர்தம் வழியில்
வேந்தா கைதுறந் தபின்மெய் யுறவோர்
தாந்தா மொழியத் தமியே னுடனே
போந்தா யெனைவிட் டனைபோ யினையோ. 3721

௭௪ என்னா வுரையா வெழும்வீ ழுமிருந்
துன்னா வுணர்வோய் வுறுமொன் றலவான்
மின்னா விடியா விருள்வாய் வினையீ
தென்னா மெனுமென் றனிநா யகனே. 3722

௭௫ நாடும் பலசூ ழல்கடோ றுநடந்
தோடும் பெயர்சொல் லியுளைத் துயிர்போய்
வாடும வகைசோ ருமயங் குறுமால்
ஆடுங் களிமா மதயா னையனான். 3723

௭௬ கமையா ளொடுமென் னுயிர்கா வலினின்
றிமையா தவணித் துணைதாழ் வுறுமோ
சுமையா னுலகூ டுழறொல் வினையேற்
கமையா துகொல்வாழ் வறியே னெனுமால். 3724

௭௭ அறப்பா லுளதே லவன்முன் னவனாய்ப்
பிறப்பா னுறில்வந் துபிறக் கவெனா
மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்
துறப்பா னுறுகின் றதொடர்ச் சியின்வாய். 3725

௭௮ பேர்ந்தா னெடுமா யையினிற் பிரியா
ஈர்ந்தா னெடுநா சிபிடித் திளையோன்
சோர்ந்தா ளிடுபூ சல்செவித் துளையிற்
சேர்ந்தார் தனுமே திருமா றெருளா. 3726

௭௯ *[1] பரற்றெறு கானகத் தரக்கர் பல்கழல்
முரற்றொகு வெஞ்சமர் முயல்கின் றாரெதிர்
ஊற்றிய வோசையி னொருத்தி யூறுபட்
டாற்றிய குரலவ ளரக்கி யேகொலாம். 3727

௮௦ அங்கியி னெடும்படை வாங்கி யாங்கது
செங்கையிற் கரியவன் றரிக்கும் வேலையில்
பொங்கிரு ளப்புறத் துலகம் புக்கது
கங்குலும் பகலெனப் பொலிந்து காட்டிற்றே. 3728

(பிரதி) பரற்றொகு.

அக நெடுவரை பொடிபட நிவந்த மாமரம்
ஒடிபட நிலமக ளுலைய வூங்கெலாஞ்
சடசட வெனுமொலி தழைப்பத் தாக்கவும்
முடுகினன் முரலும்வெங் காலின் மும்மையான். 3729

அஉ ஒருங்குயர்ந் துலகின்மே லூழிப் பேர்ச்சியுட்
கருங்கடல் வருவதே யனைய காட்சித்தன்
பெருந்துணைத் தம்முனை நோக்கிப் பின்னவன்
வருந்தலை வந்தனன் வள்ளியோ யெனா. 3730

அங வந்தன னடியனேன் வருந்தல் வாழிநின்
அந்தமி லுள்ளமென் றறியக் கூறுவான்
சந்தமென் றாமரைச் சரணஞ் சார்ந்தனன்
சிந்தனை மனமுயிர் வந்த செய்கையான். 3731

அச ஊற்றுறு கண்ணினீ ரொழுக நின்றனன்
ஈற்றிளங் கன்றினைப் பிரிவுற் றெங்கணும்
ஆற்றலி னாற்றுவ தரிதி னெய்திய
பாற்றுறு பணிமுலை யாவின் பான்மையான். 3732

அரு தழுவினன் பன்முறை தாரைக் கண்ணினீர்
கழுவின னாண்டவன் கனக மேனியை
வழுவினை யாமென மனக்கொண் டேனென்றான்
எழுவென மலையென விசைந்த தோளினான். 3733

அசா என்னையங் கெய்திய தியம்பு வாயென
அன்னவ னஃதெலா மறியக் கூறலும்
இன்னலு முவகையு மிரண்டு மெய்தினான்
தன்னல தொருபொரு டனக்கு வேறிலான். 3734

அஎ ஆய்வுறு பெருங்கட லகத்து [1]ளேயவன்
பாய்திரை வருந்தொறும் பரிதற் பாலதோ
தீய்வினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயான்
நோயுறு துயரென [2]நுடங்க னோன்மையோ. 3735

அஅ மூவகை யமரரு முலக மும்மையும்
மேவரும் பகையெனக் காக வெய்தினும்
ஏவரே கடப்பவ ரெம்பி நீயுளை
[3]ஆவதே வலியினி யரணும் வேண்டுமோ. 3736

(பிரதி) 1 ளெய்திய; 2 நடங்கு நோன்மையேன்; 3 ஆவதெவ் வலியினி.

௮௯ பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழற்
செருவலி வீரநிற் றீரி னல்லது
பருவர னென்வயிற் பற்றற் பாலதோ. 3737

௯0 வன்றிறல் வீரபோர் வலிய ரக்கியை
வென்றுபின் மீண்டன னென விளம்பினாய்
